ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருச்சித்திரகூடபுராணம்.

இஃது

ஸ்ரீவியாசப்ரோக்தமாகிய

வடமொழிப்புராணத்தின்படி

புதுவை-ஸ்ரீமாந்-விலக்ஷணகவி

ஏ-வே-இராமாநுஜநாவலரவர்களால்

தென்மொழிக்கவிகளாகப் பாடியருளப்பட்டு,

புதுவை-ஸ்ரீமாந்-வேங்கடராமாநுஜதாசரவர்களும்,

மற்றுஞ்சில பாகவதோத்தமர்களும்

பிரார்த்தித்தபடி,

ஷை கிரந்தகர்த்தாவின் திருக்குமாரராகிய

ஸ்ரீமாந்-சடகோபநாயுடவர்கள்

அநுமதிகொண்டு,

திரிசிரபுரம் - ஸ்ரீமாந்,

ஜெ - சுந்தரராமாநுஜ தாசரவர்களால்,

சென்னை:

ஸ்ரீமாந்

பத்தி-இராமாநுசுலுநாயுடவர்கள்

குமாரர்களது,

ஸ்ரீநிகேதநமுத்ராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீசடகோபர் திருவவதார வருஷம் சகூகூஉ - க்குச்சரியான

விக்ருதிவருஷம்.

1891.

இதின் ஸ்ரீபாதகாணிக்கை ரூ - 0.

ஸ்ரீ

ஸ்ரீமதேவரவராயபரமதயாகுரவேநம:

திருச்சித்திரகூடபுராண

விஷயசூசிகை.

ஸ்ரீ மத்வேதவியாச பகவானால் திருவாய்மலர்ந்தருளிச் செய்யப்பட்டுள்ள பதினெண்புராணங்களுள் இந்தச் சித்திரகூட மான்மியமானது ஸ்ரீ காந்தோத்தரத்தும், ஸ்ரீ வராகபுராணத்தும், ஸ்ரீ பிரமாண்டபுராணத்தும் கூறியிருக்கின்றதாயினும் அப்புராணத்திரயத்தினுள் ஒன்றாகிய பிரமாண்டபுராணத்தில் க்ஷேத்திரகாண்டத்தின் ஓர் பிரிவில் கஅ - அத்தியாயத்துள்ளடங்கிய உசகூஎ - சுலோகங்களால் அவ்வியாசபகவானால் இந்தச் சித்திரகூடமான் மியம்சித்தச, தைவத, ஆரிஷ, மாநுஷ, சுயம் பிகங்களென்று ஐந்துவிதங்களாக அருளிச்செய்யப்பட் டிருக்கின்றது. இஃதோநவகோடி நாராயணஸ்தலங்களுள் தைவதங்களாகிய க0அ - திவ்யதேசங்களில் ஒன்றாகியும் (மூவாயிரநான் மறையாளர் நாளுமுறையால் வணங்க வணங்காயசோதித் தேவாதிதேவன் றிகழ்கின்ற தில்லைத்திருச்சித்திரகூடஞ்சென்று சேர்மின்களே) என்றும், (தேவர் வணங்கும் தண்டில்லைச் சித்திரகூடத்துள்ளானே) என்றும், (ஒருமகளாயர் மடந்தையொருத்திநிலமகண்மற்றைத்திருமகளோடும் வருவான் சித்திரகூடத்துள்ளானே என்றித்யாதியாகத் திருமங்கையாழ்வாரும் (அந்தணர்களோடு மூவாயிரவரேத்தவணிமணி யாசனத்திருந்தவம்மான்றனே) என்றும், (தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள் உறைவானைமறவாத வுள்ளந்தன்னையுடையோ மற்றுறு துயரமடையோமன்றே) என்றித்யாதியாகக்குலசேகராழ்வாரும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வையும் இன்னுமற்றுள்ள ஆழ்வாராசார்யர்களால் அருளிச்செய்யப்பட்டவையும் ஆகிய மாட்சிமை தங்கிய பிரமாணங்களை விரிக்கிற்பெருகுமென்று விட்டனம்.

அப்படிப்பட்ட இந்தச் சித்திரகூடபுராணம் கஅ - அத்தியாயத்துள், முதல் அத்தியாயத்தில் நைமிசவனத்திற்கு தீர்க்க சத்திரயாகத்தின் பொருட்டு வசிட்டர் முதலிய அனேக முனிவர்களெழுந்தருளியதும், சூத புராணிகரை அம்முனிவர்கள் சித்திரகூடமான்மிய மருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்ததும், அவர் நீவிரொப்படிவினவினீர்களோ அப்படியே முன்னொருகாலத்தில் ஸ்ரீமந்நாரதபகவான் சனகாதியோகிகள் சூழ்ந்துள்ள பிரமதேவனைத் தண்டன்சமர்ப்பித்துச் சதாசிவதாண்டவமெற்றுக்கோ அதை அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ததும் (எஎ) - சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

இரண்டாவது அத்தியாயத்தில், பிரமதேவன் ஸ்ரீ தில்லை கோவிந்தராஜப் பெருமானது திருவடிவாரத்தில் என்னகாரணத்தால்தாண்டவம் செய்திருப்பதென்று வினவினவரைச்சிலாகித்ததும், எம்பெருமானைச் சமாதியி

*

ற்கண்டுகளித்ததும், தானுண்டானதும், பரதத்துவவர்ணனமும், க்ஷேத்தி
ரதிருநாமாதி விபவங்களும் (கஙு) சுலோகங்களால் அருளிச்செய்திருக்
கின்றனர்.

மூன்றாவது அத்தியாயத்தில், பிரளயகால விவரணமும், அக்காலத்தி
றவாதிருந்தவரும் வடபத்திரசயனரும் ஆகிய எம்பெருமான் அன்னரூப
மாகிவந்ததும், தனக்கு அருமறையாதிகளை யருளிச்செய்ததும், பிரமன்
வேதமிழந்து புலம்பியதும், எம்பெருமான் வெளிப்பட்டு விவேகமருளிய
தும், அயக்கிரீவராய்வந்ததும், மதுகயிடவர்களைச் சம்மரித்ததும், பிரமத்தி
ற்கு முதற்குமாரனாதலால் தனக்குப்பிரமாவென்று பெயரளித்து ஐந்தீக்
கைசெய்து தானானதன்மை யருளியதும், உலகுபடைத்ததும், விதிசிவே
ந்திராக்கினியமகிருதிவருணவாயுகுபேர ஈசானாதிகளுக்குப் பதவியாதிகள்
பகுத்தருளியதும் (கச0) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

நான்காவது அத்தியாயத்தில், பூகோளககோளவிஷயங்களும், கச-உ
லகங்களின் அளவுகளும், அங்கங்குள்ள க்ஷேத்திரங்களும், அங்குள்ள எ
ம்பெருமான்களுடைய மூர்த்திவிசேஷ விபவங்களும் (அஉ) - சுலோகங்க
ளால் அருளிச்செய்திருக்கின்றனர்.

ஐந்தாவது அத்தியாயத்தில், சகலதேசங்களின் பிரிவுகளும், சுவாயம்
புமனுவமிசங்களும், உத்தான பாதமகாராசனுடைய புத்திரனான துருவனு
டைய தவமும், அவன்பெற்றபதமு முதலானவைகளையும் சுருக்கமாக
(எசு) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

ஆறாவது அத்தியாயத்தில், களிங்கதேச மகாராஜனுடைய தவமும்,
கவேரமகாராசனுத்பத்தியும், காளிந்தியின்பிறப்பும், அவள் தீர்த்தரூபமாக
பிரவகித்ததும், அத்தீர்த்தத்தின் மகிமையும் (கஉக) - சுலோகங்களால் அ
ருளிச்செய்திருக்கின்றனர்.

ஏழாவது அத்தியாயத்தில், கவேரமகாராசனுக்கு ஸ்ரீ விஷ்ணுவின்சுத்
தமாயையாகிய திருக்காவேரி அவதரித்ததும், லோபாமுத்திரை யென்
னும்படி அவளை அகத்தியமகாமுனிவர் திருக்கல்யாணம்செய்ததும், அகத்
தியமகாமுனிவர் சோகமும், தீர்த்தரூபமாகச்சையபருவதத்தில் பிரமன்பூ
சித்த ஆமலகவிருக்கமாயுள்ள எம்பெருமானடியில் தீர்த்தரூபமாக பிரவே
சித்ததும், அவள் தவமும், ஆம்பிராவதிபவானிகளாகிற தோழிகளாகிய
நதிகள் கூடியதும் (ககூஅ) சுலோகங்களாலருளிச்செய்திருக்கின்றனர்.

எட்டாவது அத்தியாயத்தில், கவேரமகாராசன் புத்திரசோகத்தால்
யாத்திரைவந்ததும், சபத்தினியோடு திருவரங்கம் பெரியகோயிலைச்சேவி
த்ததும், திருக்காவேரி தனது தாய் தந்தையாருக் குபதேசித்துத் தில்லைவ
னத்திற்குப்போய் தவமிருக்க நியமித்ததும், தில்லைக் கோவிந்தராசப்பெரு
மாள் பஞ்சகிருஷ்ணாரணியமென்னும்படி கவேரமகாராசனுக்குச் சேவை
சாதித்ததும், அர்ச்சைவடிவா யெழுந்தருளியிருந்ததும், கவேர மகாராச
ன் பத்தினி சகிதனாகப் பூசித்ததும், புண்ணியானுபவிகளையும்நரகானுபவி
களையுங்கண்டதும், நரகவாசிகள் சுவர்க்கமடைந்ததும், மாலடியார் மாட்
சிமையுரைத்ததும், கவேரன்முத்தியும்(கடுஉ) சுலோகங்களாலருளிச்செய்
திருக்கின்றனர்.

ஒன்பதாவது அத்தியாயத்தில், தஞ்சகன், தண்டகன், கசமுகன் என்கின்ற அசுரர்களாகிற இவர்கள் பிறப்பும், இம்மூவரும் சிவபெருமானைக் குறித்துச்செய்ததவமும், அவர்கள் பெற்றவரமும், அவர்களால் உலகர் அடைந்த துன்பமும், தேவர்கள் பிரார்த்தனையும் (அ௯) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பத்தாவது அத்தியாயத்தில், அசுரவிசயமும், அமரர்கள் துன்பமும், பராசரதீர்த்தக்ஷேத்திரமகிமையும், அசுரவதமும், நரசிம்ஹவராகவைபவமும், சில்லி தில்லிகள் வைரமும், தில்லைக்காந்தாரமாய் அர்ச்சிராதியில் முத்தர்கள்வந்து தன்னடிவாரநிழலிலிருந்து தன்னுபகாரம்பெறக் கேட்டதும், தில்லைகோவிந்தனென்றும் தில்லை நடராசனென்றும் தில்லைக் காளியென்றும் திருநாமம்பெற்றிருக்கவரம் பெற்றதும் (௧௫அ) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினோராவது அத்தியாயததில், தக்கன் வேள்விசம்மாரமும், தாணு சிரபங்கமும், சாம்பவிசோகமும், தாமோதரன்றுதியும், சலித்தெழுதலும் சரமெதிர்கோத்தலும், தநுமுரிவாதலும், தாணுப்பேராதலும், பிரமன்றலை தடிதலும், பிரயாகையிற் பிரதிட்டித்துப் பூசித்தலும், எம்பெருமான் நியமனமாதலும், திருநாங்கூர் முதலானபதினொரு திவ்யதேசங்களிலெம் பெருமான்களை ஆராதித்ததும், திருக்கண்டியூருக்கேகியதும், அரன்சாபம் தீர்ததபெருமாளால் கபாலமொழிந்ததும், பனிமலையிற் றவமிருந்ததும், திருவுலகளந்ததும், கங்காதரனானதும், கயிலைமலையில் ஆடியதும், காமக்கோட்டியைச்சினந்ததும், காளியாகச் சாபம்பெற்றதும், அயனூராகிய சத்தியலோகத்திற் கேகியதும், ஆலங்காட்டிலாடியதும், திருப்பாலாழிக்கேகியதும், திரும்பிவந்து தவமாற்றியதும் (௧௪௫) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பன்னிரண்டாவது அத்தியாயத்தில் விசுவகன்மனனவன் எம்பெருமானுணையால் சித்திரகூடஞ்செய்ததும், திருக்கோபுரமண்டபாதி திருக்கோயில்கள் சமைத்ததும், சுவேதத்தீவினின்றும் மூவாயிர ஸ்ரீ வைஷ்ணவர்களோடு தில்லைக்கெழுந்தருளியதும், அம்பலவாணப் பெருமானென்று தேவர்கள்திருநாமமிட ஐந்தவைபுகுர்ததும், இரத்தினசபாபதியாகி வீற்றிருந்தருளியதும் (௧அ௫) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதின்மூன்றாவதுஅத்தியாயத்தில், அட்டாக்கரப்படியமைந்ததும், பஞ்சசபையின் கிரமமும், சிற்சபாநாதனெழுந்தருளியிருப்பதைக்கேள்வியுற்றசிவகாளிகள் தவநிலைவிட்டுவந்து சேவித்துத்துதித்ததும், தமது பரத நாட்டிய விஞ்சையைக்கடாக்ஷித்து உயர்வுதாழ்வை யருளிச்செய்யவிண்ணப்பஞ்செய்ததும், எம்பெருமானுணைப்படி இசைந்தவிருவரும் ஏழுநாள் இரவும்பகலுமாக நடித்ததும், தோல்வியுற்ற காளிக்குத்தனையிட்டு எல்லைப்புறத்திட்டதும், அவள் பெற்றவரமும் (௧௪௯) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினன்காவது அத்தியாயத்தில், பிரமதேவரானவர் தில்லைக்கோவிந்தராஜப்பெருமாளுக்கு பங்குனிமாசத்தில் தனது சன்ம நக்ஷத்திரமாகிய அச்சுவினியில் மகோத்ஸவஞ்செய்யவேண்டிம் ருத்ஸங்க்ரஹணம்பண்ணி

வாஸ்துசாந்தி முதலியவைகளும் ஸ்ரீ விஷ்வக்ஸேனரைமுன்னிட்டு சனகசனந்தனாதியோகிகளுடன்கூடி ரோகிணிநட்சத்திரத்தில் துசாரோகணமும் அங்குரார்ப்பணமுஞ்செய்துஇருபோதும் நவரத்தினமயமாகிய வாகனங்களில்வீதிவலம்செய்வித்ததும், சகலோபகரணங்களோடு சுதரிசனமென்கிறதிருநாமமுள்ள திருத்தேருத்ஸவங்கண்டருளச்செய்ததும்,பங்குனி உத்திரநக்ஷத்திரத்தில் அவபிருததீர்த்தோத்ஸவம் செய்ததும் (கசுச) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினைந்தாவது அத்தியாயத்தில், சிவபெருமானனவர் சித்திரைமாசம் தமதுசன்மநக்ஷத்திரங்கூடிய சுத்தசத்தமி திருவாதிரைகூடியதினத்தில் துசாரோகணஞ்செய்து சகலமானவாகனங்களி லிருபோதும் வீதிப்புறப்பாடு செய்வித்துச் சித்திரைப்பௌர்ணமியில் அவபிருதஞ்செய்து தண்டபிரணம ஓகரைகளாதிகளாலெம்பெருமானைக் களிப்பித்து எந்நாளும்திருவடிவாசத்திற்றுனே நட்டம்பயின் றிருக்கவரமுற்றதும், இந்திரனனவன் தனக்குப்பகைவனான வாலகலி என்னும் அசுரனை எம்பெருமானருளிய ஆயுதத்தால் சம்மரித்ததும்,அத்தேவராசன் வைகாசிமாசத்தில் தனது சன்மநக்ஷத்திரமாகிய சித்திரையிற்றுசாரோகணஞ்செய்வித்து பத்துநாளும் திருவிழாநடாத்தி இஷ்டப்பிராப்தியடைந்ததும், மற்றதிக்குப்பாலகரும் தேவமுனிகணங்களும் பற்பலசாறுகளாற்றிச் சர்வபலன்களைப் பெற்றுய்ந்ததும், புண்டரீகருக்கும் கண்ணுவருக்கும் மூத்தி யருளியதும் (கருரு) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினாறுவது அத்தியாயத்தில், அத்திரி அனசூயைகளின் பெருமையும், ஆதிசேடன் பதஞ்சலி என்றபேரடைந்ததும் பாஷியஞ்செய்ததும் எம்பெருமானைக்குறித்துத் தவமாற்றியதும் முத்தியடைந்ததும் (கருஅ) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினேழாவது அத்தியாயத்தில், ஸ்ரீரங்கநாதனாகி அம்பரீஷதுருவாதிகளுக்கருள்புரிந்ததும், ஸ்ரீநிவாசனாகி சுப்பிரமணியக் கடவுளுக்குவேலளித்தருளியதும், ஸ்ரீ கசேந்திரவரதனாகிச் சிவபெருமானுக்குச் சூலமளித்தருளியதும்,ஸ்ரீபட்டாபிராமனாகி குசலவர்களுக்கருள்புரிந்ததும்,ஸ்ரீவேணுகோபாலசுவாமியாகிகோப்பிரளயமகாமுனிவருக்கருளியதும்,அனந்தேச்சுரனுக்கனந்தங்கோடிபிரமகத்திபோக்கியருளியதும் (கசுஉ) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

பதினெட்டாவது அத்தியாயத்தில்,ஸ்ரீபுண்டரீக சரசுமுதலாகக்குமாரதீர்த்த மீறாகவுள்ள கஉ - தீர்த்தங்கள் உண்டானவாறும்,அவைகளின்பரிபாலனதேவர்களும், அவைகளின் உற்சவம்செய்யும் மாசங்களும்,அவைகளின்மான்மியங்களும், அவைகளிற் பண்ணும் தானதரும தர்ப்பண சபதபஓமவிரதஸ்நாநபாந தரிசனபரிசனாதிகளுக் குண்டாகும் பலன்களும் அத்தலபுராணபடன பணிவிடையாதிகளாலுண்டாகும் பரமபுருஷார்த்தங்களும் (கருரு) சுலோகங்களால் அருளிச்செய்திருக்கின்றனர்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ சித்திரகூடபுராணப்படல அட்டவணை.

ஆகபடலம் ௬௧ - க்கு திருவிருத்தம் ௨௦௩௦.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சாத்துக்கவிகள்.

ப்ரபந்நவித்வான்.

கா-இராமசாமிநாயுடுஅவர்கள் இயற்றிய

நேரிசைக் கட்டளைக்கலித்துறை.

சீரேறியதிருச்சித்திரகூடபுராணமதை
ஏரேறியதென்மொழிக்கவியாலின்றிசைத்தடைந்தான்
பாரேறியபுகழ்வேங்கடராமன்பயின்றதவ
நீரேறியவுருராமாநுஜவள்ளனிச்சயமே.

ப்ரபந்நவித்வான்

கொ-பள்ளிகொண்டான்பிள்ளையவர்கள் செய்த

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நீரோங்குகடற்புவியினித்தியநிர்த்தோடமுதனிலவுநீர்மைச்
சீரோங்குமறையுண்மைசெப்புமவனென்றெடுத்துச்செப்பாநின்ற
பேரோங்கும்வியாதமுனிவரன்பேசும்புராணத்துட்பிறங்கியென்றும்
ஏரோங்குகாந்தத்திலுத்தரத்தும்வராகத்துமிசைத்ததன்றி. (௧)
பெருமைபெறுபிரமாண்டபுராணக்ஷேத்திரகாண்டப்பிரிவினொன்றில்
ஒருமைபெறுமீரொன்பானத்தியாயங்களாயுயர்ந்தோர்போற்ற
இருமைபெறுமாயிரத்துநானூற்றுமுப்பானேழெழிற்பாவாக
அருமைபெறுமம்முனிவனுரியத்தினுதிநாளறைந்ததான, (௨)
தில்லைநகர்த்திருச்சித்ரகூடமெனுந்திருப்பதியின்சீர்மைதன்னை
முல்லையுறும்றுபானோர்படலத்திராயிரத்துமுப்பானென்னும்
எல்லையுறும்விருத்தத்தினெழில்பத்துமமைத்திரைந்தாமேதத்தொன்றும்
இல்லையெனவியலுணர்ந்தோரிசைந்தோதச்செந்தமிழாலியற்றினனால். (௩)
இலக்கியமுமிலக்கணமுமென்றுநிறைகளஞ்சியமாயியல்வோனூல்கள்
விலக்கியவும்விதித்தனவுமுணர்ந்தொழுகும்வித்தகமேவிளைசெய்யானேன்
கலக்கமறுகலைப்பொருட்கோர்கருவூலமெனத்தகுவோன்கண்ணன்பாதத்
துலக்கமுறுமன்பினுக்கம்போதியன்னோனவனடியர்தொண்டினின்றோன். (௪)
ஞானமுயராழ்வார்களருள்செய்தமிழ்மறைப்பொருளினயந்தெரிந்தோன்
ஊனமிலாவுலககுருவுரைத்தருளுங்கலைகளெலாமொருங்குணர்ந்தோன்
ஈனமிலாவாரியர்களிதயமெனும்பெருநூலுமினிதுதேர்ந்தோன்
ஆனவிலட்சணஞ்சேருமோக்காதிகாரமுதலருநூலோர்ந்தோன். (௫)
மதுவைநுகர்ந்தஞ்சிறையவண்டினங்கள்வரிபாடுமலர்க்காவாய்ந்த
புதுவைநகர்க்கணியானோன்புலவர்கடம்பெருமானாய்ப்புகழ்ப்பூண்டோன்
முதுவைமதிவேங்கடராமக்குரிசிறவக்கடலின்முளைத்தெழுந்த
விதுவைநிகரறிஞனிராமாநுஜநாவலனென்னுமேதக்கோனே. (௬)
இத்தகையபேருதவியியற்றுமலியற்றினருக்கெண்ணுங்காலை
ஒத்தகைம்மாறொன்றுமிலதெனவுணர்ந்துமுனுற்றுதியென்றுடற்றியென்முன்
தத்துகின்றதனிநெஞ்சேயஞ்சலிதான்றக்கதெனத்தருதியேனும்
உத்தமமாமணிக்கலகூர்க்கருணபலமொப்பெனலையொக்குமன்றே, (௭)

ஸ்ரீமாந் இராமாநுஜநாவலர் சுவாமிகள் திருக்குமாரர்
ஸ்ரீமாந் சடகோபநாயுடு அவர்க ளியற்றிய ஆசிரியவிருத்தம்.

அருத்தபஞ்சகத்தையெம்மனோர்க்கிஞ்ஞான்றடைவொடுமருளநற்றில்லைத்
திருச்சித்ரகூடப்பகவன்சீரொன்னச்செப்பியெம்மயர்வொழித்தனையால்
அருச்சனற்கன்றுகீதையாம்விளக்கிட்டவனுளத்தகந்தையைக்கீண்ட
மருத்துளவோனைநிகர்தருபுதுவைவாழிராமாநுசவள்ளால்.

காட்டுபுத்தூர் - ஸ்ரீமாந், விஜயராமாநுஜதாசரவர்க ளியற்றிய
நேரிசைவெண்பா.

குஞ்சரத்தைக்காத்தவெழிற் கோவிந்தனேபரனென்
றிஞ்செவருங்காணவினிதோர்ந்து—விஞ்சியசீர்ச்
சித்திரகூடப்பரனைச்செப்பிமகிழ்வித்தனனால்
மெய்த்தவிராமாநுசன்மண்மேல்.
வாழியவன்கீர்த்திவாழியவன்மெய்யடியார்
வாழியவனோதியமும்மைத்தமிழும்—வாழியரோ
சீரார்புதுவைவருஞ்செம்மலிராமாநுசனும்
பேரார்குரவன்பெரிது.



—(o)—

ஸ்ரீமாந். திரிசிரபுரம், ஜெ - சுந்தரராமாநுஜதாசரவர்கள்செய்த
பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீரோங்குபுதுவைவேங்கடராமவள்ளன்முன்செய்தவத்துறுபுதல்வனைச்
செழுங்கலைகடேர்ந்தெம்மனோருணர்ந்துய்ந்திடச்சீமுட்டமாபுராணம்
பேரோங்குபதுமப்புராணத்தினுத்தரம்பேசுதிருவாழிமலையின்
பீடுறைபுராணந்திருச்சித்ரகூடப்ரபாவப்புராணமாதி
ஏரோங்கிடச்செய்துநல்கிநன்ஞானமுமிசைந்தநலொழுக்கமுங்கொண்
டென்னைத்திருத்தியவிராமாநுஜக்குரவனிணையடியையெனதுநெஞ்சம்
நாரோங்கியெண்ணுகவெனுவவன்பேணாயேநாடியநவரதநவில்க
நயந்தெனதுகைகளஞ்சலிசெய்கசென்னிநனிநண்ணிப்பணிந்திடுகவே.

புதுவை-ஸ்ரீமாந், வேங்கடராமாநுஜதாசரவர்கள்செய்த
பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்பெறுவியாதமுனிசெப்பியபுராணங்கடிகமழுமீரோன்பானினுஞ்
செப்பமுறுபிரமாண்டகேத்ரகாண்டத்திற்செறித்திசைத்திட்டொளிர்தரும்
ஏர்பெறுதிருச்சித்ரகூடமான்மியமதனையின்றமிழ்ப்பாவினத்தால்
எழிறிகழ்ந்திடயாத்தொரீறிலாப்புகழுடம்பெய்தினன்பல்வளனுறீஇப்
பேர்பெறும்புதுவைவேங்கடராமநாமன்முன்பெட்டுஞற்றியதவத்தின்
பீடுறும்பயனிதாமென்னராமாநுஜப்பெயர்புனைந்திடுவிபுதர்கோன்
நார்பெறுமுளத்தெம்மனோருய்யவைராக்யநற்சூரியோதயமெனும்
நவையினூலாதியலகறுநூல்கள்செய்தருளிநம்மையாண்டருள்குரவனே.



ஸ்ரீ

தில்லைநகர்சித்ரகூட ஸ்ரீபூநீளாசமேத

ஸ்ரீகோவிந்தராஜ

பரப்ரம்ஹணேநம:.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

திருச்சித்திரகூடபுராணம்.

முதலாவது பாயிரப்படலம்.

ஸ்ரீபராங்குசர் வணக்கம்.

சொல்லைச்சூழ்பொருண்மானச்சூழ்சோதிதன்
எல்லைச்சூழ்கவிக்கிட்டானையேத்தியே
அல்லைச்சித்திரமாக்கிடற்காக்கினும்
தில்லைச்சித்திரகூடச்சிறப்பரோ. (க)

வேறு.

சித்திரபாநுசுபாநுதாரணவேசிறந்தபார்திவெலாம்வியப்பச்
சித்திரகாயச்சீரையையசைத்தான்சிவகரமுறவுஞற்றுட்டச்
சித்திரநோக்கியருள்பரன்பாதப்பெயருளசேய்முனிக்கரசைச்
சித்திரகூடமான்மியந்தன்னைச்செந்தமிழ்ப்பாச்செயத்தொழுவாம். (உ)

வேறு - ஸ்ரீதில்லைக்கோவிந்தராஜப்பெருமாள்வணக்கம்.

எவனைச்சுருதியடியிடையீறில்லாப்பிரமமென்றிசைக்கும்
எவனைச்சருவசரீரியெனவிசைக்குநிகமாந்தங்களெலாம்
எவனைத்திருமந்திரத்தொகுதியாவுமியக்குமிறைவனெனும்
அவனைக்கருதென்வாக்குமனமாக்கையரும்பேறடைந்தனவால். (ங)

எவனிப்பகுதிப்பசுக்கடம்க்கேதொன்றெண்ணுதுடலளித்தான்
எவனிவ்வனைத்துங்கைம்மாறற்றினிதிற்புரந்துட்கொடுமகிழ்வான்
எவனைந்தருத்தமிஃதென்னுவியம்பியிழியாநலனுய்ப்பான்
அவனைத்தருமிக்கியன்ஞானத்தறிந்துமகிழ்ந்துபணிந்திடுவாம். (ச)

வேறு.

எவனமர்வீட்டைமோக்கமென்றனநிகமாந்தங்கள்
எவன்பசுபாசநீக்குமியன்முதற்குணத்துநாதன்
எவனருள்பொறுமையின்பமெனுந்திருமகண்மணாளன்
அவன்றிருவடிக்கென்னெஞ்சமருகமாயமைந்ததாமால். (ரு)

எவனொருவருமில்லாதகாலத்திலிறப்பற்றுள்ளான்
எவனொருவருநேரில்லாவெறும்பியையினிதுகாத்தான்
எவனொருவருமில்லாநாளினிலிருந்தயனைத்தந்தான்
அவனெழிற்கமலத்தாட்கெனஞ்சலியருகமாமால். (சு)

எவனரன்பிரமகத்தியினையொழித்தொளிரவைத்தான்
எவன்றிருநாமமீசனிறும்பீன்றகொடிக்குச்சொன்னான்
எவன்குடமுழவுகொட்டினவன்கையாயிரமிறுத்தான்
அவன்றிருவடிக்கென்சென்னியருகமாயமைந்ததாமால். (எ)

எவன்றிருவடிநாரத்தையின்றுமேயாட்டக்கொள்வார்
எவன்பரனென்னவியாதனிசைத்தனன்கங்கையின்வாய்
எவன்பதசேவைதாணுக்கின்பளித்தாட்டங்காணும்
அவன்றிருவுருவுக்கென்கண்ணருகமாயமைந்ததாமால். (அ)

வேறு - திருச்சிற்றம்பலஉடையார்வணக்கம்.

தனியுருவமொன்றாகியதனிலொருநான்காகித்தம்மிற்றானே
உனுமுருவீராறாகியுகப்புருவமைந்தாகியருவமாகி
பணியுருவிறுவியுளேபதிந்தாவிவினையூட்டும்பரமாநந்த
நனியுருவாகியதிருச்சிற்றம்பலவத்தாணிபிரானற்றாள்போற்றி. (கூ)

வேறு - ஸ்ரீரத்தினசபாபதிப் பெருமாள்வணக்கம்.

திருமணிநத்தியவகலமதைப்பெறுதினகரனொளிர்மதிவிழியானை
உருமணிநத்தியமுத்தொழின்முத்தியையுதவல்செயைம்படையுடையானைக்
கருமணிநத்தியகறையறுமறையெனுங்கவினுளகனகவம்பலத்தானை
வருமணிநத்தியமரகதமலையினைமதிமனைதனினிதம்வைத்தேமால். (க0)

திருவடி தனிலயன்புரிதிருமஞ்சனஞ்சிரமுறவருமயனதனாலே
வருமகிழளவறவெழுகையிலரன்றுதிமதிகொடுநடமிடுமெதுகண்டு
கிரிமகள்மதியுடனிகலியெம்மிருவருள்கீழெவர்மேலெவர்நடனமதில்
அரிகரியருடியென்றிருவர்செய்தவமதிலமரவைபதியடிமுடியிடுவோம். (௧௧)

வேறு - ஸ்ரீ அம்பலவாணப் பெருமாள்வணக்கம்.

தேவகம்மியனப்பரமனாணையினாற்செய்துளவைந்தவைநாப்பண்
தாவமின்மறையோரெம்பெருமான்பின்சார்ந்தவர்போற்றவெட்டெழுத்தான்
மேவியபடியின்பீடிகையுச்சிவீற்றிருந்தரன்செய்நாடகத்தைப்
பாவியவருட்கணோடுபொர்த்தரும்புபுன்னகைக்கினிதுபல்லாண்டே. (௧௨)

ஐந்துவிதகாரணத்தால் ஐந்துமூர்த்தமாகச் சேவைசாதித்தருளிய
ஸ்ரீரங்கவரத ஸ்ரீநிவாசராகவ கோபாலஸ்வாமிகள் வணக்கம்.

வேறு.

பாரோங்குதில்லைநகரதன்கணம்பரீடருக்கும்பரமன்றுள்வீழ்
நீரோங்குசடையருக்குநிகர்த்தவரையெறிந்தவற்குநிமைக்குஞ்சோதி
நாரோங்குகுலத்தவர்க்குநற்றவர்க்குங்கருணைசெய்வானண்ணரங்கன்
ஏரோங்குமாவரதவேங்கடராகவன்கண்ணனிணைத்தாள்போற்றி. (௧௩)

வேறு.

தில்லைக்கெழுந்தருளிய சித்திரக்கூடத்துள்ளான் வணக்கம்.

ஆதியாங்கிருதயுகந்தனில்விசயவாண்டினிற்சோமவாரத்தில்
நீதியாம்பருவதிதியிலுத்திரநட்சத்திரநிகழிடபத்தில்
சோதிசேரருட்டாய்மாருதித்தியருந்துதிவிதிசிவனுமச்சுரரும்
ஓதிவாழ்த்தெடுப்பச்சித்திரகூடமுகந்தருளிறையையுன்னுதுமால். (௧௪)

வேறு. புண்டரீகவல்லித் தாயார்வணக்கம்.

புண்டரீகமாமுனிதுதிப்படிப்பெயர்புனைந்த
புண்டரீகமாம்புரத்தினிலறிஞர்களிதய
புண்டரீகம்வீற்றிருந்தருள்புனிதமங்கலமாம்
புண்டரீகவல்லியரடிப்போதுவாழியவே. (௧௫)

வேறு.

நான்முகன்கிழத்தியைம்முகன்கிழத்திநதிவருமறுமுகன்கிழத்தி
வான்முகிலேழான்கிழத்தியுள்ளிட்டார்மங்கலநாணுடன்மகிழ்ந்து
கூன்முகவளைமஞ்சண்மலராடைகுங்குமம்பூண்கலைமுதல
மேன்முகமாகப்பெற்றவர்மகிழ்தல்விமலைநின்னருளலதியாதே. (௧௬)

ஸ்ரீ பூநிளாவென்னுந் தயாசத்தி க்ஷமாசத்தி ஆநந்தசத்திகள்
வணக்கம்.

ஐயன்பொன்னடியினழகுகண்டெழுமாநந்தவெள்ளத்தடம்விழுசெம்
மெய்யனெந்நாளுமாடல்கண்டாண்டுமிக்குளோர்கண்ணெச்சில்விழுதல்
பொய்யலவென்றேநினைவுசெய்தலர்மென்பூக்கையாற்றிருவடிபோற்றெம்
செய்யதாய்புவித்தாயாநந்தத்தாயின்செங்கழற்கமலஞ்சென்னியவே. (௧௭)

ஆழ்வார்கள் வணக்கம்.

பொற்றாமரைவாயலர்ந்தமுனிபொதுளுங்குருக்கத்தியின்மலரை
நற்றாயெனவந்தருளுமுனிநறுஞ்செவ்வாம்பலெழுந்தமுனி
வற்றாமறைதேர்பார்க்கவர்பால்வந்துகிளைத்தமழிசைமுனி
பெற்றார்மகிழக்கோளூரிற்பிறந்தமுனிதாள்பேணுதுமால். (௧௮)

வேறு.

தேங்கமழ்தெய்வப்புளியினிதென்றேயதனடிபழுத்ததீங்கனியை
ஓங்குறுவளஞ்சேர்கொல்லியில்விளைந்தவுவர்ப்பிலாவரசுறுதேனை
வீங்குறுசுருதிவிரிகடலமுதைக்கூடலிலருள்செய்மேருவினைத்
தாங்குறுமலரைத்தலைவனுக்களித்ததமனியக்கொடியையாம்பணிவாம். (௧௯)

மறையுமறையோன்றானுமழுவானும்பிறருமருண்டறியா
இறையோனங்கள்கலியன்றானிவன்கொலெனவென்றியம்பிமநு
பெறுமங்கையர்கோன்றனையடியர்பேணும்பொடியைப்பெருமாற்கு
நறுந்தீம்பாகுபாற்கனியாநண்ணினவனைநாநினைவாம். (௨௦)

ஆசாரியர்கள் வணக்கம்.

அர்ச்சைவடிவாந்தமிழ்மாறனருளிச்செயல்கடந்தவர்தாள்
கொச்சையகன்றவெள்ளறையிற்குடியுற்றார்தாள்கோயிறனில்
வைச்சநிதியைக்காட்டினர்தாண்மன்னன்மனையையாண்டவர்தாள்
இச்சையகன்றபெரியநம்பியிணைத்தாண்மலரையிறைஞ்சிடுவாம். (௨௧)

ஸ்ரீபாஷ்யகாரர் வணக்கம்.

தொண்டைமண்டலத்திற்றோன்றிவான்பிரமன்சோதியைவழுத்திவெஞ்சோழன்
கண்டமேகிருமிகிண்டிடக்கண்டுகாதுசெய்மணர்தீக்கணத்தைத்
தொண்டனூரோரிதன்னிற்கற்செக்கிற்றொலைத்துவேங்கடவருக்காழி
பண்டுபோலீந்துபாடியமளித்தான்பதந்தொழுங்கரங்கள்பல்லாண்டே. (௨௨)

ஸ்ரீமத்எம்பார்முதலானோர் வணக்கம்.

மழலைமங்கலத்திலவதரித்தவரைமாலரங்கேசர்வேதியரைச்
சுழலைநெஞ்சறுஞ்சீயரைநம்பூர்தோன்றுநம்பிள்ளையைப்பரனைத்
தொழலைவிட்டறியாப்பாசுரத்தாழ்வார்துதிக்கெலாமுரைசெய்நாவலரைக்
குழுவின்முப்பத்தாறாயிரப்பெருக்கைக்கொடுத்தநங்குரவரைப்பணிவாம். (௨௩)

அரும்பொருளைந்துமளிக்குமீரொன்பான்சாத்திரமருள்சககுருவும்
பெருங்குருவிதயமென்றநூலளித்தபேரழகியநயினாரும்
விரும்புறுகுந்திநகர்வருமினியவிமலருமற்றதேசிகரும்
இரும்பயன்பெறவெற்களித்தனரவர்தாளிணைமலர்மறப்பனோவெளியேன். (௨௪)

ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் வணக்கம் - வேறு.

செந்தாமரைவந்தானவன்செம்மாகுளம்வந்தான்
முந்தாமிவரந்தாமமுகுந்தாதிபனுக்குச்
சிந்தாச்சிசுசிசுரூநுசெகந்தேர்கிலையென்னும்
நந்தேசிகனந்தாமரைநந்தாவுள்நந்தேன் (௨௫)

அடியாரடிமலரொன்முடியண்ணற்குளவத்தம்
படியார்பெறுமாமாவினனொன்னிற்பரரின்றெண்
முடியார்பெருமருளார்முழுமுற்றுந்தெளிவியலார்
கடியார்கவிமாதார்க்கிக*கம்மைந்தனைநினைவாம். (௨௬)

ஸ்ரீமத்மணவாளமகாமுனிகள் வணக்கம் - வேறு.

அன்னமாய்ப்பரியாயயன்றனக்கெல்லாமறைகளுமருளரங்கேசன்
கன்னமுமுளமுங்களித்திடமாறன்கவிப்பொருள்கொடுத்தரும்பாவம்
மன்னியபுளியின்மரத்திற்குழுத்திவழங்கியவரவரமுனிதாள்
நன்னயம்பொலிமுக்கரணமுங்குவியநாட்டியென்னவையையோட்டினனால். (௨௭)

திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர்வணக்கம் - வேறு.

சொல்லைக்காட்டுஞ்சுருதிப்பரமனை
ஒல்லைக்காட்டியுகப்பெனக்கீந்தது
புல்லைக்காட்டியந்நந்திகீழூர்புக
எல்லைக்காட்டியெழுப்பினான்பாதமே. (௨௮)

வேறு.

குருக்கோனிருக்கும்
திருக்கோவலூரைச்
செருக்காதென்னெஞ்சே
உருக்காயுகப்பாய். (௨௯)

தில்லைமூவாயிரவர் வணக்கம் - வேறு.

வெண்டிருமண்செந்நிசித்தாண்மிலைமரைத்தண்டுளவமணிவிமலனாடி
கண்டருணற்பவித்திரங்களணிந்தவராயைந்திராக்கழறன்மாறுப்
பண்டையநல்வைணவராய்ப்பரனுடனேவந்தவராய்பஞ்சதீக்கைப்
புண்டரிகபுரத்தவரானான்மறைமூவாயிரவர்பொற்றாள்போற்றி. (௩௦)

சித்திரையிற்சித்திரைநாடிகழுஞ்சத்தமித்திதியிற்றில்லையாளி
அத்தனுக்குச்சுதரிசனத்திருத்தேருச்சவமதனையாற்றாநின்ற
பத்தர்பிரானிவனன்றேவென்றுநடராசனையும்பரிந்துதம்முள்
ஒத்தவனுக்கொளுமூவாயிரமறையோரருட்குணத்தையுகந்துவாழ்வாம். (௩௧)

கோட்டி வணக்கய் - வேறு.

வான்றனைத்தொடுவோனேணியிட்டவனும்வன்னிக்கச்சீரணமாறத்
தேன்றனிற்சுக்கையீதுமென்றவனுந்திங்களைத்தேய்வறநாளும்
தோன்றிடகாட்டிக்காலின்காலாப்பிட்டடக்குதுமென்றதோமுளனும்
ஆன்றிடவடுப்பன்சித்திரகூடத்தரும்புகழ்சொலவருமடியேன். (௩௨)

வல்லநாவெடுத்தித்தில்லைச்சபாபதிப்பெருமாட்சியின்மாட்சி
எல்லைகண்டியம்பும்வலிவிதிசிவற்குமில்லையென்றனைவருமறிவீர்
மல்லன்மாஞானமற்றயான்வழங்கவமையுமோமகிழ்ந்தெனைப்பொருளாச்
சொல்லுவீரோதானஃதலநாணமின்றியான்சொற்றனன்பொறுப்பீர். (௩௩)

---

* கம்மைந்தரை என்றது பஞ்சர்ன்னம் என்னும் பொருட்டு.

புராணவரலாறு.

குத்திரமகலிச்சித்திரகூடக்குவவிணைக்காந்தவுத்திரத்தும்
நத்திவெராகநற்புராணத்துமினும்பலவற்றினுநவின்று
வைத்துளவேனும்யாஞ்சொலுமிதுமுன்வரைபிரமாண்டபுராணச்
சத்துவக்கூற்றிற்கேத்திரகாண்டந்தனிலுரைத்துளதிதுதரமால். (நூசு)

தாமரைப்பொகுட்டின்மீதுறைபிரமன்ருழ்ந்துகேண்மகதியாழ்முனிக்கும்
காமரைவீட்டுதும்புருவினுக்குங்ககனர்க்குமுநிவர்சித்தருக்கும்
நேமமாம்பதினெட்டத்தியாயத்தானிகழ்த்தினன்பிறவிநோய்மரிப்பான்
யாமதைவடநூற்படியறிந்தியாப்பாலாக்கினும்பெரியரேவலினல். (நூரு)

படலத்தொகையுங்கவித்தொகையும்.

வசையறுவாதராயணமுனிவர்வடமொழிச்செய்யுளானன்ருய்
இசையிரண்டாயிரத்துநானூற்றுமுப்பதினேழெனவிசைத்தார்
அசைவிலாழ்வார்களாதரத்தமிழாலாறுபத்தொருபடலமதாய்ப்
பசைகவியிரண்டாயிரத்துமுப்பதினற்பாடினுங்கூடினும்பரத்தே. (நூசா)

அரங்கேற்றியகாலமும் தலமும். (வேறு)

கலிசமைநாலாயிரத்தொள்ளாயிரத்தெண்பத்துடனுறெனக்கழறும்
நலமுளதாரணவெனும்வருடநண்ணுவைகாசியீரொன்பான்
நிலவுறுவைகறன்னிலேகாத்தியாயனமுநிவராச்சிரமத்
தலமெனுமிலக்குமிப்பெயர்நகராச்சாற்றிவெலயமாதேவி. (நூஎ)

என்றுணாகேத்திரந்தனில்வேதநாரணனினியகோட்டத்துள்
நன்றுறைதிருமுனிருமறைப்புலவர்நற்செவிசார்த்துறத்தில்லை
மன்றுறுமான்மியத்தையுமுட்டமான்மியமதனையுங்கூட்டி
அன்றரங்கேற்றிவைத்தனம்பெரியராசியின்வாசியான்மன்னே. (நூஅ)

ஞாயவாயினவிறல்.

ஈனவைம்புலமாங்குறும்பரைச்சவட்டியிலங்குமாதவர்கள்சொன்மறுத்தஞ்
ஞானத்தினுநாணத்தினுநன்றிலாதம்மதத்துறுதுன்
மானத்தினுநீதியற்றழுக்காருகியெம்மையனுர்க்குரிய
தானத்தைமாற்றித்தாமதப்பெருக்காற்சமைப்பவர்சுவடியன்றிதுவே. (நூகூ)

வேறு.

புல்லுகவின்மைகொடுபுன்மதியினுலே
கல்விகுணநீதிதயையாவனகறுக்கி
நல்லவருள்செய்துலகையோம்புபரனுன்
அல்லனெனவோதினர்நூலல்லவிதுமாதோ. (சo)

சத்தியமெய்ஞ்ஞானமிகுசாந்தகுணநீதி
வித்தையுளராகிவெகுளாதிதனையோதிச்
சித்திரகூடப்பெருமைசெப்பும்வடநூலைப்
பத்தியொடுபார்த்தவரிதைப்பழிசொலாரால். (சக)

வேறு.

செய்தவவியாதமாதவன்னருளிச்செய்யிந்நூல்
ஐதவத்தமிழ்யாப்பாலாக்கறிஞனைத்தூற்றிச்சீறல்
எய்தவணிருப்பவம்பைவைதவனேய்ப்பதன்றிக்
கொய்தவச்சீற்றத்தாற்றூண்முட்டுங்கீழோடுங்கூட்டும். (சஉ)

வேறு.

வந்தவொற்றியூரானுக்கிருக்கையீமாமனைக்கிழவன்றனைமாற்றிமாலைவாழ்த்திக், குந்தமிட்டுக்குணம்பாடிக்குணிக்குங்கூத்தன்றனதேயத்தலமெனக்கோளிழைத்துக்கோடல்
அந்தமன்றென்னறமகனைக்கடுப்பாறெுக்குமயனருளம்பலத்தரசிறுட்சிதன்னைச்
செந்தமிழ்ப்பாவாலிசைநங்கவியின்மேற்றேசீறுசெம்மைநடுநிலைமைசெற்றுளாரோ. ()

அநகரத்தபரதவிஞ்ஞைவாசிநோக்குன்னடிவாரங்குனித்திருப்பவருளென்றுனுக்
கநகரத்தினத்தின்சபாபதிப்பேரெம்மான்கருணைபுரிந்தருள்செய்வண்ணமுற்றுனுக்க
சிநகரத்தையுரிமையெனவாக்கத்தேடுதீமையுளோரிந்நூலைச்சிதக்குக்கூறல்
பநகரத்தேவாதியர்களருளால்வந்தபாசுரத்தேன்புகழணியாப்பரிவுற்றேனுல். (சஈ)

தந்தருமத்தாமுதியோர்வேறுதேவின்சமயமதையொருஞான்றுநிந்தைசெய்யார்
நந்தமர்ச்சைதனைப்பெயர்த்துநடராசன்றனகுபடிக்கீழ்க்கிடத்தியடியிட்டேகின்ற
இந்தவிதமறிந்தொருபுண்ணியத்தான்பின்னரெடுத்துக்கீழ்திருப்பதியிற்றுபித்திட்டச்
சந்தமுறுதில்லைக்கோவிந்தராசப்பெருமானையறியார்தாரணியிலின்றே. (சரு)

வேறு - வாழித்திருநாமங்கள்.

காளிகாமகாரியாடல்காணவந்தான்வாழியே
காவேரியின்றந்தைதாய்க்குக்கதியளித்தான்வாழியே
வாளிநோக்கடில்லையாட்குவரமளித்தான்வாழியே
வனசன்றுணூகாரிசாறுமகிழ்ந்துகண்டான்வாழியே
ஆளிமாமணிப்பொனிட்டவைந்தவைக்கோன்வாழியே
ஆடலைக்கண்டருள்சபாபதிப்பிரானும்வாழியே
கூளியாற்குமூன்றுகுடுமிகொடுத்தபரமன்வாழியே
கொங்குணளினமங்கைமார்கோவிந்தனும்வாழியே. (சசு)

புண்டரீகரம்பரீடர்போற்றவந்தான்வாழியே
புட்கொடிக்கைவேட்குவேல்புரந்தளித்தான்வாழியே
அண்டர்கோன்றனக்கோர்சாட்கோலளிக்கவந்தான்வாழியே
யாதிசேடனட்டபாலரஞர்தொலைத்தான்வாழியே
மண்டுதூருவாசன்சீறல்மாறவைத்தான்வாழியே
மாசில்குசலவர்க்கிராமவடிவளித்தோன்வாழியே
கொண்டகோலமைந்துநித்தர்முத்தர்பத்தர்வாழியே
குறைவிலாதசெல்வமார்கோவிந்தனுளும்வாழியே. (சஎ)

எண்ணெழுத்திராறுபுண்டரங்கணுளும்வாழியே
யேறுமாழிசங்கரையரென்றுநின்றும்வாழியே
பண்ணெழுத்திறுன்குவேதப்பாடலிட்டோர்வாழியே
பாரிடயம்பானெட்டுநூல்பரிந்தளித்தோர்வாழியே

விண்ணளித்தரும்பரத்தைமேவுகுரவர்வாழியே
வேட்கையாலளித்திடும்வியாக்கியானம்வாழியே
கண்ணளிக்குமாதிவேதனேதுதில்லைநாயகன்
கமழ்மலர்ச்செங்கமலபாதங்கைகுவித்தார்வாழியே. (சஅ)

வேறு.

அம்பலங்களைந்தும்வாழியாறிரண்டுதீர்த்தம்வாழி
கம்பலங்கவாடநட்டம்வாழிகனகரத்தினத்
தெம்பலங்களீயுமீசன்வாழியென்னெழுத்திறற்
பம்பல்செய்சோபனம்வாழிபங்குனித்தேர்வாழியே. (சகூ)

வேறு.

வாழிவைணவமதமூவாயிரமுந்நூலோர்
வாழிசுதரிசனமணித்தேர்நடவுமாண்போர்
வாழியமுதக்கூவமாடிவருமேலோர்
வாழிதிருத்தில்லைநகர்வாழ்வுபெறுநல்லோர். (௫0)

முதலாவது-பாயிரப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௫0.

ஆழ்வாராசாரியரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளேசரணம்,
ஸ்ரீநிவாச ராமாநுஜமகாதேசிகோத்தமன் திருவடிகள்வாழ்க,

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமः;

இரண்டாவது - நைமிசவனப்படலம்.

சீரேறுமலரேறுதிருவாழ்மனுளன்-பேரேறுமறையேறுபெருஞானமுறுநல்
லேரேறுமிகையேறுமியலையர்சூழும்-நீரேறுமிசையேறுநேமிவனமொன்றுல். (க)

நேமிவனமானததுநேமியருளம்மான்-நேமிவனமானகழநேமிவருகங்கை
நேமிவனமானகரைநேர்ந்துளதுமிக்க-நேமிவனமானமுதலாயவைநிறைந்தே. (உ)

காமனொருநாணிசைகலந்துபரிமாறும்-காமனொருவாளிசைகரந்துதடமோறும் [ல்.
காமனொருநாளுமதுகண்டுதொழன்மாறுன் - காமனொருநாளுமறியாக்கடவுள்வாழ்வா

சாமவுருவானபரந்தாமனுறுகோயில்-சாமவுருவானமறையானவொலிதாழாச்
சாமவுருவானபுகையோமமலிசாலைச்-சாமவுருவானவொருநாளுமகலாதால் (ச)

மஞ்சுதிகழ்மஞ்சுதிகழ்மாவனவிசாலம்-சஞ்சுதிகழ்குஞ்சிதிகழ்சால்புளவயானம் [ம்.()
வஞ்சிதிகழ்வஞ்சிதிகழ்வானமெழுசாலம்-குஞ்சுதிகழ்குஞ்சுதிகழ்கோமரையோர்கோல

முத்திதருமந்திரமுழக்கமெழுசாரால்-பத்திதருநற்கலைபடிப்பதொருசாரால் [ல்.
யுத்திதருநூனெறியுரைப்பதொருசாரால் - சுத்திதருநூன்மொழிசோதிப்பதொருசாரா

வேறு.

கானமெங்கணுங்கானங்கவிந்திடும்
வானமெங்கணும்வானம்வழங்கிடும்
நானமெங்கணுநானநனைத்திடும்
ஞானமெங்கணுமானவரொங்கணும் (௭)

கூனைவீசுறுகோனேரிமாடெலாம்
மீனைவீசுறுமிக்குளநித்திலம்
தேனைவீசுறுமிக்குளதிட்டைகள்
ஆனைவீசுறுமாமதத்தாறரோ. (௮)

சோம்புகட்டிச்சுழுத்தியின்மீதிலோர்
பாம்புகட்டிப்படுத்தருஞ்சுதனைச்
சோம்புகட்டிச்சுகிப்பவரொன்றவண்
பாம்புகட்டிப்பரவிவழுத்துமால். (௯)

பக்கிநாதன்மேனுதன்பதத்துள
அக்கிநாதரினுதரொனச்சொல்வி
ஒக்கல்போலவுவப்புறுதொண்டுகள்
ஒக்கல்போலவுஞுற்றுமவணரோ. (௧௦)

கதலிமாப்பலாவின்கனியைமறை
முதலிமாப்பலிக்காகமூக்கிற்கொடுக்
குதலைமாக்கிளிகோகிலமாதிகள்
மதலைமாக்களின்வைத்துவணங்குமால். (௧௧)

அலங்குநூன்மறையந்தணரன்புற
விலங்குபுண்முதன்மேவியயாவுமேற்
றுளங்குசோதியின்றொண்டர்க்குந்தொண்டுசெய்
திலங்கநின்றதெழின்மரக்கூட்டமே. (௧௨)

பேதமின்றிப்பெருகுறுமாவியை
நீதமொன்றித்திதிசெய்நிமலனூர்
பாதமொன்றிப்பரசுகமுற்றிடும்
வேதங்கேட்டுகக்கும்விலங்கீட்டமே. (௧௩)

கழல்விரித்துலகாண்டருள்காரணன்
தொழல்விரித்துணைதொண்டர்க்கிரங்கியே
அழல்விரித்தவெயிற்படாதஞ்சிறை
நிழல்விரித்துநிற்கும்வனப்பக்கியே. (௧௪)

ஆக்கள்போன்றவயன்முதற்றேவரைக்
காக்குநாயகன்றொண்டரைக்கண்டுநீ
நீக்குதாமரைத்தாளினிலவெறிப்
பூக்கள்சிந்திப்பொலியும்வனமரோ. (௧௫)

வேறு.

நண்டபேரண்டமெனும்பெரும்பக்கிகருணையால்சரபமாங்கமரும்
துண்டநீண்மாவைமாவெனப்புடைக்குந்தொழிலறப்புரக்குமச்சியம்
பண்டைநாள்வைரமகன்றிருந்திடுதல்பரனடியவரருட்பார்வை [ல்
கொண்டநாள்வந்தகுணமெனிற்பெரியர்கேண்மையிற் சிறந்ததென்குணக்கி

கந்தமாமலர்தேன்சிந்தலும்வேள்விக்கனன்மயங்காணலும்புகைமேல்
அந்தமாயார்ந்துகாட்டலுங்காலாலசைந்துபொற்சிலம்புபம்புதலும்
சந்தமாங்கல்லைகதளும்பலுஞ்சோமன்ருக்கலுஞ்சலிக்கும்பாம்புறகான்
விந்தையைநோக்கினரிபதத்தாடும்விடதரமூர்த்தியைவிரவும். (௧௭)

சமைமுதற்குணத்தாலுலகையோம்பமலன்றன்குணத்தினிதினைச்சாற்றும்
சுமையுளநீண்டபுத்தகக்கரமுந்தூச்சடைமுடியுஞ்செந்துகிலும்
அமைவுளமுனிவன்பசியபூங்கொம்பாருகிருந்தோதுதன்முன்னாள்
உமையவள்கேட்கப்பாதுமோத்தரத்தையோதுவித்தருள்சிவனுறமும். (௧௮)

செக்கரம்பூக்கள்செறிந்தபலாசுசிவந்தவிர்ந்திருத்தலுமதன்மேல்
சக்கரத்தாளினுழியிருந்தொழுகுதாரைநீர்வீழ்தலுநினைக்கின்
அக்கமலத்தானக்கமலத்தாளழகனாடியலம்புறுநீர்
பொக்ககலத்தான்புரிசடைமுடியிற்பூண்டினுங்குனிப்பவன்பொருவும். (௧௯)

விரிபசுந்தழையும்பரிமளமலருமினியசெங்கனியுமென்ருதும்
வரிபசுமளியுமினியமெல்லிசையுமலிமரக்கணமவண்மலிவும்
அரிகரியெனவாங்காங்குளதீர்த்தமளப்பிலவாமதினமர்ந்து
முரகரிக்கினியவருச்சனைபுரிவான்முனிவர்கண்முழக்கமேமுழக்கம். (௨௦)

கேசவன்முதருமோதரனீருக்கிளத்திடுபரமனைப்பூமா
நேசமோடிருப்பவவரவர்படைவாரிழையுடைநிறமெழுவாய
வாசறவமைத்தேபன்னிருநாமமடைவுடையாதுநன்றமைத்து
வாசநற்றுளவுதாமனைமணிகண்மங்கலபவித்திரமுளராய். (௨௧)

திருவணிதுவயந்திருமறுவபயந்திருவடிதுவயமாசிரியன்
திருவடிதுவயந்திருவடிதுடைநீர்திருவடியுதிர்பொடியெம்மான்
திருவடியவர்தந்திருவருள்சேடந்திகழ்தினமொளிர்திருவுருவம்
திருவடிவனமேதிகழரிகுணமேதினமுணுமவரவண்டிகழ்வார். (௨௨)

வேறு.

இக்கானிலிலங்கும்மவ்வெம்மான்ருளெண்ணிப்
பொக்காவொருமகமாற்றிடவேண்டிப்புவிதனிலே
எக்கானமுமுள்ளார்தமையெழுமாறுசெய்தியாகம்
தொக்காதுதொடக்கம்புரிதொல்காதைசொல்கிற்பாம். (௨௩)

உ-வது. நைமிசவனப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் எ௩.

ஆழ்வாராசாரியரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

௩-வது. முநிவர்களெழுந்தருளியபடலம்.

பகைபழிபாவமற்றவராகிப்பகவனைநாடொறும்பழிச்சும்
வகைமிகுமினியநைமிசாரணியவரமுநிவரெலாங்குழுமி
நகையொளிகொழிக்குநம்படைப்பரமனெழுந்தருளிடற்குநாளிட்டுப்
புகைவளர்தீர்க்கசத்திரமகக்குப்புனிதர்கள்வரச்சுருள்பொறித்தார். (௧)

இத்தகைமைத்தானைமிசவனத்தினாப்பனெம்மையனிருப்பின்
உத்தமத்தடத்தின்மாடுநீள்கங்கையோடுநீக்கனையிலோர்சாலை
வைத்ததிலிருந்துதீர்க்கசத்திரமாமகத்தினைத்தொடக்கமிட்டுலகில்
சுத்தமாஞானமுத்தரங்கெழற்குச்சொல்லிவிட்டனர்களிச்சொல்லை (௨)

கரணமூன்றினையுங்கடிந்தமுக்கோலர்கருணையான்மென்னடைகருத்தர்
மரணமில்சடத்தர்பொறிமுறிமனத்தர்மாயையைவறத்தமாவினத்தர்
திரணமென்றினியவைம்புலனொறுத்ததிறத்தினர்பரம்பொருட்குணவா
பரணமேயகலாவழகினர்யோகபலமுளர்பற்பலர்போந்தார். (௩)

உத்தமத்தூர்த்துவப்பிறப்பினுக்கேயூர்த்துவவீட்டினையுறுவான்
இத்தரையிழிந்தேறியலியைந்திடவின்சுபசுகமீறிலாதீய்மா
சுத்தவெண்சுதையாமூர்த்துவநிலையைச்சுழிமுனைநோக்குறத்துலக்கி
அத்தனார்வியாபகப்பெருமனுக்களுருவெண்ணியாங்கெழலானார். (௪)

பண்டுளசுருதிபீடிகைவிளங்குபதியெனுநம்பரமேட்டி
கண்டருள்சுரந்துவெளிப்படையடைவான்படிப்படிவரவெனக்கருத்தும்
கொண்டுளசௌநகாதிகள்விண்ணப்பத்தினைக்காணலுங்குழுவார்
தண்டுகமண்டலங்கணிமுக்கோருங்கிவந்தனரளப்பிலரால். (௫)

புரணமாமொருமூவாமுதலடிநேர்பொலிவெண்மண்புண்டரத்தழகர்
அருணமாமரிசனப்பொடிவிளக்காலவிர்நுதலழகர்தற்பரமன்
கருணைமாவசிதாமரைதுளவின்றகாமரம்மார்பமார்பழகர்
வருணமார்சுருதிவழங்குவாயழகர்மாதவரளப்பிலர்வந்தார். (௬)

மண்டலமேத்தும்வசிட்டனத்திரியம்பிருகுகார்க்கேயன்றௌமியன்மாண்
கொண்டதாலப்பியனங்கிருதுதூர்வாசன்கோதமனகத்தியன்குளிர்மார்க்
கண்டன்போதாயனன்குருவிசுவாமித்திரன்புலத்தியன்காட்சி
மண்டுகண்ணடியன்மௌத்கலனநந்தனன்வச்சனச்சதாநந்தன். (௭)

காலவன்பரத்துவாசனேபுலகன்கௌசிகன்பராசரன்மதங்கன்
ஞாலமோராபத்தம்பனற்சங்கனன்மிருகண்டுடனல்லார்
சீலவேதாந்தசிரமணியெனுநாராயணன்றிருவடியொளிரம்
பாலராவெழுந்தபகவனைக்கண்டபண்புறுசௌநகர்முதலோர். (௮)

பொங்குறுபுரணவொளிநிறைமதிமுன்போந்திடக்கண்டவார்கலிபோல்
சங்கம்விட்டெழுந்திட்டார்த்தெதிர்களிப்பத்தழுவியேயவரவர்க்கினிய
இங்கிதமுகமன்களைமுறையியற்றியியலுறுகுசலமேவினவி
எங்களைப்புரப்பானெழுந்தருண்முநிகாளிருமெனவிருத்தியேவணங்கி. (௯)

களிபடுசௌநகாதிகளெழுந்தகணிக்கறுமுநிக்குழாங்கட்கும்
இளிபடுபூசையியற்றியன்னவர்களேவலின்படிப்புரியாகம்
நளிருறவியற்றிவருமுழியொருநாணுகமண்ணுண்டருள்பெரியோன்
ஒளிகொளுங்குணங்களவன்றன்சந்நிதிகளுறுதலப்பெருமைபேசிடுநாள். ()

எழுந்தருளினன்றன்னுதன்முதலாப்பன்னிரண்டுபுண்டரங்களுமிலங்கிக்
கொழுந்துவிட்டொளிருமங்கலத்தாயின்கோலமுமார்பினிலினிதாய்
விழுந்துமொத்தாடுந்தாமரைதுளவின்மணிகளும்விமலநன்னுவில்
தொழுந்தகைத்தானதுவயமந்திரமுந்துலங்குறச்சூதமாமுநிவன். (௧௧)

வந்தருண்முனியையிருந்தபேரறவோர்மகிழ்வுடனுபசரித்தந்த
அந்தமில்லவன்றனர்ச்சையின்மான்மியத்தினையுசாவல்செய்யமையம்
எந்தையினருளாலெமக்குநேர்ப்பட்டீடொன்றுபன்முறைசொலிமகிழ்ந்து
நந்தலில்புராணமுற்றுவந்தவர்க்குநடந்துவந்துளநலிவகற்றி. (கஉ)

வேறு.

மேருநேருமானஞானமெய்ம்மையாளர்யாவரும்
காருநேருமானதேனிருலைக்காமன்வண்டுபோல்
வாரும்வாருமென்றுசொல்லிமகிழுமுகமுறைற்றினர்
பீருசார்கிலாதகாதைபேசுவானைமொய்த்தனர். (கங)

மொய்த்திருப்பவானதோரிருக்கைதன்னைமுனமுற
வைத்திதின்மீதேறியையவைகவென்றுவாழ்த்தினர்
பைத்தலைப்படப்பணிக்கணிற்றுயில்செய்பண்ணவ
னைத்துதிக்குநம்பிமாளாநன்குசூதன்போற்றியே. (கச)

போற்றிநின்றிருந்தபின்புநிதமாதவத்தவர்
தோற்றிநின்றசூதமாதவத்தவமுன்றேமிலா
எற்றநின்றவியாதர்பாலெலாப்புராணசாத்திரம்
ஆற்றுராமகாதைபாரதம்மெலாமறிந்துளீர். (கரு)

முற்றுமுற்றவுற்றநீமுன்மோதமாரொங்கட்கெலாம்
சுற்றுநீரகத்திலுள்ளசோதியின்றலங்களை
இற்றதிற்றதென்றுசொல்லியேகுநாளினித்திடத்
தெற்றியானதில்லைச்சித்திரகூடச்சிறப்பினை. (கசு)

சத்தியத்தலத்தின்மீதுசனகயோகிமார்கண்முன்
உத்தமக்குணத்துநாரதற்குமும்பர்போற்றுறச்
சித்தமுள்ளதும்புருக்குந்தேவதேவனாகிய
அத்தனப்பிதாமகனறைந்தவாரறைந்துளீர். (கஎ

அதனையின்றுகாறுமேயருட்செயாதிருத்தலால்
புதனையொத்தநீரொழுட்பொதிந்தவாசைதீர்தர
இதனையுண்மையாவெடுத்தியம்பவென்றுவேண்டலும்
மதனைவென்றசூதன்மாதவத்தரைவிளித்தரோ. (கஅ)

என்னையோர்பொருட்கொடேயியம்புகென்றவிறைவர்காள்
முன்னையானுமானைகொண்டுமொழிவன்மூன்றுகரணமும்
பின்னையெங்குமகல்கிலாதபெற்றியுற்றுகப்பிரோல்
என்னையாளுந்தில்லைநாதனேந்தல்சொற்றுமென்றனன். (ககூ)

சொற்றுமென்றபோதுதாபதக்குழாங்கமேனம்
உற்றுமிக்கவானவின்பவுவரிமூழ்கியாரியர்
கற்றுவைத்ததனியஞேதிக்கண்ணனார்பல்லாண்டிசைத்
துற்றுருக்கமாவிருந்தவ்வுண்மைகேட்கலாயினர். (உ௦)

ஆனபோதுசூதமாதவத்தனுந்தன்னத்தனும்
ஞானதேசிகன்பதத்தைநன்றுபோற்றிநின்றுபின்

ஈனமானபொறிபுலன்கட்கெட்டிலாததில்லைவாழ்
வானநாதனைத்தன்னுள்ளில்வைத்தறிந்துநோக்கியே. (௨)

நோக்கியுள்ளியவனருட்குணத்தையெண்ணிநோவறத்
தேக்குமின்பவாரிமூழ்கிச்செம்மலர்க்கண்சேப்புற
ஆக்குமச்சமாதியுற்றகண்டமேனிகண்டுமேல்
வாக்கிறந்தசோதியைவழுத்தியோதன்மன்னினன். (௧௨)

வேறு.

அந்தணர்க்குநற்றிருமகனுதனையமைந்து
வந்ததெய்வமென்றறைமறைப்படிமறவாத
சிந்தையாளரோதில்லையின்பெருமைநாரதனார்
எந்தைவியாதருக்குரைத்ததுயான்சொலுமிதுவால். (௨௩)

நீடும்வல்வினைநீக்கிமன்னிறைசுகமுத்தி
வீடுதந்திடும் விண்டுவிற்கடியரோவிரிபொன்
னாடுபோற்றறுநளினனூர்மகவுநாரதர்முன்
கூடுமொமுதல்யுகத்திற்றும்புருவொடுங்கூடி. (௨௪)

மாநிலத்தின்கணுளபலதேயமாமலைகள்
கானிலத்தின்கணுளபலநதிகள்காத்தளிக்கும்
மீநிலத்துவான்விமலனூர்தலங்கண்மிக்கான
தூநிலத்துக்கேத்திரமெலாங்கண்டனர்தொழுதார். (௨௫)

சுற்றியேபலவளமெலாமறிந்துமேற்றுலங்கும்
வெற்றிமேன்மையார்சத்தியலோகமேமேவித்
துற்றுதேவருமுநிவருமளப்பிலர்சூழக்
கற்றநான்முகக்கடவுள்வாழவையினிற்கலந்தார். (௨௬)

புக்குநாரதமுநிவனும்புகழ்கொடும்புருவாம்
பக்குவப்பெருந்தவனும்பங்கயன்றனைப்பார்த்துச்
சிக்கெனப்பணிந்தவனடிமலர்முடிசேர்த்தார்
நெக்குநெக்குருகப்பலபலதுதிநிறைத்தார். (௨௭)

எம்மையாளுடையிறையவன்முதறருமெந்தாய்
அம்மையிம்மையுமளித்திடுகலைமகட்கரசே
தம்மைமேவியதாமதமறவுடலளிக்கும்
அம்மைமேவியசுருதிசொல்லமலனேபோற்றி. (௨௮)

எண்ணிறந்தபல்லுயிர்கள்செய்வினையெலாமெண்ணிக்
கண்ணிறைந்தபல்லுடலெலாமிமைப்பினிற்காட்டி
யுண்ணிறைந்துளவுத்தமனருள்செயவுஞற்றும்
பண்ணிறைந்தபல்லிசைபடர்பரமனேபோற்றி. (௨௯)

போற்றியென்றுபன்முறைதுதிசெய்துளபோழ்து
வீற்றிருந்துளவிதியிவராகநம்விழித்துத்
தோற்றுமெம்மருஞ்சுதர்கணீர்வருதிறொன்றாசி
சாற்றியின்புகூர்ந்தருகுறவிருத்தினன்றாதா. (௩௦)

சுத்தசத்துவவைணவமுநிவரோசுருதி
அத்தனாரதமுநிமுதலினர்தமையன்பால்
நத்தியன்னவர்கேட்பவைக்கியையவேநவில்ல
பத்தியோடுரைக்குதுமறிவீரொனப்பகரும். (௩௧)

௩-வது முநிவர்களெழுந்தருளியபடலம் முற்றிற்று.

ஆக படலம் - ௩க்கு திருவிருத்தம் - ௧௦௪.

ஆழ்வாராசாரியரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௪-வது. சிவதாண்டவவினாப்படலம்.

நீதமோர்ந்துளபார்ப்பனச்சிட்டரோங்கிலம்
சாதநீங்கிடச்சகம்புரந்தருடிருமாலின்
பாதநீங்கிடாப்பாலனும்பிரமனாரதனுக்
கோதலோதுதுமுணர்திராலெனச்சொலுஞ்சூதன். (௧)

விடையவின்பினைவெஃகலற்றகண்டபூரணவைம்
படையநாதியின்பதமலர்வெஃகினேயென்னை
யுடையநாயகனுலகெலாம்வலம்வருமுனைப்போல்
நடையுளாரொவருண்டெனவியந்துபின்னவில்வான். (௨)

கந்தநாண்மலர்க்கிழவனாரதன்றனைக்கண்டென்
மைந்தநீயெவண்சென்றிவணின்பொடும்வந்தாய்
அந்தமாநிலத்தென்னெனவற்புதமறிந்தாய்
இந்தமாவவைதன்னினீயியம்புதியென்றான். (௩)

என்றுமண்பொதுத்தந்தைகடாவலுக்கிசைகள்
துன்றுவீணைசேர்முநிவரனையயான்றுய்தா
நின்றுபோற்றுநீள்கடல்வளைநிலவுலகத்தில்
சென்றுவந்தனன்தேவர்தம்மருளினாலென்றான். (௪)

என்றபின்னருமையநின்சிருட்டியிலில்லா
தொன்றும்யானுணர்கின்றிலேனாகிலுமுடையாய்
இன்றுகண்டதையியம்புகென்றேவுமாணையினால்
நன்றறிந்தவோரற்புதமுரைக்குவனாயேன். (௫)

நாயினேனனந்தநாடெலாநோக்கியேவருநாள்
தாயினேரருட்காவிரிவடக்கிலேதாதாத்
தோயமாரும்வெண்ணதிவளர்தெற்கிலேதொடுநீர்
பாயுங்கீழ்க்கடன்மேற்கிலேபூதரப்பரமன். (௬)

வாசமாகுஞ்சீமுட்டத் துக்கிழக்கிலேமதிக்கும்
கேசவன் றனக்குரிமையாங்கிருட்டிணக்கானம்
ஆசிலாததொன்றிருக்கின் றததன்கணுரியர்கள்
பேசுஞ்சித்திரகூடமொன்றுளததுபெரிதால். (எ)

சித்தமாயதினடுவணோர்திவ்வியநகர
மத்தியத்துளததிற்பலகோபுரமதில்கள்
பத்திபத்தியாய்மண்டபவரிசைகள்பரந்து
பித்திகள்பலசூழக்கொண்டுளவவைபெரிதால். (அ)

அந்தமாகுமச்சினகரநடுவணேயமைந்த
விந்தையார்மகிழ்கனகமென் சவைநன் றவிளங்க
எந்தைகண்டனனதினடுவினின்மணியிழைத்த
சந்தமாமணிப்பீடிகையொளிசெயத்தழங்கும். (௯)

தழங்குமாமணித்தவிசின்கணமரர்கடாழ
முழங்குமாமறைமூர்த்தியென்றொருவர்கண்முகிழ்த்து
வழங்குமாதிவெண்மாசுணப்படுக்கையின்மகிழ்ந்து
தொழுங்கையோர்தொழத்துயில்செய்யோர்சோதியைக்கண்டேன்.

எக்கலற்றிடவியற்றவெம்மோகனமின்றல்
சுக்கிலத்தினைக்கால்வழிவிடச்சுழித்துயிரை
நுக்குமாபகுதிக்கண்வாய்பசுக்களைநோக்கிப்
பக்குவத்தருள்புரிதுயில்பரமனைப்பணிந்தேன். (கக)

கண்டவப்பரன்றிருவடிவாரமேகளித்துக்
கொண்டவானந்தக்கூத்துசெய்திருப்பவனொருவன்
இண்டைநாயகவியம்புசபாபதிக்கினிய
தொண்டனுடலென்றூயவன்காணலென்றொருப்பாய். (கஉ)

பாம்பின்மேற்படுத்துளமகிழ்படிவமொன்றெடுத்துத்
தீம்புதீர்தரத்திருமணிப்பொற்சிம்மாசனத்தில்
சோம்புதீர்தரவீற்றிருந்தவையுளோர்துதிக்க
வீம்புகொண்டரனுடலைக்காண்பதென்விரிப்பாய். (கந)

களிப்பினேடரனுடலென்காளியாமுமையும்
ஒளிப்பினேடெதிராடலென்னுலகுண்டவொருவன்
விளிப்பினேடுகோவிந்தராசப்பெயர்மேவி
அளிப்பதென்விதமற்புதமிதையருள்கிற்பாய். (கச)

என்னகாரணத்தால்வெள்ளைநதியங்ஙனிலகும்
என்னகாரணத்தாற்பொன்னிநதியங்கணிவரும்
என்னகாரணத்தாலங்குச்சீமுட்டமிருக்கும்
என்னகாரணத்தாற்றில்லைவனமெனவிசைப்பார். (கரு)

தில்லைச்சித்திரகூடமென்றிசைப்பதென்செகத்தோர்
அல்லைப்போக்குறுகிருட்டினக்கேத்திரமாகும்
சொல்லைக்கொண்டதென்சுவேதமென்நீவினிவிருந்து
நல்லக்கோவின்மூவாயிரர்வரலென்றேநவில்வீர். (கசு)

வெள்ளைவாரிதின்றெம்பெருமானவண்விளங்கிக்
கள்ளநித்திரைகொள்ளழகென்னவன்கழற்கீழ்ப்
பிள்ளைமாமதிவேணியனுடலென்பிறங்குங்
கொள்ளைமாதவர்முநிவர்சேரழகென்னேகுறிப்பீர். (கஎ)

வேறு

புண்டரிகபுரமென்றும்புண்டரிகசரசென்றும்பொருந்தும்பேர்கள்
கண்டவிதமென்னேபின்கனகசபைபிரமசபைகனர்பேரால்
கொண்டசவைநடனசவைஞானசவைகுரிசில்சவைகோதில்சோதி
விண்டவரத்தினத்தின்சவைமுநிவர்சவையென்றுபலவிளம்பலென்னே. (கஅ)

கண்ணுவரும்பதஞ்சலியுங்கதிர்குலராசமுனியுங்கரிசொன்றில்லா
விண்ணவர்கண்மகிழ்புண்டரீகருமத்தில்லிசில்லிமுதலோர்தாமும்
எண்ணறுநாளென்வேண்டித்தவம்புரிந்தாரங்குள்ளவேற்றமான
புண்ணியதீர்த்தங்களவையெக்காலத்தீர்த்தமெலாம்புனிதமாகும். (கசு)

திருமகளுமண்மகளுநீளையெனுஞ்சுகமகளுந்திருமெய்ஞ்ஞானப்
பெருமகர்களாகுநித்தமுத்தரும்வந்தினிதேத்தப்பிறங்குமையன்
அரங்கனென்றும்வேங்கடத்தினப்பனென்றும்பட்டாபிராமனென்றும்
உருவனென்றும்வேணுவுடைக்கோபாலசாமியென்றுமுரைத்தலென்னோ (உ0)

அன்னதீர்த்தங்களங்காராலுண்டாயினவோவவைகட்கெல்லாம்
சொன்னபாலகரெவரோவவிற்குளிப்பார்க்கென்னபலன்சொல்லிற்றேநம்
முன்னவனுக்காராரொத்திங்கடனிற்றிருவிழாமுடித்துப்பெற்ற
தென்னபலன்றிருப்பணிகளாரார்செய்தென்னடைந்தாரியம்பல்வேண்டும். (உக)

படைத்தளித்துத்துடைத்துமுத்திப்பதமருளெம்பெருமான்றனருளாலாலம்
கிடைத்தகண்டனங்காடிக்கொண்டின்னுமென்புரிவான்கிளர்வேலோனைப்
படைத்தவணங்கென்குறையாற்றளைமாட்டப்பட்டனனேபகரும்வேதத்
தடைத்தவட்டாக்கரப்படியுமாயிரப்பேர்மண்டபமுமமைந்ததென்னே. (உஉ)

மண்ணுலகிலிருக்குமருண்மூர்த்திதலந்தீர்த்தமெலாம்வணங்கிவந்தேன்
கண்ணுதலிப்படிநடிக்கக்கண்டருள்செய்கண்ணனொருகான்மேலிட்டு
வண்ணமுறுகனகசவைதனின்மணிப்பொற்பீடிகைவீற்றிருப்பமாகர்
எண்ணமுறுமுநிவர்சேவித்திருப்பக்கண்டில்லையிசைத்தல்வேண்டும். (உங)

மற்றுமுளபலமாட்சிவரலாற்றையெல்லாமென்மனத்திற்கின்பம்
முற்றவருள்புரிந்தருடிசிருட்டிபுரிநான்முகத்தெம்மூர்த்தியென்னக்
கற்றவிசைக்கரசானமுநிநாரதன்பணிந்துகசிந்துகேட்ட
நற்றவத்தினதிகாரந்தோன்றநிற்கும்பக்குவியைநளிநனேக்கி. (உச)

உரைக்குமறையுரைக்குதுமெம்மாரியராம்வியாதமுநியோதிவைத்த
வரைக்குமிதைச்சௌநகமாமுநிவரரோமற்றபுராணம்போலெண்ணிப்
பரைக்குளிராதிருந்துமிகவன்போடுகேண்மினெனப்புகன்றுதெய்வ
விரைக்கமலத்தவண்மகிழ்நனருளடைவீரெனச்சூதன்விளம்பலானன். (உரு)

ச-வது. சிவதாண்டவவினுப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் - சக்கு திருவிருத்தம் - கஉகூ.

ஆழ்வாராசாரிய ரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ரு - வது - பிரமன்விடைதருபடலம்.

அடியிடைக்கடையொன்றில்லாவற்புதமூர்த்திதாளில்
முடியுடைமுழுமெய்ஞ்ஞானமுத்தர்காண்முகுந்தற்கின்பாம்
நடையுடைநாரதப்பேர்நன்முனிக்கயனன்போடு
விடையுடையவன்றனட்டவிதஞ்சொலல்விருப்பினேற்பீர். (க)

சித்திரக்கூடமான்மியத்தையச்சீமான்றன்முன்
பத்தியிற்கேட்டுமெற்குப்பரமராசியமீதன்பாம்
புத்திரகேட்டியென்னாப்புகன்றனன்வதரிதன்னில்
குத்திரமகலவின்பிற்கூறியீதறையலானான். (உ)

தகரநல்வித்தைமேலாந்துவித்தைசாந்திமேய
பகர்புருடோத்தமப்பேர்வித்தையப்பரமவித்தை
அசரவித்தைக்குண்மேவுமாதலாலந்தவித்தை
சிகரமாய்விளங்குமிந்தச்சிற்சபைசிறந்ததென்றும். (ங)

சிற்சபைதன்னிலட்டாக்கரப்படிச்சிரம்வாழெந்தை
அற்புதலீலைக்கானதில்லையீதன்பிற்கேட்போர்க்
குற்பவமினிமேலில்லையுகந்தவாவெல்லாம்வல்லார்
கற்பவர்க்குண்மைதோன்றினிதனைநீகழறியென்றும். (ச)

பவமெலாம்பறித்துத்தங்கள்பகையெலாமுரித்துவேண்டும்
அவையெலாமீந்தேநீண்டவாயுளையுதவிக்கீர்த்தி
தவமுளகல்விஞானஞ்சுகிர்தமுந்தந்துமோக்க
நவமதைவிரும்புவோர்க்குநவையறக்கொடுப்பதென்றும். (ரு)

எழுதொணாக்கேள்வியுச்சியிசைக்கொணாவீசனுந்தன்
பழுதிலாவடிவமென்றும்படிப்பவர்பிறவாவொன்றும்
வழுவிலாத்தூயசத்துவப்பெருவிமானமான்
தொழிவிலாவெனக்கின்பாமீதொன்றுமென்றுரைத்தானெம்மான். (சு)

எத்தனையூழியூழியெண்ணிலாத்தவமுற்றார்க்கும்
முத்தர்கண்மூர்த்தியான்முகுந்தனார்பத்திமூளா
துத்தமவுனக்கோவெம்மானுகந்துனாற்றருளினாலே
இத்தனைத்தலங்கணிற்பத்தில்லையிலிறும்பூதுற்றாய் (எ)

தில்லைமான்மியத்தைச்சொல்லத்திருமணவாளன்றூங்கும்
எல்லையின்மறைகள்வந்தவிரும்பைபவேந்தனுக்குமொல்லா
நல்லைநீகேட்கையாலேநான்றிசில்துசொல்கேன்
ஒல்லையீங்கணைதியென்றுப்பிரணவப்பொருளையுன்னி. (அ)

வாக்கிறந்தெண்ணுகின்றமனமிறந்தாக்கையாற்செய்
நோக்கிறந்தவிர்ந்துகாணுநுதற்கெதிரானதேவை
மூக்கெதிர்விழித்துநோக்குமூதுலகனைத்தும்பூத்துக்
காக்குமெம்பெருமான்பாதகமலத்தைக்கண்டுவாழ்த்தி. (கூ)

உறங்கினுனுள்ளுக்குள்ளேயுருகினுனுவகைமூடக்
கறங்குபோற்சுழலுநெஞ்சைக்கட்டினன்கண்ணுவென்றான்
பிறங்கொளிமேனிகண்டான்குணமெணிப்பெருகுகண்ணீர்
குறங்குறக்கொட்டிக்கண்டான்சிரத்திற்கைகுவித்துக்கொண்டான். (கo)

குவித்தனனறிவோமென்றுகுழறினனூர்த்தியாலே
தவிர்த்தனன்முகுந்தற்கானதனியனையநுசந்தித்தான்
அவித்தனம்பிறவிவித்தையனைவருமண்மினென்றான்
கவித்திடுபுளகவின்பாங்கஞ்சுகம்பூப்பமன்னே. (கக)

சனகசனந்தியானயோகிகாளருகிற்சார்ந்த
கனகசபாபதிப்பேர்க்கடவுடன்கானீர்மூழ்கும்
அனகனென்றுரைக்கப்பெற்றவரன்றனையாடல்கண்ட
தனகனகாம்பரத்தான்றில்லையைச்சாற்றலுற்றான். (கஉ)

நவைதபுமுனிவவந்தயனுடைத்தில்லைமூதூர்
சுவைதருமதிமிலைந்தான்சுழன்றியற்றுடன்மாட்சி
அவைதனையுரைத்தும்பின்னரதற்குமுனியன்றசீரின்
குவைதனைக்கேட்டியாயிற்குறிப்பதுவிளக்கமாகும். (கரு)

பதம்பெறுநகர்க்குத்தில்லைபுலிநகர்பாடுமேலாம்
விதம்பெறுசித்ரகூடம்வீறுளதகராகாயச்
சிதம்பரங்கீரவாரியரங்கம்வேங்கடமயோத்தி
சுதம்பெறுமாயர்பாடிபுண்டரீகப்பேர்சொல்வர். (கச)

அக்கதையனைத்துங்கேட்டபின்னரச்சிவற்குந்தக்கன்
பொக்கறமகட்கும்பூண்டகுளினைப்பொருந்தச்சொல்வன்
இக்கடுஞ்சூளான்மிக்கவீசன்சாம்பவியைத்தீச்சொல்
தக்குறவறைந்தபின்னரவடொடுசமருஞ்சொல்வன். (கரு)

பதிமதிகலங்கவன்னாள் பற்றியேகியதுஞ்சொல்வன்
விதிவிதிப்படியாலங்காட்டினினடிவிதமுஞ்சொல்வன்
நதிபதிநகுமெம்மீசனிவர்க்கருணலமுஞ்சொல்வன்
விதிபதியருளிற்றில்லைக்கிவரொழுவிதமுஞ்சொல்வன். (கசு)

அந்தமிலடிகள்பாதத்தருகவராடல்சொல்வன்
கந்தவேடாயியார்க்குக்காறனைவரலுஞ்சொல்வன்
சந்தமார்சம்பிரட்டச்சயமதுசரியாச்சொல்வன்
வந்தமாத்தலத்துமான்மியங்களைவந்தசொல்வன். (கஎ)

தீர்த்தமீராறுஞ்செய்தார்தினம்பெயரவர்தம்பேறும்
பார்த்துனியாடினார்க்குப்பதிந்திடுபலமுங்காவன்
மூர்த்திகள்பேருந்தில்லைக்கோவிந்தன்மோதமோடும்
கூர்த்தவண்மதிகடோறுஞ்சாறுடன்குலவல்சொல்வன். (கஅ)

அறிதியான்மகதிக்கானவம்முநியாதிநாளின்
இறுதியானில்லைச்சேந்தவிண்டையானில்லைவானச்
சிறுகண்மாவரனுமில்லைத்தெள்ளிமாமுகனுமில்லைக்
குறுதிருக்குடனுமில்லைக்குலவுவான்றேவரில்லை. (ககூ)

தத்துவக்கொத்தொன்றில்லைத்தழைத்துணைகலைகளில்லை
வத்திவரிவரொன்றேதும்வாதிகடாமுமில்லை
அத்தினமென்னையீன்றவருளினனன்றிவேறோர்
கத்தனின்றவனூற்றோன்றுமகிலகாரணத்தைக்கேண்மோ. (உ0)

காரணங்கேண்மினென்றக்கமலயோனிப்பிரானும்
ஆரணம்பாடுவொருக்கருள்புரிதில்லைமாட்சி
நாரணற்கடிமைபூண்டநற்றவமறையாளர்க்குச்
சீரணவருளலானன்வியாதமாமுநிவன்சீடன். (உக)

ரு - வது-பிரமன்விடைதருபடலம்

முற்றிற்று.

ஆக படலம் - ரு - க்கு திருவிருத்தம் - கரு0.

ஆழ்வாராசாரியரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

௬ - வது. பிரமனைப்படைத்தபடலம்.

சுரநிலையெழுதாக்கேள்விச்சென்னியிற்றுலங்குசோதி
உரநிலையமலைகொண்டோனெளிபதத்தோவாவின்போய்
பரமனையறியாவெச்சப்பழவினையகற்றற்கியானும்
பிரமனைப்படைத்தமாட்சிபேசுவல்பெட்பினோர்தீர். (௧)

விண்டினையிசைக்கும்வீணைவித்தகமுநிவமுன்னுள்
கண்டிடும்பொருள்களொன்றுமமர்ந்திடாக்காலந்தன்னில்
தொண்டனுமென்னைமுன்னந்தோற்றுவித்தவன்றன்சீரைப்
பண்டோனறிந்தவண்ணம்பகர்ந்துபின்பகர்வன்மாதோ. (௨)

மந்தணமாகுமென்னுமந்தணவவைக்குளெல்லாம்
மந்தணமாகுமீதுமற்றொருதலங்கண்மானச்
சிந்தைசெய்திடலாகாதுதீதொரீஇத்தொழுதெம்மானைச்
சிந்தையிற்கோடல்வேண்டுந்திருக்குறின்வறுக்கும்பாவம். (௩)

வேறு.

தொல்லைநாளிலங்றகணைந்திழிதோடமெங்குமலிந்துழி
நல்லனுனவென்னையனுணையினுலீராறுவெஞ்சூரியர்
எல்லையாயிரகிரணமாவிகையிட்டெழுந்துலகத்தினை
வல்லராகியெரித்தொழித்தனர்வருடமீரிரண்டிற்குளே. (௪)

உள்ளவாகியதிக்கணங்களுமோதுவாயுவினங்களும்
துள்ளுமானசராசரங்களிலொன்றுமில்லைதொலைந்தவால்
கள்ளமின்றியெல்லாரையுந்திதிசெய்யுமெங்கள்கருத்தனைக்
கொள்ளுநன்மனமற்றுத்தீமொழிகூறுவார்குலமொக்கவே. (௫)

பாதளத்துறுநீரும்வானில்படர்ந்தநீரும்பரந்துள
சீதளத்துறுதேவமானிடமாதிசீவருஞ்செத்தனர்
வாதளத்திடலானபேரும்வணங்குமன்னவர்தேவரும்
கோதளத்திடலற்றொழிந்துகுணக்கருப்பின்மழுங்கினர். (௬)

மழுங்கிமாய்ந்துமறைந்தபோதொருமாதவப்பெருமாயவன்
விழுங்குமாவியையுள்ளவித்தெனும்வீறுகொண்டுயிர்பகுதியைத்
தொழுங்குவாலுடன்றன்னிடத்திலொடுங்குமாறுசுருட்டியே
அழுங்கிடாமலடக்கிநின்றனனுருமற்றநிராகரன். (௭)

ஈதினத்திலனேகநாள்களிருந்தபின்பரமேச்சுரன்
சீதளத்திருவுளமதின்னெனேசிந்தைசெய்துதிரும்பவும்
காதுறத்தருமேகநீரரசைக்கருத்தினினைந்தனன்
மோதுறக்கரியின்கரத்தினையொக்குமாரிமுடுக்கினன். (௮)

பயமுறப்பெருநூறுவற்சரமிடையறாதுபயந்தனை
சயமுறப்பரனாணையின்படிசல்தரம்மழைசாய்த்தலும்
நயமுறப்பெருமண்டமண்டலமெங்குமொக்கவோர்நரலையாம்
மயமதாகியிவ்வகிலமெங்குநிறைந்துமாயிருளானதால். (௯)

முடிவுகால்மதாதலாலழிவற்றமாமுதன்மூர்த்தியும்
வடிவிலாதநீரொங்குமாகிமலிந்துநின்றதைநோக்கினன்
ஒடிகலாதவோர்தத்துவங்களொடுங்குதன்னுவகைப்படி
விடிகிலாதளவற்றகாலம்விளங்கவென்றுவிரும்பினன். (௧௦)

குழவியாகியனேகமாயுகமாகநித்திரைகொண்டவன்
ஒழிவிலாதபவத்திலார்ப்பொடுறங்குமாவிகளைக்கொடு
வழுவிலாததன்குக்கியுட்கிடந்துள்ளதாகியமாயையைத்
தழுவிநல்லருளாலவர்க்குடறந்துகாத்திடவெண்ணினன். (௧௧)

அல்லையெல்லியெனக்கொடுண்மகிழாதியற்றவனருமித்
தில்லைநாயகனன்றியானரன்றேவரிந்திரனாதியோர்
இல்லையில்லையந்நாளினுஞ்சிலருள்ளதாகவிசைப்பரோல்
பல்லையற்றகிழக்குழிந்தவாயுதடசைந்தபயன்பெறும். (௧௨)

பகுதியுற்றிழிமேனியைம்பொறிபுலன்பகுப்புறுகரணமென்
விகுதிகோசமெலாமிலாதவிநோதநின்மலநாரணன்
தகுதியானவகோரரூபசம்மாரகாலமாந்தத்துவக்
கதிபனாகியெலாமொடுக்குவனாதலாலரியாகினன். (௧௩)

காளராத்திரியாகிவிட்டதோர்காலமேவருநாளிலே
நாளராத்திரிநாதநாதனுநண்ணுதன்பெருமாயையை
ஆளராத்திரியாலமாமரமாக்கியச்சிறுவடையின்மேல்
கோளராத்திரிகொண்டநாரணன்குழவியென்றுதுயின்றனன். (௧௪)

குலவுநின்மலசோதிமென்சிறுகுழவியின்னுருக்கொண்டுநீர்
உலவுதானுனியைத்திருப்பவளத்துவைத்துயிர்க்கூட்டனன்
நிலவுவான்றனதிச்சைகொண்டுலகத்தையாக்கநினைத்தனன்
பலவுமாகியலானுமானபராபரன்றனதுந்திவாய். (௧௫)

பொன்மயத்திருவழகுமாய்நவமாமணித்திரள்பொத்திய
நன்மயத்துறுமுட்களோடொருநாளத்தாமரைபூத்தது

சின்மயப்பெருவிண்மோயையெனச்சொலித்துதிசித்திரத்
தின்மயத்திலோராயிரம்மிதழ்கொண்டலர்ந்துசிறந்ததே. (கசு)

மதுநிறைந்துதேவமாமணமேநிறைந்ததுமாவழ
கதுநிறைந்ததகண்டமானததற்புதத்ததுகருணையென்
பதுநிறைந்தவெம்மீசனுணையிற்பட்டதாமரைமலரின்மேல்
புதுநிறைந்தநன்முன்முகத்தொடுபூத்துநின்றுவிளங்கினேன். (கஎ)

பூத்துநின்றுளயானுமங்குபொருந்தநோக்குறுகாலரோ
தீர்த்தமன்றியோர்பொருளுமின்றிருளொன்றிநின்றுதிரண்டுள
பார்த்தயான்பயமுற்றுமேனிபணிப்பத்துன்புமிகுப்பவே
சேர்த்ததாமரைமலரினின்றுதிகைத்தழுங்கிவருந்தினேன். (கஅ)

வேறு.

வருந்தினேனென்றசெஞ்சுடர்பூத்தவசுமலரவன்றனைப்படைத்த
அருஞ்சுடரோத்துமாரணக்கிழவராகிமெந்தணீரமலன்
பெருந்துயரகல்வான்விரிஞ்சிமுனெழுந்தும்பிழைதீர்த்தாண்டவாறுரைத்தும்
திருந்துமுக்கரணமசைக்கலிமொன்னுப்பேசுவான்றியக்கமில்சூதன். (கக)

சு - வது பிரமனைப்படைத்தபடலம்
முற்றிற்று.

ஆக படலம் - சு க்கு திருவிருத்தம்-கசுக.
ஆழ்வாராசாரியரெம்பெருமானர் ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

எ - வது. அன்னவடிவாகியபடலம்.

பன்னவடிவாதியிதுவென்றுபகரொண்ணுன்
என்னவடிவேதுகுணமென்றறிகலாதான்
சின்னவடிவாகியமூதேங்கெனுமுன்சீமான்
அன்னவடிவாகியருள்செய்ததறிவீரால். (க)

வேறு.

சுகமுகமெங்குஞ்சூழ்ந்தறிகில்லாத்துனியாலே
நகமுகமெங்குந்தேடிநலிந்தேநாவிண்டு
ககககவென்றேகூக்குரலிட்டேகமர்விண்டு
அகமிகநொந்தேயயர்வுமிகுந்தேயமூநாளில். (உ)

ஆர்யாரென்னையாண்டவரென்றேயயர்வெய்திச்
சோர்வாய்நின்றேசொல்லுறுகாலேதுண்ணென்று
நீர்வானெங்குநிலவுபரப்பிநிலவானில்
கூர்வாயன்னம்பொன்னுருவாகிக்கொண்டன்றே. (௩)

பொன்னுருவாகிப்பொங்கொளிவீசப்புகர்மேவி
மன்னினன்முன்னங்காயத்திரியுள்வதிகாதன்
இன்னவனேயப்பிரணவமேனியெனும்வேதன்
என்னவனென்றேயான்மகிழுறவென்னெதிர்நின்றான். (௪)

பின்னரும்யானேககககவென்றேபெரிதாகச்
சொன்னவென்னைக்கண்டன்புடனோக்கிச்சுதனேநான்
முன்னவனாகுமென்பெயரரியாமுறையானீ
மன்னுமென்மைந்தனாகுதிநீயிதைமறவாயால். (௫)

என்னைவிளித்துக்கககவெனநீயினிதாகச்
சொன்னதனாலேநிற்குககப்பேர்சொற்றோமால்
இன்னவிதத்தாலினியுலகத்தோர்பெறுசேய்க்கு
முன்னுபிதாவேபேரிடனீதிமுறையென்றான். (௬)

வான்முகமாகவெலாமுகமுந்நிறைவருமென்றன்
மேன்முகமேனிதனினீவந்திடுமேலாலே
நான்முகனாகப்பேர்கொடுமிக்கநல்லோர்கள்
தான்முகமாகச்சொல்லியழைப்பத்தகுமென்றான். (௭)

மைந்தாவிங்ஙனண்ணுதியென்னுமறைநாவால்
எந்தாயென்றிடுமெம்பெருமானுமினிதாகச்
சிந்தாதென்வலதானசெவிக்கட்டிரமாகச்
சந்தாரும்மரியோமெனமுக்காற்றயவாகி (௮)

ஓதிமுடித்தேயோய்மகவேகேளுலகுள்ளோர்
நீதிமுடிக்குநூல்களையோதுநெறிதோறும்
ஆதியிலேயிடையீறினிலேயரியோமென்றே
ஓதியபேரொருபோதுமேதீமையிலுளராகார். (௯)

முற்றுமொழிந்துளவூழியிலேயுடன்முரிவாகித்
துற்றுறுமூலப்பகுதியிலேமிகுதுனிமேவி
உற்றபசுக்களையாள்பதியொருவருமறுநாளில்
பற்றியளித்துடலீந்தருள்செய்துளபரிவாலே. (௧௦)

அரியோமென்றேபெரியோரின்னுமன்பாக
வருநாடோறுமுதற்பயினூன்முன்வரைந்தோதல்

தெரியாதொருபேர்வேருேதினரோற்றீத்தாவும்
எரிவாய்நிரயத்திழிவாரழிவாரிதுதிண்ணம். (கக)

மந்திரமோதிமகிழ்ந்தெனைநோக்கிமறைந்தான்றன்
சுந்தரமாமம்சம்மெனவாக்கிற்சூழ்கொண்டு
அந்திரமானவருட்பரன்மேனியையகமேற்றி
வந்தனையோடம்மந்திரமெண்ணிவருநாளில். (கஉ)

வரவரவேயுருவேறிடலும்மதுவளமாகித்
தரமுறவேயெல்லாமறிசித்தன்றுனுனேன்
உரமுறவேயெற்கொருவருநேரின்றெனவெண்ணிப்
பரமனைவிட்டேயான்பரமென்னுப்பழிகொண்டேன். (கங)

பழிமிகுயானேகாணிறுமாப்பிற்படர்நாளில்
வழியருணுதனென்னிறுமாப்பைமாய்த்தாள்வான்
கழிபலமிக்கமதுகைடவரைக்கணிசெய்தான்
இழிவறுமறையைக்கொடுகவர்ந்திட்டாரிமைவேலை. (கச)

முன்னுளனையாளன்னத்துருவாமுதலோனைப்
பின்னுணினையாதகமுறநின்றவென்பிழையாலே
கன்னந்தனிலேபுடையிட்டலறக்கடிதாகப்
பன்னும்பணவச்சுருதிக்கணனைப்பரித்தேகி. (கரு)

கடலூடுருவிப்புனலுண்மேவிக்கரந்தார்கள்
உடனேயானன்னவரைத்தொடர்வானுள்ளெண்ணி
மடலோடொளிர்தாமரையின்கொடியின்வழியேகித்
தடமாநீரொங்கணுமேதுருவித்தளர்வானேன். (கசு)

வேதங்கவர்வாரோதெங்குறைவாரெனவெண்ணிப்
போதும்பொழுதந்நாளத்தடியைப்போய்க்கண்டு
சீதங்கொளுவோமெனவக்கொடியின்டிதேடி
ஏதம்பலயான்கொண்டேன்காணேனிளைப்பானேன் (கஎ)

தாமரையின்ருண்மூலமறிந்தேதணிவோமென்
றேமமதாகியதைக்கைபிடித்தேயிழிமுள்ளால்
வாமமிலாதுநன்ருக்கிழியுண்டென்னுடல்வாடி
வேமுளனேடுகலங்கியழுங்கிநீர்மேல்வந்தேன். (கஅ)

முந்தெனைவைத்தமலர்ப்பீடத்தின்மூளைத்தேயான்
சிந்தைகலங்கிச்சிந்தியழுங்கிச்சிதமேவி
வெந்தமனத்தாலெந்தையையெண்ணிவியர்த்தாரா
வந்தனைதந்தெனகந்தனைவிட்டேவழிபட்டேன். (கக)

வழிபடுபோதென்விழிபடலாகாமறைநாதன்
கழிபடுவானின்றலைபடநின்றுகக்னேநீ
மொழிபடுகல்வியையுடையவனாகியமுறையாலே
இழிபடுமிறுமாப்போடெனைமதியாதிகழ்வானாய். (௨௦)

ஆகையினாலேராசதகுணனாயலைவுண்டாய்
மாகதரோனுமண்ணவரோனுமதிமாண்டு
வேகமதாகுமகந்தையைமேவிடின்விளைவாயாம்
சோகமதாகச்சுளித்தழவைத்துமெனச்சொன்னான். (௨௧)

சொன்னபெருங்கடவுட்பதமுன்னிச்சுபமேவப்
பன்னிநடுங்குடலொடுசரணாகதிபரனேநீ
என்னையிகழ்ந்திடினென்படுவேனெனையினிதாக
உன்னியளித்தருளென்றகம்விட்டேயுரைசெய்தேன். (௨௨)

செய்சரணாகதிகொண்டமலன்னருள்செய்வானீ
பொய்யகம்விட்டெனையுன்னியுன்வீட்டினின்முன்போல
வைகுமறைத்திரள்வவ்வியபேளைவதைத்தேயுன்
கைதிகழத்தருதும்மெனவோதினன்கமலேசன். (௨௩)

ஓதியகாதமகாபெருமீனத்துருவாகி
நீதியிலாதவரோடியொளித்துளநீருள்ளே
வேதியனேடிவருங்காலன்னவர்வெகுதீரர்
கோதியுண்மீனெனவேநினைவெய்திக்கொலவந்தார். (௨௪)

கொன்றுபிடித்துத்தின்னுதுமென்னாக்கூக்கொண்டு
துன்றிடவெம்மான்மீதுபுடைத்துத்தொடர்போழ்து
கன்றிடுகோபக்குறியிலன்னாக்கறித்தாடல்
நன்றிடலுற்றனனன்னர்புடைத்தனர்நன்றாக. (௨௫)

ஆகவமேபுரிகாலையிலீசனகங்கன்றி
மோகமதாகவனேகபடைக்கலமுறவேயோர்
சோகமிலாவுருமாபெரிதாக்கொடுதொடுநின்றான்
வாகையிலாமதுகைடவர்கண்டனர்மறைவானார். (௨௬)

மறைவாயொருபூதருமறியாதவம்மாநீருள்
உறைவார்தமையெம்பெருமானேடியேயுறுநாளில்
நறையாயுளர்நண்ணலுமன்னவர்தமைநடுவென்போல்
நிறைவாயுளன்மறியிட்டமரிட்டனனெடுநாளே (௨௭)

வேலையெலாங்கறைவேலையதாகிடவெகுகாலம்
ஆலமுளான்சமராம்விளையாடலையாண்டாடிக்
கோலமதானதோர்மீனுருவின்பெருங்கோட்டாலே
சாலவடித்தேதுணித்துயிர்போக்கினன்சாய்ந்தாரால். (௨௮)

வேறு.

அணிவளரன்னமாகியயன்படுபீழைநூறித்
திணிவளர்மீனமாகித்திருமறைகவர்ந்துளானைக்
குணிவளராற்றன்மேயகோட்டினற்கொன்றுதேவர்
மணிவளர்வாகைகூறிமலர்மழைசொரிந்துவாழ்த்த. (உக)

துதிகொடுவிதியையாண்டதூமணிசிறப்புத்தேளி
னதிகொடுபவங்கள்வீட்டுநற்பதங்களினமேத்தும்
கதிகொடுநின்றமுந்நூலாளரோகமலயோனி
சதிகொடுநின்றவீணைமுனிக்குப்பின்சாற்றல்கேண்மின். (௩௦)

எ - வது அன்னவடிவாகியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - எ - க்கு திருவிருத்தம் - ககக.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

அ - வது. அயக்கிரீவராகியபடலம்.

இயக்கியாவையுமின்விளையாடல்கொள்
மயக்கிலாதபரனடிமாட்சியோய்
புயக்கிரீவன்பொலிதருவான்மிசை
அயக்கிரீவத்தடுத்ததுகேட்டியால். (க)

வேறு.

தானவரிருவரும்வானமடைந்தபின்சயவீர
மானவிலக்குமிவாழ்த்திடமச்சத்துருநீங்கி
ஞானவிலாசதேசோமயரூபநன்மயமான
கானவிநோதசுவேதசுகந்தசுகந்துகமானன் (உ)

வேறு.

வேலையன்னநீலமேனிமேவுமாதிசோதிமிக்க
மாலையன்னகோலமுற்றமதுகைவீரரைக்குமைத்துப்
பாலையன்னகோலமுற்றவேதவிஞ்சைபரிமுகத்தால்
போலவன்னகோலமுற்றென்பொறிகள்காணற்கரியனுன். (௩)

வேறு.

கருங்கடலில்வெண்கதிர்களொருகோடிகுழுமியுருக்கண்டதேபோல்
பெருங்கடவுளக்கடலின்மீனவுருவகற்றிவெண்மைபிறங்குமேனி
பொருதவயக்ரீவமுடனன்குபுயத்தைம்படைகள்பொலியநீண்ட
உருவுளமாமுகமுநெடுங்காதும்விலாழிப்பெருக்குமுடையனானன் (௪)

பொற்கோடிமருங்கசைத்துப்பொலியொளிப்பூண்மிகவணிந்துபுகழ்நற்சோதி
விற்கோடிவிளைந்தவெனவொளிகொழிக்கும்பிரணவவிமானமேறிக்
கற்போடுகவினியற்கையழகமைந்தவருட்டேவிகவினமார்பில்
சிற்கோலத்தெம்பெருமான்வான்கணொளிதழைப்பவென்முன்சிறப்பநின்றான். (௫)

அலையிலெழுவெண்சுதைபோனீண்டகன்றதிருவோட்டத்தமர்ந்தவேதக்
கலையமுதபேணமொழுகக்கருணைவழிந்தருள்செங்கமலக்கண்ணோ
டுலையுமெனக்கருள்புரிவானெழுந்தபராபரப்பொருளையுற்றுநோக்கி
யுலையிலிடுநவநீதமெனவுருகித்துதிபலயானுரைக்கலானேன். (௬)

எனைப்படைத்தவையாவேயெனக்குயிராம்பெருந்தேவேயெங்குமான
மனைக்குளுறுமாதவனேமாதவர்க்குந்தெரிவரியமாண்கூரின்பம்
புனைக்கமலத்தவண்மகிழும்புண்ணியனேயெண்ணியவாபோற்றுவோர்க்கு
அனைத்துமருள்வல்லவனேயடியேனைப்புரக்கவருமமலவாழ்வே. (௭)

அமலமாய்நிட்களமாயதுலமாய்நிறைந்தோனேயகண்டமான
கமலமாந்தில்லையெனும்புண்டரிகத்துறைவோனேகளங்கமில்லா
விமலனேவித்தகனேவினையொழிக்கும்விண்ணவனேவிராட்டுவான
நிமலனேநித்தியனேநீண்டபரிசுத்தமுள்ளநிகிலவாழ்வே. (௮)

சந்திரமண்டலநிகர்த்தசவிமேனியுடையானேதனியேபோற்றி
சந்திரன்கணொழுகுசுதைக்கியையமறைமொழிநுரைகடருவாய்போற்றி
மந்திரந்தந்தெனைப்புரக்கவந்தருணின்றிருவடிக்குவணக்கம்போற்றி
கந்தரத்தின்மேற்கேசிகந்தரனேயென்றனையாள்கருணைபோற்றி. (௯)

போற்றிமறையளித்தருணின்பொலிதாமரைத்திருவாய்ப்பொற்பினுக்குப்
போற்றியருணோக்கடியார்க்கிடர்புரிவாரைத்துணிக்கும்பொற்பாணிக்குப்
போற்றியுயிர்களைப்புரக்கவகலாதவிலக்குமிசேர்பொன்மார்பிற்குப்
போற்றியிறப்பருஞ்சுகத்திற்பொருத்தவல்லவிருபதச்செம்பூக்களுக்கே. (௧௦)

பூக்கமலநிகர்த்தவுன்றன்பொலியருளாரிருவிழிக்குப்போற்றிபோற்றி
ஆக்கவெனையளித்தவுன்றனழகியவுந்திக்கமலம்போற்றிபோற்றி
காக்கவெனயானமுழைக்கெதிர்தோன்றுங்கருணைவள்ளல்போற்றிபோற்றி
நோக்கமுள்ளபிரணவவிமானமுறுநோன்மையுளோய்போற்றிபோற்றி. (௧௧)

என்றுபலபழிச்சறணக்கின்புபெருகன்போடேயிசைப்பானெந்தை
கன்றுமனக்குழந்தாய்நின்கருதலைச்சவட்டியவர்கவர்ந்தவேதக்
குன்றனைத்துங்கொணர்ந்துவந்தேமிஃதீவேமுன்போனீகொண்டுன்றீதைக்
கொன்றவனாய்ப்பயின்றுவரிற்கோதகன்றோர்க்கெல்லாநீகோமானாதி. (௧௨)

மகனேயிவ்வருமறைகளாதியிலாவென்னிதயவாக்கினின்று
தகநேரொன்னுயிர்ப்பினிகழ்ந்துண்மையுறுமருத்தபஞ்சகத்தைச்சாற்றச்
சகமீதினித்தியமாய்ச்சகலபிரமாணத்தின்றலையாயாறென்
றிகழாதவங்கசையோகம்முளதாவென்னாணைக்கிருப்பாநிற்கும். (௧௩)

நமக்காதியீறெவ்வாறற்றனவோவவ்வாறேநான்குபாகத்
தமைக்காநின்றுளவாரணங்கட்குமுளவவையிலோசைரோகை
எமக்கானபொருளன்றியிலையெட்குட்டயிலமெனவெண்கணேயே
அமைக்காவிவ்வகிலமதையாக்கநினைவெமதுணர்விலமைந்ததாமால். (கச)

புண்ணியநற்பரிபாகமுற்றோர்கள்பூசுரராய்த்தோன்றிப்பூவு
ணண்ணியுமிவ்வாரணத்திலேகதேசம்மேனுநவில்கிலாரேல்
நண்ணுமுலகுள்ளோரன்னவரைமிகுபாதகரரய்நாற்கான்மாடாய்
எண்ணவராப்பாடண்டநீதியின்மிலேச்சரொன்றேயிகழ்தல்வேண்டும். (கரு)

வேதமிலான்வைணவனன்றவன்சகலநிகிட்டன்கர்மநீசன்வேத
மோதுகிலாதவைதநிந்தையுரைப்பானேலரியடியிற்குதித்தானல்லன்
ஆதலாலயனேநீயனுதினமுமென்னடியிலகலாவார்த்தி
மீதுலாவிடக்கொண்டிவ்வாரணத்தைநாடோறும்விளம்புகென்றான். (கசு)

விளம்பியவெம்பெருமான்பின்னருஞ்சேயேயாதாமோர்விஞ்சைதன்னை
யுளங்கொளுவோரதன்பயனையுறவெண்ணினோர்குருவினுளம்பூரிப்ப
வளங்கொளுநற்றொண்டியற்றியவன்சந்நிதிக்கணின்றுவரித்தல்வேண்டும்
களங்கமிலாயானுனக்கோவவ்வாறுமுன்மநுவைக்கழறகில்லேன். (கஎ)

அதனாலியேயோதிப்பயன்பொருந்தலற்றமுதாயன்பாமென்றன்
சுதனேயென்றனைக்குருவாய்வரித்தியெனவருள்புரிந்துசொன்னானையன்
புதனேயப்பரஞ்சோதிபுந்திமகிழ்ந்திடப்பாடும்புனிதவாய்நா
ரதனேபின்யான்புரிந்தவிதங்கேட்டியெனப்பிரமனவிலலானான். (கஅ)

அண்டமுட்டுமொளிகொழிக்கும்பிரணவவையத்துறுமென்னையன்றுளில்
தெண்டனிட்டென்விண்ணப்பந்தனையுரைத்தேனெம்மானுந்திருக்கண்சார்த்திப்
பிண்டமுட்டிவருஞ்சேய்க்கென்கருமமதைப்பேணுவரோபெருஞாலத்தார்
தண்டமுட்டிலாவவைகளெல்லாஞ்செய்தழகுகண்டான்றடையொன்றில்லான். (ககூ)

அன்னையப்பன்மகன்சீடன்குருவிவர்கடமக்குளியலறமிவ்வாறென்
றுன்னிடற்கருளரங்நாளாதலாலுலகுண்டவும்பனன்போ
டென்னைமகன்சீடனெனவெண்ணித்தான்றந்தைகுருவென்றுகொண்டு
மன்னுமறையறநூலினுவலியுள்ளவண்ணமெல்லாம்வகுத்தான்மன்றே. (உ0)

விருப்பினியல்சாதகன்மவிதம்புரிந்தானுத்துமப்பூவென்றும்பொன்னின்
கருப்பனென்றும்பரமேட்டியென்றுஞ்சுத்தபிரமமாமென்கட்டோன்றி
இருப்பதனாற்பிரமனென்றுமினும்பலபேர்காரணத்தாலிட்டான்மேலாம்
ஒருத்தருமற்றவனுனதற்பரசிற்சுகவடிவாயொளிருமீசன். (உக)

நாமகரணம்புரிந்துசௌளோபநயநமிட்டுநெருமஞ்சோதி
வாமமுளமணிகளிழைபொற்பூண்மற்சொன்னகலைமலியப்பூட்டிக்
காமமுடனலங்கரித்துமேகலையிட்டகிலவியாக்கிருதிகாணும்
ஓமவிதிமுன்னரோயக்காயத்திரிமநுவ்வெய்யொழுங்கிதோதி. (உஉ)

பிரமமாமென்னிடத்திற்பிறந்தவனேநீபிரமசாரியானாய்
அரியாமென்முகத்துதித்தவக்கினியையிப்புனலையடைதியென்றே
உரியோனீந்தனன்சமிதைதானமிடச்செய்வித்தானுலகமீன்றாள்
மரியாதையுடன்றொழுமெற்கையமிட்டானாறாண்டுவாழ்தியென்றாள். (௨௩)

ஆசமனமந்திரமேயாதியாயுளவனைத்துமருளிப்பின்னர்
நீசமகன்றழிவின்முத்திமேலடையும்படிக்கானநிலையிலுய்ப்பான்
பூசனையாம்படியென்கையிற்காப்புமுதலாவார்த்துத்தூயவேத
தேசிகனாயாழியனலொளிரவைத்தேயைந்தீக்கைசெய்யலானான் (௨௪)

புயமூலத்தழகானதணலோமவாழிவளைபொறித்துவெண்மண்
நயமாகப்பாலமுதன்மிடறளவாமூர்த்துவபுண்டரத்தைநாட்டிச்
சுயமாகுங்கேசவனேயாதியாமந்திரத்தைச்சொல்லிக்காட்டி
வியமாகுஞ்சுரசிரேட்டன்னெனவேயபிதானமிட்டான்மாதோ. (௨௫)

அஞ்சலென்றகரதலத்தெம்மருளாழிமுழுமுதல்வனடியேன்பாலக்
கஞ்சமலர்மீதமைத்தகழன்மலரிணைப்பணியர்சிவந்தமாட்சி
மஞ்சளொளிர்தீபமெனச்செந்திருவைநிலையாகவைத்துநீணாள்
துஞ்சலறுஞ்செல்வமெலாந்துய்த்தியெனவருள்புரிந்தான்றோன்றலென்றான். (௨௬)

தனக்கென்றொன்றேனுமிலாத்தற்பரமாவிருந்துமிடைதண்டற்கேலா
மனக்கானகித்தர்குழாமுத்தர்குழாம்வாழ்த்துபத்தர்வேடம்பூண்டு
சினக்காதுசீர்மைபெறுநகையுடையவம்மானாய்ச்செய்யுந்தீக்கை
கனக்கானவிதமாற்றினான்பிரமகுருவானகமலக்கண்ணன். (௨௭)

அம்மாண்டசுருதிமுடியொளிரமலமானவட்டாக்கரத்தையன்பால்
எம்மானுமென்வலநற்செவிதனிலேயுபதேசமிட்டுமைந்தா
இம்மாமந்திரத்தினுக்குமேலுமொப்புமில்லையிதேயெல்லாமான
தம்மாவீதளிக்காதபொருள்களிலைகலைகளெலாமமர்தாயென்றான். (௨௮)

மந்திரத்துமந்திரத்தையோதுமவனிடத்துமதின்வத்துவான
தந்திரத்துமார்த்திவிஞ்சிச்சுத்திபுத்திவைரமுடனண்ணிமேலாஞ்
சுந்தரநல்லடியரடிக்கன்பாகியிருப்பரேல்சூழெல்லாமுந்
தந்திரத்தராயாழுமவரிடத்திலிருந்துமுத்திதருவோமென்றான். (௨௯)

நிமலகிருபாதிகமாங்குழுவானவாதிபிதாநிகிலத்தாரின்
அமலவயக்கிரீவவுருவாயடியேற்கைந்தீக்கையமைத்தபின்னர்
கமலமலர்வீட்டாளையகலானையான்கடவுங்குணத்தைக்கேட்டி
விமலமுறுபண்ணொசைவீணைமுநியெனவிரிஞ்சிவிளம்பற்கானான். (௩௰)

வேறு.

பண்டைநான்மறைப்பொருளினைநாளுமேபார்ப்பீர்
இண்டையீன்றசேய்க்கீடிலியியற்றியவிசைத்தாம்

அண்டர்நாயகனடிதொழுமயன்றனக்கருளால்
விண்டதன்னிலைவிளம்புதுங்கேண்மினேவென்னும். (௩௬)

அ-வது. அயக்ரீவராகியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - அ - க்கு திருவிருத்தம் - உ௩0.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

கூ-வது. தானானதன்மையருளியபடலம்.

வானானவரதனடியோய்
நானானாதனருளால்
மீனானமீக்கீழுலகில்
தானானதன்மையதுகேள். (௧)

வேறு.

ஐயாத்துமன்னெதிரிலஞ்சலிசெய்தாடைவலித்தச்சுற்றுங்கே
கையாத்துக்கண்டுளிரச்சேவித்தென்னுயிராக்கைபொருளையெல்லாம்
வையாத்தற்காக்கியெனக்கிதமருடிவரதவென்வாழ்த்திநின்றேன்
பொய்யாதபுலவர்பெருமானுமெமதாரியனும்புகலுமன்றே. (௨)

சத்தியமிட்டறையென்மொழிகேட்டியோய்மறையவனேசவிகொண்மேலாம்
உத்தமவேதியர்குலத்திற்பிறந்துமுத்தியளிக்குமெனக்குரியவான
வித்தகநின்மலவாழிவளைபொறித்தகுறியிலரோன்மேலாங்கோவை
அத்திசெய்தவதமர்களாய்க்கதிர்களுள்ளகாலமெல்லாமளற்றில்வீழ்வார். (௩)

என்றருளென்னாரியனாரிணையடியுந்தீர்த்தவடியினமுமேற்று
நின்றுபரமாத்துமனுக்கென்பணிவாந்தக்கணையைநினைப்பினிட்டு
நன்றுருகித்துதித்தெந்தாயிவ்வகிலகாரணன்யார்நானாகித்
துன்றுபலமோக்கபலமளிப்பவர்யார்பிரமமெனச்சொல்வார்யாரே. (௪)

நிகிலசத்தவாச்சியன்யார்நிகழ்த்துபரதத்துவம்யார்நிர்விகார
அகிலவடிவானவன்யாரவைகளெலாமடியேனுக்கருடியென்றேன்
ககமகனேநானேமன்னுயிர்க்கெல்லாங்காரணனாய்க்கதிவீடீயும்
அகமுளனாயனைத்தினுக்குந்தாரகனாய்விராட்டுருவாயமைந்தேனென்றான். (௫)

நானேநிற்பனவுள்ளுநானேசெல்வனவுள்ளுநன்றுதோன்றி
நானேகாத்தளிப்பவையையுள்ளாக்கிமேற்கீழுஞ்சூழ்ந்துநாடி
நானேயந்நவைகள்வினையளவறிந்துபுரிந்தவைகணைசகளெல்லாம்
நானேயீந்திடவல்லேனெனைவிடயாவருமிலைநீநன்றுதேர்தி. (௬)

நானேநின்னுள்ளிருந்துசிருட்டிபுரிந்தென்னோடுநவிலச்செய்வேன்
நானேநின்சிருட்டியுடலடர்ப்போனுள்ளினிநிலவிநடத்தவல்லேன்
நானேயிவ்வனைத்துள்ளுமிருந்தவையுமென்னோடேநணுகவுள்ளேன்
நானேநாராயணநாமத்தையசாதாரணமாநவிலப்பெற்றேன். (௭)

நானேசட்பாவமிலாவச்சுதானந்தபரனளினப்பூவின்
கோனேயெற்காறுகுணக்குற்றமில்லையாதியிடையீறுங்கூறார்
தானேதானாயிருக்குமென்மாட்சியென்னடியார்தமக்குத்தோன்றும்.
வானேயிம்மண்ணேநின்றுடலெடுக்குமவரறியார்மலர்வீட்டுள்ளோய். (௮)

முத்திநகரத்திலநாதிப்பரமமுத்தருக்குமூத்தோன்முத்த
நித்தருக்குநித்தியன்யானிபிடாநந்தத்தோதநிலவியெண்ணும்
பத்தருக்குப்பத்தனெனப்பரிவகலாதவர்பொருட்டிப்பகுதிக்கண்ணே
வைத்தவருக்குடலளிப்பானினைப்படைத்தேனவர்க்குமுத்திவழங்கமாதோ. (௯)

முத்தொழிலுமாவிகட்குமுத்திவரும்பொருட்டன்றிமுயலெற்காலம்
வித்தளவும்பயனில்லேனவர்சுகிப்பேயென்வாழ்வாவெஃகியுள்ளேன்
இத்தனையுமிழிவகன்றநிகமாந்தகோடியெலாமிசைந்துசொல்லும்
உத்தமனேயுயர்காயத்திரியுளூறும்பொருணன்றாயுன்னித்தேரோ. (௧௦)

ஒருமூலமாயையுளேயொட்டாமலொட்டியதிலொன்றொன்றூர
வருமூலமகத்தாதிமுக்குணவாங்காரமெலாம்வருவித்தீய்ந்தேன்
பெருபாநுசோமனனன்முதலானசோதிகளைப்பிறங்கச்செய்தேன்
தருலீலைக்காகவொருபயனில்லாதாற்றுகிற்பேன்சரதங்கொள்வாய். (௧௧)

நிமையளவிற்குள்ளேபல்கோடிபிரமாண்டமெலாநிலவித்தோட்டி
அமையுளநற்சாத்துவிதசேடன்மடிமிசைத்துயில்வேனப்போதெல்லாஞ்
சமையவிட்டுப்பார்த்திருப்பேன்சித்திரநற்படம்விரித்துச்சவையிற்காட்டி
இமைசுருட்டியிடுதெனிகவொல்லாமென்னிடமிருக்கவிருத்திவாழ்வேன். (௧௨)

வடவித்தினிகர்பிரணவத்திலெலாமறைகளெலாமறைந்துவாழும்
திடவித்தாமந்தமநுவென்னுருவமாவிருக்குஞ்சீமானென்
றிடலறியாதறிவாரும்பாலைவிடர்தனிலுருப்பரியையவீவார்
மடலவிருநறும்பொகுட்டுத்தாமரைமாமணிவீட்டின்வசிக்குமைந்தா. (௧௩)

உயர்திணையஃறிணைகளெலாம்புரப்பானுமளிப்பானுமொருவனேயான்
அயர்வறயாவருஞ்சுகிப்பவவரிதயநுதலுடலெல்லாமுநிற்பேன்
மயர்வகலச்சுலபகுணமாதியெலாமாமுருவில்வதிவேன்மைந்தா
நயமகலாவலர்மேலாநண்ணுநிறமுளனெவர்க்குநாதனாவேன். (௧௪)

சருவகதன்சருவேசன்சருவஞ்ஞன்சருவாந்தராத்மாநானே
சருவமும்விடாதகுணவிண்டுநாராயணனன்றற்பரேசன்
சருவகலியாணகுணகணபூடணப்பிரமன்சமன்சாந்தோகன்
சருவமுமென்னசைவன்றிவேறின்றென்றினிதுணர்திசரதமென்றான். (௧௫)

சரதமென்றசருவசாமிக்கொருவந்தனம்புரிந்துதமியேனெந்த
விரதமுடன்சிருட்டிசெயல்விளம்புதியென்றகங்குழைந்துவினவினேனை
வரதனுங்கண்டயனேநீவியாக்கிருதிமூன்றினையும்வாழ்த்திச்சொல்லிச்
சுரர்பணியென்னப்பிராகிருதவிக்கிரகத்தையுள்ளித்துணிந்துசெய்வாய். (௧௯)

ஏமனைவீட்டொருநான்குமுகத்தவனேயென்றுமத்தாபிரண்டின்
நாமலியநன்மேனியுளங்காணவாக்குவினைநண்ணுவாயேல்
காமனைக்கொண்டுளபகுதிகட்டுண்டவாவிகளின்கருமங்காட்டி
நேமமுடனவர்க்குடலமீயுநெறிகாட்டிசிட்டிநிகழ்த்துவேனல். (௧௭)

நீசமறுசிருட்டிபுரியறிவினுள்ளேமிளிர்ந்துரியநினைவுமூட்டி
நாசமிலாயானிருந்தன்னவர்களிருவினைக்குரியநன்றுதீதீந்
தாசறுமவ்வுயிருடலையழிப்பவெனவென்கூற்றிலரனையுன்றன்
றேசுறுநற்புருவமதிற்றிகழ்ந்துதிப்பப்பண்ணுவல்யான்சேயேயென்றான். (௧௮)

நானேயிவ்வகிலமெல்லாமாக்கியளித்தழிக்கவல்லனங்கண்முன்னாய்க்
கோனேநீமரப்பாவைபோலிருத்தியகங்கறுக்கியென்றுமின்னின்
ஆனனெம்மாண்டவனித்தில்லைநகர்தனின்மேயவையனன்பிற்
றானன்றனக்கிணைமேலில்லானன்பிறவியற்றதனியனானன். (௧௯)

பண்ணைசைவினலரியின்பதமலரைக்குளிர்விக்குமுநிவவெம்மான்
உண்ணசையினருள்பெருகியொருவாறுதன்னிலைமையுரைத்துவானிற்
கண்ணசைவிற்கரந்தவுடன்யான்வணங்கியியற்றுவினைகணிப்பன்கேளென்
றண்ணலயனருளியதைச்சூதமுநிசௌனகருக்கருளினனே. (௨௦)

௯-வது. தானதன்மையையருளியபடலம்

முற்றிற்று.

ஆகபடலம் - ௯ - க்கு திருவிருத்தம் ௨௫௦.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

௧௦-வது உலகுபடைத்தபடலம்.

அடல்வேண்டும்பொறிபுலன்களற்றுருமார்வமணத்தலர்வெம்பூக்கள்
இடல்வேண்டும்பரிசெம்மாற்கிட்டேநாள்களௌலாமிசைசெய்மேலோய்
மடல்வேண்டுமளவுமிளிர்ந்தவிர்பதுமத்தவண்மகிழ்நன்வரத்தால்யான்பின்
தொடல்வேண்டுமென்பதைகட்குடலளித்தவகைமாட்சிசொல்வன்கேண்மோ. (௧)

கடையகன்றகாட்சியறிவாற்றன்முதல்யாவுமுளகடவுண்மீக்கீழ்
இடையகன்றுகோத்துளமாநீத்தமெல்லாம்வடமடங்கவெழுவாயுள்ள
நடையகன்றசகலசம்மாரப்பொருள்களுண்மிளிர்ந்துநலிவித்துண்டு
புடையகன்றவெளியாக்கியிடங்காட்டிவிட்டனன்யான்போற்றமாதோ. (௨)

இலங்குமருண்மெய்ஞ்ஞானவெழின்மேனியெம்பெருமானெனக்காப்பொன்வில்
துலங்குபரஞ்சோதிவெள்ளப்பிழம்புதிரண்டுருவானதோற்றத்தோடென்
கலங்குமனமிலங்கிடமுன்வந்தாண்டவன்னமதைக்கருத்திலெண்ணி
வலங்கொடுக்கும்வாக்கிலரியரியெனக்கைகுவித்துருகிவகுக்கலானேன். (௩)

வழுக்கணிறைமனச்சேட்டையறக்கடிந்தேன்மச்சகுந்தவடிவையுள்ளிக்
கிழக்குமுகமாவிருந்தேனக்காயத்திரிபுரிந்தேன்கிளர்தீதென்னுஞ்
சழக்ககல்வியாகிருதிமூன்றுமைத்தேனெட்டெழுத்தைத்தலைமேலிட்டேன்
இழுக்கலறக்கண்கண்முகிழ்த்தலர்ந்திடுங்காலண்டமொன்றங்கிலங்கிற்றம்மா. (௪)

பிரமாண்டமென்றதொன்றங்கைந்துசதகோடியெனப்பேசாநின்ற
உருமாண்டகாவதத்தாலாகியதெம்பெருந்தேவனுதவியாலே
தருமாண்டவதிற்பதினான்குலகுபலவகுப்பாகித்தடத்தினேந்தி
வரமாண்டவெண்கிரிபாம்பானைமகமேருகடன்மற்றுங்கண்டேன். (௫)

வானைவரப்பணணியதிலூதையதில்வன்னியதில்வனஞ்செய்தாற்றில்
கூனைவருமண்ணாக்கியதின்மிகுந்தகூழாக்கிக்கூழிலன்னம்
ஆனவமுதுண்டாக்கியதிற்பைமுட்டைநீர்பீசமாக்கியன்னம்
ஆனவிதயோனிகணான்கின்னெறிவாய்ச்சரவசரமமைத்தேனன்றே. (௬)

உயர்திணையுமிழிதிணையுமுனாற்றிவருதத்துவங்களுனாற்றினேன்பின்
மயர்வறவெண்டிக்காறுசுவைகள்குணப்பொருள்களிராப்பகன்மற்றுள்ள
செயிரறுகாலம்மாறுமுள்ளவெல்லாமெஞ்சாதுசெய்தேன்சேடன்
அயர்வகற்றுந்திருமேனியணைகிடக்கும்பெருமான்றனருளினாலே. (௭)

இந்தியமுங்கரணமும்வெங்கோசமுமண்டலங்களுமேயிலங்கவான்மேல்
தங்கிடுதாரகைநேமிகிரிகதிகளோரைதிதிவாரம்யோகம்
எங்குமுளமேககணமின்னிடிநீருதிவேகமியலும்பக்கம்
மங்கலறுமாண்டயனமாவாரிசெய்முறையின்வகுத்தேன்மைந்தா. (௮)

வகுத்தானெற்குணர்த்தும்வண்ணமுயிர்கண்மிகுவிதிக்கிணங்கவான்மண்டன்னைப்
பகுத்தானவிடமெலாம்பகுத்துமறைப்படிப்பரனைப்பரவிப்போற்றித்
தொகுத்தானையெவ்வறிவுந்தொடரானையாவருக்குந்தோன்றுமோகம்
செகுத்தானைச்செம்மலர்த்தாய்சேர்ந்தானைக்கருதிமகஞ்செய்தேனோர்நாள். (௯)

மன்னியொளிர்மூலமெனுமொற்றையெழுத்தோடிருக்குமநுவையெண்ணி
வன்னியொளிரொரிகுழிவாய்ச்சமிதைமணத்தாச்சியத்தைவாக்கிவாக்கி
உன்னிவழுவகலவுனாற்றுறுநாளிலோர்பொழுதென்னுடலம்வாடி
என்னிளைப்பாற்சோகமுடன்வியர்புழுக்கத்தளர்ந்திருந்தவெல்லைமாதோ. (௧௰)

வேகமுடனுருவியற்றிவருமென்மாமுகத்திருந்துவியர்வைதோன்றிற்
றுகவறிந்ததைக்கையானள்ளியெரிமுகத்தெறிந்தேனதினின்றம்மா
நாகவுலகதிரவொளிர்வன்னியிருளுறவழுகைநாட்டத்தோடு
சோகமுறவெனக்குமுனமைந்துதலையுடன்குதித்தான்சூலபாணி. (௧௧)

கடுஞ்சினமுங்கழுவேலுங்கனலுடம்புங்கனல்விழியுங்கலையில்லாத
படிவமுஞ்செம்படர்சடையும்பருநகையும்பருமுயிர்ப்பும்பாலத்தார்ந்த
கோடுந்திருக்குங்கருமைசெம்மைகூடியுறும்பேருருவுங்கொண்டுநோக்கி
நடுங்குமெனைவிளித்தலறியரற்றியழுதோடிவந்தானக்கன்மாதோ. (௧௨)

பையுளுறுமெனைப்புடைப்பானிருகையினைவிரித்தோச்சிப்பவனென்றோத
ஒய்யெனவந்தனனவனையணுகியுவப்புறுமினியவுரைகளாடிச்
செய்யவனலெழுந்தவனேசெறிவலிமிக்குற்றவனேசினஞ்செய்யாதே
ஐயவென்முன்சாந்தியுடனமர்ந்திருத்தியுனக்கினிமையளிப்பேனென்றேன். (௧௩)

நல்வார்த்தையொடுமுகமன்வின்றூற்றிமாட்டுணுகிநன்மைந்தாநீ
எல்லார்க்குங்கொடுந்தீமையியற்றுகடுஞ்சினமதனையியல்பிற்கொண்டு
பல்லார்த்தியொடுமகஞ்செய்தாதையெனுமென்றன்முனம்பட்டாயேலுங்
கல்லார்க்குக்காணியெனுமிக்கதம்விட்டிடுதியெனக்கழறினேனால். (௧௪)

சாந்தமொழிசாற்றுமெனைவிளித்தையவெனைப்படைத்ததகுதியென்னீ
காந்துமெவருயிர்குடிப்பானேவுகின்றாயென்னினக்குக்கருமஞ்செய்யல்
போந்தவெனக்குரைத்தியெனப்புகன்றவனைநோக்கிமைந்தபூன்றாமீசன்
ஆர்ந்தவுயிருடலைவிதிப்படியழிப்பானினைப்படையென்றருளினானால். (௧௫)

எம்மான்றனைகடவாதியற்றுமனற்கண்ணீயெழுந்தாயந்த
அம்மானையாவருக்குமருளானைமறைமுடியத்தாணியானைப்
பெம்மானைப்பேரழகிற்பெரியானைப்பெற்றானைப்பெரியமோக்கத்
தெம்மானும்பெண்ணுமெனவிருப்பானையில்லானையெண்ணிச்செய்நாள். (௧௬)

என்முகத்தில்வியர்வரும்பவதையள்ளியனற்குழிவாயெறிந்தேனந்த
நன்முகத்திலிருந்தைந்துமுகத்துடனுரோதனஞ்செய்நாட்டத்தோடும்
வின்முகத்துக்கனலஞ்சவனற்கருமைகலப்புடையவீரனாகிப்
பன்முகத்துப்பொருணிறைநான்மறையவனுமென்சுதனுப்பகரப்பட்டாய். (௧௭)

உதித்தவெனதருங்குழந்தாய்நீலலோகிதனாகியோவென்றியாரும்
கொதித்திடவுரோதனையோடெழுந்தமையால்யாண்டுமுளோர்குறிப்பினாலே
பதித்திடநல்லுருத்திரனென்றிடநாமகரணமதைப்பரந்தவின்பின்
விதித்தனனிற்கிதுமுதலாமபிதானமெனமுக்கால்விளித்தேன்மாதோ. (௧௮)

ஆனமிகுமுயிர்திதிநின்றாக்கைவிடுவித்திடலுக்கருகமான
தானகடுந்தாமதத்தாலன்றியருளறமாற்றத்தையயாலாகா
தானபடியாலழியாஞானவடிவானபிரானனல்கொள்மேனி
யானகதமானகுணமானவலிவானபடையரனைத்தந்தான். (௧௯)

வீணைபயினாரதனேபின்னருமிச்சகவிருத்திவிரும்புங்காலம்
நாணையெனதெனலைமிகுநானெனலைப்புலவனலைநசையின்றூனைக்
கோணையெழுமுக்குறும்பையஞ்ஞானமூன்றைகுணப்பாழைக்கொன்றோர்
ஆணைவிடவரியாரெம்பெருமாற்குத்தொண்டரொன்போரங்குவந்தார். (௨௦)

நாரணயோகிகளெனப்பேருற்றசனகாதிகணால்மைந்தர்க்குப்பின்
காரணனைக்கருத்திலுனியுலகுநிறைந்திலதெனவேகருதுங்காலை
ஆரணமுற்றும்முணர்ந்தவொழுக்கமுள்ளநவப்பிரசாபதிகளாங்குச்
சீரணவென்சிந்தையின்கணின்றுதித்துவந்தனராற்றிருமாலன்பால். (உக)

அந்தவொன்பான்முனிவரருமகமகற்றியகிலநசையகற்றிவேதத்
தெந்தைபதவின்பினையேயுறுதியெனமனங்கனிந்தேயிருக்கலானார்
இந்தவிதமானாலிவ்வண்டமெலாம்வெற்றிடமாயிருந்தவேலைச்
சந்தமறைப்பொருளேயானென்புரிகேனெனநினைந்துசாம்பினேனால். (உஉ)

அந்நாளென்றனைப்படைத்தவத்தாநின்வித்தையினாலாக்குவோர்கள்
எந்நாளுமீறறநின்சுகபதவின்பினைக்கருதியிகவின்பிற்கென்
சொன்னாலுமகமேலாதகற்றிநின்சமாதியினிற்றலங்கலானார்
பன்னாகத்தணையிடக்கும்பரமவெழுந்தருடியெனப்பன்னுங்காலை. (உங)

அக்காலெம்மாண்டவனுமாங்கெழலுங்கண்டேத்தியையாவேநின்
செக்கோலமலர்க்கடைக்கணருள்புரிந்தவணமுலகுசெய்தஞான்றும்
பொக்காவிப்பூவானம்பூரணமுற்றிருக்காதபொருத்தமென்னே
எக்காரணத்தினுக்குமேற்காரணப்பொருளேயிசைத்தாளென்றேன். (உச)

அப்போதெம்மையனுமோயயனேகேள்வீரணனாமிவன்பான்மிக்க
ஒப்போதவரியவழகினியகுணமுளவோர்பெண்ணுதிப்பித்தந்தச்
செப்பார்ந்தமுலையாளைத்தக்கனாமிவன்புணரச்செய்வித்தாயேல்
எப்போதுமிவ்வுலகின்மன்பதைகள்பாரித்தேயிருக்குமென்றான். (உரு)

பின்னருமங்கைகூப்பித்தொழுதுதுதிபலபிதற்றிப்பிரசங்கொண்டார்
சின்னமெனவுடன்மறந்துபேரானந்தக்கடலிற்சிறப்பநின்ற
மன்னவராம்பிரமரொன்பதின்மரையும்விளித்தெம்மான்மக்காணீவிர்
துன்னுலகிலுயிர்கண்மல்கவுங்கடந்தையுரைத்தவண்ணந்துணிந்தீராகில். (உசு)

என்னடிக்கண்ணிடுமெனமுங்கண்வாயுமிலைக்காமலிருப்பவின்பம்
மன்னவனுபவிக்கவளப்பில்லாநற்செல்வமெல்லாமலிந்துமல்க
நன்னயமாகதர்நாகர்முனிவர்சித்தர்முதலானார்நன்குவாழ்த்தச்
சொன்னயமோடியாவருக்குமியையாதவுலகினிலேசுகிப்பீரொன்றான். (உஎ)

இன்றுமுதலாடவனுமியைமகளுமிணைந்துருகிப்புல்லுமேல்வை
நின்றுதவுநமதருளான்மன்னுயிர்கண்மிகமல்கிநிறைகவென்று
கன்றலறவெம்மனத்துணினைத்தனங்காண்கமலன்முதலவரேநீவிர்
துன்றுமுயிர்களைப்புணர்வித்தகிலசிட்டிபுரிதிரொனாச்சொல்லிப்போனான். (உஅ)

தூயபெருமிறைகரந்தசெவ்வியரியேயெமக்குத்துணைநீயென்றென்
காயமதிற்பிறந்தவொன்பதின்மருள்ளேகனிட்டனிடக்காலங்குட்டத்
தூயமிகுமழகொளிநன்மேனிகுணம்யாவுமிகச்சமைந்தவின்ப
நேயமுளவசிக்கினியென்பெண்மணியொன்றினைப்பிறப்பாணினைத்தேன்வந்தாள். ( )

வந்தவளையென்கழலங்குட்டமெழுதக்கனுக்குமணஞ்செய்வித்தேன்
இந்தவுலகம்முழுதுமின்னவர்சந்ததியெனவேயியம்பச்செய்தேன்
எந்தவிதமெனின்ஞானமிருந்ததக்கனசிக்கினிப்பாலீன்றமேலாஞ்
சுந்தரநன்னீர்மைமுதலமைந்தபெண்களறுபதின்மர்தொடர்பான்மன்னோ. (௩௦)

தொடரொழினல்லியற்கையறிவடக்கமுடைமணிப்பொனணிசுகுணம்யாவும்
அடர்மகளிரறுபதின்மர்தமிற்பதின்மூவரைஞானவெறுக்கைமேய
இடரகன்றகாசிபமாமுநிமகிழக்கொடுத்தனன்பின்னிருபத்தேழாச்
சுடர்மிகுந்தவிழையினரைச்சூழ்கிரணமதிமகிழக்கொடுத்தானன்றே. (௩௧)

அங்கிருதென்றிசைமுனிக்கோரிரண்டுபெண்ணுமரன்றனக்கோரிரண்டுபெண்ணும்
சங்கையறுமெய்ஞ்ஞானசமனுக்கீரைந்துபெண்ணுஞ்சாந்திமேய
துங்கனெனுமரிட்டநேமிக்குநாற்பெணும்பிருசாச்சுவரனுக்கே
அங்கமுள்ளபெண்ணொன்றும்பகுபுதற்கோர்பெண்ணுமெனவளித்தானன்றே. (௩௨)

வேறு.

தக்கன்றன்மகளதிதியென்னுந்தேவிதகுகாசிபனைப்புணர்ந்துதமிழ்மாவேத
மிக்கோனுக்கடித்தொழும்பாகிநின்றமேலானமுப்பத்துமூன்றுகோடிச் [ளுள்
சொக்காளரொனுங்காரிமுதன்மாதேவர்தொகுதியெலாம்பெற்றனளன்னவட்குப்பின்
பொக்கார்ந்தவிருமுப்பத்தாறுகோடிபூரியராமசுரர்தமைப்பூத்தாண்மன்னோ. (௩௩)

காலையெனும்பெண்வயினிவாதகாலகேயகவசாளெனப்பேர்கணிப்போர்வந்தார்
சேலையுறழ்விழிச்சிம்மியிடமிராகுகேதுகளென்றிருகோள்கள்சேர்ந்துவந்தார்
நூலையுறழ்நுசுப்பரிட்டையின்பாலெங்கோனூலிசையார்கந்தருவரொன்போர்வந்தார்
வேலையின்கணரவணைமேற்றுயில்வான்றொண்டுமேயவர்வந்தனரிலக்கம்விரிவாமன்றே.

வினதையின்பாலருணன்கருடனுமேவந்தார்மீக்கருதென்பவளிடத்தின்மிகுந்தநஞ்சு
தனதெனுமாசேடனடியானவெய்யசருப்பமெலாம்விருப்பமுடன்சாய்ந்துவந்த
கனகமயத்துருவானமநுவென்பாள்பாற்கருதாண்பெண்ணெனுமனிசக்கணங்கள்வந்த
அனகமிலாக்குரோதவசையின்பால்வந்தாரக்கருமாயக்கருமேயடரமாதோ. (௩௫)

அனலையெனுமணங்குமரம்புதர்புல்பூண்டோடாடுகொடிசெடியுடனேடதிகளீன்றாள்
கனலையியைகற்புளதாம்பிரையென்பாளக்கௌரஞ்சிசிபரசிமகிழ்சிபேனிமேலாம்
வனமிகுந்ததிருதராட்டிரியின்பின்னல்வந்தசுகியுடனைந்துமகளைப்பெற்றாள் [ள்
இனமிகுந்தகனலையென்பாளரிமாதங்கமிகல்செய்புலிகரடியொட்டையெழுவாயீன்றா

௧௦ - வது. உலகுப்படைத்தப்படலம்

முற்றிற்று.

ஆக படலம் ௧௦-க்கு திருவிருத்தம் உ௮௬
ஆழ்வாராசாரிய ரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

கக - வது. விதிசிவாதிகளுக்குப்பதவி பகுத்தருளியபடலம்.

துதிசிவாவாக்கேயாக்கையேமனனேதூயமாறெழும்பனையென்னுப்
பதிசிவாதிகள்சேர்பரமஞானத்தாற்பழிச்சிடுமுனிவரபதத்தார்க்
கதிசிவாதிகட்கீந்தருள்புரிகமலக்கண்ணிறைடியனேன்முதலாம்
விதிசிவாதிகளுக்கினியநற்பதங்கள்விதித்தருள்விதஞ்சொல்லவுணர்வாய். (க)

வேறு.

இன்னிசைக்கிறைவர்க்கெலாமிறையெனுமகதி
தன்னிசைக்குளேபரமன்றன்குணமுணுந்தக்கோய்
முன்னிசைத்தவிப்பெண்கள்சேர்காசிபமுனிப்பால்
பின்னிசைத்தநிற்பனநடப்பனவெலாம்பிறந்த. (உ)

காசிபன்றருசந்ததிநிறைந்தகாசினியின்
வாசியின்பெருமாட்சியார்வகுத்திடவல்லார்
மூசியெங்குமாமூர்த்தியினருளிஞலின்னும்
நேசிமாதவர்நெகிழ்ந்தனர்தமைச்சிலநீகேள் (௩)

சிவனணைந்தவக்கௌரியினகட்டிலேசிறந்த
புவனமேத்துறுபூட்கைமாமுகனறுமுகனும்
தவமிகுத்தவங்கிருதுபாற்சூழ்வறுஞானத்
தெவருமேத்திடுபொன்பெயர்முனியுமெய்தினஞல். (௪)

பிருகுவென்பவன்பெற்றனன்வெள்ளியைப்பினும்யான்
திருகிலாதவிச்சுவக்கருமன்மயன்றேசான்
மருகினன்றுவட்டாமகிழ்தாதவிதாதா
பெருகுமாதவர்முதலளவறுசுதர்ப்பெற்றேன். (ரு)

பேணும்யானுமென்மைந்தரும்பேரிறையருளால்
காணுமேழ்வகைத்தோற்றமீந்தன்பிறுற்களித்தோம்
பூணுமாவிகணிறைந்தனவவையெலாம்பொருந்த
நாணுமாறுநன்னிலமுதலறிகிலேநலிந்தேம். (சு)

என்னையெவ்வணமெண்ணியிங்களித்தனையதுபோல்
மன்னுமாவியைமல்கிடவாக்கனிற்கரிதோ
என்னையும்நிறேடெண்ணிடத்திருவுளங்கொல்லோ
அன்னையுங்குருவப்பனுமாகியவமலா. (எ)

மண்ணைக்கொண்டுமாணிக்கமாக்கிடுவிஞ்சைவலன்போல்
பெண்ணைக்கொண்டுபேருலகியற்றிடநினைபெற்றி
எண்ணைக்கொண்டுசெய்தேனையருளிடவிவணேக்கி
விண்ணைக்கொண்டெழவேண்டுமென்றுராணம்விளைத்தேம். (அ)

எம்பிரானையெம்மழகனையிச்சையினெழுமத்
தம்பிரானையெந்தனியறிவாலுணித்தாழ்ந்தேம்
அம்பராதிபனஃதுணர்ந்தமலையோடெழுந்தவ்
வும்பரோடெதிருற்றனன்கண்டனமெழுந்தேம். (௯)

எழுந்தகார்முகிற்கடவுளையேத்திச்சூக்கத்தால்
அழுந்தவீழ்ந்தடியொற்றியேமிகமகிழ்வார்ந்து
தொழுந்தகைப்பெரியார்கடங்கடவுளேசுடர்வான்
கொழுந்தெனப்படுங்குணகணக்குன்றமேகாத்தி. (௧0)

இழுதுபோற்கரைந்தீரிருதலைகண்மேல்விரிகை
பழுதிடாதுகூம்புறத்தொழுதெமைப்படைபரமே
வழுவிலாதநின்வரத்தினான்மன்னுயிர்க்காக்கை
ஒழிவிலாதளித்தாக்கினங்காண்டியெம்மொருவ. (௧௧)

தேவதேவநின்செயன்முடித்திடும்படிதெளிந்து
போவநிற்பனவாகியவெச்சமேபொலிய
ஆவவெங்கணுமாக்கினேமவைகணின்றியலப்
பாவநாசனேபணித்தருணிலைமுதற்பலவும். (௧௨)

இழுக்கிலாதவித்தேவர்கண்முனிவர்களீண்டி
வழுக்கிலாவெனைவளைந்துகொண்டியாங்கள்வாழ்ந்தொளிர்வான்
ஒழுக்கிலாவிடந்தொழிலுண்வார்தியவுன்னி
அழுக்கிலாதளித்திடுமெனற்கென்செய்கேனையா. (௧௩)

அளித்தியையவென்றனைவரும்போற்றழியமலன்
களித்தன்போடுபார்த்தன்பனேநீபுரிகருமம்
விளித்தனன்மிகநன்றுளதென்றுவாய்விண்டு
துளித்தண்மாமுகின்மழைநிறத்தெழின்முகில்சொல்லும். (௧௪)

உனக்குமுன்றவக்குழவியாஞ்சிவன்முதலினர்க்கும்
மனக்குகப்புளசுகம்பொழியெழினலவளங்கள்
கனக்கும்வான்பதந்தொழின்முதலளித்திடக்கருத்தில்
நினைத்தெழுந்தனமஞ்சலையென்றனனிமலன். (௧௫)

பூத்துக்காரமிட்டானதிற்பொலியொளிப்பிழம்பு
கோத்துக்காரவோர்கோமளக்காமர்பூங்கோதை
ஏத்துக்கானமாமறையெலாந்திரண்டெனவிசைப்பக்
காத்தற்கானநங்கடவுள்முன்குதித்தணிலத்தில். (௧௬)

வரதனாகியமுழுதொருங்குணர்பெருமான்பால்
விரதமேவியகலைமகள்விளைந்தனளவளால்
சரதமென்றபல்சமயங்கள்சாத்திரத்தளங்கள்
கருதவுற்றனவிவளிலளாகிலென்கணித்தி (௧௭)

௪௧-வது. விதிசிவாதிகளுக்குப் பதவிபகுந்தருளியபடலம்.

ஆக்குநாயகனயனிடமமர்ந்திடவெண்ணி
வாக்கிலாக்கிமண்டுப்பினனவள்வெள்ளைவடிவாய்த்
தாக்குநல்லழகமைதிநற்செய்கைநற்குணங்கள்
பூக்குமாறுபுண்ணியர்தொழப்பூக்கணேநின்றாள். (௧௮)

நிலத்தினின்றனளொருகொடியவடனைநிமலன்
வலத்தினோக்கியோய்விரிஞ்சிகேளிவளென்றன்வாக்கின்
நலத்தில்வந்தனளிவண்மறையுருவினணந்தாப்
புலத்தின்மிக்கவளழகமைகுணமுளபுனிதை. (௧௯)

வேணியார்முநிவரர்விரும்பாரணம்விளைநம்
வாணிநாவினில்வந்தவளாதலாலிவட்கு
வாணிநாமகளாதிகாரணப்பெயர்வரைந்தாம்
காணியாகநீகைப்பிடித்திவளுடன்கலந்து. (௨௦)

வாழுமென்றுகச்சவியெனும்வீணைசேர்ந்தவளைத்
தாழுமாறிலாக்கைக்கொளக்கொடுத்துச்சங்கற்பித்
தூழிநாளளவாகவின்பொழிகலாதோங்கற்
காழியான்படைத்தருளினான்சத்தியத்தவனி. (௨௧)

எம்பிரான்பிரமன்றனக்கிருக்கையீந்திடவென்
றும்பர்நோக்கினனக்கணமுடையவனருளால்
அம்பரங்கொளுமளவறுபதங்களுக்கெல்லாம்
உம்பரோங்கிநின்றவிர்ந்ததுசத்தியவுலகம். (௨௨)

காழகன்றிலாக்காட்சியானந்தநற்காந்தி
சூழுமாறுதந்துலகயீச்சிரமெனச்சிறப்ப
ஏழுமேழுளார்க்கெட்டரிதாகிடவிடர்கள்
போழுமாறுதந்தருளினன்மாறிலாப்புனிதன். (௨௩)

புனிதமேவியபுங்கவனினைந்திடுபோழ்தே
இனிதுநேரிலாச்சுகச்சுடரொரிபரந்திலகும்
அனகமாகியவரணமைமாளிகையடர்ந்த
வன்கமாநகரானதுபொன்மலைமத்தம். (௨௪)

மேருவின்றலைமிளிர்வதாய்விரிசுகமகலா
நருமானதாயெவ்வுலகினுக்குமேயிறையாய்ச்
சாருமாட்சியிற்றக்கதாய்ப்பகுதியின்கீழாய்ப்
பார்தனக்கும்விண்டனக்குமேற்பட்டதாய்ப்படைத்தான். (௨௫)

படைத்தநித்தியவாநந்தமுளபதிமேவிக்
கிடைத்தவிந்தநாக்கிழத்தியோடளவறுகாலம்
கெடுக்கலற்றநற்சுகக்கடன்மேவுதியென்றான்
அடுக்கலற்றவாரணஞ்சொலற்கரியனுமனகன். (௨௬)

மத்தமேவியமான்மிகுமறவர்க்குவாய்க்காச்
சித்தனுகுமென்சிபதியருளினுற்சிறந்த
வித்தைநாயகியோடுபல்லின்புகண்மேவி
முத்தனுகினேனித்தனும்முநிவரார்முதியோய். (உஎ)

எத்தினத்தினுமீறிலாவொளிதழையின்பச்
சத்தியத்துளவிவ்வுலகத்தினின்ருயாம்
உத்தமிச்சரச்சுவதியோடிணைந்துயரின்ப
முத்திநாதனைவழிபடுமுறையின்முந்தினனல். (உஅ)

இந்தவாறெனையிருத்துபுவீற்றுமீசன்
கந்தனைத்தருகாளையாமென்றன்கான்முளையை
எந்தைநோக்கிநிற்கின்பதமியையவேயீவன்
நந்தலோய்பௌத்திரவெனச்சிந்தையினுடி. (உகூ)

நோக்கினன்பரனேக்கலுமளவிலாமதிகள்
வாக்கினலெனவெண்ணிறச்சோதியின்வளர்ந்து
வீக்கமானவோர்நெடியகுன்றுயர்ந்தின்புவிளையத்
தேக்குமாறுபூத்தொளிர்ந்ததுபாற்கடற்றிடர்போல். (௩௦)

வெள்ளிவெண்மயச்சோதியின்மலையில்விண்மணிபோல்
துள்ளிவில்லிடச்சமைத்துளமாளிகைத்தொடரால்
எள்ளலற்றபல்கோடிகளிவர்சுகபதவி
வள்ளிமாமனுக்காக்கினனெனப்பெற்றவள்ளல் (௩க)

பெற்றவெம்பெரும்பிறப்பிலியாணையாற்பொன்மின்
துற்றுதூய்துளகொடிமுடிபலவுடன்சூழ்ந்த
வெற்றியுள்ளவற்புதமலைமேன்மரக்கொடிப்புள்
சுற்றமாக்கணநிதிமுதலலர்ந்தனகண்டான். (௩உ)

வண்டுபாடுபூவோடைகண்மலிந்ததாய்முனிகள்
கண்டுவாழ்த்துசெய்தேத்துபுமகிழ்வதாய்க்களிக்கும்
தொண்டுசெய்துளபத்தர்கண்மனங்களிதுங்க
மண்டுமோசுகமலிந்ததாயிருந்ததவ்வரையே. (௩௩)

சோகதாகவெங்குக்கிவாதனையிலாச்சுகமாய்
ஆகமானதாய்நரைதிரைமூப்பிலாவிடமாய்ப்
போகமானதாய்ப்புந்திவந்தவைதரும்பொலிவாய்
ஏகமானதாயிலகும்வெண்கயிலையைப்படைத்தான். (௩௪)

அன்புதந்தழகவிருயர்கயிலையையடரும்
துன்புமாண்டிடத்தொலைத்தருநிணையிவிநோக்கி
என்புபூண்டிடுமீசரீயுமையுடனினிதே
இன்புபுல்கிடவிதிற்குடியிருத்தியென்றிசைத்தான். (௩௫)

கக-வது. விதிசிவாதிகளுக்குப் பதவிபகுந்தருளியபடலம்.

நீயுநின்வழிமைந்தருநின்னடியவரும்
வாயுமோரிடும்பைக்கிடமறவிதின்மகிழ்ந்து
சாயுந்தீதுமேற்சன்மமுநாகமுஞ்சாய்க்கும்
ஆயுமப்பனுங்குருவுமாமெனைநினைந்தவிர்வீர். (௩௬)

பத்தரீட்டமும்பாரிடக்கணங்களும்பரவச்
சத்தியோடுபல்லின்புகண்டாசுளார்தம்மை
மொத்திமூடுபாவங்களைமுருக்கிமூவுலகின்
உத்தமர்க்கெலாமுத்தமனுயிருந்தொளிர்வாய். (௩௭)

அறிதியோய்மதிநாரதசிவன்றனக்கமலன்
முறிதல்செய்திடுகடவுளாமுறைமையையீந்து
வறிதுநீங்கியகயிலையின்கட்குடிவைத்து
மறிதலற்றவென்மைந்தர்சிற்பிகடமைவரித்து. (௩௮)

சிற்பநூனயவிஞ்ஞைகளாதியாஞ்சித்தி
கற்பனைக்கணம்யாவையுங்கசடறக்காண்பான்
தற்பரன்னருள்புரிந்தயனடியுளார்தமக்கும்
பொற்பின்மாளிகைமுதலியசிருட்டிகள்புரிந்து. (௩௯)

நிச்சலும்நமதாணையையென்றகநீங்கி
உச்சமாமெனையுள்ளிப்பொச்சாப்பினையுடற்றி
விச்சுவக்கருமன்மயன்வீறுளவொன்றே
இச்சகத்துளோரிசைத்திடவாழ்திராவென்றான். (௪0)

இசைத்தவண்ணமன்னவர்களெண்மாதிரத்தவர்க்கும்
அசைத்தநான்மறைப்பிரமர்கண்முதலனைவருக்கும்
நசித்தலற்றபீடியர்புரிநகரநாடடரூர்
ஒசித்தலற்றகாடாறுகற்றடமுதலுஞற்றி. (௪௧)

இந்திரன்னமராவதியணனகரியமன்
முந்துறும்நகர்நிருதியூர்வருணனூர்மூவாச்
சந்தமாருங்காலூரளகாபதிசார்ந்த
எந்தவூர்நகர்யாவுநன்மாட்சியோடியற்றி. (௪௨)

எம்பிரானடிபரவிவிஞ்ஞாபனமிடலும்
தம்பிரானவைதமையெலாந்திருக்கணோக்கிட்டு
உம்பர்சென்னிபட்டுயரொளிமுடியசைத்தவர்க்கு
விம்புநல்வரமிட்டயிராவதவேந்தை. (௪௩)

விளித்துத்தன்னருட்கூற்றினையவனிடம்விளக்கிக்
களிக்குமின்னமிழ்தாகியவுதவியிக்ககனத்
தொளிக்குமும்பர்கண்முதலினருறுபதிக்கெல்லாம்
அளிக்குமீசனுயமைந்தரசாற்றியென்றறைந்தான். (௪௪)

மூன்றுலோகமன்னவனெனவாக்கிமூன்றும்
ஈன்றகோள்கள்செய்தொழில்கணித்தேழ்முநித்தொழுதி
ஏன்றுசெய்விதியியம்பித்தன்னெழின்முகமெழுவாய்
தோன்றினர்தமக்குரிமையையீந்தனன்றொல்லோன். (௪௫)

தொல்லைநாயகன்சூழுமூவுலகின்மன்பதைக்கும்
அல்லைநீக்குமாயுட்டொழிலுணவுபேர்விருத்தி
எல்லையிட்டவரவர்க்கெலாமின்னருள்சுரந்தான்
வல்லனாகியவீறிலாவிறையெனும்வரதன். (௪௬)

வரதன்மார்பொளிரிலக்குமியருட்கண்மாட்சிமையால்
விரதமாதவர்யானெழுவாயுளோர்விளைந்தாம்
இரதவேழிசைக்கிழவபின்னிறைவனையேத்திச்
சரதமூர்த்திநிற்கியலிடஞ்சாற்றுகவென்றேன். (௪௭)

எம்மனோர்க்கெலாமிருக்கையீறிலியெந்தாய்
அம்மையாயநின்னருட்குணசாந்தமாதாகும்
கொம்பனார்க்குமாநந்தமாங்கொடிக்குங்கோதகன்ற
உம்பர்முத்தர்கடமக்குமூஒங்கருளென்றேன். (௪௮)

என்றுகேட்டலுமிறையவன்சிறுநகையியற்றி
நன்றுகேட்டியானறுமிடமெங்குளநந்தா
நின்றவானந்தவீட்டினுங்கடன்மறைநிகிலத்
தென்றுமேதையரிடுபலவுருவினுமிருப்பேன். (௪௯)

நின்றுசென்றுறுமுயிருளுமேலுமேனிவரும்
பொன்றிலாததோர்துருவத்துமுச்சுடர்ப்புறத்தும்
என்றுமீறிலாதிருப்பணிவ்வுலகெலாநிறைந்தக்
கன்றிலாத்திருவேங்கடத்தினுந்தினங்கமழ்வேன். (௫௦)

அரங்கமாளிகையதுகிரிசீமுட்டம்வதரி
வரங்களீந்திடுவானமாமலையத்திமலைவான்
கரங்களாற்றொழுங்குருகையக்குறுங்குடியநந்த
புரங்களாதிநூற்றெட்டும்யான்பொலிபதிபுதல்வ. (௫௧)

வேங்கடத்தினும்விரிக்குமேழ்புரியினும்வேழம்
தாங்குபாதலத்தெல்லைவானெல்லையின்றலத்தும்
ஓங்குமாமகளோடிருந்தாங்கெனையுன்னி
வாங்குவார்க்குளவரமளித்தவிர்ந்துளேன்மலரோய். (௫௨)

அலகிலாதவென்றலமெலாமிருக்கவுமவையின்
இலகுமின்பினுக்கெண்மடங்காகவைத்திருத்தல்
உலகினின்னிதயத்துளதெனுமிசையுயர்ந்த
புலவர்போற்றுறுசித்திரகூடமாம்புரியே. (௫௩)

அந்தமற்றநல்லின்புசேர்மோக்கவீடாம்வை
குந்தமொப்பதென்றுவப்பதத்தில்லையாங்கூடம்
மைந்தயானவணவைபதியாகிவாழுறுவன்
இந்துசேகரனங்குக்கூத்தாவோனினிதே. (௫௪)

பத்தர்நன்மனக்கோயில்போலிலங்குறுபாடார்
சித்திரத்துளதாகியதவத்தினிற்றிருவும்
நத்திநித்தியமுத்தர்கடேவர்களுளும்
உத்தமின்மனத்தோடுறவிருப்பனியுணர்தி. (௫௫)

உணரவொல்லகிலாவொருமாமுதலுரைத்துத்
துணர்மணத்தழகலர்மழையொலிசெயத்துரையாப்
புணருமாவெளியெழுந்துமின்மறைந்தனன்புகல்வோய்
வணரிலாமனத்தோடியொன்பின்புரிவனகேள். (௫௬)

உலகையோம்புகையேமறைவறுமொருதுயிலா
இலகுமீறிலான்பதவிகளீந்தருளியல்பைக்
கலைகளாய்ந்துளமகதியாறுதியர்க்குரைத்த
துலவிலாதுரைத்தோங்கினன்சூதமாவுரவோன். (௫௭)

கக - வது. விதிசிவாதிகளுக்குப் பதவிபகுத்தருளிய படலம்

முற்றிற்று.

ஆக படலம் - கக - க்கு திருவிருத்தம - ருசரு.

கஉ - வது. அண்டவிளக்கப்படலம்.

சொற்பதங்கடந்தவின்பச்சுடரடிபரவப்பெற்ற
அற்புதவுணர்ச்சிமாட்சியார்ந்தநாரதவெம்மாதி
நற்பதவருளினாலேநன்றெளிரண்டத்துள்வாய்க்
கற்பனைகண்டவண்ணங்கழறுதுங்கனிவினேற்றி. (க)

இதமுறித்தலத்தின்கீழிலிருப்பதோராறுலோகம்
சிதமுறிவ்வுலகின்மேலேசெய்ததோராறுலோகம்
பதமுறக்கீழ்மேலீரேழ்பதியுலகுளதுபார்க்கின்
விதமுறைஞ்ஞூறுகோடியோசனைவிரிவுமாதோ (உ)

பூவுலகதனிலேழுகடலுடன்பொலிவேழ்தீவம்
காவுறுகண்டமொன்பதாங்கரிகிரிகள்காக்கும்
மேவியநாகமீரெட்டவிர்ந்தொளிர்விருக்கமேழில்
பாவியகிலத்தினுப்பண்படமாமேருண்டன்றே. (௩)

மன்றபற்பலவாங்குன்றம்வகுக்குமாறியற்றிவைத்து
நின்றவிவ்வுலகின்மீதுநிமிர்ந்தயோசனையிலக்கம்
என்றவாதித்தனெல்லையிதற்குமேலிந்துக்கெல்லை
நன்றெனவிலக்கம்யோசனைக்குளேநகுமென்றோர்வாய். (ச)

மண்டலக்கிரண்டிலக்கயோசனைமதிக்கப்பாலே
மண்டலமுடுக்களுக்கோரிலக்கத்தின்மன்னுஞானம்
கொண்டுளவிரண்டிலக்கயோசனைக்கொளிருமாறு
கொண்டுளதினிதுபுந்திக்காகியகோதிலூரே. (ரு)

இதனின்மேலிரண்டிலக்கயோசனையினிற்சுங்கர்க்காம்
பதமுளததற்கிரண்டிலக்கயோசனைமேற்பட்ட
விதநிலமகற்குத்தேயம்விளங்குமேலிரண்டிலக்கம்
சதமுறும்யோசனைக்கேகுருபதஞ்சமைந்ததாமால் (சா)

குருவுலகினுக்குமேலேகுறித்திடுமிரண்டிலக்கம்
மருவும்யோசனையிற்பங்குமண்டலமப்பாலொன்றாய்த்
தெரிதருமிலக்கயோசனைக்குமேற்செப்புமேழா
வருமுனிவோர்கள்வாழுமண்டலம்வழங்குமன்றே (எ)

இருடிகளுலகின்மீதிலிலக்கயோசனையின்மீதில்
துருவமண்டலமிருந்துதுலங்குறுமிதன்மேற்கோடி
தருமியல்யோசனைக்கேதக்கமாலோகங்காணும்
வருமகாலோகத்தின்மேன்மருவியவிரண்டுகோடி. (அ)

யோசனையதனின்மேலாயொளிர்ந்திடுஞ்சனலோகம்மே
நாசமிலிதற்குமேலேநண்ணியவிரண்டுகோடி
யோசனையதனிலோங்குமுயர்ந்திடுதவலோகம்மே
வாசமாமிதற்குமேலெண்கோடியோசனைவாரத்தில். (கூ)

சத்தியவுலகமாகுந்தாழ்வறுமிதன்விசாலம்
உத்தமத்திராறென்னுவுரைசெய்வர்கோடியாக
வைத்தயோசனைதான்மேலேவழங்கல்செய்யிரண்டுகோடி
மொய்த்துளதமசுக்கப்பான்மூசுறுமண்டப்பித்தி. (கO)

தாரணிதரணிக்குள்ளேதழங்கிடும்புவனலோகம்
சீரணிகதிர்க்குமேலேசெறிபதினுன்கிலக்கம்
ஏரணியோசனைக்குளிலங்குறுஞ்சுவர்க்கலோகம்
காரணமுணர்ந்தமேலாமுனிவர்வாழ்கதிக்குமீதில். (கக)

கண்டுகொடுருவன்பூமிக்கீறினிற்கரிசற்றோங்கும்
விண்டுவினுலகமென்றோன்றுண்டதுவியத்தமாகப்
பண்டுளதுருவனூர்மேற்பட்டமாலோகம்மேலாக்
கொண்டுளதினியவானகோதிலாச்சனலோகம்மால் (கஉ)

இதற்குமேற்றவத்தர்வாழ்வாரிதற்குமேற்சத்தியலோகம்
விதித்திடுவிலங்குமேருவின்றலைமீதின்மிக்கோய்
பதித்தவிப்பதிகட்கெல்லாம்பரமமாப்பகர்வர்மேலோர்
துதித்திடும்பூலோகத்தைத்தூயமாஞானத்துப்போய். (கங)

எவ்வுலகத்துமிக்கதியனடுத்தாலவட்டம்
அவ்வுலகத்துமிக்கதரியநாவலமாந்தீவுத்
தவ்வவிலதற்குமிக்கதாம்பரதப்பேர்க்கண்டம்
ஒவ்வவிலதற்குமிக்கதுயர்மிகுதென்னுடம்மா. (கச)

தக்கணதேயத்துள்ளுந்தக்கதுதாவின்மாட்சி
மிக்கதாம்வடபொன்னிப்பேர்வியனதிவடக்குமிக்க
திக்கிதின்மிக்கதாகுந்திகழ்தருமிலந்தைக்கானம்
புக்கிடுபுண்ணியப்பேர்க்கேத்திரமாதிமாதோ. (கரு)

புண்ணியவனங்கட்கெல்லாம்புண்ணியப்பொதியினின்ற
தெண்ணியதில்லைத்தில்லமிதனடுவிலங்குந்தேவர்
பண்ணியதவத்தாலேத்தப்பட்டுயர்பரமஞானம்
நண்ணியபுண்டரீகபுரமெனுநகரமாதோ. (கசா)

சொன்னவிந்நகரத்துள்ளுந்துகளறச்செறியுஞ்சோதி
மன்னுசித்திரகூடத்தின்மதினடுமறைகளாடித்
துன்னுநூற்றெருகுதிமுற்றுந்துய்த்தொளிர்தூயஞானத்
தென்னையாளனந்தபுத்தேளிலங்குமாலினிதுமன்னோ. (கஎ)

என்றெனேற்றருளானந்தவீறிலாவிறைவனேறி
இன்றுயிலுகப்பனென்றுவிசைத்தெவருங்கண்டோத
மன்றுகண்டட்டசோபானப்பரம்பொருளைவாழ்த்திப்
பொன்றியபவத்தராகிப்பொருந்தியபொருந்திப்போவார். (கஅ)

திருமகண்முதலவாயதேவிகணித்தர்முத்தர்
மருவியேவாழ்த்துக்கூறிவணங்கிடமதியைச்சூடி
ஒருமுதன்முன்னமாட்டையெடுத்தெடுத்தினிதிஞேங்கி
வருமவரினிதுகாணவாடுறல்வயங்குமாதோ. (கக)

அங்ஙனமமரர்கோன்யாணரத்தவர்மனிதரோனோர்
தங்குறப்போற்றிப்போற்றித்தனிமனத்தாசைபெற்றும்
பொங்கமுற்றினிதினீயும்போந்திருந்தரியைப்போற்றி
மங்கலற்றினிதுன்சீடவருக்கத்தின்வாழ்தியென்றான். (உ௦)

கேட்டிரால்சௌநகாதியறிஞர்காள்கிளர்வேதக்கோன்
வீட்டுளநாரதப்பேர்விமலமாதவற்குமேற்கீழ்க்
காட்டியவண்டமாட்சிச்சருக்கத்தைக்கடன்ஞாலக்கண்
ணாட்டியதிசைத்துநன்றாக்கொண்மினோவென்றுநாட்டும். (உக)

கஉ - வது. அண்டவிளக்கப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - கஉ க்கு திருவிருத்தம்-ருசுச.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

கரு-வது தேயவிளக்கப்படலம்.

எழிலறிவடக்கம்விஞ்சையாதியவிலங்குநீரால்
வழிவழிமூவாவின்பின்வரதனைவழுத்துமேலோய்
இழிவறுநடுஞாலத்திலிலகுறுந்தேயமாதி
ஒழிவறுவளங்களெல்லாமுரைத்துமாலுகந்துகோடி. (க)

முற்றுணரறிவுகேள்விமுதற்குணமுதிர்ந்தவாய்மை
உற்றநல்லொழுக்கநீதியொண்வலியோவாநன்கு
பெற்றவெம்பெருமாற்போற்றும்பிறங்குமீரேழென்றோதுங்
கற்றமாமநுக்கூடாமிக்காசினிகாவலாளர். (உ)

இவருளென்னிடத்துதித்தானெனுஞ்சுவாயம்புமன்னன்
அவர்களின்முதல்வனிந்தவறிவுளமநுவின்மாட்டுத்
தவர்துதிகுணங்கண்மிக்கதடமுறத்தக்கவரனோர்
எவரினுமினியரொன்பாரிருசுதருதயஞ்செய்தார். (ந)

வேறு.

அரியவிரதமாற்றிமாலினருளினீர்மையார்தலில்
பிரியவிரதனென்றநாமமுற்றுளோனும்பெரியர்தாள்
உரியனுமுத்தானபாதனென்றுரைக்குமொருவனும்
தெரியவந்துதித்துயர்ந்துதேசமாண்டதேசுகேள். (ச)

இருவருள்ளுத்தானபாதவிறைவன்செய்தவத்தினல்
துருவனென்றதூயமைந்தன்றோன்றிவான்மண்சூழ்ந்தவிர்
ஒருவனனவொப்பிகந்தவொண்சுடர்க்கணுற்றதோர்
திருமெய்ஞ்ஞானச்செல்வயோகதீரவீரனயினன். (ரு)

சிறந்தஞானமோனியாய்ச்செழுந்தவத்திருந்தரே
மறந்தசீவர்காண்கிலாமறப்பிலானைக்கண்டனன்
பிறந்தபேறடைந்தபெற்றியுற்றபேர்கள்பேணுறும்
துறந்தவீசனுக்கியீந்ததுருவபதவியேறினன். (சு)

ஆழிமாமலைக்குமங்கடுத்தகோள்களுக்குமே
வாழிநாதனைடாத்துவள்ளலாகிவஞ்சமில்
பாழியானவுள்ளிலையன்பாதமிட்டுயர்ந்தனன்
எழிலேயிரண்டில்லாதவிளையவாண்டினிற்குளே. (எ)

இந்தமைந்தனிங்கிருப்பவினிதின்முன்னிசைத்துள
சந்தமுள்ளபிரியவிரதன்றோன்றரத்தன்றனையைகள்
கந்தமுந்துகுழலிணைந்தகவின்கொள்பெண்களிருவரைச்
சுந்தரத்தணைந்திரைந்துசுதர்தமைப்பயந்தனர். (அ)

ஈன்றமைந்தர்தம்முண்மூவரிகசுகம்மிறுத்தரோ
ஆன்றவாரணச்சிரத்தமர்ந்துவாழெம்மடிகளின்
மான்றதாண்மலர்ப்பதத்துண்மன்னிவாழ்மனத்தராய்த்
தோன்றுமாறிலாதவின்புதுய்ப்பதந்தொடர்ந்தனர். (௯)

மூவர்போந்தபின்னர்மன்னன்மோதுநீர்நிலத்தினைக்
காவல்செய்துகாக்குமாறேழ்தீவுசெய்துகடுவிலா
தாவலோடுமக்களுக்காதிக்கமிட்டளித்தலும்
மாவலோர்வழுத்துநீதிகோல்பிடித்துமன்னினார். (௧௦)

எழுவர்மன்னரேழென்றேதுமெல்லைகொண்டியற்றியே
பழுதிலாதபரமனார்தாள்பற்றிவர்க்குள்பண்புசேர்
வழுவிலாதவக்கினீந்திரப்பெயர்த்தொன்மன்னவன்
உழியிருந்ததிந்தநாவலந்தீவென்னுமுலகரோ. (௧௧)

இவனிடத்திலொன்பதின்மரினிதுவந்துதித்தநாள்
கவனமுற்றதந்தையுந்தன்காவலானதீவினை
அவரவர்க்கின்பாகவொன்பதானகண்டமாக்கியே
தவர்களைத்தறக்கோறந்துதவமியற்றவேகினான். (௧௨)

ஒன்பதின்மர்தம்முளேயுயர்ந்தநாபியென்றிசை
அன்பனுக்கோரிடபனென்னுமரியமைந்தன்வந்தனன்
துன்பிலாவத்தூயன்பாலோர்துகளிலாதபரதனும்
என்பவன்பிறந்தனனிவ்வெல்லைசெய்தவத்தினால். (௧௩)

பரதனென்றிசைக்குமேன்மைபட்டவேந்தெம்பரமனும்
வரதனுக்குகந்தசீலவாய்மைஞானபத்தனாய்
விரதனாயிமத்தடத்தென்பாகமுற்றும்வீறுறச்
சரதமாப்புரந்தனன்வான்றுவுவோர்கடாழவே. (௧௪)

வானுளோருமற்றுளோரும்வாழ்த்தெடுப்பமாண்டதோர்
தீனமற்றவீடளிக்குமாற்றன்மேயதேயமாம்
கோனையற்றதானபூமியாதலாலிதற்குநேர்
மோனையுற்றபாரதகண்டமென்றபேர்முழங்குமே. (௧௫)

இங்குவங்கவங்கமேயிலங்கிடுங்கலிங்கமே
துங்கமாங்காம்போசமாந்திரம்புளிந்தந்தூசிலா
மங்கிலாதகுர்ச்சமர்ச்சங்காச்சுமீரமாளவம்
சிங்களஞ்சோளஞ்சீனம்பாஞ்சாலமருணமாமரோ. (௧௬)

சிந்திலாடம்யவனஞ்சாலவம்பங்காளஞ்சேதியவ்
வந்திகொல்லங்கொங்கணநேபாளம்பாண்டிமாளவம்
சுந்தரஞ்சேர்சூரசேனம்சோனகம்மக்கேரளம்
மங்களஞ்சேர்நிடதகோசலங்குகுமராடமே, (௧௭)

கன்னடங்கன்னடங்காசங்குந்தளங்கிராடமே
மன்னிடங்காந்தாரங்கேகயம்மகதம்போடமே
மின்னிடுங்குலிந்தங்குடகங்கருசமொட்டியம்மிகப்
பன்னிடுமெப்பபப்பரமப்பல்லவஞ்சவ்வீரமே. (௧அ)

ஒட்டியம்முகந்தரஞ்சகந்தொழுந்திராவிடம்
நட்டிடும்மத்துளுவம்வாரிநாட்டுமலையாளத்துடன்
எட்டுமோர்விதர்ப்பதேயமென்பதன்றியினும்பல
பட்டநாமமோடுவாழும்பதிகண்மலிவுபகரொணா. (௧௯)

எம்பிரானர்ச்சாவதாரமெம்முநிதேவவர்களோ
அம்பராதிசேடன்மீதிலன்னவஞ்செய்திடல்விடுத்
தும்பிநாதன்றுயர்தொலைத்தவாறிற்றோன்றியவர்பொருட்
டம்பரிம்பரானசேத்திரம்மனேகமாயின. (௨௦)

கேட்டிமுனிவர்சேகராவிக்கேடில்லாதநாவலம்
நாட்டிலளவிலூர்கள்வாவிகூவமேரிநதிகளும்
ஈட்டமுள்ளபக்கிமாக்களினியகானமிருடிமார்
கோட்டிகூடுபள்ளிசாதிபேதமாதிகொள்ளையால். (௨௧)

பன்னுமாதிபகவன்வீறுபாடலானநான்மறை
துன்னுவேதநாவரம்பொன்சோதிகாத்திரத்தெழும்
மன்னர்நாய்கர்தாதர்மற்றுமானபேர்கண்மல்கிய
இன்னமாநிலத்திலேவீடேற்றுகாணிலக்கமில். (௨௨)

நேமிகானந்தண்டகானமிக்குக்கானநெடியதாம்
காமிகானமஞ்சகானங்காண்டவத்தின்கானமே
சாமிவாழும்பதரிகானந்தாருகானந்தடமலர்
வாமிவாழுமோடைமல்குமானகானமலிவரோ. (௨௩)

தேவதாருகானந்தெய்வகானஞ்சுவேதகானமீ
தாவுவேணுகானந்துளவக்கானந்தாழ்வில்சண்பகம்
மேவுகானந்தில்லிகானம்வீறுசில்லிகானமோ
டாவுதானபாடலீயென்றோதுகானமடருமால். (௨௪)

புண்ணியப்பெருக்கமானகானவளவுபுகலொணா
தெண்ணுமன்னதீவிலேயிருக்குமாறோவெண்ணிலோ
கண்ணனூர்முக்கண்ணர்சென்னிகழுவிப்பாவங்கழுவிய
விண்ணிலானகங்கைகோதாவிரிவிளங்கலவணரோ. (௨௫)

யமுனையக்கிருட்டினைப்பிணுகியாவுமீந்தருள்
தமசைதருமைசையைசந்திரபாகைசொன்னைபதுமினி
அமலையானசரயுவக்குசாவதிபகூத்தகை
விமலகபிலைவேத்திரையப்பாபநாசவித்தகி. (௨௬)

வேறு.

சாரவதிநருமதையப்பீமநதிகுமுதவதிசார்பெல்லாமீ
நீரவதிகருடநதிகோமதியார்வெள்ளைநதிநீண்டமோக்க
வாரமதையீந்தருள்வைகுந்தநதிகீரநதிவடபிஞகி
சாரமுளராமநதிகௌரிநதிநூபுரைகௌதகையேசாந்தி. (௨௭)

காடகியேசாயவதிகதிசுகத்திமதிதுங்கபத்திரிப்பேர்
கூடுநதிதாக்கையணிகுலவுமலக்கினிகருணிகைப்பேர்க்கோதை
தேடுமணியாம்பிரைதென்குமரிவையையகோலநதிதிகழசோகை
நாடுபுகழ்க்கூர்மநதிகோமதியக்கௌசிகையேநளிர்பவானி. (௨௮)

உலகபாலினிவருணவதிகேசவதியூர்மியமலாவோங்கும்
திலகமாம்வைணவீயஞ்சனைமங்களைவேகவதிதீர்த்தேர்ச்சி
இலகேமவதிவச்சிராசோத்துவதிசுத்திமதியின்பான
பலவளகைவருணவதிகுசச்சலிவான்முத்திவதிபாவநாசி. (௨௯)

நதிபதியாங்கலியாணிநற்கிருதையகீந்திரையேமணிமுத்தாவே
விதிகுசாவதிகுந்தாவதிபுண்ணியதாயினியேநளினிவீறும்
கதிமிகுந்தவிலக்குமணியக்கமலைகபர்த்தினியேகதிதந்தாளும்
மதிகொடுக்குமங்கலநற்சுதர்கொடுக்குநினைவனைத்தும்வந்துமல்கும். (௩௦)

பாரதிமாநதியிரத்தாவதிமஞ்சுளாமிகுந்தபரமமான
சாரமிகுமப்பிராமித்தொண்டர்பான்மிக்கநதித்தடங்கடம்மை
வாரமாக்கொண்டுளதிந்நாவலந்தீவெனினுமிதின்மலிந்தமாட்சி
பூரணமாமிந்நதிகள்யாவுமேத்தெடுப்பவுண்டோர்பொன்னியம்மா. (௩௧)

பொன்னியெனப்பெயர்புனைந்தகாவேரிக்கிணையெனமுன்புகன்றவான
எந்நதியுமிலையாவென்றறிதிகலைவாரிதியையெளிதினுண்டோய்
அந்நதிகடமதுபவமொழிப்பவெனவெண்ணுழிவந்தாடிமாந்தி
மன்னுமெனவெந்நூலும்வழுத்துமெனவிதிவிதிக்கமகன்வினவும். (௩௨)

பொய்ம்மையறும்வாய்மையுறும்புத்தேளிரடிபரவும்பொன்னணீங்கா
மெய்ம்மையுளபெருந்தேவன்பதமலர்வந்துதயமிட்டமேன்மையாலே
நொய்ம்மையுளவாவிகளின்பவக்காட்டைநூறுவலிநூங்குங்கங்கை
செய்கையுளமாட்சியினுமிக்காவேரிக்கெனுளசெப்புகென்றான். (௩௩)

எந்தையருளுந்திமலரொழுந்ததனன்மேன்மேலுமேற்றமேற்றோய்
முந்தையதாங்கங்கையினுமுனிசுரராலவதரித்துமூசுமின்பம்
வந்தபலநதிகளினுமிக்காவேரிக்கென்விதமாட்சிவந்த
சந்தமுடனினிதருடியென்றிசைநாரதன்வினவச்சாற்றலானான். (௩௪)

ஆரணியங்களிலுயர்ந்தபஞ்சகிருட்டினமெனுமாரணியமேலாம்
வாரணியும்பொற்கலசமாதனையுமெம்பிரான்வாசமேலாம்
சீரணியுநிலமதிலேசிறந்தசித்திரக்கூடமேலாமந்த
நாரணனார்தலத்திருபானண்ணுபொன்னிவெண்ணதிகளுளுமேலாம். (௩௫)

வெண்ணதியம்பொன்னிநதிவிளங்கிருபான்மிளிர்ந்தார்ந்துவீறுங்காட்சி
நண்ணுதில்லையினிலரவப்பள்ளிவளர்நாதனொளிர்காட்சியீசன்
கண்ணபிரான்கான்மலர்மாட்டரிவையெனுங்காளியுடனுடுங்காட்சி
எண்ணுமவரொழுபிறப்புமறுத்தழிவிலாதசுகமெய்துவாரால். (௩௬)

தேயமதிலெல்லாமேன்மேலுமிகலானதந்தச்சோழதேயம்
காயமதிற்சிறந்தசிதாகாயபரம்பொருளடியிற்கலந்தசுத்த
தோயமுளகாவேரிசூழ்ந்துளமாமேன்மையுற்றதொடர்பினலே
ஞாயமுணர்மோனிகடநாதனெனுநாரதநீநன்குதேர்தி. (௩௭)

தேர்ந்தருளையுறுதியெனப்பிரமனறைந்ததன்பின்னர்த்தேவதேவன்
ஆர்ந்தமிகுதூய்மைநிறைசாத்துவிககுணமாயையாகாநின்று
தீர்ந்தவுலோபாமுத்திரைப்பேரைத்தெளிந்துற்றபொன்னியாற்றின்
ஓர்ந்தபுகழினைப்பகர்வான்பொருட்டன்னுள்பிறப்பகத்தையுரைப்பாமோர்தீர்.

வேறு.

உரைத்துமென்றவெள்ளோதிமத்தேரவன்
கரைத்தல்செய்யிசைக்கான்வீணைக்கையனும்
இரைத்தல்செய்நதியேந்தல்பின்கேட்குதும்
விரைத்தல்செய்விழைவென்னெனிற்கேண்மினே. (௩௯)

வேறு.

பொன்னிபிறப்பினைப்பின்னர்ப்பன்னுவிர்முன்பகர்ந்தமநுப்புதல்வராயோர்
துன்னுபரம்பரைவழியிற்றோன்றியருண்முகின்மேனிச்சோதிபாதம்
மன்னியநற்றுருவன்வரலாறுசிரவணஞ்செய்யும்வாஞ்சைவிஞ்சிக்
கன்னமுறவேண்டுகின்றுமென்றார்க்கச்சூதமுநிகழறுமன்றே. (௪௦)

கஙு - வது. தேயவிளக்கப்படலம் முற்றிற்று.

ஆ படலம் -ரு - க்கு திருவிருத்தம் - ௪௦௪.

க௪ - வது. துருவன்பரிபவயடைந்தபடலம்.

ஒருவனாகியொப்பிகந்தியரருமறைக்கொழுந்தாய்த்
திருவினாயகமாயுயிர்தமையெலாந்திதிசெய்
அருவுமாகியுமருவுருவாகியுமமைந்தான்
துருவனுகுசேயினைப்புரந்தருள்கதைதெரிப்பாம். (க)

விரிந்துமூசியவிட்டுணுக்கடிமைசெய்திருளைத்
தெரிந்துவீசியசிற்றின்பஞ்செறிகலாமேதை
இருந்தவேதவேதாந்தமாமுநிவர்காடுருவன்
அருந்தவத்தையுமவனுளத்திறத்தையுமன்பால். (உ)

இன்னும்பன்முறையிசைத்திடவென்மனவாக்கு
மன்னுகின்றனவறிந்துளநீவிர்கண்மகிழப்
பன்னுகின்றனன்பார்ப்பனச்சிட்டரோபரிந்து
நன்னயத்துடன்கேண்மினென்றருள்செய்வான்மாதோ. (௩)

உந்துமாமதவும்பலாண்முதலுந்திப்பூமேன்
வந்தநான்முகன்மகன்சுவாயம்பெனுமனுவால்
தந்ததிண்வலிக்கலையழகமைந்துளதகவார்
சுந்தரத்தவரிருவர்கடோன்றினர்சுகுணர். (௪)

அரியவாரணச்சென்னிமன்னியநெறிப்பிரிய
விரதனென்றுமுத்தானபாதன்னென்றும்விளம்பற்
குரியராகியெண்ணெண்கலையுவரியைமாந்திப்
பிரியராயினரவருளுத்தானபாதனுமே. (௫)

முகிலொளித்திடுமோதியுமுருக்கியையிதழும்
சிகியொளித்திடுசாயலுஞ்சிலம்பியைத்தனமும்
அகியொளித்திடுமல்குலுமரம்பைநேருரும்
துகிரொளித்திடுவிரல்களுந்தூம்பியைத்தோளும். (௬)

கரும்புளோட்டியகண்களுங்கரும்புறுமொழியும்
துரும்பையோட்டியமருங்குலுஞ்சோதிவாண்முகமும்
சரம்பையோட்டியமார்பமுஞ்சலசமென்கரமும்
அரும்பையோட்டியவெயிறும்புத்தகவிணையடியும். (௭)

வாய்ந்தநற்குணவிணைமலிமாதர்கடம்மை
ஆய்ந்தமாமறையனன்முன்னம்விதிப்படிவிடந்தீத்
தோய்ந்தவேற்படைத்திண்புயவலிதிணிதொங்கல்
வேய்ந்தவள்ளலுத்தானபாதன்மணம்வேட்டான். (௮)

அரம்பையாதியரந்தரமொளிதிகழழகார்
சுரம்பெய்யாநின்றதோகையரிருவரைப்புணர்ந்தான்
தரம்பெய்போகமாஞ்சலதியிற்படிந்துளவவனுக்
குரம்பெய்யுத்தமன்றுருவனென்றிருசுதருதித்தார். (௯)

வரைசெய்வண்புயனாகுமுத்தானபாதனுமச்
சுருதிமீதுமன்னவடருசுந்தரன்மீதும்
உரைசெய்யன்புயிருய்த்துமற்றவண்மைந்தன்மீதில்
கரைசெய்யாதரமற்றிருந்தனனறங்கலங்க. (௧௦)

தூயகற்புள்ளாகுஞ்சுநீதியின்மீதும்
ஆயநற்றுருவனெனுமருமகன்மீதும்
நேயமற்றமன்னவனிலமாண்டுளசெவ்வித்
தாயைத்தன்பிதாவெங்குளன்சாற்றுதியென்றான். (௧௧)

மழலையின்சொலான்மகவுகேண்மணிமொழிகேளா
அழலையென்பிளாயமைற்குவலெனச்சொலவல்னும்
எழலையென்னனுயெல்லவர்க்கும்பிதாவுளனே
கழலைக்கட்டியேகாட்டுதியெனப்பினுங்கலுழ்ந்தான். (கஉ)

வாட்டமுற்றவென்னைமந்தகேளுனையெனவேறு
வீட்டிவிட்டநின்வேட்கையார்தந்தைவாழுறையுள்
ஊட்டக்காணுதியெனத்துடித்தவனுறுதுயரை
வீட்டிக்கண்புனன்மெல்லியபுடைவையாற்றுடைத்தாள். (கங)

என்னைப்பெற்றவென்னப்பகேளுன்பிதாவங்ஙன்
பொன்னைப்பெற்றநன்மணிதனையிழைத்தொளிபொர்தியும்
மின்னைப்பெற்றமாளிகைமிளிர்ந்துளவிளித்தணுகி
யுன்னைப்பெற்றவனுளனவண்காணுதியோடி. (கச)

ஆண்டோரைந்திலாமைந்தனையனைமகிழ்வித்துப்
பூண்டதன்னுழைப்பெட்பறுகணவன்பாற்போக்கி
நீண்டதெய்வமேயென்றகமிருக்குழிநேடித்
தாண்டியோடினன்றந்தைவாழிடஞ்சிறுதநயன். (கரு)

துன்னுசெஞ்சுடர்தூற்றுவெங்கனகமாமணிகள்
மன்னுவான்படர்மாளிகையுட்புகுமைந்தன்
அன்னைசொற்படியாங்குநோக்குழியருங்குரவன்
மின்னுமென்னுயர்தருசிம்மாசனத்தில்வீற்றிருந்தான். (கசு)

செம்பொன்மாமணிகுயிற்றியசிங்கபீடிகைமீ
தம்பொனுடைபூணணிந்தொளிர்சோதரன்றன்னை
உம்பலோங்குகையுறழ்குறங்கிருத்திக்கொண்டுகெப்பால்
நம்புதந்தைமாடடுத்துநோக்கினனிளநம்பி (கஎ)

அடுத்துநோக்குறுமருமந்தக்குழவியையண்ணல்
எடுத்துநோக்கிலனிளையவன்சினக்குமென்றியாரும்
விடுத்தமேதையராயினும்பெண்வலைவீழ்ந்தால்
தடுத்தலேதுவிண்டணிப்பரனருளலாலம்மா. (கஅ)

அங்குவந்துதன்னன்னைநோக்குறுமகனை
இங்குவந்திருவெனவிளித்தெடுக்கிலனென்னுப்
பொங்குமாதரம்பொலிதரத்தாவியேபூமன்
தங்குபீடிகைபிடித்திவர்ந்திடலுற்றுன்றநயன். (ககூ)

தன்னுடன்பிறந்தவனுளவண்ணந்தன்றந்தை
மன்னுமற்றதோரூரிருந்திடவரல்கண்ட
வன்னிமாமுலைச்சுருதியென்றிடுமவள்சீறி
என்னசெய்தனைசையிவணிழிகெனவிளைந்தாள். (உ௦)

மன்னனார்மடியிருக்குமென்மகவினைமான
உன்னிவந்தனையுனக்கிவனுயர்சிங்காதனந்தான்
என்னவாறுறுமென்னகட்டினிலெழாவுனக்கு
முன்னையூழ்வலியற்றன்றோவவள்வயின்முளைத்தாய். (௨௧)

இணையிலெம்பிரான்றிருவடியேத்திலாவிழிபால்
துணையிலாச்சுநீதிக்குநீதோன்றினையதனால்
அணையிலாதுலகாண்மகிபாலனுன்றன்னைப்
பணைசெய்பாணியாற்பற்றிலனெனப்பலபழித்தாள். (௨௨)

அறிவிலாதநீயரசன்றன்குமரனாயினுமென்
சிறுவனாதியோவிவனன்றோசிங்கவாதனத்துக்
குறுதியாயினனோடுதிநிற்கலையீதே
இறுதியென்றுரைத்துரப்பினளருளிலாவிளந்தாய். (௨௩)

மாற்றுத்தாயிசைவசையையுமன்னவமதிப்பும்
ஊற்றத்தோடுறுமுத்தமனுறுமிறுமாப்பும்
ஏற்றத்தோடிவர்ந்திழிந்ததன்பீழையுமெண்ணி
ஈற்றுத்தாயுளவிற்குறவிளநடையிட்டான். (௨௪)

தூற்றுசெந்நிறத்துப்பிதழ்துடித்திடப்பொருமி
ஊற்றெடுத்தெனவிருவிழியருவிநீரோடச்
சீற்றமாகுஞ்செந்தீயினின்வெதுப்புண்டுதியங்கி
ஆற்றலாதவனாகித்தாய்முன்னம்வீழ்ந்தழுதான். (௨௫)

சக்குச்சேப்புறச்சைசவங்கன்றுறத்தளர்ந்து
செக்கர்வாய்மலர்த்தேனிழிதரமிகத்துடித்து
விக்கிவிம்மியகண்பிசைந்தோவெனவரற்றித்
தக்கநற்குணத்தாய்தனைத்தழுவினான்றளர்ந்தான். (௨௬)

அழுதபாலனையகங்கனிந்தெடுத்துமெய்துடைத்து
இழுதுபோற்கரைந்திழிந்தகண்ணீரளாய்மெலிந்து
பழுதிலையனேநீயழேனீயழேல்பணித்தி
தொழுதநின்பிதாசெய்ததென்சொல்லுதிதுளங்கல். (௨௭)

யாவர்யாதுசெய்தனர்கொலோவென்செய்கேன்மொழிதி
தேவவென்றவன்புலம்பலைத்தவிர்த்தெவர்மீது
கோவமென்றதாய்கொடுங்கையிலிருந்திவைகூறும்
தாவமற்றதாய்தந்தைசெய்வினைசொலத்தகுமோ. (௨௮)

என்னையீன்றெடுத்தேந்திமுத்தளிக்குமென்னன்னாய்
உன்னையென்பிதாவுறையுள்கேட்டேகினனன்றோ
சொன்னவுன்மொழிப்படியங்ஙன்றுருவியேபுக்கு
அன்னையப்பனுமண்ணனுமிருந்துழியடுத்தேன். (௨௯)

உயர்ந்தபொன்மணிப்பீடிகையுச்சிமீதென்னைப்
பயந்ததந்தைவீற்றிருந்தனன்பார்த்தனன்களித்தேன்
வியந்தவென்முனோனவன்றொடைமீதுவீற்றிருந்தான்
நயந்தயானுமற்றொருதொடைமீதிவர்நசையால். (௯௦)

பத்திராசனப்படியின்மேன்மெலமெலப்படுத்துத்
தத்தித்தத்தியேதழுவிவீழ்ந்தெழுந்துமேற்றடவிப்
பெற்றதந்தையேயெனவிளித்தயர்ந்துபின்பெயர்ந்தேன்
பற்றிலாதெனைப்பார்த்திலன்பேணிலன்பயந்தோன். (௯௧)

கடந்திவர்ந்தவென்கைபிடித்திழுத்துவிட்டதிர்த்துத்
தொடர்ந்தையேதடாவென்றுசிற்றாயின்னசொற்றாள்
நடந்ததிவ்வணமென்றுரைத்தழுதநந்தனனை
வடந்தமார்பணைத்தழுதகண்ணீரளாய்வகுப்பாள். (௯௨)

௧௪ - வது. துருவன்பரிபவமடைந்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - ௧௪ - க்கு திருவிருத்தம் - ௪௩௯.

௧௫-வது. துருவன் வனம்புகுபடலம்.

வேறு.

கனமணிதிருமார்மறுவணிபரத்தைக்காலதத்துவமுள்தனையும்
தனகனவினமாதணிகலாதேத்தித்தனிச்சுகவீடுறுதவத்தீர்
மனவினமகன்றசுருதிமன்னவன்செய்வசைசகியாதநற்றுருவன்
வனமதிலேகவன்னைபால்விடைகொண்மதிதனைக்கேண்மின்மற்றுரைத்தும். (௧)

கிஞ்சுகக்கிளிவாய்க்கொடியிடைமடந்தைகிளர்திருஞானநன்மொழியான்
மஞ்சனைநோக்கியறிதிநங்குழந்தாய்மறுத்துரைதந்தநின்மறுதாய்
வஞ்சனையுடையளன்றவண்மாற்றமறைமொழியென்றுநீகோடி
நஞ்சினைப்பழித்தமலர்மகண்மகிழுநாரணன்விதியெனநகுவாய் (௨)

முற்பகலிழைத்தவிருவினைப்பயத்தான்முகுந்தனாராணையின்வலத்தால்
பிற்பகன்முளைக்குநலன்றுயரொன்றைப்பேசுநூற்கணமெலாமொருங்கே
கற்பனைக்கடங்காக்கண்ணனாராணைகடந்தொருகாலுமேகலங்கா
அற்பமுமிதனையறிந்தலோசுருதியறைந்தனண்முழங்கலென்னழகா. (௩)

பொன்செய்தகமலத்தெண்கணுள்ளவற்கும்புனிற்றிளம்பிறைமிலைந்தவற்கும்
மின்செய்ததேவர்முனிவர்கடமக்கும்விரித்தகண்ணாயிரத்தவற்கும்
மன்செய்தமனிதர்விலங்குபுள்ளெவைக்கும்வகுத்தவைமறிபடாவதனால்
முன்செய்தவினையேபின்செய்தவுடலின்மூளுமென்றறிதியென்முளையே. (௪)

ஒருவருமறிகலாதவீடெடுப்பிலோமெனுமருமறைபழுத்த
திருமறுமார்பார்தெய்வத்தையுள்கிச்செய்துளபெருந்தவச்செல்வம்
பெருமிதமடைந்தபிள்ளைநீயாயிற்பீழைசேரொன்வயிற்றுதிக்காய்
கருவிலேதிருவுண்டாயினற்கருதிக்கருப்பத்திலுதிப்பைபரங்காளாய். (௫)

என்வயினுதிநீயேழையானமையினேழுதீவாண்மகிபதியும்
பொன்மணித்தவிசும்பொலிந்தொளிர்குறங்குங்கிடைப்பரிதாயினபுலம்பல்
நின்வயிற்சுருதிநிகழ்த்தியதுண்மையாகுமென்றவளைச்சீறுது
நன்மதியுடனேநாரணற்போற்றுநவையெனத்தெளிந்திருநம்பி. (௬)

சுடர்மிகுசுருதிசுருக்கெனுங்காயத்திரிபரவாசுதேவடியைத்
திடமிகுவைரஞானபத்தியினாற்றினந்தொழாமானவர்தமக்குக்
கடம்பொழிகயந்தாங்கந்துகங்காலாள்வாரிதியுலகமாள்கவிகை
இடம்பொருளேவலெய்துமோவெய்தாவெனத்தெளியென்னிளங்குழந்தாய். (௭)

வருத்திடும்வரதனருள்பெறும்பெரியார்வாய்மைபொச்சாப்புமெய்யுணர்ச்சி
பகுத்திடுபுலமைதுறவுபண்புடைமைபயன்மொழிகருணைநல்லடக்கம்
மிகுத்திடுதருமந்தானமாசாரமெய்த்தவஞ்சமந்தமம்விராகம்
தொகுத்திடக்கொண்டுதீயவைவிண்டுதோன்றியதுண்டுநாடொலைப்பார். (௮)

ஆதலான்மகனீயாதிசெய்வினையேயடுத்திடுமென்றிவேறணுகா
நோதலைத்துறந்துநோய்செய்தபேணாநொந்திடாதடிசொலமுடியா
வேதவேதாந்தவிழுமியநந்தாவிளக்கொளிவிமலனைநினைந்து
பாதகம்பாறவருள்பரம்பொருளேயெனச்சொலிப்பகலெல்லாங்கழிப்பாய் (௯)

வல்லவூழ்வலியைக்கெடுக்கும்வல்லாற்றல்யாவுளமற்றொன்றுவரினும்
கல்லுமூழென்னாநூலெல்லாங்கழறக்கற்றனமெனுமவட்கினிது
நல்லவென்னன்னாயென்சிறுமொழியைநன்றுகேட்டருளுதியென்னாச்
சொல்லிடத்தொடர்ந்தான்வருடமைந்தாகுமுன்னரோபரன்வரச்சூழ்ந்தான். (௧௦)

அன்னைநீயருளிச்செய்நெறியறிந்தேனாகுமூழனைத்தையுந்தெளிந்தேன்
மன்னனார்தனதுமாலையுமுணர்ந்தேன்மாற்றுத்தாய்செல்வமுந்தெரிந்தேன்
என்னையுமுனையும்பொருள்செயாவாறுமெண்ணினேனிருவருக்கிடர்செய்
முன்னையூழ்படுத்தமுகுந்தனாருளைமுற்றிலனதனையுங்கண்டேன். (௧௧)

ஊழையுமுதுகிட்டோடவாற்றிடுநல்லுலப்பிலாவாண்மையாலன்றே
மாழையுஞ்சுருதிமாண்பையுமுடையான்வகுப்பதும்வருமுபேந்திரனீர்
ஏழையுமினிதுபுரப்பதுங்கழுமுளேந்திச்சம்மரிப்பதுமமரர்
காழையுங்கலையுமுடையராசுகத்திற்கவிழ்ந்துவான்சரிப்பதுமுணர்ந்தேன். (௧௨)

பேதைமைப்படுத்துமூழையுங்கெடுக்கும்பெருந்தவப்பேறெனப்பெருநூ
லோதுவதாகவுரைசெய்யுன்மொழியாலுணர்ந்தனன்றெரிந்தவென்னம்மே
சாதுவாயான்போய்த்தவந்தனையுலைவில்லாதுசெய்தமலனைக்கண்டு
போதுவாயென்னாவாசிசெய்தகலவிடையருள்கெனச்சொலிப்புகழ்ந்தான். (௧௩)

உத்தமன்றனக்கேயென்பிதாவுலகமுதவினுமாருகவுரிமை
நத்தியவுனையுமெனையும்வஞ்சித்துநடப்பினுமாருகநானே
பத்திசெய்நாடும்பதியுஞ்செங்கோலும்பருமணிப்பொற்சிம்மாதனமும்
அத்தனூர்செல்வமனைத்தையும்விரும்பேனுற்றுமாதவமலாலன்றெய். (௧௪)

சுருதியினகட்டிற்றேன்றிலாதுன்துதூய்மைசேர்திருவயிறீன்ற
பெருமையினுலேபிறர்க்கரிதானபேருயர்பதவியைப்பெறவல்
கருதிநீகலங்கலென்வலிகாண்டிகாவலன்முதலினர்வியப்ப
அருந்தவமாற்றற்கேகுவல்விடையீயன்னையென்னலுமவளறையும். (௧௫)

வேறு.

வலிகடந்தவாணிசொலுங்குழந்தாயந்தோவனம்போவலெனுமாற்றம்பொறுப்பேன்
புலிகடம்பைகரிநரிநாய்பன்றிபாம்புபுழுக்குளவிசிங்கமெரிகரடிபூதம் கொல்லோ]
எலிசரபங்கழுகலகைரக்கசாதியிவையெல்லாங்குடிமேயவிடநீபோக
நலிபடநானிவ்வுயிரோடிருப்பேனச்சோநம்பியெனவழுதணைத்தாணற்றுய்மன்னே.()

அம்மாநீபுகன்றதுட்டவுயிர்க்குளெல்லாமரவிந்தலோசநமுமைந்தேதிப்பூ
வும்மாவுமுடைப்பொன்னும்வலியுமெந்தையுடையபிராணுகிசராசரத்துட்பூத்த
எம்மானெங்கினுநிறைந்துநீக்கமில்லாதிருக்கவெனக்கென்பீழையேதிவாது
சும்மாவுன்வயிற்றிலுளவென்னைக்காத்தசுகுணனைநீமறந்தென்னேசொற்றுயென்றுன்.

வையகத்துண்மலிமரம்புல்பூண்டுவல்லிமற்றவைகடமக்கெவர்நீர்வார்த்துக்காத்தார்
பையகத்தினுட்குழவிதொகுதிக்கியாவர்பருவமறிந்துணவீந்துபரிபாலித்தார் [தார்
செய்யகத்திற்கிளையண்டக்குஞ்சுக்கியாரோசெழுமையுறவிரைபகுந்துதிதிசெய்வித்
கையகத்திற்சங்காழிக்கடவுளன்றிக்காப்பவரின்றெனக்கருதிக்கலக்கந்தீரே. (௧௮)

வல்லபெருங்கடவுடிருவருளுன்பெற்றுமாதவர்க்கும்வானவர்க்குமநுடர்யார்க்கும்
நல்லவென்றன்றந்தையற்குங்கிட்டற்கேலாநன்குயர்ந்தசித்திபதநான்பெற்றிங்ஙன்
ஒல்லைவந்துன்பதகமலம்பணிவேனம்மேயெனுமகனுக்குகப்புடனேயாசியோதி
இல்லையகன்றகன்றநகர்கடந்தேச்செல்லற்கேலாதவனம்புகுந்தானிளஞ்சேயம்மா. ()

வேறு.

பெரும்பலபீழைமாளப்பிறப்பிலிசரணையுள்கி
அருந்தவமியற்றிநின்றவருமறைக்கிழவர்காணீர்
துருவனைப்போலயாரேதுணிபுகொண்டின்னசெய்ய
வருமவரில்லையீதுமநுக்குலப்பிறப்பின்மாண்பால். (௨௦)

பிறப்பின்றன்குணம்போகாதுயாவர்க்குமென்றபேச்சு
மறப்பன்றீதிருப்பமுன்னம்வனம்வந்தமைந்தன்மெல்ல
உறக்கம்விட்டுணவுவிட்டேநடந்தறியாதேவாடிப்
பிறக்கம்விட்டகன்றவீரப்பெட்புடன்சென்றுன்மன்னே. (௨௧)

நடந்தறிகில்லாமிக்கநாகிளங்குழவியன்றே
தடந்தெரியாதேயேகுந்தைக்குமுட்கேங்குநோவும்
இடந்தெரிந்திருக்குஞ்சற்றேயெழுநிழனேடுமோடும்
படுங்கொடிகன்மோடுக்கும்பையுளற்றிவர்ந்துபாடும். (௨௨)

அந்நகர்க்கடுத்துக்காணுமுபவனஞ்சென்றானங்கு
முன்னமேழ்முநிகண்மிக்கமோதமேர்டரியவான
உன்னருந்தவத்தாராகியுழையதண்மீதுட்கார்ந்து
பன்னரும்யோகத்தானார்பாலனும்பரிந்துகண்டான். (௨௩)

களைமிகுந்தயர்வினோடுகைகுவித்தன்பினோடு
விளைவிழைவாரப்பூமேல்விழுந்துசேவித்துச்சற்றே
வளைவயிற்றோடேநின்றுமழலைவாய்க்கொஞ்சிக்கொஞ்சிக்
கிளையகன்முநிகண்முன்னின்றிவையிவைகிளக்குமன்றே. (௨௪)

உவமையின்முநிகாளெற்குத்தானபாதன்றான்றந்தை
அவமறுசுநீதியென்றாயடியன்பேர்துருவன்மிக்க
சுவமுறுமுங்கண்மாடென்சோகந்தீர்த்திடுவானுற்றேன்
பவமறுமுமைக்கண்ணுற்றேன்பையுளற்றினிமைபூத்தேன். (௨௫)

சாவதர்வியந்துமிக்கதயவினானோக்கியன்னோ
ஆவதோரைந்தாண்டேனுமருஞ்சிறுபிள்ளாய்நிற்குப்
போவதென்வருவதென்னேதந்தைதாய்தமரைப்போக்கும்
கோவமென்பணித்தியென்றார்குழவியுமினிதுகூறும். (௨௬)

மன்னவனிளையாண்மோகமாவினாற்றனைச்செய்வாறும்
அன்னையைப்புறத்திலிட்டானவமதிவாறும்பின்னர்
உன்னருந்துயரிலிட்டவ்வுத்தமனுலகையாள்
நின்னயஞ்செய்தவாறுநினைந்துதான்வந்தவாறும். (௨௭)

அஞ்சலியத்தனாகியருந்தவர்முன்னரோத
எஞ்சலில்கருணைபூத்தவெழுவராமுநிகணெஞ்சம்
சஞ்சலமடைந்துசற்றேதம்மிலுசாவிநிற்ப
மஞ்சனுமின்னவண்ணமறுத்தும்வினாவினானால். (௨௮)

பெற்றதாய்பீழைவீட்டிப்பேணிப்பின்றனதுளின்
அற்றமுமாற்றியாளுமருளுண்டேல்யாவராலும்
உற்றிடற்கொல்லாவும்பர்வாழ்வுபெற்றிருக்குமாற்றைப்
பற்றிடவருளல்வேண்டுமென்றடிபணிந்தான்பாலன். (௨௯)

பசுஞ்சிறுகுதலையஞ்சொற்பாகினைமகிழ்விற்கொண்ட
நிசகுணயோகிமார்கணிறையருட்கண்கணாட்டி
வசமுறவிருப்பக்கொண்டுமதிகளிமுகமன்செய்து
குசம்வெறுப்புற்றுவந்தகுழவினுக்கருளலானார். (௩0)

குரிசிறந்திடுகுமாரகுறையிலாரணங்கண்முற்றும்
உரைசெய்காரணனையுள்கியொண்டவமுனாற்றுவாயேல்
கரைசெய்நின்காமமுற்றுங்கடைப்பிடித்தொழுகவென்றான்
மரிசியென்றியம்புந்தூயமாதவர்திலகன்மாதோ. (௩௧)

முத்திநாயகனென்றேது முகுந்தனை யன்றிவேறோர்
கத்தனின்றென் றுழூத்தோர் கடவுளைக்கருதிப்பூசை
வைத்தியேலெவர்க்குங்கிட்டாவான்பதம்பெறலாமென்றான்
அத்திரிமுனியென்றோதுமவ்வநசூயைநாதன். (௩௨)

அலகறுமாவிக்குள்ளிலமர்ந்தவர்வினையுண்பித்துத்
திலகனுகரியாய்நிற்குந்திருமகடேவையெண்ணிப்
பலபகல்பலிசெய்வாயேற்பழிப்பறுபதமுண்டென்றான்
புலகனென்றேத்தாநின்றபுண்ணியமுனிவர்கோமான். (௩௩)

துருவனென்றுரைசெய்தோன்றன்றன்மறைவேள்விக்கெல்லாம்
பரமனென்றியம்பற்காயபங்கயற்பயந்ததேவாம்
தருமனையெண்ணிநிட்டைசாதிநன்றாகுமென்றான்
கிருதுமாமுனிவனென்னுங்கிளர்தவக்கிழவன்மன்னோ. (௩௪)

நலத்தகுதவத்தின்மேலாநான்முகனக்கன்வானத்
தலத்தவர்முனிவர்க்கெல்லாந்தந்தவச்சுதனைப்போற்றிச்
சொலத்தகுசுகவாநந்தந்துய்க்குதிதுணிதியென்றான்
புலத்தியமுனியென்றோதும்பூசுரப்புநிதன்மாதோ. (௩௫)

அசிட்டரோத்திடற்கேலாதவரிபரந்தாமற்போற்றும்
விசிட்டமெய்ஞ்ஞானியாம்யாம்விளம்பியவண்ணமுன்னில்
பசிட்டவேதனைநீங்கின்பம்பலபகலுண்டாமென்றான்
வசிட்டனும்வடமீனாட்குமகிழ்நனுமென்றமேலோன். (௩௬)

சத்தமாவிருடிமார்கடுநிவனைவிளித்துச்சாத்தி
உத்தமவுலகிட்டாக்கிப்போக்கிவீடுதவவல்லான்
அத்தியைக்காத்ததேவனறிகவென்றத்தந்தூக்கிச்
சத்தியஞ்செய்தார்பாலன்சலித்திடாவாறுமாதோ. (௩௭)

எங்குலமுதல்வரொல்லாம்வழிபடுமிறைவனென்றும்
உங்குலமநுக்கட்கெல்லாமுதவிடுபரமனேங்கித்
தங்குபல்லண்டமுண்டதற்பரன்றாழ்வொன்றில்லான்
அங்குமிங்கெங்கும்பூத்தவவன்பதமடைதியென்றார். (௩௮)

அவனுருப்பொன்சேர்நீலமத்தமோர்நான்கைந்தேதி
புவனமுண்டருளும்பண்டிப்பூமனைத்தந்தவுந்தி
கவனமார்சுருதிப்க்கிவையம்பூண்கநககோடி
தவனந்தீர்பத்துச்செந்தாமரைதிருமேனிச்சாமி. (௩௯)

போதியிவ்வாறுன்முன்னர்ப்போந்தருள்புரியுமெம்மான்
கோதிலாக்குழந்தாயிந்தக்கொடியடர்பொச்சைபோக்கி
சோதிசேர்மதுவின்பேராற்றுலங்கியகானிலேகி
ஆதியைநினைதிநிற்காமாரியனருளுமென்றார். (௪0)

பரிவுடன்சுநீதியீன்றபாலனூர்வலிமைநோக்கி
வரிசையாயெழுவரானமாணவர்தவஞ்செய்வாறும்
துரிசறப்பொறிகளூறித்துடிமனமடக்கும்வீறும்
பெரியர்செய்வித்தாரன்னூர்கேண்மையிற்பெரியதியாதே. (௪௧)

மதுவனஞ்செல்கவென்றூரிடம்விடைகொண்டமைந்தன்
நதிபதிபரமன்பாதநாட்டியநெஞ்சங்கொண்டு
விதிகுறும்பொறையைநாடிப்பயப்பயமேவிக்கண்டான்
புதுமணமதுப்பூவாசம்பொங்கெழிலுந்திமாடே (௪௨)

அரவிந்தங்குவளைசூதமுல்லையசோகமென்னுங்
கரமுந்தைங்கோலாற்சிட்டிக்கடவுளைப்படைத்தான்பாதம்
சிரமுந்துஞ்சவுநகாதிமுநிவரோசிறுவன்சீரார்
வரமுந்துடமுனையாற்றின்வரம்புளவனங்கண்டுற்றான். (௪௩)

௧௫ - வது. துருவன்வனம்புகுபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-௧௫, க்கு - திருவிருத்தம் - ௪௱௧.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௧௬-வது. துருவன் தவம்புரிபடலம்.

உருவருவில்லாவொற்றைவக்கரத்துடலமேய
திருமணவாளற்போற்றுந்தீவளர்முந்நூலாளீர்
துருவனேழ்முநிகண்மாற்றந்திறம்பல்செல்லாதுநின்று
தெருவந்தோன்புகுமில்காணுவகைதெருமராலுற்றானுல். (௧)

மான்குடாவடிசார்த்தூலம்சரபம்வாட்டுறுசிங்கேறு
ஊன்படாவுஞற்றவல்லவூங்குகாந்தாரத்துற்றுப்
பான்மடுத்துண்ணும்பாலன்மைபயுளாகாதவண்ணம்
மீன்படுசேணினின்றேவெளிநின்றான்வீணைத்தண்டோன். (௨)

சென்னிசித்துளைநாப்பண்சேர்த்தபுண்டரம்வெண்மண்ணால்
மன்னியமேனிமீதுவனமணிவனசக்கோவை
துன்னியயாழைக்கையாற்றெட்டரிகரியென்றோதி
என்னையாளுடையவையன்றொண்டன்முன்னெழுந்தானன்றே. (௩)

இசைபடுகோற்கையேந்தியேழிசைப்பண்டேனெம்மான்
நசைபடநாளுமூற்றுநாமகண்மைந்தன்மன்னன்
தசைபடுதுருவன்பாங்கார்சார்ந்துநீயாரையென்றான்
கசிபடுகரிமுன்மூலகாரணனேனென்றாற்போல். (௪)

எனவிளமுனியின்பாதமேத்தித்தன்வரலாறோதச்
சினவிறன்போன்றுநீயென்செய்தனைசிறுவவீன்றான்
உனையெவ்வாறித்தீக்காட்டிலேவினளச்சோபூச்சுண்
டெனையொவ்வாரிங்ஙனுதலெளிதன்றேயென்னீசெய்தாய். (௫)

எங்கடமறிவும்வேதமுடிவுங்கண்டறிதற்கேலா
அங்கமாரமலனேநின்னறிவினுக்கெளியனாவான்
இங்குவிட்டில்லம்புக்குன்றாய்முலைப்பாலைமாந்தி
மங்கையூருறங்கியாடியுடைகலன்பூண்டுவாழ்தி. (௬)

சங்கையிட்டஞ்சியோடத்தகுமுனைதந்திருங்கள்
துங்கனைமறைகள்காணாத்தூயனைத்தூச்செம்பூவான்
அங்கனையகிலமானவன்பனையறிஞர்க்குள்வாழ்
புங்கனையுந்தம்பாதபூசையாற்காண்பெனென்றான். (௭)

பச்சிளங்குழவிஞானபத்திவைராகங்கண்டு
மெச்சியவாசம்பூத்துவிருக்கக்கீழிருத்தியன்பால்
உச்சிதமுள்ளபிள்ளாயுகந்துளபொருள்வேண்டுங்கால்
நச்சிடுமதற்குச்செய்யும்வினையறினணுகொணாவே. (௮)

திருமகடேவன்பாதஞ்சேவிப்பான்புகுந்துநேடி
வருமவரநந்தங்கோடிவனசன்மாளாண்டுங்காணார்
பெரும்புலன்பொறிகண்மாற்றிப்பேரருள்புரிமெய்ஞ்ஞான
குருவருண்முறையிற்கொண்டார்க்கன்றியென்றிசைத்தான்மன்னே. (௯)

ஆதலானீயான்சொற்றதகம்படிந்தியற்றாயென்றே
ஓதலுநாயன்றேயென்றுவகைக்குப்பாயங்கொண்டு
போதுசெய்வனகள்செய்ததநயற்குப்புகல்வயாவும்
நீதஞ்செய்துபதேசித்தானீலவான்கரந்தானன்றே. (௧௦)

மதுவனநகரினோர்பான்மலிந்தநீர்யமுனையாற்றின்
புதுமணம்வீசும்பூக்காய்ப்பழநறவிழிசேறான்ற
சதிவிலங்கீட்டம்புட்சாலங்கண்மிக்குள்ளவெய்ய
கொதிகொடுங்காந்தாரக்கட்டவஞ்செய்வான்கோலினனே. (௧௧)

காளிந்தியாடியாசான்கணியநுட்டானங்கண்டு
வாளுந்துமீராறக்கரத்திருமநுவையெண்ணிக்
கோளுந்தும்பொறியைமாற்றிக்கொடியவாம்புலனைக்கொன்று
நாளுந்துங்கோசபாசகவிவித்துநாடிநேடி. (௧௨)

பசியையும்பாரான்றுஞ்சும்படுக்கையுமெண்ணான்போந்த
நிசிபகலுன்னான்சோகதாகமுநோயுந்தேரான்
அசைகலான்சிங்கப்போத்துக்கஞ்சலானரவம்யாளி
கசம்புலிசரபம்பேயின்கணமிராக்கதர்க்குமாதோ. (௧௩)

சிந்துரத்திலகந்தைஇயதிருமணவாளனாமை
மந்திரமலையுநாவான்மாலுருவிலகுநெஞ்சான்
அந்தரங்கீழ்மாடென்னாவறிகலாவாக்கையானான்
பைந்தளிரியைமென்பாதபங்கயங்கயங்கமன்றோ. (௧௪)

செஞ்சிறுசதங்கைகொஞ்சுஞ்சிவந்துளபாதமொன்றை
நஞ்சிடப்பூமேலிட்டானல்லமற்றோர்பாதத்தை
யஞ்சிடாதாகாயத்தினீட்டினானத்தந்தன்னைத்
தஞ்சமென்னையேயென்றுதலையின்மேற்கூப்பிநின்றான். (௧௫)

ஒருவிரன்மண்மேலூன்றியொருபதமிருகைவான்கண்
மருவிடநீட்டிநங்கள்வரதன்றண்மரைப்பூஞ்சேக்கை
இருந்தவிர்மதுவைமாந்தியிலகுறுமறிவனாகி
அருந்தவம்புரிந்தானைந்தாண்டறிதிர்கோளறிவின்மிக்கீர். (௧௬)

ஓங்கொருவீரன்மேனின்றேயுனாற்றுறுதவத்தனுள்ளப்
பூங்கெழிற்கோவிற்கண்ணேபூரணமூர்த்திபோந்தே
ஆங்கெழிலவர்க்குமேலாமாற்றலுஞ்சுகமுநல்கித்
தூங்கிவாழ்ந்திருந்தானண்டகோடிகடேக்குஞ்சோதி. (௧௭)

பீழையற்றுற்றும்பீடார்தவத்தினிற்பிறந்தசெந்தீ
ஊழையுற்றடர்ந்துமல்குமுயிரெலாந்துடித்துவீதல்
மாழையுற்றவிருமேனிவானவர்கண்டுமொழ்கிக்
கூழையுற்றவிருமேலாங்கோபதிக்கோதலானார். (௧௮)

துருவன்செய்தவத்தீவான்மண்சுற்றியேதுதைந்தசீவர்
கருகிடவெதுப்பலாலேயாற்றகில்லோநீர்காண்மின்
புருகூதவென்னவந்தவேலையேபுடைசூழாண்மை
மருவியமோகவிஞ்சைவலவனையேவல்செய்தான். (௧௯)

அந்தமில்யோகியாற்றுமாண்டவமடற்றவெண்ணி
முந்தியகூசுமாண்டராக்கதப்பேய்கண்மூடி
வந்தனமுடிவுகாணாவகையெலாஞ்செய்துசெய்து
சிந்தினவவைகளாண்மைசிறுவன்சற்றசைகிலானே. (௨௦)

காய்வலியமரர்கோமான்கற்பித்தகரியபேயும்
ஆய்வடிவெடுத்துமைந்தவடவியிலென்னேவந்தாய்
தீய்வனமிருக்கலாமோதின்னுமேசிங்கப்போத்துத்
தாய்வந்தேனுன்னைவிண்டேதரிக்கிலேன்காணாயென்றாள். (௨௧)

என்னிளங்குழந்தாயுன்பாலிட்டவுன்றந்தையென்னைக்
கன்னமேபுடைத்துன்பாலேகிடவிட்டான்கண்ணோக்காய்
அன்னமும்பாலுந்தேனுமப்பமுங்கண்டும்மேலாம்
கன்னலுங்கனியும்பூணுமாடையுங்கொணர்ந்தேன்காணாய். (௨௨)

இறக்கவிட்டனைகொலென்னையெனவழுதிருகணும்
கறக்குநீருடலம்போர்ப்பக்கழறுவள்பினுநின்றோன்பைத்
துறக்கவிட்டகக்கண்வந்தன்றுணைவரோடாடிப்பாடி
மறக்கவிட்டில்லாக்கல்விபயின்றவண்வதுவைகொண்டு. (௨௩)

மங்கையரின்பந்துய்த்துமகவுகண்மலியவீன்று
தங்குமாண்டெழுபத்தைந்தின்பின்னரத்தலத்தைமாற்றிச்
சங்குசக்கரத்தெம்மண்ணருண்மலர்த்தவத்தையாற்றி
மங்கலில்சுகம்பெற்றுய்தன்மரபினர்வழக்காமைந்த. (௨௪)

ஆட்டுப்பேயாங்குநோக்காயனலெரியகன்றவாய்ப்பேய்
காட்டுப்பேய்கரியபேயுங்கணங்களுன்றன்னைத்தின்னுத்
தீட்டுப்பேய்திரும்பிப்பாராய்திருமகனுனைநான்விட்டு
வீட்டுப்பேய்போன்றெவ்வாறுவிடைகொள்வல்விளம்பாயென்றாள். (௨௫)

எத்தனைவஞ்சக்கூற்றமிசைத்துமக்குமரனார்க்குச்
சத்துவத்தினைக்காண்டாமதம்மெனச்சாய்ந்துவீய்ந்த
சித்தினிக்கிளவியொன்றுஞ்சிறுவன்றன்செவியினுள்ளே
ஞ்தத்திலவன்றான்மிக்கசகலகேவலத்திலானால். (௨௬)

சகலமுமிறந்தசுத்தசத்துவகுணசமாதி
அகமெனலகன்றதானவகண்டவிக்கிரகமுள்ள
பகவனைக்கண்டன்றான்றன்பதமலர்த்தேனைமாந்திச்
சுகநிறைநிபிடாநந்தத்தூக்கத்திற்றூங்கினானால். (௨௭)

வாங்கரும்புலனைமாற்றிவண்பொறிக்கதவஞ்சாத்தி
வீங்குறுகரணக்கோடரத்தினைக்குமைத்துவீமன்
றூங்குறுகொண்டன்மேனித்தற்பரத்தினைத்தன்னுள்ளே
தீங்கறத்திகழக்கண்டுசின்மயாநந்தங்கொண்டான். (௨௮)

வஞ்சனைவேட்த்தாயின்மாற்றமொன்றேனும்வாளா
துஞ்சியதுணர்ந்ததேவர்தோன்றலுக்கெழுந்தசீற்றம்
விஞ்சியசெவ்வியன்றான்பயின்றிடுமோகவிஞ்சை
அஞ்சிடமுற்றுஞ்செய்தானவைகதிர்ப்பனியினாய. (௨௯)

வேறு.

இந்திரன்செய்தசாலமோபேய்த்தோராயினவிமையவர்செய்த
மந்திரமெல்லாமலடியின்மைந்தனாயினமறைமுனிவரர்காள்
அந்தரமண்விண்ணவிகளளந்தானடியவர்தமக்கியற்றுசு
சிந்திடுமிவ்வாறெனவியாதப்பேர்முனிவொற்கருளினர்தெளிமின். (௩௦)

௧௬-வது. துருவன்தவம்புரிபடலம்

முற்றிற்று.

ஆகபடலம் - ௧௬ - க்கு, திருவிருத்தம் - ௫௦௧.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௧௭-வது. துருவன் சித்திபெற்றபடலம்.

வேறு.

அன்புடையறிஞர்காளவ்வாயிரங்கண்ணன்சீறி
வன்புடைவயிரக்கோலாம்படைக்கலமுற்றும்வாரி
மின்புடைத்தவத்தன்மீதுவீசினன்வெளியைத்தாக்கும்
தென்புடைக்கூர்வாண்மானச்சென்றனசிறுவன்பாலே. (௧)

சூலம்வேல்கட்கமாதிக்கடவுளர்படைகள்சூழும்
ஆலம்போற்பாலன்சிந்தையசைந்திடவேண்டித்தூண்டத்
தூலமாமேருமாகித்துளக்கமற்றிருந்தசெவ்விப்
பாலனைக்கண்டவிண்ணோர்பயிலலென்னென்றுசோர்ந்தார். (௨)

அச்சமுற்றண்டமாய்க்கும்பிரளயமேகந்தம்மை
வச்சிரப்படையனேவவவைபயங்கரஞ்செய்வாறு
மெச்சிடியேறுகோடிமேருமாமலைகள்கோடி
நச்சுறுநாகங்கோடிநரிபலகோடிபெய்தால், (௩)

சிந்துரம்பலமேல்வீழ்ந்தசேண்கிரிபலமேல்வீழ்ந்த
குந்தங்கள்பலமேல்வீழ்ந்தகோட்டங்கள்பலமேல்வீழ்ந்த
அந்தரமானயாவுமணுவதுமசையகில்லான்
இந்திரனறிந்துநாணியேங்கியேயிறும்பூதுற்றான். (௪)

வேறு.

சான்றினைப்பழிச்சுஞ்சௌநகாதியரோதுருவன்செய்திடும்பெருந்தவத்தால்
ஊன்றிடுவிதிதாணுங்கொளிகாரிநமனிருதிப்பெயருறுமன்
ஆன்றநீர்மன்கால்பிங்கலனெழுவாயாகியகடவுளர்தமது
மான்றசீர்பதத்தைவிரும்பிடில்யாம்செய்வலியெனேயென்றிடருழந்தார். (௫)

தேவர்செய்யிடையூறியாவுநல்லவர்முன்றீந்தொழிபவத்தினைச்சிவண
மூவர்செய்மூர்த்தியடிமலர்மறவாதான்முயறவமதுமூத்தோர்
ஆவனையாராதித்தவர்செல்வமடுப்பமேன்மேலுமேயகன்ற
எவருமுணருற்றின்னும்வாளாநாமிருந்திடி லுலகிறுமென்று. (௬)

தவக்கனன்மண்டித்தழைத்துடல்கதுவத்தாமரையான்றருவுடையான்
சுவர்க்ககிகண்முநிகள்யாவருங்குழுமிச்சோதிமால்பதநினைந்திடலும்
எவற்றையுமுணர்ந்தேயாண்டிடுமுதற்றேவெழுந்துநீர்விரும்பலென்னெனலும்
பவத்தினைப்பாழாக்கிடுபரத்தினைமுக்கரணமும்பரவிடப்பணிப்பார். (௭)

அளவறுகோடியண்டமுண்டுமிழுமப்பனேதுருவனென்றிசைக்கும்
இளமகனொருவன்றந்தைசெய்யிடராலிவ்வுலகினிலிதுகாறும்
பளகிலாத்தவத்தைப்பயின்றிடக்கோலிப்பதவிகள்யாவையும்பறிப்பான்
களவிலாநிருவிகற்பத்தைக்கூடிக்கனல்படமதுவனத்துள்ளான். (௮)

மதியமொன்றெல்லாமிருபொழுதகன்றேமகிழ்வுடன்கனிகளைநுகர்ந்தான்
மதியமொன்றெல்லாமாறுநாட்கொருநாண்மரமுதிர்சருகுகடின்றான்
மதியமொன்றெல்லாமொன்பதுநாட்குப்பின்னரோர்வைகனீருண்டான்
மதியமொன்றெல்லாமீரறுநாட்குப்பின்னரோர்வைகல்கால்குடித்தான். (௯)

இன்னவாறுகத்திங்கணாலேகவிருந்தைந்தாந்திங்களேயடியா
மன்னுமக்குழவியொன்றமுண்ணுதுமலர்புரைமென்சிறுபாத
நன்னயவிரலொன்றிணைப்புவிநாட்டிநாகத்தைநோக்கிக்காறாக்கிப்
பன்னகப்படுக்கைப்பரனின்றுண்மலரின்மடக்கியமனத்தனுப்பரிந்து. (௧௦)

செய்தவனுயிர்ப்பையடக்கினனீயுஞ்சென்றனையவனுளப்போதுள்
கொய்திடுமனலுங்காசினிவானங்கொழுந்துவிட்டவித்ததுகுழுமி
எய்திடலாச்சுதெங்கடம்வலியும்பதவியுமெங்ஙனமுறுமோர்
ஐயகோவென்றார்க்கஞ்சலீனைத்தன்னரவிந்தமலர்திறந்தருளும். (௧௧)

விதிசிவசுரரோயும்பதம்விரும்பிவெந்தவம்புரிந்திலனீவீர்
சதிசெயவவனைச்சினந்துயிர்வதைக்குந்தரமெலாமியற்றினீர்வாள்
துதிசெயுநந்தாட்டொடர்மனவலியாற்றொலைத்தனனவன்றவத்தீயைப்
பதிசெயவவனெண்ணியசெயவெழுதும்பையுளற்றும்பதம்படர்மின். (௧௨)

பவசுரவிதிகாணுந்திருப்பரிப்பான்பரிந்திலன்பின்னர்யாதென்னில்
எவருமுன்னெய்தாவின்பதவேட்கையெய்தினனஃதுயானுணர்வல்
அவனுவகைக்காம்வண்ணம்வரமருளிச்செய்குவலவன்றவக்கனன்மேல்
புவனத்தைப்பொடிக்காதிருப்பதாநினைத்தாம்போமினும்பதியெனமறைந்தான். (௧௩)

பின்னரொம்பெருமான்சில்பகல்கடந்தபிறகொருநாட்சுரர்தமக்கு
மன்னவன்வேடம்வருவித்துக்கொண்டுமாகதர்சசிவெள்ளைவரைமீ
துன்னிடத்தோன்றியருந்துருவன்றன்றுகளறுவைரஞானத்தை
நன்னயத்தோடிவ்வுலகறிந்துய்வான்காட்டிடநாகமேனின்றான். (௧௪)

இந்திரனுருவாயிலகுமெம்பெருமானருந்தவத்துருவநின்றவத்தை
மந்திரமதனைத்தணந்தெனைப்பணிசின்வரந்தரவந்தனமென்றான்
சுந்தரன்விளித்துன்பதவியும்பணிவும்விரும்பிலன்போமெனச்சுளித்தே
அந்தரம்விழித்தகண்ணிணைக்கூப்பியருந்தவமாற்றியேயமர்ந்தான். (௧௫)

மற்றுமோர்வைகன்மணிநிறக்கடவுண்மாகதர்பூதவேதாள்ம்
சுற்றிடக்கௌரிதுலங்கிடச்சுதர்கடுலங்குறச்சோதிச்செவ்வானம்
பற்றியவடிவும்பாலநேத்திரமும்படர்சடைமான்மழுக்கழுவும்
உற்றவனாகித்துருவநிற்கென்வேண்டும்முறையென்றமுன்னின்றான். (௧௬)

கண்ணுற்றகாளைநோக்கிநங்குரவர்கழறியபரம்பொருளுருவம்
தண்ணுற்றவாகவெளிப்படுமென்றதோற்றமின்றேயெனத்தாழா
தெண்ணுற்றநயநமிறுகமூடிக்கொண்டீராறுவரியுளமனுவைப்
பண்ணுற்றுவாளாவிருந்தனனவன்றன்வீரமென்னுரைத்தும்பண்டவத்திர். (௧௭)

ஆனபின்னொருவாசரமதிலென்னையாளுடையப்பனான்முகனாய்
ஞானநல்வாணியோடனமிவர்ந்துநாகர்கண்முனிவர்கண்மருவ
வானநின்றழைத்துத்துருவனின்வாஞ்சைவழங்குதிவழிபடுமூன்றே
ஊனமிலாமலுன்றவம்வியந்தேயுற்றனம்வினவுதியென்றான். (௧௮)

சேணினைநோக்கித்திசைமுகற்கண்டுசிட்டிசெய்பவனெனத்தெளிந்து
வாணிநாயகனைப்பரமெனவேழுமாதவர்தாய்மகதிப்பேர்
பாணிசெய்வீணைபாடுநங்குருவும்பன்னிரண்டெழுத்துமந்திரமும்
பேணிலையெனதுபெட்புநின்பாலின்றெழுகெனத்தவநிலைபிறழ்ந்தான். (௧௯)

சருவசான்றினைச்சந்ததந்தொழுந்தவத்தீர்தமநிலைஞானவானீர்மை
ஒருபெருமிடையூறெய்தியஞான்றுமோவறுநலனுறுஞான்றும்
மருவியவைரமாறிலாவாழ்க்கையித்தகைமைத்தெனயாரும்
துருவனைக்கண்டுதெளிவுறப்படுத்திக்கற்பினைத்தெளிவுசெய்தனனால். (௨0)

முருக்கினைமுருக்குமுத்தம்வைமலர்வாய்த்திருவிளையாடுதோண்மூர்த்தி
கருக்கியவசித்தார்முத்தர்கணித்தர்ககனர்வான்சித்தர்கணெருங்கப்
பெருக்கியபுவனிதனிலிதுகாறும்பேண்டவப்பிள்ளையொன்றேனும்
இருக்கக்கண்டில்லோமெனவிறும்பூதுற்றெழுந்திடத்திருவுளம்வரித்தான். (௨௧)

ஆரணப்பாகையாங்கராட்டின்பிடரியிலிவர்ந்தனனனந்தன்
சீரணச்சிறந்தசயவிசயாதிதேவர்கடிருப்பல்லாண்டிசைத்தார்
காரணனிவன்றான்பணிமினோவென்னாத்திருச்சின்னம்பன்முறைகலிப்ப
வாரணக்கெதிரோவந்தவாபோலவனசன்வாழ்த்தெடுப்பவானெழுந்தான். (௨௨)

இன்னிசைக்கிழவர்யாழ்மதுவூற்றவிலகுமைந்தருமலர்பொழிய
மன்னுமைங்கருவிவாச்சியந்துவைப்பமேனகையரம்பையாதியராம்
பன்னியர்நடிப்பப்பண்ணவர்துதிப்பப்பகர்சிறுவிதிகண்மாமுனிவர்
முன்னுமச்சுருதியோதிடமூவரொச்சரிக்கைசொலிமுழக்க. (௨௩)

ஓங்கொளிநூற்றியிருளினைத்தின்னுமொன்பதுகோணவமணியால்
வீங்கொளிச்செம்பொன்மோலியுமேகவின்னிகர்வலயமுஞ்செவியில்
பாங்குளமகரகுண்டலத்தசைவும்பாற்கடலுதவுபல்லிழையும்
வாங்கொளிகடககங்கணநூபுராதியங்குளியணிவனமும். (௨௪)

திருமணிமறுவாரகலமுநான்குதிருக்கைத்தாமரையிலைம்படையும்
மருவணிதுளபமாலையுமுலகுண்வயிறுமவ்வனசன்வாழ்வீடும்
உருவணிகாயாம்பூத்திருமேனியொளிர்பொன்னாடையுமுருவசியைத்
தருதிருத்தொடையுமுயிர்ப்பவம்போக்குந்தாமரைமலர்த்திருத்தாளும். (௨௫)

ஆரணக்கிளவிசிறுநகைபூத்தவதரமுமருளலைவீசும்
சீரணச்சிறந்தசெங்கமலக்கட்டேசுஞ்சேரகிலங்கட்கெல்லாம்
காரணங்காட்டும்வச்சமுஞ்சயந்திகாந்தியும்வரதமுங்காண
நாரணமுகுந்தகேசவதாமோதரநரகரியெனவவிர்ந்தான். (௨௬)

துறைமதுவனத்திற்றப்புடன்றவஞ்செய்துருவனென்றிடுசிறுகுழந்தாய்
சிறைபசிதாகந்துயில்பயந்துறந்தாய்திருமனையனைபிதாமறந்தாய்
வறைபொருளாகமற்றவைவிடுத்தாய்வலிபுலப்பொறியையும்வதைத்தாய்
புறைமனமடக்கிநம்பதம்புகுந்தாய்களித்தயாநின்னிடம்போந்தாம். (௨௭)

கண்மலர்ந்தகண்டங்காணுதியெனச்செங்கமலைவாழ்ந்தருள்பிரான்விளிப்ப
விண்மலர்ந்தவிரும்விண்ணவர்குழுமுன்கோடியாதவர்நிகர்வீணைப்
பண்மலர்ந்தவிரும்பரமனைக்கண்டபாலகனதிவியப்படைந்து
தண்மலர்ந்தவிருமாரியர்புகன்றதற்பரனிவனெனவெழுந்தான். (௨௮)

ஆரியரருள்செய்முகினிறவடிவுமைம்படைக்குழுவுந்தாமரைத்தாய்
சீரியநிறமுந்துளபமுமறுவுஞ்சயந்தியுங்கருடனுஞ்சிறந்த
மூரியகுறியும்முத்தநித்தியரும்விளங்கலான்முகுந்தனேயென்னாப்
பாரினில்விழுந்துபணிந்தெழுந்தழுதான்பகரறுஞ்சுகக்கடல்படிந்தான். (௨௯)

படிந்துடனெழுந்தான்பதறினான்பரமனீயொருசிறுவனானிருக்கும்
இடந்தனைநேடியெழுந்தனையச்சோவென்செய்கேன்சுருதிகளெல்லாம்
கடந்தனைநின்னைத்துதிபுரிகல்விகற்றிலேன்மூடன்யான்றழைத்த
வடந்தனையிடங்கொண்டறிதுயின்மருவும்வரதனேசரதநாயகனே. (௩௦)

துருவன்றன்வதனந்தனிலெம்மான்சங்காணிவலுந்துயின்றெழுந்தவன்போல்
சருவமாமறையுங்கலைக்குழாமனைத்துந்தடக்கைவாழ்மணியெனக்காண
அருவமாயுருவாயாண்பெணாயுள்ளவனைத்துமாயல்லவாய்நிறைந்த
ஒருவனைச்சுருதியநந்தனும்வியப்பவோத்தெலாமார்த்தியாலுரைத்தான். (௩௧)

வேறு.

ஆதிகாரணபூதனானவனாதிமுத்தனாஞ்சித்தனீ
சோதிமூன்றுமுதித்தொடுங்குசுவேதநீலவராகனீ
சாதிநான்குமெழுந்தமேனிசயம்புசாந்தசமாதிநீ
நீதிவேதமுளைத்தடங்கிடுநின்சரண்சரணென்றனன். (௩௨)

தூலரூக்குமகாரணங்கடலெங்கிநின்றவிராட்டுநீ
தாலகோடிகணிலையதாகசமைத்துநோக்குசுராட்டுநீ
காலகாலனெனாவழித்திடுகாளமேகசம்ராட்டுநீ
நீலரூபநிராமயப்பரநின்சரண்சரணென்றனன். (௩௩)

மூலமாயைமுளைக்குமூலநீமுத்தர்நித்தர்தமூலநீ
நீலவான்முதல்தத்துவங்கள்விளைந்தடங்குநிலைப்புநீ
பாலனாகிசராசரங்களையுண்டுறங்கிடுபாலனீ
ஆலம்வித்திலுறத்தன்பாலிடுமப்பனேசரணென்றனன். (௩௪)

சத்தரூபகந்தாதியைம்புலமாகியூட்டிடுதாயுநீ
வித்தைவந்தவிரிஞ்சியாகியிவ்விபுலைமுற்றும்விதிப்பைநீ
கத்தனாகுமுக்கண்ணனாக்கடன்ஞாலமுற்றுங்கழிப்பைநீ
நித்தனாகிலீலாவிபூதியைநீட்டுநின்சரணென்றனன். (௩௫)

யோகிசித்தியரூபியாகியும்யோகிதேகமுமுணர்கிலாத்
தேகியாகியெலாந்தரித்துமத்தேகம்யாவுமேதெரிகிலாப்
பாகியாகியுள்ளாகியெங்கும்பரந்தநின்னிலைபார்த்திலா
வேகநாதவிநோதபூதகணநாதநின்சரணென்றனன். (௩௬)

யாகரூபநீயாகபாகநீயாகபாத்திரவத்துநீ
யாகவேதிகைகுண்டதண்டநீயாகமாற்றுவோர்யாருநீ
யாகசோதிநீயாகபிண்டநீயாகநற்பசுக்காப்புநீ
யாகவேதவேதாந்தம்யாவுநீயான்சரண்சரணென்றனன். (௩௭)

ஆயிரம்முடியாயிரம்விழியாயிரஞ்செவியாயிரம்
ஆயிரம்புயமாயிரம்வயிறாயிரங்கரமாயிரம்
ஆயிரம்முகமாயிரங்களமாயிரம்பதமாயிரம்
ஆயிரம்பெயரானவையநிற்காயிரஞ்சரணென்றனன். (௩௮)

சரணமென்றுமுன்பரவிநின்றிடுதுருவன்றன்னையென்றன்பிரான்
கருணைகொண்டுவிளித்துநின்கருத்தென்னைவேண்டும்விளம்பெனாத்
தருதுமென்றலுந்தந்தைதாயினல்வந்தசிந்தையைச்சாற்றிமுன்
ஒருவரும்பெறலரியவுன்னதபதவியீந்தருளென்றனன். (௩௯)

வேறு.

மூன்றுமுலகுக்கும்மேலாய்முன்பின்யாரும்பெறலரிதாய்
மூன்றுஞ்சுடர்க்குமீதுளதாய்முறைசெய்புதசுக்கிரகுருவோ
டான்றசநிக்குமுடுக்களுக்குமவிரோழ்முநிகண்மேதினிக்கும்
ஆன்றுஞ்சித்தர்குளிகைகட்குமடுக்கற்கடுக்காவப்பாலாய். (௪0)

அகிலபுவனவாதாரமானவலிமையானதுமாய்
நிகழுநான்காம்யுகமதினுநிகழ்த்தும்மநுவந்தரமதினும்
புகலுமரணமுறுசுரர்போற்பொன்றாதயன்கற்பத்தளவும்
சகலபோகபோக்கியங்கடரும்மப்பதவிதந்தனம்யாம். (௪௧)

துருவபதவிதனின்ஞானத்தோகையாநின்றாயுடனே
மருவியுடுவின்வடிவாகிமகிழ்ச்சியோடுமௌனமுவந்து
பொருவில்சுகவாநந்தசிந்துபடிந்துவாழ்திபுவனமுடித்
திருவோடென்றேயருள்புரிந்தத்தேவன்பினுமோர்வாக்கருளும். (௪௨)

மூவாமுதலைமுப்போதுமுன்னிமுழக்குமூத்தமறைத்
தேவாதிபனைப்பூசைபுரிமுந்நூலாளிர்சிறுமுனிக்குக்
கோவாதிரனுங்கொண்டனிறக்கடவுண்மலராண்மகிழ்பூப்ப
ஓவாச்சுகந்தந்தவற்குரைத்தவாக்கொன்றறைதுமுளந்தெளிவீர். (௪௩)

நஞ்சுகழியவருமுரகன்சுடிகைநாடாளுன்றந்தை
வஞ்சங்கழியவுனைப்பயந்தாண்மனப்புண்ணுறமாற்றாந்தாய்
நெஞ்சங்கழியக்கவ்வைபடநீதிபடுத்தும்படியாகப்
பஞ்சங்கழியமுற்பிறப்பினீசெய்கரும்பலன்கேளாய். (௪௪)

மழலைகொழிக்குமொழிச்சிறுவனீமுற்பிறப்பில்மறைவல்லார்
தொழலைக்குலத்திற்பிறந்தெனதுதூயகமலமலர்புரையும்
கழலைப்பயந்தகுரவர்களைக்கனிவிறேடுபலியியற்றி
நிழலைக்கொழிக்குங்கௌமாரபருவநினக்குநேர்ந்திடுநாள். (சரு)

அழகுந்திருவுமரசுமுளவோர்மன்குமரனினக்கினிமை
பழகுங்கேண்மையுற்றதனுனீயுமவன்போற்பலநாளும்
அழகுந்திருவுமரசுநினைந்தாராதித்தாயதனுனே
அழகுந்திருவுமரசுமுனக்காகவருணுமகநினைந்தாம். (சசு)

மனமொத்தானவுனதுநசைமகிழவிரும்பிமநுக்குலத்துக்
கனவுத்தானபாதனுக்குக்கவின்குமாரனெனச்செய்தாம்
இனமொத்தானவீன்றுளால்யாவர்க்கேனுமியற்றரிய
வனமொத்தானதவமதனைப்புரிந்தாயாமும்வரமளித்தாம். (சஎ)

பொன்னங்குடுமிச்சைலமிசைப்பொலிவாயேனுமிம்பர்தனில்
மின்னுஞ்சுடர்வேலுனதுபிதாவாளும்வாரிமேதினியை
மன்னவிருபத்தாறுயிரம்மாண்டாண்டுமகிழ்ந்திருந்து
பின்னருளுந்துருவபதம்பெற்றுப்பிறவாநமதுமுத்தி. (சஅ)

வருதியெனநான்மறைச்சிலம்புபம்புமலர்த்தாண்மாதேவன்
சருவாதிகன்சான்றுனபிரான்சாரும்ப்சுக்கள்வினையறிந்து
தருந்தற்பரனுமுநிவர்களேதந்தாங்கேண்மைப்படியாது
வருமோவதுவேவினைப்பயனுமென்றதறிந்தார்மறைக்கொடியீர். (சகூ)

பின்னுமருளுமெம்பெருமான்பிள்ளாயுனதுபீடுறுசீர்
மன்னுஞ்சரிதைதனையெந்தமனிசன்காலைமாலைமுற்றும்
கன்னங்கருத்துங்களிப்பவுரைகிளக்குமோவக்கிரிசறுவான்
உன்னுந்திருவுற்றழியாநம்முழியுற்றகண்டசுகமுறுவான். (ருo)

எம்மான்புகன்றுவானமின்னலென்னமறைந்தானிளமுநிவன்
அம்மாவெங்஖னகன்றாய்கொலச்சோவென்னுவலமந்தான்
நம்பாலெளியனுனேநாராயணனென்றகங்கசிந்து
விம்மாவழுதகண்ணீரான்மேனிகுளித்துமெலிவகன்றான். (ருக)

நான்குதிருத்தோட்படையழகுநகுதாமரைக்கண்முகத்தழகும்
வான்மண்ணுண்டவயிற்றழகுமணித்தாய்மாலைமறுவழகும்
மீன்கொண்டவிரும்பொன்னுடைமின்னுமழகுங்குண்டலங்கள்
கான்செய்கமலபதத்தழகுங்கருத்திலடைத்துக்கலிதீர்ந்தான். (ருஉ)

காணுப்பெருமான்றனைக்கண்டுகெருதற்கரியபதங்கொண்டு
பூணுப்புகழைப்பூண்டதனுற்புகலாமகிழ்ச்சிபூத்தமகன்
கோணுஞானத்தன்றுயைக்கூடிக்களிப்பானகொழுதல்
பேணுத்தன்னையீன்றபிதாக்கேட்டாநந்தப்பெருக்காழ்ந்தான். (ருங)

கஎ-வது. துருவன் சித்திபெற்றபடலம் முற்றிற்று.

ஆகபடலம், கஎ - க்கு திருவிருத்தம் - ருசூஉ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௧௮-வது. துருவன் அரசுபெற்றபடலம்.

மான்றாவனத்திலெஞ்ஞான்றுமான்மாமநுவைமறந்தறியா
ஆன்றோராயவந்தணிரவ்வமலனருண்மிக்கடைவுற்றான்
ஈன்றோர்பதங்கண்டேத்தவெண்ணியேகுமதையுத்தானபதன்
றான்கேட்டடங்காமகிழ்வெய்திப்புரிதல்கேண்மின்சாற்றுதுமால். (௧)

பேராண்மையினானின்னிளஞ்சேய்பெருந்தேவருக்கும்பெறமுடியாக்
காராண்மையினாற்பெருங்கடவுடந்தவரத்தைக்கண்டுகொண்டுன்
ஊராண்மையினால்வரக்கண்டேமரசேயென்றார்க்குட்பொங்கிச்
சீராண்மையினாலவர்க்குமகிழ்சிறப்பப்பரிசுமிகச்செய்தான். (௨)

பைம்பொற்புளகமிகப்பூப்பப்பருமக்களியானையின்மீது
செம்பொற்கருவிமிகமுழக்கித்திருமாநகரைச்சிறப்பாற்றத்
தம்பொற்கோலாலாணையிட்டுத்தானுஞ்சுதனுந்தேவியரும்
அம்பொற்கோலங்கொண்டுசென்றானருளார்க்கியார்கொலன்புசெய்யார். (௩)

கரும்புங்கதலிமாந்தழையுங்கான்பூமுடிந்ததொடையல்களும்
பெரும்வெண்ணித்திலத்தணியும்பீடார்வாசத்தண்ணீரும்
தெருவெங்கணுமெண்மங்கலங்கடிகழவணிசெய்தகமகிழக்
குரிசின்மகனைநோக்கிநின்றார்கொண்மாணிக்கமினிலையே. (௪)

வெண்சங்கலறவாச்சியங்கண்விண்மண்ணதிரச்சின்னமிடப்
பண்ணங்கரவஞ்செயமாதர்பரதம்புரியப்பத்தினிகள்
தெண்ணஞ்சிவிகையூர்ந்துவரத்தெளிவெண்கவரிகவிகைவரக்
கண்ணுக்கினியமகனெதிர்போய்க்கண்டான்களிப்பின்கரைகாணான். (௫)

செம்பொனெடுந்தேர்மீதினெடுந்தொகைமாக்கடன்மேற்றானைவெள்ளம்
அம்பொன்முடிசேர்தன்றாதையடிப்பவறிந்தவருங்குமரன்
பம்புற்றோங்கும்பாசமதாற்பாராண்மன்றாண்முடிகிடப்ப
விம்புற்றோங்கும்வேட்கையுடன்பணியவெடுத்துவிரிபுயத்தில். (௬)

அணைத்தான்புல்லிமோந்துயிர்ப்பிட்டழுதான்பழுதற்றிடுதநய
னிணைத்தாவனத்திலுனைப்போக்கித்தீமைபொறுத்திதிருமாறன்
இணைத்தாளிணையேத்திணையில்லாவிரும்பேறெய்தியிசையடைந்தாய்
துணைத்தாவரியவுனைப்பயந்தவெனக்கென்கோதுசொலற்பாற்றே. (௭)

கற்றாவுறழவருந்தாயைக்காணுமகனுங்கரைந்தேங்கிப்
பெற்றாண்மடியுங்குளிர்தூங்கப்பிரிவாற்றாதபேழைகளி
யுற்றேயவடாண்மலர்பணிந்தானுடனேயெழுந்தானன்புபடச்
சிற்றாயடிப்பூச்சென்னியிட்டானவளாசியினாற்சிறப்புற்றான். (௮)

ஊங்குங்களியாலுத்தமனைத்தழீஇக்களிப்புற்றுடனெழுந்து
தாங்குந்தமர்கண்மந்திரிகண்மறையோர்புலவர்தளநாதர்
ஓங்குங்குடிகண்முதலினர்க்குமுகமனுதவியுயர்மணிப்பொன்
வீங்குங்கதிர்செய்கொடிஞ்சியந்தேரிவர்ந்தான்வந்தான்வியனகர்க்கே. (௯)

அழியாவுருவுந்திருவுமிகுமாற்றலுறுமிகுதியுற்ற
ஒழியாநலனார்மைந்தனுடனுத்தானப்பேருளவேந்தன்
பழியாதுமிலாச்சுகமுண்ணப்படுவித்தாண்டுபலகழித்து
இழியாப்பேரின்பங்கருதியியலாவமைச்சருடன்சூழ்ந்து. (௧௦)

துறக்கவினிமைதுய்ப்பான்யான்றுணிந்தேனுலகத்துயிர்சடமை
அறக்கோன்மாட்சியாற்புரத்திமநுநூன்முறையினகலாது
சிறக்கச்சீர்மையெனப்புகன்றுசிம்மாசனமிட்டணிமணிப்பொன்
நிறக்குமகுடமுடிசூட்டிநிறைகான்புக்கானிருபனரோ. (௧௧)

நிருபனகன்றபின்றருவனிமைவெண்கவிகைநிழறனிலே
மருவவேழுமானிலமுமகிழவறக்கோனடத்திவரு
பருவமுருவங்குணஞ்செய்கைபகடுவாய்ந்தமுதலையனுந்
திருவைமணஞ்செய்தநங்கனின்பந்துய்த்தேயிருந்தான்றகளறவே. (௧௨)

வேறு.

கரும்புயர்ந்தவிருஞ்செந்நெற்கழனிசூழ்கவின்செய்நாட்டைச்
சுரும்புயர்ந்தவிருஞ்செந்தாமரைமலர்ச்செங்கோலோச்சி
இரும்புயர்ந்தவிரும்விற்கோலிறைவர்பாற்றிறைகொண்டன்பு
அரும்புயர்ந்தவிருங்கொங்கைமாதராரின்பங்கார்ந்து. (௧௩)

காமர்வெண்ணிலவுதூற்றுங்கதிர்வளையாழியெம்மான்
தாமனமிட்டவாபோற்றுகளறவுலகந்தன்னை
ஏமறவிருபத்தாறாயிரம்வருடங்கோலோச்சி
வாமமார்சுதர்கண்மூவர்தமைப்பயந்திருந்தான்மன்னன். (௧௪)

நயனளிவேள்வியாவையவையெலாநன்கெம்மண்ணல்
பயனளிமாறுசெய்துபயந்திருகுமரனுக்கு
புயனளிபடப்பைசூழ்ந்துபொங்குநீர்ப்பழனநாட்டை
வியனளிமுறைமையாற்றவெயின்மணிமௌலிசூட்டி. (௧௫)

அல்லவைதேயவாக்கியாழிசூழுலகமுற்று
நல்லவைநாட்டியெம்மானளிர்பதநாடியிம்பர்
சொல்லவைமுற்றும்விட்டுத்துறந்தவனாகிக்கான்போய்
வல்லவைதவத்தானென்னுந்துருவன்மாதவமுற்றானல். (௧௬)

மனத்ததுமாசுபோக்கிமலருளவாசப்பூமேல்
நினைத்தெலாமிட்டேட்டாட்டுநிமலனைவழிபட்டேத்திப்
புனைத்துழாய்மௌலிபாதப்பூமலிநிழலில்வாழ்ந்தான்
அனைத்துமீந்திடற்குவல்லவாறிரண்டெழுத்தையெண்ணி. (௧௭)

விரும்பியவளிக்கவல்லவிசாலமாவனத்தின்கண்ணே
சுருங்கியபுலன்களோடேயருந்தவமாற்றல்சூழா
இரங்கருளியகூராழியிறையவனேவலாலே
பரம்பியபாறுபோலப்பறந்துவந்ததுவிமானம். (௧௮)

அவிரொளிசுநந்தர்நந்தரொனுமிருவமரர்தோன்றிக்
கவிரொளிதவத்தவான்றேய்கடவுளர்தேவனாணை
இவருதியெனலும்போற்றியிவர்ந்தனனெழில்விமானம்
தவர்பணிதுருவனென்னுஞ்சத்துவகுணத்துமன்னன். (௧௯)

ஆய்மணிப்பொன்விமானமகண்டமீதேகக்கண்டேன்
தாய்வரல்காணேனென்னவவருமீதறிதியென்றார்
தூய்மணிவிமானமீதுசுநீதியுந்துலங்கக்கண்டான்
பாயொளியிருவிமானம்பருதிகண்மறைக்கப்போன. (௨௦)

அந்தரபேரிமண்விண்ணதிர்ந்திடமுழக்கமிட்ட
இந்திரன்விண்ணோர்தண்பூவிரைத்துயாழ்பாடினார்கள்
கந்தருவரும்வாள்கண்ணாங்கணிகையராடினார்கள்
சுந்தரதுருவன்றேவர்பணிகொடுதுலங்கிச்சென்றான். (௨௧)

முருகுகொப்பளித்துவாசமூசுமந்தாரமூழ்கி
அருகுவந்தாராதிக்குமமரர்களவனிதாண்டிப்
பருதிவான்மதிசேய்புந்திபங்குபொன்வெள்ளியாதி
யொருவருங்காணற்கொல்லாதுயர்ந்தவான்முகட்டில்மன்னே. (௨௨)

சிம்சுமாரக்கூவக்கட்டேவதேவன்செய்சீரால்
அம்சற்குமரியவன்புணகிலவாதாரமான
சம்சதவுலகந்தன்னிற்சவியொளிமறுமன்னன்றன்
வம்சனுந்துருவன்றாயோடனுதினம்வாழலானான். (௨௩)

வாங்குமாங்காரமாய்த்தேமறையடிமுடியிலோதும்
பாங்குளவோங்காரப்பேர்ப்பரஞ்சுடரருளினாலே
பூங்கமலப்புத்தேணாட்பொன்றுநாள்காறும்வாழ்ந்து
நீங்கலாநிபிடாநந்தவீடுறுமாட்சிசேர்வான். (௨௪)

அலகறுபேறீயீராறக்கரத்தாலாநல்ல
திலகமந்திரத்தைச்செப்புந்துருவன்சீர்தெரிமினென்று
வலமுறுமாழிக்காட்டுமெறையவர்க்கருளிப்பின்னர்
நலமுறுகவேரன்சீர்த்திநான்முகனவிறல்சொல்வாம். (௨௫)

௧௮ - வது. துருவன் அரசுபெற்றபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ௧௮ - க்கு, திருவிருத்தம் - ௫௮௭.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௧௯-வது. கவேரமகாராசனுதித்தபடலம்.

அழிவின்றறைபோகாவொருபெருமானடியமரும்
இழிவின்றெழுபுலமுற்றவெண்ணிசைபெற்றுளவிளையோய்
ஒழிவின்றருளிர்வளமோவலில்பரதன்னுலகுணைத்தாம்
கழிவின்றறவுருவானகவேரன்கதையறிவாய். (௧)

காவேரியின்சரிதம்மிதுகண்டாய்மிகுமன்பால்
நாவேகலிமனமேயுடலதுவேநிலைபெறுமா
றேவாதவவாவோடிதையுறுவாய்முதலுகத்தில்
தேவாதிபன்விழியாங்கதிர்வழிவாய்வருசெம்மல். (௨)

கனமுற்றகளிங்கம்மெனுந்தேயந்தனைக்காப்போன்
வனமுற்றதோர்குணமுற்றவன்வளராவிகள்வரதன்
தினமுற்றபேரறமுற்றுளான்றெவ்வர்க்கொருசீயன்
தனமுற்றகளிங்கப்பெயர்த்தக்கோனுளன்மிக்கோய். (௩)

தக்கானவனெடுநாளளவாகப்புவிதாங்கி
மிக்கானெனவறமுற்றரசாண்டேவருமேல்வை
சிக்காவொருமகவற்றதனாலேசிதைமனனாய்
எக்காலமுஞ்சிந்தாகுலமேற்றேமெலிவுற்றான். (௪)

மெலியாவருஞான்றில்லொருஞான்றன்புளமேதை
வலியாவருதன்பத்தினிமலர்வாண்முகநோக்கி
ஒலிமாகடல்வருமாமலர்மகணேருமொண்டொடியே
சலியாமறையெழுவாயுளசாலஞ்சொலல்கேண்மோ. (௫)

அறமென்றவில்லறமுற்றவர்க்கறமாமகவிலையேல்
திறமென்றவின்புறுமோக்கமேசிக்காவெனறிரமால்
நிறமென்றபன்னூலும்நிகழ்ந்தனவார்த்தகநேர்ந்த
புறம்வாங்கிடுமைந்தன்பெறுபோதும்மிலையந்தோ. (௬)

அந்தோபலகாலங்களையரசாற்றியழிந்தேன்
நொந்தேவயதெல்லாம்பயனில்லாதுநொடித்தேன்
சந்தார்மறைமீதார்பரமன்றாடொழலற்றேன்
வந்தேகமன்வாவென்றிடின்வசனிப்பதென்வரைவாய். (௭)

நாராயணவரிராகவநந்தாதவைகுந்தா
ஏராருமிராமானுசவெழில்கேசவதுளவத்
தாரார்ந்துளதாமோதரமதுசூதனரங்கா
காரார்கரிவரதாவெனவிளிமன்முளைகாணேன். (௮)

முத்திக்கொருவித்தாயமுகுந்தற்கினிதாய
பத்திக்கியல்பாம்புத்திரர்ப்பயவாதபேர்பரமன்
நத்தத்தருநலமற்றவொன்றேபலநன்னூல்
கத்தத்தெரிந்துளனென்செயக்கடவன்சொல்காதலியே. (௯)

என்றின்னனபலவாகவெடுத்தோதிவருந்திக்
கன்றுங்கணவன்றன்னனார்கண்டாள்கனைகின்றாள்
நன்றாகுமெனன்பாயிதென்னான்காமறையாதி
பொன்றாதநூலெல்லாமுணர்போனாரிலுணர்ந்தாய். (௧௦)

உணர்வுற்றவருணர்வுற்றவென்பொருளோவவையுதவும்
பணவப்பொருளாகும்மொருபரமன்றருமெனவே
கணமுற்றமெய்ஞ்ஞானச்சுரர்கவியோர்சொலல்கண்டும்
அணலுற்றனைபொச்சாப்பிதென்னருளாயெனலானாள். (௧௧)

தன்னன்புளமணமாதுசொல்லமுதம்மொழிதரவே
கன்னம்விழியுளமுங்குளிர்கண்டேகலைகண்டோ
முன்னம்முணர்குணமங்கையின்முயலில்லறமல்லால்
பின்னம்பிறவறமென்றசொல்பிழையன்றெனமகிழ்வால். (௧௨)

களிதூங்கிடுமனனாகிக்காதலியைப்புணர்கொண்டு
நளிர்தூங்கிடுவிடிவோரையினன்றாணிகமாற்றி
ஒளிதூங்கிடுமுயர்மாமணியொளிர்பொன்மதிலுயர்கோள்
துளிதூங்கிடுகொலுவீற்றிருந்துளதன்னவையுற்றான். (௧௩)

அவைவந்தவனுறுமந்திரிமுதலோரையழைத்தே
எவையும்முணரறிவீர்கதியீமைந்தரில்லதனால்
கவைகொண்டதையுறுவானெணியென்காதலியோடே
குவைகொண்டுறுகான்மாமலையேகித்தவங்கொளுவான். (௧௪)

செல்கின்றனனீவீரறஞ்சிதையாதுலகோம்பி
நில்கின்றிரொன்றினிதோதியேநிலைகற்பினளோடே
பல்குன்றமுங்கானுங்கடந்தவிர்நீள்பனிமலையில்
வில்நின்றமெய்ஞ்ஞானத்தடமுனிவோரைவினவி. (௧௫)

காயத்திரிப்பொருளாகியகண்ணன்வடிவென்றும்
நேயத்திரிமூர்த்திச்சொருபத்தோடவிர்விமலன்
சாயைப்புணர்மணவாளனுஞ்சவிதாவைநினைந்தே
ஞாயத்துடன்மாநற்றவநன்றாவியற்றுநாள். (௧௬)

மாபத்தினியோடேமகிழோடாற்றுழியொருநாள்
தாபத்துடன்பிருகென்றதோர்தண்சுக்கிரமுனிவன்
கோபங்கொலைமுதல்கோதறுகுணனுற்றகாளிங்கன்
பாபம்மகல்தாவாலையம்பட்டானவர்கண்டார். (௧௭)

கண்டாரிருவோருங்களிகொண்டார்கடிதேகித்
தண்டாமெனவீழ்ந்தன்னவர்தாளைத்தொழுதார்த்தார்
பண்டாமறைமீதார்ந்திடுபரமன்பதநாடிக்
கொண்டாடுநீர்யாரெங்ஙனங்குறித்தேகுதிரென்றார். (க௮)

மன்னன்முகநோக்கம்முனிமகிபாபிருகென்போன்
முன்புத்திரனுஞ்சுக்கிரனென்பார்தெரிதருதி
நின்மங்கையுநீயுந்தவநிலையாதலென்பேரொன்
றின்னுந்தலகுலமென்வரலென்னேசொலுகிற்பாய். (க௯)

அன்றம்முனியருளோடுவினவும்மதற்கரசன்
குன்றம்நிகர்குணமாமுனிகுலஞ்சூரியகுலம்யான்
மன்றம்வளமிகுநாடுகளிங்கம்மதிமன்னன்
ஒன்றும்மகவின்றுதலினலேயுளுடைந்தேன். (௨௦)

உளைநைந்தெனதரசாட்சிவிட்டோதிம்மனையுடனே
வளமுந்துமிக்கானின்மலைவாரத்தினில்வந்தேன்
பளகின்றுளிர்பரமன்வளர்பாதுக்கினிதாய
களவின்றெளிர்மனநின்றிடுதவமாற்றிடுகாலை. (௨க)

வந்தீரெனதுளநின்றிடுவரதன்னருளாலே
பந்தார்வினைநொந்தேகினபலமுற்றினவென்றான்
நந்தாதுரைகுரிசின்முகநாடுங்கவிநாடிச்
சந்தானமேதருவோமெனவன்பின்னிதுசாற்றும். (௨௨)

வேறு.

களிங்கவேந்தறிதிவேதக்கந்துகத்திவருங்கண்ணன்
குளிர்ந்திடுகருணையெண்ணிக்கோதறுவேள்விமுற்றி
அளிந்திடுதுன்புநீங்கவளிக்குதுஞ்சேய்நிற்கஞ்சேல்
ஒளிர்ந்துகொளென்றுசொல்லிமகத்தினையுஞற்றலானான். (௨௩)

தேவரும்பிறருங்காணச்செங்கண்மாலருள்கவென்றே
தாவரும்வைணவப்பேர்மகத்தினைத்தளர்வின்றிக்கே
யாவருமேத்துமட்டாக்கரத்தினையெண்ணியெண்ணிக்
கூவியேநறுநெய்பெய்துகுலவுதீக்குலவச்செய்தான். (௨௪)

செய்திடுமமயம்யாகச்செம்மலாங்கடவுடோன்றி
எய்திடல்கண்டசுக்கிரப்பெயரிருடியெங்கள்
ஐயவந்தருடியென்னப்போற்றினனவன்கைதன்னில்
பெய்திடுமமுதமானபயசுதந்தளித்தான்பெம்மான். (௨௫)

பயசினைமுனிவன்கைதந்தனற்குழியுழிப்பாய்மின்னின்
வியசிலவேட்டைகநாதன்மறைந்தபின்விளித்துவேந்தை
நயசிவமாகவாழ்த்திநன்மகப்பேறுதந்தான்
சயசிவத்தினையாஞ்சுக்கிரப்பெயர்க்கரிசிலானே. (௨௬)

கரிசறுமோமபின்டந்தன்னையக்களிங்கர்கோமான்
அரிசயசயவென்றேதியடுத்தடிபணிதன்னங்கை
புரிசெய்மாமணத்தேன்செந்தாமரைக்கையிற்போற்றியீந்தான்
வரிசையினெம்மாற்கேற்றவழிதொழுதேன்றுட்கொண்டாள். (௨௭)

உட்கொடுகளிப்பின்வீங்கியுவகையின்முனிக்குநன்றாய்ப்
பட்படுசீர்த்திபாடிப்பரவியேமுகமனோதிக்
கட்படுதுளவத்தெம்மான்கருணையின்வடிவாய்வந்த
விட்படுமுனியேயென்றவ்விருவரும்விடைகொண்டாரால். (௨௮)

அங்குநின்றகமுட்பொங்கவரசனுமரசிதானும்
தங்குதம்மினியநாட்டின்றனிநகர்தண்டியாங்கு
மங்கலின்மனைக்குட்சென்றுமந்திரிமுதலோர்போற்றத்
துங்கமாமறக்கோலோச்சித்துயரறத்துலங்குநாளில். (௨௯)

பத்தினிக்கருவேயெம்மான்பத்தர்கட்கூட்டினார்தஞ்
சித்தியின்களியுட்பூப்பத்தினந்தினஞ்செழிப்பவோங்கி
வைத்திடுமதியம்பொங்கிவளர்மதிபோலமல்கி
உய்த்திடுகாலந்தாங்கியொருமகவுதவினாளால். (௩௦)

மகவினைப்பயந்தபோதுமன்னவன்வரையவொண்ணா
நகமகிழளப்பிலாதநரலையினண்ணினுய்ச்
சகமெலாமறிவித்தாற்றுஞ்சடங்குகண்டறங்களாற்றி
இகபரசுகமுற்றுள்ளவெம்பிரானடியரொத்தான். (௩௧)

கவியருளான்மிக்குற்றகளிங்கனச்சேய்க்கின்பாகப்
புவியுளோர்மகிழ்ச்சிகூரக்கவேரனும்பெயர்புனைந்தான்
செவிகுளிர்கவேரனன்றாச்சீர்பெறவளர்ந்துபெற்ற
குவிமுலையணங்குகாந்திமதிமனங்குளிரவாழ்நாள். (௩௨)

ஒழுங்குணர்முனிவதில்லையோங்குகோவிந்தற்போற்றும்
அருங்கலையகன்றஞானத்தருங்கவேரப்பேர்மன்னன்
பெருங்கதைகேட்டோர்வேட்கைபெறுவதொன்றருளுஞ்சீரை
இருங்கலைசௌநகாதிகட்கெலாமிசைத்தானின்பால். (௩௩)

௧௯-வது. கவேரமகாராஜனுதித்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - ௧௯ - க்கு திருவிருத்தம் - ௬௨௦.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

௨௦ - வது. காளிந்திப்படலம்.

வாளுந்தியவைந்தேதியும்வனசத்திருபதமும்
நாளுந்தியநளினத்தியுநாளும்விடாமுனியே
கோளுந்தியகாவேரனுங்கோமான்வரல்குறித்தாம்
காளிந்தியாநதியானவள்கதையோதுவல்காணே. (௧)

வேறு.

பதிதனைவிளித்தென்னுவிப்பர்த்தகேளெனக்கோர்பெண்சேய்
உதித்திடவேண்டியுள்ளமுருகுகின்றதுவென்செய்கேன்
விதித்திடவேண்டுமென்றுவினவுதன்மனைக்குவேற்கோன்
துதித்திடற்கருகமாமச்சூரியற்றொழுதியென்றான் (உ)

சூரியனுள்வாழ்நித்தசூரியவருள்வாயென்றக்
காரிகையோடுங்கூடிக்களிங்கனுங்கரணங்கூட்டி
மூரியபுலத்தைதயீர்க்குமைம்பொறிமுறுக்கித்தூய
வாரியின்மூழ்கிமேலாநியமத்தின்வரிமாறாமல். (௩)

புத்தியைப்புலத்தோச்சாமற்பூரணனபிதானம்மாம்
சித்திகடமையெலாமீத்திருவட்டாக்கரத்தைச்செப்பி
நத்திடுமெனநீர்மூலம்பலஞ்சருகாதிநாடா
துய்த்திடுகிழக்குநோக்கிநோன்பினையுஞற்றோர்நாளில். (௪)

கனவினிற்கதிரோன்றோன்றிக்களிங்கர்கேள்யானேயெல்லார்
நனவினைவிளக்குகின்றஞாயிறுநின்பாலன்பின்
மனதுவந்தடுத்தேனிற்கென்மகவெனுமிவளைநிற்குத்
தனையையாம்படிக்குத்தந்தேன்கோடியாலென்றுசாற்றி. (௫)

என்சுதனியமனன்னனிளையையாமிவளைநின்பால்
துன்னிடவளித்தேன்பெற்றுச்சுகிக்குஞ்சின்னாளிற்பின்னால்
மன்னிடுதருணியானவயதினின்மாட்சிமேய
நன்னயமுனையென்னுநதியுறுநண்ணிமாதோ. (௬)

கடவுளர்க்கெல்லாமேலாங்கடவுளாங்கண்ணன்றாளில்
விடவருகங்கையோடும்விழுந்தளாவிப்பூரித்துப்
படமுளபாம்பிலாடுபரன்மகிழ்பன்னிமாரோ
டடர்ந்தமலப்பேராடலமைவருமமையமார்ந்து (௭)

புண்ணியப்புத்தேளன்பாம்பூவைமார்புந்திக்கேற்ப
நண்ணியிராசலீலைநடத்திடற்கருகமாகி
விண்ணுளோரேத்திப்போற்றவியனுலகத்தில்வீணர்
பண்ணிடுபலங்கணூறிப்பாவைவாய்ப்படர்ந்துவாழ்வாள். (௮)

அறிதியென்றலரிகூறியாவயின்மறைந்தசெவ்வி
வறிதறுவணிதைக்கோதிமகிழ்ந்துபுல்குற்றுவாழ்நாள்
நெறிதருகருப்பமுற்றிநீலநன்னிறம்போலல்வில்
வறியர்மாண்பொற்குழாங்காண்மகிழ்ச்சியின்வந்தாண்மாதோ. (௯)

மகிழ்ச்சிகொடந்தைதாயர்மங்கலங்கொள்ளவேந்திப்
புகழ்ச்சியின்மிகுசீராட்டிப்போற்றியாற்றுநாடன்னில்
இகழ்ச்சியிற்களிங்கர்கோனுமினியனுங்கவேரனுக்குத்
திகழ்ச்சியின்முந்நூல்வேயுந்திருமணமாதிதீர்த்தான். (௰)

வித்தைகண்முழுதுமோர்ந்தவியன்வலிமகற்கன்பாக
நத்துறுமங்கதேயமன்னன்மாமகளைநன்றும்
சுத்தநல்லோரைதன்னிற்சுபமணமாற்றிவைத்தான்
பத்தினியொடுகவேரன்பன்னயவின்புதுய்த்தான். (௧௧)

பின்பியன்முகுர்த்தந்தன்னிற்பெற்றவக்கவேரனுக்குச்
சொன்னயதேயமாளுஞ்சோகமில்செங்கோனல்கி
வின்னயமணிப்பொன்மோலிவீறுறத்தரித்துவேந்தாய்
என்னயவுலகமாண்டேயிலங்கவென்றாசியீந்தான் (௧௨)

சுதன்றனக்கரசுதந்துசூழ்குருமறையோர்மூத்தோர்
விதமுள்விஞ்சையாளர்விற்பனவமைச்சர்வேந்தர்
பதமுளபடைக்குநாதர்பண்டிதர்முதலார்தம்மை
நிதநிதஞ்சூழ்ந்துகாக்கநிகழ்த்தியன்னவர்க்குச்சொல்லும். (௧௩)

கேட்டிர்காளறிவின்மிக்ககிழவர்காளிவன்மிக்காண்டு
மூட்டிலாவிளையனென்னின்முழுதருளோடுங்காத்து
நாட்டுமின்யாமோசன்மநலிவினைநலித்தற்கெண்ணி
வாட்டமிலரியைநாடிவழிக்கொண்டாமென்றான்மன்னன். (௧௪)

வழிபடுமனைவியோடுமேகுழிமகள்காளிந்திப்
பழிபடுதந்தைதாயர்பதத்தினைப்பணிந்துசொல்வாள்
இழிபடுமிரவிசொன்னவண்ணம்யானியனீராறாய்க்
கழிபடும்பிரயாகைப்பேர்நதியுடன்கலந்தபின்னர். (௧௫)

கங்கையிற்கலந்துகூடிக்களித்துலாய்க்கருத்தோர்தம்வெம்
சங்கைசெய்பவத்தைவாட்டித்தனியனுக்குகப்பதாகித்
துங்கமாம்யமுனையாகத்துணிந்தனனீவிராங்கு
மங்கலத்தினிதுவம்மின்முத்தியைவரிக்குஞ்சூழ்ச்சி. (௧௬)

தெரிக்குதுமென்றுசொல்லிச்சேர்ந்துளபேரையெல்லாம்
வரித்துவீழ்ந்தினிதுபோற்றிமற்றவராசியேன்று
வருத்தமுற்றியாருமேங்கிநோக்குழிமறைந்துமிக்க
கருத்தகீர்வடிவத்தாறாய்க்காசினிநிறைந்துபோனாள். (௧௭)

வெண்ணலைப்பேனஞ்சீகரங்குமிழ்பாசிவெள்ளத்
துண்ணிலைச்சலசரங்கண்முதலியதுதைந்துதோன்ற
மண்ணிலைமுற்றுங்கீண்டுமாசுணமத்தகத்தின்
விண்ணொளிமணிகடோன்றிவிளாந்தகன்றோடித்தன்றே. (௧௮)

ஒடுறமுந்திமாட்சியுவணுளோருற்றுநோக்கி
நாடரசாளும்மன்னனங்கையிவ்வாறுங்காட்சிப்
பாடறிந்தழுங்கியோடிப்பார்த்ததின்மூழ்கியுண்டே
கூடறமுத்திவீட்டைக்கொளும்பதங்கூடற்காணார் (௧௯)

கற்புளதாயுமீன்றதந்தையுங்கனிவாத்தன்முன்
உற்பவமானமூத்தகவேரனுமூருள்ளாரும்
அற்புதமிந்தவாறென்றதிசயித்திருப்பவாறுய்ச்
சொற்பதங்கடந்தபாதந்தோன்றுநீர்தேடிச்சென்றாள். (உ0)

அப்பொழுதன்னைதந்தையழுங்கிடவதற்கன்பான
ஒப்பறுஞானமோதியுறுதிசெய்துலகமாளச்
செப்பியதனையைதன்மேற்செலுநசையோடுசென்று
தப்பறுபிரயாகைக்கண்டழுவியேதழைத்தார்மாதோ. (உக)

இருபெருங்குறவர்முத்தியெண்ணியவண்ணந்திய
ஒருபெரும்பிறவிநோயையொறுத்திடலென்றுட்கொண்டு
வருபெருமுயிர்ப்புவிட்டுமாழ்கியேவருந்தலானார்
பருதியினருளால்வந்தபன்னியீதறிந்துமாதோ. (உஉ)

நீருருவகன்றுபெண்ணினிலையுருவெடுத்துவந்து
தாருருவானதாயின்றந்தையினளினபாதத்
தேருருவாகவீழ்ந்துவணங்கியின்குரவர்தம்மை
நாருருமுகமன்கூறியிவணுறனவில்கிற்பீரால். (உ௩)

என்றிறைஞ்சிடுதலோடேயெய்திருமகளைப்புல்லிக்
கன்றினைக்கண்டகோவின்குணமெனக்களித்துமோந்து
ஒன்றுகேளம்மேயாங்களுடலெடுபயனைப்பெற்று
பொன்றுதலில்லாவீட்டிற்போநெறிபோதித்தாள்வாய். (உ௪)

ஆளுதிஞானமோதியெனவினவினர்க்கக்கோதை
கேளுதிராய்ந்தமேலாங்கிளர்பொருள்கிளக்குமேலீர்
நாளுறுமறையும்புத்தேணுடரும்விதியுநாளும்
நீளுறுவேணியோனுநித்தியமுத்தர்தாமும். (உ௫)

அருவினையகற்றிஞாலத்தண்ணிடாதகண்டஞான
உருவுளவின்பவோதமுதவிடற்கருகமான
தொருதிருமனுவுண்டென்றுமொப்பறுமனுக்கள்வேந்தாய்த்
தெரிதருதுவயமுள்ளதென்றுமேதெரிந்துய்ந்துள்ளார். (உ௬)

ஆதலாலம்மனுக்கட்காகியவத்தமான
ஓதருமுவணகேதனப்பரம்பொருளையுன்னிச்
சீதளப்பாநியாசஞ்செய்திரோற்சிமானுனீர்
சாதமின்மோக்கவின்பசாகரந்திளைப்பீரென்றாள். (உ௭)

அருளினளாகித்தண்ணீரழகியவுருவாய்ச்சென்றாள்
மருளறுமகிபன்மங்கையிருவருமகளைவாழ்த்திப்
பரனருளெண்ணியான்மவிலக்கணப்படியிற்பத்திச்
சரணமிட்டெழுத்தையெண்ணித்தவமதையாற்றிநின்றார். (உ௮

நின்றிடுபுலனுங்காட்சிநிலவியபொறியுங்கோதி
தென்றிடுகரணவாதையியன்மனமாறுகுற்றம்
நன்றிலாவிடையூறென்னென்னவையெலாநந்தச்செய்து
கொன்றையோனிண்டையோனுங்குறிக்கலாக்கோனைக்கண்டார். (உகூ)

கண்டவனருளைக்கொண்டகாவலனில்லியோடும்
பண்டுளயோகிமார்க்கும்பரமஞானியர்க்கும்யார்க்கும்
அண்டொணாத்தில்லைமூதூரப்பனைவழுத்தியாசில்
புண்டரீகக்கண்ணன்றன்புனிதவூர்புக்குவாழ்ந்தார். (௩0)

நாரதமுனிவவிந்தநல்லவர்சரிதங்கேட்டோர்
யாரவரிகத்தின்பேறுமினிவருபேறுமேற்பார்
சீரிதுவென்றுவேதச்செவ்வனீதறைந்தபின்கா
வேரியின்மான்மியத்தைவிளம்புவனறிதிர்மேலீர், (௩க)

உ0 - வது. காளிந்திப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - உ0 - க்கு திருவிருத்தம் - கூருக.

உக - வது. காவேரிப்படலம்.

முடிவறுகாட்சிஞானம்வீரமேயின்பமுற்றில்
படிவனுய்நாமமாயுள்பகுப்புறுகுலமூரில்லா
நெடியமூவாமுகுந்தற்கடிமையாநெறிசேர்மைந்த
பொடிபவமாக்கற்கானபொன்னியைப்புகலக்கேண்மோ. (க)

களிங்கனுமவன்றன்காதற்காந்திமாமதியுமீன்ற
இளங்கொடிகாளிந்திப்பேரொழுனையுமகறலாலே
களங்கமில்கவேரனென்னுமிளையனுங்காவன்மன்னன்
துளங்கியமனத்தனாகித்துன்பெனுங்கடலுட்சேர்ந்தான். (உ)

அரசியன்மறந்தூணாதியாவையுந்துறந்துதன்ம
முரசியறந்தைதாயரிளையவள்சென்றதின்பின்
பிரசமாந்தினனாயாக்கைப்பெட்பினையொருவியாவர்
பரசினுங்கேளாத்துன்பப்பரவையிற்பட்டகாலை. (௩)

அப்பொழுதறிவின்மிக்காரமைச்சராரியர்முன்னூலார்
ஒப்பறுமுனிவர்மன்னருயர்குடிமக்களுள்ளோர்
இப்படிக்கிடும்பைகோடலியலறிவினர்க்கேலாகாண்
மெய்ப்படுமேன்மையேந்தாவென்றுபன்முறையிற்சொல்வார். (௪)

சென்றதுகருதுநீர்மைசெய்வினைசேர்ந்ததாயின்
வன்றுயர்கொள்ளுநீர்மைவறுமையின்மகிழாநீர்மை
பொன்றினர்க்கிரங்குநீர்மைபுற்பகல்போக்குநீர்மை
நன்றியைக்கொல்லுநீர்மைநல்லவர்க்கியற்கையன்றால். (௫)

கற்றறிகல்வியாளர்கருமம்வந்துற்றக்காறன்
குற்றநீங்கமையமென்றேகுலவுறுமுளத்தராகிப்
பற்றிலாப்பரமற்கன்புபத்திசெய்பவிமுன்னை
பெற்றியின்மகிழ்வாரன்றிப்பேதுறல்பெருமையன்றால். (௬)

ஆண்டகைமைத்தில்லானையாடவண்மதியாண்மாலைப்
பூண்டவற்கன்பிலானைப்புண்ணியர்போற்றகில்லார்
பாண்டுதைதஞிமிருஞ்சோலைப்படப்பைசூழ்நாடாளானை
ஈண்டியகுடிகளியாருமெள்ளுவர்பொருள்செய்யாரால். (௭)

நம்பியென்னரசன்வாளாவிருந்துநாடாளானகில்
பம்பியமறைகண்ஞானம்பத்திபண்ணொழுக்கம்பாடார்
அம்மைகூழ்படைகீர்நீதிகுடிபடையறங்கண்மாண்செய்
செம்மையெம்பெருமான்சீறற்கிலக்குறீஇச்சேர்வர்தீவாய். (௮)

கமையுளகாவலோய்நீகயமையிற்காலம்பண்ணு
துமையுளான்வாணியுள்ளானுணர்வருமொருவன்றன்னை
இமையளவேனுமெண்ணுதேத்திடாதிசைத்தவின்சொல்
தமைசொலாதிருக்குநாளுமுண்டுகொல்சான்றோர்க்கேந்தால் (௯)

என்றுபன்னீதிகூறியிடிக்கினுமிசையானன்றி
கொன்றநீமாக்கண்மானக்கோனிலாதறிவர்மான
நின்றிடாதறிவினின்றநிறைநசையொருவினன்றாய்
அன்றுதொட்டரசநீதியன்பொடுமோற்றினனல். (௧௦)

அரசினையெம்மாண்டோர்க்குமப்பனையறத்தினாரும்
சிரசினைச்செய்யாகத்தீத்தேசினையொழுக்கஞ்சேர்ந்து
விரசுறுமறத்தைதமிக்கதானத்தைத்தவத்தைவேதம்
உரைசெய்யாச்சிரமவன்னமாதியையோம்பியாண்டான். (௧௧)

ஓம்புதலோம்பியாளுமுழியவற்கொட்டான்வங்கத்
தாம்பெருமரசன்பல்வேந்தனிகங்களடரவந்து
வீம்புகணவின்றுவீறுமாண்டவன்முற்றிச்சூழக்
காம்புறழ்கமலைநாதற்கன்புளகவேரன்கண்டு. (௧௨)

நாமநூனவின்றகல்விநந்தலில்கருணைசாந்தம்
காமமிலொழுக்கஞானம்பத்திநல்விரத்திகாணும்
ஆமிவையனைத்துமுள்ளானுதலாற்பகையைவெல்லப்
போமொருபடைகளில்லாப்பொக்கினன்மருளிற்புக்கான். (௧௩)

பையுளுற்றகண்டமாளப்பரவையிற்பகைவர்மொய்த்துச்
செய்யுமத்தீமைக்காளுந்தேயமாழ்குறுமேயென்னக்
கையைவிட்டகன்றுகண்ணுகாத்தியென்றவட்கொப்பாக
ஐயவெற்கிரங்கியாள்வாயபயமென்றலறிச்சோர்ந்தான். (௧௪)

சோர்ந்தகவேரவேந்தன்சொப்பனத்திறைவன்றோன்றிச்
சார்ந்தெனதன்பவஞ்சேறடுக்கருநினதுதெவ்வர்
கூர்ந்துகொள்கூழைச்சேனைக்குளாகடன்மாந்திவெற்றி
தேர்ந்தெழுந்தெடுத்துப்போதியென்றுவாள்கொடுத்தான்றேவன். (கரு)

விழித்தெழுந்தருகிற்காணும்வீறுளவெற்றிச்சோதி
கொழித்துளவாளைக்கண்டுகுலைகுலைந்தெழுந்துபோற்றி
பழுத்தநற்கருணைக்குன்றப்பதமலர்பழிச்சிநன்று
வழுத்தியேயெழுந்துபூசன்மலைந்திடற்கருகனானான். (கசு)

தேவர்கடேவனாதன்செய்யருளெண்ணிக்கண்ணீர்
பாவரக்குளித்தெம்மானைப்பாடிப்பன்னுதல்செய்தெந்தாய்
நீவரற்கென்னோற்றேன்கொலென்றுனிகிழ்த்திப்போர்க்காம்
தாரணிந்தையனீந்ததழங்கொளிப்படையைத்தாழ்ந்து. (கஎ)

வாளினைக்கொடுத்துன்வட்கார்வாரிதிவறளச்செய்து
மீளுதியென்றுசில்லாவிமலன்வாய்விண்டதெண்ணி
மூளுமாற்றலனாயவ்வாள்பிடித்தெழுந்தடர்ந்துமூசும்
தாளுளநான்குசேனைத்தளத்தினைச்சாய்த்துவிட்டான். (கஅ)

தளங்களைமுருக்கிவீரத்தார்ந்திடல்கண்டசீற்றத்
துளங்கலில்வங்கமன்னனெதிர்தலுந்துப்பார்தூயோன்
களங்கமில்லாமல்வாளையோச்சியக்காளைமன்னன்
விளங்குமாமுடிதுண்டிட்டுவீழ்த்தினன்விரைந்துமன்னோ. (ககூ)

வங்கமன்முதலாயுள்ளமாற்றவர்மத்தங்கொண்டச்
சிங்கவேறன்னான்மிக்கசீர்சொலச்சிறப்பவேகி
அங்கவர்நாடுமொர்ந்தநகரமுமளவில்லாத
பொங்குறுபொருளுமுள்ளவனைத்துமேகவர்ந்துட்பூத்தான், (உ0)

கவர்ந்துவந்தளப்பிலாவெங்கணிதவிப்பிரர்க்குங்கண்ணன்
தவறிலாவன்புமிக்கநாவலர்தமக்குந்தாழாக்
கவனமாமருத்துவர்க்குங்கனிந்துளகுடிகளுக்கும்
இவர்படைத்தானைகட்குமிரவலர்தமக்குமீந்தான். (உக)

அருளொடுவிளங்குமர்ச்சைமூர்த்திகளவிருங்கோயிற்
பெருமினிதாஞ்சாற்றுக்கும்பெட்புறுயாகங்கட்கும்
பிரிவுசெய்தளித்துச்செங்கோல்பிடித்தளவில்லாக்காலம்
தெரிவுடன்முறைமையாற்றிச்செல்லுழிதன்னின்மாதோ. (உஉ)

உலகவின்பதனின்மிக்கவொறுத்திடுகுணமுற்றந்தோ
பலகலைகற்றுமெம்மான்பதம்பணிந்திருந்துமிந்தக்
கலகவிலாவிபூதிகடிந்திடற்கருகமான
திலகமாந்துறவறத்தைத்துணிகிலேனென்னேயென்று. (உங)

நினைவுசெய்தரியமோக்கநிலையுறவெண்ணியெண்ணிப்
புனைதல்செய்பாடல்பாடிப்புலம்பியென்புனிதவென்னைக்
கனைதல்செய்நின்பாதத்திற்கலக்குறக்கருணைசெய்து
தனைநிகரின்புதந்தாள்சரணெனச்சாம்பித்தாழ்ந்தான். (உச)

யானெனதென்றன்மாற்றியாவுமாமிறைக்குப்போற்ற
வானெனவளைந்தமூர்த்திவானருள்பெருகிவந்து
கோனெனுங்கவேரநிற்குக்கோதிலாவீடதற்குத்
தானொருதகையின்றேலுஞ்சிலவுளதகைவுகேட்டி. (உரு)

என்னெனினென்னின்மாயையெனுமவியத்தருணைப
யுன்மகளாகவுன்பாலுதிக்கவுமுனக்கன்னாளால்
மன்னுமென்பதத்தின்மாறுமனுவழிவரவும்பின்னர்
தன்னடிச்சோதியாமென்றலமுறத்தகவுமுண்டால். (உசா)

ஆதலாலரசநின்றனஞரகன்றுட்சிசெய்துண்
ணோதல்விட்டிருத்தியாலென்றருளித்தானுவன்றவண்ணம்
மோதலைவாரிமண்ணுண்மன்னனக்கவேரன்மோதக்
காதலாமகளாய்த்தோன்றநினைக்கவந்தனள்காவேரி. (உஎ)

வண்டுழாயலங்கன்மாலினருளினன்மண்டலீகன்
கொண்டலுண்குழவிகாந்தைவயிற்றினிற்குழவியாகி
மண்டனிற்பிறத்தலோடுமனமகிழ்தந்தைதாயர்
பண்டுளமுறைமைக்கேற்பக்கருமங்கள்பலவுஞ்செய்தார். (உஅ)

கருமங்கள்புரிந்தின்பாகக்கலைவளர்கதிரின்மானத்
தருமங்கடாதைகாக்குந்தரமுறத்தழைத்தாங்குற்றுள்
பருவமப்பாவைக்குற்றபகலிற்பார்த்திவன்கண்டம்மே
ஒருபெருங்கடவுளெற்கொன்றுரைத்ததுண்டுரைத்துங்கேட்டி. (உகூ)

கவேரனுமென்பாற்றோன்றுமதிற்காவேரிப்பேருற்ற
தவாவழகரியநீர்மைதங்கியதனையைதாழ்வில்
அவாவொடுமோக்கவின்பையாதரித்தரியைப்போற்ற
ஓவாவொருபொருளாமையனுவந்தெதிர்நின்றகாலை. (௩0)

விளித்தெனைவேந்தேநிற்குமேவுநின்மனைக்குமுத்தி
களித்திடவீயவல்லநெறியைச்சொல்கன்னியும்பால்
அளித்திடவருவளன்னளருள்செயக்கேட்டுய்வீரோல்
ஒளித்திடுபிறவித்துன்பமொழிந்திடரொழிவீரொன்றான். (௩க)

எம்பிரான்கருணையின்பாலெழுந்தவத்தெழுந்தஞானக்
கொம்பனையறியுமாற்றைக்கூறியாண்டருடியென்று
வம்பவிழ்தாரான்வேண்டும்வழிதனக்கினியளாகி
விம்புறுநசைகொடந்தைக்கிவ்வணம்விளம்பினளால். (௩உ)

தந்தைகேள்யானின்றன்னைத்தணந்துநீர்வடிவங்கொண்டு
பந்தமுற்றவர்கடுன்புபாரிடப்பரவுமானாய்
முந்திடுமற்றநீவீர்முத்திசேர்முறைமைசொற்றும்
நந்திடவென்றுசொன்னநங்கையைப்பூசித்தானால். (ஙங)

பூசிதத்தோடுநேயம்பொங்குறப்போற்றிப்பெண்ணை
மாசிலாமணிப்பூணுடைமற்றுளவெல்லாமல்கத்
தாசனில்வளர்க்குநாளிற்றழைபொறிபுலன்கள்சாய்த்தவ்
வீசனையிளையுங்கும்பசம்பவனினிதங்குற்றான். (ஙச)

அகத்தியமுனிவன்வந்ததறிந்தகவேரமன்னன்
வருத்திடுமுகமனோடுமகிழொடும்பசரித்துப்
பகுத்திடுமுணர்ச்சியோங்குபரமனாமுனிவநாயேன்
சகத்தினிற்கெழுகவென்கொறவமருளென்றுதாழ்ந்தான். (ஙரு)

தாழ்ந்திடுசெம்மறன்னைநோக்கியச்சழக்கிலாதான்
ஆழ்ந்திடுமறிவின்மிக்கோயறிதியானகிலத்தாசை
போழ்ந்திடுபொறியுளானாய்ப்புந்தியிற்பொதிந்துமிக்க
வாழ்ந்திடுவன்னியென்னுந்துறவியாய்வசிக்குங்காலை. (ஙசா)

அயனெனைநோக்கிமைந்தவறிதிநீயரியின்மோக்க
நயசுகநந்தவில்லாநாட்டினைநண்ணவெண்ணில்
வியசுகவில்லறத்தைமேவியுற்றதன்பின்மேலாம்
பயசுகமற்றநாலாமாச்சிரமத்தைப்பற்றி. (ஙஎ)

இயல்பினாலில்வாழ்வானேயியல்புளவீட்டைநாடி
முயல்பவருள்ளேமிக்கமுன்றலையஃதோவெண்ணில்
பயமுளதகன்றுபோயென்படுவதென்றுரைத்தென்றன்னை
வயமுளபண்புசெய்கையறமுளாள்வரித்தியென்றான். (ஙஅ)

தென்புலத்தார்தெய்வம்மேவிருந்தொக்கறெளிந்துபோற்றி
இன்புலத்திருப்பானெண்ணியிங்ஙனமெழுந்தேனின்பால்
அன்புடனவதரித்தவழகியையளித்தியென்றான்
மன்னதைக்கேட்டின்பாற்றின்மன்னினனுகிமன்னோ. (ஙகூ)

என்றவமிருந்ததென்கொலென்வயினென்றுபன்னி
மின்றவக்குமரிக்கிந்தவாற்றினைவிளம்பவன்னாள்
நன்றெனவுவந்துகும்பமுனியினைநாடிநோக்கி
அன்புடன்வணங்கிநிற்கேயகத்தியான்வரித்தியென்றாள். (சo)

உன்மனையாவேனென்பாலோர்முறையாடினார்கள்
மன்பவமெல்லாமற்றுவழங்குமூன்றரைக்கோடிப்பேர்
இன்புறுதீர்த்தப்பேறுமிருபதுநான்குமேலாம்
அன்புறுமினியவேகாதசிப்பலனனைத்தும்பெற்று. (சக)

அரியமாலன்புமிக்கோரடைப்பலமெல்லாங்கொள்ளற்
குரியராகிடவுமென்பாலோங்குறுநதிகளெல்லாம்
திரியவுமவைகட்கெல்லாமூத்தளாச்செப்பிப்போற்றும்
பெரியளாம்வரமீயென்றாளவனுமேபெருகச்சொன்னான். (௪௨)

தலையினைக்கோட்டியின்புததும்பிடமந்தகாச
நிலையினைக்காட்டிப்பின்னுநிகழ்த்துவல்கேட்டிமிக்க
உலைவினையுடற்றுமேலாந்தவசியேயுலகமுண்டால்
இலையணைப்படுக்கையேய்ந்தவெம்பிராற்கினியளான. (௪௩)

சுத்தமாமாயையானச்சுரர்சிகாமணியினானை
வித்தையால்விபுலையாளிவ்வேந்திடம்விளைந்துன்றன்னை
நத்திடுகணவனாகநண்ணியேநதியதாகி
இத்தவத்தவர்கடூமையிறத்தியாலென்றானீசன். (௪௪)

உலகினையோம்பிடாய்க்குமொருமுதற்குரியபெண்யான்
திலகமாமுலோபாமுத்திரைப்பெயர்த்திறத்தாளென்னைப்
பலகவின்மணத்தீமுன்னிற்பாணிபற்றுதியென்றோதி
நலகவினினியசொல்லினன்றுறவணங்கினின்றாள். (௪௫)

வேறு.

அளக்கருங்கீர்த்தியிலகன்றமன்னவன்
துளக்கருந்தூரியந்துவைப்பத்தோமிலா
விளக்கமேயாதியாம்விபுதர்வேதியர்
களக்கமிறிருமுனேகன்னிதன்னையே. (௪௬)

குறுமுனிமகிழுறக்குறைவிலோனாயில்
நறுமணத்தாரைபெய்தினியநங்கையை
மறுமைபெற்றுயர்பவன்மகிழ்வினீந்தனன்
நிறைமனத்தும்பர்மண்ணவர்முன்னிற்பவே. (௪௭)

பாணியைப்பற்றியபரமஞானியும்
வேணியைப்பற்றியமுனிவர்வேட்பவே
காணியைப்பற்றியில்லறத்திற்கௌவியே
ஆணியைப்பற்றியவரத்தில்வாழ்ந்தனன். (௪௮)

அறத்தொடுமில்லறமாற்றியன்புடன்
மறத்தினைமாற்றியேவைகியுற்றனன்
இறத்தலைமாற்றியவிருடிகேசனுக்
குறுத்தலையன்புளத்துரியகேட்டியால். (௪௯)

பொன்னியாம்பொற்கொடிபுணர்ந்ததென்கலை
மன்னனுங்குறுமுனிவாழ்த்துந்தில்லையி
னன்னயமுனிவர்க்குநவின்றமான்மியம்
தன்னைநேமிசவனத்தவர்க்குச்சாற்றுமால். (௫௦)

௨௧ - வது. காவேரிப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - ௨௧ - க்கு, திருவிருத்தம் - ௭௦௧.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௨௨-வது. சையமலைப்படலம்.

ஐயமலைக்கியநாதிபதத்தேயன்புற்று
கையமலைக்கிக்கதியருளெம்மாற்கன்போய்கேள்
வையமலைக்குமாணவமுக்கவரதன்வாழ்
சையமலைக்கண்காவிரிசென்றிடுசரிதங்கேள். (௧)

வேறு.

உந்திதந்திடுமலருதித்தயானுமென்
அந்திவானிறமுளவரனுந்தேவரும்
முந்திமாவினைமுரிமுற்றித்தூவுற
அந்தநான்மறைமுடியவனையன்புற. (௨)

கழுவியநீரையுட்கொண்டுகாசுர
வழுவிலாதாடியவரதனீரினைப்
பழுதுறுமுலகுளார்பவங்கள்பாழுற
விழுதவக்குறுமுனிவிளங்குகுண்டிகை. (௩)

தன்னிலேமுனமெமான்றனித்தமந்திரம்
என்னுமெண்ணெழுத்தினையெண்ணிப்பெய்தனன்
மன்னுமப்புனலவன்மகிழ்ந்துளேற்றியே
உன்னிவைத்திருந்தனனுய்யுமாறரோ. (௪)

உத்தமியாகுகாவேரியோர்பொழு
தத்தனுந்தந்தைதாயடுத்தசுத்தநல்
வித்தகத்தந்தணர்விண்டுதாசர்கள்
எத்தவத்தினற்குநல்லின்புமல்கிட. (௫)

போற்றியாற்றுறுமறந்தானம்புண்ணியம்
ஆற்றியன்னவர்கள்செய்யாசியான்மகிழ்ந்
தூற்றமாக்கைகுவித்துபசரித்தவர்க்
கேற்றதைச்சாற்றியேயெவருநோக்குற. (௬)

தூய்மணத்தினியநீருருவிற்றுப்புற
ஆய்பிதாமுதவினரறியவாசியே
ஓய்விலாவகத்தியன்குண்டிகைக்குளே
தாயினிதிருந்தனடவத்தர்போற்றவே. (௭)

அந்தநாளகத்தியனரியமங்கையைத்
தந்தமாதுலர்க்குளாதந்துதன்கைவாழ்
சந்தமாங்குண்டிகைதாங்கித்தென்றிசை
விந்தையங்கிரியகம்வீட்டியேகினன். (௮)

வடதிசைகடந்துதென்வழிபடர்ந்துயர்
குடதிசைக்கண்வளர்குவடுகொண்டுயர்
இடமிசைச்சையமாங்கிரியிடத்துவந்
தடரிசைக்குறுமுனியரிவைக்கோதுவான். (௯)

வேறு.

உலகுளார்பவத்தையீர்ந்தேயொழிக்குமொண்டொடியேநீவந்
திலகவானயனாற்சொன்னதிவ்வனமாகும்யார்க்கும்
திலகமானவளேநிற்காச்செய்மலையாதலாலே
பிலமிலாமலைக்குமேலோர்பிரமபூதரமென்பாரால். (௰)

மலர்கனிகாய்பூவண்டுமுதலியமண்டிவான்றொட்
டிலகுறச்சாகைவிட்டேயீடமெலாம்பாரித்தாரும்
நலகுணத்தியற்கைத்தத்தாத்திரேயருமினுநல்லோரும்
இலகுறுசுரரும்பக்கிவிலங்குமேயினிதுவாழும். (௧௧)

சகலபாவங்கடம்மைச்சகித்தருடிறத்துன்றன்னை
இலகுறத்தரித்தாற்றின்காவிடத்தினிவிடுதல்பற்றி
நலமுளோரிதற்குச்சையபருப்பதமென்றுநாட்டி
வலமுறுதிருமுன்னனமல்லலேற்றுயர்வர்மன்னே. (௧௨)

எத்திறத்தினுமேலுற்றவிம்மலைதனிலுலோபா
முத்திரையென்னுமென்றன்முழுநகைக்குரியமானே
இத்தரைதன்னிலின்பினிருத்தியாலென்றுசொல்லி
வைத்துவிட்டகன்றுநீரிற்குளித்திடமகிழ்விற்சென்றான். (௧௩)

அம்மலைதனின்முன்விண்மண்ணறப்பயனடைந்துய்ந்தேக
எம்பெருமிருடிகேசனியலழகவிருமாட்சி
பம்புமாமலகமாஞ்செம்பராரைவான்விருக்கமாகி
நம்பன்வீற்றிருப்பதோர்ந்தநானவணணுகிமாதோ. (௧௪)

கும்பசம்பவனீராடக்குடத்தைவைத்தேகல்கண்டே
எம்பிரானருளால்யானங்கேகியீண்டுள்ளார்யாரும்
உம்பர்பெற்றுயரும்வண்ணமுயர்நெல்லிவடிவங்கொண்டு
அம்பரத்தன்பர்போற்றாதனையாற்றற்கானேன். (௧௫)

ஆழிவெள்வளைமுன்னனபடைதரித்தவிருமீசன்
தாழிருநெல்லிபாதவப்பெருந்தாளில்வீழ்ந்தேன்
ஏழிரேடேழாநின்றவுலகமுண்டொழித்தாள்வாற்குப்
பாழிசேர்விரசையாற்றின்பயங்கொடுபூசித்தேனால். (௧௬)

தீர்த்தமாந்தீர்த்தங்கொண்டேதிருமஞ்சனஞ்செய்தாரும்
மூர்த்திசெய்துளற்குமூவாருமுபசாரமாற்றிக்
காத்திரமடிப்புச்சேப்பவீழ்ந்துகான்மறைப்பாட்டோதி
ஏத்துமெற்கன்புபுல்கவிறைவனிவ்வாறுகூறும். (௧௭)

நான்முகத்தொருவென்பிள்ளாய்நன்குரைத்திடுவனீகேள்
வான்முகத்தவர்களோடுவந்துபூசித்தலாலே
தேன்முகக்கமலையோடுஞ்சேர்ந்தவென்னடியரோடும்
மேன்முகமகிழ்ச்சிபூத்தேமேலுமொன்றுரைக்கக்கோடி. (கஅ)

பாதவவுடிவமாமென்பாதமூலத்தேமிக்க
சீதமாயெழுந்துபொங்குஞ்செவ்வியவிரசைநீரிற்
சாதமாற்றிடற்குப்பொன்னிதனைக்கொடுசாய்த்துக்கூட்டி
ஓதமுற்றிளகுகீழாஞ்சிந்துவிலுறழவோட்டி. (கசு)

என்றிறையருளலோடுமேத்தியேவணங்கிநன்முச்
சென்றுலைகடியவேகக்காற்றுடன்செல்லைச்சேர்த்தேன்
வன்றிறலோடுமோதிமாதிரமதிரமின்னித்
துன்றிடுமிடிகளோடேமழைகளைச்சொரியச்செய்தேன். (உ௦)

கடியவெங்காற்றுமின்னிற்கரந்திடுமெழையுங்கால
நொடிதனிலுலகமூடுவெள்ளத்தைநூக்கவிட்டேன்
படியெலாந்திரண்டநீத்தம்பரவியேபுரண்டுவந்து
செடியறுத்தளிக்குங்காவேரிப்புனல்செறிந்திருக்கும். (உக)

கும்பநன்முனிவன்வைத்தகுண்டிகையுருளக்கொட்டிப்
பம்பியநீரைவவ்விப்பரமனுருருவமான
அம்பிழிந்தவிருமாமலகவிருக்கத்தாளாட்டி
இம்பரம்பரத்துளாருமிகுபயனேற்பச்செய்தேன். (உஉ)

காற்றுருவானவெள்ளங்காவிரிநீரைவவ்வி
நீற்றுளோன்யானுங்காணுநெடியவனடியிற்கூடித்
தோற்றுமவ்விரசையாற்றின்றோயத்தையளவளாவிச்
சாற்றுங்கீழ்க்கடலைநாடிக்கொண்டுபோதுறுமாலின்னும். (உங)

அந்தநாளென்றுளென்னிலவிர்துலாசங்கராந்தி
வந்தநாளாதலாலேவானுளோர்முனிவர்மற்றோர்
முந்திவந்தந்தப்பொன்னிமூழ்கியுண்டானந்தித்தார்
இந்தவாறின்னுநாளுமிலங்குவதினிதிலோர்தி. (உச)

வேறு.

சிந்தாமணியொளிர்நற்றுறைசேர்காவிரிமாட்சி
வந்தாரவர்நந்தாமகிழ்வந்தாரொனும்வனசன்
செந்தாமரையானுயகன்றில்லைக்கவிசெப்பல்
கொந்தாரலர்வனவாசிகட்கோதும்மிகுசூதன். (உரு)

உஉ-வது. சையமலைப்பட்லம்
முற்றிற்று.

ஆகபடலம், உஉ - க்கு திருவிருத்தம் - எஉகூ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௨௫-வது. அகத்தியர்சோகப்படலம்.

மகத்தியல்வியையார்ந்துவரையொணாமறைக்கண்வாழும்
சகத்தியனடாத்துமாதிசோதியைத்தழுவுசத்தோய்
உகத்தியலுயிர்களுய்யும்பொருட்டுருக்கரந்தபொன்னிக்
ககத்தியன்சோகமுற்றதன்றகுதுமகத்துட்கோடி. (௧)

அல்லலையகற்றுமையனாகியேயவிரநின்ற
நெல்லியாம்விருக்கமூலநேர்ந்தெழுபொன்னிதானும்
வல்லனாங்கும்பமாமுனிக்கொளித்தவண்மறைந்து
செல்லுமாறெண்ணிப்பாதாளத்தினிற்சேர்ந்துசென்றாள். (௨)

சையமாமலைக்கண்மெல்லச்சாய்ந்துபூச்சரித்தலோரா
மெய்யனாமுனிவந்தாங்குக்குண்டிகைமேயபொன்னித்
தையலைக்காணாமோகந்தலைத்தலைசிறப்பச்சாம்பி
ஒய்யெனவோடோடிப்பார்த்துசாவியேநேடலானான். (௩)

எங்ஙனமுற்றாய்கொல்லோவென்மனக்கினியநங்காய்
அங்ஙனமெங்குந்தேடியலற்றினேனறிவுமாண்டேன்
இங்ஙனமழகுசெய்கையியற்குணவின்புமேன்மை
தங்குநின்றனையான்விட்டுத்தரித்திராதிறப்பேன்கொல்லோ. (௪)

என்செய்கேனென்னின்மாதேயியலுயிர்க்கினியதேனே
பொன்செய்யவழகின்மிக்கபூவையேபொருவினீர்மை
மன்செய்மாவறத்தின்கற்பேவனமயிற்சாயன்மானே
நின்செய்கைவாணிநாணமாதிகணினைந்துநைவேன். (௫)

அன்னையேயனலூட்டற்கென்னமைச்சியேயறிவீதற்குப்
பொன்னியேயழகினாலேபூமியேபொறையினாலே
கன்னியேகலனேயீயும்போகமேகளிப்புச்சிந்தாம்
உன்னையேதணந்தென்னாவியுறுங்கொலோவுரைத்தியென்றான். (௬)

குண்டிகைதன்னிலுற்றபொன்னிநீருடனேகூடி
வண்டுளர்மலர்மாதோடுவளர்மரவடிவத்தெம்மான்
புண்டரீகப்பொற்றாள்களிரண்டையும்விளக்கிப்போற்றி
அண்டர்கணாதனன்புகொண்டயனாட்டாற்றுற்று. (௭)

தூயளாந்துணைவிதன்னைத்துருவியேயிடும்பைமுற்றி
நேயமாணாக்கரோடுநெட்டுயிர்ப்பெறிந்துமாழ்கி
மாயமாயினளென்றோதிமால்கொடுவருந்துமேல்வைத்
தோயமாயுற்றாள்கொண்கன்மீதினிற்றயையிற்றோன்றி. (௮)

முன்னுறீஇக்கணவற்போற்றிமோகமற்றவிருமேலோய்
என்னையீதவாவின்வெஃகியிரங்கனீரிகத்தாரொப்ப
அன்னையாமலர்மேன்மங்கையழகனாராணையாலே
மன்னியாறாகியிந்தமாணிலத்தலத்திலானேன். (௯)

நும்வயினிகழ்ந்தவாறுநிகழ்த்தினேன்நீருமெற்குச்
செம்மலரவனிவ்வாறேசெப்பினானென்றுஞ்சொன்னீர்
அம்மவீதெல்லாமெவ்வாறறிகலாதயர்ந்தீர்நூல்கள்
விம்முறுமுலைப்பெண்மோகம்விடாதெனன்மெய்யிட்டீரால், (௧௦)

வந்தனைபுரிந்துசொன்னமங்கைமாசற்றவார்த்தை
நிந்தனையன்றென்றேற்றுநிவந்தொளிருணர்ச்சிமேலோன்
சந்ததமிந்தவாறேயிருந்துயிர்ச்சாபஞ்சாய்த்தே
அந்தமிலரிக்கின்பாகவவிர்தியென்றாசிகூறி. (௧௧)

சகல்வெங்கசட்டையெல்லாஞ்சவட்டிநங்கடவுட்கன்பாய்ச்
சுகமுறவுறுதியென்னாச்சொல்லிநற்சீடரோடும்
நகமதற்கேகினான்னதியுங்கீழிருந்துதோன்றி
அகமகிழ்ந்தவிருமாம்பிராவதியாற்றைக்கூடி. (௧௨)

பவமறுத்திடுபவானியோடுறக்கலந்துபாடார்
தவமியற்றியமிக்கானதரத்துமூன்றரையாங்கோடி
சுவமுறுநதிகடம்மைத்தழுவியசுகுணையாகி
அவமிறுமகண்டகாவேரிப்பெயரடைந்தாளன்றே. (௧௩)

சையசாமருத்துவித்தையகண்டையென்றணிப்பேருற்றாள்
வையமுண்டுமிழ்ந்துகாக்கும்வரதன்றாணீரின்மாட்சி
செய்யவேண்டிடுதலென்னுநசைகொளீஇச்செங்கண்மூர்த்தி
ஐயனார்தாளிலன்பையழுத்திமாதவமுற்றாளால். (௧௪)

தவசினைநெடுநாளாற்றறனையுணரரங்கநாதன்
பவசினையகற்றுமேன்மைப்பயனுறவவண்முன்னின்றான்
புவனமுண்டவனைக்கண்டபொன்னிபோற்றுதல்புரிந்து
எவணுறுநதிக்குமேலாயிருந்துளவரமீயென்றாள். (௧௫)

மூன்றரைக்கோடிதீர்த்தமூழ்கிடப்பக்ஷத்தையானாய்
வான்றனையளந்தஞான்றென்வலப்பதமதனிற்கங்கை
தோன்றிடச்செய்தரன்போன்றவர்பவந்தொலைத்தாமந்தச்
சான்றுறவெனத்திரண்டுசரணினீசனித்தலாலே. (௧௬)

வரநதிதனக்குமேலாய்வரனரன்போகிவானோர்
சரதமாய்ப்போற்றமிக்கசானவிமாகத்திங்கள்
விரதமாமாகஞ்சேர்ந்தபருவத்தில்விரைந்துகூடி
இரதமாமீராறாண்டிலேற்றமாங்கங்கைநின்பால். (௧௭)

வந்துனைக்கலந்துசையமலையிலென்னடியிலுற்றுச்
சந்தமாழகண்டகாவேரிக்கணேசார்ந்துபின்னர்
உந்துறுகுடந்தைசங்கதீர்த்தமத்திங்களோங்கூர்
சிந்துசங்கமமிவ்வாறுசிறந்திடுதலங்கள்சேர்ந்து. (கஅ)

மூன்றுநாளுன்னேடுற்றுமூழ்கித்தாமுன்னுமெல்லாந்
தோன்றிடப்பெற்றுத்தென்சானவியெனச்செப்பிப்போற்ற
ஆன்றநம்பள்ளிசூழவாறிரண்டாகிநந்தாள்
மான்றிடப்பணிந்துநாளும்வருத்தித்துவாழ்தியென்றான். (கக)

சங்கைநின்னேடளாவுகாலமாமகமென்றுன்பால்
எங்குவந்தாடினுருமீறுசுகவீடெய்தித்
தங்கவுமெமக்கின்புரமச்சந்திரகயத்திற்றோய்ந்தே
துங்கமாந்தில்லைப்புண்டரீகதீர்த்தத்திற்றோன்றி. (உ0)

ஒவ்வொருதினமுற்றெம்பாலுயர்விடையேற்றுத்தான்வாழ்
அவ்விடமடைவையோர்தியகத்தியன்மனையேயென்று
பெளவநீர்நிறத்துப்பெம்மான்படர்விண்மின்னிறத்துப்போனான்
செவ்வியதுலாத்துமாகமாதத்துஞ்சிறந்தாயென்றான். (உக)

சகலவிண்ணவரின்மேனித்தனியனுஞ்சயம்புமூர்த்தி
இகலறவிலங்கரங்கத்தெழிறுயின்மேவுலாலே
புகலருங்கீர்த்திபுண்ணியம்பொதிந்தினிதுபூப்ப
உகமெலாமேத்தநின்றாளுத்தமப்பொன்னிமாதோ. (உஉ)

அரங்கமாந்தலத்துக்கன்பாமேற்கணாயோசனைக்குள்
இரங்கொலியேத்தலோடேயிரண்டுறுவெடுத்துக்கொண்டு
தரங்கங்கண்முதலவாகித்தக்கணவுத்திரத்தின்
வருங்காவேரிப்பேர்கொண்டுமேலிவளமருவியுற்றாள். (உங)

தில்லைமூவாமூதூரின்றீர்த்தமாடித்தோய்வுற்றார்
அல்லலைப்போக்குவாளச்சானவியறிதியென்று
நல்லநான்முகனவின்றுபின்னர்ச்சொனலத்தைச்சொல்வல்
வல்லமுக்கரணச்சேட்டைமாற்றியேத்திடுதிர்மாதோ. (உச)

இன்னகாவேரிக்குள்ளவேற்றமெல்லாநன்றாகச்
சொன்னவனல்லனென்றுசொல்பவர்சொலட்டுஞ்சொல்லிப்
பன்னுவோருலகிலில்லையாதலாற்பகரல்விண்டாம்
பின்னர்முன்காதைச்சேடம்பேசுவல்கேட்டிமன்னே. (உரு)

உ௲ - வது. அகத்தியர்சோகப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - உ௲ - க்கு திருவிருத்தம் - எருக.

௨௪-வது· தில்லைக்கோவிந்தராஜப்பெருமான் சேவைசாதித்தருளியப்படலம்.

உள்ளியவழுக்காதீந்திடற்கேற்றவுத்தமத்தவிர்தருமிசையார்
வள்ளியற்பொன்னிமாநதியென்றுவைத்தமாற்கினியமாமுநிவீர்
தெள்ளியவறத்தின்செம்மல்கவேரமன்னவன்றேவியினோடு
தள்ளியசீவர்தண்டிலாற்கண்டுதனிப்பதஞ்சார்புகழ்கேண்மின். (௧)

பரம்பொருளருளாற்பயந்தவுலோபாமுத்திரையெனுமழகமர்ந்த
குருமணிக்கொடியையிழந்திடுமிடும்பைக்குரவையிற்குளித்தவனாகிப்
பொருமல்கொண்டரசையமைச்சர்களிடத்திற்பொருத்திவிட்டரிவையினுடனே
பருமலைகடல்சூழ்பாரினைவலமாய்ப்படர்ந்துதென்றேயம்வந்தனனால். (௨)

பாரினையளப்பானெண்ணியிவ்வுலகிற்படும்படிப்பதமலர்பதித்த
நாரினைநினைந்துநைந்தவன்ஞாலந்தனைவலம்வருமுழிநல்லோன்
ஊரினையொருவியாறிரண்டாண்டவ்வுத்தமத்தெம்பிரானுவந்த
சீரினையுடையதிருப்பதிதோறுஞ்சென்னெறிதனிற்சிலர்சேர்ந்தார் (௩)

சேர்ந்தவர்தமையிம்மன்னவன்விளித்துத்தெளிவுளீரெங்ஙனஞ்செல்வீர்
சார்ந்தவெங்களுக்குஞ்சாற்றுதிரென்னவவர்களச்சக்கிரிக்கினிதில்
ஆர்ந்தமாமகத்துக்கேகலுங்கங்கையதிபுகழ்க்காவிரிக்கேகிச்
சேர்ந்தநன்றினைப்பெற்றுய்தலுமெம்மான்செய்தநல்வரங்களுஞ்சொன்னார். (௪)

சொல்லல்கேட்டரிதிற்பயந்ததன்மகட்குச்சொன்னநல்லொளியிசையதனால்
புல்லருமகிழ்ச்சிபூப்புறவுடலம்பொடித்திடப்பொலிவிழிமகிழ்நீர்
செல்லிடவிரைவிற்றந்தைதாயிருவர்சென்றுகாவேரியின்மூழ்கி
நல்லவர்புரியுங்கருமங்களாற்றிநாரணற்போற்றியங்கிருந்தார். (௫)

வாய்மையூக்கத்தான்மோக்கவின்னசையான்மாலினான்மிகுமனத்தினராய்
வேய்புரைதோணன்னளினமெல்லணையின்மெல்லியன்மகிழ்நனைவிரும்பிப்
பாய்புலப்பொறிகளாதியபறித்துப்பற்றறுபெருந்தவம்பண்ணத்
தூய்குணக்குரவருறங்குழியாருந்தூய்மகள்கனவினிற்றோன்றி. (௬)

நன்னசைமிகுநற்குரவர்காண்மோக்கநண்ணிடவெண்ணினிந்திக்கு
மன்னிசைகொண்டவாரிசங்கமத்துவடதிசைதனிலுயர்வளத்தால்
துன்னொளிசூழ்ந்ததில்லைமாவனத்திற்றுன்னியெட்டெழுத்தினையெண்ணித்
தன்னிடமேகித்தனிமுதன்மகிழத்தவமியற்றுமினெனச்சாற்றி (௭)

மறைந்ததன்மகளின்வார்த்தைகேட்டடங்காமகிழ்வினர்களிகொடுவடக்கில்
உறைந்திடுதில்லிவனத்தின்கணுற்றேயுரைமனமாக்கையையொருவி
நிறைந்திடுகருணைநிமலனைநினைந்துநீடவம்பலதினநிகழ்த்தத்
துறந்திடுதூயசுகுணர்முற்றோன்றுஞ்சுந்தரவடிவுடனெழுந்தான். (௮)

அங்கொருநாளவ்வரசனீராடியாறிரண்டானபுண்டரத்தை
மங்கலமாதோடணிந்தனுட்டானமாற்றுசங்கற்பமேதொடங்கிச்
சங்கையிட்டரிகோவிந்தகோவிந்தவென்றுசொல்சமயமாமணிபோல்
துங்கமாவிசும்புநிலமுமக்கானுந்துலங்குமோர்சோதியைக்கண்டான். (௯)

எங்குமேபரந்தவிந்திரநீலமணியொளிச்சுடர்வெயிலிலங்க
அங்குவாழ்கின்றவரணமும்புள்ளும்விலங்குமேயாதியாமனைத்தும்
பொங்குமானந்தவீட்டில்வாழ்வனபோற்பொலிதரன்மன்னவன்கண்டீ
திங்ஙனமென்னேயிந்திரநீலமணியொளியனைத்துமென்றயர்த்தான் (௧௦)

விளித்தபோதெம்மான்முகிலுருவடிவின்விமலமுந்தேவகானத்திற்
களித்திடுகருணைச்செம்மலர்க்கமலக்கண்களுங்குண்டலக்காதும்
ஒளித்திடுமொழிவளைமுதனாற்கையுச்சமுமுடிகலைமுதல்கொண்
டடுத்திடவமரர்முனிவர்கள்போற்றவமலைகளுடன்வரக்கண்டான். (௧௧)

கண்டுகொண்டாடியோடிவீழ்ந்தெழுந்துகளிமகிழ்கடன்மடுத்தினிய
தொண்டுகண்டடங்காத்துதிகள்கண்டந்தோவென்செய்கேன்றேன்றினனென்றே
விண்டுவிண்டகன்றதனந்தமாம்பிறப்பென்றெடுத்தெடுத்தோதியேவிரைந்து
பண்டுளபரமேபரவினர்க்கினமேபங்கயத்தவண்மகிழ்பதியே (௧௨)

எங்களின்னமுதேயென்செய்கேமெளியேமீனராமெமையொருபொருளா
இங்ஙனமெண்ணியெழுந்தருளினைகொலீசனேயீசனார்க்கினிய
துங்கனேதூயசுகுணனேயமரர்துய்யனேவிதிமுன்னோர்தோன்றும்
அங்கனேயெங்களன்பனேகருணையப்பனேயொப்பிலாவமுதே. (௧௩)

கைப்பில்செங்கரும்பேகடிமணமலரோகமலையின்கண்வளர்மணியே
ஒப்பிலெம்முயிரோயுயிரில்வாழொளியேயொளிமலிகளிசுகத்துருவே
செப்பருமினியகனிகளின்சுவையேதெவிட்டிடாவானந்தத்தேனே
அப்பனேயெங்களன்னையேமுன்னமளித்தருளாதியில்லானே. (௧௪)

அகன்றவீடென்கோவானந்தமென்கோவயனென்கோசிவனென்கோவறங்கள்
புகன்றதேவென்கோபொன்னுலகென்கோபொலிபுல்ம்பொறிமுற்றுமென்கோ
சகமெலாமென்கோசரமெலாமென்கோசாற்றுமீதனைத்துமன்றென்கோ
பகுதியைவிகுதிப்படுத்தியாண்டருளெம்பரமனையென்சொலிப்படிப்பேன் (௧௫)

சுருதிகள்கருதுஞ்சொன்னமேயென்கோசுழுமுனைவழியொளியென்கோ
மிருதியேயென்கோமிளிர்சுடரொன்கோவிசும்பென்கோமண்ணென்கோமேலோர்
கருதிடுகடவுளதனேயென்கோகணக்கறுசமயிகள்காணா
ஒருவனேயென்கோயுளவெலாமென்கோவுன்னையென்னுரைத்துரைத்தோய்வேன் ()

யானெனதென்னுஞ்செருக்கினால்யாண்டும்யாவுமாமுடல்களையெடுத்தேன்
வானெனப்புவியிதாமெனநிரயமடையெனமாதர்கள்யோனி
தானெனவிதிநிடேதமில்லாமற்றரந்தரமவைகளிற்சாய்ந்தேன்
கோனெனநின்னைக்குறித்திடரொழிக்காக்கோதுளேன்றனைப்புரந்தருள்வாய். (௧௭)

உச-வது. தில்லைக்கோவிந்தராஜப்பெருமான் சேவைசாதித்தருளியபடலம்.

அத்தவிப்பிறப்பாமாழியைவறுத்துன்னடிநிழலிருந்துஞற்றடிமை
முத்தியையருடியென்றுமன்னில்லாண்முறைறமுறைறவாழ்த்திவினவற்
கொத்தவெம்மூவாவொருமுதல்கருணையுகப்புடனவரிருவருக்கும்
கத்துறும்மறையுங்கடவுளர்குழுவுங்காணரும்பெருங்கதிகொடுத்தான். (௧அ)

மீளும்வெம்பிறவிவிடுக்கிலாவீட்டைவிமலன்பாலுற்றமன்மீண்டும்
ஆளுமாண்டவனையடிபணிந்தையவடியனேனிவ்வனத்தமர்ந்து
கோளொறுத்திடுகோவிந்தகோவிந்தவென்றயான்கோதில்சங்கற்பம்
நீளுறச்செய்யுமமையத்துணித்தநிமலநீயெழுந்தருளியதால். (௧௯)

நாளுமிவ்வபிதானத்துடன்றில்லைநற்குறும்பொறையின்கணண்ணி
வாளுறழ்மலராணித்தியமுத்தர்வானவர்முனிவர்கள்வாழ்த்த
நீளருள்புரிந்திங்கர்ச்சையாயருடிநெடியவவெனவினவதற்குக்
காளநன்மேனிக்கண்ணனவ்வாறேகருணைசெய்தர்ச்சையின்மகிழ்ந்தான். (௨௦)

எம்மருஞ்சோதியண்ணனீமாதோடென்பதியிருத்திவாவென்றே
அம்மருஞ்சுரர்களலர்பெயமுரசமார்த்திடவணங்குகணடிப்பக்
கம்முறுஞ்சிவனுங்ககனருமுனிவர்கணங்களும்பிரமரும்போற்ற
இம்மகியிறைறவனீடிலாவீட்டிலெய்துறவகண்டமேயினனால். (௨௧)

கோமகன்றுதித்தவண்ணந்தமலன்குண்டலிபடுக்கையிற்றலை
மாமகணிலமாமகள்வனமகளேமுதற்பரிசனமெலாமருவத்
தாமமார்குரிசிறடமலர்த்தில்லைத்தலமதிற்கண்டகங்களிப்ப
வாமமாமனைவிதன்னுடனருச்சித்தன்புடன்வதிந்தனனவணே. (௨௨)

பொன்னிமாநதியைப்பெற்றபேறடைந்தபெரியவர்பெட்புறவெம்மான்
பன்னகப்படுக்கையுகந்தமலைகண்மார்பரிசனத்துடன்பழையவர்க்கும்
முன்னவனுகியமைந்தடியவர்கண்முன்னியவண்ணமாங்குற்றுன்
மன்னவன்மனைவியோடுகண்டேத்திமகிழ்பலியீந்தகமகிழ்ந்தான். (௨௩)

அல்லலற்றவிருமாக்கமீந்தளிக்குமாற்றலோனடியவரிச்சை
இல்லையென்னுமலிலங்கினன்றில்லையினிலிதுதெரிதியென்றிசைத்தான்
வல்லனும்பிரமனென்றுமாதவர்க்குவகுத்தனன்சூதமாமுனிவன்
சொல்லயாமியற்றுமிக்கதைபடித்தார்சூழ்பொருளுறத்துலங்குவரோ. (௨௪)

உச-வது - தில்லைக்கோவிந்தராஜப்பெருமான் சேவைசாதித்தருளியபடலம்முற்றிற்று.

ஆக படலம் உச - க்கு திருவிருத்தம் - எஎ௫.

௨௫-வது. புண்ணியானுபவர்களைக் கண்டபடலம்.

கற்றதனாலாயபயனெம்பெருமான்றிருவடிகள்கனிந்துபோற்றல்
உற்றதெனவுரைநூல்களுணர்ந்தறிவிற்சிறந்தமுநியுயர்கவேரன்
நற்றவத்தாலெம்பெருமானண்ணியவன்கருதுபதநல்கிச்சென்ற
பிற்றையவன்மனைவியுடன்பெருவீட்டுக்கேகுழிக்காண்பெற்றிகேண்மோ. (௧)

இருள்சேருமிருவினையுஞ்சேராதவிறைவனருடில்லிக்கானில்
பொருள்சேரும்பூமகளாராதியாம்பரிசனங்கள்போற்றோங்கர்ச்சை
அருள்சேர்ந்துவிளங்கிடலையரசனறிந்தகமகிழ்ந்தாங்களவில்காலம்
தெருள்சேர்ந்தபலிவிழவுமுதலபுரிந்திருந்தாக்கைதீர்ந்தான்மாதோ. (௨)

தனக்குவமையில்லாதான்றருள்சேர்ந்தபெருஞானச்சவியான்மிக்க
மனக்குவந்தமனைவியுடன்மலவுடலைமாய்த்துமிளிர்வழியின்மேவிக்
கனக்கும்வகைக்கடவுள்விமானம்மிவர்ந்துபெருந்தேவர்கனிந்துவாழ்த்தச்
சினக்கும்வகையில்லாமாச்சுகவசண்டநெறிபிடித்துச்செல்லலானான். (௩)

வேறு.

புகலருங்கதிரினொளிதழைவிமானமேறிமேற்புண்ணியர்புகழப்
பகலவன்பதத்தைப்பிற்படக்கடந்துபண்ணவரவரவர்பதத்தில்
இகலறக்கொடுபோயிறையடியவர்கட்கின்புறுதுதிபலியியற்றல்
சுகமுறவேற்றுமகிழ்வுறப்போங்காற்றூதர்மாடுறவருமியமன். (௪)

மாலடியவரின்வருகைகொலென்றேமறலிவந்தேத்திநன்முகமன்
சாலவேபுரிந்துதாழ்ந்தெமதையதமியனேன்றடநகரண்மி
ஏலயாணியற்றும்பூசையேற்றருளினேகிடல்வேண்டுமென்றேத்தற்
காலமார்தாலமனைத்தையுமருந்துமழகனதடியவனுவந்தான். (௫)

சென்றுசெய்சிறப்புக்கண்டுகொண்டவனற்சேண்வரவிடையளித்தன்னான்
நன்றுகொடுதேர்பின்வரநாநாமறுகுகணடந்துநாரணனார்
தன்றுயரகன்றமாட்சியினருளிற்சமைந்துளதடநகர்வளங்கள்
வன்றுயரகலக்கண்டுகொண்டாங்குவாழுநல்லறத்தனைக்கண்டான். (௬)

தொடரணியனைத்துமணிந்தொளிர்மேனித்தூயனுமன்னவனியம
படர்தமைநோக்கியிவர்களம்பரமபதத்தினில்விளங்குவார்போல
இடரகலமுதபாணிகளாகியெரிமணிகுயிற்றுபூணுடைச்
சுடர்படராழிமிளிர்ந்துளாரொன்கொல்சொல்லுமினெனவவர்சொல்வார். (௭)

மனநலமாட்சிமிக்குளவேந்தேமறவினையனைத்தையுமாற்றி
இனநலமாட்சியிலக்குமிநாதனிணையடிபரவினர்தமக்குத்
தனகனவத்துவாகனமாடைசழன்மணிப்பூணிலம்வீடு
மனமலரமுதுமுதலவீந்துயர்ந்தமாட்சியரிவர்தமைக்காணீர். (௮)

அல்லவைதேயவறத்தினைப்பெருக்கும்றப்பயனமைந்துளநூல்கள்
சொல்லியகாவலோர்தமக்கினியசுகமுறச்சொல்வழாதென்றும்
நல்லியன்மேடைவயல்புயல்சோலைநகைமணியிழையுடைமுதல
இல்லெனாதீந்தன்னவர்திருத்தொண்டேயினிமையிலாற்றினரிவரோ. (௯)

ஆதுலர்க்கன்னமோதுவார்க்குணவீந்தாடைநீர்சோலைகளமைத்தோர்
தீதிலாவிலங்கிற்காவனவீந்தோர்தின்பொருளளித்தவர்தீனர்க்
கோதுறுமருத்துவஞ்செய்தோர்யாருமொழிந்துளபிணத்தினைச்சுட்டோர்
ஏதிலார்மகவைவளர்த்தவர்மருத்துவஞ்செய்தோரொழிலுறக்காணீர். (௧௦)

பிறர்துயரகற்றிப்பேணினோரையம்பெட்புடனிட்டுண்டோர்பெருநூல்
அறத்தினையார்க்குமறிவித்தோரிதிகாசத்தினைக்கேட்பித்தோரறைந்தோர்
மறத்தலற்றொருவர்நன்றியையினைந்தோர்மடந்தடஞ்சாலைகள்வைத்தோர்
ஒறுத்தல்செய்தவர்க்குமுதவினோர்துறந்தோர்க்குகந்தவரொளிர்வதைக்காணீர். (௧௧)

புண்ணியநதிகளாடினோரினியபூவலம்வந்தவர்போற்றும்
கண்ணனார்தலங்கட்கேகுவார்க்கானகனகங்களீந்தவர்காரின்
வண்ணனார்சினகரஞ்செய்தோர்பணிந்தோர்வாழ்த்தினோர்போற்றினோரறத்தை
எண்ணினோரவர்கட்கியல்வதையீந்தோரின்புறவாழ்வதைக்காணீர். (௧௨)

அக்கினிட்டோமமத்தியக்கினிட்டோமம்முத்தியம்மதிமாட்சி
அக்கினியாதேயம்வாசபேயமக்கினிகோத்திரம்வேத
முக்கியமானசாதுர்மாசியமேமூர்த்திகண்மகிழ்சிரார்த்தம்மே
முக்கியதரிசபூரணமாசமுதலியபுரிந்தவர்பொலிவார். (௧௩)

தந்தைதாய்க்கினியர்தமையருக்கினியர்தரணியாளரசருக்கினியர்
விந்தைசேர்குருவிற்கினியர்பெண்ணீந்தார்க்கினியர்வேதாதிநூல்விரிக்கும்
அந்தணர்க்கினியரடக்கமேபொருளாயமைந்துளார்க்கினியராசாரம்
முந்தினர்க்கினியருயிர்கண்மேற்கருணைமுதிர்ந்தவர்வாழுறக்காணீர். (௧௪)

அறிவறிந்துள்ளமக்கட்பேறுள்ளாராட்சியாங்கற்பெனுந்திண்மைப்
பொறைமுதலமைந்தபூவைமாருள்ளார்புகழுநல்லறக்குணம்பூத்தார்
இறைவனையெண்ணுமவர்கண்மேன்மானமிட்டோரியல்குடிக்கேற்ற
மறையினையகலாதோதினரின்பவாரிதிதிளைத்திடல்காணீர். (௧௫)

சொன்னசொன்மாறாத்தூயருமொருவர்துணுக்குறவுரைத்திடாதவரும்
மன்னிடுவஞ்சமாற்றிடுமவருமாலடியவர்தமைக்கண்டு
பின்னமின்மனத்தாலெழுந்துபசரித்தபெரியரும்பெரியர்மேலென்றும்
துன்னிடுவெகுளிசெய்கிலாதாருஞ்சுடர்சுகந்துய்த்திடக்காணீர். (௧௬)

அடக்கமேயமரருக்குளேயுய்க்குமென்றநூலாய்ந்தனுட்டித்தார்
தொடற்கருந்தீயருறவிலார்தூயர்தொடர்பினோர்தொன்மநுநீதி
விடுத்திடாவிமலர்விளைபொருட்டீயவிருத்தியில்விருப்பிலார்வீணில்
கடுக்கிலார்பயனின்மொழிசொலாரர்கோளிற்கருத்திலார்விளங்குதல்காணீர். (௧௭)

இனியநல்லறத்தையியற்றியேயெம்மானின்கதைசொன்னவர்தமக்கும்
தனியனுமொப்பீடறபெருமாற்குத்தமிழ்க்கவிசாற்றுபாவலர்க்கும்
புனைபொருள்வீடுபூமிபூணுடைமுதலியபுண்ணியம்புரிந்தார்
வனையொளிவிமானத்தழிவிலாவின்பவாரியின்மகிழ்வதைக்காணீர். (௧௮)

கணவனேகண்ணன்மாகுருமுதலகதியெனநினைந்தவன்கழறும்
வணமளவில்லாவிடும்பைகள்புரிந்தனுான்றுநன்மனமகிழ்வோடு
குணமியல்செய்கைகோணிலாதறத்தைவளர்த்தநற்குலமகடம்மை
மணமலர்கொண்டுவானவர்பணியவாழ்சுகம்வீறுதல்காணீர். (௧௯)

காதலனுருவையகன்றுகண்டறியார்கற்பினூறவலாதறியார்
நீதமில்பொருட்குமாட்டிபூண்மாலையுணவுவீடாவனநிறைந்த
யாதுளவவைகடமையனுவேனுமன்னியரிடத்திச்சையிசையார்
மாதரானவர்கண்மாழைவிமானமகிழ்நரோடுலவுதல்காணீர். (௨0)

சத்திரஞ்சாலையேரிநீர்கூவங்கால்கயஞ்சலதரந்துறவு
வைத்தவரன்னதானமேமுதலவழங்கினர்மைந்தர்கண்மலிய
உத்தமமானவித்தைகள்பயிலற்குரியநற்கழகமேயோங்கற்
கெத்திறத்தேனுமியற்றினர்களிப்போடிருந்திடன்மன்னவகாணீர். (௨௧)

முத்தர்கண்மகிழமுப்பஃதிரண்டாமறங்களைமுயற்சியினியற்றிப்
புத்தியின்மகிழ்ந்தபுண்ணியரினியபுங்கவர்க்குதவியபுனிதர்
பத்தர்கண்மகிழப்பணிந்தவர்மனக்குப்பரிவுறவுபசரிபண்பர்
சத்தெனுமறையோராசியைப்பெற்றோர்தளர்விலாவின்புறக்காணீர். (௨௨)

நம்பெருமான்றனினியநான்மறைசேர்நாவர்க்குநற்பசுவோடு
வம்பவிழ்மாலைசந்தனந்தூபமுதலியவருக்கமிட்டேத்திச்
சுந்தரத்தாறுசுவைமணியிழைத்தபூண்கலைசோடசமீந்தார்
உம்பர்கள்பரவவோங்குபீடினராயுச்சிராயத்துறல்காணீர். (௨௩)

கேசவற்கினிமையாகவாதுலர்க்குக்கேழுறவுதவிகள்புரிந்தோர்
நேசரானவர்கடமைவஞ்சியாதார்நெறிவழாதுலகினிலிறந்தார்
ஈசனூர்தலங்கட்கேகுவார்க்கியல்வதீந்துளாரியறமைமிகுந்தார்
வாசவன்மகிழ்கண்ணோட்டத்தாலழகின்மலிசுகம்பொலிவுறல்காணீர். (௨௪)

குல்லைவாழனகனுருங்கோவிந்தனருள்பெறச்சிவனடங்குயிற்றித்
தில்லைமான்மியத்தைக்கூறக்கேட்டுறநற்றொண்டுறப்பழிச்சுறத்தினமுஞ்
சொல்லச்சீகோசஞ்செய்தெண்டிக்கோதச்செழும்பொருளுதவிடுசெல்வர்
அல்லலற்றகலாவுறவினருடனேயளவறுசுகமுறல்காணீர். (௨௫)

அன்னியர்பொருளைநஞ்செனமதித்தாரவர்மனைமடந்தையர்தம்மை
அன்னையினினைத்தார்பிறர்மனநோவவறைந்திலார்மருத்துவத்தருளார்
தன்னையென்செயினும்பிறர்க்கொருதீமைதமைநினைந்தாற்றிலார்தாழ்வாய்த்
தன்னையென்நாளுநினைந்துளார்விளங்குந்தரத்தினைத்தார்ப்புயகாணீர், (௨௬)

கற்பவைகற்றுக்கேட்பவர்க்குரைத்துக்கண்ணனைக்கருதிடுநெறியில்
அற்புவைத்தேத்தற்காவனவாடியமைத்தவவ்வழிவருமமலன்
பற்பமென்பதப்பூப்பற்றியுய்ந்திடற்கேயுடலெனும்படிபலநூல்கள்
விற்பனையோடேயுரைசெய்நாவலர்கண்மிகுசுகம்வீறுதல்காணீர். (உஎ)

அன்னைதாய்தந்தைதகுருமுனோன்வித்தையருளினோனன்னமீந்தளித்தோன்
முன்னமோருதவிசெய்துளோனல்லமுறைவழிகாட்டினோன்மூத்தோன்
பின்னவன்மனையைப்பெற்றவன்பேதைதீர்த்தவன்பிழையிலாவார்த்தை
சொன்னவனிவரையவமதியாதசுகுணரைக்குளிர்ந்துறக்காணீர். (உஅ)

புண்ணியமூர்த்திதீர்த்தநற்றலத்திற்போனவர்புண்ணியகாலம்
எண்ணியேதானதருமமாற்றினர்கள்யாகமேபுரிந்தவரீசன்
நண்ணியநல்லோர்தரிசனையுற்றோர்நாரணற்கடியரானவர்க்குப்
பண்ணியவுபகாரத்தராமிவரவ்விந்திரனகர்புகல்பாரீர். (உகூ)

மடுத்தபேரின்பவாரிவீழ்ந்தனராய்மரணமின்மாழைமின்மேனி
அடுத்தநன்மணப்பூண்மாலைபொன்னுடையமிர்தமுண்டமரர்கண்மருவ
எடுத்திடுகிரணவிமானமீதிவர்ந்தேயியற்பலபலவிதசுவர்க்கம்
விடுத்திடலாங்காங்கரசனன்னுரைவிளித்ததிசயித்திவைவிளம்பும் (௩0)

சுருதிநன்மிருதிசுகுணமாமிதிகாசங்கள்புராணங்கடொகுத்தல்
கருதியபெயர்கணித்ததையுறுதியென்றெணிக்கரிசறுநெறியால்
பொருதியதருமகுணத்தராயிருந்தப்பூதலம்விட்டுவந்தன்றோ
மிருதியின்மேலாந்தேவராயினரொன்றரசனும்வியந்துவிம்மினனால் (௩க)

விரைகமழ்துளபமணிகழற்பரத்தைவிடுகிலாவீணைமாமுனிவ
குரைகடனிலமாள்குரிசிலெம்பெருமான்பேர்சொலிநரகவாசிகட்குக்
கரைகடந்திருக்குமின்பளித்ததனைக்கண்டைகொலென்றுபின்னருமப்
பிரமனுருரைத்ததில்லைநாயகன்றன்பீடினைச்சுருதனும்பேசும் (௩உ)

உரு-வது. புண்ணியாநுபவர்களைக்கண்டபடலம்
முற்றிற்று

ஆ படலம் - உரு - க்கு, திருவிருத்தம் - அ0எ.

உசு-வது. நரகாநுபவிகளைக்கண்டபடலம்.

இடும்பைதனக்கேகலமாவிசைகுடும்பவேதைவெறுத்தீசற்கன்பாய்
அடும்புலனையடும்பொறியோயரசனறம்புரிந்தவரையறிந்தபின்னர்க்
கொடும்பவக்கீழ்ப்புலையர்கொளும்வேதைதனையறிந்தக்குரிசின்முத்தி
விடும்பவர்கள்படுங்கேதங்கண்டாற்றுதவசமுற்றவிதமுங்கேட்டி. (க)

வேறு.

முத்தினைநிகர்த்தமுறுவலார்கமலமுதல்விதன்முதல்வனுக்குகந்தோய்
ஒத்தநன்மனத்துமன்னவன்மனையோடுவெப்புடனறம்புரிந்தின்பக்
கொத்துடன்கண்டுமகிழ்ந்தவர்க்கினிமைகூறித்தன்மாடுசூழ்பவரை
மொத்துறத்துயரின்மூழ்கிவர்யார்கொலெனவவர்மொழிதன்மேயினரால் (உ)

வேறு.

மறத்தைவிடுத்தின்னாச்சொல்வெகுளியழுக்காறறுத்துவாஞ்சைநாறிச்
சிறப்பளிக்குஞ்செல்வமருளறத்தினூஉங்காக்கமிலைச்சீவர்க்கென்னல்
ஒறுத்தவராயோரறமுமுணாற்றுவுலோபர்களாயுயர்மாண்கல்வி
வெறுத்தவராய்விஞ்சையரைப்பஞ்சையராய்விண்டவராய்வீழ்ந்தார்பாரீர் (௩)

உள்ளுவதெல்லாமளிக்குமுயர்வைணவத்துதித்துமொருவன்றன்னை
எள்ளுதல்செய்தவனுக்கீடெனச்சிவனையயனைநினைந்திழிபுன்றீய
கள்ளிவயிற்றுதித்தவரைக்கனலதிருங்கொடுநிரயக்கழுநாய்பேய்வாய்க்
கொள்ளிவழிக்கிருமிகொழுஞ்சீவழியக்குலைநரகிற்குடியிட்டாரால். (௪)

உளக்கமுடனரிபதத்தையுன்னுவோய்மற்றமுடியினுறுதிகண்டோர்
ஆக்கியநூலுணர்ந்தபடியரிபரமனென்றபன்னூலறைந்தோர்தம்மை
வாக்குமனமாதிகளான்மாசுகுரையிழியினர்மாலத்தீயர்
தீக்குளனவரதமெரிபுழுவழியுமலமுண்டுசோர்வார்பாரீர். (௫)

திருவாழிவளைதரித்தான்றிருவைமிடறிட்டணைத்தானிற்கவேறோர்
பெருமாலின்பரபுருடற்பேணியின்பம்விரும்புகின்றபேதைமானக்
கருவானபேரையெலாங்கண்ணனெனவெண்ணியலகில்லாக்காலம்
தெரியாதுதீக்குளித்துத்தேம்பியழும்புல்லரிவர்தெரிதிர்மாதோ (௬

கல்லாதகடையரிவர்கற்றுணர்ந்தார்க்கிணையெனத்தாங்கற்றதீதாம்
பொல்லாதபுலைநாவாற்புல்லர்தமைத்தீப்பாட்டாற்புலம்பிச்சாம்பி
ஒல்லாதவோலமுடனுயர்கழுவிற்கற்காணத்துழியில்வெண்சீச்
செல்லாதவாயொழுகச்சேதித்தறுடித்தறனைச்சேர்ந்துபாரீர். (௭)

வேறு.

கதிரவனுக்கொளியிலையென்றெண்ணிலாதகண்ணிலிகண்மொழிந்தாலுந்தேசங் கண்டீர், முதிர்சுவையின்றென்றுசாறுவினார்கண்மொழிந்தாலுங்கண்ணனையச்சேதிமன்னன், விதியுறுபற்பலவசைகண்மொழிந்தஞான்றும்விழிநாமெய்ஞ்ஞானமுளோர்மெய்யென்றுறிச், சதியுறுமவ்வாறிழுதைமக்கண்மேலோர்தமைப்பழுதுகூறியிங்குச்சாம்பனோக்கீர். (௮)

இருணீக்கியளிக்கவல்லபெருமான்றன்னையேத்துதியொன்றவரைமிகுமேளனத்தான்
மருணோக்கிமாய்ந்திழிந்தார்நெட்டூசிக்கண்வறுத்தமணன்மடைக்கிடைக்கண்மரிமாத்
தெருணோக்கிற்கழுமுண்மீதாழிப்புண்சீழிரத்தமலத்தேயிடுமெத்தேக்குமள்ளல் [தீயில்
அருணோக்கிலளவிலாக்கும்பிபாகத்தாங்குழிக்கணலந்தழுதலண்மிநோக்கீர் (௯)

நன்மொழிகடமைப்புகன்றநம்பினார்பானற்பொருள்கடமைப்பறித்துநானலேனென்
றின்மொழியையீந்தவர்கள்வயிறுதீயவிசைத்தவனையிணைந்தவரையீர்த்துநீங்காப்
பன்மொழியிற்பழித்துடலைக்கீறிப்பீறிப்பரித்தறுத்துத்துறப்பியுடல்வறுத்துப்பக்கி
தன்மொழியிற்கொடுத்தாருநரகத்தீவாய்த்தாழ்ந்தழுதுதவித்தலறுந்தரத்தைப்பாரீர். ()

உள்ளவழக்கறியாதுபக்கபாதமுறைத்தவனுமுரியவிருவரின்பாற்பொன்னைக்
கொள்ளவழக்கிட்டவனுமொருவரீந்தகோதனத்தைக்களவாடிக்கொண்டுண்டானும்
கள்ளமிலாரிடத்துநன்றாக்காட்டியன்னார்கல்லங்குபழிபுகன்றானுங்கனலுந்தீவாய்ப்
பள்ளமதிற்பதைபதைக்கக்கிருமிகிடம்பழுத்துடலம்புழுச்சொரியப்படுதல்பாரீர். (௧௧)

குருபரனென்றடிபணிந்தெம்பெருமானின்பக்குணகணநல்லமுதளிக்கவுண்டபி
ன்னைக், குருவினைப்பற்பலபிதற்றிப்பிழைகொடியகொடும்பாதகன்றனைக்கொய்தவ்
வாயில்,எரியிணரின்குழம்பைபழுடைமலத்தைதச்சீயையிழியிரத்தத்தடியையிருப்பாணி
தன்னை, எரியிணரினெழுவறுத்துக்கழுக்களிட்டமிடைந்துண்ணவிழிகளைநாயீர்த்தல்பா
ரீர். (௧௨)

ஆறலைத்ததீயரிவர்கருவைக்கொன்றவாதரிவர்நஞ்சினைவைத்தழித்தாரின்றோர்
பேறலைத்தபேயரிவர்சிசுவைக்கொன்றபிணியரிவர்தாயத்தார்க்குரிமையீயாக்
கூறலைத்தகொடியரிவருரைச்சூறைகொடுத்தரிவர்கட்குடியிற்குலவிவெய்தாத்
தூறலைத்ததுட்டரிவர்வாசித்தோரைத்தூடணையிட்டழிவரிவர்தோன்றலென்றார். ( )

திருவையுரம்வைத்தபரன்றொண்டர்தம்மைத்தெவ்வொனமதித்தவிவர்தேவதேவன்
உருவையழித்தழியாதநரகத்திக்கேயுரிமையுற்றாரிவரவன்செய்யுதவிதம்மை
அருமையெனநினையாதன்னவன்றடற்காசுரைத்ததீயரிவரர்ச்சைதன்னைப் [றார்
பெருமையெனநினையாதுபிதற்றிமாய்ந்துபிறங்கெரிவாய்ப்பிறழுமிவர்பேணிரொன்

காப்புறமுப்புரம்புரக்குங்கடவுட்கானகானெறியிற்கலந்திருந்துமந்தோமிக்க
தீப்புறத்தாரினுங்கடையனுகிமாலின்செல்வர்தமைப்பழுதறைந்தாய்சீச்சீவாநீ
சாப்புறத்திவதைப்புழுக்கச்சாம்புதேம்புவென்றுரைக்கத்தக்கவனைச்சார்ந்தபேரை
ஆப்புறநாக்கிழியவடித்துரைத்தலன்றரமழுதுலர்தல்கழுகீர்த்தலரசகாணாய். (௧௫)

வேறு

தன்மனையழுங்கப்பிறன்மனைவிழைந்தான்றயவுடனொருவருக்குதவி
சொன்னபினதனைச்செய்கிலாத்தோடன்சோரஞ்செய்துயிர்வளர்தீயன்
அன்னையாதியர்கள்பசித்துளராகவருந்தினனருந்தகில்லாத
பின்னமேயுண்டபேதைமையாளன்பெண்ணைவிற்றுண்டவன்காணீர். (௧௬)

நன்றியைமறந்தநாசகனவர்க்கேநலிவினைச்செயநினைகட்டன்
கன்றிடப்பிறரைநிந்தைசெய்கடியன்காரணமின்றிக்கண்டவரை
வன்றுயர்புரிந்தமடமகனிருவர்வஞ்சமினட்பினையகலக்
கொன்றதோர்கொடியன்கொடுத்ததில்லென்றகோதுளன்புலம்புதல்காணீர். (௧௭)

காயினுக்கினியநாளுநல்லவரைநவையுரைத்தடியொடுமடியும்
பேயனுக்கறமில்பிணியனுக்கீனபீசனுக்கிழிகுலப்புலைதோய்
நாயினுக்கானசழக்கனுக்கெம்மான்றாக்கருட்கென்றுமாகாத்தீத்
தோயினுக்கானதுட்டனுக்குகப்பார்தோயுமேழ்நரகினைக்காணீர் (௧௮)

பிறர்பொருட்கேங்கும்பேதையர்பிழைகள்பேசியேசுகித்திடுமீனர்
குறைதுரைவஞ்சக்கோளர்பொய்ச்சான்றுகூறிடுகோதினர்சோற்றைக்
கறைபடவிற்றகரிசினர்கவிகட்காசுபெய்மாசினர்மறைவாம்
மறையினைப்பழித்தார்மாநரகத்திவதைவதைமன்னவகாணீர். (௧௯)

நல்லவில்லாளைநைவரச்செய்தநாத்திகனஞ்சினுங்கொடிய
அல்லலிலாழ்த்தும்பரத்தையைவிரும்புமறிவிலானனவரதமுந்தன்
தல்லியையிகழ்ந்தகேளிரைநிந்தைதந்துளான்றாளறப்பிறர்தம்
இல்லினிலுண்டுயிரோம்புமிழிவினன்படுந்துயர்காணீர். (௨௦)

நெறியிலாநெறியிற்பிறர்நிலமில்லந்தோட்டமேயாதியாநிலங்கள்
அறிவிலாப்பேராசைப்பிசாசிடிக்கவாடிவல்வழக்கினிற்கொண்டோன்
குறியிலாவிந்தக்கோதுளோன்றன்பாற்கூடினோன்குடிகளைக்கெடுக்கும்
வெறியுளோன்வேசைதனைப்புணர்ப்பிக்கும்வெய்யன்வாழ்நரகினைக்காணீர். (உக)

மடமிகுமாலனாகிநேயன்றன்மனைவியையவணங்குசீடன்றன்
இடமிகுமனையையிட்டர்கணிதியையியைபினான்மனையையிச்சித்தற்
குடையனாயலகிலாப்பெருநிரயம்வீழ்ந்தகோரப்பெருங்கொடுந்தீக்
கடமெனவுற்றவறத்தின்விரோதக்கடையனையடுத்தவர்பலரால். (உஉ)

பதிதனைப்பழித்தபாதகிபதியைப்பலபலவாகநிந்தித்தப்
பதிமனம்வருந்தப்பண்ணிய்பதகிபதியுணாதிருப்பவேயருந்தும்
விதியிலாக்கொடியவேசைகணேசம்விரும்பியவ்விதியினைப்பயந்த
விதியெனும்விண்டுவினுக்குகப்பில்லாவிழுப்புளாள்படுந்துயர்காணீர். (உங)

அதிபதியாந்தன்பதிதனக்கழகோடத்தமுமாண்மையுமுதலாம்
விதியிலானென்றுநினைந்துவேறொருவன்றனைப்புணர்நீசமார்பேதை
சதிசெயாமாமிமாதுலன்மூத்தான்றாய்முதலார்தமைப்பழித்தாள்
விதியிலாதென்றுமினுக்குடலுள்ளாள்வீழ்ந்தழுபெருந்துயர்காணீர். (உச)

குலத்தினைக்கெடுத்தோன்குருவினைவிடுத்தோன்கொளுமனைக்கியையிலாக்குறையோன்
நலத்தினைக்கெடுத்துக்குடிகள்பாற்பகுதிவாங்கினோனன்மணமதனை
அலத்தினோனெறியையடக்கினோன்பசுவையடர்த்தினோன்சிசுக்களையவியப்
புலத்தினோன்பெண்ணையாணினைவதைத்தோன்பூதியிற்புரளுதல்காணீர். (உரு)

படுபழிபாவமீட்டலிலிறையாப்பகர்கொடும்பாவியாம்பறையன்
கொடும்பழிகேண்மைகொண்டவரெரிவாய்க்கும்பிபாகத்தினிற்புகுந்தே
அடுந்துயருழப்பவழற்புழுநரிதேணாய்கழுகட்டையேயலகை
இடுமராக்குளவிபுலிகுடாவடிகளீர்த்துணலீங்குநீர்காணீர். (உசு)

குடிகளிற்கொள்ளிவைத்தவரிவர்கள்குளங்களையேரிகால்வாயை
இடித்தவரிவர்களாற்றினைமறித்தவீணர்களிவர்கண்மேலோரைக்
கடுத்தவரிவர்கள்கருணையில்லாமற்கரந்துபற்பலர்கடம்பொருளை
எடுத்தவரிவர்கள்ரௌரவாதிப்பேரெரிநரகழுந்துதல்காணீர். (உஎ)

உணர்வகன்றுந்திமன்புணர்வித்திற்குதித்துத்தீமைக்குக்குப்பையனாய்ப்
புணர்பலமாதர்தமைச்சிலர்க்கிணைத்துப்புன்பிணவயிற்றினைப்பேணும்
குணனிலாக்கழுதைக்குக்கலைக்கேண்மைகொண்டவர்கும்பிபாகத்தில்
வணர்வளரெரிமாக்கணங்கள்புட்கணங்கண்மாந்தியுண்டாடுதல்காணீர். (உஅ)

பஞ்சமாபாதகத்தவரெல்லாம்படுகொடுநரகினிற்படுதல்
அஞ்சனமேனியண்ணலுக்கடியீரறிதிர்நற்கவிகள்சொன்னூலில்
வஞ்சகக்குறையைவரைந்தவன்கண்ணர்வதைவதைக்காணீரெஞ்ஞான்றும்
துஞ்சுறுப்பிடிபாதகத்தினராகித்தொலைந்தனரிவர்தமைக்காணீர். (உகூ)

குறியினிலாப்பைபக்கொட்டுவர்சிலரைக்கொதித்திடுமெழலினிற்புரட்டி
முறிந்திடச்சிலரைமுகத்திணைத்தறித்துமோதுநாய்க்கிடுவர்சிற்சிலரைக்
கறித்துணக்கழுக்களிழுத்துணுஞ்சிலரைக்காகங்கள்கௌவிடுஞ்சிலரை
உறுத்திடுசூலக்கழுக்கொளுஞ்சிலரையுத்தமவிவர்துயர்காணீர் (௬o)

பத்தர்களுரைத்தபணிசவளைவெறுத்துப்பாவிகடீமொழிதரித்தே
யத்தனையொருநாழிகையுமெண்ணுமலவேந்தலைந்தழிபொருளீட்டி
வைத்துவிட்டங்குவந்துயாமிங்குவாதனைபடமுடிந்திலையே
எத்தனைநாளோவிக்குழிகிடப்பதென்செய்வோமேழைகாளந்தோ. (௬௧)

இட்டியெம்பெருமானருணினைந்தேத்துமியலுடனுருகுகண்ணீரைக்
கொட்டுகோதிலரைக்கோதில்கற்பினரைக்குறைசொனுப்புழுமிகக்கொட்டித்
தெட்டியபேருட்சிறந்தவனென்னுத்தீநரகனைத்திற்குநவிரங்
கட்டியையடுத்தகடையர்கள்புலம்புங்கழிநரகிதனைநீர்காணீர். (௬௨)

வேறு.

தரையோடொருபோதமுதுசெய்தான்றருள்சேராதநவையதனுல்
கரைகாணுவெம்பீழைபடுகறையாறுனைக்கேட்டிறுத்
திரைசேர்பெருமான்றிருவடியைத்தினமுமறவேலென்றுவிதி
உரைசேர்மகவுக்குரைத்ததனையுரைத்தான்சூதன்சௌநகர்க்கே. (௬௩)

உசு-வது. நரகாநுபவிகளைக்கண்டபடலம்முற்றிற்று.

ஆகபடலம், உசு - க்கு திருவிருத்தம் - அ௪o.

உஎ-வது. நரகவாசிகளுக்கு
சுவர்க்கமளித்தபடலம்.

செந்திருவைச்சேர்ந்தபிராற்கினியனுனசெய்பொருண்மெய்ஞ்ஞானமுளதேசிகாநல்
லந்தணருக்கருந்தவருக்கினியசான்றோர்க்காய்தந்தைக்கறக்குழுக்கட்காகாத்தீமை
விந்தையெனச்செய்தகொடுவினையுளாரைவிறலறமெய்க்கடவுள்வதைவிரிவைக்கண்ட
சுந்தரமன்சகியாமலரிபேர்சொல்லிச்சுவர்க்கமவர்க்களித்தவிதஞ்சொல்வல்கேட்டி. (௧)

நகையீகையின்சொலிகழாமைவாய்மைநாணொழுக்கமெம்பிரான்பத்திஞான,வகை
வைராமுதலகுணமுற்றுமானமகிபனுணர்ந்திருவிழியைப்பொத்தியந்தோ, பகையெ
னினுந்துயரடைதலெவ்வாறின்பிற்பார்த்தலெனப்பதைபதைத்துச்சாம்பித்தேம்பிச்
சிகைகொழிக்குமணிமயவிமானமீதிற்றுடித்தேங்கியந்தோவென்செய்கேனென்றுன்.

வேறு.

இவ்வாறந்தோவந்தோவென்றேங்கிப்புலம்பியீன்றளிக்குந்
தவ்வாவமலனடியவனுந்தக்கோன்கலங்கியுயிர்சாம்பி
ஒவ்வாவவர்கள்யாதனையையுள்ளத்தடக்கவொல்லாமல்
செவ்வாய்மலர்வாய்மனைவியுடன்சேர்ந்தேமூர்ச்சைதெளிந்தெழுந்தான். (௩)

வேறு.

அருளாலனைத்தும்புரக்கும்மெனையன்
தெருளாருமாபத்தியுறுசெம்மறேசார்
பொருளானபொலிவானபுகழானதேவன்
சரணாரவிந்தந்தனிற்புந்திவைத்தான். (௪)

மாவிந்தனோவந்தமாபாதகத்தர்
நாவந்தவாறோதிநலியோதைகேளேன்
சாவந்ததேனன்றுசாவாரைநோக்கேன்
கோவிந்தகோவிந்தகோவிந்தவென்றான் (௫)

மூன்றானமறையுச்சிமூலத்தானத்துண்
மூன்றாமெழுத்தான்முளைத்தானைமுன்னி
மூன்றானவரிநாமமூன்றுமுறையோத
மூன்றானமலமற்றமூத்தோர்கள்போல. (௬)

வடியாதபவமூடமாபாதகத்தர்
விடியாதவினைநூறியுறுபீழைமாறி
விடியாதமுன்னுற்றவிருள்வீறுசோதி
படியாவரும்பானுமுன்னானபடியாய். (௭)

ஒளியுற்றவுடலோடுமுடையாடையோடும்
களியுற்றவுளனோடுங்கவினுற்றநகையால்
தெளிவுற்றமுகனோடுந்தேவாதிதேவன்
அளியுற்றவடியான்றனடியுற்றுபணியா. (௮)

மூவாதமுதலானமூத்தோன்பதத்தில்
ஓவாதநசையுற்றவுரவோனைவாழ்த்தித்
தாவாதசேண்வாழ்சுவர்க்கதானத்தே
நோவாவிமானத்தினொடிவேலைசென்றார். (௯)

மாநரகவாசிகளைமாகத்திலேற்றித்
தானிவருமானத்திற்றன்மனைவியோடும்
தேனிவருமாலையணிதேவருபசாரக்
கோனொடுகொடுக்கவருள்கொண்டவணகன்றான் (௧௦)

முத்திநெறிமேவியுயர்முத்தியுறலுற்றான்
பத்தினியினோடுபகர்தில்லிவனம்வாழ்வா
சத்திலறிவாய்முனிபின்சார்ந்தவெமதூதர்
அத்தனெனுமாவியமனாருமவையுற்றார் (௧௧)

போற்றுதல்செய்தையவிவண்போந்தவொரிராசன்
ஆற்றொணாவகன்றநரகார்ந்துளாரைநோக்கிச்
சாற்றொணாவருந்துயர்சகிப்பவரியானாய்
எற்றுளானடிக்கவளரீசனைநினைந்தான். (௧௨)

சந்தமுளதில்லைதனிறங்குவளர்மாகோ
விந்தவெனமூன்றுமுறைமேவவுரைதந்தான்
அந்தநரகந்தனிலழுந்தினரொருங்கே
சுந்தரவிமானமுடன்சேர்ந்தனர்சுவர்க்கம். (கரு)

இந்தவிதமெந்தவிதமெங்கண்மேலிரங்கித்
தந்தருளவேண்டுமெனவேதயவினேடே
அந்தகனவர்க்கருளினண்மினெனவோதி
வந்தவரலாறுணர்திர்மாமகதிமன்னேய். (கச)

மாமகதிமைந்தவெனமான்மகனுவன்ற
நாமமுளகாதையினைநற்சுருதியார்க்கு
நேமமுடனேதியறநின்றநிமலன்றன்
வாமமுளமந்திரவளப்பமருள்செய்வான். (கரு)

உஎ - வது நரகவாசிகளுக்குச்சுவர்க்கமளித்தபட்லம்

முற்றிற்று.

ஆகபடலம், உஎ - க்கு திருவிருத்தம் - அ௫௫.

உஅ - வது. மாலடியார்மாட்சிமைகூறிய படலம்.

ஆலடியினனுமலரானுஞ்சசியானும்
காலடிபெறற்கரியகண்ணனிருதாட்குத்
தோலடியதாகுமனதுற்றவர்காயே
மாலடியார்மாட்சிமைவகுத்துமறிவீரால். (க)

சண்டமிருகாவலியசம்பரசார்த்தூல
கண்டவுயிர்மாய்ந்துகுமௌதும்பரமாகால
எண்டிசையுணெம்மடிகளின்பிரகலாதன்
அண்டையுறவுற்றநமதாற்றலறியீரோ. (உ)

ஆகமழிதேவமிடனக்கமடனேடு
போகனிழிவேடன்புலமற்றிடுவெங்கள்வர்
சோகமிலசாமிளனேகத்தரிபந்துள்ளோர்
சாகவுநாமேகவுறுசான்றுணர்கிலீரோ. (ங)

வற்கலையுசைத்தவருவானவருமுன்னு
முற்கலனுநான்முகனுமுக்கணனுமூவாச்
சிற்பரமனுகுமரிநாமமதுசிக்தித்
தற்புடையசித்திகளுற்றமர்தலறியீரோ. (ச)

அந்தமறுமத்திருவமர்ந்தபரன்பேரை
எந்தவிதமேனுமெவரொம்முறையிலேனும்
வந்தவிதமாகமதிவைத்தவனையேகோ
விந்தவெனும்யாவரும்வீடுற்றதறியீரோ. (௫)

சிட்டர்மறைமுற்றிலுங்கோவிந்ததிருநாமத்
திட்டுமெகமாற்றுமினியன்றமணத்தாலி
கட்டுமினிறந்தவரைக்காடுகொடுவைத்தே
சுட்டிடுமினென்றுசுகன்சொன்னதறியீரோ. (௬)

வேறு.

காமமேவெகுளிமயக்கமென்றிவற்றைக்கடிந்துளநீத்தவர்காணு
வாமமாதலைப்பேரிறைவனதருணீர்மன்னிடுமாப்பெரிதான
நாமமஃதுரைத்தார்போலுமாதலினுனரகனுபவித்துளார்யாரும்
நேமமிலாதுதுறக்கமேபுகுந்தார்நீவிர்யாமென்செயக்கடவோம். (௭)

நம்மியவானைநாரணனளித்ததாதலானமதுபேர்மாட்சி
அம்மவவ்வெம்மானடியர்மாட்டவர்சொலழகியநாமமாட்டுக்கா
திம்மெனுவுயிர்களீர்த்துவந்துளர்களியலுமூவுலகினுநீவீர்
சும்மெனுதேகுமுழியவண்மிளிருஞ்சுத்தர்பாலேகனன்றன்றால். (௮)

மாதவனடியர்பாலணுகாதீர்மற்றவர்க்கென்குறியென்னில்
சீதரனிணைத்தாமரையடிபோன்றதிருமண்புண்டரமீராறிடத்தில்
சாதமற்றிருப்பான்பொருட்டிருபுயத்துத்தாழ்வின்மெய்ஞ்ஞானவீடளிக்கும்
நீதமுற்றெருளிருமாழிவெண்சங்கநிலவிரண்டுளவுளார்மாதோ. (௯)

நெற்றியில்வெண்மண்புண்டரம்புயத்தினிலவுறுமாழிநீர்நாவிற்
பற்றிடுமெறுவேயிருசெவிதனிலும்பரம்பொருளருட்குணபரணம்
உற்றிடுமெகட்டிலழகியவம்மானடியவருண்டருள்சேடம்
கற்றிடுகல்விஞானமேயொழுக்கங்கறையிலாவயிரமார்ந்துளவால். (௧0)

உடல்பொருளாவிமூன்றினைக்குறித்தேயுருத்திரனயன்முதலானை
இடமுறுமாபத்தெத்தனைவரினுமெண்ணிடார்பண்கிலாரிசையார்
திடமுளநம்போலியரையோர்பொருளாச்சொற்றிலர்சுத்தசத்துவத்தார்
தடமுளவலிமிக்குள்ளிர்காளவர்பாற்சாரன்மின்சாரன்மின்சரதம் (௧௧)

இன்னநல்லிலக்கணத்தின்மிக்குற்றபெரியர்பாலிழிபழிகுரைக்கும்
நன்னயமற்றவிழ்குலப்புலையவீனநாய்க்குழுவின்ர்நலியப்
பன்னியன்னவர்தம்பாற்பிடரொடியப்பற்றியேசுருக்கிடவீர்த்துத்
துன்னுவெவ்வாளாலளவறுகூறுசெய்தவர்சிரத்தினைத்திருகீர். (௧௨)

பின்னமிட்டருநாய்கழுகுகள்பிடுங்கப்பீறல்செய்தவர்கொடுநாவைக் [டி
கொன்னவிர்கூர்வாட்கொடுதுணர்த்தழற்செந்தீப்புழுக்குறைத்துணக்கொட்
மன்னிடுகழுவிற்செக்கினில்வறுத்தமணலினின்மாறெளரவத்தீத்
தன்னிலகோரமாகியமீளாநரகினிலுதைத்துயிர்சாய்ப்பீர். (௧௩)

நீதறவுரைத்துந்திறம்பன்மின்கண்டீர்திருமகண்மருவுவான்நம்மை
வேதவிரோதவெவ்வினையவரைவிட்டியீர்த்தளற்றினிற்பிறப்பில்
வாதுறக்கிடத்தவதைத்திடவைத்தமர்மமீதரியடியவர்பால்
சாதுவராகப்போதுமினென்றுச்சமனுரைத்தனனிதுசரதம். (கச)

மறந்துமாலன்றிப்புறந்தொழாமாந்தர்வாழ்த்துகோவிந்தநாமத்தின்
திறந்தனைச்செப்பலெளிதலவென்றேதெரிந்தவாறுரைத்தூதுவருக்
கறந்திறம்பாதவறிவினரிசையையறைந்தகல்பொன்னியைப்பெற்றுச்
சிறந்தமன்சீரைச்செப்பினனியமனிதையுணர்வாய்தவத்தினியோய். (கரு)

வேறு.

உத்தவென்றூதர்காளுலகிலேசிலவீனருணர்விலாமல்
நித்துநாணற்றுநல்வினமற்றுநிலையற்றுநாத்திகர்களாய்
வித்தைவந்தார்கள்போல்விண்டுவின்னடியர்போல்வீறுகாட்டப்
பித்தரைக்கொணர்மினேவென்றனர்புன்புலைப்பேச்சுரைப்பான். (கசு)

கமலமீதேயுளேங்கைக்களெட்டாயுளேங்கதிசெய்மாலின்
அமலவுந்தியிலுளேமாடலின்மறையுளேமண்டமுடையேம்
நிமலநான்முகமுளேமெகினமீதாயுளேநிகழ்செய்பிரமன்
எமலனேவென்றமந்திக்குநேருலகினுக்கிணைசொலிழினர். (கஎ)

கறையிலாவெளிறுளேம்வளைவினேமிகவுளேங்ககனமீன்கண்
குறையிலாதணைகுவேங்கூடிதாணுறைகுவேங்குலவுபக்கச்
சிறையுளேமமுதுளேமெங்கணேராவதோசீதமதியென்
றறைபகத்துக்குநேராவர்மேலோர்க்குநேரறையுமசடர். (கஅ)

அளவிலாவண்டமோவருள்குவேமண்ணெலாமனவரதமும்
களவிலாதுண்ணுவேங்கடலிலேநாளெலாங்கண்டுயிலுவேம்
பளகிலாக்கலுழனோர்ந்துறச்செல்குவேம்பத்திவலையேம்
துளவனேநிகரொனுமீன்களாமறிஞர்நேர்சொலுமறிவிலார். (கக)

அத்திதோல்விட்டிலேமம்பலம்விட்டிலேமணைபிணுவை
நத்தியேவிட்டிலேங்காபாலம்விட்டிலேநாடுகொவல்
பற்றியேவிட்டிலேமெங்கணேராவனேபவனனென்று
கத்துநாயிற்குநேராவர்நல்லோர்க்குநேர்கதறுமுருடர். (உo)

முருடராயவரைநம்முனமகாவருளிலாமூர்க்கராகித்
திருடராயினர்தமக்கதிகமாமக்குணத்தியர்தம்மைக்
கருடவாகனனைவத்தல்லவென்றவர்விழுங்கரையிறுன்பத்
திருடராகிற்குமேழளறிலிட்டிடுமெனுவினிதுரைத்தான். (உக)

வேறு.

சத்தியசுத்தத்தனிப்பரஞ்சோதிதாள்பணிசௌநகமுனிகாள்
வித்தகனனபிரமனரதற்கிவ்விமலகாவேரனாருள்சீர்
பத்தியிற்பகர்ந்தபின்னரொம்பகவன்படுபழிதஞ்சகன்றமரை
மொத்திவானவரோமுதலினர்ப்புரந்தமோதமோதுவலதுகேண்மின். (உஉ)

உஅ - வது. மாலடியார் மாட்சிமைகூறியபடலம்
முற்றிற்று.

ஆகபடலம் உஅ-க்கு, திருவிருத்தம் அஎஅ.

ஸ்ரீமதேராமானுஜாயநம:

உகூ-வது. தஞ்சனுதியர்தவப்படலம்,

வெள்ளத்தணைமேல்விழிதுஞ்சும்விமலற்பணியும்வீணைமுனி
எள்ளத்தனையுங்கரவாதெம்மிறைவனடிசேர்கவேரனருள்
கொள்ளத்தணைமாப்பாவியர்கள்கோவிந்தப்பேர்கொண்டுசுகந்
தள்ளத்தனையின்னிசைகேட்டாய்தஞ்சன்முதலோர்தவமதுகேள். (க)

ஊக்கமிகுமுன்னுகமதனிலுதித்தெம்மானுலுயிர்மாய்க்த
வீக்கமிகுமாமதுவென்பான்வியன்சந்ததியின்மேவிவலி
தாக்குந்தஞ்சன்தண்டகன்மாகயத்தின்முகத்தனெனுமூவர்
ஆக்கிவ்வுலகுக்கந்தகர்போலாவிக்கெல்லாமிடர்செய்தார். (உ)

சித்தியனைத்துஞ்சிவனிடத்துச்சிறப்பப்பெறுதற்பொருட்டெண்ணிப்
புத்திபுலத்துப்போக்கலறப்பொருவிறவத்தைப்புரியுழிவான்
கத்திவ்வுலகங்கதறிவிழக்ககனங்கீழக்கினிப்பிழம்பு
தொத்திம்முகிலினீர்வறளச்சுருண்டிவ்வகிலஞ்சுழன்றனவே. (ங)

இம்மூன்றவுணர்க்கியையப்பொன்கண்ணனுக்கனீரைந்தாம்
கம்மாளர்க்குமரிதென்னுக்கழறும்படிவெந்தவமுற்றார்
அம்மாவக்காலப்பார்வானிப்பூவப்பில்லாமலரோ
எம்மாவுயிருமாற்றமலிறந்துமடிந்துபொடிந்தனவால். (ச)

மண்விண்ணீரற்றுயிர்சாம்பிவருந்தலறிந்தமாதவனும்
தண்ணென்மனத்துப்பராசரமாமுனிவானரசன்றனைவினவி
எண்ணின்னமுதைக்கொடுவந்தேயினிசாந்தனதாச்சிரமத்தின்
கண்ணுண்டாயசரசிலிடவதுநீர்பெருகிக்காட்டிற்றால். (ரு)

அகன்றதாகிவற்றாதாயாழ்ந்தகுளிர்நற்புனலாகிப்
புகன்றபெரியாராசிவளம்போலப்பெருகிப்புண்ணியமாய்த்
திகழ்ந்துகாணவுலகிலுளார்தீர்த்தமாடியுண்டுமழை
இகழ்ந்தகாலக்குறைதீரவிருப்பச்செய்ததின்னமுமே. (சா)

இவ்வாறகிலமழற்காட்டிலேங்குமாறம்மூவசுரர்
தவ்வாதியற்றுந்தவமதனைச்சகியாதருள்சந்திரமௌலி
ஒவ்வாவசுரர்முன்காணவோடிவிழுந்துபணிந்தவரைச்
செவ்வாய்மலர்விண்டென்வேண்டுஞ்செப்பீரென்றன்சேவிவர்வான். (எ)

தேவாயாங்களெந்நாளுந்தேவர்முதலோரிடத்துமுயிர்
சாவாதிருப்பான்வரமீவாய்தக்கோயெனலுந்தானுரைப்பான்
ஆவாவீதென்னறிவிலிகாளயன்யான்முதலாயினரெல்லாம்
சாவாதிருக்கும்வரமுத்திதருமாவரமுந்தருதுமரோ. (அ)

வல்லரல்லோமிவையிரண்டுவரமுமளிப்பான்வனசமலர்
இல்லியொளிர்ந்தாளிறையன்றியின்றென்னீதியிசையதனைச்
சொல்லிவழங்கலறிகிலிர்போலாதியொன்றுச்சொலிமேவா
வில்லில்லொளிர்மூவருந்தவிரவிண்ணோர்மண்ணோர்முதலான (௯)

வலிசேர்ந்துள்ளார்யாவரினும்மாளாதிருக்கும்வலிமுதல
ஒலிசேர்மழுமான்றரித்தபிரானுதவிமறைந்தானுனையசுரர்
கலிசேரவுணக்கடலரக்கக்கடல்சூழ்ந்தேதத்தக்களிமூட
மலிசேர்கடலினொலிபொங்கமலிபேரிகைகண்முழக்கினரால். (௧௦)

முழக்குமிரணவொலிகேட்டமுனிவோரமரர்கோன்முதலோர்
கிழக்கும்வடக்குமுண்ராதுகிளரும்பீதிமேற்கொண்டு
சழக்கிலென்கட்டஞ்சமெனயானுஞ்சிவனுந்தருவரத்தால்
இழக்குஞ்சுகத்திரவணர்வெலற்கிப்போதியாருமின்றென்றோம். (௧௧)

நீவிர்யாரும்வெளிப்படையாகிலவலொழிந்துகரந்தினிதும்
ஆவிபுரப்பான்சிலபகல்வ்வானைமலைக்கண்முழைஞ்சில்களில்
மேவியிருந்தெம்மருளாளன்மென்றுணளினமெண்ணுதவம்
சேவித்திருமினரியருளாற்சிறப்பீரொன்றேனென்செய்கேன். (௧௨)

படைகள்படைத்தவுணர்களாற்படவொண்ணுதவிடருழந்து
குடர்கணடுங்கக்கோபதியேமுதலோராடிக்குடியகலக்
கடைகளசுரரணிகவிகல்கடப்பாரெல்லாதகல்வானோர்
இடரிட்டிரியவவர்நாடுரீகையனைத்துங்கவர்ந்தனரால். (௧௩)

கொடுங்கோலுயிர்கணடுங்குறவிக்கொடுமாவசுரர்புரிநாளிற்
கெடும்பாவியர்பாலரியடியர்கேதம்பொருவக்கீழ்மேலோர்
இடந்தாரிந்தவண்ணமிருநாள்கள்கழியக்கீழகற்றும்
படந்தாழரவிற்பள்ளிபயில்பரனைப்பணிவோய்பன்னுதுங்கேள். (௧௪)

வேறு.

அன்னநாளின்மழைபெயலற்றிட
மன்னிவானுயிர்வாதையுளூற்றிட
மூன்னமோதியமூவர்கணம்வரத்
தென்னன்றேயமேற்றெண்ணீரவாவினல் (௧௫)

தண்ணீர்தண்ணீரொணத்தவித்தியாவரும்
உண்ணினைந்துதுருவல்செய்யோனையிற்
பண்ணுநற்றவத்தானபராசரர்
கண்ணினுயசரசெதிர்கண்டனர் (௧௬

கண்டபோதுகளித்தவராகியே
உண்டுளாடியுகந்தவராயினர்
பண்டுண்டாக்கும்பராசராதியாம்
விண்டமாதவர்தம்மைவெருட்டினர். (௧௭

மாதவத்தரைமாட்டிமலேதலும்
ஓதவத்தைதக்கங்குற்றமுனிவரர்
தீதவத்தையத்தீயவர்செய்திடு
வாதைதன்னேயம்மாமுனிசீடர்கள். (௧அ)

வந்துபோர்றிவழங்கலுமாதவன்
வெந்துசீற்றமிகுந்தவண்காவல்செய்
கந்தனைத்தருகாரிகைகூற்றில்வாழ்
அந்தரிக்கீதறைந்திடலாயினன். (௧௯)

ஆளியூர்தியெண்டோளியமர்ந்துவாழ்
மீளியாச்சிரமத்துள்விளங்கிடும்
வாளிதாமரையோடையைவவ்வியே
ஞாளிபோலசுரக்குலநண்ணினர். (௨௦)

அங்குளாரையறைந்தழவோட்டியே
தங்கினர்களைத்தாழ்விலசுரர்கள்
சிங்கமேறியவர்தமைச்சீறியே
நங்களுக்குநலமீதியென்றனன். (௨௧)

சொன்னவாசகங்கேட்டலுஞ்சோர்விலாள்
பன்னுபல்விதப்பாணிப்படைப்புடன்
பொன்னின்மாமலேபோலுருப்பொங்கிடத்
துன்னுவோர்கடுணுக்குறக்கொண்டனள். (௨௨)

சிங்கமேறிச்சினத்தமராற்றவும்
பங்கமற்றவவுணப்படையெழீஇ
எங்கணேரமரோற்றுவாரும்மிவண்
தங்கினர்கொலெனப்புயந்தாக்கினர். (௨௩)

ஆர்த்துவெங்கழுச்சூலம்வேலாதியாக்
கூர்த்தகாளியின்மீதுகொழித்தலும்
வேர்த்ததுர்க்கிக்குவெங்கதமண்டவே
தீர்த்தபற்பலவாளிதெறித்தனள். (௨௪)

வாளிவாண்மழுச்சக்கரந்தோமரம்
தூளியாவுறத்தோற்றுவித்தாங்குசேர்
ஆளிமொய்ம்படைமாயவனேகமாய்க்
கூளிகட்குணச்சூறைகொடுத்தனள். (௨௫)

ஆயசெவ்வியறிந்தவசுரர்கள்
போயசேனைகள்போயதறிதலும்
காயமண்கலங்காற்றுச்சீற்றத்துடன்
தாயசண்டிகையைத்தகைந்தாரரோ. (௨௬)

கொற்றவாளிகடேற்றியக்கொற்றியை
முற்றுமேனிமுழுதுமேமூழ்த்துற
எற்றியட்டகாசத்திலிலங்கலும்
வற்றிவீரிமயங்கிவருந்திஞள். (உஎ)

உதிரவாரியொழுகவவ்வொண்டொடி
சிதறுமேனிசிவந்துபராசரற்
கதிரவந்துதன்ஞக்கையைக்காட்டியே
விதிர்விதிர்த்திடவிம்மியழுதனள். (உஅ)

அன்னகாலேயிலம்முனியஞ்சலே
இன்னதீயனையிக்கணத்தேயிறப்
பின்னமாக்குதுமென்றுபேசிச்சிவன்
மன்ஞும்வெண்மலேவர்துமகிழ்ந்தரோ. (உகூ)

ஆலமிட்டவழகியகண்டமும்
சூலமிட்டதுயரறுபாணியும்
பாலமிட்டவெண்ணீற்றுப்படிவமும்
தோலேயிட்டுத்துலங்குமிடையையும். (௩0)

கங்கையிட்டசடைக்குலக்காட்டையும்
அங்கமிட்டவனற்கணுடலேயும்
புங்கமற்றபாம்பானபணிகளும்
துங்கமாமுமைதோன்றிபோகமும் (௩க)

மத்தமானவூமத்தைப்பூமாலேயும்
சுத்தமானவெருக்கின்ருெடைகளும்
உத்தமப்புலித்தோலுத்தரீயமும்
வைத்தகொன்றையறுகெழின்மாலேயும். (௩உ)

பூதமாதிகணங்கள்புகழ்தலும்
மாதிஞேடுமகிழ்ந்தவர்வாழ்தலும்
சீதமாதவச்சிர்முனிகண்டரோ
பாதமீதிற்பணிந்துவணங்கிஞன். (௩௩)

ஐயநின்வரத்தாற்றன்மிகுந்தவர்
ஞையுமாதவராமெங்கணல்லதோர்
துய்யவாச்சிரமத்தின்கட்டுன்னியே
வெய்யர்வேதியர்தம்மைவெறுத்தரோ. (௩ச)

மோதிமோதிப்புடைத்தெமதோடையை
வாதியாதவளேத்ததல்லாமலும்
காதுபத்திரகாளிகலங்குறத்
தீதுசெய்துசேதித்துச்செழித்தனர். (௩ரு)

அங்குவந்தவராற்றியதுன்பினைச்
சங்கரச்சிவகண்டருடந்திடற்
கிங்குவந்திசைத்தேனருள்கென்னலும்
மங்கையோடுமகிழ்ந்தேறிவர்ந்தரோ. (௩௬)

முனிவனாச்சிரமத்துமுனியுடன்
பனிமகளமர்பாகன்வந்தன்னவர்
துனிபுரிந்ததைநோக்கித்துளங்குறு
தொனிமுனிக்கிவைச்சொல்லத்துணிந்தனன். (௩௭)

பந்தமற்றபராசரரேயிவண்
உந்திநீத்தமுதவ்வுதாலவர்
இந்தவாச்சிரமத்திலிருப்பதால்
வந்ததென்னுமக்கென்றுவழங்கியே. (௩௮)

பாரிடக்கணங்கள்பரவித்தொழ
நீரிடத்துவெண்ணிண்மலைக்கேகினன்
ஆரிடத்துமனார்புரியாசுளார்
போரிடத்திலனேகர்கள்பொன்றினர். (௩௯)

வேறு.

காயுங்கதிரோகண்ணுளன்கழலைத்தணவாவொருமுனியே
பேயின்குரிசின்முனிவரனார்பெயர்க்காதோர்திபின்றில்லை
மாயனகற்றன்மதியென்னுவனசன்வசனிப்பதனையொளி
தோயுங்காட்டுமறையவர்க்குச்சொன்னான்சூதமுனிவரனே. (௪௦)

உகூ - வது தஞ்சனுதியர் தவப்படலம் முற்றிற்று.

ஆகபடலம் உகூ - க்கு திருவிருத்தம், ௬௧௭.

—:(0):—

௩௰-வது. தஞ்சனுதியர்சம்மாரப்படலம்.

———(*)———

அஞ்சலென்றசொலன்றியறிகலாக்
கஞ்சநாயகிக்கானவென்கண்ணனார்
துஞ்சிலாரைத்துயோரையலற்றிய
தஞ்சனுதியரைத்தடிவீறுகேள் (க)

செய்யமேனிச்சிவன்சிருதேகிய
வையமின்றியறிந்தவசுரர்கள்
வெய்யராகிக்களிப்புடல்வீங்குறத்
துய்யர்தம்மைத்துயர்க்கடல்வீழ்த்தினார். (உ)

சேணின்குன்றைத்தழீஇயன்னசெவ்வுடல்
பேணிநின்றவர்பேர்பெரியார்தமை
காணிநின்றிடநாளுமிடர்செயல்
தாணுகண்டுந்தயவிலாதேகிய. (௩)

தன்மைதன்னைநினைந்துதன்றாதையாம்
வன்மையானவசிட்டனாபத்துறின்
சின்மயானந்தச்சீபதியைநினைந்
தன்புசெய்வபோலாறுமனனொனு. (௪)

அல்லலானவமையத்திற்காப்பவன்
இல்லைநாரணனன்றியெனாமுனம்
சொல்லிநின்றநினைவுதுளங்கலும்
எல்லியிந்துக்கணெந்தையையெண்ணினான் (௫)

அந்தமற்றவாபத்திலழுங்கலை
எந்தையாற்றகிலோமெழுந்தாளுதி
சந்தமாநின்சரணஞ்சரணென
வந்தித்தேத்திவணங்கிவழுத்தினான் (௬)

வேறு.

வேதநாயகனேயிந்தவினையினார்தம்மால்யாங்கள்
நோதலையறிந்தெந்நோயைநூக்குவானெண்ணியிங்ஙன்
போதவாவென்றுணைந்துபூமலர்க்கண்ணீர்பொங்கக்
காதலோடரிகோவிந்தகோவிந்தவென்றகாலை (௭)

கும்பிட்டுநின்றான்முன்னர்க்கோதிலாவேதக்கோன்மேல்
அம்பிட்டவருட்டாளெந்தையவிர்ந்தழுங்கறிஞநின்றன்
செம்பிட்டசெங்கண்செற்றார்செற்றிடச்செய்வலஞ்சல்
சம்பிட்டுவாழ்தீரொன்றதனிமுதலடியிற்றாழ்ந்தான். (௮)

என்பகையில்லாதாக்கலன்றியிப்பாழிதன்னில்
நின்பகையில்லாவர்ச்சைநிலவுறவருளல்வேண்டும்
பொன்பகையில்லாச்செல்வப்பொருதலிற்புரணமான
மின்பகையில்லாஞானமிளிர்பரம்பொருளேயென்றான். (௯)

முனிமொழிப்படியேயிந்தமுழுமுதலானமூவாத்
தனியன்றன்வாழிப்புட்டேத்தனைவிளித்தவுணர்தம்மைத்
துணியுறத்தொலைத்தியென்னாத்துயரறுதூயோன்சொல்லக்
கனிவுளகருடப்புத்தேள்கடுகியேயவுணர்தம்மை. (௧௦)

எதிர்த்தவர்படைகடம்மையிமைப்பினிற்சிறைமூக்காலே
அதிர்த்துயிராழிதன்னையகத்தியமுனியின்மாக்கிப்
பொதிர்த்திடுகருணைமிக்கபொதிந்தருள்புனிதமூர்த்தி
வெதிர்த்தமூவசுரரொஞ்சவேறுளார்வீந்தாரொன்றான். (௧௧)

தஞ்சகன்றண்டகன்னேகயமுகன்மூவர்தம்மேல்
அஞ்சனமேனிப்புத்தேளருமறைப்புண்மேலேறி
வஞ்சனைவதைப்பானெண்ணிவரலறியவுணராயோர்
கிஞ்சுகக்கண்டிவானைக்கீண்டிடமலைதலானார். (கஉ)

மலைந்துமாமாயத்தெம்மான்வையத்தைப்புடைத்தாரக்கால்
உலைந்துபோமுயிருக்கூட்டுமொருவனையுடற்றவெண்ணிக்
குலைசெயவடுத்தகாலங்குறையில்கோவிந்தனன்றான்
தலைதனிற்றன்கையாலேபுடைத்தனன்சாய்ந்துவீழ்ந்தான். (கந)

குற்றுயிராகித்தஞ்சகன்குலைகுலைந்துவீழ்ந்து
பற்றிலாப்பரனைக்கண்ணுற்பார்த்துமெய்ஞ்ஞானம்பூப்பக்
கற்றநாவலர்கள்போற்றுங்கடவுளேயென்றுபோற்றிச்
சொற்றிடுவேதத்தாலேசோர்வறத்துதித்துச்சொல்வான். (கச)

பகையுறவொன்றுநோக்கிப்பாலிக்கும்பரமமூர்த்தி
வகையிலாமடமையாலேமதிமிலைந்தவன்பாலேற்றுச்
சிகைதவத்தியலிற்பெற்றசெல்வத்தின்செருக்கின்மாண்டு
தொகையறுதொண்டர்க்கெல்லாந்தொகையிலாக்கொடுமைசெய்தேம். (கரு)

அடியருக்காகாத்தீமையாற்றியதன்றிமேலாஞ்
செடியறுத்தாளுந்தேவதேவனுமுன்றன்மீதும்
படையெடுத்தோச்சலானேன்பாவியேன்பட்டேன்கெட்டேன்
நடைபொறுத்தடியேன்வேண்டும்வரமொன்றுநல்காயென்றான். (கசு)

என்வரமெனலுமெம்மானெந்தையேயெனைநீமாய்த்த
இந்நிலமதனையாருமேத்துறவென்பேர்தந்து
பன்னிலத்தவருநன்றும்பதியெனும்படிக்குன்மூர்த்தி
தன்னைவைத்தருடியென்னத்தனிப்பதந்தன்னிற்புக்கான். (கஎ)

அஞ்சலையென்றவீசனவன்பெயரதனுன்மிக்க
தஞ்சைமாநகரமென்னச்சமைத்தவண்டலமொன்றாக்கி
வஞ்சமிறஞ்சமாமணிப்பெருமானென்பேரால்
எஞ்சலற்றின்னும்வாழமிணையிலாவருடந்தாமால். (கஅ)

அச்சுதனர்ச்சையாகியலர்மகண்முதலோரோடும்
இச்சைதந்தருள்வானங்கணிருந்தனனவன்பின்னேனும்
துச்சனெம்மழியாப்பெம்மான்மேற்றொடர்ந்தாடல்செய்தான்
நச்சரவணையானந்நாகமாமுகனைக்கொல்வான் (கக)

சிங்கனன்மேனிபூண்டசெருச்செய்மாமுகத்தினானைப்
பங்கமில்கதையினாலேபதைத்திடச்சிரத்திற்றாக்க
அங்கவனுரவுமாண்டேயவனியில்விழுந்துநோக்கிச்
சங்குசக்கரத்தெம்மண்ணறனைப்பணிந்தேத்திச்சொல்லும். (உ0)

அளவறுநரகின்மூழ்குமறிவறுசிதடனாகித்
தளவணிதோன்றுமூர்த்தியென்றுணர்வகன்றேனேனும்
களவறுமென்னைநின்பொற்கரத்தினாற்றொட்டமேலாம்
பளகிலாச்சுகிர்தமுற்றபாக்கியம்பெற்றேனையா. (௨௧)

கண்டுநின்கருணைதன்னைக்கைகுவித்தேத்தாப்பாவி
பண்டுளநின்னைநன்றாப்பார்த்துளேனிப்போதேனும்
விண்டிடாதுனதுபாதம்விழைந்துவிண்ணிருப்பவென்னைத்
தண்டஞ்செய்தழித்தவிந்தத்தலத்தினியிருக்கவேண்டி. (௨௨)

வினவுமிவ்வரமிரண்டும்விதியிலேற்களித்தாளென்றே
அனகனைப்போற்றிவாழ்த்தியஞ்சலிசெய்துகேட்பப்
பனகனுமவ்வாறாகப்பரிந்தருள்புரிந்தான்பட்டோன்
தினமழியாதவின்பச்சிந்துவிற்கேகினானால். (௨௩)

பொன்பெயரவனைக்கொன்றபெற்றியினான்சிங்கத்
தின்னுருவோடுதஞ்சையாளியாயிருந்தானெம்மான்
பின்னவன்றண்டகன்னெம்பிறப்பிலிதன்னைமூரி
வன்செருச்செய்தேபாதாளப்பிலவழியிற்போனான். (௨௪)

போனவப்புல்லன்றன்னைப்பொன்றவைத்தடியரான
மோனிகடம்மையாள்வான்முன்னியமூர்த்தினான
ஏனநல்லுருவுகொண்டேயியனிலம்பிளவுசெய்தெத்
தானமெங்கணுமேநேடிவருமுழித்தண்டகன்றான். (௨௫)

கானநல்லிடத்தின்மீதுவந்தனன்கடவுளேனம்
ஊனமின்னிலத்தைக்கீண்டங்குதித்தவவ்வுரவோனஞ்ச
வானகநடப்பகிற்பவருந்திடமறக்காய்விட்டுச்
சானகத்திணிதோளானைச்சமருனாற்றொடவிட்டான். (௨௬)

உரமுள்தண்டகப்பேருக்கிரவசுரன்றன்னைப்
பரமனுங்கோலமேனிப்பண்ணவன்முகக்கோட்டாலே
தரமுறக்கிழித்தசெவ்வித்தரணிவீழ்தண்டகன்மேல்
வரமுறுஞானந்தோன்றவரதனைவணங்கிவாழ்த்தி. (௨௭)

எம்பரம்பொருளேயெங்களிதயதாமரைவாழ்தேனே
இம்பரம்பரத்துளார்க்குமிறைவனுமின்பக்கோனே
வம்புறுமாயக்கூத்தில்வைத்தெமைப்போன்றார்தம்மைப்
பம்பரம்போலவாட்டிப்பார்த்தருள்புரியும்பண்பே (௨௮)

மதியலேமானையானைமங்கையைவைத்தான்றந்த
விதியலேவரத்தினார்ந்தவீரத்தின்மிகுந்தமாசால்
துதியலேயதனிற்றூய்மாசுணப்பாயிற்றூங்கும்
பதியலேமானமீர்ந்தபத்தர்க்குப்பழிசெய்தோய்ந்தேம். (௨௯)

எங்களைப்பொருளாவெண்ணியெழின்மலரத்தமோச்சிச்
சங்கரித்தருள்வான்வந்ததற்பரதயவினியென்
அங்கத்தையரிந்தவிங்குன்னர்ச்சையைச்சுயம்பிலாக்கித்
தங்கத்தன்றலஞ்செய்தேத்திச்சாருவார்க்கெண்ணமீதி. (௫௰)

பொலிந்தருளெனக்குன்பாதப்பூவருளென்றுபோற்றி
மெலிந்தவன்றனக்கவ்வாறேவீறருள்புரிந்துநாளும்
மலிந்தமாதண்டகப்பேர்வழங்கிடுவனத்திறைப்பண்
பிலமிருந்தெழுந்தவண்ணம்பீடியரோனப்பெம்மான். (௫௧)

சீமுட்டமென்னநாளுந்தெளிமுனியமரர்போற்ற
ஆமிட்டமளிப்பானுக்குமண்ணல்கேத்திரத்தின்மாட்சி
நீமுட்டவறிதிமேலோயென்றுபின்னிகழ்தல்சொன்னான்
தேமுட்டமற்றதேனின்மலர்மகன்தெரிதிர்மேலீர். (௫௨)

௫௦-வது. தஞ்சனுதியர்சம்மாரப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - ௫௦ - க்கு திருவிருத்தம் - ௧௫௦.

ஸ்ரீ

௫௧-வது. சில்லிதில்லிகட்கருளியபடலம்.

வேறு.

வானேக்கிவாழும்பைங்கூழின்மானவானேமொமானினருள்சேர்
கானேக்கிவாழுமவர்தெவ்வர்தம்மையிறுதிப்படுத்துகதையீ
தானேக்கியன்னவவுணற்குதித்தவிருமாதரவர்களறிவின்
பானேக்கியாவிகலமுற்றவீறுபழுதின்றியோதலறிதி. (௧)

வேறு.

வெண்ணிறஞானனந்தவேதவராகமூர்த்தி
பண்ணியவீரவாழ்க்கைப்பாடுகேட்டொளித்துமுன்மாத்
திண்ணியதிரிவாயாயதேவர்களுதன்முன்னோர்
எண்ணியதளிக்கவல்லவீசன்சீமுட்டமேகி. (௨)

சுயம்புருவாகிப்பூக்கட்டோற்றியேமிளிருஞ்சோதி
பயமறுபாதப்பூவைப்பார்த்தழுநீரிலாட்டி
நயமுறவெழுந்ததீயோர்நலிவினினலிந்ததோதிச்
சயமுறச்சமைந்தபாஞ்சராத்திரப்படிப்பூச்சாத்தி. (௩)

தரித்திரமியைவான்றேவர்தாதையேதாணுவானேர்
விரித்தறியாதவீரவிமலனேகமலன்றன்னைத்
திருத்தல்செய்தகிலமீயச்செய்தவையோம்பிக்காக்கும்
கருத்தவெங்கலியையோட்டிக்காத்தநங்கருணைமூர்த்தி. (௪)

நின்னருள்வாழ்கநின்றனிறமகள்வாழ்கநீண்ட
பொன்மலர்க்கரத்தைந்தாயுதங்களும்பொலிந்துவாழ்க
நன்மலருந்திவாழ்கநான்மறையடிகள்வாழ்க
பன்பலரநந்தனாதிப்பண்ணவர்முனிவர்வாழ்க. (௫)

என்றுபல்லாண்டுகூறியேத்துவானவனைநோக்கி
நன்றருள்சுரந்துமிக்கஞானவராகநாதன்
வன்றுயரகல்வானோவரதனுமென்பாதத்துள்
நின்றவர்க்கின்னாக்குற்றநிகழ்த்தினீரதனாவீர். (௬)

இத்தகையிடும்பைபட்டீரினத்துடனினிமேலேனும்
அத்தகையபராதங்களகற்றிநாமுமக்கீந்துள்ள
சுத்தமாந்தலத்திற்போகந்துய்த்திரும்போதிரொன்று
நத்தியவ்வராகநாயனாரருள்புரிந்தாரன்றே. (௭)

குறைவிலாநீர்மைவாய்ந்தகுணியிவ்வாறமரர்க்கோதிச்
சிறையறுத்தேகவிட்டசெவ்விமுன்செகுத்தவீரன்
நிறைகுணச்சில்லிதில்லியெனநிகழ்த்திருவர்நீதி
அறைகழலமலன்பாதத்தன்பொடுபணிந்துநின்றார். (௮)

பணிந்துநின்றவரையெம்மான்பரிந்துநீரியாதுவேண்டித்
துணிந்துளீரறைமினென்னச்சொல்லுவாள்சில்லிதூயோய்
தணிந்தவித்தண்டகாரணந்தனிற்சதாசயம்புவாநின்
கணிந்துளசினகரத்தின்கடையினிற்காவல்பூண்டு. (௯)

நின்னருளமுதைநின்றனிமலமாம்பாதசேவை
தன்னருள்கொண்டுநாளுந்தங்கிடவருள்கவென்றே
அன்னவள்வினவும்வண்ணமருள்புரிந்தானபின்னர்
பின்னவடில்லியென்பாள்பிரமனைப்பெற்றாற்போற்றி. (௧௦)

நீட்டுமாரணத்தின்சென்னிநிலவுறுநிமலநாயேற்
கீட்டறுநலனீந்தின்னுமிவணுறலிறுதிசெய்யும்
வீட்டினில்வாழ்ந்துன்செவ்வியமுதினைவிழுங்கவல்ல
வாட்டமில்வரத்தைவேண்டிவந்தனன்வழங்காயென்றாள். (௧௧)

என்றவடன்னைநோக்கியிளநகைகொட்டிப்பெண்ணே
நன்றுநீயிசைத்தாயிந்தநறுவனமதற்குக்கீழ்பால்
நின்றவோரிரண்டாம்யோசனைக்குளோர்நிழனீர்தாங்கும்
மன்றல்சேர்புண்டரீகவளநகரொன்றங்குண்டால். (௧௨)

அண்டங்கணிறைந்துவாழுமச்சுக்களிதயமென்னும்
புண்டரம்வதியுமென்றன்புனிதமாகியவுள்ளச்செம்
புண்டரத்துதித்தமேன்மைபொருந்தியதகராகாயப்
புண்டரபுரத்திற்கேகிப்புண்டராசரசிலாடி. (௧௩)

என்னைநின்மனத்திற்பாவித்தியன்மிகுதவஞ்செய்வாயேல்
உன்னையென்வீட்டினின்றேயுயர்சுகமுண்ணச்செய்வல்
கன்னிநீபோதியென்றகருணையங்கடவுளுதன்
தன்னடிவாழ்த்தியின்பின்விடைகொடுத்தலத்தைச்சார்ந்தாள். (௧௪)

எனந்தானுனவீசனிசைவுகேட்டினிதிணங்குத்
தானந்தமில்லாமாயப்புலப்பொறிகரணஞ்சாய்த்தே
ஊனஞ்செய்துளத்தையெம்மானுழியிலிட்டுவட்டிலின்பக்
கோனந்தானந்தயோகக்குறிக்கொண்மாசமாதிகூடி. (௧௫)

புருவத்திணுப்பணின்பக்குளமலர்பூத்தமூவா
உருவத்தைநிருவிகற்பவுளத்திலிட்டோங்குஞான
மருவத்தானளவில்காலம்வர்த்தமாய்த்தருமையான
பெருமைத்தான்பெற்றமேலாந்தவமிகப்பேணுநாளில். (௧௬)

அருமறையகண்டவீட்டிலமர்ந்தருண்ஞானமேனி
திருவுடன்கலுழச்சேவறிண்புயத்திமையோர்தூவி
வருமலர்மழையின்மூழ்கிவாச்சியந்துவைப்பவந்தான்
ஒருமையையுற்றாண்முன்னருற்றுனக்குகப்பேதென்றான். (௧௭)

அடியிணைபரவிவாழ்த்தியடக்கருமார்த்திபொங்கப்
படிமிசைவிழுந்துவேதப்பாவெல்லாநாணப்பாடி
ஒடிவிலாவொருவயானின்னைப்பறும்வீட்டிலோங்கும்
மடியிலாத்தில்லியென்றமரமெனவுறுதிதாங்கி. (௧௮)

அடியளைப்புனைதல்செய்யுமழகியசுகவானந்தம்
குடிகொளுங்குளிர்தூங்கின்பநிழல்விரித்தழகுகூரும்
செடியறுதில்லைக்காந்தாரம்மெனச்செப்பவாக்கி
வடிமலர்மல்குமிந்தவனத்துக்கென்பேரிட்டாள்வாய். (௧௯)

திருமணவாளவென்றுசேவித்துவினவினாட்குத்
தருமனுமாழிப்புத்தேடந்தருள்புரிந்துபெண்ணே
வருபடர்மறிப்பானிங்குவதிபவர்நின்பேர்பெற்றே
இருபயனுறுவார்நீயுமிலங்குவான்சுகம்பெற்றுய்வாய். (௨௦)

எனவரமளித்தவண்ணமீறிலானந்தவீட்டில்
வனவுருவெடுத்தெம்மாழிமாலிணைவழுத்திநாளும்
அனகமாயிருக்கலானளவண்மொழிப்படியெந்நாளும்
இனமலியிந்தமேலாம்வனந்தில்லிப்பேரொய்திற்றே. (௨௧)

தில்லைகோவிந்தனென்றுந்திருமுனமாடவோர்க்குத்
தில்லைநடேசனென்றுந்திருமலிந்தழகுசெய்யும்
தில்லைசித்திரக்கூடப்பேரவையென்றுசெருக்கிநின்றாள்
தில்லைமாகாளியென்றுஞ்செப்பிடலுற்றாண்மாதோ (௨௨)

வேறு.

பூக்கும்பொலன்றாமரைத்தாளின்மூவேழுலகும்பொத்தினவன்
காக்குமுயிரைமற்றொருவர்காவாரெனலைக்கண்டமுனி
தாக்குமசுரர்குறையகற்றத்தானுவருளைத்தெரிதியென
ஆக்குமவன்சொல்தில்லையுளானருளையறைந்தான்சூதமுனி. (உ௩)

௩௧-வது. சில்லிதில்லிகட்கருளியபடலம் முற்றிற்று.

ஆ. படலம் - ௩௧ - க்கு திருவிருத்தம் ௬எ௩.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

௩௨-வது. வேள்விசம்மாரப்படலம்.

கைம்மாறுவேண்டாதகார்மேனியம்மான்
அம்மாறுபூண்டாளருட்டாமரைக்கண்
விம்மாறுவிளைஞானமுனிதக்கன்வேள்வி
சம்மாரமிட்டான்பின்றளர்வுற்றதுயர்கேள். (க)

வேறு.

மூதாவிமுதலவிலாக்கடைநாளிலெனக்குமுழுமுதலிமூவா
தீதாமென்றிசைச்சுருதிநான்கினுக்குமாக்கையெனவிசையாகிற்கும்
தீதாகாமுகமைந்துந்திசைபுகழவளித்தவந்நாடிறம்பல்செல்லா
தோதாகின்றூழியொருநாளிட்டிவிளைத்துருவெண்ணியுவகைகொண்டேன் (உ)

தீதாங்கந்தீர்ந்தவனைத்திசையனைத்தும்பூத்தவனைத்திருக்காணனை
வேதாங்கவித்தகனைவித்தையனைத்தினுக்கும்விளைவித்தானை
நாதாந்தப்பேரொளியைநந்தாவெந்தகரவித்தைநாதனென்றனைச்
சூதாந்தர்சூழானைத்துதித்துநினைத்தொருவேள்விசெய்வானுற்றேன். (௩)

செய்தவர்கள்செயற்கரியமகமியற்றிவருமுழியோர்செய்யநாளில்
கைதவர்கள்கருதாதகடவுளருளாலெனதுகம்பாலக்கண்
எய்துவெப்பத்தெழுநீரையள்ளியந்தவனன்முகத்திற்றெறித்தேனத்தீப்
பெய்தகொழுங்கனற்குழியிலைந்துமுகத்துடனொருவன்பிறந்தான்மன்னோ. (௪)

செங்கருமையுடலினனுயிருத்தலினனீலலோகிதனென்செப்ப
அங்குதித்துரோதனையிட்டவிர்ந்தொளிர்தலாலப்பேரடைந்தவனான்
கங்கையெழுகழற்புத்தேண்மிகுகருணையாணையினாற்ககனப்பூவிற்
றங்குமுயிருடன்மாற்றுந்தலைமையனுய்க்கயிலையின்கட்சார்ந்துவாழ்ந்தான். (௫)

கண்ணுதறன்கற்புடையவரிவையுடன்மனமகிழக்கவின்கொள்வெள்ளி
நண்ணுமலைதனின்மகிழ்ந்துவாழ்நாளின்மகமேருநாப்பட்பொன்னி
திண்ணமுறுநெடுவேயொன்றண்டமுகட்டளவுநிமிர்ந்தோங்கிவீங்கி
விண்ணிலொளிர்ந்தரிமதிக்குநெறிமறுக்குந்திண்மையுடன்விளங்கிற்றம்மா. (௬)

அம்மேருவின்கணெடுநாணந்துவேணுவையச்சுரர்கடேவக்
கம்மாளனோடுகலந்தேற்றமூன்றளவாக்கிக்கவின்செய்தேந்தச்
செம்மாந்தசார்ங்கங்காண்டீவம்பினாகமெனச்செப்பிப்பேர்கள்
எம்மாற்கொன்றெனக்கொன்றவ்வீசானற்கொன்றாகவீந்தார்மன்னோ. (௭)

பலநாடிநல்லவைகற்றுளமுனிவர்கடவுளர்கள்பரிவோடீந்த
நலநாடிவிளங்குவிற்கடமையணிந்துநனிபுகழ்ந்துநாங்கணிற்பப்
புலநாடிப்பொலிதலிலாத்தாமதத்திற்பூச்தசிவன்பொருவிலாத்தன்
வலநாடியேமாந்தசோணகிரியெனத்தனையேமதித்தநாளில். (௮)

பீடார்ந்ததனதுபினாகத்தினால்விண்டுவினைப்பெரியவானிற்
கோடார்ந்ததருவேந்தனாவானைச்சயிப்பலெனாக்குறித்துத்தன்னுட்
சேடார்ந்தசெவ்வியனாய்ச்செம்மாத்தலறிந்தவந்தச்செவ்வித்தக்கன்
பாடார்ந்தோரிட்டிதனைப்பரிந்தினிதிற்செயற்பாலதானான்மன்னோ. (௯)

வேறு.

கடவுண்மறையொருபாகத்தமர்ந்தகாண்டங்கழறுவண்ணமிட்டிபுரியாகசாலை
இடம்பொருளினேவலினேயியற்றிமற்றவெறும்பிகடாவாடுகடாமூரியேறி
எடும்புகடாவலனைகடாமேக்கண்வாழுமிடங்கர்கடாமானரன்மேலேறிநாளுந்
தடும்புகடாதேகடவுமமரர்க்கோதித்தன்மகத்தினுக்குவரச்சமைத்தான்மன்னோ. (௧௦)

எற்றெகினூர்கடவுமறைமொழிநாவுள்ளியியற்றுசிட்டிபுரிசிறியவிதிகள்வானோர்
ஆற்றல்சான்முனித்தொழுதிவசுக்களேழ்மாவருமிருடிமருத்துவராதித்தராதி
ஊற்றமுளசித்தர்கணமிசைக்கிழார்களுரகர்முதலாங்கடவுட்டொகுதியாவும்
நாற்றமலர்முடிக்குழலினங்கைமார்கணணுகிமகிழ்ந்திருப்பமகநண்ணினாரால். (௧௧)

வருபுனலினவணிபுனைபெரியர்யாரும்வந்திருப்பவரவழைத்துமடங்கன்மான
இருவிழியுங்கடைநெருப்பைக்காற்றைக்காலவீசானமூர்த்தியையுமியைந்தபாகந்
தருங்கரியமணிநிறத்தினழகுவாய்ந்தவணங்கினையுமணங்குபடவாக்கியன்றான்
தருந்தனதுமகத்தினுக்குவரவொல்லாவாசாற்றியியற்றிடலுற்றான்றக்கன்மாதோ. ()

ஈட்டுமனற்குழியினழலிரைந்துபொங்கவிருபாங்கரிமையோர்களிணைந்துபொங்கப்
பாட்டுமுதுபழையமறையொருசாரோங்கப்பகர்மிருதியாதிகலைப்பலபாலோங்க
ஊட்டுமணநெய்கார்கோண்மின்னியூற்றவுவகைதலைத்தலைசிறப்பவோங்குமிட்டி
ஆட்டுதிரைக்கடன்ஞாலத்தாவிதம்மையடற்றுமரணறிந்துசினமகலக்கொண்டான். ()

நமைப்பொருளாவெண்ணாதுந்தனதுபெண்ணைநகையுளளாவெண்ணாதுநடாத்துமந்தச், சுமைப்பொருளாமாரணத்தீவேள்விதன்னைச்சோகிப்பத்தொலைப்பலெனாச்சுடர்விட்டோடி, இமைப்படர்வெங்கனல்வெள்ளம்பொங்குந்தீக்கணெரிபொரிகளுலகெல்லாமிறைப்பவண்டம், அமைப்படலுக்காற்றமலடன்மாவில்லையத்தமெடுத்திகலியமராற்றலானான். (௧௪)

ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான்சீற்றந்தன்னையாய்ந்தாய்ந்துங்கொல்லுமெனலறிந்துமந்தோ, தோய்ந்தோய்ந்ததெள்ளியநல்லறிவரோனுந் தொல்லைவினையையநுழைந்திடுமென்றாற்போல், வாய்ந்தோய்ந்தவண்ணமடன்மிகுமாவில்லைவளைத்தமரர்முனிவரர்கண்மறையோர்மற்றோர், சாய்ந்தாவியோய்ந்தேகச்சவட்டித்தக்கன்றலையையறுத்தனலைமிதித்தாடினானால் (௧௫)

வன்னியனைவன்னியாவைத்தான்மிக்கவானவனைவானவராவைத்தான்கற்பின்
பன்னியனைப்பன்னியராவைத்தான்வேள்விப்படுகளத்தைப்படுகளமாவைத்தான்றே
வ,சென்னியனைச்செந்நீராப்பெருக்குவித்தான்செத்தபிணக்குப்பைகளைச்செறியச்செ
ய்த, கன்னிகலைமகட்கினியசுதனேநீயின்கண்ணுதல்செய்பூசலணிகணிப்பார்யாரே.

வெண்கதிரைத்தண்கதிரைவேதம்வந்தவித்தகனைவித்தையெலாம்விளங்கவந்த [ணிற்
பண்பகருமாட்சிமுனிப்பகுதியோனைப்பண்ணவனைப்பதைபதைக்கப்பண்ணிக்கண்
புண்வடியக்கொலைபுரிந்தவீறுநோக்கிப்புன்முறுவல்பூத்துயர்ந்தவின்னுேடே [ன்
மண்வடிவேன்மிளிரும்வில்லையூன்றிவின்மேன் மத்தகத்தையிட்டிருந்தான்வள்ளிமாம

எண்ணியொருகருமமதைத்துணிந்திடாமலீரமனத்தும்பரொனவெண்ணிடாமல்
தண்ணளிகூர்முனிவரொனத்தயைசெயாமற்றன்பகையிலாரொனவேதாவெண்ணுமல்
பண்ணியயாகத்தவன்சொற்படிக்குவந்தபண்பினரொன்செயற்பாலரொன்றுதந்தோ[ன்.
நண்ணியநற்றவரையெலாங்கொலைசெய்தோய்ந்த நக்கன்மேற்கடுகடுத்தானுகர்கோமா

நாகர்கோன்வெகுளிகொடுநாரிநீங்காநலிவில்பிஞகச்சிரமேறரிபாகன்
சோகமிலாச்சிரமிறவந்நாரிதன்னைச்சிறுச்சிதலையுருவாகிச்சென்றுகீழில்
வேகமுறக்கறித்திடலும்வாங்கிநின்றவில்லெழுந்தவொல்லையரன்வீரச்சென்னிப் [ல்
பாகமதைப்பதைபதைக்கத்தெறிக்கச்செய்திப்படியளந்தான்படிவமெனநிமிர்ந்ததாமா

நாரியற்றவின்மோதச்சோதிச்சீதநண்ணுமரன்முடிதுணிபட்டகண்டவானில்
மாரியற்றமாரியின்மாப்பக்கிமானமாறுமற்சுழன்றவணேமன்னிற்றலோ
வாரிசுற்றும்வசுந்தரையின்வாராதிந்தவாறறிந்தோர்வியப்படைந்துமனத்தோடற்ப
மோரியற்றுகுற்றமுமில்லாரையெல்லாமுடற்றுசிவற்குடற்றுமலுறுமோவென்றார்.

எண்ணிறந்தகாலமகல்வானின்மோதுமிகற்சூறைறவளியினுழைந்திரச்சுமாய்ந்த,
கண்ணிமொக்கதலியினைச்சிவணச்சுற்றிக்ககனமுறவிருந்தசிவனம்மைக்கண்டோ, பெ
ண்ணையளித்தவன்சிரத்தைப்பேதித்திட்டபிஞ்ஞகனப்பெருந்தெய்வம்பேதித்தென்றே
விண்ணவர்கோன் வியன்முனிவர்மனைவிமார்கள் வியந்துரைத்துக்களித்திருந்தார்வீ
ணைத்தண்டோய். (௨௧)

வேறு.

தடமலிசோலைத்திருமலையழகார்சவிவனச்சௌநகாதியரோ
இடமலிமறைமாமுனிவனையினியதேவனையருளறக்கடிந்தான்
படமலிபாரிற்பட்டதுகண்டீர்பாரினில்யாவரொன்றாலும்
தடமலிநீதியல்லனசெய்யிற்றாழ்வுறுமென்றனன்சூதன். (௨௨)

௩௨-வது. வேள்விசம்மாரப்படலம் முற்றிற்று.

ஆக படலம் ௩௨ - க்கு திருவிருத்தம் - ௬௧௫.

ஸ்ரீ

௫௩-வது. உமையவள்சோகப்படலம்.

சமைமுதலுற்றூர்சவியறிவெட்டாத்தனிநாதா
எமையருளப்பாவென்றேயநுதினமேத்தன்போய்
நமையெழுவாய்முன்றனெனவருவானலிவாலே
உமையவள்சோகப்படலுரைதருவாமுனியோர்காய். (௧)

வேறு.

ஓமக்கனறந்தையுனாற்றியதும்
தாமக்கணிறண்டலகற்றியதும்
சேமத்துறுதேவர்கண்மாதவர்கள்
நாமத்தனற்சாலையினண்ணியதும். (௨)

அதனாற்சிவனாகியதன்கணவன்
சிதமாறுசினத்தின்முதிர்ந்ததுவும்
பதமாகுபினாகிபடைத்துளதால்
நிதமோதுதருக்கினினீண்டதுவும். (௩)

தன்னேசிறருக்கினிலேகியதும்
மின்னேரெரிவேள்விவிலக்கியதும்
மன்னாவுறைதந்தைமடிந்ததுவும்
துன்னாவுறைதேவர்கள்சோர்ந்ததுவும். (௪)

தேவாதிபன்றேம்புமனத்தினனாய்த்
தாவாதுறுகண்ணினினைந்ததுவும்
ஆவாவொருசெல்லுருவாகியரன்
மூவாதவின்னாரிமுரித்ததுவும். (௫)

வின்னாரிமுரிந்திடலும்மதன்மேல்
மன்னாவசிமாசிவனார்தலைமை
மின்னார்துடிவேலைவின்மீமுடிநீர்
துன்னார்சிவனார்தலைதூக்கியதும். (௬)

சேணிற்சுழலுற்றுசுருட்டுதலும்
வேணிற்கரசாதியர்வீறுதலும்
பாணிப்பிறைசூடியின்பாடுறைவோர்
நாணிப்படுபீழையினைந்ததுவும். (௭)

தெளிவுற்றனடேமதமாமுகனைக்
களிவுற்றகடம்பனையீன்றவுமை
நெளிவுற்றிடுகுண்டலிநேரிடியே
றளிவுற்றிடராற்றகிலாதவளாய். (௮)

ஆவத்துறுநாளிலெழுந்தருளிக்
காவத்தருவான்கமலாசனையாள்
மேவத்தருவித்தகனென்றுவிமித்
தாவித்துடர்ந்தாடயர்பன்னுவளால். (௯)

வேறு.

அன்னேவன்னேவென்றுதுடித்தாளனுருற்றாள்
மின்னார்பூமேல்வீழ்ந்ததுபோற்கீழ்வீழ்ந்தோய்ந்தாள்
தன்னார்களபத்துகள்படமென்பூந்தளிர்க்கையால்
என்னேயென்னேயென்றகன்மார்பிற்புடைகொண்டாள். (௧0)

மார்பில்புடைக்கும்வாயையதுக்கும்மழைநோக்கின்
நீரையிறைக்குநெட்டுயிர்வீங்குநெடிதேங்கும்
சீரைநினைக்குந்தேகமறக்குந்திசைநோக்கும்
வாரையறுக்கும்ஆரமிறைக்கும்வசைகூறும். (௧௧)

அழுமோவென்னுமத்தநெரிக்குமடிப்பூழி
யுழுமோநாதாவுறுவைகொலென்னுமொப்பாரி
வழுவாதோதும்வார்குழன்மண்மேல்விழவெண்ணித்
தழுந்திவீழும்புழுவெனவுலைவிற்சாய்ந்தாழும். (௧உ)

தன்னுயிர்நாதன்றடமதுபாடுந்தளர்வெய்தும்
மன்னுயிர்யாவுமாய்க்குநினக்குமாய்வுண்டோ
என்னுமிதெல்லாமீறறுசோதிச்செயலென்னும்
அன்னபரத்துக்கபயம்யாமென்றேயார்த்தியிடும். (௧௩)

மூவாமுதலேமூத்தோர்மூத்தோர்முன்னவனே
தேவாதிபனேதேவர்கள்காணச்செயலோனே
ஓவாவேதத்துச்சிமலர்ந்தருளுயர்பூவே
காவாயென்னைக்கருணைநிறைந்தருள்கண்ணாவோ. (௧௪)

கண்ணாவின்னோர்மண்ணேரொண்ணுங்கார்மேனி
வண்ணாவென்மணவாளன்மகிழ்ந்தின்னுயிர்பெற்றே
பெண்ணாமென்பாலண்ணிடவருள்வாய்பெட்போடுன்
தண்ணார்கமலஞ்சரணமெனையேதயைசெய்வாய். (௧௫)

ஐயேகாயேற்குன்னடியன்றிக்கேயுண்டோ
பொய்யேயென்றிடுபூரியர்நியாயம்புரளாரோ
மெய்யேயன்பர்தம்மென்னிதயப்பூவீறுற்ற
துய்யோயென்றன்றுன்புதுடைத்தாண்டருள்செய்யே. (௧௬)

ஆரோநின்றனகடிதகடறவலியோர்க்குன்
சீரோயுள்ளச்செயலெனவுணர்வார்சீகோதா
நாராயணனேநான்மறைவீட்டுணைந்தானே
காராயென்மேற்கண்மலர்க்கடையிட்டமலாவோ. (௧௭)

அழிவின்றறைபோகாதவனாயிவ்வகன்ஞாலம்
ஒழிவின்றோம்புமோவாவின்பத்தொருதேவர்
கழிவின்றுளமாப்பகுதிகிடந்தார்கதிகாண்பான்
வழிவிண்டுந்திவணசனைவைத்தாள்வரதாவோ. (கஅ)

என்னையளித்தென்னின்புறுகொண்கன்றனையீந்து
மன்னுநலின்புவாரிதிளைப்பான்வருமாறென்
அன்னையுமப்பனுமாரியனாதியுமானோயென்
மின்னிடமெங்கலமேவுறநல்லருள்விழிசெய்வாய். (க௯)

என்றுகரங்களின்மனமாதிகள்கூம்பத்தான்
நன்றுறவெம்மானளினபதத்தேநண்ணுற்றாள்
அன்றுபரம்பொருளருள்பெருகிடவானகல்வீதி
துன்றுமுனிச்சுரகணமியமொலிவிடதுனலூற்றான். (உ0)

வேறு.

ஆழியெடுத்தேயுலகோம்புமருளானடிக்கேயன்புடையோய்
கோழியெடுத்தான்றாய்தில்லைக்கோமான்பாதங்குறிக்கொண்டு
வாழியெடுத்ததறிதியென்றுவழங்கும்பிரமன்வார்த்தைதனை
ஊழியெடுத்தமுனிவருகப்புறவேயுரைத்தானுயர்முனியே. (உக)

௩௩ - வது. உமையவள்சோகப்படலம் முற்றிற்று.

ஆக படலம் - ௩௩ - க்கு திருவிருத்தம் க0கசு.

———(*)———

௩௪-வது. சிவகாமியாருக்குத் திருவளித் தருளியபடலம்.

கருவறுத்திருக்கழுத்தருக்குங்காணொணாதவவ்
வொருவனுக்குமேயுகந்தவொப்பிலாதவுத்தம
தருவினுக்காதிக்கணக்கன்றலைவிசோகமகறத்
திருவளித்தவருளுரைத்துந்தினம்வழுத்திவருதியால். (க)

மையழிந்தகண்ணளாய்நன்மலரழிந்தகுழலளாய்க்
கையழிந்தவளையளாய்ப்பொற்கலனழிந்தகரியளாய்
ஐயழிந்தவாயளாயரித்திராவின்மெய்யளாய்
மொய்யழிந்தபோர்க்களத்துமூர்ச்சையுற்றுறங்கினாள். (உ)

உற்றெழுந்தகண்டவானமுற்றுநோக்கியோவெலாம்
பெற்றபெருமகாத்தபெருமபெரியவின்பப்பெருமயான்
அற்றமாதென்னாதுன்னகலமமருமமலமங்கலம்
உற்றமாதென்மீதருட்கணோக்கவாக்கெனொருவனே. (௩)

ஒருவவிருவரறிகலாதவோதமீதிலாதியாம்
உருவதானவுரகன்மீதுறங்கியாவுமோம்புவோய்
கருவினரகிலாழுவார்காணாதகவடநாடகா
மருவியென்றன்மகிழ்நனுய்யவந்துகருணைதந்திடே. (௪)

கருணைபுரிதியருண்மெய்ஞ்ஞானக்கதிர்சுகக்கந்தரமுறழ்
திருமணாளதீனராளதீமைமாளதேவனே
உருகவருகவென்றுளுருகிவாடியபயமெனுமவள்
இருகணாரவம்பரத்திலியலுஞ்சோதிகண்டனள். (௫)

வேறு.

மணிநீருநீண்டமலையுங்கறுத்தமலருங்கொழுத்தமுகிலும்
அணிநீருமாருபூவைத்தண்பூவமியையமேனியானவமலன்
பிணிநீருமானவிழியுள்ளமாதுபேதுற்றழுங்கலகலப்
பணிநீருயர்ந்தவகல்வானமீதுபல்லாண்டிசைப்பவருநாள். (௬)

எல்லாப்பொருட்குமிறைவந்தசால்பையிசைவேதவோதையினிதே
ஒல்லாமையுற்றவுமைகண்டடங்கியொடியாதவன்பினுவரி
வில்லாரவாடிவிணையற்றவேதவித்தானைநோக்கிவிழிநீர்
புல்லார்பெருக்கமொடுதோத்திரங்கள்புகழோடெடுத்தல்புகல்வாம். (௭)

சொல்லார்மறைக்குமியலாரயற்குந்தோலாடையார்க்குமிருடீர்
எல்லாமுனிக்கும்வில்லார்சுரர்க்குமெட்டாதவின்பினிவர்வோய்
அல்லார்மிடற்றெனன்பாளியுன்றனகன்மாயவீறின்மருளால்
பொல்லாவகந்தையுற்றற்றதோர்ந்தெனுயிர்வாழவருடியுடையோய் (௮)

ஐயாநினக்கோரழிவில்லையாணவம்மில்லைசோகமணுகா
மெய்யாநினக்கோவிதியில்லைநோசெய்வினையில்லைசெய்யகதிர்சேர்
கையாநினக்கோகறையில்லையிகழ்செய்கதமில்லைபெட்பிலுழலும்
பொய்யாமெமக்கோர்பொருளானநீயெம்புலமேயவாவிபுரிவாய் (௯)

மன்னாவிதன்னுண்மேனண்ணிமூசிவளரின்புமல்குகுணனாய்
முன்னாவிதன்னுள்வினைதீமையுண்டுமுளைபாவமுரியவினிதே
பன்னாவிகட்குமூவாதவினியதொழின்மேலுலாவுபரமே
என்னாவியெற்கின்பீவானுயிர்ப்பவினிதாள்கவென்றுதொழுதாள் (௧௦)

தொழுமாதினன்புதுதியாதிசோதிகேளாவிரங்குமினிமை
வழுவாதநிறையினருண்மல்குசெந்தாமரைமாமலர்க்கண்விழியா
தழுவாதவானின்றலையிற்சுலாவுசிவன்மத்தகத்தைநிலம்வீழ்ந்
திழிமேனிதன்னிலிணைவிக்கவேண்டியெனைமாடுவணுகவிளியா. (௧௧)

வருவானினைத்தென்றனையீசனோக்கிமகமொன்றியற்றியெனயான்
தருவேள்விதன்னிலரன்மேனியோடுதலையைப்பொருத்தியதுபின்
சிரமாறுதக்கன்றன்னைப்புரந்துதேவாதிதேவனுயர்வாம்
ஒருநாதனிற்கமலைமங்கைகொண்கனொல்லென்றெழுந்துமகிழ்வால். (௧௨)

தலையைப்பொருந்தக்கொண்டுற்றபோதத்தாலும்முறங்கியெழுவார்
புலையக்கிடந்துபொக்கென்றெழுந்துபுணர்மாறுதன்னையணையா
உலையிக்களத்தெனுமைபோந்ததென்னென்றவளோதநாணியுயர்வான்
நிலைநிற்குமீசனிருதாளிறைஞ்சிநெஞ்சங்கரைந்துபுகழ்வான். (௧௩)

தேவாதிதேவதெளிவானவேதமுலையாதனாதிதினமாய்
நாவாலெடுத்துமோவாதஞானநகையாலெடுத்துநவிவாய்
ஆவாயனேனையளவிட்டரற்றற்காவாதெனாவுனாணி
நாவாயினின்னநவிலுற்றதென்னினானின்னுமநவில்வேன். (௧௪)

பெரியாயெவர்க்குமரியாயுணர்த்துபெண்ணாணுமலியுமலனாய்
உரியாயெவர்க்குமவரோடுமொட்டற்றுடையாயுகாந்தவெளியாய்
தெரியாதபோனமுடையானுமாகிச்செயலானுமாகியலனாய்ப்
பிரியானுமாகிப்பெயரானுமாகிப்பேணாதுபேணுபெரியோய். (௧௫)

நீயன்றியானுமிலைவேதனாதியுயிரில்லையென்றநிலைமை
வாய்நின்றஞானமனமொன்றுமமலமாமாதவத்தர்தெளிவார்
தாய்நின்றதந்தைகுருதெய்வமைந்துசவியின்ப[illegible]யாவுமகலா
ஓய்நின்றவென்றனேவாதபீழையொழிவானுளத்திலுணர்வாய். (௧௬)

உன்கண்ணுதித்துமுன்கட்செழித்துமுன்காக்கையுண்டுமுன்மெய்
தன்கட்கிடந்துமெங்கட்கிடந்ததணவாதவாணவமதால்
நின்கட்கிடக்குநிறைஞானசத்திநிலைகண்டுநிற்கவரிதாய்ப்
பின்கட்கிடந்தபெருபீழைபெற்றேமதுகண்டுபேணுபெரியோய். (௧௭)

இவ்வாறுபோற்றுமதுகண்டவீசனின்போடுகருணையருளி
அவ்வாதவாதிசுடர்யாவுமோயுமணிமேனிவானின்மறைவிட்
டொவ்வாதசோதியொளியிட்டபின்னர்தக்கற்குமோத்தைதலையிட்
டெவ்வேதனாருமெனைவாழ்த்தயாகவிடர்கொய்துபோந்தேனுணர்வாய். (௧௮)

வேறு.

வெள்ளிவேதண்டந்தன்னின்மிகுகுணக்கணங்கண்மைந்தர்
உள்ளியவுகந்தின்பாகவுற்றுறவுமைவாழ்வுற்றாள்
வள்ளியற்பாண்செய்வீணைவரன்முனியறிமென்பூவாம்
பள்ளியனுரைத்தபின்னர்ப்பன்னல்கேண்முனிவீரென்றான். (௧௯)

சிறுவிதியாறற்கெண்ணிச்செய்பவந்தகர்க்கஞ்சேர்த்து
மறுவிதிவாறுஞானமதியையுங்கொடுத்துமற்ற
உறுபொருளனைத்துமீந்தெம்முயர்பரனெழுந்தபின்னர்
அறுகதளவன்மாதோடுமெணிவரக்கயிலைபுக்கான். (௨0)

௩௪-வது. சிவகாமியாருக்குத் திருவளித்தருளியபடலம் முற்றிற்று.

ஆக படலம் ௩௪-க்கு திருவிருத்தம் - ௧0௩௬.

—:(0):—

௫௫-வது. எம்பெருமானுடைய திரம்புகோத்த படலம்.

கருமங்கண்மறியாதோம்புங்கருமுகிற்கடவுண்மேலாம்
தருமங்களேத்திப்போற்றத்தக்கதாண்மலர்க்கன்புள்ளோய்
திருமங்கைநாதனோடுசெவ்வுடலரன்செம்மாந்து
பொருமங்கோர்பூசலாற்றிப்புகழுக்குப்போனதோர்தி (௧)

உற்றவோர்காலந்தன்னிலும்பர்கண்மூலமாயச்
சிற்றறிவினராய்மோகஞ்செய்யுநஞ்சுண்டுசீரின்
முற்றுசிற்றினத்தராகிமுகுந்தற்குஞ்சிவற்குமேய
வெற்றியையறிவானெண்ணிவினையினின்மூளலானார் (௨)

சிவனைச்சிற்பரனென்றார்கள்சிலர்பலர்சீமனாளன்
அவனைச்சிற்பரனென்றார்களாகமமறைதல்கொண்டு
புவனத்தையழிப்பான்றன்னைப்புகழ்ந்தனர்சிலர்மாவேதம்
எவனைச்சொற்றதுகொலன்னானீசனென்றிசைத்தார்பல்லோர் (௩)

மனநலத்தினராய்வேதவழியறிந்துளராய்த்தீய
இனநலமகற்றியுள்ளப்புறப்பற்றையிறுத்துண்மேய
கனமலப்பற்றைமாவாதனையுடன்களைந்தமேலோர்
புனனலமறிகலாமாப்புனிதனேபுருடனென்றார். (௪)

நலக்குரியார்யாரோனுநாமநீர்வைப்பின்முத்தித்
தலக்குரியாரின்னாரென்றறிந்தன்றித்தண்டலாகா
புலக்குரியனவாநூல்கள்புகறரவிருவர்தம்முட்
சொலற்குரியவனைக்காண்பாமென்றொருசூழ்ச்சிசூழ்ந்தார். (௫)

அறனிழுக்காதமேலோராதரத்திருமாலோடு
மறனிழுக்காவெம்போரின்மலைதியோய்மதியைச்சூடி
திறனிழுக்காததிண்மாமலைவில்விற்றிறம்பல்செல்லாப்
புறனிழுக்காப்புராரியென்றனர்பொலிந்ததேவர். (௬)

வகுத்தலுங்காத்தலோடுமாற்றலுமுத்தர்தீதைச்
செகுத்தலுஞ்செய்யவின்பஞ்சேர்த்தலுமுளமாலோடு
மிகுத்திடுபூசலாற்றிவீரம்யாமிலைதுநோக்கீர்
தொகுத்திடுசுரர்காளென்னச்சொற்றனன்சிவபிரானே. (௭)

பாரிடகணங்கள்சூழும்பரவையிற்சும்மையோடு
மோரிடமின்றியெங்குமுகந்துறப்பின்னரோங்க
னாரிடம்வைத்தானாராயணனுடனமோகூடும்
போரிடலென்னுதந்தோபோர்செய்வானேன்றினானே (௮)

தோன்றியவ்விலமெல்லாந்துலங்குவானுணர்ந்துவேதம்
ஈன்றநற்கலுழப்புத்தேளீர்ந்தொடைக்குவவுத்தோண்மேல்
சான்றவரோத்தவைந்துபடையுடன்றுணுமுன்னர்
ஊன்றியவறிவுமாண்டவும்பர்கள்காணநின்றான். (௯)

ஏறிவந்தழற்கற்றைக்கொளெனுங்கழுமுட்டாளேந்தி
நீறிவந்தழற்களேபரம்பொலிந்திடவெலாமுண்
டாறிடாவகட்டுமேனியாரணப்பொருளைக்கண்டும்
சேறிடாச்சிலவெஞ்சொல்லைச்செப்புவான்றுணிந்தான்மன்னோ. (க0)

கேட்டியோயழிவிலானென்சேசவகேண்மையோடும்
நாட்டியவுலகமெல்லாநன்றுகாத்திடுவலென்றும்
வாட்டமற்றென்றுநீங்காவலிநிறையச்சுதப்பேர்
சூட்டவுற்றவனீயென்றுந்தொல்லைவான்பரமனென்றும். (கக)

மடலவிழ்பொகுட்டுண்மேயமலர்மகன்றாதையென்றும்
கடலவிழ்மதமாவேறுங்காவலோன்முதலோர்க்கெல்லாம்
தடையறுதேவனென்றுந்தாதவிழ்கமலையார்க்கு
இடையறுகாமனென்றுமிவருநின்னிறுமாப்பெல்லாம். (கஉ)

அறிந்தகற்றிடுவான்பூசற்கண்மிஞமகலாதேற்றுச்
சொறிசெய்நங்குவவுத்தோளின்றன்மையையறிதியென்னாத்
தறிசெய்தன்வில்லைவாங்கிச்சரவழன்மாரிமான்மேல்
வெறிபடத்தொடுத்துச்சீற்றநகைபடவிளங்கநக்கான். (கங)

விளங்குறுமரனையார்க்கும்விளங்கருமமலனோக்கிக்
களங்கறுசிறுமூரற்செம்பவளத்தைக்கவினக்காட்டித்
துளங்கமில்சூரமுன்னாட்டோன்றுமுப்புரக்கூட்டத்தும்
வளங்குலாம்பற்பனர்ச்சுனன்னிவர்வலையுத்தத்தும். (கச)

இனும்பலவமையமாடவிடுமமையத்துமுன்றன்
தனுவிகன்முற்றுமோர்ந்தேயுளந்தடுத்துயிர்வாழ்கென்னாத்
தொனிசெய்சார்ங்கக்கோல்வாங்கித்தொனிபடக்கணைகளோட்டிப்
பனியுறவகிலமுற்றும்பருத்தபோராடல்செய்தான். (கரு)

அரியரரிருவருங்கூரழன்மலிவிற்போர்செய்நாள்
வரிபடுதுளபத்தெம்மான்வாய்மலர்குவித்தூங்காரம்
எரிபடவிடுத்தானத்தாலீசன்வில்லொருநூற்றுக்குச்
சரிபடமுரிந்ததம்மாவவன்வலிசாற்றற்காமே. (கசு)

விடுத்தவூங்காரந்தன்னால்விண்டுளவில்லோன்மீதில்
அடுத்தவோர்சுரும்பணுத்திரத்தினைவிடலுமத்தால்
தடுக்கரும்வலிசேர்தாணுதாணுவென்றெவருஞ்சாற்ற
ஒடுக்கமுற்றுயிரோய்வுற்றேயொதுங்குவானோடில்லான். (கஎ)

பக்கிமான்கான்மூக்கிண்டல்பட்டடர்நந்தியேனோர்
விக்கியேயழுங்கியோடி மிடன்மடிமேவலானார்
அக்கதியறிந்ததேவராதியோரரியேமேலாம்
சக்கரத்தேவென்றேதிச்சாற்றுசீர்யாவுஞ்சொன்னார் (கக)

தந்தைதாய்மீதிற்சீறித்தாவிடுசியக்கன்றின்
புந்தியைப்பொருவவெம்மான்பொருளெனும்பகுதிக்கூற்றால்
நந்திடவலுக்கப்பட்டநாகரூநாகத்தோனும்
சிந்தையின்மயக்கஞ்சிந்திச்சிரகரராகிமாதோ. (கக)

எத்தினார்பணிந்தாரெங்களீறிலாவிறைவநின்றன்
மூத்தவல்வினையினாலேமொத்துறுபவராகின்னைக்
காத்தவனென்றுந்தந்துகளைப்பவனென்றுங்கண்டும்
ஒத்தினிலோங்குமெந்தாயுழல்குவமுவந்தாளென்றார். (உ0)

தன்முகநின்னைச்சீறிக்கறித்துத்தின்றிடுவலென்று
வன்முகங்கொண்டான்மானமதிமுடிமானேன்றன்னுள்
வின்முகங்கொண்டுவீறும்வியாபகநின்னைக்கொன்றும்
பொன்முகங்கொள்வானுற்றான்பொறுத்தருள்புரிவாயென்றார். (உக)

மலர்மழைவழியப்பெய்தார்மாப்பெருந்தொனிசெய்பேரி
நலர்துதிவேதவோதைநாட்டினார்நவையிறேவர்
சிலரையத்தக்கன்வேள்விச்செருத்திடுபவத்தினாலே
பலர்பழிபகரச்செய்தான்பரமனென்றியாருஞ்சொன்னார். (உஉ)

இரிதல்செய்திட்டவெம்மானெற்றடியுறழத்தேவர்
எரிதவழ்மேனியானைவிளித்திழிவில்லார்தம்மை
யரிந்தினையந்தத்தீமையடுத்ததுன்றனையென்றியாண்டும்
விரிந்தமாலன்றியாரோமிகுபரனென்றுமீண்டார். (உக)

அப்பொழுதரனுண்ணணியகன்மலைக்கனிகத்தோடுங்
கொப்பெனக்குறுகிவாழ்ந்தான்கோமுனியுணர்தியென்னாச்
செப்பினன்பிரமன்பின்னர்ச்செப்புசீர்கேளீரொன்று
கப்புறுநேமிக்காட்டுமுனிவர்க்குக்கழறுஞ்சூதன். (உச)

நரு-வது. எம்பெருமானேடைதிரம்புகோத்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம், நரு - க்கு திருவிருத்தம் - கoகூo.

———(*)———

நசு-வது. பிரமன்றலையரிந்தபடலம்.

——:(o):——

ஐம்புலக்குறும்பைபச்சவட்டிமூவிரண்டாவறைகொடுங்குணங்களையடக்கி
எம்புலனுகருங்கடைமுதலிடையற்றிலகுறும்பரனடியேத்தும்
செம்பலம்படைத்தசேய்முனிவீணைச்செல்வநங்கடவுளோடடர்த்த
அம்பலத்தாடியவசயங்கேட்டியவன்பவனுயதுங்கேட்டி. (க)

அரிதனைப்பரமென்றகந்தைகொண்டாழ்ந்தவாரணப்பாசைவிட்கிளவி
தெரிவியாநின்றதுண்மையென்றுவவிட்டுழித்ருகின்றதேவர்
ஒருவருக்கத்தைமுதலறத்துமித்துமென்றுசூருரைத்துவெண்பிறங்கல்
புரமதைவிடுத்துப்புறம்புளபற்றைப்போக்கிவெந்தவஞ்செய்வான்பிறழ்ந்தான். (உ)

வெருவந்தமியற்றுங்கூளிகணாதன்வெந்தருக்கிவர்ந்தரிக்கிணையா
மருவந்தவினியதும்பையைமிலைந்துவந்துபோரிட்டினத்தோடே
ஒருவந்தமிரிந்தபின்னர்த்தன்வில்லையுகந்திடுதேவராதனுக்குச்
செருவந்தவின்மானியமதைப்பகர்ந்துசேணிவரிமையத்தையடைந்தான். (ங)

கடுமொழிபகர்ந்துவிழிவறைதேவர்கணத்தினைவெற்றிகொண்டிடற்கு
விடுமனத்தினனாய்வியன்புலமடைத்தேவீறிடுபொறிகளைமுருக்கி
மடிதனைமடித்துப்பசிதனைமாய்த்துமாவெயில்கான்மழைபொறுத்துச்
செடிதனைக்கெடுத்துச்சேண்டவர்வியப்பச்செய்தனன்பெருந்தவஞ்சிவனே. (ச)

வெண்பிறைமிலைந்தசெஞ்சடைச்சிவன்செய்வீறுளதானவெந்தவத்தால்
மண்பொறைவானத்துயிரொலாங்காக்கும்வானவர்கோன்மதித்தான்றன்
திண்பறைதவத்தைச்செகுப்பவென்றலர்வாட்டேவனையேவினனவனும்
கண்பறைநெருப்பாலுருவொறுத்தருவாய்க்கலந்தரனுளத்தினிற்கலந்தான். (ரு)

அரனுளத்திருந்தேயலர்களையோட்டியவன்மகிழுமையுளத்திருந்து
சரமதைச்செலுத்தவிருவருமடக்கச்சாலவுமுடிகலாக்காமப்
பரவையின்மூழ்த்திவிட்டனனவரும்பகாறுமோகமேபலநாள்
விரகவெங்களியார்ந்திருக்குழிமுளைத்தவீரியத்தறுமுகன்விளைந்தான். (சு)

தென்றலிவையங்கேசரநாரிதேங்கழைகார்முகம்பூக்கள்
மன்றலிவாளிவாரிதிப்பேரிமாமதிக்குடைமுதன்மகிழ்ந்தோன்
தன்வலிமோகத்தழுந்தியநாரிதாணுவாமின்னவர்தங்கள்
உன்னியநாணுவுருவெடுத்தணைந்தேயுறுநலமுண்டுறுமொருநாள். (எ)

பற்பலவனத்துந்தேயத்துநதியின்பரப்பினும்பருப்பதங்களினும்
நற்பலவாலுகத்திரணிலத்துநவிலருமுருவுகொண்டனங்கன்
கற்பனைக்குள்ளாய்க்கணிக்கருங்காமலீலையிற்கலந்துகட்டறுத்துச்
சொற்பதங்கடந்தசோதியினுந்திவந்தவன்றென்னகரடைந்தார். (அ)

தம்பெருமனத்திலுன்னியவிதத்திற்றண்டரும்போகமுண்டவருள்
கொம்பனையவளைவிடுத்துமுன்னாவைந்தலையுடன்விளங்கியகோமான்
நம்பெருமவைக்குட்புகுந்தெமதருகினண்ணினனாயவணிருப்ப
விம்முறுமுலைநுண்ணிடைக்கருங்கண்ணிமேனையின்மகளுமாண்டடுத்தாள். (கூ)

அத்தவித்தனாக்கணிறைவிலையான்செய்யாற்றலாலெனும்விதிக்கெம்மான்
சித்தசன்றனைநல்லுருவருவுடனேசீவர்தம்முட்கலந்திருந்து
முத்தனாநிறைவுசெய்வனென்றேவுவிதத்தவனுருவினைக்காந்து
சத்தியைச்சிவத்தைத்தழுவுவான்கலவிச்சலதியின்மூழ்த்தினான்மன்னோ. (க0)

தொல்லைநாளென்னைத்தோற்றுவித்தருளுந்தொன்முதல்வேதநான்கங்கம்
சொல்லையாவென்னக்கொடுத்தவைம்முகங்கடோன்றயாணிருந்துளவமையம்
கல்லையாமகளுங்காதலற்றேடிவந்தவளேனைமருண்டடந்தோ
புல்லையாவெனுந்தன்புருடனிலுணராப்பொருக்கெனவாதனத்திவர்ந்தாள். (௧௧)

அவையுணின்றிருக்குமன்பனையுணராவம்பிகையெனைப்பதியென்றே
குவையுளார்காணவென்மடிமீதிலிருந்தனள்கொன்றையோன்கண்டான்
கவையுறத்தீக்கணழற்சிகைவிடுத்தான்கனலுடலெரிபடக்கனன்றான்
நவையுறப்புருவங்கோட்டினான்பற்கணரநரக்கடித்தனனகைத்தான். (௧௨)

என்றலையைந்தின்றன்றலைமுளைத்ததெண்ணிலானெரிபொறியெறிந்தான்
கன்றினானுடலங்கதமெழுதீயிற்கலங்கினானொருகரிசின்றி
நின்றவென்றலைகளைந்திலொன்றரிந்தானீலியிவ்வாறுறுளனவே
அன்றவனுணர்வுகொண்டிடானென்றனைந்தினுணடுச்சிரமறுத்தான். (௧௩)

பெற்றிடுபிள்ளைபிழையினைப்பேணான்பிதாவெனுநூன்முறைபிறழா
துற்றவென்சிரமன்னவன்கரங்கவ்வியுறுதலையுமாபதியுணர்ந்தான்
இற்றதின்னானாலியன்றிலவென்றேயெண்ணினானீன்றவன்றலையைச்
செற்றமேயென்னாவெண்ணினான்கையிற்செறிசிரநோக்கினான்றிகைத்தான். (௧௪)

தாமதமுதிர்ச்சித்தடிப்பினான்மூண்டசழக்கினேனெனைப்புரந்தருள்வாய்
நாமகணாதசரணெனத்தாழ்ந்துநவின்றுநான்செய்பிழையகற்றி
நேமமதாகவிச்சிரமென்கைநீங்குறவருளுதிநெடியோன்
வாமமதமர்ந்தவனநளினத்தேவந்தருளப்பவென்றழுதான். (௧௫)

எய்திடற்கரியபரம்பொருளுந்தியெழுந்தருள்சிருட்டிசெய்யெந்தாய்
உய்திடற்கரியமானத்தீக்கொளுத்தவுடன்மறந்துணர்வழிந்துன்றன்
வைதிடற்கரியவண்டலைகொய்தேன்மாப்பெருமத்தியாமலகை
செய்திடற்கரியபீதிநோய்ச்செடியிற்சிக்கினேனெனவிக்கியழுதான். (௧௬)

கையினிற்கறித்துக்கொண்டுளசிரத்தின்கடுங்கொடுஞ்சீற்றமேகண்டு
மெய்யினிற்செழித்தமேன்முறையரனார்மீள்கலாவிடும்பையைவிடுப்பான்
ஐயவெற்குரைத்தியபயமென்றலறுமவன்றனக்கஞ்சலோவென்றே
உய்துறுநெறியையுரைத்தவன்பவங்களுக்குறச்செய்திடன்முயலும் (௧௭)

அறிதிநாரதநீயாட்டுவோனரியென்றறிகலார்க்கத்திசேர்ந்திடுமென்
றறுதியிட்டுள்ளதாரணமாதியென்றதையரனிடத்தறிந்தேம்
சிறுவநீயெம்மான்றிருவிளையாட்டிற்சிக்கினாயெனவவனடியார்
சிறுவனாவிருந்தேயுயனாவுரைத்தான்றெரிதிராலென்றனன்சூதன். (௧௮)

௫௬-வது. பிரமன்றலையரிந்தபடலம்

முற்றிற்று.

ஆகபடலம், ௫௬ - க்கு திருவிருத்தம் - ௧௦௭௮.

———(*)———

௩௭ - வது பிரமகத்தியொழித்தற் காராதித்தபடலம்.

நுண்ணியநூல்பலவறிந்தமுதியோர்க்கெல்லாநுவலவருகுணகணங்கணிறைந்து பூத்துப், பண்ணியபுண்ணியபாவகருமத்திற்குட் பட்டபயன்பலவுயிர்க்கும்பகுத்தாறு கி, மண்ணுலகோடெவ்வுலகுமுண்டாளெம்மான் மலரடிக்கன்புடையமுனிமான்றே லாடை, நண்ணினவன்சிரமறுத்தநாமங்கேட்டிநலிவுபுரியத்திமறநலித்தல்கேட்டி. (௧)

ஐயகோவென்றலறியண்ணுத்தற்செய்தகற்றியருளெனுமகவையன்பினோக்கி, வெய்யபாதகம்புரிந்தாயந்தோமைந்த வெந்நோய்க்கோர்மருந்தருள்வல்வினைவிற்கேட்டு, நொய்யதாமதகுணத்தைநொய்யதாக்கிநுவலுமரிக் கடிமையெனுமருந்துட்கொண்டால், துய்யனாரருளாலேநின்றன்றீமைதொலைதலிதுசரதமெனச்சொன்னேனையா. (௨)

அரசனருண்மொழிகேட்குங்குடிகண்மாசுமாரியனல்லருணோக்குஞ்சிச்சன்மாசும்
சரசகுணத்தந்தையருணோக்குமைந்தன்றன்மாசுமணவாளனருணோக்குற்ற
இரசகுணமனைவியவளியற்றுமாசுமிலங்குயிர்கண்மாசுநினைந்தருள்வானுன்னின் [ன்.
வரிசெய்குணவீணைமுனியருட்காருண்டே யிலையதனுன்மதிமௌலிக்கருள்வானுற்றே

தாழ்சடையுமெருக்கலருங்கொக்கின்கூழைதானுமறுகெனும்புல்லுமானின்றோலும்
வாழ்சடையகேட்டியுன்றன்மருளைவீசிவனமாலைவனமாலைவரதற்கான
வீழ்சடமிலாதவுயர்நிலத்தைக்கண்டுவிண்டுவையாங்காங்குத்தாபிதத்தைச்செய்யுன்
ஊழ்சடமிலாததிருப்பூசைகண்டேயுகப்பவணிபுரிவையெனிலுய்வாயுய்வாய். (௪)

என்றுபலபலவாகவெம்மாற்போற்றுமியல்பெல்லாங்கரவாமலிசைத்தபின்னர்
ன்றுபலபலவறிந்தேனுய்ந்தேனுய்ந்தேனுனுமெனையடைந்தவருமென்றுதாழ்ந்து
கன்றியவெந்துயர்படுத்தும்வேதையோடுகடல்சூழ்ந்தவுலகமெலாங்கதலிமானச்
சென்றுழன்றுபலபேருங்கண்டொல்லாமைசெப்பமனமிகநாணித்திரிந்தானன்றே. ()

இன்பமறுதுன்பமிகுமிமத்தாடியிற்றபிணப்பூதியத்தியெருக்கூமத்தை
துன்றுதிகம்பரவடிவும்வினையுங்கண்டதூயவருங்கோயில்சுடுகாட்டோய்நாளும்
வன்றுயர்கொண்டிடும்பித்தாபிறைசூடிப்பேர்மாபூதநாதவெனமயக்கமீறிக்
கன்றிடுகபாலியெனநாணித்தேவர்கணக்கதிற்பன்னிரண்டாண்டுகலங்கிச்சோர்ந்தான்.

சோர்ந்துசுழன்றுலகமெலாம்பிச்சையேன்று சொக்கலிங்கமென்றேதுங்காலங்கண்டு
தேர்ந்துரைத்தநம்வார்த்தைத்தெளிவுகாணத்திடுக்கென்றுநலமளிக்குந்தேவநாதன் [த்
ஆர்ந்ததிருவுளங்குளிர்வானாராதிப்பானடுத்தப்யபத்தியறிவகன்றுகாணக் [னோ
கூர்ந்தகுறைவில்லாதபிரயாகைக்கண் கோவிந்தன்றனைப்பதிட்டைகொண்டான்மன்

மறைமுடிகடலைவணங்கவாகமாதிமநுநூல்கணனியேத்தவானோரோனோர்
நிறைபரமனடிவணங்குஞ்சிவன்றன்பத்திநேயவிசுவாசமெலாநினைந்துபோற்றக்
கறையகன்றமனத்தினனுமெம்மாற்கின்புகணிக்குமிலக்குமியநந்தகருடனுதி [வன்.
முறைக்குரியமுத்தர்நித்தர்முதலாயுள்ள மூர்த்திகளைப்பதிட்டைசெய்தான்முக்கட்டே

௩௭-வது பிரமகத்தியொழித்தற்காராதித்த படலம்.

பதிட்டைவிதிப்படிபுரிந்துநன்னாள்கண்டுபாமனார்க்குரியதிருநாட்களாற்றி, அதட்டியுடனடுங்குவிக்கும்பையுளாலேயலுத்தழுங்கிமுறைகூறியடியில்வீழ்ந்து, விதிர்த்தலுடன்பலமுறைபன்னுமமோதி விரிபுருடசூக்தமதைவிளம்பியையே, முதிர்ச்சியுள பெருந்தீமைசெய்தேன்முன்னர்விளங்கியருள்புரிந்தருள்வாய்முறையோவென்றான்.

வான்றனிலாயிரங்கதிர்கண்மதிகளாகிமல்குமொளிக்கடனடுவெண்மாசற்றோங்கித்
தோன்றுமொருபூவையுருமேனியேதிதுலங்குதிருக்கரங்காணத்தொல்லைவானோர்
மான்றலறவஞ்சலித்துவணக்கம்பாடவந்தகதாதரப்பெருமான்வரவைநோக்கி
ஈன்றவிதத்தாயையறியிளஞ்சேய்மானவீசன்பணிந்தினிதுதுதியிசைத்தபின்னர். (க0)

தூய்மையுளவென்றுணவாவாய்மைமேயசுத்தவறிவினர்தலைவாசோகநாச
வாய்மையுளமலர்மகட்காநாதாநல்லோர்வரதாவென்றிடுமினியமனத்தாதிய
பேய்மையுளவாணவத்திற்பிறழுவார்க்குப்பெருமையிலாவருமையுளபீதவாடைத்
தோய்மையுளவழகுநிறைசோதிநீயென்றேடமகன்றிடவருள்வாய்சுவாமியென்றான் ()

ஐம்முகத்தெம்மகற்கினியபிள்ளாயேதமணுவுமிலாதிருக்குமயன்சென்னிதன்னைக் [ல்
கொய்துவிட்டகொடுமைகொடிதாகையாலே கோமுனிவர்வழுத்தநின்றகிள்ளிநாட்டி
எய்தியங்ஙனென்னைப்பதிட்டையிட்டுப்போற்றி யேத்தினையேனன்மனத்தாலீண்டியாமுட்டில், மெய்வினைகள்பொய்யாகநன்மையாக விளம்பியருள்குதுமவணீயேவா யென்றான். (கஉ)

தக்கணதிக்கினுக்கேகுமென்றநாதன்றழைமேகமின்னலெனமறைந்தசெவ்வி
அக்கணத்தெம்மரிக்கினியபூசையாற்றியவனருள்கொண்டதிவிளாவிலன்புபுல்க
நெக்குருகுமனத்துடன்மெய்ப்புளகம்பூப்பநெறிகாவதம்பலவுநீக்கிநீண்ட
பொக்கனைத்தும்பொடித்தருள்செய்பொன்னிநாட்டிற் புகுந்தவணிற்பொலிபெருமாற்போற்றியென்றான். (கங)

போற்றுமப்பொன்னிவடகரையினூடும் பொலிந்தோங்குந்திருநாங் கூரென்னுமூரில், மாற்றுறுமாவுருவுபதினொன்றுகொண்டுமலர்மகளார்தனிக்கேள்வன்மகிழற்கேற்ற
ஏற்றுறுபன்னொருதலங்கடீர்த்தமூர்த்தியெழுந்தருளப்புரிந்துமறைக்கேற்பவாய
தேற்றலுறும்பூசைபலிதிருவிழாக்கடிகழாகமப்படியேசெய்தான்மன்னோ (க௪)

வேண்டியவேண்டியாங்கெய்தலாகுமென்றேவிடதரனோரைந்தாறுவேடம்பூண்டு
தூண்டுநகையுளம்வலிப்பவைந்தைவீட்டித்தோமகலவறுகுணத்தைத்தொலைத்தெம்மான்றன், காண்டரியகமலமலர்ப்பாதத்தேனைக்கரும்புள்ளைச் சிவணவுண்டுகளிமேற்கொண்டு, பூண்டரியமுக்கரணந்தம்மைப்பூட்டிப்புகலறும்பன்றூடவத்திற் பொலிந்தான்மன்னோ (கரு)

திருமணிமாடக்கோயிறன்னினந்தாத்திருவிளக்கையரிமேயந்தன்னினூரு
மருவுமொருகுட்மாடகூத்தன்றன்னைமகிழ்தெற்றியம்பலத்துச்செங்கண்மாலை
உருமருவுசெம்பொன்செய்கோயிறன்னிலோங்குபேரருளாளப்பெருமாடன்னைக்
கருவறுவண்புருடோத்தமத்தப்பேராற்கவினமலனென்றுரைக்குங்கடவுட்டேவை. ()

நல்லதிருமணிமாடகூடத்தப்பேர்நாயகனைவிண்ணகராம்வைகுந்தத்தே
அல்லலறுமப்பேர்கொள்மான்றன்னையருள்செய்திருத்தேவனார்தொகையில்யாரும்
வல்லனெனுந்தேவநாயகப்பேர்மாட்சிமாதவனைத்திருப்பார்த்தன்பள்ளிதன்னில்
எல்லையறுதாமரையாள்கேள்வன்றன்னையிசைவளருந்திருவெள்ளக்குளத்தோ. ()

கண்ணனெனுநாராயணப்பேர்த்தேவைக்காவளம்பாடிப்பெயராற்கவினூரில்
நண்ணுமொருகோபாலசாமிதன்னைநான்மறைசொலாகமத்தினவிலும்வண்ணம்
வண்ணமுறுமலர்மடந்தையவனிமாதுமாவனந்தகருடனுடன்சேனைமன்னன்
எண்ணலறுபரிசனங்கடிக்குத்தேவரிணையகலாப்பிரதிட்டையிட்டுமாதோ. (கஅ)

வாழ்த்தினன்வணங்கினன் வரதாவென்றான் வழங்குதிருநாட்களெலாமலியச்செய்தான்
வாழ்த்தினனம்மான்றனருணீர்வாரியகன்மனத்தையதுகிடப்பவருமையான
வீழ்த்தீயையவித்தினிமையுதவவல்லவொண்டுதியைவிண்டடற்றியோதியோதிப்
பாழ்த்தகொடுந்தீக்கோவைபாறநாடிப்பாடினன்பதமெடுத்தேயாடினனே. (ககூ)

ஆடினனகங்குழைந்தானன்பேயின்பேயணியரங்கத்தேவளருமமுதேயென்றான்
தேடினன்மறைமுனிவரறியகில்லாச்செல்வமேயென்றுபலதுதிகளோதிக்
கூடினனிருவிகற்பசமாதிதன்னைக்கொண்டுள்ளேவிளங்குகின்றகோமான்பாதம்
சூடினன்றுளக்கமிலாவுருவைக்கண்டுதூங்கினன்றொல்வினைவேர்வாங்கினனே. ()

வேறு.

மும்மைமுயங்கறிஞர்களேசிறுநலையுமுளையாமுண்டகத்தான்மூர்த்தம்
வெம்மையுறத்தடிந்தவன்றன்மேதமறவிட்டுனுவாம்விமலற்போற்றும்
செம்மையுளவாகமத்தின்விதிவிதித்தவாறரனப்பிரயாகைச்சேர்ந்
தம்மையிம்மையுதவுபிராற்போற்றியவனுணைகொடங்ககன்றுமன்றே. (உக)

பொன்னிவடகரையிலமர்திருநாங்கூரொழுவாயாப்போற்றுகின்ற
வென்னுங்கேத்திரங்கடமிலாரணங்கண்மெலியெனும்பொருளினீட்டம்
மன்னும்பஞ்சராத்திரநூற்றெட்டுசம்மிதைக்குண்மலிவசனமேற்ப
அன்னையரையகலாரையடியாரைப்பிம்பமிட்டாலயங்கள்செய்தான். (உஉ)

தாபித்தான்றடம்பறித்தான்றமனியத்தொன்பான்மணியாற்றழைக்குஞ்சோதி
மேவித்தான்மிளிர்வவெனமண்டபகோபுரங்களெல்லாம்விண்ணளாவி
ஆவித்தானம்மிதெனவாற்றிவாகனங்கண்முதலாயவெல்லாம்
மேவித்தானைம்பருவவுச்சவங்கண்மலிவுபெறவிழைவிற்செய்தான். (உங)

பதினொருகேத்திரத்துங்குறைவறப்பிரமச்சாறூற்றப்பரிவுகொண்டு
பதினொருபார்ப்பதிகொழுநனுகிபரம்பரனைமிகப்பரிவினாலே
பதினொருருத்திரரொனவேபடிவமெடுத்தரிபூசைபண்ணினன்றீப்
பதினொருவெம்பொறிகளையுங்கால்களையுமடக்கினின்றான்பரசுபாணி. (உச)

வேறு.

பாணியிற்கௌவுறுபிரமனவிரங்காணும்பரந்தாமகாத்தியெனப்பாணிகூப்பும்
வேணியிற்காண்வீறுடையவத்திநோக்கும்விமலபரமானந்தராமாவென்னும்
கேணியிற்காணிருட்குட்கிவெருவிக்கூவுங்கேசவநாராயணகோவிந்தாவென்னும்
வாணியிற்காண்பொருள்சோருமௌனியாகுமதிவளரநலமுனூற்றுமலைப்புத்தேளே. ()

நெடுங்காலங்கடும்பொறிகணெறித்துவாட்டிநின்றமனத்துடன்றவத்தினிலையுற்றோங்கிக், கொடுந்தீயதெனும்பாவக்கொலையையோர்ந்துகொதித்துரப்பும்பிரமகத்திக்கூளியெண்ணி, அடுந்தீயபிரமன்சிரத்தார்ப்பையுன்னியையகோவென்றலறியழுங்குவான்றன், படுங்கேதமகன்றொழியவெம்மானோர்நாள்பரந்தவெளியுழியொருசொற்பகர்ந்தானன்றே. (உசா)

ஊன்குறித்தவுயிரொறுக்கிமனைவியாளாயுற்றவுயர்புத்திரனையொறுத்துமேலாம்,
யான்குறித்த விடங்களெலாஞ் சென்றுவேதாயாதுரைத்தா னப்படியே யாவுமாற்றித்,
தேன்குறித்தமலர்மகளார்கருணைகொண்ட செவ்வண்ணத்துருத்திரனேதெளிந்தபொ
ன்னி,தான்குறித்ததென்கரையிற்கண்டோனுந்தடநகருண்டவ்வுழிநீசார்ந்துமன்றே

அர்ச்சையுருவாகவெனையன்புபூண்டேயகமகன்றமனத்தினுடன்றாபித்தேத்தி
இச்சைவண்ணமெய்திகலமியைதியென்றுவிசைத்தகடவுளின்வாணியீசன்கேட்டுக்
கொச்சையகல்குணத்தினெடுபுளகம்பூப்பக்கோதகன்றகடவுளறக்குணத்தைப்பாடிப்
பச்சைமரநாடிவெயிற்பட்டார்சேரும்பரிசிலரன்கண்டேர்க்கட்பட்டான்மாதோ.(௨௮)

கண்டோரைக்காணலுமெய்ப்புளகம்பூத்தான்கண்ணீரினீராட்டங்கண்டான்வேதங்
கொண்டேருந்திருமேனியம்மான்செவ்வாய்குறித்தோதுமூரிதுவோவென்றான்றீமை
விண்டேரும்வியனிலமின்னதுகொலென்றான்விட்டகலாத்தீமைவிடுநாளோவென்றான்
வண்டேருமலர்வாவிமலிதெங்காதிவளப்பமுளவூரைமிகவந்தித்தானால். (௨௯)

எஞ்சாதவிருவினையையொப்பவாக்கியிரண்டொன்றுமலமதனையில்லையாக்கித் [ன்
றுஞ்சாததூயபரம்பொருளைப்போற்றுந்தொன்முனியேயறிதியெனப்பிரமன்சொன்
மஞ்சாரும்பாதவங்கண்மலர்க்காவின்பமலிந்தகணித்திரணெருங்குகேமிக்காட்டில்
முஞ்சோடுமேகமியற்றுமுனிகாளென்றேமோதமுளசூதமுனிமொழிந்தானன்றே. (௩௦)

௩௭ - வது. பிரமகத்தியொழித்தற்காரர்த்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம், ௩௭ - க்கு திருவிருத்தம் - ௧௧௦௮.

——:(o):——

௩௮-வது. திருக்கண்டியூரிற் கபாலமொழித் தருளிய படலம்.

அண்டமுமண்டலமும்மிகவுண்டருளம்பரமேனியநந்தனருள்
கொண்டமனந்திகழ்மாமுனிநாங்கூர்க்கோவில்பரஞ்சொல்குணங்கேட்டி
குண்டையிவர்ந்துலகந்தனிலாவிகுலைந்திடவாதியவன்கைவாழ்
மண்டையகன்றிடவந்தருடந்திடுமாதவனாருளோதுவல்கேள். (௧)

சங்கரசம்புசதாசிவனென்றிடுசோம்பரணிந்துளதாணுலகம்
எங்குநிறைந்துளவீசனமைந்துளதிவ்விடமன்றேவென்றெண்ணிப்
பொங்குமுளத்தினனாகியவ்வூர்ப்புகழ்போற்றிமகிழ்ந்தவனாகியரோ
சங்கொடுசக்கரமேந்தியருட்குணசாகரநீருளலாவினனால். (௨)

வேறு.

கண்டியூரினைவலம்வந்தேத்திப்போற்றிக்களிவலிப்பவுடல்புளகங்காணயாவும்
உண்டவனையுகநான்குமுணற்றிக்காத்தற்குடையவனையுடலுயிர்க்குளுறைந்துபூத்த
எண்டவனையேகமாயலர்மேனின்றவிறையவனையகலானையிரவிசோமன்
கொண்டதிருக்கண்ணனையருட்செயூரிற்கோதகலத்தாபித்துக்கொண்டான்மன்றே. ()

மறைக்கினியவாகமத்தின் முறைமைக்கேற்பமந்திரத்தைத்தாபித்தான்மறையின்
சென்னி, இறைக்கினியவாவரணந்தெய்வமாதி யியற்பொருள்களியற்றிவைத்தானெ
ழில்சேரின்ப, முறைக்கினியநாண்மதியாண்டவையிற்செய்யுமோதமுறுதிருவிழாமுற்
றுஞ்செய்தான், தறைக்கினியவான்றனக்குமகிழ்ச்சிசூழத்தரணிமகளுரந்தழுவுந்தானு
மாதோ. (௪)

கடுங்காமவெகுளிமயக்காதிவீட்டிக்கருத்தொருமித்தெம்பெருமான்கமலபாதம்.
இடுங்காசிலிதயமதையிமையந்தானாகியிறைப்பொழுதும்பொச்சாப்பற்றிருப்பானாகி
நெடுங்காலந்தவமியற்றிவந்தநாளுநிமலனெழுந்தருளாதநிலைமைகண்டு
படுங்கேதந்தனைப்பொறுக்காநெஞ்சம்புண்ணாய்ப்பலபலநாளழுதலறிச்சாம்பிமன்னோ.

வேறு.

சீதமாந்திருடியானையின்றேவினுடையசைத்தரோ
பூதமாதிகணாதனாகியபூதிபூசுபுராந்தகன்
வேதவேதவிமானமேவியவிமலமேவியவித்தினை
யோதியோதியகங்கசிந்துநலுத்தமத்துதிசெய்குவான். (௬)

எங்குமாகிநிறைந்தநாதனேயாவுமேயுணர்போதனே
அங்குமிங்குமசைத்தெலாமுமுன்னங்கமிட்டருளப்பனே
பொங்குவெம்பொறிபுலனிலாதவெம்புந்திவந்தபுராதனா
சங்குசக்கரமேந்திவந்தருடற்பராவெனையாடியால் (௭)

பரமகத்தியமுங்குமானையின்பரிவுபோக்கியபண்பனே
சிரமகற்றியசீரிலாமையிற்சிக்கியான்மிகவிக்கினேன்
புரமகற்றியென்பொருளகற்றிநற்புந்திநைந்திடவந்தவிப்
பிரமகத்தியகற்றியாண்டருள்பிரமமேமிகுதருமமே. (௮)

அண்டமுண்டருளாதியீறிலனாதியேயகரத்துருக்
கொண்டகோதறசட்குணப்பெருங்குன்றமேமணிமன்றமே
பண்டைவல்வினைமேயவென்பிழைபார்த்திடாதயன்பரிவுள
மண்டையென்கரம்விட்டிடத்திருவருள்புரிந்தருள்வரதனே. (௯)

சிவகாருணியத்தினாற்பலசித்தினுக்கியைபகுதியில்
ஓவிலாதவனேகதத்துவமுள்ளயாவுமுனூற்றியே
ஆவலோடுகொடுத்திரட்சைசெயையயான்செயநீதியாம்
பாவமாறிடநீசெய்வாயருள்பாவமற்றபராபரா. (௰)

எட்டொணாமறையின்சுருக்கெனுமெட்டெழுத்திலிலங்கிய
கிட்டமேகிறியற்றதந்தைதாய்கிளையெலாமுமாங்கீர்த்தியே
கெட்டவென்பிழையெண்ணிலாதுழல்கேதம்யாவுமகற்றியென்
கட்டநீக்கிக்கடாட்சியென்னுள்கலந்தமூலமில்காட்சியே. (௧௧)

பூவுநீருநெருப்புமாலுறும்புட்கரத்திருசுடருமா
யாவுமாகியலானுமாகியகண்டகண்டமதாயினாய்
தேவுநீயலதியாவர்சிற்குணச்செல்வனேயெனதேய்மரம்
பாவநீக்கியளித்தெனைப்பரிசுத்தனாக்குதிப்ரமனே (௧௨)

௩௮-வது. திருக்கண்டியூரிற் கபாலமொழித்
தருளிய படலம்.

ஐயவென்னருமைப்பராபரமானசோதியநாதியே
மெய்யெலாமருடேசிகோத்தமராவர்க்கெலாமாதியே
துய்யவென்சுகமோக்கவின்பருடோன்றலேபயமுற்றவென்
கையிலொட்டியசிரமகற்றிநின்கழல்வழுத்துமாறருள்செயே. (௧௩)

சகலதேவர்களாலுமுத்தர்களாலுஞ்சித்தர்களாலுமே
அகிலநாதவெனத்தினந்தினமன்பினேத்திடுமடிகளாம்
நிகிலபூரணகமலநாயகிநீளைபூமிகணீங்கருஞ்
சுகசொரூபவென்னேதமேசகித்தருள்செய்வாய்சுகவத்துவே (௧௪)

பிரணவப்பொருளாதிவேள்விபுசிக்குமீசனுமாதிவெங்
கரணமாதிகடந்துவீங்குகாயத்திரிப்பொருளாதியோர்
திரணமேருவெலாம்புசித்துமிழ்சித்தனுகியசித்தெனும்
பரணியிட்டசைவேதகீதபராத்பரம்பொருளானவா (௧௫)

முற்றுமாகியவற்றைமேனியிலாக்கியன்னவையுண்ணிலாய்ச்
சுற்றியன்னவையிருவினைப்பயன்றுய்ப்பவாக்கியவற்றுளே
சற்றுமேயொருதாக்கலற்றொளிர்சத்துவப்பெருஞ்சாமியென்
குற்றமேபொறுத்தனுபவிக்குமிக்குற்றநீக்கருட்குன்றமே (௧௬)

குன்றமேகுணமற்றதேவர்கள்கோளிழைத்தனர்சிக்கியான்
ஒன்றெனவுணாயுவமையில்லுனேடென்றுபூசலுளுற்றியே
நின்றவென்பிழைநினைவுசெய்கிலாதெந்தையாண்டருணேர்சினம்
பொன்றவைத்திடுமென்றதெண்ணிலன்பொறுமைசெய்தருள்புனிதனே. ()

புனிதனேயெனவந்திநான்முகனுதியானவர்புகலொணு
மனிதனுகிநன்மாவதாகிவயானதாவரமாகிநல்
இனமதாகியிரட்சியச்சுதவேழைநாணியினைத்தனன்
அனமதாகியநாதிவேதமயற்களித்தருளமலனே. (௧௮)

அமலனேயடியார்களாகுமயற்குமெற்குமகாயம்வாழ்
கமலையாளுரம்வாழ்வுகொண்டுயர்கர்த்தனேசரணுகதன்
மூமலமுற்றுமுயங்கிநின்னொடெதிர்த்துநாணிமுரிந்தனன்
விமலனேசகித்தாளுவாயரிவிண்டுவேயருள்கொண்டரோ. (௧௯)

கொண்டல்வண்ணகூவுண்டகண்ணவென்குறையகற்றிடுகென்றுமண்
தண்டமிட்டிருவிழிகணீருகவேயழுங்கிடுதுதிதனக்
கண்டமிட்டவநாதிசோதியகங்குழைந்தருள்வீங்கியே
கண்டமிட்டகருப்பனுர்விழிகாணநின்றனன்ககனமேல். (௨௦)

சீதவாசமளாவுசோதிமந்தாநிலஞ்செகமெங்கணும்
நாதனுர்வருமுன்புவீசுறநாகர்பூமழைசிந்திடப்
போதமேவியபோதனுமொனும்யானும்வானிறைதானுமே
ஏதமாறிடுமுனிவர்தேவர்கள்யாவருஞ்சயசயவென. (௨௧)

வானிலோரிடமறநிறைந்தகந்திருவரூர்வசிமங்கையர்
கானமோதிக்களித்துநட்டமியற்றியஞ்சலிகாட்டிட
ஊனமற்றவனேகவேதமுதாத்தமாதிகளொடிவிலா
தானநாதபல்லாண்டெனுமிகுமார்த்தியோடுமறைந்திட. (௨௨)

முன்னவன்னிதோவந்தனன்மறைமூர்த்தியிங்ஙனம்வந்தனன்
அன்னவாகனனேறுவாகனனண்டவன்னிதோவந்தனன்
துன்னுபூரணன்வந்தனன்றிதிதோன்றலிங்ஙனம்வந்தனன்
பன்னகத்துறைபரமன்வந்தனன்பாபநாசனன்வந்தனன். (௨௩)

முத்தொழிற்கொருமுதல்வன்வந்தனன்முத்திதந்தருண்மூர்த்தியாம்
கத்தன்வந்தனன்பசிகளாதியில்கடவுள்வந்தனன்கமலையார்
அத்தன்வந்தனனகரவாச்சியனுகுமையனெழுந்தனன்
பத்தர்காளெனவேதிருச்சினமெங்குமேபணிமாறவே. (௨௪)

வேறு.

வில்லிடுகிரணக்கற்றையொளிவெயிலிருளைத்தின்னுங்
கல்லிடுசுவணச்சோதிமோலியேயெழுவாயுள்ள
புல்லிடுபூண்சாலங்கள்பொலிதரப்பொன்னங்கோடி
எல்லிடுநீருண்மேகவெழிலுறெம்மீசன்வந்தான். (௨௫)

ஈசனைக்கண்டவீசானப்பெயரிருடிதான்செய்
பூசைநன்றாயதென்றான்பொருக்கெனவெழுந்தான்வீழ்ந்தான்
மாசுளபேர்க்குக்காணவருவனோவெம்மானென்றான்
தேசுளதிருமுன்வைக்குந்திரணமுங்காணேன்மன்னே. (௨௬)

என்றனுட்பரமேயென்றானீறிலாவருளேயென்றான்
பொன்றியதென்றன்றீயபொக்கெனப்போற்றிவாழ்த்தி
நின்றுகைமுகுளித்தெந்தாய்நினையல்யான்செய்ததீமை
நன்றெனக்கோடியென்றானணினன்சரணமென்றான் (௨௭)

சரணமேகதியாக்கொண்டதமியன்யான்றயைசெய்யய்யே
மரணமேகதியாக்கொண்டோர்நின்வலிமாய்க்கமாய்வார்
கரணமாதிகளைமாய்த்தககனருங்காணுநின்னை
ஒருவனேவறியவல்லேனுகந்தருளொருவாதென்றான். (௨௮)

வந்தவானவர்கடேவன்மதியுளான்றனைவிளித்தோய்
கந்தவேடாதையாவர்காசினிதனிலேதம்மை
முந்திடநினைந்தேமாப்பைமுன்னியேசினந்தாரன்னோர்
சிந்திடஞானங்குன்றித்தீப்பச்சேறிழிவர்மாதோ. (௨௯)

தான்றனதென்றமானச்சழக்கினில்யாப்புண்மாந்தர்
வான்றனையிழப்பாராகிமாப்பெரும்பாவங்கொண்டே
யான்றமையிழக்கப்பெற்றியாதொருநலனுமற்றே
ஈன்றிடுபிறப்பிறப்பாமிடும்பையார்கலியில்வீழ்வார் (௩௦)

ஆதலாலரனேயாதாமொருவனொன்னுணைநீங்கா
தோதுறுமறையின்வண்ணமொறுவுவவொறுவிக்கொள்வ
தேதுகொண்டியானென்றன்தென்னல்விண்டென்றாண்டன்
தாதனினிற்கப்பெற்றார்தடையறுசுகமுற்றுய்வார். (௩௧)

என்றநன்னெறிகளெல்லாமோதியேயெம்மாலாய
நன்றிலாயிறுமாப்புற்றசினத்தினினைந்துநொந்தாய்
இன்றுநீசெய்ததீமையெண்ணிலேமீன்றவாத்தன்
கன்றழுக்குக்குமாபோலுன்பிழைகருதல்விண்டாம். (௩௨)

உன்பிழைகருதாதென்றனுயர்துதிக்குகந்துபாணி
தன்பிழைகொண்டுகௌவித்தடியுணுந்தலையைப்போக்கி
வன்பிழையழியச்செய்துமென்றெமானணுகிவந்து
முன்பிழையில்லாவேதன்றலையினைமுன்னிநோக்கி. (௩௩)

வணங்கிநின்றிடுகுமாரதாதைதகைவருசிரத்தில்
இணங்குறத்தன்மேனிப்பார்சுவத்தெழுமின்னீர்தேக்கி
அணங்குறச்செய்கபாலமோக்கமிட்டரந்தைநீக்கிப்
பிணங்கலற்றிருப்பச்செய்தான்பிறப்பிறப்பறுக்கும்பெம்மான். (௩௪)

பின்னருங்காளகண்டன்பெற்றவென்பிதாவின்றாளில்
மன்னிடவிழுந்தென்றேவதேவனேவரந்தந்தாளும்
பொன்னவட்புணருமோகப்புண்ணியகருணைக்குன்றே
இன்னமொன்றுண்டென்சிந்தையினிலதையீந்தாளென்றான். (௩௫)

என்னெனிலெண்ணிச்செய்க்கருமமென்றியம்புஞ்சொல்லை
நன்னயமென்னாதந்தோநலிகதத்தானுனைந்தேன்
இன்னயமில்லாதாற்றேனிறைவவென்கையினின்று
மன்னியகபாலநீக்கினாயதின்மறுக்கந்தீர்ந்தேன். (௩௬)

கலைமகணாதன்சென்னியென்கைவிட்டிடினுமந்தக்
கொலைமிகவுடையனானகோதகல்கிலனேயந்தோ
அலைகடலுலகோனொன்னைபத்தியானெனலகற்றற்
கிலையிதற்கென்கொல்செய்கேனியம்பிநீயருளாயென்றான். (௩௭)

பவமிகுதீனனாகிப்படுபெருவரல்கண்டெம்மான்
தவமிகுமைந்தாமிக்குத்தளரலோர்காலத்தென்றாள்
நவமுறுபுனலுன்சென்னிநாட்டுவாயந்நாடொட்டுச்
சிவனெனவுலகமோதச்செல்வமுற்றுய்வாயென்றான். (௩௮)

அழுதலையகற்றியானிவ்வகலிடமளந்துகொள்ளத்
தொழுமயனுலகுக்கேகுமென்பதந்தன்னைத்தொல்லோன்
கழுவிரசைப்பேர்நீராலக்கழுநீருன்சென்னி
விழுதவமியற்றிவாழ்தியெனவெளிமறைந்துபோனான். (௩௯

அறிதிபண்ணைசக்கும்வீணைக்கரசெனுமுனியென்றின்ப
நெறிபகர்பிரமனேதினன்னெனுச்சூதனேர்ந்த
பொறிபுலமகற்றியாகம்புரிசௌனகன்முன்னுற்றார்
குறிகொளுமாறுவிண்டான்கோதிலர்களிப்பக்கொண்டார். (௬௦)

௩௮-வது. திருக்கண்டியூரிற் கபாலமொழித்தருளிய படலம் முற்றிற்று.

ஆக படலம் ௩௮-க்கு திருவிருத்தம் - ககச௮.

—:(0):—

ஸ்ரீமதேராமாநுஜாய நமஃ

௩௯-வது கங்காதரனாகியபடலம்.

பொங்காவெழுகாமக்கனல்பொன்றத்தவமாற்றி
நங்காதலுறுங்காதலநாகாபரணன்கை
மங்காதவென்மண்டைப்புவிமன்னற்சொலினும்பின்
கங்காதரனானதையிங்காதரவொடுகேள். (௧)

என்னாயகன்விண்ணாயகனேறித்தடிமன்னச்
சென்னாயகன்செம்பூமழைமூழ்கிக்கரவானான்
பின்னாலுனைபூதாதிபன்பிழைதீர்தருகாலம்
எங்காளெனவிளைநோக்குறுமிளங்கூழெனவிருந்தான். (௨)

இருந்தான்பினுமெழுந்தான்பரனிசைந்தாளெதிர்காலம்
வருந்தானமெங்கெனவேங்கினன்மறமெண்ணிவருந்திப்
பொருந்தாதொருபோதும்பொருபுவியிற்பலதினமும்
திருந்தாதலைமனமொத்திடுதிரமாயலைவுற்றான். (௩)

எம்மான்றிருவடிமஞ்சனமிட்டெஞ்சியபுனலை
அம்மாகலையழகன்மிகுமன்போடடியேற்கும்
விம்மாகளிமிக்கூர்தரவிடுநாளுறவருமோ
இம்மேதினிசிவசுத்தனென்றிசைநாளெனக்குறுமோ. (௪)

என்றேபலபலவாகவிசைத்தெண்ணறுகாலம்
ஒன்றாகியபலவாகியவோவாநலமுற்றுப்
பொன்றாதகன்மூவாமுதலானடிபோற்றி
நன்றாமுலகெங்குஞ்சுலவுற்றேவருநாளில். (௫)

ஒருமாபலியென்பான்புவியுடன்வானுலகெல்லாம்
உருதன்குடையுள்ளேயுறவோம்பப்புரந்தரனும்
மருவாதுறுசுரரோடுதன்மனையோடலைவுற்றே
கருமேருறுகானங்கழியூரொங்கனுமோடி. (௬)

கரவாகியலைந்தேயலமந்தேமிகநொந்தே
அரவாகியசயனங்கொளுமையாவைவினைந்தே
புரவாகியதேவேயடுபொல்லாவவுணன்செய்
உரமாகியவுறுகண்ணலையுற்றுற்றகிலேமால். (௭)

நிற்குந்தலமில்லேமெமைமீங்காமனையெல்லாம்
விற்குந்தமுமில்லேமுணுமேலன்னமுமில்லேம்
பொற்குந்தமுமில்லேமுடைபூண்சாலமுமில்லேம்
கற்குந்திறமில்லேமொருக்காலுங்களியில்லேம். (௮)

எந்நாள்கொலிவ்வவுணன்பையுளுற்றேம்புதலெந்தாய்
நின்னாமமுநின்மேனியுநின்னீர்மையுமுடையேம்
அன்னாவெமதையாவெமதப்பாவெமதத்தா
இந்நாளளவும்பட்டனமினியும்படுகிலமால். (௯)

நீயல்லதுயார்காப்பவர்நிகிலப்பரம்பொருளே
ஆயல்லதுயாரோசுதானராற்றுவரொன்றே
வாயல்லதுவெம்போலியர்க்கென்பாழிகொல்வல்வா
சேயல்லதுசெய்நாளினுஞ்செறிவார்கொலோவீன்றோர். (௧௦)

இன்னின்னனபலதேவருமிணைமாதருமியல்வான்
தன்னாதனுந்தன்றேவியுந்தன்றந்தையுமழவே
என்னாதனங்கெழின்மேவியவியன்மாமறைபயிலும்
நன்மேனியினோடேபுவிநணுகும்வடிவானான். (௧௧)

சுரர்வெந்துயர்படுமாறருள்செந்தாமரைவிழியான்
வரர்யாவரும்வாழ்த்துஞ்சிறுவடிவாகுவாமனனாய்
பிரம்படியோர்வந்நியெனுமாபலிபேணும்
பரமன்னியவேள்விப்பயிலிடமேகினன்பரமன். (௧௨)

பரமன்வரவெதிர்கண்டெழுபாழிப்புயவசுரன்
சுரபூசுரநீயிங்குறல்சொல்லாயெனவவனும்
உரமன்னியவோரிட்டியானுற்றற்குரிமையினோர்
தரவேண்டுமென்னடிமூன்றுளதனையென்றனன்றனியன். (௧௩)

உபசாரமுனாற்றிக்கொளுமையாவுலகென்ன
அபசாரமெலாமுட்கொளுமறவாழியெனம்மான்
தபசாரமுளாருந்தொழவரிதாகியதாளால்
சுபசாரமேதினிமுற்றினுஞ்சோராதளவிட்டான். (௧௪)

கடலிட்டுளமலைமேதினியெல்லாங்கழலிடமாய்ப்
படவிட்டுளவாகாயப்பரப்பெங்கினுமாகத்
தொடவிட்டொருகழனீட்டலுந்துதிவானவருலகம்
இடம்விட்டெனதிடங்கீழுறவிட்டேகியதிறைதாள். (௧௫)

இறைவன்கழலென்னுரையளந்தப்புறமேகிக்
கறைகொண்டுளவேழாரைகடந்தப்புறமேகிப்
பொறைகொண்டுளவண்டச்சுவர்பொள்ளப்பெருவிரலால்
நிறைகொண்டுளவிரசைப்புனலுக்கவேநிமிர்ந்துளதால். (கசு)

என்புண்ணியமென்கோவரனென்புண்ணியமென்கோ
மன்புண்ணியமென்கோவிரிமண்புண்ணியமென்கோ
முன்புண்ணியமுதிர்மாமுனிமூவாதிபன்முன்றுள்
தன்புண்ணியநெறிவாயொழுகியதீம்புனறன்னை. (கஎ)

எடுத்தேனெனதிருகையினிலேந்திக்கரகத்தால்
தடுத்தாண்டருளம்மான்றிருத்தாண்மீதுசொரிந்தேன்
படித்தேயுறுநன்மக்களும்பாவின்மகளாரும்
அடுத்தாண்டருளடிமாமலர்க்காராதனம்புரிந்தேன். (கஅ)

பூநீரொடுபுகைதீவமுங்கோட்டிப்புரிவனசெய்
தாநீயெனையும்மோர்பொருளாவெண்ணியடுத்தாய்
கோனேயெனப்பலவாய்வருகோவிந்தனைவாழ்த்தி
நானேவியமனைமைந்தருநன்றுயுயர்ந்தனமால். (கக)

ஐயன்கழலாட்டிக்கழியமலாகரவெழினீர்
உய்யும்மெனதுச்சிப்படவொற்றிக்கொடுவிழியில்
பெய்யும்முறைபெய்துட்கொடுபெருமன்மனைசுதர்கள்
செய்யுந்தவசின்செம்பொருள்சேர்வானருளினனால். (உo)

வேறு.

அப்பொழுதரனெம்மான்றனரவிந்தத்தாளைச்சோதித்
தொப்புடனிருக்குந்தோயந்தனைப்பணிந்துவகைபூப்பக்
கொப்பெனக்குறுகியேற்றுக்கொன்றைசேர்சடைகள்வீங்கத்
தப்பறுதலைமேவிட்டுத்தாபங்கடணிந்தான்மன்றே. (உக)

சிற்றத்திலடுத்ததீமைதிருமணவாளனோடு
கூற்றத்தின்வாயுட்பட்டகொள்கையிலெதிர்த்ததீமை
ஆற்றத்தன்னிறுமாப்பெண்ணியமரராவதைத்ததீமை
ஏற்றத்தன்வெப்பந்தீராவீர்ங்குளிரீசன்கொண்டான். (உஉ)

பிறந்திடுபோதேபெற்றபிதாவெனுமெனைக்கவுட்பால்
அறைந்திடவந்ததீமையாவிகள்வதைத்ததீமை
சிறந்திடுமுமையைப்பெற்றமாதுலற்செற்றதீமை
இறந்திடவெம்மான்பாதத்தின்புனலேற்றானன்றே. (உங)

என்றலையரிந்ததீமையிட்டியையியற்றிநின்றான்
தன்றலையரிந்ததீமைசாத்திகமறையோர்தம்மைக்
கொன்றலைசெய்ததீமைகூடியவனலான்மாழ்கி
நின்றிடுதுயரநீங்கத்தரித்தனனிமலன்றுணீர். (உச)

பவமெலாங்கோடலாலேபார்த்தவர்பவனென்றேதும்
அவமதையடைந்துதேசத்தலைந்தவனரிநற்றணீர்
நவமுறக்கொளலுமேலாநல்லழகென்றுநல்லோர்
சிவமெனப்போற்றற்கானன்சிவனென்றிருந்தசெம்மல். (௨௫)

கேட்டிநாரதனேமேலாங்கேடிலிவலத்தாளீன்ற
வாட்டமினீரைச்சென்னிவைத்தலுமகிழ்ச்சிபொங்கி
நாட்டமுங்குளிர்ந்தான்மேனிநலிவறக்குளிர்ந்தானுள்ளத்
திட்டமுங்குளிர்ந்தானென்றுமீறிலானந்தங்கொண்டான். (௨௬)

நிரதிசயானந்தத்தானிருந்தமிட்டெண்ணியெண்ணி
வரதனையலர்மேன்மன்னுமாதினைமார்பிலேற்ற
விரதனைவிமலர்போற்றும்வீரனைவேதச்சென்னி
இரதனையாவுமானவிறைவனையேத்தலானான். (௨௭)

அத்திகளறுத்தநின்றனரவிக்தத்தாள்கள்வாழ்க
குத்திரமுளவென்சென்னிகொடுத்தநின்றணீர்வாழ்க
பத்தர்களுளமேத்துன்பதுமநற்றாள்கள்வாழ்க
நத்துமெம்போல்வார்க்கின்பநல்குநின்னறுந்தாள்வாழ்க. (௨௮)

வாழ்கநின்படிவமுற்றும்வாழ்கநின்மலர்க்கைநான்கும்
வாழ்கநின்னுந்திப்பூவும்வாழ்கநின்படைகளைந்தும்
வாழ்கநின்மலர்மேன்மங்கைவாழ்கநின்முத்தர்நித்தர்
வாழ்கநின்னிருவிபூதிவாழ்கநின்னன்பர்மாதோ. (௨௯)

உனையலாலொப்பிறில்லாவொருமுதலில்லையில்லை
உனையலாலோத்திற்பூத்தவொருபரமில்லையில்லை
உனையலாலோங்காரத்திற்குரியவரில்லையில்லை
உனையலாலோம்பிமாய்ப்போரொருகடவுளருமில்லை. (௩௦)

அத்தநின்னடியிற்பத்தியடைப்பதுமிகவுங்கட்டம்
பித்தர்கள்பிறப்பிலாழ்வர்பிடிப்பதுமிகவுங்கட்டம்
நித்தர்கணிதியேமோக்கநிலையருணிமலவாழ்வே
சித்தெனுமடியேன்றன்னைச்செத்தத்திற்செலுத்தேலையா. (௩௧)

செலுத்திடலென்றுபோற்றுஞ்சிவன்றனைவிளித்தெம்மையன்
கலித்திடுகங்கைசூடிக்களித்தவகழறுன்னேத்தல்
பலித்திடென்றனக்கின்பாக்கிப்பாரித்ததருணின்மீது
ஒலித்திடுன்படைகளோடுமோங்கல்சென்றிருத்தியென்றான். (௩௨)

என்றுபற்பலவேதாந்தமிசைத்திடுபரமன்சொல்லக்
கன்றல்செய்பிரமகத்திகழன்றழுக்கற்றசோதி
துன்றலுற்றெளிருமாணிக்கம்மெனத்துலக்கமெய்தி
நின்றதன்கணங்கடேவர்போற்றுறக்கயிலைநேர்ந்தான். (௩௩)

வெள்ளிமாமலையின்மைந்தர்வேட்கைசேர்மனைவியோடும்
தெள்ளியவறிவான்மிக்கதேவராதியர்களேத்த
நள்ளிருணக்குசோதிநவமணிகுயிற்றுகோயில்
வள்ளியின்மாமன்வாழ்ந்தான்வரிசொன்மாமுனிநீயோர்தி. (ருச)

முன்மொழியவுணன்பாலின்மூவடியேற்றமூர்த்தி
பின்பொருவடியனுஞ்செய்புண்ணியத்தவன்றன்சென்னி
தன்பொருளாகக்கொண்டத்தகுவனுக்குக்கீழப்பூவில்
இன்பொருட்சுகத்தைத்தந்தான்யாவருமிறும்பூதெய்த. (ருரு)

அன்னவனெண்ணிச்செய்தவக்கினிவேள்விக்கேற்ற
நன்னயதேவர்கோன்றனுரிமையைப்பின்னர்நாமே
யுன்னுரிமைப்படுத்துதும்மெனவுகப்பச்சொல்லிப்
பின்னமர்தேவரோடும்பீழையிற்பிறழுவானை. (ருசு)

அழைத்தமரர்க்குமேலாமரசனேயறக்கோல்கொண்டு
தழைத்திடவுலகமூன்றுந்தயவினிற்புரத்தியென்று
இழைத்திடுமரத்தினப்பொன்மௌலியையிட்டுத்தேவர்
பிழைத்திடவாசிகூறிப்பிறங்குருமறைத்தான்பெம்மான். (ருஎ)

வேறு.

தெரிதிவீணைபயின்றிடுசெல்வனே
கருதுமீசன்கங்காதரனைதென்
றரிதில்வேதனருளினனுலெனுச்
சுருதியாளர்க்குச்சொல்லினன்சூதனே. (ருஅ)

ருகூ-வது. கங்காதரனாகியபடலம் முற்றிற்று.

ஆக படலம் - ருகூ - க்கு திருவிருத்தம் - கக அசு.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சഠ-வது. கயிலாசமலையிலாடியபடலம்.

ஏகமூர்த்தியிருகழற்கேயிருகைகுவிக்கும்வீணைமுனி
சோகமாற்றிச்சுகமளிக்குந்தோயமணிந்தவியனோர்ந்தீர்
போகமாற்றும்போதசுகம்பூண்டசிவனப்பொருளையுன்னி
வேகமாற்றபரதவிஞ்சைவியப்பநடித்தவிதங்கேண்மோ. (க)

கந்தமலிந்தபூத்திரளுங்கனிகண்மலிந்தமரத்திரளும்
சந்தமலிந்தபுட்டிரளுஞ்சரிகண்மலிந்ததடத்திரளும்
தந்தமலிந்தகரித்திரளுந்தாவன்மலிந்தபரித்திரளும்
விந்தமலிந்ததேர்த்திரள்சேர்வீரர்மலிந்தவெண்மலையே. (உ)

எங்குங்கனகமணிபொதிந்தவியன்மாமேடைவரிசைகளும்
எங்குமுகினேரிரத்தினத்தரலிலகுமாடப்புரிசைகளும்
எங்குமரம்பைமார்களிப்பவிருக்குங்கூடமேடைகளும்
எங்கும்வேதகீதவிஞ்சையிசைக்குப்பாடத்தெழின்மலையே. (௩)

முத்தியளிக்குமறைப்பொருளைமொழிந்துமகிழ்வரொருபாங்கர்
சித்தியளிக்குஞ்சிவநூலைச்செப்பிமகிழ்வரொருபாங்கர்
அத்தியளித்தான்பீடுவிரித்தருளல்கேட்பரொருபாங்கர்
சுத்தியளிக்குநீரணிந்தான்சுபத்தைப்புகழ்வரொருபாங்கர். (௪)

பூதகணங்களுறப்பொலியும்புகழுமுனிவர்சிறப்பொலியும்
நாதகணங்களகலாதநல்வாச்சியங்கண்முழக்கொலியும்
சீதகணங்கண்மலிமாலையாடையிழையார்சிலம்பொலியும்
ஏதகணங்களறச்சுகமுண்டிலங்குமவர்கள்கலிப்பொலியும். (௫)

நிறைந்தவளங்கண்மலிகயிலைநெற்றிமீதினிறம்பொலிந்து
சிறந்தசுவணங்கொடுதேய்த்தசெம்மாணிக்கச்செஞ்சுடரால்
துறந்தோர்தாமுமிச்சையுறத்துவக்குமணிமாடக்கோயில்
திறந்தவாதமுகிற்படலங்கடந்தவ்வெளிமேற்சென்றிலகும். (௬)

அந்தமகன்றமணிமாடத்தரிவையுடனேயடர்பூத
விந்தகணங்கள்புத்திரர்கள்வியன்மாமுனிவர்விரிதேவர்
எந்தத்தினமுங்களித்தேத்தவிருக்கும்பரமசிவபெருமான்
முந்தவிருந்ததுயரகலமுகுந்தனருளையுன்னினனால். (௭)

ஐந்துகரமாரொருமகனுமாறுமுகமாரொருமகனும்
சந்தமிகுமாமலைமகளுஞ்சடங்கமிகுமாமுனிவர்களும்
விந்திகர்மாவசுரர்சுரர்விஞ்சையியக்கர்சாரணரும்
கந்தமிகுமாலைகள்பூண்டகருடர்கணஞ்சேர்சித்தர்களும். (௮)

அரம்பையாதிகூத்திகளுமளவிலாதவுருத்திரரும்
சுரம்பெய்மறைசேர்சுகுணர்களுஞ்சோகமகற்றும்பாதமதில்
சரதமுணர்மாகவித்திரளுஞ்சாலவறிந்தநாவலரும்
அரங்கையகலவிளங்குமந்தவவையிலொருநாளரவணிந்தோன். (௯)

எம்மான்கருணைமுகினிறமுமெழின்மாணிக்கமுடியழகும்
விம்மாவெழுநல்லருள்விழியும்வேதங்கமழும்வாய்மலரும்
அம்மாவொளிருமருணிறமுமைந்தாயுதஞ்சேர்கையழகும்
தம்பாதகநீக்கிடத்தாளைப்பொழிந்தாண்மலருந்தனக்குள்ளே. (௧௦)

கண்டானெழுந்தானரிகரியென்றியம்பும்பாணிகணிந்தெடுத்துக்
கொண்டானுவகைக்குப்பாயங்கோதினடனக்கோவையைமுன்
பண்டாதிப்பேர்மறையவன்சொற்படிமாநட்டம்பயின்றிடுவான்
அண்டாதிபர்முன்னனந்தக்கூத்தாடிப்பாடிடலானான். (௧௧)

தாளமெடுக்கும்வரிசைகளுஞ்சரிகமபதநிசாதிகளும்
மேளமெடுக்கும்வரிசைகளும்வியக்கும்பாவவிஞ்சைகளும்
நீளமெடுக்குமோசைகளுநிகழ்த்துமேழ்நற்சுரநிலைசேர்
கோளமெடுத்தமூவுலகோர்வியந்துமிகக்கொண்டாடினரால். (கஉ)

சாமமறையினங்கமதாஞ்சவிசேர்ந்தொளிர்கந்தருவமெனும்
வாமமறையிற்சங்கீதவளங்குன்றாமனடிக்குழியத்
தாமமறையிற்பொதுவிலுளார்தாளுநடங்கண்டினிதுறுங்கால்
காமமறையிற்சதிதேவிதானுங்குனிப்பான்கருதலுற்றாள். (கங)

சிந்துவளைந்தபுடவியினிற்றிகழோர்விஞ்சையொருவரிடின்
அந்தமிகுமவ்விஞ்சைவந்தாரடுத்தவ்விஞ்சையவர்முன்னர்
வந்துபுரிந்துகாட்டிடலேமானவுமையாண்மகிழ்நன்முனம்
பந்தமறநின்றுன்னோடேயானுநடிப்பல்பார்த்தியென்றாள் (கச)

அன்னவேலையாங்கரனுமம்பாளென்னுமரிமகளும்
மன்னுங்கரிமாமுகமகனைவள்ளிமகிழ்நனெனுமகனைத்
துன்னுவிளித்திங்கிருவருஞ்செய்தோமினடனங்கண்டறிந்தே
இன்னார்புரிந்ததுயரிழிவென்றுரைமினென்றேகரியிணைத்தார். (கரு)

தந்தைதாயவொன்றொருபாற்சாயாத்துலையிற்சமங்கண்டே
இந்தவவையிலுள்ளோர்முன்னிசைப்பீர்மக்காள்கரியென்னுப்
பந்தமகன்றபரம்பொருளின்பழுதற்றொளிருங்குணகீதை
வந்தவிதங்கண்டணிபாடிநடித்தார்வாச்சியங்கண்முனே. (கசு)

வெள்ளிமலையும்பொன்மலையுமேகங்கவிவாரிதியுலகும்
கொள்ளவரிதாய்த்தம்பமிடக்குனிக்கலானார்மாட்சிதனை
விள்ளவரிதாயிருந்ததுகாண்வீணையெடுத்துவிமலையணி
வள்ளலுருவங்குணமுதலவசனித்துயர்ந்தவரயோகி. (கஎ)

தக்கன்மகளுமென்மகவுந்தாழ்வில்லாமலெம்பெருமான்
மிக்ககுணத்தைவிளம்பியதம்விழிகண்மேனியடிகணயம்
ஒக்கநடித்துவருமுழியங்குற்றமகருங்கணங்களுமே
நக்கனடித்தநடமதினுநாரிநடித்ததினிதென்றார். (கஅ)

அரியமறைகடலைமருவுமமலனடிமாமலர்ப்பூநீர்
பரியுமனத்தாற்சிரங்கமழப்பட்டபெரும்பாக்கியமதனால்
பெரியஞானந்தவெள்ளம்பிறந்தசிவனோடைகங்களிப்ப
உரியவுமையுநட்டமிட்டாளும்பலுண்டயானட்டமூற்றான். (ககூ)

நட்டம்புயின்றவிருவருந்தம்நாலுமுகனையறுமுகனைக்
கிட்டவணைத்தெம்மிருவருள்யார்கேதமடைந்தார்வெற்றியுற்றார்
இட்டமகர்காளிசைமினென்னவிம்மையவல்லிக்கேற்றமெனக்
கட்டமகலவுரைத்திடலுங்கர்மக்கோட்டியகங்குளிர்ந்தாள். (உ0)

அன்னவவையிலுள்ளவருமற்றேரோதியதிர்த்தனர்காண்
முன்னமுதல்யான்றொழச்சிருட்டிமுகுந்தற்போற்றுமுனிவரனே
என்னவறைந்தானிண்டைமகனென்றுபுகன்றனனேமிவனந்
துன்னுசௌநகாதிகட்குத்தோமிநெறிகள்சொலுஞ்சூதன். (உக)

சo - வது கயிலைமலையிலாடியபடலம் முற்றிற்று.

ஆக படலம் - சo - க்கு திருவிருத்தம் கஉoள.

---*---

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சக-வது. திருவாலங்காட்டிலாடியபடலம்.

நீலங்காட்டியெனும்பகுதிநிறைந்தவாவிக்குண்மகிழ்ந்து
சீலங்காட்டியருளாக்கைசெய்துபுரப்பான்செம்மலர்த்தாள்
பாலங்காட்டிமகிழுமுனிபணிப்பூணுளன்மனைவியுடன்
ஆலங்காட்டிலாடியதையறைதுமினிதிலறிந்திடுவீர். (க)

வேறு.

வெள்ளியமலைக்கணாடியகூத்தைக்கண்டிடுவேட்கைசேர்மைந்தர்
புள்ளியன்மலர்மாலைகளணிப்பூவைப்புகழினையோதல்கேட்டரனும்
வள்ளியன்மனத்திற்கடுஞ்சினமுளமாப்பெருந்தீப்பொரிமலிய
நள்ளியன்மறுத்துத்தாய்பக்கமுறைத்தநந்தனர்தம்மைவெறுத்தகற்றி. (உ)

ஓங்குறுமுனிவின்கனற்சிகைபரப்பியுரப்பியோகௌரிநீயுணர்தி
நீங்கறுங்காதலன்னெனுதென்னைநினைதலற்றடக்கமற்றவைக்கண்
வீங்குறுநினதுவிஞ்சையின்மாட்சிவிளைத்தெனைவியனிலாதவனாய்
ஈங்குறுமவர்முன்காட்டியென்னிழிவையிழித்திடவைத்தனையதனால். (ந)

கற்புள்மனைவிக்கியலொணாவிதிநீகாட்டிமுனைக்கத்துள்கரிசால்
பொற்புளநினதுபொலிவடிவகன்றுபுந்தியுளார்வெறுத்துரைப்பச்
சிற்பரனருளாலிக்கணங்காளிதருக்கையென்றியாவருஞ்சிரிப்ப
அற்பமுமருளற்றறைந்தனனாகிப்பின்னரும்பலபலவறைவான். (ச)

அறிவினையகற்றுமிழிகொடுந்தீயவரிட்டமும்புண்ணுமுண்பேய்கள்
செறிவினையற்றகூட்டமுமிழிந்தசெயலுறுவருணத்தான்போற்றும்
வெறியினைக்கொண்டோர்ப்புறத்தெல்லையம்மைவேலியாய்ச்சூலியாய்வெறுக்கும்
குறியினைக்கொடுக்குங்குணமுளளாகிக்குவலயத்திருத்தியாலென்றான். (ரு)

காதலான்மிகுந்தகணவனோடெதிர்த்துக்கழறுதல்கற்புளார்தமக்கு
ஆதலாகாதென்றறிந்துமென்னோடேயடர்ந்தெழுமாற்றலிலிவர்ந்து
வாதமேபுரிந்தமாதுநீயுன்றன்மகிழுளவடிவெலாமாழ்கி
ஏதமார்கோரவடிவுகொண்டடுக்காவினத்துடனிணைந்துறக்கடவாய். (சா)

ஊற்றமார்யாளிவாகினிகௌரியொள்ளியகாளிமாகாளி
சீற்றமார்சமரிசண்டிகைபாலைக்கிழத்திசாமுண்டிசீரற்ற
தூற்றலார்வடிவிலாதியென்றருமைச்சுதர்களுங்கணங்களும்வெருவ
ஆற்றலாருமையாளடக்கருங்கோபக்கடல்படவறைந்தனன்பின்னும். (எ)

அவையிலுள்ளவர்களச்சுரச்சுதனையன்பறநோக்கிநீரறிவிற்
சுவையிலிரின்றதாயெனப்பக்கபாதமேசொல்லினீரறிந்தேன்
நவையிலாவேறோர்நடுவனைவரித்துக்கொள்ளுவனெனநவின்றான்.
கவையிலார்முட்கோல்பிடித்தறிவிலரைக்கடிதல்செய்கறைமிடற்றிறையே. (அ)

கறைமிடற்றிறைவன்கழறியமொழிக்குக்கௌரியுங்கனற்சினைகொழிப்ப
இறைமிடறறிந்தவாக்கினுக்கியையயானுமின்னவர்பினரோகி
அறையிடத்துள்ளாரொப்புரவாடியபசயமிவருறப்படுப்பல்
முறையிடத்தொல்லாவிதஞ்சபித்தலினல்விடுவனேயானெனமுனிந்தாள் (கூ)

வெருண்டமாதினுக்குமுன்னுளவுருவம்விலகிடலும்விகாரமதாய்
அகண்டமும்புவியும்பையுளின்மூழ்கியலறிடுவடிவுவந்தமையப்
புகைந்தண்டஞ்சவிப்பவாசமிட்டதிர்த்தாள்பொரியனல்பொங்குறச்சிரித்தாள்
பகைத்தண்டங்கிழியப்பற்களைக்கறித்தாள்பதியெனல்விடுத்தடல்படித்தாள். (கo)

கொன்றையையணிந்தசெஞ்சடைச்சிவனென்கோதிலாநகர்வரவேண்டிக்
குன்றெனுங்கயிலைதனைவிடுத்தெழுந்துகொழுந்தெரிவிடுகுரோதத்தான்
வென்றிகொண்டிடுவான்விரைவினின்மேவல்கண்டிடுவெற்பவன்புதல்வி
துன்றுதீவினையுண்பவரினைவிடுக்காத்தொடரொணத்தொடர்ந்தனன்மாதோ. (கக)

முனிவர்கள்சித்தர்சாரணரியக்கர்மோதமார்கருட்கந்தருவர்
தனிவலிமிகுந்ததேவர்கள்பிரமர்சவிநிறைதயித்தியர்முதலோர்
பணிவலிமிகுமென்படரொளிவீசும்பழுதறுமணியிழைப்பசும்பொன்
நனிவலிவானமுட்டுநன்மேடைநணுகிநமனுவக்கண்ணினரால். (கஉ)

தடமகல்பெரியவவைக்கணென்கொலுக்கூடத்திலென்றலம்வாழ்நங்கை
வடமகலாநன்மருங்கினிதாகமருவிடல்கண்டரன்பணிந்து
படமகலாவப்பாந்தண்மீதருட்கண்முகிழ்த்தருள்விளைத்திடுபரமன்
இடமகலாதவுந்திமாமரைக்கணெழுந்திடுகடவுள்தேட்டருளாய். (கங)

பகுப்பறுமனந்தம்பொழிற்கண்வாழுயிர்க்குப்பரிந்தருள்புரிந்திடுபரமன்
வகுப்பறுமினியவருட்குணகணங்கண்மதித்தெழுபத்தியான்மதியோர்
செருப்பறுமினியவிஞ்சையிற்றிகழச்செப்பியாமிருவரும்பரதத்
தருப்பறுமாற்றானடிக்குதிநோக்கியுமைமினுச்சரையெனவுரைத்தார். (கச)

உணர்தியோய்வீணைமுனிவவவ்வுமையுமுரகவாபரணனுமொருங்கே
புணரவாவகன்றுபூருவவினையின்புணர்ப்பினிற்பிணிப்புண்டுபகைத்துப்
பிணர்கொடுபேசும்வாதினிவிவர்ந்தபெருவலிகண்டவர்க்கினிதா
வுணரகல்வார்த்தைவழங்கினன்கேட்டுவகுத்தவாறியற்றுதுமென்றார். (கரு)

காசினிதனிலேமுத்திதந்திடுவான்காண்வடவேங்கடத்தினுக்கும்
மாசிலாமூன்றுயோசனைத்தக்கணத்திற்கும்வள்முள்காஞ்சி
ஆசிலாநகர்க்குவாயுவின்வீதியடர்வடகானமொன்றுளது.
நேசமாயவ்வண்வந்திடுமினீராடுநேர்மைகண்டிசைக்குதுமென்றேன். (கசு)

புண்ணியவாலம்புறவமாமதனிற்புரிமினும்மாட்டலைக்காண்டும்
எண்ணியபடியேவாருமென்றிசைத்தேயிசைநடமாடுற்சவையைப்
பண்ணியாண்டுள்ளதேவரைமுனிவர்பகுதியைமுற்றுமாண்டெழுநற்
றிண்ணமிட்டெழுந்தார்தேவர்களோடுஞ்சிவனுமக்காளியும்வந்தார். (கஎ)

வந்தபோதங்ஙனிருமிதக்கனகசபைமுனம்யானும்வாசவனும்
அந்தரத்தமரரனைவருமுனிகளணிகளும்பிறருங்கண்டிருப்பச்
சுந்தரபரதசாத்திரப்படியேதொடங்கினர்நடித்தனரவருள்
முந்துறவொருவர்க்கொருவராதிக்கமுதிர்ப்படவிருந்தனமாதோ. (கஅ)

வானமும்புவியும்வாரிதிமலையுமனிதருந்தேவருமற்றும்
ஊனமிலுயிருமுட்கிடச்சிலம்பொலிபடவொருவரையொருவர்
மானமிலாமன்மறுத்தெற்றிவெற்றிவனைந்திடவாடினர்யானும்
நான்மார்நாவின்கிழத்தியுமிசைநாவலருங்கண்டற்புதமடைந்தேம். (ககூ)

அரன்புரிநடமுமந்தரிநடமுமதற்கியையபிநயத்தழகும்
பரன்புரியருளின்பரத்துவச்சிறப்பும்பங்கயத்தவனடிப்பாணித்
திரமதிற்குளித்தாற்கேன்றுளசுகமுந்தெரித்திடுமவர்நடச்சிறப்பை
உரமதிலுணர்ந்துசொலும்வலியெமக்குமுள்ளவர்தமக்குமொல்லாதால் (உ௦)

கூத்திடுங்காளிசிவனிருவரையுங்குறித்தழைத்துங்கணட்டியத்தைப்
பாத்திசெய்துயர்ந்தார்தாழ்ந்தவரின்றெனவறிந்துணர்த்திடப்பட்டோர்
பூத்திடுபுவனமூன்றுளுமிலைகாண்போமினேவெனவவர்பின்னுஞ்
சாத்திரத்தரசேயெங்கடம்விஞ்சைகண்டெவர்சாற்றுவரென்றார். (உக)

உங்கடம்விஞ்சையுரைத்திடவெம்மாலொல்லிலாதெங்களானீவிர்
பொங்குறயாவர்குணங்குறித்தாடிப்புகழ்விரோவத்தப்பூரணன்காண்
சங்கையிலாமற்சாமமாமறையினங்கமாங்காந்தருவத்தை
இங்குணர்ந்துரைக்குமிறையவனுணர்தீருத்தமநடம்பயிறவத்தீர். (உஉ)

ஆதலாலந்தமற்றவெம்பரஞ்சோதிப்பிரானழகியநாமம்
ஓதலாயினராயுங்கடங்கரணமுட்பொறிமுதலியவொறுத்துச்
சீதமாம்பாலாழிப்புறமேகிச்சிவமருள்சின்மயவென்று
நீதமாந்தவத்தினின்றிரேலெம்மானீவிர்கண்மகிழ்ந்திடவருவான். (உங)

வந்தஞான்றுங்கண்மனப்பரிவகலவாக்குவன்போமெனவாணி
அந்தன்வந்தவரோடந்தரமறைந்தானறிதியாரணப்பொருளான
சுந்தரனடியிற்சுகித்திடுமுனியேயென்றயன்சொல்லினனென்றே
கந்தபுட்பிதமார்நேமிமாவனத்துக்கவிகளுக்குணர்த்தினன்சூதன். (உச)

சக-வது திருவாலங்காட்டிலாடியபடலம் முற்றிற்று.

ஆகபடலம், சக - க்கு திருவிருத்தம் கஉஙக.

:o:

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

சஉ-வது. திருப்பாலாழிக்கேகியபடலம்.

மடமகற்றிச்சுகமளிக்குமதியளிக்குமாதவன்றன்
இடமகற்றியிடுகுணத்தோயெம்பெருமாற்கினியமுனி
வடவனத்திலரன்காளிவந்தாடினதுகேட்டாய்
படவனத்திலமர்பரமன்பாலாழிக்கேகிடல்கேள். (க)

பாற்கடலினுப்பணிருபாடுநித்தர்முத்தருடன்
சேற்கடற்கட்செங்கனிவாய்ச்செங்கமலையாருடனே
வாற்கடனஞ்சரவமளிமன்னுமர்ச்சைவடிவுடைய
நூற்கடலெம்பெருமான்றனூங்குசினகரமுளதால். (உ)

ஒப்போதற்கொல்லாவொண்சூரியர்களொருகோடி
தப்பறுமாமணியிழைத்ததமனியப்பொற்கோயிலிற்போய்ச்
செப்புதுமென்றரவணிந்தசெம்மலுடனம்பிகையும்
அப்பொழுதேவழிநடப்பானமைந்தனர்காணருந்தவத்தீர். (ந)

திருவாலங்காட்டினடச்சீர்மைவிதியறிந்துசொலத்
தெரியாதகுறையதனாற்சிவகாளியிருவருமேல்
மருவாதமச்சரத்தைவளர்த்தவர்களாகவயன்
பரிவாகவுரைத்தவிதம்பாலாழிக்கேகுவரால். (ச)

ஏகுநெறிதனிலொருவர்க்கொருவர்மிகவேளனத்தில்
வாகுபெறுவாதமதின்மலைவுகொடுபூசலிட்டே
யோகுபெறுவார்க்குமெட்டாவீசனறிதுயிலமர்ந்த
பாகுபெறுபாற்கடலைக்கண்டுபண்ணிந்தேத்தினரால். (ரு)

கற்றாருங்கண்டறியார்காசளிக்கும்பாசமெல்லாம்
செற்றாருங்கண்டறியாச்செங்கமலையம்மானைப்
பெற்றாடும்பெற்றியதோபெம்மானைப்பேசுமதோ
எற்றாடுமலையோசையிடுங்கடலேபோற்றியென்றார். (சு)

வஞ்சமற்றெலாமோம்புமாசகன்றவெம்மான்றன்
நெஞ்சமொத்தவெண்ணிறத்தினேர்மையுற்றபாற்கடலே
கஞ்சமொத்தகண்ணுளன்காணரியவிண்ணுளன்
துஞ்சலற்றவருணிகர்நீசொரியுமுத்தம்போற்றியென்றார். (எ)

சத்தமிட்டவேதமுடிவினுந்தொட்டுத்தமொறி
நத்தலிட்டுங்கண்டறியாநாயகனைநன்றாகப்
பத்தியிட்டுன்பாற்கிடப்பப்பண்ணிவைத்துக்கொண்டனைநஞ்
சித்தனிட்டுவாழ்ந்திருக்குஞ்சினகரத்தைக்காட்டாயால். (அ)

ஆரணமுஞ்சாத்திரமுமாய்ந்தபெரியோரறிவும்
பூரணமும்போற்றுதலும்பூண்டதிருப்பேராளன்
காரணமுங்காரியமுங்காசினியுந்தானுன
நாரணனையுன்னிடங்கொண்டிபதியேகாட்டுதியால். (க)

என்னேற்றிநீயுரைத்தியென்றவத்திநீயுரைத்தி
என்னேமத்தீயியற்றியெம்மிறையையுன்னிடத்தில்
பன்னாளுமிட்டகண்டார்பசியகற்றிவாழவைத்தாய்
சொன்னனீயன்னவிதஞ்செய்துமருள்சோரவென்றார். (கO)

வேறு.

இன்னவாறுபலபலவேத்தியே
மன்னுமாறுவழங்கியவ்வாரிதி
துன்னுசோதிச்சினகரத்தூபியை
முன்னங்கண்டுமுகிழ்த்திடுகையராய், (கக)

கதலியார்கருத்தார்காவலார்சேனு
முதலியார்பாதப்பூமுடிமுட்டியே
சிரமலிந்தசிமானைச்சேவித்தெழு
விதமலிந்தவிடைதரவேண்டினர். (கஉ)

வேண்டினாைவிளிவிக்குவப்பிரான்
ஆண்டவன்னடியீரிவணண்மினென்
றீண்டுதாதரிற்கூட்டியிவர்க்கெமான்,
பூண்டசேவைசெய்விப்பீர்நீர்போமென்றான். (கங)

அன்னரின்னரளித்திடுபச்சைகொண்
டுன்னுசோதியட்டாங்கவிமானத்துட்
டுன்னவிட்டமுதத்தடமாட்டுவித்
தென்னையாளிறைப்புள்ளிவாயிட்டனர். (கச)

போற்றிப்போற்றிப்புகழ்பலவாகவே
சாற்றிச்சாற்றிச்சவிநிறைநீர்மையைக்
காற்றிக்காற்றிக்கடவுளேயென்றலர்
தூற்றித்தூற்றித்தொழுதுவணங்கினர். (கரு)

கோடியாதவர்கூடியகோயிலும்
பாடியாடிப்பணிந்தெழுபத்தரும்
நாடிநாடிநமோவெனுநாகமேல்
கூடிநின்றுதுயில்கொளுங்கோலமும். (கசு)

சங்குசக்கரந்தாங்கியவத்தமும்
பங்குதங்கியபாவையின்சீலமும்
துங்கமாகுஞ்சுடரிழையாடையும்
எங்குங்காந்தியிடுங்குளிர்வாசமும். (கஎ)

முத்தொழிற்கியைமோகமார்சிந்தையும்
பத்தருக்குகப்பாகும்பதங்களும்
சித்தசித்தினைச்சேர்த்தொளிர்மேனியும்
நத்துமீசனுநாரியுங்கண்டனர். (௧௮)

படியளந்தபதத்திழிநீரில்வெஞ்
செடியளந்துதீமைக்கிலாதானந்தக்
குடியளந்தருட்கொண்டல்குளிருற
மடியளந்திலாமஞ்சனமாட்டினார். (௧௯)

முத்தர்சித்தர்முழுமறையோதினார்
பத்தர்வந்துபல்லாண்டுகள்பாடினார்
மொத்துதுந்துபியைந்துமுழக்கினார்
சித்துளாற்குத்திருமஞ்சனஞ்செய்தார். (௨0)

வாசநற்புகைதீவங்கண்ணாடிகால்
வீசிமுற்றும்விளங்கவிளக்கினார்
ஆசிலாதபேராயிரமர்ச்சித்தார்
பூசுசாந்தம்பூணாடைபூப்பூட்டினார். (௨௧)

குடமெடுத்திடுகூத்துகளாடினார்
படமெடுத்தவர்பாங்கருலாவினார்
மடமெடுத்திடுமோகதர்மாதவர்
வடமெடுத்தவடிவுகண்டாலித்தார். (௨௨)

பாலுந்தேனும்பழமும்பயின்மணங்
காலுமாரமுதுங்கண்டுங்கன்னலும்
வாலுமோதனமாயப்பவருக்கமும்
தாலமுண்டதனியனுக்கேந்தினார். (௨௩)

என்னையாளெம்பிராற்குமெல்லாந்தரு
மன்னையார்க்குமடியாரடியார்க்கும்
மன்னுமாராதனைக்கென்னவென்னவோ
அன்னவீந்தேயருஞ்சிறப்பாற்றினார். (௨௪)

ஆள்கராமவென்றஞ்சலிமத்தராய்
நீள்கநின்றநசைநிறைநெஞ்சராய்
வாழ்கவென்றுவழிந்தநீர்க்கண்ணராய்
சூழ்குமானமுருக்குமுயிரராய். (௨௫)

அர்ச்சைவேடத்தமலனைப்போற்றியெம்
மிச்சைமுற்றவெழுந்தருளெந்தையே
கொச்சைமக்கணங்கூத்தைக்காண்பாயென்
வச்சநோக்கைவாங்கார்துவானோக்கினார். (௨௬)

அன்னவேலைப்பல்லாயிரஞ்சூரியர்
மின்னமீயகண்டத்தின்மிளிர்வபோல்
துன்னுதேவகீதங்கடுலங்குறக்
கன்னியீசன்கண்காணவிளங்கினன். (௨௭)

கண்டுகண்டுகளித்திடமண்மிசைத்
தண்டுக்கேலவிழுந்தெழுந்தாடினர்
விண்டநூலின்விதிப்படிப்பாடினர்
அண்டர்தம்பிரானைமனத்தாக்கினர். (௨௮)

கைகள்கூப்பிக்கரக்குநீர்க்கண்ணராய்
மெய்கள்போர்த்திடுமென்புளகத்தராய்ப்
பொய்களற்றபுருடசூக்தத்தினல்
மொய்கணற்றுழாய்த்தூய்த்துதிமுற்றினர். (௨௯)

போற்றியெங்கண்முன்போந்தொருநற்சொலைச்
சாற்றியையதமியனையாள்குதி
ஆற்றுமெங்களருங்கலைநாடகத்
தேற்றங்கண்டிசைத்தாளுதியெந்தையே. (௩௦)

எந்தையெந்தையிரங்கியருடியால்
வந்தெம்முன்னெனவாழ்த்துமவர்முனம்
அந்தமற்றவனந்தனருந்தயை
வந்துமாதவன்வந்தெதிர்நின்றனன். (௩௧)

பாணிவார்தப்படரினிற்பட்டவர்
காணவந்துநிற்கின்றகடவுளின்
பூணுமாமலர்ப்பாதங்கள்போற்றியே
வாணிசோரவழுத்திவணங்கினர். (௩௨)

நின்றபேர்தமைநீனிறத்தெம்பிரான்
இன்றிங்கெய்திடற்கென்குறையென்னலும்
நன்றுசெய்சிவனுதநின்னுடகம்
ஒன்றுமாதரத்தோடேயுஞற்றினேன். (௩௩)

ஆடுங்காலத்திவ்வாடவடானுமென்
னேடுங்கூடவுஞற்றியென்னுண்மையை
வீடுமாறுவிளக்கிடவந்தனள்
வீடுதந்தருள்வோயிதைவீட்சியே. (௩௪)

இன்னணட்டமென்னேடேயியற்றுதல்
மன்னன்மேலெனன்மற்றுமுணர்ந்தரோ
சொன்னபின்னரொன்றுன்பறுமென்றபின்
கன்னிதன்குறைகாட்டிக்கலுழ்ந்தனள். (௩௫)

அடிகளையிவரன்பினரர்கியும்
மடியிலாவெனை மங்கையென்னும்லே
ஓடியுமாடலுஞற்றியநீதியிற்
செடிசெய்தீச்சொலிலாக்கினர்தெய்வமே. (௩௬)

எங்கணட்டத்தினேர்மைகடாக்கமிட்
டங்கணுதிக்கமோதியருள்கென்றாள்
செங்கணயகன்செஞ்சிறுமூரல்செய்
திங்கணேதினனேத்தவர்க்கின்புற. (௩௭)

வேறு.

நந்திருசொரூபரூபகுணவிபூதிகளைக்காட்டும்
பந்தமார்பரதவிஞ்சைபயின்றுளபத்தர்காணுஞ்
சுந்தரநட்டங்காணயாமுமவாவிற்சூழ்ந்தாம்
அந்தரத்தவர்களோடேயடுக்குதுமஞரினீங்கிர். (௩௮)

அறிதிர்கோள்சிவகாளிப்பேரன்பர்காளும்மவாவின்
நெறிதவறாதுநட்டநேர்மைகண்டருளுந்தில்லைக்
குறிகொளுங்கானஞ்சின்ளுள்கழித்தவண்குறுகிரொன்றான்
பொறிகொளுங்கடவுட்டச்சன்றனைவரப்புந்திசெய்தான். (௩௯)

புந்தியினினைத்தசெவ்விப்பொருக்கெனக்கடவுட்டச்சன்
வந்தடிமலர்மேல்வீழ்ந்துவாய்பொத்திக்கையாப்பிட்டே
எந்தையேயருள்கவென்றுவீசனுமலர்வாய்விண்டே
அந்தரத்தவர்களேத்துங்காவிரிவடக்கார்ந்துள்ள. (௪௦)

தில்லியாம்வனத்திறைப்பட்டிக்ழெமக்குகப்பாந்திக்கில்
கல்வியேயிருளைத்தின்னுங்கனகரத்தினத்தினாலே
அல்வினையகற்றுமின்பவமல்வீட்டினுக்குள்ளார்ந்த
நல்லநாட்டியத்தைத்தேவரோடியாம்நாடற்கேற்றாம். (௪௧)

சித்திரக்கூடமென்றுச்சிறந்துளசினகரத்தை
நத்திடுசிற்பநூலினாட்டியவண்ணமாற்றி
வைத்திவண்வந்துசொற்றியென்னலும்வாழ்த்திப்போற்றி
இத்தினமுய்ந்தேனுய்ந்தேனென்றடியிறைஞ்சிச்சென்றான். (௪௨)

இத்திரமருளிமின்னலென்னவான்கரந்தானெம்மான்
குத்திரமகன்றவிச்சுவக்கருமன்னுங்கொன்றை
வைத்துளசிவனுங்காளிமாதெனுமவளுந்தங்கள்
புத்தியிலெம்மான்மேனிப்பொங்கெழில்புதைத்துப்போனார். (௪௩)

உணர்தியோய்வீணைக்கானவுயர்முனியுவமையில்லான்
வணரகன்மனத்தினாலேல்வாக்களித்தொளித்தசெவ்வித்
துணர்கமழ்வளஞ்செய்வெள்ளித்தொன்மலைக்கரன்சென்றற்றான்
புணரகன்றிட்டகாளிபூவுலகிழிந்துபோனாள். (௪௪)

போனவளுய்யிராமபுரமெனுநகரம்புக்காள்
மானவனனைவிச்சுவக்கருமானுமெம்மான்
ரூனகங்களிப்பத்தக்கதாகியநகரஞ்செய்தான்
வானவர்முனியேயென்னைவழங்கினன்வனசப்புத்தேள்; (சரு)

அறிதிர்கோள்செள்நகாதியறிஞர்காளென்றுசூதன்
கிறியறுத்தின்பமீயுங்கேடிலிகதையைச்சொல்ல
வெறியளித்தாஸ்சமூட்டச்சித்திரகூடமேன்மை
நெறியளித்தருடியென்னப்பின்னருநிகழ்த்தலானான்: (சசு)

கேட்டருண்முனிகாள்வெண்கிரீசனுங்கிளரும்வாசத்
தோட்டவிழ்கதுப்பினளுந்தாமணித்திருப்பாலாழிக்
கோட்டம்வாழருச்சையாகங்குலமுதற்றேவைவாழ்த்தி
நாட்டங்காண்குறச்சேண்மீதினகுபரம்பொருளைப்போற்றி. (சஎ)

வினவியவாறுபொன்னஞ்சிறையுள்ளர்ஞிமிறுமூசு
வனமணிவர்தன்வாய்ப்பூவருளப்பாடகலாவண்ணம்
கனவினிற்கண்டவாதங்கைவந்தார்களிப்பின்மான
மனமதின்மகிழ்ச்சிபூப்பவண்டவங்கண்டுவாழ்ந்தார். (சஅ)

செஞ்சண்டகறுத்தகண்டஞ்செங்கனன்மேனிவெள்ளைச்
சந்திரமௌலிமூர்த்திசாமளையிருபேர்வாதஞ்
சிந்துநாளன்றேவென்றுதியங்குவார்பொருட்டுத்தில்லை
வந்திருந்தைந்தரங்கநாதனுய்வசித்தானெம்மான். (சகூ)

என்றருள்சூதற்போற்றியெழின்மதிட்டில்லைக்கானில்
நன்றுணாங்கரமானவாறுநாற்புரங்கொள்கோயில்
நின்றிடுவாறுமட்டாக்கரப்படிவாறுமைந்தாம்
மன்றுளவாறுகட்டவாறுமேயருள்கவென்றார். (ருo)

சஉ-வது. திருப்பாலாழிக்கேகியபடலம் முற்றிற்று.

ஆகபடலம், சஉ - க்கு - திருவிருத்தம் - கஉஅக.

(*)

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

சங - வது. சித்திரக்கூடஞ்செய்தபடலம்

முத்திரத்தொழிற்குமூவாவொருமுதன்முக்கண்ணற்குக்
குத்திரமுளத்தீக்காளியாலுறுங்கோதையோட்டி
வைத்திடுகோதைகேட்டிவழங்கிடுதெய்வத்தச்சன்
சித்திரக்கூடஞ்செய்தசிறப்பினைச்சொல்லக்கேண்மோ. (க)

தில்லைமாவனத்துக்கண்ணேதேவகம்மியனுமெல்லாம்
வல்லனுமயனுங்கூடிவந்துமாவனத்தைக்கண்டு
சொல்லியசிற்பசாத்திரப்படிச்செவ்வேநோக்கி
எல்லையைவகுப்பிட்டந்தவெல்லையின்வண்ணமெண்ணி. (உ)

அகரமாதிகளுட்டோன்றுமப்பிரமேயன்வாழும்
சிகரகோபுரங்களாதிகழுஞ்சித்திரக்கூடப்பேர்
நகரமுண்டாக்கவேண்டிநாதனையுள்ளிப்போற்றி
நிகரறுதிக்குக்காட்டிநின்றுளேநிருமித்தானல். (௩)

குயின்முகங்கீண்டுசெல்லுங்கோவிந்தனுருவம்போலச்
செயின்முகங்கீண்டுசெல்லுஞ்செழும்பலாக்கதலிசூதம்
வெயின்முகங்கீண்டுசெல்லும்வெண்மணியலைமாடெல்லாம்
பயின்முகங்கீண்டுசெல்லும்பழமுதிர்சோலைசெய்தான். (ச)

பூதவமகத்திசோகுபுளிபுன்னைமருதுவாகை
ஆதவமடுக்காவாத்தியரசுபச்சிலைவேயாச்சா
சூதவமகலாநாகைநாவல்செண்பகஞ்செருந்திப்
பாதவப்பரப்பேயென்னப்படப்பைகளைச்செய்தான். (ரு)

கோங்குசந்தனஞ்சிவந்திதெங்குமாகமுகுகொன்றை
மூங்கின்மாதளையிலந்தைமுருக்கிலவங்குருந்து
வேங்கைவில்வம்விளாவெட்பாலைவேல்வேம்பாதிப்பே
ராங்கயாசாதியெங்குமடர்ந்திடவாக்கிமன்னோ. (சு)

மல்லிகைமுல்லைசாதிமலர்மருக்குருவேர்மாறு
வில்லிடுபாரிசாதவினோதபற்பலபூக்கொள்ளை
எல்லிடும்படிக்குப்பூங்காவனமணமெங்கும்வீசிப்
புல்லிடவியற்றிவைத்தான்புண்ணியப்புலவர்தச்சன். (எ)

வெண்ணனைச்செம்பொன்கஞ்சங்குவளைவெங்குமுதமாம்பல்
பண்ணறையறுகாற்பக்கிபம்பியபாடலோதை
நண்ணியபூந்தாதள்ளனந்துறுதீந்தேன்வெள்ளம்
தண்ணிழறயங்குமோடைத்தடம்பலவிடங்களெங்கும் (அ)

பலவிதபுட்குழாங்கண்மல்கியபடப்பைஞாங்கர்
நலவிதமார்ந்தவேரிநாடுமாதிரங்கள்யாண்டும்
குலவிதமணிகடிட்டைச்சுவாற்கொழிபணிலக்கொள்ளைத்
தலமெலாம்பம்புசெந்நெற்றடவயல்சாலவாக்கி (கூ)

எண்ணருந்தடங்கண்மூசவிலங்கெழிற்பூக்கான்சோலை
பண்ணரும்பாடற்றீங்தேன்பம்புமின்கணிகடிட்டைத்
தண்ணருஞ்செஞ்சாலிப்பூத்தெங்கினுந்தழைத்துப்புல்க
நண்ணருந்தில்லைத்தில்லமெங்கினுநயப்பச்செய்தான். (க0)

மயில்குயில்கிளிகளன்னமாழிப்புள்சிறகர்மாநவ்
வெயில்விடுசகோரநாரைகுருகுகண்மிடைவவெங்கும்
குயின்மழைக்கூடிரர்திகூழினுக்கியைபின்கூட
வயின்வயின்மச்சமாதிபக்கிகண்மலிந்துமல்க. (கக)

நத்தைகண்முத்தக்குப்பைபளிர்வெயிலுக்கருணா
மொய்த்துறப்பலவின்மூலக்கனிகமரிழிதேன்வெள்ளம்
நித்தமுநிலவிட்டூற்றநிமலனாரடியார்க்குள்ள
வித்தைதையமான்வீங்குவளப்பங்கண்மிகுதிகாண. (கஉ)

கழிமுருகவிருமஞ்சரிக்களிசரியராமத்
திழிகனிமூன்றில்வார்ந்தாரின்சுவைநறையுண்மாரிப்
பொழிகிரணக்கற்குப்பைபொத்தியபொறிக்கண்மின்னி
வழிதிணிமேடைமாலைமத்தகத்தின்றும்வார்க்கும். (கங)

நான்மறையாளராதிசாதிகணண்ணிநார்
வான்மறைகாமரின்பமருவிடமணிப்பொன்மேடை
ஊன்பயில்விருத்திக்கேற்பவோங்குறும்றுகுசாலை
மீன்பயில்பளிங்குசோபானப்படிக்கயங்கண்மீற. (கச)

எம்பிரான்சாற்றுக்கேன்றவெழின்மறுகியன்றவேதத்
தம்பிரானடியார்க்கானதனிமடந்தாழ்வில்காமர்
வம்பறுமாலைவேய்பொன்மண்டபமளவில்சோதி
அம்பறுதுயர்ந்தகோபுரங்களெண்ணகலச்செய்தான். (கரு)

நீர்படுசும்மைவேள்விநிகழ்த்துறுசும்மைவேதச்
சீர்படுசும்மைமிக்கசெந்தமிழ்ச்சுருதிச்சும்மை
நார்படுதானமாதிநடத்துவார்சும்மைநாளும்
போர்படுமினியகல்வியாளர்தம்புரையில்சும்மை. (கசு)

காய்ச்சுறுவடிவாண்மானுங்கண்ணியர்மணஞ்செய்யோதை
ஆய்ச்சியரொம்மான்மாட்சியறைந்தலையாட்டுமோதை
பூச்சியர்கலைசெய்நல்லோர்பொலிபொருண்மேவுமோதை
நீச்சறுநெற்போர்வைப்போருழுகுனர்விதைப்பேரோதை. (கஎ)

தணவரவென்றுங்கௌவத்தமனியநகரமெங்கும்
பணவரவல்குன்மாதர்பரிமணிப்பூண்களெங்கும்
நிணவரவோங்குவர்ட்கைவாகைசேர்நிபிடமொங்கும்
குணவரவோதுநல்லோர்கோட்டியேவாட்டமெங்கும். (கஅ)

கடல்வருபொருண்மிக்கானகான்வருபொருண்மீயோங்கும்
திடல்வருபொருண்மன்னாட்டுத்தேயமார்பொருள்வித்தாரத்
தடல்வருமனந்தங்கூலத்தடர்தரலெம்மாற்கான
மிடல்வருநாவலோர்செய்மேன்தநற்கவியைமேவும். (ககூ)

வச்சிரப்பலகையிட்டமந்திரப்பரப்பினுச்சி
பச்சைமாணிக்கத்தாற்செய்பல்கணிச்செம்மாணிக்க
உச்சிதச்சேணின்மாடத்துலாவருமும்பர்மான
அச்சரசினுக்காமிக்கவழகியரவிர்வராங்கே. (உ0)

வேறு.

இன்னபெரும்பூதூரின்கீழ்ப்பாறைப்பணெண்ணூன்குசிற்பமதிலெண்டிக்கோரும் நன்னயநற்பத்திமிகும்பையுண்மேவிநன்றுகடியாற்றுபரனண்ணுங்கோயில், என்னவிதமியற்றுகெனவிசைத்தவோவவ்விலக்கணத்துக் கிணங்கவந்தவிலேகர்தச்சன், உன்னியெமானடியகலாமுதலியாண்டானிணையடியைமுடியிலிட்டேயுளுற்றறற்கானன்.()

நான்மறையைக்கோபுரமாய்ச்சமைத்தானந்தநன்மிருதிருத்திரத்தைநான்கொன்பானுக்,கோன்மகிழ்துவாரமெனக்கோவினன்மூக்குணமணிகடமைக்குறையில்பகுதியாய, வான்மகிழுஞ்சாம்புநதப்பொன்னிற்சேர்த்தான்மறுவிலேந்துவேள்வியையுமதிலாவிட்டான், தேன்மகிழ்பூமகண்மகிழ்நற்கங்கமாறுந்தேசுறுமாவாயில்களாச்செய்தான்மன்னே. (உஉ)

மூவிரண்டுதரிசனத்தைக்கவாக்கமிட்டான்மூன்றுவியாகிருதிகண்மும்மாடஞ்செய்தான், பாவிரண்டைம்பதுயாகயூபத்தம்பப்பரப்புகளூற்றுக்கான்மண்டபமாச்செய்தான், சேவிரண்டுவேதமயனீராஞ்னூருச்செப்புதிருநாமமதைச்சேர்த்தெம்மான்றன், பூவிரண்டுபொன்னடியைப்போற்றற்கேன்றபொருவில்பெருமண்டபத்தைப்பொருந்தச்செய்தான். (உ௩)

உபயமறையிதிகாசமிருதியங்கமுபநிடதாகமபுராணங்கள்கீதை
அபயமருளையனுக்காமகண்டமாடமமைமுப்பத்தாறுபதினூறேடெட்டு
சபையைந்தாறேழுமகமண்டபங்கள்சமைத்தட்டாக்கரப்படியுஞ்சாமமாதி
சுபமுடையவோகளாகணிலவுபள்ளித்தோமகலவமைத்திட்டான்றூமிறட்டான். ()

கனகசவையொன்பதுமாமணியிலாயகடவுள்சவைகமலன்சவைபுத்தேட்கூட்டத்
தனகசவைமுனிவர்சவையணிமாவாதியடைந்தபெருஞ்சித்தர்சவையரசர்மற்றோர்
பனகசவையினும்பலவாமுறைமைக்கானபகுப்பின்சவையெழுமவர்க்காம்பண்பிற்கேற்பத், தனகனமாமொளிவீசுமழகுபொங்குந்தடமிகுந்தசவைமுதலசமைத்தானன்றே. (உ௫)

எம்பெருமாற்கினியதயாவடிவாளுக்குமிலம்பகத்தைமுடித்தளித்தவிறைவியாட்கும்
அம்பரமேற்றுவுமறைப்புட்டேவிற்குமாயிரமாமறைநாவாரனந்தனூர்க்கும்
பம்பரமென்றுழலுலகைக்காவல்பூண்டபாடுறுசேனைமுதலிபாடுகாவல்
உம்பர்முனிவரரடியாருள்ளிட்டார்க்குமுத்தமப்பொன்கற்கள்கொடேயுறையுள்செய்தான். (உ௬)

தாழ்வார்களறியகிலாவநாதிமுத்தசச்சிதானந்தபரம்பொருளின்ருளில்
வீழ்வார்களாகிவிடயங்கண்மாற்றிவிபுவினருட்குணகணவானந்தவாரி
ஆழ்வார்களெவருளரோவவர்கட்கெல்லாமஞ்சலிசெய்தஞ்சலிசெய்தன்பினோடு
காழ்வாருநவமணிகளிழைத்துப்பொன்னாற்ககனமளாவுறுகோயில்கட்டினானல்.(உ௭)

சிகரமணிக்கோபுரங்கள்பலிபீடங்கள்செழுந்தீர்த்தமண்டபங்கள்யாகசாலை
புகரகன்றபொற்சாலைசாந்திசாலைபொங்குறுநன்னடச்சாலைபுனையுஞ்சாலை
முகுரமொளிர்தருசாலையிருமுப்பத்துமுழங்குவாச்சியசாலைகடிகொள்சாலை
நகரமெங்குமொளிர்குளிர்வெஞ்சோதிதூற்றுநற்றரளக்கொத்தவிர்கேதனத்தின்சாலை

பொற்குவைவைத்திடுமோடம்வையமாடம்பொன்னுடைமாடம்பொலிவாசமாடம்
எற்குவைவைத்திடுகோசத்தினியமாடமேறுகரிபரிபசுக்களிருக்குமாடம்
கற்குமறைகாணுற்குமதிகடோறுங்களிப்புமிகுதிருவிழாக்காட்சிமாடம்
அற்புதமற்புதமாகவாற்றிவைத்தானம்பலவாணப்பெருமாளருட்குமாதோ. (உக)

விசித்திரமாஞ்சித்திரங்கள்பொறித்துவைத்தான் மிகுமோஹைதயிடுமெணிகள் வீக்குவித்
தான்,வசித்துளபற்பலபளிங்குதீபத்தொங்கல்வயங்கவிட்டான்மணிக்கதவம்வனைந்து
கண்டான், அசித்துருவுஞ்சித்துருவும்பரமசித்தினறிவுருவுமடையுருவுமறிந்தஞ்ஞானம்
முசித்தெறிமுக்கோல்பிடித்தபெரியசீயர் முதலியவான்ஞோர்மடங்கண் முற்றச்செய்
தான். (கூ0)

நான்குமுகக்கோபுரத்துமுதன்மைபூண்டநற்கோபுரங்குடக்குங்கிழக்குமாகும்
வான்முகமாந்துய்மைமிகுமெம்மாற்கானமகிழ்சாத்துவிகவிமானத்தையாற்றிப்
பான்முகமாம்பஞ்சபூதங்கண்மாட்சிபயிலிரத்தினக் கலசப்பந்திதூக்கி
மான்முகவேதாந்தசோபானமிதுவருணமநுவெட்டெழுத்தான்மகிழ்ந்துசெய்தான். ()

வச்சிரமாணிக்கமுயர்பச்சைமுத்துவசிநீலஞ்செந்துவர்வாளொளிவிட்டாரும்
உச்சிதவெம்மணிகனகமாதியள்ளியுன்னியுன்னியிழைத்திலங்கவுஞற்றிச்சேண்மீப்
பச்சிரதமிவர்ந்துருபாநுவாதிபருங்கோள்கணுக்கரியபண்பிற்றுய
அச்சிரத்தேயத்தாணிசமைத்துவைத்தானம்மையப்பனுடனடங்கண்டருளமாதோ. ()

நீலமணிமுத்துமணிமலரின்கோவைநெடுங்கதவமணியோசைநீலவானோர்
சாலவுளபிரமருத்திராதிமேலோர்தாங்கேட்டாராதனத்திற்கேகிப்போற்றக்
கோலமுடனூற்றிவைத்தானருக்கியாதி கொடுக்குமுபகரணமெலாங்குறித்துச்செய்தா
ன், சீலமுடன்கொடிச்சீலைமுதலவெல்லாஞ்சிறப்பவளவில்லாமற்செய்தான்மாதோ.

வேறு.

மூழுதுறநிறைந்தருண்மூர்த்தியாணையால்
பழுதறவாற்றினன்படியருந்திறன்
தொழுதுறுபதமலர்தொழுதுசொல்லுதல்
வழுவறுபரனெழில்வரைதல்கேண்மினே. (கூ௪)

சங - வது. சித்திரக்கூடஞ்செய்தபடலம்

முற்றிற்று.

ஆகபடலம், சங - க்கு, திருவிருத்தம் - கஙகரு,

——:(o):——

சச-வது. எம்பெருமான்றில்லைக்கெழுந்தருளியபடலம்.

வாட்டுமுண்ணகைசவறுமகதியோய்முனம்
நாட்டுநன்னகரழகறிந்தியாவினை
ஆட்டுமென்னுயகனன்னையார்முதல்
ஈட்டமோடெழுந்தருளிசையைக்கேட்டியால். (க)

முன்மொழிகம்மியன்முதன்மைநாயகன்
றன்மொழிப்படியொருதாழ்ச்சியன்மையில்
நன்மொழிவிஞ்சைகணட்டியிட்டவா
பொன்மொழிமணிநகர்பொலியவாக்கியே. (உ)

வெண்சுதையார்ழிமேல்வெள்வியாளன்மேல்
பண்சுதைப்பாண்பொழிபாவைமாருடன்
விண்சுதையூட்டுமால்விளங்குமாழிப்பால்
கண்சுதையூட்டகங்கட்டினன்செலும். (ந)

சென்றுசெம்மணிச்சுடர்செறிந்தபள்ளிவாய்
நின்றுவன்கடிபுரிசித்தர்சேவடி
நன்றுறத்தொழுதுளேகண்ணினன்மறை
என்றுமேகாணருமிறையைப்போற்றினன். (ச)

வேறு.

போற்றியஞ்சினின்றறுவையைநாலவிற்போகா
தேற்றியெந்தைநின்னேவலின்படியருளெண்ணிச்
சாற்றுதில்லையாங்காட்டினிற்சத்தமாபுரியும்
தோற்றமென்றிடப்புரிந்தனன்றேமிலாநகரம். (ரு)

அஞ்சலித்தவாய்பொத்தியேகைகளையாத்து
எஞ்சலித்திடாத்துதிபலவிசைத்தவனிசையால்
துஞ்சலுற்றிடாத்தூயவர்தூயவன்மகிழ்ந்து
வஞ்சமற்றமாவரன்சதியிவர்துயர்மாய்ப்பான். (சு)

எண்ணிவிண்ணவர்முனிவரரோத்துசேனதி
அண்ணலுக்கவணெழுதலையருளப்பாடிடலும்
நண்ணுநித்தியமுத்தருநாயன்றேயென்று
மண்ணுளென்செய்கேமென்செய்கேமெனவினுய்வணங்கி. (எ)

ஆவலோடெமான்றெழும்பெருநாளமையுமோவென்னுத்
தாவமோடுலைகுக்கிவெந்தீத்தணிசெவ்வி
மேவுமோவெனநோக்குபுவிடுப்பவர்மேவ
ஏவலாற்றியேயிருப்புழிநடந்தவாறிதுகேள். (அ)

௪௪-வது. எம்பெருமான் தில்லைக்கெழுந்தருளிய ௧௫௯ படலம்.

அந்தநாளிலவ்விந்திரன்றமித்தவலாரி
நந்துபின்னவனக்கணுன்மிகுவலிச்செறிவான்
விந்தநேர்புயன்வீரன்வால்கலியெனும்பெயரான்
இந்தவான்புவியடங்கலுந்தன்வயினேற்றான். (௯)

ஏற்றினனிறுமாப்பினுலிந்திராதியரை
மாற்றியேவதைத்தாறிடாப்பீழைவாய்வைத்தான்
ஆற்றிலாவவரழுங்கலைக்கண்டயானவரோ
டேற்றமோதிவெஞ்ளோதவாரிதிக்கணேயுற்றேம். (௧௦)

உற்றயான்சதமகன்சுரர்முதலினருடனே
பெற்றதாதைதாண்மலர்பணிந்தேத்தியேபெரிதும்
உற்றபீழையுமும்பர்களிடும்பையுமுவனுல்
செற்றபேறையுஞ்செம்புணீர்ச்சேலையுங்காட்டி. (௧௧)

காட்டிக்கான்மலர்வீழ்ந்தவன்புடைத்தலின்காயம்
மீட்டுமீட்டுமேவிரித்தழுமவர்தமைவிமலன்
ஈட்டுமாவருளிணைமலர்க்கண்களாலினிதே
நாட்டியஞ்சலீர்நாகர்கோனுதிகாளென்றான். (௧௨)

என்றவெம்பிரானெனைவிளித்தினிதுகேளிக்கால்
குன்றவில்லியுங்கோதறுகௌரியுமிகலி
நின்றநட்டகுளிணைக்குறித்தேகுவானினைத்தே
இன்றுயத்தனித்திருக்கின்றமாதலானீவீர் (௧௩)

தில்லைச்சித்திரக்கூடமாநகர்வயிற்சிறந்த
அல்லைநீக்குறுவிரதமாதிகடமையாற்றின்
எல்லையற்றயானவணெழக்காணிலவ்வீனன்
வல்லையற்றிடவழங்குவல்படையெனவறைந்தான். (௧௪)

அறைந்தவையன்சொலகமகிழ்வொடுகொடுவேற்று
நிறைந்தமூர்த்தியைப்பணிந்தெலாந்துதியையுநீளப்
பறைந்திருந்தனமாகியெப்பழம்பொருளினுக்கும்
மறைந்திருந்தவன்வருகையினுடன்வரலுற்றேம். (௧௫)

எம்பிரானெழவெண்ணலுமெண்ணிலாமுத்தர்
தம்பிரானடித்தொண்டெமக்கெங்ஙனந்தண்டும்
அம்பராதிபநமவெனநோக்குவோரடங்காப்
பம்புமானந்தசாகரம்படிந்துபன்னினரால். (௧௬)

எனக்குமீசற்குங்கிடைக்கருமெம்பிரான்தொண்டைத்
தனக்கெனக்கெனத்தராந்தரவிருத்தியைத்தரித்தார்
கனக்குமாமறையாதிகட்கெட்டருங்கருத்தன்
மனக்குகந்தமாமகளுடன்மற்றுளோரொழுந்தார். (௧௭)

வேதவாகனவிகங்கபூபதிமிசைமேலோன்
ஆதவாதிவெஞ்சுடரொலாமனுங்கிடுசோதி
நாதனூர்நிவந்துறவெலாநித்தமுத்தருந்தம்
நீதமாகுமாவையமேனிவந்துறவெழுந்தார். (க௮)

யானும்வாணியுமினுமெனையாண்டுவிண்ணூரும்
தேனுமானுமார்தேவர்கள்கோனுமச்சசியும்
வானுள்ளாருங்கந்தருவருங்கருடரும்வசுக்கள்
தானும்பானுவின்றரத்தருமுருத்திரத்தளமும். (க௯

புரவித்தேவரும்புகழ்சித்தயக்கரும்விஞ்சை
மருவத்தேவருமற்றுளகணங்களுமால்செய்
யுருவத்தான்மலியுருப்பசிமேனகையரம்பை
திருவத்தான்மலிந்திடுதிலோத்தமையுடன்சிறந்த (உ0)

பத்துநூறுவச்சரமதிகடலிடைப்பட்ட
உத்தமத்துருவுடையவச்சரசெனும்பெயரார்
அத்தனூருடனூறுமாகோடியாரடுத்தார்
சுத்தமானமாத்தேவர்பன்னியர்களுந்தொடர்ந்தார். (உக)

பாயிரத்துடன்பயின்மறைபயின்றநாற்பத்தெண்
ணாயிரத்துமாமுனிகளுமெழுமுனியணியும்
சாயுறக்கொடுவினைசனகாதிமாதவரும்
தாயுறத்தெழுமூர்த்திகண்மேற்கொடுசாய்ந்தார். (உஉ)

தரிசுரத்தனுந்தக்கணக்கிழவனுங்குறண்மேல்
வருவனத்தனும்வனத்தனுமானவைத்தவனும்
ஒருதனத்தனுமுதலினர்பலருடனொருங்கே
வருமினத்தருமெம்பிரானுடன்வரலானார். (உ௩)

ஆவியாகுநம்மரியருச்சையையருச்சிப்பான்
மேவினார்மறையாதிவைதிகரொலாமிக்க
நாவினாற்பயின்றுளம்பொதிந்தாற்றுநர்வெள்ளைத்
தீவினார்திருவெண்மிருத்தணிந்திடுசீலர். (உ௪)

பஞ்சராத்திரவிகனசமிருதிகள்பகரும்
வஞ்சராதிக்கமாகலாவேதவைதிகத்தார்
நஞ்சருத்திரிநாகசட்டகமுள்ளானடியை
அஞ்சலிட்டநற்பாணிநெஞ்சினைப்புறமாக்கார். (உ௫)

மறந்துமாலலான்மற்றொருவனைத்தொழாமனத்தார்
சிறந்தவூர்த்துவபுண்டரஞ்சேர்ந்தபன்னிரண்டார்
துறந்ததுப்பினர்துறக்கிலாத்துள்வுதாமனையில்
பிறந்தமாமணியாசமார்மார்பினர்பெரியார். (உ௬)

௪௪-வது. எம்பெருமான் தில்லைக்கெழுந்தருளிய கசுக படலம்

வேதவேதியர்விண்ணவர்மண்ணவரோத்தும்
நாதரோதமினுமத்தர்நமப்பதவினத்தார்
சாதவாதமில்லாதவொண்ணுசத்துவத்தர்
நீதமோதலில்லாதநன்னீதிசேர்நீரர். (௨௭)

உள்ளினும்புறம்பினுநிறைந்துறுதனியொருவன்
பள்ளியென்றுளவெட்டெழுத்தாமநுப்பயின்றார்
உள்ளியுட்பொருட்படியெனதியானெனலொருவி
நள்ளிராப்பகனற்குணகணமுணுநல்லார், (௨௮)

மூன்றென்றோதுமாயிரத்தவர்மூன்றிரண்டான
ஆன்றமாவநுட்டானர்நங்கண்ணனாருளால்
ஈன்றகீதையின்படியெலாமிறுத்தவரிணைத்தாள்
சான்றெனுவுபாயம்முபேயம்மெனச்சமைந்தார். (௨௯)

சுத்தமாகுசுவேதமாந்தீவினர்சுகமார்
முத்தர்மாவயிணவரவர்குலமுதன்மூவா
வத்துவாகுமவ்விண்டுவேமற்றிலைமறுத்தோர்
கத்துமேழ்நரகத்தினரெனுங்கலைகற்றார். (௩௦)

கற்புண்டாங்குலமகடிருவுளத்தினைக்கடுப்ப
அற்புண்டாந்திருமாலலாலரன்முதலினைப்
பொற்புண்டாகுமுக்கரணத்தும்புல்லலைவிட்டார்
வெற்புண்டாகுவிமானமேல்விமலனோடெழுந்தார். (௩௧)

எழுந்தவ்வானமேலெட்கிடமறநிறைந்தேகிக்
கொழுந்துவிட்டலர்தேன்கனிகொழித்திடும்படப்பை
விழுந்துமொய்த்திடம்பரந்துளவியனகர்கண்டான்
அழுந்துமாவியுட்புகுந்தெலாம்பரந்துகாணமலன். (௩௨)

கேட்டியாழ்பயில்கேடிலியடியவகேதம்
வாட்டுவானவர்முனிவராதியர்வாழ்த்து
நீட்டுமாமறைமங்கலமுரசுடனிமலன்
காட்டுளாகியவந்நகர்கண்டுளங்களித்தான். (௩௩)

வெண்டிரைத்திருப்பாற்கடனின்றெழுவிமலன்
அண்டர்வாழ்த்துமத்தில்லைமாநகரினையன்பால்
கண்டபின்னிகழ்களிப்புளசரிதையைக்கமலன்
விண்டவாறுயாம்விளம்புதுமெனமுனிவிளம்பும். (௩௪)

௪௪ - வது. எம்பெருமான் தில்லைக்கெழுந்தருளியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - ௪௪ - க்கு திருவிருத்தம், ௧௩௪௧.

௫௫ - வது. அம்பலவாணப்பெம்மான் ஐந்தவைபுகுந்தபடலம்.

—:o:—

வெண்ணகைக்கருங்கட்செந்துவர்வாய்ப்பொன்விரைமலரவள்டிக்குகந்தோய்
பண்ணகைப்பரதவிஞ்சையின்பாடாற்பட்டவர்பரிவகற்றற்கு
விண்ணகைவிபுதர்கூண்டுகளுடனேவிமலனொழுதலைவிரித்தாம்
தண்ணகைத்தரளவாரிசூழ்தில்லைத்தனிநகர்புகுமியற்றனைக்கேள். (௧)

தன்னுழைப்பிரமன்றனைப்படைத்தவன்செய்தணிவருமுயிர்களைப்புரப்பான்
மின்னுழைவெளிவானுற்றினிற்சகலவிரிசுடர்முடிச்சுரர்விமலர்
மன்னுழைவரலுமகிழ்ந்துவான்கம்மியன்புரிதில்லைமாநகரின்
வின்னுழைவிவிதவிசித்திரவளத்தைவிழித்தலர்மகட்கெமான்விரிக்கும் (௨)

கதிர்சுடர்பரப்புமணிமுடித்தேவர்களித்திடவருட்கண்செய்கன்னி
முதிர்சுடர்பரப்புமணிமுடிச்சிகரமுற்றநான்காகுகோபுரங்கள்
எதிர்சுடர்பரப்பியிலங்கிடலெண்ணிலென்வயினெழுந்தநான்முகனைப்
பிதிர்சுடர்பரப்பப்பெற்றனுக்குப்பெற்றிலையொத்திடப்பிறங்கும். (௩)

அன்னகோபுரங்கண்மாட்டடர்கொடிகளசைந்திடலலர்வருமணங்கே
கன்னிபாகனுமக்கௌரியுநடிக்குங்காணடங்கணித்திடல்கடுப்ப
மன்னுமெம்மாட்டவ்வரிசையைநோக்கிவழங்குதிர்வருதிராலென்றே
சொன்னயத்தோடுஞ்சொல்லுதன்மானச்சுழன்றொலித்திடற்றனைச்சூழ்தி. (௪)

மயிலியிற்சாயலொருமதிமுகத்துமலர்விழிச்சிற்றிடைமானே
கயலியற்கழனிக்கந்தரச்சோலைக்கவ்வுறவளைமதில்காணின்
அயின்முகக்கணிச்சியந்தகற்கிலக்காவாயினார்க்கழிவிலஞ்ஞான்
மயன்மிகவுறுத்துமவித்தையேழ்விதமாவளைத்துறன்மானுமான்மாதே. (௫)

மதுமலர்பறித்துன்றிருவடிவழுத்துமாதவர்க்கயனரன்பதியைப்
புதுமலர்மணிப்பொன்பொத்தியானந்தம்பொருந்தவீந்தருள்செயும்பொன்னே
விதுமலர்கோட்டமிசையசைகனகவியன்சுடர்க்கலசங்கள்விளங்கல்
இதுமலமமலமென்றஞானத்தாலேழ்திரையகற்றியாரியையும். (௬)

நடமலையாடுசிவிகைமான்குறளிநாரமீனூர்திகளாயுள்
உடையராயின்புதுய்த்திடவருள்செயொண்டொடியும்பர்காண்கோயில்
தடையெனுமூன்றைச்சவட்டியென்றனைச்சாதகசாத்தியமாக
அடைமனஞானத்தவிர்தருங்காணியழகியமணிப்பொனாரிழையே. (௭)

பெருமறைமூலத்தோதியபடிக்குப்பெட்புடன்பேணிலார்பேரூர்
திருதருஞானமூணிலையற்றேபீழையிற்றிரிதரச்சீறும்
அருமலரவளேயவிர்கதிர்மாடமொளித்திடவார்ந்திடுகோளம்
உருநமதடியார்தமைப்பழிகொடுந்தீமக்கடங்குரலினைச்சிவனும். (௮)

சரு-வது. அம்பலவாணப்பெம்மான் ஐந்தவைபுகுந்தபடலம்.

கடல்வயிறுளைந்தீன்றெழுதருகாலைக்கமலனுஞ்சிவனுடன்சுரரும்
அடல்வலியகன்றககனராதியராமருங்குழவிகளுணற்கருளால்
மிடல்தருமமுதமாதிகண்மருவவிளங்கியவிமலையிவ்வீதி
படல்தருபலசூரகற்றிநம்பதமேபற்றினார்பாடலினழகாம். (கூ)

நீரரமகளிர்நெருக்குபுகுந்துன்னிலவெறிப்பாழியிற்றமது
வாரறவீழ்ந்துவாழ்த்திமங்கலச்சீர்மருவிடவிளங்குமென்மணியே
காரறவிளங்குங்கதிர்விடுகனகமாளிகைவளங்களைக்காணின்
நாரறவிளங்குநன்மனத்தமலர்க்கொருதினமூட்டினார்நலமாம். (க0)

கருமுகிற்குழலுஞ்செங்கனிவாயுங்கமழும்வெண்முகையுறழ்நகையும்
அருமுகிற்பிறழுமின்னுறழிடையுமலர்விழிமலர்மனையணங்கே
வருமுகிலுறழவழங்குவள்ளல்களின்வழங்கிடுகூலமுமவைக்கண்
ஒருமுகிலுறழென்னுருகுணலீலையுமைமதுப்பொருள்களுங்காணே. (கக)

நிரையிதழ்திறந்துமதுகரமாற்றநிறைமணப்படலையைமிலைந்த
புரையிகழினியபொற்குயினிகர்த்தபூஞ்சுருண்முடித்தபூங்கொடியே
கரையிகழ்கிரணவெண்பளிங்கியற்றிக்காண்கயங்காத்தருண்மாலென்
உரையிகழ்வார்வீழெரிநிரயத்தாழொருகுழியுறழுமென்றோரே. (கஉ)

கருவுயிர்த்தெடுக்காதிணைமுலைகொடாதுகருணையாலுலகெலாமீன்ற
திருமகளென்னாப்பலமுறைசுருதிதினம்வழுத்திடுமெனதினியாய்
இருநிலம்பிளப்பச்சடைவிடுத்தகண்டமுலவிருண்மூடுகாவுற்றார்
வருநிலமுணராதுழலுதலென்னைமாற்றினர்பவத்துழன்மானும். (கந)

வள்ளுறைகழித்துத்துளங்குவாண்மிளிறன்மானுமைக்கண்மணிமானே
கள்ளுறைச்சூட்டுக்காளைமாரிவுளிகடுப்பினைக்காணுதியழுக்கா
றுள்ளுறைச்சுமடனோத்திழிவிகடனுறவரைப்பழியிசையிழிஞன்
எள்ளுரையிவரையீர்த்தெரியிடுவான்வருநமன்கடுப்பினையியையும். (கச)

இத்தகைமைத்தாந்தில்லைமாநகரினியல்வளமிசைத்துலகியாவும்
மொய்த்துளநினதுமலர்க்கடைக்கண்ணின்முளைத்துளவழகலதியாதே
முத்தனமுறுவன்மொய்குழாலெனவான்முனிவரர்சுரர்முதலவரோ
டத்தரையிழிந்தானமரர்வாச்சியம்பூவாரணங்கலித்திடவம்மான். (கரு)

ஆரணங்கலித்தவம்பரபேரியதிர்த்தனவலர்மணமாரி
தோரணங்குலுங்கச்சொரிந்தனதேவர்தேவிகள்சோபனஞ்சூழ்ந்த
வாரணம்வாசியிரதங்காற்றளங்கண்மலிந்தனமாதவர்மறையோர்
காரணவாழியெனும்பல்லாண்டோதைகவிந்தனகுவிந்தனகரப்பூ. (கசா)

அந்தரத்தமராருந்தவமுனிவரருங்களிமருத்தர்கந்தருவர்
சுந்தரத்துரகர்விஞ்சையரியக்கர்சோர்வருமருக்கருத்திரர்கள்
இந்திரனாதிக்குளர்யானுமிவரிவர்மனைவியரொவரும்
கந்தரநெருங்கக்குழுமியெம்பெருமான்காட்சியைக்கண்டுசேவித்தேம். (கஎ)

கருவடிநயனார்மறைமுடிவெல்லாங்கலந்தொருவடிவுளபெரிய
திருவடிநயினார்திகழ்மணிப்பொன்னூஞ்சலின்மிசைத்தோன்றியவுலகத்
தொருவடிநயினாராகியமூவாவொளியெனுந்தனிமுதல்குடகப்
பெருவடிநயினாரெனுஞ்சினகரக்கோபுரத்தினுட்பெட்புடன்பெயர்ந்தான். (௧௮)

ஒலித்தனமறைகளொலித்தனவியங்களொலித்தனவீணைகளோங்கிக்
கலித்தனதேவகணமெலாஞ்சுரர்கள்கணிகைகளாடல்பாடல்களும்
சலித்தனவெம்மான்சாறுசேவித்தார்சம்பவப்பவங்கள்வான்மலர்கள்
மலித்தனவிப்பூபூவெனவழங்கமாகதர்துதியெலாமலங்க. (௧௯)

அப்பெருஞ்சினகரத்துளேவேதமாதிகள்யாவுமாண்டருளும்
ஒப்பறுமொருமாமுதலுமாமகளுமுள்ளிட்டார்யாவருமோங்கத்
தப்பறப்புரிந்தசவியொளிக்கிரணந்தழைத்தவிர்பொன்மணிபுனைந்த
கப்புறுமாடமாளிகையளவின்மண்டபக்குளமெலாங்கண்டான். (௨௦)

காண்டொறுமுறையெங்கணுமருண்மிகுப்பக்கம்மியற்கியலருள்கணித்துத்
தாண்டவநோக்குமம்பலமெல்லாந்தனித்தனியருண்மலர்சார்த்திப்
பூண்டவட்கோதிப்புன்னகைமினுக்கிப்பொன்மலையிவர்ந்துளபசுமை
நீண்டவண்கிரணநிறைமணிமலைப்பூவிழிதல்போலெம்பிரானெழுந்தான். (௨௧)

முத்தர்தோட்கைம்மேலெம்பிரான்பரிசித்தெழுதலுமுழுமணிப்பாது
கத்தைநற்கனிவோடொருவர்மேலிருவர்காட்டலுங்கான்மலர்கவ்வ
இத்தனைநாளுமீண்டெலெடுத்துமிப்பெருந்தொண்டெமக்கின்றே
கத்தனேயென்றுமூவருங்கலங்கிப்பணிந்திடக்கான்மலர்பெயர்த்தான். (௨௨)

கருடனார்புயமேலெம்பிரான்சாய்ந்துகரமலர்தருமவர்மீது
புருடனோகப்புண்ணியர்சாந்திபுரிதலும்புகைநகைதீபம்
அருடனார்க்கினியவடிதொறுமுகமனுற்றலும்போற்றலுமம்மா
தெருடனலியம்பச்சென்றிடாதென்னற்றரிசித்தார்க்கன்றியென்செய்கேன். (௨௩)

ஐந்துடனேழென்றியம்பிடுமினியவம்பலத்துள்ளெலாமான்ற
நந்துருக்கனகம்பலத்துண்மாமேலாநாட்டிடுமிரத்தினசபையாம்
அந்தவான்சபையிலாரணப்பாகையாமரிமணிப்பொனத்தாணி
உந்திமேலோமென்றுரைக்குமாசனத்தேயுச்சர்தமுச்சன்வீற்றிருந்தான். (௨௪)

சுத்தசத்துவவிமானமும்வேதசிரமெனும்பீடமுஞ்சோதி
வத்துவினுருவாமெட்டெழுத்தாலாம்வரிசைசேர்படிகளுமவைக்கண்
நத்துறுபஞ்சபூதமாமணிகளுட்டியகலசமுநாகர்
முத்தனுமநந்தமூர்த்திசேர்துறையுங்கண்டவர்பவக்கடன்மூழ்கார். (௨௫)

மூவடிவழக்கிற்கொண்டதாண்மலருமூதுலகனைத்தையும்பூத்த
மாவடிவுந்திமலருமிம்மண்விண்மருவுசராசரமனைத்தும்
ஆவடிவினளாகிடுமகிலாண்டவல்லியாரமைசிறமலரும்
சேவடிவானவருணிறைகமலஞ்சேர்முகமலனாயுங்காட்டி. (௨௬)

ஐந்தவைபுகுந்தபடலம்

வீற்றிருந்தருள்செய்நான்குதோட்படையைந்தையுமவண்விளங்குபல்பூண்கள்
ஆற்றுமாமுகிலினழகையும்பீதவாடைசேரழகையுமமரர்
போற்றிசெய்துடலம்பொடித்திடத்துதிக்கும்பூர்த்தியும்பொன்னகர்க்கிறையும்
ஏற்றுளாற்பெற்றயானுஞ்சற்றயலுற்றேத்தியாண்டிருந்தனமாதோ. (உஎ)

வேதியராமூவாயிரவைணவப்பிராமணர்கள்வேதத்தால்
ஓதியாண்டியற்றுமுறையெலாமியற்றியுற்றனருற்றநாளோதின்
ஆதியாங்கிருதயுகத்தினில்விசயவாண்டினின்மீனத்திற்பௌவம்
நீதிசேர்சோமவாரவுத்திரநல்லிடபத்தினிலவினனிமலன். (உஅ)

வேறு.

எதிகணுந்தனிரத்தினத்தின்சபா
பதியதாகிப்பரமன்விளங்கினன்
துதிசெய்மாப்பொறையாநந்தத்தூய்மைசேர்
விதிசெய்மங்கையர்மூவர்விளங்கவே (உகூ)

சித்தர்முத்தர்நிருமலமாமுளப்
பத்தர்வந்துபல்லாண்டுகள்பாடினார்
சத்தமாதர்கள்தேவர்கள்சாய்ந்துவந்
தொத்தநற்றுதியோதியுலாவினார். (௩0)

தேவதுந்துபிதெம்புடன்பம்பின
ஆவதோதியரம்பையராடினார்
மூவர்சோதிமுடிக்குமணிமுடி
தேவனுதிசேடப்பிரான்சேர்ந்தனர். (௩க)

கின்னராதியர்கீதங்கிளத்தினர்
மன்னுதேவர்பூமாரிவழங்கினர்
அன்னகாலையிலப்பனருளினால்
என்னைநோக்கியிருக்கையுதவினான். (௩உ)

யானும்வெண்ணிறயானையின்கோனுமீ
வானுளாருமற்றோருமுறைப்படி
கானுந்தேனுங்கமழ்மலர்மாலைசேர்
கோனுலாமவைதன்னிற்குலாவினேம். (௩௩)

தேவமங்கையர்செந்தமிழ்வேதியர்
தாவமங்கையர்தாபதர்சித்தர்கள்
கோவதாயினர்கூடப்பயின்மாந்தர்கள்
ஆவதாமருளாலங்கமைந்தனர். (௩௪)

திருமுன்கீழ்த்திக்கிற்செம்பொற்கலுழற்கும்
உருமுன்பாழியுறும்பலிபீடற்கும்
மருவியுற்றமாமந்திரம்வைகினார்
கருடகேதனங்கற்பொனிற்றோன்றின. (௩ரு)

புண்டரீகப்பொன் ஞச்சியர்பொன்மணி
கண்டகோயிலிற்காந்திசெய்தோங்கினர்
அண்டர்நாதற்கணியல்ளித்தவர்
பண்டமாமணிப்பாழியமர்ந்தனர். (ருசு)

அனந்தகொத்தமரர்க்குமுன்ஞக்கிய
அனந்தமண்டபத்தேயவரண்மினர்
இனந்தவாதவியன்மலிஞானமார்
இனந்தவாதவாழ்வார்களிருந்தனர் (ருஎ)

வாழிதேவரவரவர்வைகுறும்
பாழிதோறுமவரவர்பாங்கரோ
டூழிநாதனுதவுமுறைப்படி
ஆழியாதிப்படைப்பாரண்மினர். (ருஅ)

திருவின்மல்கியசித்திரக்கூடமாம்
மருவுகோயிலவாவர்வந்தபின்
அருவமாவுருவம்மலியாண்பெணும்
ஒருவனூர்தியையுன்னிவிளித்தரோ. (ருகூ)

சூழிப்பாந்தள்சுழித்துணுவோய்நம
தாழிப்பாழியிலாகியமர்ந்துள
தாழிப்பாற்சுதைதன்னேயிக்கூபக்கண்
ஆழிப்பாகவளாவுதியென்றனன். (சா0)

அன்னவாசகமையனருள்செயப்
பொன்னேயொத்தமெய்ப்புட்கரசேகியே
முன்னமிட்டுளமொய்யமிழ்தக்கடம்
தன்னேயெம்பிரான்றன்னெதிரிட்டனன். (சாக)

இட்டவான்சுதைத்தாழியைநோக்கித்தன்
இட்டவானவிமானக்கீசானத்தில்
தொட்டகூபத்தின்றேயங்குளித்துணத்
தொட்டதிற்கலந்திட்டனன்றேமிலான் (சாஉ)

பாபமற்றவக்கேணிப்பயந்தனேப்
பாபமற்றபரமன்பரிசனம்
தாபமற்றிடவாடுவர்தாபத
தாபமற்றிடச்சாற்றினன்போற்றியால். (சாரு)

அமிழ்தகூபமென்றின்றுகாறும்மதை
அமிழ்தமுண்டவராதியரோதுவார்
தமிழினுழியிற்றுக்கறுதாளற்குத்
தமிழிவின்புதழைத்திடப்பாடுவோய். (சாச)

என்றுவேதனியன்முனியாதியர்
நன்றுநன்றெனக்கேட்கநவின்றனன்
கன்றிலாதவிக்கானுறையையர்காள்
என்றுபின்னரியம்பிடலாயினன். (சரு)

சரு-வது. அம்பலவாணப்பெம்மான் ஐந்தலைவபுகுந்த படலம் முற்றிற்று.

ஆக படலம் - சரு - க்கு திருவிருத்தம் - கருகச.

சகூ-வது. சிற்சபாபதியைச் சிவகாளிகள் சேவித்தபடலம்.

அரிசித்தென்முழுதுமமர்சித்தனடிமலரை
பரிசித்தமனமுடையபரிசுத்தமுனிவரனே
பிரிசித்தவுமைசிவனும்பிழையற்றவொருமுதலே
தரிசித்ததரமருள்வல்தரிசித்துதவநினைகேள். (க)

முனமொத்துநடவாதமுனிவுற்றசதிபதிகள்
மனமொத்தமகதேவனருளிட்டபடிவருநாள்
இனமொத்தவிணைதலெணியிகலுற்றதவநிலைவிட்
டனமொத்தநடையமலையகலத்தன்முனம்வருவார். (உ)

வேறு.

தூயதில்லைக்கடுத்திடுதெப்புள
வாயுமாதிரமன்னிமாநாதனை
நேயமாமானநிற்பவைத்தம்பிணக்
காயும்வாதுகடிதவங்கண்டுளோன். (ங)

மாணநற்சிவமாதவன்காளியும்
ஊனமற்றவன்றில்லையிலுற்றதை
ஏனமற்றிடக்கேட்டமணேகிடத்
தானம்விட்டழகாற்றிச்சலித்தனன். (ச)

வருதலெண்ணிவாநதிருடினன்
கருதியாநந்தக்கண்ணநீராகினன்
வரதனின்றுவழங்கிடுசேவைக்கென்
விரதமாற்றினேனென்றுளேவிம்மினன். (ரு)

அமலனார்குணத்தானந்தத்தாண்டவம்
முமலமுற்றவர்முற்றுவசோவந்தக்
கமலனுற்குங்கைகூடுவதோவென
விமலபாதவீரக்கழல்வீக்கினன். (சு)

சுட்டொணாதசுகோதயசூழ்ச்சியைக்
கட்டுமாமனக்காட்சியுற்றேனெனா
அட்டமூர்த்தியிலாமிறுமாப்பினாற்
கட்டினேன்புலித்தோலெனக்கட்டினார். (எ)

வானைக்கீழ்மனைவாழுயிர்வட்டியைச்
சோனைத்தோன்றிச்சுகிக்கவளித்தருள்
கோனைவிட்டமதத்தைக்கொன்றிந்த
ஆனைத்தோலிலணிவனென்றார்த்திட்டான். (அ)

முத்திவைக்குமுகுந்தற்கேதஞ்சொலிக்
கத்துமாக்களைக்காய்ந்தவர்க்கௌவிய
சுத்தமாணிக்கமாலைதுறந்துவிட்
டத்திமாலையையாரவணிந்தனன். (கூ)

அலைகளாடுமரவினமர்ந்தருள்
உலைவிலாதுபுரந்தருளுத்தமன்
கலைகளோதிக்கனிந்திடாப்பேர்கடம்
தலைகள்கட்டியதாரையணிந்தனன். (க0)

ஆனைக்காகவன்றோடியவாண்டவன்
தானைக்காவென்றுடனைப்புரந்தவன்
மோனைமந்திரத்தான்முனிவோர்விடு
மானைப்பற்றினேனென்றுமான்மன்னினான். (கக)

கழுவடுத்தகனகன்மதலைமுன்
வழுவடுக்காதுவந்தவன்வாழ்மறைப்
பழுவடுக்காப்பரன்காண்மினென்றெரி
மழுவெடுத்துவழங்கிடலாயினான் (கஉ)

கமருகத்தெழுகாலத்துங்கார்நிறத்
தமருமூலத்தடங்கிடுகாலத்தும்
அமருமாலேயருள்பரனென்றொலி
தமருகத்தைச்சலித்திடத்தாங்கினான். (கங)

வேலைமேவிவிழிதுயில்விண்முதல்
நூலையன்றிநல்லோருநுவன்றுளார்
வாலைக்கோதிராமாவெனுமாசெப
மாலைமாமலர்க்கையின்மடக்கினான். (கச)

ஊறுபூத்தவுயிர்க்கருளொண்மறை
ஈறுபூத்தவிலக்குமியீசற்கு
ஆறுபூத்தவடியவளென்றுவெண்
ணீறுபூத்தநெருப்பினிலாவினான். (கரு)

அன்றையின்றைக்குமானவனாருள்
நின்றநின்மலியார்நிறமன்றோவென்
றொன்றநின்றபொன்பூத்தவுவகையாய்க்
கொன்றைமாலைகுலாவக்குலுக்கினான். (௧௬)

அம்மையொத்தெனக்காருள்செய்தருள்
வம்மைவைத்ததுளவணிமாயனார்
அம்மைவைத்தவடிமலர்போன்மெனத்
தும்பைமாமலர்சூடிச்சுலாவினான். (௧௭)

முறுகிலாமன்முகிலுருவாகிய
மறுகுமாவிக்குமாநீர்தரானெனில்
இறுகும்வாரியிடத்திலிலங்குமிவ்
வறுகுமுண்டுகொலென்றணிந்தாடினான். (௧௮)

பத்திவைத்துப்பலமுறைகத்திய
முத்திநாதன்முழுவருண்மூழ்கிய
பித்தனென்றுபிறர்சொலப்பேணுமூ
மத்தையாத்தியெருக்கலர்மாலினான். (௧௯)

வேறுவீறவிளக்குமவித்தையில்
ஊறிலாமலுறங்குமெச்சங்களை
மாறிலாமற்புரக்குமெம்மான்பதத்
தாறுசூடியாநந்தத்தழுந்தினான். (௨௦)

துதிமலிந்ததுயராறுசோதிதன்
நிதிமலிந்தநிறத்திற்றுலங்குவாள்
சுதிமலைந்தவளோடுதிசுத்தியான்
மதிமிலைந்தனெனச்சொலிமாலினான். (௨௧)

பக்கமுற்றபல்லாயிரத்தண்டமுண்
டொக்கவிட்டுமிழொள்வலிக்கண்ணனார்
தக்கதாண்மலர்சாற்றவைதாங்குறச்
செக்கர்பூஞ்சடைசேர்த்துச்செருக்கினான். (௨௨)

இன்னவாறெமதீசனிசையிசை
அன்னயாவுமழகியமேனியில்
மன்னவைத்துமகிழவணிந்துளே
தன்னைநோக்கிக்குறுநகைதாக்கினான். (௨௩)

தீம்புதீர்தரத்தீனனாச்சந்ததம்
ஓம்புமாதியிலானுறங்குத்தமத்
தாம்புவின்னிசையாகும்வெண்பாவெனாப்
பாம்புமாலைப்பணிகளிற்பம்பினான். (௨௪)

மாற்றிலாப்பரன்முன்னிட்டவாக்கினால்
ஊற்றத்தூர்த்துவந்தன்னையொருவினான்
நீற்றோடங்கந்துநின்றுநிலவுற
எற்றித்தில்லைக்கெழுந்துறலாயினான். (உரு)

வேறு.

சடலையிற்சூறையிடையிடையடித்துத்தொந்தமிட்டிடுங்குறட்டொகுதி
அடலையிட்டாடித்திசைதிசைமயங்கவனலுமிழலகைகளுடனே
கடலைமுற்றினுந்தங்காலளவாகக்காணுஞ்செங்கண்ணிறக்கரும்பேய்
படலையிட்டணியாயிரம்பெருக்காகப்பரசிவற்கினிதுசூழ்ந்தெழுந்தால். (உசு)

வேறு.

கூளிவாகினிகொக்கரித்தனறனைக்கொப்புளித்தொளிமூக்கான்
மீளிசெய்தெரிவிழிவலையெயிறுகண்மென்றுவீநிணமுண்டே
ஆளின்மொய்த்துறவடுத்தாகரவெனவஞ்சலிசெய்தாடக்
கோளின்மொய்த்துறவளைமதிற்றில்லையுட்குறுகினன்குன்றேசன். (உஎ)

குன்றமிட்டநற்பொன்மணிச்சுடரெறிகோபுரங்களைமுறையின்
கன்றவிட்டநன்மனமுதற்கரணத்தாற்காணுவர்க்கண்டாற்றி
நின்றுவிட்டநன்மாணிக்கவவைக்கணேநிலவுநின்மலர்போற்ற
அன்றுவிட்டநற்கனகசபாநடுவகன்றுளேசென்றனால். (உஅ)

சென்றுசென்னியிற்கையுறப்பலமுறைசேவித்துவாழ்த்தாற்றி
நின்றுநோக்குழியாண்டொருவெண்கிரிநிலவுறவதன்கண்ணே
துன்றுவோர்குளிர்கரும்பசுமரகதச்சுடர்தழையொளிமேனி
நன்றுகொண்டுசெம்பொன்மலர்பூத்ததோர்நாதனைக்கண்டானால். (உகூ)

உலகநாதனென்றிடுமணிமுடிமறையிலங்கிடுதிருவாய்ப்பு
அலகிலாவருளலையெறிவிழிமலரனைப்பலமணிமார்பு
கலகராருயிர்கடியுமைம்படைப்படைகைம்மலர்விதிதோன்றி
இலகுமுந்திமாமலரிருகழன்மலரிலங்கல்கண்டேத்தினால். (௩௦)

வேறு.

வானேவளியேயெரிநீரோமண்ணேமண்ணுமவைதானே
கோனேகுணங்களில்லானேகுணங்கட்கெல்லாங்குன்றானே
கானேமலரிற்கல்லொளியேகல்லாதவற்குப்பொல்லானே
நானேயெனவெற்குள்ளானேநாராயணனேநமநமவே. (௩க)

தானேதானாய்நின்றானேதனக்குளனைத்துந்தானே
தேனேவேதச்செழும்பூவிற்றிகழுங்கனியேதெளிபசுங்கன்
றானேயானினரும்பாலேயதனுட்சுவையேயதைப்பொசிக்கும்
நானேயெனவெற்குள்ளானேநாராயணனேநமநமவே. (௩உ)

சேவித்தபடலம்·

ஊனேயுயிரேயுயிருள்ளேயுலவியுறங்குமொள்ளொளியே
கூனேர்மனமேயம்மனத்துட்குலவுமறிவேயறிவினுறும்
கோனேகுருவேகுருவருளுங்கோதின்மநுவேகுணங்கடந்த
நானேயெனவெற்குள்ளானேநாராயணனேநமநமவே. (௩௩)

பானேர்வேதக்கடன்முழுதும்பன்னும்பரமன்பொறிசேர்நீ
தானேயென்னவறியாருன்றாழ்வில்வலிசேர்மாயையினால்
கோனேயலைப்புண்டுழலுமவர்குற்றங்குறியேல்கோதில்பரன்
நானேயெனவெற்குள்ளானேநாராயணனேநமநமவே. (௩௪)

மீனேர்விழியார்வலையானுமிகையானெனதென்பவையானும்
தானேர்சமயவபிமானச்சழக்கினானுமுனைப்பழித்தே
ஊனேநரகேயுறுநோயேயுற்றுநசிப்பார்க்கருள்புரிநீ
நானேயெனவெற்குள்ளானேநாராயணனேநமநமவே. (௩௫)

இவ்வாறுருகுமனமுளனாயீரும்விழிநீர்மூழ்கினனாய்
செவ்வாய்மலர்க்கையுடற்றம்பஞ்செய்யப்பழிச்சிவீழ்ந்தெழுந்தென்
ஐயாவருளென்றினிதுகனிந்தாத்தமுகிழ்த்தகையவனைப்
பொய்யாப்பொதுவின்றனிப்பரமன்பொங்குமருட்கண்மலர்சாத்தி· (௩௬)

நோக்கியரனேநின்ஞானநோன்மைநிறைந்தவேத்தேற்றேம்
ஊக்கமடைந்தேமலர்மகளோடுனக்கென்வேண்டுமெனவவனும்
தாக்கும்பரதவிஞ்சையினான்றாழாதாண்டுன்சரணகலா
வாக்கையளித்தாண்மாதவனேயெனலுமவனும்வாக்களித்தான். (௩௭)

அளிக்கும்பெருமானிகிலமெலாமாக்கும்பெருமானாயவையை
ஒளிக்கும்பெருமானவைக்குமுத்தியுதவும்பெருமானரனயனில்
களிக்கும்பெருமானவர்களின்றுங்காணாப்பெருமான்கருணையுடன்
விளிக்கும்பெருமானருளெண்ணிமிகுமானந்தவெள்ளமுற்றான். (௩௮)

வெள்ளமிலைந்தமதிமிலைந்தவேணிமிலைந்தான்விதிபதியின்
கள்ளமகன்றதுயிலழகுங்காமக்கோட்டிமெய்யழகும்
விள்ளவகன்றவிண்மணிகண்மிலைப்பொன்மணிப்பூண்மின்னழகும்
கொள்ளவகன்றகுண்டலக்கண்குலவுமழகுங்குறித்துள்ளி· (௩௯)

ஐயனழகாமருட்களியையாரப்பருகிப்பினும்பருகித்
துய்யமனமுமற்றுமுள்ளதூயகரணத்தொகுதிகளும்
செய்யமலராளழகனடித்துணையைத்துதித்துச்சொலுங்கீத
மையலழுந்திச்சுகவாரிமடுத்துநடத்தின்மலருற்றான். (௪௰)

நடஞ்செய்விஞ்சைவளர்த்தபிரானக்கனலதுயார்கொலெனாக்
கடஞ்செய்வீணைக்கிழவொலாங்கவினுநடஞ்செய்தேவர்கடம்
மடஞ்செய்யரம்பையாதியருமற்றுள்ளாருமகிழ்களிப்பால்
சடஞ்செய்புளகக்கஞ்சுகத்தைத்தரித்துமகிழ்ந்துபார்த்திருந்தார். (௪௧)

ஆட்டுக்காலின்சிலம்பொலியுமார்க்குந்தமருகத்தொலியும்
நீட்டுக்கானமழுவொலியுநிறையக்கணிகணெருக்கொலியும்
பாட்டுக்கானவாச்சியங்கள்பாடுமொலியும்பவளசடைக்
காட்டுக்கானகங்கைமுதல்கறங்குமொலியும்பிறங்கியவால். (௪௨)

இந்தவரவமுப்பூவுமேங்கநிறைந்துகம்பமிடல்
அந்தவுமையாமாகாளியருளிராமபுரத்திருந்தாள்
எந்தையெழுந்தானெனவறிந்தாளீசனுகுந்தனதுபதி
வந்துநடித்ததனைக்கேட்டாள்வருவானுன்னிவழிக்கொண்டாள். (௪௩)

மலைமண்ணடியாமுலகுமையாமைந்தார்காளியடிபெயர்ப்பால்
உலைவிண்ணுலவைமோதலிற்பேரோடமுறழத்ததும்புபடக்
கலைவிண்ணுறுவான்கம்மாளன்றன்னைச்சயிக்குங்கருத்தாலவ்
வலைவிண்ணமர்ந்தான்றில்லைநகரடுத்தாள்கடுப்பின்மிகமுடுக்காள். (௪௪)

வந்தாளெம்மான்கோயிறனைவாழ்த்திப்பணிந்துட்கனகாங்கச்
சந்தாரவைக்குணிலகுமிரத்தினத்தின்சவையிற்சவிசொரியக்
கொந்தார்கிரணமணிப்பொனரிபீடச்சிரத்திற்குலவுமறை
முந்தார்முதலாநின்றசபாபதியைமுறையின்படித்தொழுதாள். (௪௫)

வெந்தாரொன்புஞ்சுடுநீறுமெய்யிற்றிகழுமிவனுடல்
அந்தாமத்தாருடனமரர்முனிவர்நோக்கவமர்ந்தருள்கோ
விந்தாவிமலாவிச்சிவற்குமெனக்கும்விளைந்தவினைதீர
நந்தாவிருவர்நடநோக்கிகான்கீழிவர்மேனவின்றருள்வீர். (௪௬)

என்றேவினவியெதிர்நோக்குமீசன்கிழத்திதனையுமவண்
நன்றேநடிக்குநக்கனையுநாடியவையோர்நன்றுணரக்
கன்றுச்சிவந்ததிருப்பவளக்கனிவாய்திறந்துநீரிருவீர்
பொன்றுப்பரதவிஞ்சைவழுப்போகாவண்ணம்பொருந்தநின்று. (௪௭)

ஒருவர்நடித்தபடியொருவருஞற்றிற்பிழையற்றவராவர்
ஒருவர்நடித்தபடியொருவருஞற்றாராகிலுச்சமலர்
இருவர்நடத்தையியற்றுழிமற்றொருவரொழியினிழிவுடையர்
இருவருள்ளியார்தோல்வியரோவவரிவ்வல்லிக்கிளையந்தவராய். (௪௮)

நகராம்புறம்பினந்தாதாண்மிடைமாத்தளையினவிவுடனே
புகராமவரைப்பலராசுபுகல்விருப்பப்புரிதுமெனுத்
தகராகாயநிகேதனமால் சாற்றித்தழைப்பொற்சுடர்விரிந்த்
நிகராகாமாமணிமயப்பீடிகைமேனிமலியுடனிருந்தான். (௪௯)

அறிதீருங்களகம்பொருந்தவமைந்ததுண்டேலகிலர்முனும்
உறுதியாகவுரைத்தாடற்குரைத்தும்புரிமினெனவவரும்
முறுகுமாசையுடனேமென்றுரைத்துக்களிப்பின்மூழ்கினராய்
அறுகுமறுகும்டர்த்தவெனவாடற்கருவியுடனெழுந்தார். (௫௰)

உணர்தியுலகோம்பருங்கடவுளோவர்வின்பமுதவுப்தம்
புணரும்புனிதவுளமுடையபுத்தேண்முனியேயென்றதனைத்
துணர்பூங்கொத்தான்மலிநேமிச்சோதிவனத்தீர்சொல்லினன்யான்
துணர்பூங்கோயிறுலங்குபணைதோய்மாமுதலைத்தொழுந்தொண்டர். (ருக)

சசு - வது சிற்சபாபதியைச் சிவகாளிகள் சேவித்தபடலம்
முற்றிற்று.

ஆக படலம்-சசு க்கு திருவிருத்தம் - கசசரு.

:o:

சஎ - வது. தேவாதிதேவன்முன்
சிவகாளிகளாடியபடலம்.

தவகானில்களாக்காட்டைக்கண்டற்கரிதான
பவகானிலகன்றூர்க்கொருபரமாத்துமற்கினியோய்
யுவகாளிமாநுடன்றில்லையிலோங்காலையமுற்ற
சிவகாளிகடிருமாறிருமுனமாடியதிறல்கேள். (க)

சுருதிக்கொடியுடையானிடிசொரியக்கொடியுடையான்
பருதிக்கதிரொழுவாயுளமாவிண்ணவர்பகுதி
பெருதிக்குகளெங்கும்பிறங்குறுமாதவர்பெருக்கம்
கருதிக்குமொய்த்துறுமீக்கணக்காகக்கணமொத்தார். (உ)

மொய்த்தாரலர்மொய்த்தாரணிமுனிமாதவர்முதலோர்
மைத்தாரணிமலர்பூங்குழன்மணிவைத்திழைமானார்
கைத்தாரணிமழுவானரியிவர்வாணடங்காணக்
கொத்தார்துளவக்கானகோவிந்தன்னவையுற்றார். (ங)

குழையாடிடமழுவாடிடக்கொக்கின்னிறகாட
இழையாடிடவியலாடிடுமிருபேரிகலியதோர்
பிழையாடிடவென்றச்சவையெங்கும்பிறங்குற்றார்
இழையாடிடவிடமாற்றிடவிருந்தோர்ந்துறலானார். (ச)

வேறு.

காளியுங்கண்மூன்றானுங்கமலத்தான்கடைமுன்னாளில்
கோளியிற்குழவியாகிக்குலவியகடவுளதன்
ஆளியன்மிகுமானந்தபரதமாம்விஞ்சையாறு
மீளியன்மீளாதின்பவிலக்கணவிதமாடுற்றார். (ரு)

நான்மறைப்பயனுமிக்கநல்லவேழிசையுங்காமர்
கான்மறைக்கானதாளகணங்களும்பாவபேத
வான்மறைக்கானவங்கவகைகளும்வாஞ்சைக்கான
கோன்மறைக்கானசிங்காராதியொன்பதுவுங்கூட்டி (சு)

வியன்மிகுகுரன்மிகாதுவிரித்தவாய்பிளவுறாது
நயன்மிகுவிழிகண்மிக்கநடைநடைநலிவுறாது
சயன்மிகுதலைசாயாதுசவிமுகக்குறிகெடாது
பயன்மிகுபண்டியாதிபடிவங்கள்குழிபடாது. (எ)

நெட்டுயிர்ப்பெறிந்திடாதுநின்றுநின்றேங்குறாது
நட்டுநென்னுசியோசைவெடிகுரனுட்டிடாது
இட்டநன்னட்டத்திட்டவியற்குழுவிகாரியாது
கட்டுநென்முழவமாதிக்கருவிகள்கலங்குறாது. (அ)

தூங்கலுமசைத்தலோடுதுள்ளலுந்துள்ளித்துள்ளி
வீங்கிடப்பாடியாடிவியப்பறவிகாரச்சேட்டை
நீங்கிடக்கண்டோர்யாருநிரதிசயப்பேரின்பம்
ஓங்கிடுமுததிவீழ்ந்தேநோக்குறவுனாற்றலானார். (கூ)

ஐந்தெனுங்கருவியார்ப்புமாரணக்களிப்பினார்ப்பும்
சுந்தரப்பாண்செய்வீணைதொட்டகந்தருவரார்ப்பும்
அந்தரத்தவர்களார்ப்புமாடுநர்சிலம்பினார்ப்பும்
வந்தனார்நட்டங்காண்பாரார்ப்பும்வானிலமுமொய்த்த. (கo)

எம்பிரான்றகராகாயத்திறைவிகளிலங்கப்பாங்கர்
தம்பிரான்றொண்டராயவானவர்முனிவர்தாழச்
சம்பராவினியனுஞ்சபாபதித்தாணுகாளி
வம்பறாதாடுமொட்டவாரியின்மாலைப்பார்த்தான். (கக)

பார்த்துழிப்பரமஞானப்பத்தர்களிறும்பூதெய்தக்
கார்த்திகைமகனையானைக்கைம்முகத்தவனைப்பெற்றார்
ஆர்த்தவராகியண்டமண்டலமலைந்துபீதி
கூர்த்தவராகத்தம்மிற்கொக்கரித்தாடலிட்டார். (கஉ)

வேறு.

தத்தித்தோங்கணகிடதகதரிகிணதரிகுஞ்சம்
பத்திப்பாங்குறைபரவரநினசரணுறுதஞ்சம்
தத்தித்தாவிடுகனறனையுனுமொருதனிநுதலி
எத்திக்கோங்குறைவறநிறைதருமிருபதமுதலி. (கங)

அத்திக்காங்கொழிவறுசுகவகமருடருமையா
பத்திக்கேங்கினுநசைகொடுதிரிதருபதமெய்யா
நத்தித்தாங்குறுகலைவினவினவணைந்துறுநாதா
சித்திக்கோங்குறுசீவர்தமுளமுளசிவபோதா. (கச)

முத்திக்கோங்கமெனுந்திருமொழியுள்முதல்வனே
சித்திக்காங்கமெனுந்திருமநுவுளசெயலவனே
நத்திக்காங்கமெனுங்கனிவுளமொடுநந்தஞ்சம்
பற்றிப்பாங்கருள்பசுபதியுனதிருபதகஞ்சம். (கரு)

சஎ-வது· தேவாதிதேவன்முன் சிவகாளிகள் களரு ஆடியபடலம்.

எமையொருபகலறவிகலறவருளருளியவீசர்
சமதமமொடுசகமுழுவதுநிறைவுறுசவிநேசா
இமையவரிகலறவெழுநிசிசரரிறவிடுநேமி
கமையுடையடியவர்தமையடிமலரிடுகவிகாமி. (கசு)

பரிபுரமுறுசரணுறவலியுறவறிவுறுசீலா
கரவறகதிரொளிவிடுவளைகளைதருகனமூலா
சுரசிரமணிமறைமுடியணிமணிகணசுகுணமணி
திருமணிதினமணிதிதிமணியுயிருளோதிகழுமணி. (கஎ)

நணிதுளவறமறைநதியணிபதவிதர்குநாதர்
பனிமலைபதமருளொருவருமறிகிலாப்பரநீதா
சனிதபதபமிடுவிதியிதுவெனுமறைதருநாபா
எனைவளையிருளிரிதரவொருதயைதரவெழுகோபா. (கஅ)

மூரகரிநரகரிமுகினிறமுறவெழுமூவாவோ
பரசரணுறவருளொருவருமறிகிலாப்பரமேயோ
சுரசிரசரசரசுககுணகணமனசுமுகசுகா
பரவரபரசுரபரசுறவருதரபரமசிகா. (ககூ)

சதபதநிதமருளிதபதமுதலறுசமகோளா
சிதபதநிதவுருவுளசிவநவமயசிவதாளா
சதமுகவகநகுமிகுககபதிபுசசவிசாமி
சுதமுகசுககவிசுகிமகிசுகதிருவணிகாமி. (உ0)

தனிமுதலெனநிலமுதலுயிரிணையருடயவானாய்
நினைநிகரறுபரநிதிதித்திபுரிசகநிலைதானாய்
அனைபிதுரனம்புனலெனவுலகிணையகடிடுமோதி
தனைநிகரறுமறையடிமுடியிடைநிலைதருசோதி. (உக)

தேவர்கடேவேதேமலராளொடுசேர்ந்தெங்கள்
ஆவல்கடீரமுனுடுமகாநடமதுகண்டிடும்
மூவர்கண்முனிவர்கண்முதலினமொமருளேமுதலானோர்
ஈவர்களென்றினிதாகவிசைத்தருளிடவெண்ணே. (உஉ)

எங்குநிறைந்துயிரொன்வினையென்னோவன்னவகைத்
தங்குபயன்பெறவின்புடனுண்டருடையையென்றே
சங்கரனும்மவன்பங்குறைவாளுஞ்சலியாமல்
துங்கமலிந்தபரம்பரனார்முனஞ்சுழலுற்றார். (உ௩)

ஆரணனரவர்வாசவனார்சுரரந்தணரும்
நாரணவாடிடுவார்தமைநோக்கியேநவிலுற்றார்
பூரணனாகியுயிர்க்குணிறைந்தவர்புரிவினையாம்
காரணநாரிற்கட்டியசைத்திடலுறுமென்றே. (உ௪)

நாரதரோயவ்வாடவனுடவணயமாகப்
பாரினிராடியவாடலினின்புபரிந்துண்டோர்க்
காரமுதேனோவாடவளேனோவரிதாகும்
நீரமுதேனோவறுசுவையேனோநின்றோதில். (உரு)

அரிகரியென்பாரத்தமெடுப்பாரக்கமதைத்
தெரிநெறிபுரிவார்திகழ்நடமிடுவார்தெளிவோடும்
முரகரியென்பார்முதுபரதத்தேமுற்றாகி
நரகரியென்பார்நாகநடிப்பார்நகைசெய்வார், (உசு)

அச்சமளிப்பார்பூதிவிடுப்பாரற்புதமாம்
பச்சையளிப்பார்சிங்காரத்தின்பதுமீவார்
உச்சமெடுப்பார்வீரியமீவாருறுமாசம்
இச்சையிலீவார்குற்சைபுலம்பவிடநடவார். (உஎ)

கருணைபுலம்பன்முதலியவீயுங்கவியாட்டம்
மரணமிலாமான்முனமாடிடவேவருமந்தப்
பரணியிலேமண்விண்மரமாழிப்பகர்தீவம்
அரணியவெண்கரிகிரிமுதலியவமதிருற்ற. (உஅ)

அதிருற்றிடமிகுவலிவுற்றெழுகதமதனாலே
எதிருற்றொருவனையொருவர்சயித்திடவெழுமுள்ள
முதிருற்றுளபெருநகையுற்றாடினர்முழுமூவா
கதிருற்றொளிர்பரகதிவைத்திடுமுரகரிமுன்னர். (உகூ)

சொற்பதமாமறையிற்பொலியாதியிலாதசுக
அற்புதனேயரனேயயனேயெனவானவனே
தற்பரனேயடியோங்கண்டங்கடமைக்கருணைப்
பொற்புடனேக்குதிபொலிவிழ்வோதுதிபொறிநாதா. (௩0)

திருமணவாளன்றிருமுனமாடுந்திருக்கூத்தைப்
பெருதினமேழாகிடவிருவருமேபின்னுகா
தொருவனையொருவர்மேற்கொளவாவாலோவாதே
வருதினமாதவர்தேவர்களாதியர்மற்றோரும். (௩க)

ஒருபரனார்முன்னிருவருமொற்றுமையற்றவராய்
திரிபுவனதிகடம்பமுறப்பெருதிருஞானத்
தருமறையாங்கந்தருவமதிற்பேரருளாளன்
விரிநடகீதமாம்விவரணவிதமாடினர்மாதோ. (௩உ)

ஆடினர்பாடினராரணவேதியரம்பரர்கோன்
கூடினராயிக்கூத்துகுனித்தவர்போன்முன்பின்
நாடினர்கேட்டவர்யாவருமின்றெணநன்றின்பின்
மூடினர்வைத்தனர்மூக்கக்கிரம்விரன்முனிவோர்கள். (௩௩)

ஆடியபடலம்.

இவ்வாறவ்வாறணிசிவகாளிகளிகன்மீறிச்
செவ்வாறிரவுபகற்போதேழ்நாள்சிதையாமே
அவ்வாரணமுனமானான்வைதனினடிகாளில்
ஒவ்வாவுமைநடமேன்மேனிவர்தலையுற்றன்றே. (௩௪)

உமையாளிடநடமுயர்வானுறுதலுமுமைநாதன்
அமையாடரவணிகரனாடாததுவுங்கண்ட
இமையோர்முதலினரிளிவிட்டேகேயெனலுற்றார்
சிமைமாமதியணிசிவனாடேதறரமலவென்றார். (௩௫)

பெண்ணாயினுஞ்சிவபெருமானிழிவுறவிவளின்பம்
பண்ணார்பாவமிகுந்தாடிடன்மிகுபரமென்றார்
விண்ணோர்விஞ்சையர்வீணையர்மேனகையாதியர்கள்
ஒண்ணாவற்புதமுற்றோதுதறனையுற்றோர்ந்தான். (௩௬)

ஓர்ந்தான்றன்மனையுச்சாகக்களியுற்றாடல்
தீர்ந்தேதன்வலிதேய்வுற்றோயுதல்தெளிவுற்றான்
ஆர்ந்தேயாவியுளாகியருட்டொழிலாற்றையே
தேர்ந்தேநாயடியேனையிளைத்திடல்செய்யேலே. (௩௭)

என்னாயகவெனதுண்ணாயகவெனதில்லாளின்
மன்னாறவலிமேலாவெனதிகன்மாறிற்றால்
நன்னான்மறைமுடிமகிழ்மாசுடர்தழைநந்தேவா
நின்னாண்மலரடிநினைவுற்றஞ்சினனீயாளே. (௩௮)

எனவுண்ணைந்துளேயிலகாரணனடியிணையுன்னி
மனமின்னலர்மனைவாழ்மாதவவென்மனையாளாம்
கனமில்லவளேனையவையார்நகைதருகவினாட்டம்
இனமில்லவள்புரிந்தெனையேளனனெனவிசைவித்தாள். (௩௯)

இம்மாகாளியினோடாடிடவெனதியலில்லேன்
அம்மாவணிதிருவழகார்தனிமுதலையேயுன்
செம்மாபதமலர்சரணஞ்சரணமென்செயமீவாய்
கைம்மாவின்றுயர்கழிவானருள்புரிகண்ணாவோ. (௪௦)

கண்ணாவிண்ணவரண்ணாவாண்டருள்கதியில்லேன்
பெண்ணானவளவமானமியற்றிடல்பெறவோவென்
அண்ணாவென்றுளேயாரநினைந்துபணிந்துருகல்
விண்ணோர்விண்ணவனறிவுற்றஞ்சிறுநகைவிண்டே. (௪௧)

வேறு.

மறந்தழைகொடியநெடுங்குரற்பேழ்வாய்க்குழிவிழிமங்கையாம்வீரி
அறந்தழையமலனாஞ்சபாபதிமுனன்பனையவமதித்தாடும்
திறந்தெரிந்தரற்குத்தெளிவுதந்தமலச்செம்மலர்ப்பதமதைமீதே
சிறந்திடவெடுத்துக்காட்டியிவ்வண்ணஞ்செய்கெனக்குறிப்பினைச்செய்தான். (௪௨)

இருளடுகோசியிழைவசுவவையிலிலங்குவாரறிகலாதிருப்ப
அருளகலாவெம்மம்பலவாணவடியெடுத்தாடுதியென்னத்
தெருளகலாதசிவனறிந்துள்ளங்களிகொடுதேம்பிழிமதுரப்
பொருளகலாதவூர்த்துவதாண்டவம்புரிந்தனன்மறைப்பொருண்முன். (சங)

பொருவருங்கருணைத்தனிப்பரங்குன்றம்புரிதருசுசனைப்படியே
ஒருவருங்காணுவொருவன்முன்னுடலுஞற்றிடவூங்ககக்குமரி
திருகுறநோக்கியவ்விதமாடத்தியங்கியுணைந்துமாநாணல்
அருகுறநின்றுளாடினுன்சிவனுமம்பலத்தடியெனவியந்தார். (சச)

முற்றுணர்மூவாமூர்த்திபேரருளான்மொய்ம்மணியாதநத்திருந்து
பற்றுளசிவற்குப்பயமறவலக்காதூக்கியேயிடதுகாருழச்
சொற்றவிட்டுள்ளவண்ணமேநட்டஞ்செய்தனன்றேவியாஞ்சுலி
வெற்றியற்றிருந்தாளயன்கரியவன்வேதாந்தர்விண்ணவரொலாம்வியந்தார். (சரு)

வேதநாதத்தால்விமலனைக்களிப்பிவியன்முனிவின்மணியொளிசெய்
ஏதமிலினியசிற்சபாபதியாமிறைவனேவியபடிநடித்தல்
நீதமென்றகஞ்சேர்காளியாடாமனின்றனணீண்மதிமௌலி
நாதனுராணைக்கடியன்ருயன்றேயெனநடித்தகல்வியமுற்றுன். (சசா)

காறனைக்குஞ்சிதஞ்செய்தாட்டற்குக்காதலியாகுமக்காளி
நூறனையகலநின்றதாலெம்மானூன்மறையவன்கரிமேலான்
பாறனைநிகர்மாநீர்மைசேர்முனிவர்பண்ணவர்முதலினர்பலரும்
மேறனைக்கொண்டான்சிவனென்றுர்காளிவெற்றியற்றுளெனவெறுத்தார். (சஎ)

அட்டகாசத்தோடெழுந்தெழுந்துந்தியரனிடமோடல்கண்டடுக்கற்
கிட்டமாங்குமரிநாணிநுற்றலையைவணக்கிமாநிலமுகமிரங்கி
நட்டமேநோக்கிநகைத்துளவவைக்குணணிநாப்புலர்ந்துடனடுங்கி
வட்டமாமதியானனத்தினில்வியர்வைவார்ந்திடக்களைத்திடக்கலங்கி. (சஅ)

தாண்டவநோக்குந்தம்பிரானுகித்தணிவிலாதிலங்குமாவிகளை
ஆண்டவனுகியமர்சபாபதியினடிபணிந்தறைகுவளையான்
நீண்டநின்கனகவம்பலக்கண்ணேநிருத்தம்விட்டிருத்தலேனென்றுல்
தூண்டுநின்னருளாலூர்த்துவநட்டந்தொடர்ந்தனனின்றனனென்றுள். (சகூ)

வெற்றியற்றவளாங்கவுரியைவிளித்துவிரிமணித்தவிசில்வீற்றிருக்கும்
பற்றிலாப்பரமன்பகருவன்கேணீபார்ப்பதிபகர்விதிப்படிநீ
முற்றிலாதிருந்தாய்தலாலுன்றன்முழுவலிக்கணவனேவாகை
பெற்றவனுவன்றேற்றவணீயேபீடிவிகோடியாலென்றுன். (ருO)

என்னலுநீலியையவிப்புருடனியற்றியவூர்த்துவக்கூத்தை
நன்னயத்தோடியானுமிக்காலேநடிக்குதுநாதவிவ்வவைக்கண்
இன்னயக்கச்சமிட்டுவெந்தியற்றவின்னருள்புரிதியேலிவனை
மன்னிடுதும்முன்வெல்லுதுமென்னுவழங்கியேயார்த்தெதிருருத்தாள். (ருக)

அவையுளோர்முன்னர்க்கச்சமிட்டாடவாணையிட்டருள்கெனுமவண்மேல்
எவையுமீந்தழிக்குமீச்சுரன்சீறியேயறிவகலரியேறி
பகையுளோர்சிவணப்பாணிதீண்டினவன்பழிப்புறப்பார்த்திடப்பாதக்
குவையுளோர்முன்னர்க்குனித்திடன்மணந்தகுலமகட்கழகலவென்றான். (ருஉ)

அன்றிநாடகங்காணவைபதியாநாமருளியவாறுநீரகவல்
என்றுரைவிதிநன்கிருப்பதற்கியையயாமிசைச்சேண்முகத்தூங்கல்
நன்றெனநின்னாயகனடித்தார்த்தானாரிகோணிநின்றதனால்
வென்றவன்சிவனேதாண்டவராயனாயினானென்றனன்விமலன். (ருங)

குலமகட்கழகுகொழுநனைப்பேணலென்றநூன்மாறிடக்கோதில்
மலமகளாகிவாதிடன்மிக்கோர்வழக்கலவழக்கலமானே
சலமகலாமற்சாற்றியசூளின்படிச்செயக்கடவம்யாமென்று
நலமகலாதநற்சபாபதித்தேநவிலுதல்யாருநன்கென்றார். (ருச)

நன்றெனவரன்செய்நாடகம்புகழ்நான்மறைப்பொருண்முன்னரோநவின்ற
கன்றலின்மொழியின்படியிகழ்காளிக்கியன்றிடக்கட்டளைவிடுத்துக்
குன்றவில்லெடுத்தகுழகனுக்கருட்கண்கொடுத்திடயாமளைநாணி
வன்றுயர்பீழைவாரிதிவீழ்ந்துவழிந்திழிகண்ணநீராகி. (ருரு)

ஐயகோவெங்களரும்பெருந்தலைமையாதிகோவடியளாமெனைத்தீச்
செய்யமாமேனிச்சிவன்வெலுமாறுசெய்தெனைத்தேவர்கண்முன்னர்
நொய்யளாக்கிடற்குத்திருவுளங்கொல்லோநோன்மையென்னுவலருநூலோர்
நையிலாநீதிநாரணனென்னற்கியைந்திடுசிற்சபைநாதா (ருசு)

நாதமுங்கடந்தசோதியேயேழைநாணிடநட்டமிட்டிடற்குப்
போதமிட்டினிமைபுரிந்தருள்புனிதமூர்த்தியேபுவனமூன்றினுக்கும்
ஆதியேயருட்கணமலையேத்திடற்குமருமையேயருட்கடலமுதே
வாதியேலெனதுவலிக்குறைநோக்கிவஞ்சமின்மங்களமாலே. (ருஎ)

மாலுளோர்காணாமாமறைச்சிரத்தின்மன்னனேமண்புனன்முளரி
நீலியாங்கான்மாகாயமாமுகிலாய்நிகழ்குணமுதன்முளைநிலையாய்
ஆலியாம்பைங்கூழ்க்கன்னமாயவைக்குமாதியாயனைத்துயிர்க்குழக்கும்
வேலியாய்விளங்குகருணைமாகடலேவெறுக்கல்சிற்றம்பலத்தரசே. (ருஅ)

நாதயானகம்பாவத்தினானக்கனேடியற்றிகன்மனமேலாச்
சாதனையாலேசாய்த்தனைசயத்தைச்சம்புவிற்கியற்றினைசாமி
வாதனையில்லாவல்லவனியற்றும்வழியினுக்கிழிவெவர்வகுப்பார்
போதனைப்படைத்திருச்சிற்றம்பலத்தோய்புகலெனப்பலவிதம்புகழ்ந்தாள். (ருகூ)

சுரரமுதுணத்தீச்சுரர்பழியுணச்செய்சூழ்ச்சியேசூழ்ச்சிகடொட்டரா
வரர்பதிகனகாம்பலசிவநடனவாஞ்சையேவாஞ்சைகண்மாண்டோர்
பரர்பதியென்னும்பண்ணவவென்மேற்பரிந்தருள்புரிதியாலென்று
அரர்பதியாகுமயர்க்கெலாமயனாமம்பலக்கூத்துளாற்கறைந்தாள். (சுo)

அடல்புரியாடல்செய்திளைத்துற்றவரிவைகேளன்பன்முன்னறமற்
றிடவிடப்பாகமீந்தவனேடேயேற்றனையேனுமெம்மிருதாள்
படவிடப்பூவாமிதயமிட்டேத்தப்பட்டதான்மகிழ்ந்தனம்பரிவால்
நடமிடிவ்வூரின்மலிவரம்பேன்றுநண்ணிநல்வல்லியானகுவாய். (சுக)

வல்லிதாண்மாருவல்லியாத்தில்லைக்காளியாய்ப்பலரும்வந்திப்ப
எல்லையுற்றியன்றதாமதப்பலியாலின்புபெற்றினிதுவாழ்கென்னுச்
சொல்லினனவளுஞ்சோர்வறக்களித்தாடொன்முனியறிதியாலென்ருன்
நல்லியன்முனிகாளென்றனன்சூதநன்முனியென்னுநன்னூலோன். (சுஉ)

சஎ-வது. தேவாதிதேவன்முன் சிவகாளிகளாடியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் - சஎ-க்கு திருவிருத்தம் கருoஎ.

——:(o):——

ஸ்ரீமதேராமாநுஜாயநமః.

சஅ - வது. நடராசருக்கருள்புரிந்தபடலம்.

———(o)———

அடராசகலத்தமலாதிபனை
இடராசகல்வானேத்தின்புடையோய்
கடராசனையாள்கனகாம்பரனன்
னடராசனையாணலமோதுவல்கேள். (க)

வேறு.

நண்ணுறுநான்மடமச்சம்பயிர்ப்பென்னுநான்ககலக்
கண்ணுதலோடிகலிநட்டங்காட்டினவடனக்கின்று
எண்ணுறுதிண்விலங்காப்பிட்டிருப்பநிலவரம்பினிலே
பண்ணுறுபண்ணவரீசன்பதமலரிற்பணிந்தசிவன். (உ)

கனகாம்பலத்தவிர்வான்கடவுள்புரியருணினைந்து
மனமாதிகரணமெல்லாமங்கலுறநெக்கொடிந்து
சனகாதியோகிகட்குந்தட்டானைத்தன்னிடஞ்சேர்
பனகாதிநித்தியருமுத்தர்களும்பரிந்துவப்பான். (ங)

எண்ணரியவபிநயங்களியற்றிமறைக்கினிதாநல்
பண்ணரியவியலோடும்பாடுபெறுநடத்தோடெம்
கண்ணபிரான்கருணையினைக்கலந்தபலகீதைகளை
விண்ணுருகமண்ணுருகவின்மலைவானவன்விளம்பும். (ச)

சீராருந்திருவைவலஞ்சேர்த்தவெழினிறம்வாழ்க
காராருந்திருமேனிக்கலன்பூத்தவெழில்வாழ்க
ஏராருந்திருமுகத்தினெழிற்கருணைவிழிவாழ்க
நாராருந்திருவுந்திநற்பதப்பூவெழில்வாழ்க. (ரு)

வாழ்கவணிமுடிகுளப்பூவாழ்கமறையருண்முகப்பூ
வாழ்கவருள்வழிவிழிப்பூவாழ்கவரநாற்கரப்பூ
வாழ்கவுலகளித்தழிப்பூவாழ்கவரநதியருட்பூ
வாழ்கவிழையாடைபலவாழ்கபரிசனமுதல. (௬)

நின்றில்லைவாழ்கமணிநின்கோயில்வாழ்கவைந்தாம்
மன்றென்றும்வாழ்கமலர்மாதென்றும்வாழ்ககுணக்
குன்றென்னுங்கோதகன்றோர்வாழ்கவட்டாக்கரப்படிசேர்
நன்றென்னுமூர்த்திகளுந்தீர்த்ததலங்களும்வாழ்க. (௭)

வேறு.

உள்ளாய்வெளியாயொளித்தவனாயோடுபுணர்ந்தேயோம்புவனாய்க்
கள்ளாய்மலராய்க்கரந்தவனாய்க்கல்லாயொளியாய்க்காணனாய்ப்
புள்ளாயதன்மேற்போவானாய்ப்போக்கும்வரத்தும்பொருந்தானாய்
எள்ளாய்நெய்யாயிருப்பானாயிலங்குபரனேயெனக்கருளே. (௮)

ஆவிக்காவியானவனாயவைகட்கெல்லாமீந்தவனாய்ப்
பாவிக்கொண்ணாப்பண்ணவனாய்ப்பாவைக்காடைபகர்ந்தவனாய்
நாவிற்கினிதாமிசையுள்ளனாய்நான்றானென்னற்கானவனாய்
ஏவிற்கனலாய்மூவெயில்களெரித்தாயெனையாண்டருள்புரியே. (௯)

எல்லாமிறந்தவிடத்தினனாயாவுமியலுந்திறத்தினனாய்ச்
சொல்லாய்நிதியாய்ச்சொலிப்பவனாய்ச்சுரனாய்நரனாய்விலங்கினனாய்
அல்லாய்ப்பகலாயாண்பெண்ணாயலியாய்வலியாயாகாவாய்
நெல்லாப்புல்லாயடியேற்குநினைப்பீந்தருள்வாய்நெடியோனே. (௧௦)

தண்ணார்கதிராய்வெண்கதிராய்த்தாவெண்பாலர்தாமாய்மீ
விண்ணாய்மோக்கமுளைத்தவனாய்மோகவிகாரமுசித்தவனாய்
எண்ணாப்பலதேவருமானாயானைவிளிக்கவேனென்றாய்
அண்ணாவென்னையகனாயடியேற்கொருவாக்கருளாயே. (௧௧)

அகரப்பொருளாய்மாவாக்கியத்தின்கதியாயாரணத்தின்
சிகரச்சீராயவையகலாச்சிலம்பினடியாய்ச்சிலம்பணுவில்
பகரப்பரமாய்ப்பரகாயப்பரப்பின்பரப்பாயதுபிறந்த
தகரற்றவிருங்குணகுணியாய்ச்சார்ந்தோயெனைச்சார்ந்தருள்புரியே. (௧௨)

மோனமுனிக்கணமோகனனேமுத்தியளித்திடுமுன்னவனே
ஞானவுயிர்க்கணநாயகனேநாதமிலாதநாமயனே
தீனவுயிர்க்குடல்செய்தவனேதிதிலுருப்பலகொண்டவனே
வானவருக்கமுதீந்தவனேவள்ளலெனக்கருள்தந்தருளே. (௧௩)

நித்தியநின்மலநிற்குணனேநிட்களசற்குணநீதியனே
சத்தியசம்பெனுஞ்சங்கரனேசாதகமற்றசதாசிவனே
சித்திகளெட்டுமளிப்பவனேசிபதியாகியசீமானே
பத்திவலைக்குளடைப்புவனேபாண்டவர்தூதவெனக்கருளே. (௧௪)

ஓபுவிநீளைகள்ஓமானேசின்மயமாகியநன்மையனே
கோபுவியோரடிகண்டவனேகோநதிதாளில்கொடுத்தவனே
பாபுவியுண்டுபெரந்தவனேபங்கயனேடெனையீந்தவனே
காபுவிதன்னிலிழிந்தவனேகாருணியப்பெருமானருளே. (கரு)

ஐந்தாம்பொறியாய்ப்புலமாகியாறுப்பூதமுதலாகி
நந்தாப்பகுதியினுள்ளாகிநாடாறுறுய்நாறுறுய்
அந்தாமத்தன்பானவனேயெல்லாமாயல்லாதவனே
சந்தார்மலிந்தசபாபதியாய்ச்சாட்சியிருந்தெனையாண்டவனே. (கசு)

மூக்குணமுள்ளுமுதற்குணனேமூலவிருட்குண்மூழ்காதவனே
திக்குலகாடல்செழித்தவனேதேசமெலாமிளிர்தேசிகனே
அக்குறுநற்சிலந்திக்கியையவாக்கியளித்தழியாண்டவனே
பக்கியெனப்பெருமாமறையைப்பண்ணியிவர்ந்தபராபரனே. (கஎ)

மச்சமதாய்மறைதந்தவனேமாமலையேந்திமகிழ்ந்தவனே
எச்சமில்பூமியெடுத்தவனேயாவுமிதித்துநிமிர்ந்தவனே
கொச்சையார்தம்முயிர்கொண்டவனேகோளரியாகிக்குலாவினனே
நச்சரவேறிநடித்தவனேநான்பணிகோலமெடுத்தவனே. (கஅ)

தேவர்களுதவெனைப்புரத்திசெம்மலர்க்கண்ணவெனைப்புரத்தி
மூவர்கண்முன்னவனேபுரத்திமுத்திமுகுந்தவெனைப்புரத்தி
நாவலர்நாவிலுளாய்புரத்திநாகணையோகணைவாய்புரத்தி
கோவலர்கோமகனேபுரத்திகோவிந்தகோவிந்தனேபுரத்தி. (கசு)

போற்றிநின்பொன்னடிப்பூமலர்க்குப்போற்றிநின்பொற்கலைப்பூணிடைக்குப்
போற்றிநின்னுந்தியாம்பூவினுக்குப்போற்றியெலாமுளபண்டினுக்குப்
போற்றியருண்மங்கைமார்பினுக்குப்போற்றியைந்தேதிப்புயங்களுக்குப்
போற்றியருட்கண்வாய்ப்போதுகட்குப்போற்றியெலாமருள்பொன்முடிக்கு. (௨௦)

என்றுமறைப்புயினற்றுதிகளெம்பிரான்முன்னரிசைத்தாடக்
கன்றுதலில்லாக்கருணைவள்ளல்கண்ணுதன்மீதுகனிவுபட
நன்றுவிளித்துமுடியசைத்துநற்கனிவாய்ச்சிறுமூரலிட்டு
வன்றுயரற்றிடவாய்ப்பவளவாய்மலர்விண்டுவகுத்தருள்வான். (௨க)

வேறு.

பொறிவாசற்படியடைத்துப்புலமாசைப்புறமகற்றி
நெறிவாசற்படிமனத்தைநிறுவிநில்வுறுமினிய
அறிவாசைப்படிக்கோயிலமைத்தெனையன்பருடன்
செறியாசைப்படிப்பலிசெய்சிவனேநீசெய்துதியால். (௨௨)

யாமுமகிழ்ந்தனமிவண்வாழ்யாருமகிழ்ந்தனருனது
காமநிகழ்ந்திடலுரைத்திகறைமிடற்றேயெனலுமவன்
சாமிநினதடிவாரஞ்சார்ந்துசதானந்தமுடன்
நேமிநினதருந்தில்லைநிருத்தமுடன்யானிருக்க. (௨௩)

தில்லைநகர்தனிஞளுந்தேவேயிக்கோலமுடன்
எல்லையறுகாலமெலாமெந்தாயேநீயிருக்க
அல்லையறவடியேனுன்னடிவாரத்தினினடிக்கச்
சொல்லையருள்கெனப்போற்றிச்சொன்னசிவன்றனக்கெம்மான். (உச)

அரனேயிச்சித்திரக்கூடப்பெருமாவம்பலத்தில்
பரனேயென்றிவணெழுநற்பாகவதந்தமைப்புரப்பான்
உரமேயீந்தவர்வேண்டுமொண்பொருள்களுதவிநின்றன்
வரமேயீந்திடவிருப்பல்வருந்தேலென்றினிதுரைத்தான். (உரு)

நன்ருட்டமிட்டதனுட்டார்நடேசனென
மன்ருட்டமாருமல்வாழ்தியெனவரமளித்தான்
பொன்ருட்டம்பிறப்பாட்டம்பொலியாட்டம்புலம்பாட்டம்
கன்ருட்டங்களியாட்டங்கண்ணோட்டங்கண்டருள்வான். (உசா)

நாரதனேயின்றுநடராசனெனநக்கபிரான்
பாரதன்மேனடித்திருத்தல்பரனிருத்தல்பார்த்திருத்தல்
நேரிலறிந்தனைகொலந்தநித்தியநின்மலநடத்தைப்
பாரினிற்கண்டவர்பிறவிப்பரவைதனைக்காணுரால். (உஎ)

என்றுபரன்முதற்குமரனின்னிசைநாரதமுனிக்கு
மன்றுநடமொதானுபங்கிநடவாதுரைத்தான்
இன்றுணர்திர்சௌநகமாமுனிவரரேயென்றுரைத்தான்
கன்றுபிறப்பிறப்பகற்றக்கற்றுவல்லசூதமுனி. (உஅ)

சஅ - வது. நடராசருக்கருள்புரிந்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம், சஅ - க்கு - திருவிருத்தம் - கருஙரு.

———(*)———

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

சகூ - வது. பிரமன்றிருவிழாப்புரிந்தபடலம்.

ஆதியற்றவேதவீட்டனாதிமுத்தசித்தனை
ஓதியுற்றகச்சபிக்குகந்தவட்குமைந்தனே
நீதியுற்றதில்லைநாதனர்ச்சையாய்நிலைத்தபின்
போதிலுற்றபிரமதேவனுச்சவஞ்செய்பொலிவுகேள். (க)

யானுஞ்சிவனுந்தேவர்கோனும்யாவுமானவீசனை
வானும்புவியுமுய்யுமாறுவாழ்த்தியேத்திவரதவித்
தானம்வாழுமர்ச்சையாய்த்தழைக்கவேண்டுமென்னலும்
கோனுமவ்வாருதுமென்றுகொண்டனனவ்வண்ணமே. (உ)

பத்தருக்குகந்தவண்ணமத்தனும்பரிந்தரோ
சுத்தரத்தினப்பொன்பீடமத்தியிற்சுராதிபர்
மொய்த்துநிற்பவாடல்கண்டமூர்த்திகோலமாகிமா
வைத்தமார்புதோள்களுன்குமுடியுமாகிமன்னினன். (டு)

சாட்டியாழிசங்கஞானமுத்திரைக்கைசார்வுறக்
காட்டிமுன்னரன்செய்கூத்துகண்டுநின்றகாட்சியாய்
ஒட்டுசோதிமணிப்பொன்மோலியோங்குபொன்னரங்கனுய்
நாட்டிலக்குமிப்பூநீளைமார்களோடுநண்ணினன். (சு)

எதிகளாகினர்க்குகக்குமெம்பிரான்மகாசபா
பதியதாயரற்கெடுத்துக்காட்டிநின்றபாதனுய்
விதிசெய்வேதபீடிகைக்கண்வீற்றிருக்கலாயினன்
நதிசெய்பாதப்பூண்பொன்னுடையாவுநந்துருமலே. (ரு)

வலயபாதகடகவாரகுழைகண்மணிமதாணிகள்
நிலையசோதிசுவணவாடையாதிபூண்கணிலவவே
அலையுநெஞ்சர்வந்தோரஞ்சலிச்செய்வார்களாகிலோ
உலையுமாசகன்றுகந்தவுறுகவென்னவோங்கினன். (சு)

ஆதிசேடன்வைநதேயன்சேனைமுதலியடியுளோர்
நீதிபரமனின்றவண்ணநியதியுள்ளவர்ச்சையாய்ச்
சோதிகிரணசாலமாப்பொன்பாழிதோறுந்துன்னினர்
போதில்வாழ்யானரன்மற்றோருங்கண்டுநின்றுபோற்றினேம். (எ)

ஆதிநாளில்யானிவ்வுலகமாக்கவேண்டியன்புடன்
ஓதுமாசங்கற்பநாமமுற்றகோவிந்தப்பெயர்
நாதனேயந்நாமதேவனுகியங்குநண்ணினுல்
வாதமேதக்கேத்திரத்தின்மான்மியம்வழங்கவே. (அ)

மூன்றெழுத்தினுமம்யாவர்முன்னினர்மொழிந்துளார்
ஈன்றபாவமற்றிறப்பிலாமலெண்ணிலாச்சுகம்
பூன்றுவார்களென்றுவேதபோகர்யாரும்புகலுவார்
சான்றுவேண்டினீரோழென்னுஞ்சாத்திரத்தைவாசியே. (கூ)

அந்தமற்றபரமனுக்கிவ்வரியநாமமமுதமென்
றிந்தமிருதியாவுமனிதர்தேவர்முதலோர்யாதொரு
சந்தமுந்துபூருவோத்தரத்தில்வினைகடந்திடல்
சுந்தரக்கோவிந்தவென்றுசொல்லவென்றுசொல்லின. (க0)

தட்டையிற்பொனுழிமாற்கோவிந்தனென்றுதாலியைக்
கட்டையிற்கோவிந்தனேகளேபரத்தைக்கட்டைமேல்
இட்டநாள்கோவிந்தனேயிவர்க்குமோக்கமீந்திடப்
பட்டநாள்செய்வினையினுங்கோவிந்தனேபணிப்பரால். (கக)

இன்னமந்திரத்தையக்கவேரமன்னிசைத்தரோ
முன்னமேழென்ஞேருதுரகிஞைமுத்திவைத்தனன்
மன்னுமந்தவாச்சியன்சரிதமன்ஞேமாசுகன்
பன்னிமுத்தியீந்ததந்தப்பாண்டுமைந்தன்மைந்தற்கே. (கஉ)

கட்டுவாங்கதன்பொல்லாதகத்திரிப்பேர்க்காதகன்
மட்டிலாதபேர்கண்முத்திமன்னிஞர்தன்மானமே
விட்டநாளிலரிவையர்க்குவேண்டுமாறுசெய்துதீப்
பட்டகானமுண்டுகொத்ததாக்கடுன்புபாறவே. (கங)

ஆதலாலிந்நாமமூப்பரானபெரியர்யாவரும்
காதலாலெக்காலுஞ்சொல்லிநல்லவின்புகண்டனர்
சாதலாதனீக்குநாமநாதனேயித்தலமதில்
போதலாலிம்மான்மியத்தையாவர்சொல்லும்புந்தியார். (கச)

வேறு.

இப்பெருமாட்சியியல்பினிலேற்றவீறிலிதில்லைக்கோவிந்தன்
அப்பெருமநந்தகொத்துடனமர்ந்தவழகியவருளுருவறிந்தே
தப்பருவேதமுறைப்படியைந்தாஞ்சாற்றினைத்தந்துயான்றவிரா
தொப்பறுபிரமோச்சவமெனதுவகைப்படியுஞற்றிடுதலுக்குற்றேன். (கரு)

நித்தியநைமித்தியத்தினுக்கேற்றகருவிகணிருமித்துநிமைப்பொன்
பொத்தியமணிவாகனமெலாமியற்றிப்பொருத்தினன்பொங்கொளிகொழிக்கும்
சித்திசெய்விமானமும்புலவியற்றிச்சேவித்தேன்சித்திரப்பட்டான்
மொத்துறுமுத்துப்பவளம்பொன்வெள்ளிப்பன்மணிச்சிவிகைகண்முடித்தேன். (கசு)

சிரத்தையாம்பத்திசெழித்துறச்செம்பொனிழைத்தமாணிக்கத்தோட்கினியான்
உரத்தபொற்கிரிகள்பின்னைமாமரங்களுயர்குடைசாமரஞ்சிவிறிப்
பரத்தினுக்கேற்றவாழிசங்கக்கோல்கேதனதோரணப்பகுப்பு
வரத்தினுக்கேற்றவெற்றிமால்சின்னவகையெலாந்தொகையுடன்வகுத்தேன். (கஎ)

மண்டபவகைசிம்மாசனவகைவந்துலவுறுசாலைகள்வகைநீர்
கொண்டுளவகைகோவிந்தனரிவருங்கொழியெரிகிரணப்பொன்மணிகள்
மண்டுமாப்பெரியசுதரிசன்ப்பேர்மன்னுமாவிரதமொன்றியற்றிக்
கண்டுசேவித்தென்கலியெலாங்கலங்கநின்றனன்காதலோய்பின்னும். (கஅ)

பன்மணியாலும்பாவைகளாலும்படர்சுடர்பட்டுவிதானப்
பொன்மணியாலுங்கேதனத்தாலும்பொலிநிறவூசலினுலும்
கன்மணியிழைமாப்பீடிகையாலுங்கவிகைகந்துகவகையாலும்
மன்மணிக்கலசவரிசைகளாலும்வானுலாந்தடந்திண்டேர்வகுத்தேன். (ககூ)

சேபதிதிருவிழாவினுக்கேற்றதிண்வைரப்பொன்மாமரங்கள்
கோபதிக்கேற்றவிருதுகண்மிலைந்தகொடிகண்மாக்கயிறுகண்மாமேல்
தாபதிமுரசவரிசைகண்மேலாஞ்சாலைகண்மிகுகுளிர்ப்பந்தர்
பூபதிபுரமாஞ்சித்திரக்கூடப்புண்ணியநகரினைப்புனைந்தேன். (உ௦)

உட்புறநகர்கண்மறுகுகண்மலிந்தவாவணக்குளங்கண்மற்றுள்ள
கட்பரந்துள்ளவிடமெலாமணப்பூக்கட்டியகாவணக்கொள்ளைப்
பெட்புளகதலிமாப்பலாவாழைகமுகினும்பசுந்தழைபிறங்க
இட்டுளகமழ்பூங்கோலநல்வேரிவீசுறுநீர்தெளியேற்றம். (௨௧)

ஆரணக்குழுக்களனைத்துமோமென்றேயருள்புரிபரனுக்கேயடுக்கும்
பூரணகும்பஞ்சாமரமுரசந்தோட்டிகண்ணாடிமீப்பொலியும்
சீரணக்கொடிமாவிணைக்கயல்விளக்கென்செப்பிடுமெட்டுமங்கலங்கள்
தோரணவீதியெங்கணுஞ்சிறப்பச்செய்துசித்திரம்புனைந்திட்டேன். (௨௨)

ஆயநம்பரமன்றிருவிழாக்கேற்பச்செல்வமார்தில்லைமாநகரம்
ஆயதைநோக்கியகமகிழ்யானுமமரர்கோன்மைந்தர்களடுப்ப
நேயமாவொழுக்கநெறியுடனீராட்டம்புரிந்தாறிரண்டென்னும்
மாயனூரூர்த்துவக்குறிசாத்திவண்டுளவாதிகள்பூண்டு (௨௩)

எம்பிரான்றிருமுன்மரமெனவீழ்ந்தேயெழுந்துநின்றெம்பெருமானே
உம்பராதியர்களுடனடியேனன்றுய்ந்திடவியற்றுநின்சாற்றைத்
தம்பிரானீகண்டருளிடவேண்டுந்தயைபுரிகென்றுயானிரப்ப
அம்பராதிபனவ்வாறுகந்தான்போலகங்கொடுவாற்றிடற்கமைந்தேன். (௨௪)

பங்குனிமதிபொன்னுளுவாவுத்திரத்தினிற்பாற்கடலொருவி
எங்கடநாதனிங்கெழுந்தருளியிலங்கலாலந்தமீனத்தில்
தங்குறுமச்சுவினிதனின்மகோச்சவஞ்செயவடியெடுத்தினிதில்
துங்கமாம்விச்சுவப்பெருமானைச்சேவித்துச்செய்விடைகொண்டேன். (௨௫)

சுத்தமாஞ்சுவேததீவினர்சனகனுதியர்சோதிசேர்மூத்த
வித்தகரோடுமௌவளாய்மோதமூழ்கிநல்வாச்சியமுழக்கம்
மொய்த்திடச்சேனைமுதலிமுன்னிலையின்மூப்பர்கண்மொழிப்படிமுதலோன்
மெய்த்திடுமெண்ணுமணமுங்கொண்டுகேந்தேன்மெய்த்தவவீணைமாமுனியே. (௨௬)

மிருத்துசங்கிரகணம்பணியாகசாலையிற்புகுந்துமேம்பொருளாங்
கருத்தனைவீற்றிருந்திடப்பணிந்துகண்டுசங்கற்பனைகழறி
விருத்திசெய்வாத்துசாந்திசெய்கருமவினையெலாமியற்றிப்பின்விளையும்
குருத்துளவங்குரார்ப்பணக்காப்புக்கொழும்புகையோமமேமுதல. (௨௭)

செய்வனசெய்துதேவிகளோடேசெம்பொன்விமானமேலெம்மான்
ஐவனத்தோடுங்கண்டுநான்பிறந்தரோகணியாகியநாளில்
வைதிடுமசுரராக்கதக்கொடும்பாட்டண்டமாவலகைகண்மாய்
உய்ந்திடுந்தேவனடியவருய்யவுயர்த்தினன்கொடிமரமுரவோய். (௨௮)

மந்திரமறிந்தவாரியரோடுமகிழ்ந்துசாரோகணமாற்றி
இந்திரைமகிழ்நனேவலின்படிநற்பலிகளையெண்டிசைக்கீந்தேம்
சந்திரமௌலிசசிபதிமுதலோருடன்மிகுசுரர்கணநெருங்கித்
தங்குறுங்கதிகட்குரியபுத்தேளிர்தங்கடமேவல்கடரவே. (௨௯)

பெருந்துயர்மாயும்படிக்கும்பேயாதிபகையெலாம்பேதுறும்படிக்கும்
அரும்பெரும்பேரிதாட்டனம்புரிந்தேமமலனையமலையையழகாம்
திருமலர்ச்சிவிகைமீதினிலெழுந்துசேவைதந்தருளிடச்செய்து
ஒருபெருநகரமுலவிவந்தியங்கண்மொய்த்துறவூர்ந்துடன்மகிழ்ந்தேம். (௫௦)

பூமலர்த்தொடைகளாலும்வண்சாந்துபொருந்துறுதேவநன்மணமாங்
காமலர்த்தொடைகளாலும்பூணிழையின்கணங்களினாலுமத்தேவக்
கோமலர்த்தொடைமாக்கணிகைகளாலுங்கொழியிசையமுதுறழ்கீதப்
பாமலர்த்தொடைகளாலுங்கந்தருவர்பயிலிசையாலுமேபரந்த. (௫௧)

ஆதியாம்பாந்தளாரணப்புட்டேவானைகற்பகவிருக்கம்மே
சோதியாளென்றதம்பியம்பரமாச்சுடர்தனைதமங்களகிரிப்பொன்
கோதிலாச்சிவிகைகொழிகிரணக்கற்கொள்ளைவிமானந்தோட்கினியான்
காதிலாவினியமணிதிணிவாகனங்கண்மேற்கண்ணனுரிவர்ந்தார். (௫௨)

பகலிராவெஞ்சாதொவ்வொருபடிவக்கோலங்கள்பரமனுர்காட்ட
நகரமெங்கணுஞ்சென்றங்கங்குத்தேவர்நடத்துபசாரங்களேற்றப்
பகர்மறுக்கெங்குங்கீதநாடகங்கள்பத்தர்களுடன்கண்டுபரிவால்
தகவொங்குமின்றிப்பகல்விளக்கெரிப்பத்தகர்வெடிகொடுவுலாவந்தான். (௫௩)

வேதநல்லோதைவீணையாதிகளாமெல்லியவோதைமேனகையாம்
மாதவரோதைமாதவரோதைவானவர்கீர்த்தனவோதை
சாதுசங்கங்களெம்பிரான்குணவிக்கிரகங்கடருமமதுண்டே
ஓதுறுமோதைசங்கவாச்சியத்திரளோதையேயெங்கணுமோங்கும். (௫௪)

பலசுவையமுதமுதலியவளித்துப்பரன்றிருநாள்வருமவர்க்கு
நலசுவைமுகமனிட்டுச்சேவித்துநடிப்பவர்நக்கனையாட்டும்
வலமுளதலபுராணங்கேட்டுவக்குமதிஞர்கள்வலம்படச்சூழ்ந்து
பலமுதலளித்துப்பணிபவர்கோட்டிபகுப்பவரெங்கணுமாதோ. (௫௫)

இவ்வகையாறுநாட்பகனடத்தியேழெனுமல்கலிலினிதாம்
செவ்வியவசந்தஞ்செய்தெட்டாந்திவசஞ்சேர்ந்திடுமெபிசித்தாமோரை
வவ்வியஞானசனகசனதிமறைமுனிக்கணத்துடனமரர்
திவ்வியசாமவோதைகளோடுஞ்சித்திரக்கூடநேர்வடக்கில். (௫௬)

சென்றிடுவெள்ளாற்றின்வடகரையிற்சென்றுநல்விபவங்களுடனே
துன்றிடுபிருகத்கற்பிணமென்னுஞ்சிறந்தபேருளதிருநகரில்
நன்றுளபிருகுமாமுனிவரனாச்சிரமத்தினுமெலாஞ்சுகத்தில்
நின்றிடும்பொருட்டாங்குதித்தருளருட்டேவியர்தமைதிருமலப்பெருமான். (௫௭)

கடிமணம்புரிவித்தாங்குசெய்தானதருமங்கள்விதிப்படிநடத்தி
முடிவறுதேவநாதமாமலர்கண்முழங்கிடப்பெய்திடமுரசம்
கொடிவறவகிலமங்களக்குழுக்கணூங்குறத்தெருவலஞ்சூழ்ந்து
மடியறக்கோயின்மன்னிடப்புரிந்தேன்மகதியாழ்பயின்முனிவரனே. (௫௮)

நடப்பநிற்பனயாம்யாவருஞ்சுகவானந்தமேமூழ்குறநாதன்
தொடப்படாவேதஞ்சொல்லியவருட்டாயெனும்பிராட்டியர்தமைத்தூயன்
வடப்படுதடந்தோண்மணந்தொன்பானுளின்மாப்பெருந்தேர்மிசையூசல்
இடப்படவதன்மேலிவர்ந்துவீற்றிருந்தானெம்பிராட்டியருடனெம்மான். (௩௯)

அண்டர்கடேவிமார்கள்கந்தரத்திலமர்ந்தவர்பலியுகந்தவர்கள்
கண்டிடுகேணவர்கர்லன்கொளாமற்காத்தவர்களிகொளவருள்செய்
புண்டரீகப்பேர்வல்லியரோடும்புண்டரீகக்கண்மாப்புனிதன்
மண்டிடுமெகிலவளத்துடன்பவனிவந்தனனென்பதாம்வைகல். (௪௦)

சுரும்புடன்விரிந்தமலர்த்தொடைமுடித்ததோகையாண்டகையர்சூழ்மறுகில்
பெரும்பொருளானபேரருளாளன்பிறங்கிடத்திருச்சினம்பேச
அரும்பொருட்கேற்பவவரவரியற்றுமற்புதப்பூசைகளேன்று
திரும்பறுஞ்சுகமன்னவர்க்கெலாமளித்துத்திருவுடன்சினகரம்புகுந்தான். (௪௧)

பத்தருக்கெளியபரமனுக்குகப்பாம்பணியெலாமியன்றவாறியற்றி
முத்தர்முன்னவற்குத்திருவந்திக்காப்புமுதலியமுறைமுற்றுஞ்சுழற்றி
அத்தற்குமடிசேரன்பர்க்கும்பாரித்தாக்குமோகரைகளையமைத்தென்
கத்தகண்டருளாயென்றுகைகாட்டிக்கதிரொழுபத்தெனுமளவை. (௪௨)

உத்திரப்பௌவங்கூடியகாலத்துயர்மணிச்சிவிகைமேலுயர்பூம்
சத்திகளாகிச்சமைந்துளசீபூவெனுந்திருமார்களோடன்பர்
கத்தனையேற்றிக்கனிந்தியங்கலிப்பக்கடிநகர்களிகொளக்ககனர்
சத்தமாதவர்மாச்சித்தர்பூசுரர்கண்முதலினர்சாமமேசாற்ற. (௪௩)

உத்தமமான்புண்டரீகப்பேர்ச்சரசினிலோங்குமோங்கார
வத்தெனுங்கோவிந்தப்பெருமானைமங்கையர்தங்களைமகிழ்வோ
டத்தினத்தேயாங்கவபிருதத்தாமாடலைப்புரிந்திடவாக்கி
நத்துமப்பரமன்பத்தினிமார்களாடியநற்கயமதனில். (௪௪)

யானுமென்சுதரும்பத்தினிமாரும்யாருந்தங்களத்திரமாரோ
டானும்பாருனும்போனிறைபெருமானன்பபிதானமிட்டாடிக்
கோனடிகுறுகிக்கொடுத்தடிபணிந்துகுறையகறீர்த்தமேற்றுசி
லானடிசிரமேநாட்டவேற்றவன்கண்டருளியயாவுமுண்டார்த்தோம். (௪௫)

ஆறுநான்கானவாசரந்தீர்த்தமருளியவன்னையைப்பரனை
நீறுளோற்காகநிலவியகோலநிமலனைநீண்டவெந்தாமம்
ஊறுளோர்க்கொருவவுயர்மணிப்பொன்னம்பலத்தினிலொளிவிடுகிரண
மாறுளதிருமஞ்சனமகாமண்டபத்தினிலமைத்தனன்மாதோ. (௪௬)

அன்புடனுலகிலமைந்துளகங்கையாதியாங்கடவுணீரனைத்தும்
இன்புடன்கொணர்வித்தருமணங்கமழ்விறைவனுக்கன்னையர்க்காட்டி
என்புடனுருகயான்முதலோருமிலகிடுபுருடசீருக்தம்
மன்படவோதிவாழ்த்திடவாச்சியம்மெலாம்வழங்கிடவாக்கி. (௪௭)

நான்மறையைந்தாகமப்படி திருவாராதனமுற்றுநடாத்தி
வான்மறைமுனிவரோடியான்சடாரிமுதலியவான்பொருள்வாங்கி
ஆன்மறைசுவைதபோலாயினன்றிருமுனமவரோகணக்கிரிகை
ஈன்மறைக்கேற்பவியற்றியங்கிருப்போரியனகரோகிடவிசைத்து. (சஅ)

எம்பிரான்றிருவிழாக்குவந்தவரையேகிடவருள்புரிபின்னர்
உம்பர்தாவிடுபொன்கோயிலிற்பெயர்ந்தேயிருந்துகந்தோங்குளவன்பர்
தம்பெருங்குறைகடவிர்த்தவர்வேண்டுந்தரமெலாமுதவியைந்தான
ஐம்பெரும்பருவச்சாற்றினைக்கண்டேயருள்புரிகாளில்யாளொருநாள். (சகூ)

ஒப்பறுசேர்த்திதன்னிற்சேவிப்பாலுற்றவென்றவமதையுன்னி
அப்பனைப்பணிந்தேயமைமனச்சேட்டையற்றகையஞ்சலித்தவனைத்
தப்பறுநாவாய்தந்தைதயவன்பாற்றரவெணித்தாழ்வுறுதுதிகள்
செப்பிடலானேன்றேவனைநாளுஞ்செந்தமிழிசையினற்புகழ்வோய். (ருo)

வேறு.

தேவர்நாயகமாதவர்நாயகசித்தர்களுயகதிகழும்
மூவர்நாயகமுனிவர்களுயகமுத்திநாயகதில்லை
மேவுநாயகமேன்மறைநாயகமேதினிமேற்கீழ்வான்
தாவுநாயகதாரகநாயகதமியனுயகபோற்றி. (ருக)

மூப்பிலாமுதன்முன்னும்பின்னறுமுதன்முடிவறுமெய்ஞ்ஞானக்
காப்பிலாமுதல்காரணமறுமுதல்கடையறுசுகங்காலம்
ஆப்பிலாமுதலாக்கையிலாமுதலருவமற்றொளிருமுதல்
நீப்பிலாமுதனினைவினிலவிர்முதனின்னடிகளைப்போற்றி. (ருஉ)

உலகம்யாவுமுண்டாலிலையமர்பரனேங்குமாவுயிருள்ளாய்
இலகுமாபரனிருவினைநெறிகளிலியக்கிடும்பரனவருக்
கலகிலாவருளருள்பரனவர்பிழையனைத்துங்கண்டன்போடு
பலகம்மாதியீந்தோடதிமுலமாப்பார்த்தருள்பரன்போற்றி. (ருங)

சகலசாதிகடேவனெவ்வுயிருளுந்தழைமலரவடேவன்
அகிலமந்திரதேவனெம்மறைகட்குமழகியபெருந்தேவன்
பகலிராவெனுந்தேவனிவ்விரண்டிலாப்பாரினிலவிர்தேவன்
நிகிலரூபனுந்தேவன்முன்பின்னடுநீங்கிடுநினைப்போற்றி. (ருச)

நாமமற்றவன்கோத்திரமற்றவனந்துருவறுதீய
காமமற்றவன்றாய்பிதாவற்றவன்காலமற்றவனொருவர்
சேமமற்றவன்பிறப்பிறப்பற்றவனீக்கமற்றிலங்கிடுமோர்
தாமமற்றவன்றனிப்பரமுற்றவன்றுமனைத்தாள்போற்றி. (ருரு)

முற்றுமோர்ந்துறுஞானியாயாவுமாய்முக்குணங்களைக்கடந்த
பற்றிலாதவெம்பகுதியின்மிகுதியாய்ப்பகருமாண்பெண்ணலியை
அற்றமாப்பெரும்புருடனைச்சுத்தனயகண்டபூரணமாகித்
துற்றுவீங்கியதுளக்கமில்சோதியாய்த்துலங்குநின்றுள்போற்றி. (ருசு)

அன்னையாதிசுற்றங்களாயெனக்குளவனைத்துமாயருளெந்தாய்
உன்னையானொருநாளும்விட்டகல்கில்லாவுறுதியுமுனைப்போற்ற
இன்றுசெய்தசாற்றினிலுறுபிழையையுமொருவியீங்குறுவார்க்கு
நன்றுசெய்துறுபகலுமிங்குறுவரநன்றருளெனப்போற்றி. (ருஎ)

வாழ்த்தியெண்ணியவண்ணமெலாமடைந்தின்றும்வாழ்வுற்றனன்காண்
தாழ்த்தியற்றவத்தனிமுதற்பதமதிற்றழைநலத்தவமுனியே
பாழ்த்தியற்றிடப்பரிந்துகேளெனவிதிபகர்ந்தனன்கேண்மினெனுச்
சூழ்த்தியுற்றருந்தவம்புரிமுனிகட்குச்சொல்லினன்சூதமுனி. (ருஅ)

சா௯ - வது· பிரமன்றிருவிழாப்புரிந்தபடலம் முற்றிற்று·

ஆகபடலம், ௬௧ - க்கு திருவிருத்தம் கடுகரு.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ருo-வது. சிவன்றிருவிழாப்புரிபடலம்.

எவன்கொலெப்பொருளுள்ளுமாயல்லனுமிருப்பான்
எவன்கொலிப்புவனங்களுக்கதிகனென்றிருப்பான்
அவன்றிருப்பதமேத்துமன்புடையவென்மைந்த
சிவன்றிருப்பரன்றிருவிழாவுஞற்றியசெயல்கேள். (க)

அகரவாச்சியப்பொருளென்யாவருமறிந்த
தகரவிச்சையன்றயவுந்தருள்புரிசாற்றைப்
பகருமாகமப்படிப்புரிந்தோவரும்பலத்தை
நிகரிலாதயானடைந்துளதறிந்தநீன்மிடற்றன். (உ)

நெட்டெடற்கரும்பாம்புஞ்செஞ்சடையும்வெண்ணிலவும்
கட்டியாடெடுத்தாடுதோலுரிகறைக்கண்டன்
நட்டமிட்டெமானருள்கொடுதிருவிழாநடத்தப்
பட்டனன்வஞ்செழித்தலர்படும்வசந்தத்தே. (ங)

மேடமாமதிதன்னிலேசுத்தமாய்விளங்கக்
கூடுசத்தமிதன்னிலேபிறந்தவள்கோதில்
பாடுமாதிரைதன்னிலேபரமனைமலரா
வீடுளாளெனும்விமலையைப்பணிந்தவேட்கையனாய். (ச)

மணிமயத்திருமண்டபத்தினில்வரவருவித்
தணியுமாதரத்தோடபிடேகமேயாற்றிக்
கணிவில்பொற்கலைமணியிழைமுதலகண்டருள்
அணிவித்தாடினனம்பலக்கூத்துளவரனே. (ரு)

தூபமேந்தினன்சுழற்றினன்றளவுடன்றூக்கும்
தீபமேந்தினன்றிருவடிதிருமுடிசெறிந்தத்
தாபநீங்கிடுமேனியினழகெலாந்தாழாப்
பாபமாறிடப்பரவினன்குறைவினைப்பட்டான். (௬)

என்னைமுன்னிலையாக்கிமாமறையவரோடும்
அன்னைமார்களோடப்பனையொப்பனையாக்கிக்
கன்னல்பாகுதேன்கண்டுபாலனமுதல்காட்டி
மன்னுமன்பருக்கருத்திமிச்சிலையெலாம்வரித்தான். (௭)

சித்திரப்பதம்பயசுபாளிதங்கனித்திரள்கள்
உச்சிதப்பலபக்கியமுதலவுண்பித்தான்
மச்சுநீங்கியமணிக்கதிர்மௌலிகுண்டலம்பொன்
வைச்சவாரகேயூரவண்சரணிழைவனைந்தான். (௮)

யாணர்பொன்கலையாவுமெம்மீசனுக்கினிய
ஆணர்செய்யெமதன்னையர்முதலினர்க்கணிவித்
தூணர்போற்றுருவொருமுதலுச்சவந்தொடங்கிப்
பாணர்பாடவாரோகணமுறையெலாம்பயின்றான். (௯)

சுரமுனிக்கணம்வேதியரோடுநற்சுபமாம்
பரமனுக்குகப்பாகுபாலிகையெடுத்தனந்தன்
கருடவிக்குவசேனைவான்கடவுள்கண்களிப்ப
மருளகற்றிருபோதுமூர்வலம்வரவைத்தான். (௰)

காலைமாலையுஞ்செய்விபவங்களைக்கண்டோர்
நூலையோதுதாமரையுளனும்மிதினுங்குச்
சாலையுச்சவஞ்சமைத்திலனெனமிகுமார்ப்பு
வேலைவென்றிடமறைமுரசாற்றிடவிளைத்தான். (௰௧)

பேரிசங்ககாளமுதற்பேசிடப்பெரிதும்
மாரிபூமழைமல்கிடக்கீதநாட்டியங்கள்
சாரிசெய்திடவாகனவகையெலாந்தழங்க
நாரிபாகனும்பிரமதகணங்களுநடிக்க. (௰௨)

தனதுசன்மநட்சத்திரமென்றிடத்தகுந்த
மனதுகந்திடுமாதிரைக்கொன்பதாவருக்கும்
கனமிருந்திடுசித்திரைப்பௌரணைகலந்த
தினமிருந்திடுபொற்சிகைமணிதிணிதேர்மேல். (௰௩)

ஒன்பதாந்தினத்துச்சிதவோரையிலுலகை
அன்பதாகியாண்டருள்புரியமலனையலர்மேல்
இன்பதாகிவீற்றிருப்பவடனையிடத்தவளைத்
துன்புநீங்கிடத்துவக்குவித்தணியெலாம்புரிந்தான். (௰௪)

நகரிமாரதமீதினில்வலம்வரநடாத்திப்
புகரிலானைகதுகமிரவண்மிசைப்பொலியும்
நிகரிலாமுரசதிர்வெடிகொடிபடைநிலவும்
மகரதோரணாதிகளுளவிருதெலாமலிய. (௧௫)

சங்கநாதமாவேதகீதங்களுஞ்சால
எங்குமாகிடவியல்பரம்பரொலாமினிது
பொங்குசாற்றினிலுடல்பரவசமுறப்போற்றி
அங்குவந்தவர்க்ககங்குளிருறவெலாமளித்தான். (௧௬)

தேவரூதிடுமோதிருச்சின்னநந்திருவின்
கோவெழுந்தனன்கோதறுமுயிர்களுக்கினிதன்
பாவெழுந்தனன்பரம்பொருளெழுந்தனன்பகரிப்
பூவெழுந்தனன்புனிதர்காள்பணிமினோவென்றான். (௧௭)

ஆலமுண்டவற்கருள்பரம்பொருளிதோவடுத்தான்
சூலம்வேண்டினானசியேன்றளித்தவன்சூழ்ந்தான்
வேலைவேண்டியவேட்களிமேலவனெழுந்தான்
மாலைவேண்டுமார்க்கண்டனையாண்டவன்வந்தான். (௧௮)

சுத்தசத்துவசுயம்பரியெனும்பரனெழுந்தான்
நத்துமாவிகணாதநாராயணனெழுந்தான்
சத்துசித்தசித்தாகுசதாசிவனெழுந்தான்
கத்தனாகிடுகனகவம்பலப்பிரானெழுந்தான். (௧௯)

வாணிவந்திடுவாக்கினன்வந்தனனயற்குக்
காணிதந்தவன்வந்தனன்கண்ணுதறனக்குப்
பாணிவெண்மலைதந்தவன்வந்தனன்பத்தர்
தோணியாயவர்பவந்தொலைதோமிலானெழுந்தான். (௨௦)

கண்ணுவன்பதஞ்சலிகவேரன்புண்டரீகன்
விண்ணுளார்பிரான்முதலினர்க்கருளினன்விரைந்தான்
பண்ணுளார்பகரரங்கன்வேங்கடத்தவன்படர்ந்தான்
விண்ணுளார்புகழ்வீரராகவனிதோவெழுந்தான். (௨௧)

காளிநாணிடக்காறளையிட்டவனெழுந்தான்
தாளெடுத்திவ்வாறுடைஞ்சாற்றினனெழுந்தான்
மீளிமுப்புரவியனரற்கீந்தவன்மிளிர்ந்தான்
ஆளிமொய்ம்புளவாரணப்புண்மீதோனவிர்ந்தான. (௨௨)

தீக்கணார்க்கருடில்லைக்கோவிந்தனீண்டெழுந்தான்
ஆக்கிப்போக்கிவீடளித்தருளப்பனீண்டெழுந்தான்
காக்குங்கார்நிறக்கண்ணபிரானிங்ஙனெழுந்தான்
நீக்கமற்றெலாமாய்நிறைதிருமாலனெழுந்தான், (௨௩)

என்றுநாற்றிசையெங்கணுந்திருச்சினமியம்ப
நன்றுநக்கனுநானுங்கையாத்துமுன்னடக்க
நின்றுவானவர்கோன்முதலெண்மருநீண்டு
கன்றிலாதவேத்திரங்கொடுகட்டியங்கழற. (உ௪)

தேவர்மாதவர்செயசெயவெனவவர்மாதர்
யாவருங்களிகொண்டுமெங்கலவியலாற்றப்
பாவராகதாளங்கண்மேநகைமுதற்பலரும்
சிவகாருணியப்பிரான்முன்புரிந்திவர. (உ௫)

பத்தர்முத்தர்பல்லாண்டுபல்லாண்டெனப்பகர
அத்தனன்றெனுமவுணர்பொறுமையினவியச்
சத்தமாதவர்சரதமாம்பொருளிதோசார்ந்தான்
கத்துகாரணனறிகிலீர்காண்மினோவென்ன. (உ௬)

அண்டர்யாவருமண்மினோவகண்டமண்ணனைத்தும்
உண்டமாமுதலுலவுதல்காண்மினோவென்றார்
கண்டசித்தர்கள்ககனர்கள்யாவருங்களித்தார்
புண்டரீகையின்புருடனைக்கண்டுமெய்பூத்தார். (உ௭)

எட்டொன்றுந்தினமிரதவுச்சவத்தினையீசன்
கட்டொழுதபேராசைநற்பத்தியாற்கமலை
இட்டநாயகர்க்கிலக்குமிக்கினியமுத்தருக்கும்
மட்டொழுதபேரின்புறநடத்தியேமகிழ்ந்தான். (உ௮)

மானமாமறையவரைமாத்தேவரைப்பூசித்
தீனமற்றளவறுபலமெய்திடற்கேற்பக்
கானமாவவபிருதமாத்தானத்திற்களித்துத்
தானமுய்த்தெமான்றனக்கியன்முறையெலாஞ்சமைத்தான். (உ௯)

புண்ணியப்புனற்புண்டரீகப்பெருஞ்சரசில்
அண்ணியானரன்சுரர்பதிமுதலினோராடி
நண்ணிலாப்பலனண்ணியேநடத்திடுநாட்கு
எண்ணிலாவவரோகணச்சடங்கையுமியற்றி. (௩0)

பத்தெனுந்தினமதனிலேபரமனைப்பரையைச்
சுத்தமாணிக்கச்சுவணமண்டபமதிற்சுகிப்பான்
வைத்தோர்மாமணிப்பீடமேன்மணப்பொனீராட்டி
நத்துமாடைபூண்டொடைமுதலணிவித்தானக்கன். (௩௧)

வாசமார்புகைகாட்டுபுகவின்பலவிதமாம்
தேசுலாந்துளவிடுநெடுந்தீவமேகோட்டிக்
காசுலாம்பலபுதியபொற்கலன்களைக்காட்டி
நேசமாங்கனியோகனையுணவெலாநீட்டி. (௩௨)

காட்டியாண்டருள்கண்ணணீகண்டருளென்றே
யூட்டியோதுபசாரமென்னுள்வவையுஞற்றி
நாட்டியந்தனைநடத்தியென்பிழையெலாநாடேல்
ஈட்டுமாவியுளாவியாமிறைவனேயென்றான். (௩௩)

மீட்டுமேவலம்வந்துதாண்மலர்படவீழ்ந்தான்
நீட்டும்பாணிநீண்முடிகுவித்தவர்விழிநீரா
யோட்டுமாறுநெக்குடைந்துளமெழுகெனவுருகி
ஆட்டுவானடிமுடியழகமுதினையார்ந்தான். (௩௪)

வேறு.

கமலைக்கிறைவனெமக்கிறைவன்கமலயோனிதனக்கிறைவன்
அமலைக்கிறைவன்கோபதியாமவனுக்கிறைவனம்பலத்தெம்
நிமலவுருவாநெடுவடிவாநின்றமான்றநிகிலமெலாம்
முமலவுருவின்முளைத்திருப்பமுன்னுமுகிலேமுகிற்கொழுந்தே. (௩௫)

நீயேநாநாவாய்நிகழுநிலைமைபுரிவாய்நீயவற்றில்
நீயேநிலையாய்நீபிரியினிலைப்பதிலையாய்நிற்கின்றாய்
நாயேனினதுநிலையறியேனானேநீயேயெனவுரைப்பேன்
நாயேனாரோநீயாரோநான்காணரியாய்போற்றியென்றான். (௩௬)

எல்லாநீயேயெனவுரைப்பாரொதுவுநின்பாலிலையென்பார்
கல்லார்கற்றாரொல்லாருங்கருணைக்கடலேகருத்தறியேன்
வல்லானீயேமற்றுமுணர்வரதனீயேமாயையின்பால்
அல்லானீயேயறிந்திருத்தியத்தாநின்றாளகலேனால். (௩௭)

ஆதியகன்றவடிவானாயந்தமகன்றமுடிவானாய்
சோதியகன்றசுடரானாய்சொல்லாதுயர்ந்தபொருளானாய்
பாதியகன்றமுழுதானாய்பத்தியகன்றவித்தானாய்
நீதியகன்றநெறியானாய்நினைப்பிலடங்காநின்மலனே. (௩௮)

நினைவிலடங்காநின்மலனேநெறிகட்கடங்காநெடியவனே
நனவிலடங்காநாரணனேநானற்றார்க்குநாயகனே
கனவொன்றில்லாக்காரணனேகதிர்மூன்றாநற்கண்ணவனே
மனமொன்றுகிலாவவத்தையெலாமரித்தோய்நின்றாள்போற்றியரோ (௩௯)

கோசக்குறியொன்றில்லானேகுணவைம்பூதங்குலவானே
நேசப்பிரியமற்றானேநிகிலவிடயநீத்தானே
பாசப்பகுதிப்பாரானேபார்த்தெல்லாமும்படைத்தானே
நாசப்பகுதிநலிந்தானேநானெந்நாளுநாடானே. (௪௦)

யாவுமிறந்தவிடத்தவனேயாவுமிருந்தவிடத்தவனே
யாவுமாகியல்லானேயாவுமுடற்குளாவானே
ஆவும்பயமுமானானேயதனுட்சுவையாயமர்ந்தானே
வாவுங்கானீர்தீவானாய்மண்ணாய்நின்றாய்மதியானாய். (௪௧)

என்னைப்படைத்தாயென்னுள்ளேயிருந்தேயழித்தாயெனையுடற்றும்
மின்னைப்பழித்தாய்நின்னோடுமென்னையிணைத்தாய்மேதையற்றோர்
உன்னைச்சமமாயுரைக்கவைத்தாயோகோவுன்றன்மாயவித்தை
தன்னைத்தெரிவார்யாவர்கொனின்றாள்கட்கடியேன்றாசனென்றான். (௪௨)

பிரமன்படைத்தானென்றுரைக்கும்பிச்சேயலதுபிரமனைமுன்
வரமன்படைத்ததெவர்பகுதிமானாங்காரவருக்கமெலாம்
தரமுன்படைத்ததிறமுளன்யார்சார்ந்தமூலவிருண்மூடத்
திருந்தபசுக்கட்குளபாசவிலக்கமறிந்தியீசுரனார். (௪௩)

அரனாமெனதண்டங்களையாரழிப்பாரதனுக்கப்புறத்தில்
பிரமனண்டம்பிளப்பவரார்பேணும்புனறீக்கால்வானம்
உரமனாங்காரம்பகுதியண்டமொடுக்குமுரவோன்யார்
தெரியாதகிலஞ்செகுப்பவன்யானென்றேயிசைக்குந்தேவனெவன். (௪௪)

உன்றன்பொறுமையெனுந்தேவியுயிரைச்சுமந்துண்வகையளித்து
நின்றன்கருணைக்கிலக்காகநினைந்தெங்களையாண்டருள்புரிவாள்
உன்றன்றயையாமொருதேவியோங்குணிறத்தையொருவாமல்
நின்றெங்குறைகணிகழ்த்தாமனித்தசுகத்தைநினைந்தீவாள். (௪௫)

கயிலையெடுத்தான்றலைகுமைத்தாய்கட்வுணனேயென்றவனை
அயிலைநிகர்த்தவுகிராலேயழித்தாயெனைத்தன்றாணைவழி
எயிலைக்கடிகொண்டிருக்கவைத்தானீரைஞ்ஞூறுகரமறுத்தாய்
வெயிலைக்கரப்பவிடுஞ்சுடர்ப்பொன்னாழிவேந்தேபோற்றியென்றான். (௪௬)

கண்டாகன்னன்றனக்கொருவர்காணாமுத்திகொடுத்தவன்யார்
பண்டாங்கடல்வாய்மண்டலத்தைப்பரிந்திங்கிருத்திப்பார்த்தவன்யார்
அண்டாதிபற்குமறைகடந்தேயாக்குநெறியையருளினன்யார்
உண்டாமுலகையொடுக்கிவிடுமொருவாவுன்றாள்போற்றியென்றான். (௪௭)

முத்தியளிக்குமுகுந்தனென்றமூவாமுதலேமூவுலகில்
பத்தியலர்ந்தவுயிருள்பரவாசுதேவப்பழம்பொருளே
கத்தும்யாகபோக்கியனேகமலைக்குகந்தகருணையனே
நத்துமெனக்காவிக்கோலநண்ணினவனேபோற்றியென்றான். (௪௮)

நானாவுருவுணின்றானேநானாவுருவுமானானே
தானாத்தானேயானானேதானேதனக்குத்தாரகனே
வானாய்க்காலமூன்றாய்விண்வதிமாப்பதியாய்முத்திநகர்க்
கோனாய்த்தில்லைநகர்குலவுங்கோவேநின்றாள்போற்றியென்றான். (௪௯)

பரனேநின்றன்பாடுரைக்கப்பணிநாதனலனெழுத
வரமார்பருதியலன்படிக்கமலர்வானவனானலன்மிகுந்த
கருணாகரனேயென்றனிருகண்ணாகரனேகதியருளுந்
திருநாரணனேயாயிரம்பேர்ச்செம்மாமுதலேபோற்றியென்றான் (௫௦)

என்றிவ்வாறுய்மனமுருகியேத்தியிரக்குமீசன்புரி
கன்றிலாதமெய்ஞ்ஞானக்கனிவார்பத்திகவிகேட்ட
மன்றினுதன்களிமிகுந்துமதிமானுனவரன்மீதில்
சென்றகருணைக்கண்ணினனுய்ச்செந்தாமரைப்பூவாய்மலர்ந்து. (௫௧)

கடவுளமுதங்கசிந்தருளிற்காலன்மானக்கண்ணுதலே
இடுமுன்றுதிக்குங்கூத்தினுக்குமியற்றியிவர்ந்தசாற்றினுக்கும்
நடுவனுனநானுமென்றனங்கைமாருநனியுவந்தாம்
கெடுமுன்கேதமினியென்னீகேட்டியளித்துமென்றுரைத்தான். (௫௨)

கேளாயளித்துமென்றவற்குக்கிரிவாசனுங்கீழ்வீழ்ந்துபணிந்
தாளாவடியேன்றனைக்கவர்ந்தவையாநின்றுளருகினிதம்
கோளார்பொறிகள்குன்றுமற்கூத்துக்குனித்துக்கொண்டிருக்க
மாளாவிப்பூதலமிருக்குநாளுந்தேநீமகிழ்ந்திருக்க. (௫௩)

இம்மாதலத்தேபத்தியுரியார்க்குமிகுநான்கானபலம்
செம்மாமலராளாற்கிடைக்கச்செய்தென்றேவேதேவிகளோ
டம்மாமுத்தர்நித்தர்களோடவிர்ந்துன்னடியார்பவம்போக்கி
எம்மாதிரமும்போற்றுமுன்னையேத்துநாவலோன்களிக்க. (௫௪)

வேதக்குழுமுன்சாமமெனவிளங்குஞ்சிலைக்குண்மேன்மையுறும்
போதப்புனிதமாஞ்சாள்க்கிராமமென்னப்புட்பமதில்
சீதத்துளபமாமென்னத்திருமந்திரத்துளெட்டெழுத்தால்
ஓதப்படுமாமனுவென்னவுவகைநிறைநின்னடியருக்குள். (௫௫)

மேன்மைநிறைந்தசேடபராதினனுய்நானுன்மெல்லடிக்கீழ்
ஊன்மையகன்றகிங்கரனுய்கந்துபுரிநன்னுடகனுய்
நான்மெய்ஞ்ஞானபத்தியுடனுளுமகலாதேநடிக்க
வான்மண்வணங்கிவாழ்த்தெடுப்பவரந்தந்தாள்வாய்வரதவென்றுன். (௫௬)

கேட்டசிவனுக்கவ்வாறேயாகவென்றகேடிலிப்பூ
நீட்டுதாண்மேல்வீழ்ந்துய்ந்தேனெடியபரமேயென்றின்னும்
ஆட்டமிடுதலறிந்தனையான்முனியேயென்னவாண்டுரைத்தான்
கேட்டீர்சௌநகாதிகளேகேதமகலிக்கேத்திரச்சீர். (௫௭)

௫0-வது. சிவன்றிருவிழாப்புரிபடலம் முற்றிற்று.

ஆக படலம் ௫0-க்கு திருவிருத்தம் - ௧௬௫0.

—:(0):—

௫௧-வது. இந்திரன்றிருவிழாப்புரிபடலம்.

———※———

அவ்வியமற்றறத்தாற்றினெறியகலாதெம்மீசனடிக்கனுய்வோய்
செவ்வியசெந்தாமரைப்பூச்சேக்கையுறவாணுதன்றிருத்தாண்மோதம்
வவ்வியமாவேட்கையுடன்வனநடஞ்செய்வரமரனுேற்றபின்னர்
திவ்வியமாவிந்திரன்செய்திருவிழாமாட்சிதனைச்செப்பக்கேண்மோ. (௧)

அரும்பெறலெம்மடிகடிருக்கோயிலடைந்தெம்பெருமானடியைப்போற்றி
வரும்பிறவிப்பீழைமறுத்தாள்பரமேயான்வதைவலாரிப்பின்னான்
பெருந்திணிமாவலிப்புயனென்றொருவசுரன்வால்கலியாப்பேசும்பேரான்
கருந்திறத்தாலெம்மவரும்யானுமுறுங்கேதமதைக்கடைக்கண்சார்த்தி. (௨)

எஞ்ஞான்றுமெங்கணுறுதாடிபரமேட்டியெனவேங்கிச்சாம்பி
அஞ்ஞானத்தாழ்ந்துபரனெம்மானென்றறியாரினஞரினாழ்ந்தான்
மெய்ஞ்ஞானவித்தகர்தமேல்விழிக்கும்விழிசெலுத்திவிபுதர்வேந்தே
பொய்ஞ்ஞானப்புரையரினீபுலம்பலருள்புரிதுமென்றான்புத்தேண்மன்னன். (௩)

அருள்புரிதுமுங்குடியோடஞ்சாதிரென்றுரைத்தேயாழிக்கொப்பாய்
இருளகலக்கொழிசோதிதூற்றுமடறோத்திரமென்றிசைக்குஞ்சாட்கோல்
மருளகலவருளலுமவ்வானவர்கோனதைவவ்விவானோர்சூழத்
தெருளகலுமவுணர்படைத்திரணிறைந்தானிடஞ்சமர்க்குச்சென்றானன்றே. (௪)

கலையணிமாச்சடைமௌலிக்கடவுளருள்வரமேற்றவகம்பாவத்தான்
மலையணிமாக்கடல்கிடந்தானடியவரைமாத்துயரின்மங்கக்கண்டான்
சிலையணிமாக்கரிமீதிற்றேவர்புடைமருவவருதேவர்கோனை
உலையணைமாவரக்கானவுளத்தவனைவலன்பிறப்போடுற்றான்கண்டான். (௫)

கண்டவுடன்வால்கலியென்றுரையவுணன்றனதுசிரங்கம்பஞ்செய்தான்
விண்டுவிடம்பெற்றவரப்படைவலியோவென்றட்டகாசம்விட்டான்
மண்டுபடைவெள்ளமுடன்மான்குழுவைக்காண்வேங்கைவருக்கமான
தண்டமெடுத்தடுஞ்சீற்றத்துடன்சமரைத்தொடங்கலுற்றான்றருவர்கோமான். (௬)

வெகுபோதிவ்வாறடற்போர்விளைத்தெம்மானருள்புரிந்தவீரவாகைத்
தருதோத்திரப்பெயர்கொள்சாட்கோலைவாழ்த்திபலிதந்துபோற்றி
மிகுதிரவடன்மிக்கவால்கலியென்பவன்மீதுவிடுத்துநின்றான்
நகுசோதிவானவர்கண்முகமூடபீதிதரநடந்துமாதோ. (௭)

மால்கலியென்றேதுமறவொழுக்கமுளகொடுந்தீயமறவனான
வால்கலியென்றுரைவேண்டாப்பகைவனிகல்சென்னிதனைவலிந்துபோழ்ந்து
சால்கலிமாப்பரவைசெனப்புண்ணீரைச்சாய்த்துள்ளதருவர்சேனை
நால்கலிசெய்திடச்சவட்டிவெற்றிடமுற்றிடவாக்கினாகிற்றம்மா. (௮)

பகைமலிந்தகடல்வறளப்பட்டவகைதனைக்கண்டபலாரிதேவர்
சிகைமலிந்தபொன்னுலகிற்குடிபுகுந்துமனைவிமக்கட்சீரோடுண்டே
நகைமலிந்தபோகமுடன்வதியுழிமாப்புருகூதனான்குவேதத்
தொகைமலிந்தவென்பால்வந்தடிபணிந்திவ்விதங்கோடிதூயோயென்றான். (௯)

முல்லைமுகைமுறுவன்முகிலோதிமலர்மகண்மோகமுராரிசெய்த
நல்லவருட்சாட்கோலானகநிகர்திணிபுயனுங்கொடியனாவி
இல்லையெனவாக்கியெனதில்லையுடன்றேவருடனிருப்பினின்று
சொல்லவருஞ்சுவர்க்கசுகமுறலானேனதனாலேசோகந்தீர்ந்தேன், (௰)

சங்கரனார்துயர்வீயவெழுந்தருள்சபாபதியின்சாற்றையாற்றப்
பொங்குறுமென்வேட்கைதனைப்பூமானேநின்றிருமுன்புகன்றன்வாக்கால்
இங்கிதமவ்வாறியற்றியெனிற்றேவர்முன்னிலையிலியற்றற்காவேன்
துங்கமுறமுந்திமலர்தோன்றுதிருநான்குமுகத்தோன்றாலென்றான். (௧௧)

இந்திரன்மிக்காதரத்தோடெனைக்கேட்கயானுமிகவின்புற்றண்ணால்
அந்தரமந்தரப்பொருளுக்கருந்திருவிழாப்புரியவார்த்தியாய
சுந்தரநின்சுகிர்தமதையென்சொல்கேனின்மனத்தின்றாய்தென்சொல்கேன்
சந்ததமிப்படிக்கெம்மான்றாட்கினிமையாதிருக்குறைசாராவென்றேன். (௧௨)

என்றவெனைமுன்னிலையாவிட்டம்மான்றில்லைநகர்க்கெய்தியின்பு
துன்றுறுமவ்வழகானமெல்லியமந்தானிலஞ்செய்தோமிலாத
நன்றுறுபூங்குளிர்வீசுவைகாசிமாமதியினகர்கோமான்
அன்றுதித்தசன்மநாளெனுமறுவைதனிற்றுடக்கமிட்டானன்றே. (௧௩)

சித்திரைநற்சுபதினத்திற்றிக்கமராமரசர்தேவராசான்
வித்தைநிறைவேதியர்மாதவப்பெரியர்யாவரையும்விளங்கச்செய்து
நித்தியராமநந்தாழ்வான்சேனையர்கோன்செயவிசயர்நிமலஞான
உத்தமரத்தனைப்பேருமுவகையுறவெம்பெருமாற்குகப்புச்செய்தான், (௧௪)

ஒண்கதிர்வாண்மதிக்கண்ணுவற்றரும்புமொண்சுடர்க்குமொளிபூத்தோங்கும்
விண்கதிர்மாமலரவட்கும்வினைபுரிதீமக்கடனைவிருப்பினாளும்
மண்கதிர்மாவருண்மகட்கும்வாசநீர்புதைதிவமலர்கோடிப்பூண்
கண்கதிர்கண்டினிதுவப்பவலங்காரங்காணுவித்துக்கனிவுபூப்ப. (௧௫)

மந்திரமாவேதவியன்மாண்டொனிகண்மலிவித்துமகிழ்பொன்வேரிச்
சுந்தரப்பூத்தொடையலமுதிங்கனியக்காரபதத்தேன்கண்டாப்பால்
இங்கிதபோக்கியத்தொகுதியாவையுளவவைகளெலாமீசற்கூட்டிக்
கிங்கரராமுத்திநிலக்கிழவருக்குமிசைவூட்டிக்கீதமோதி. (௧௬)

எஞ்சியதீர்த்தப்பிரசாதங்களைநங்குடும்பமுடனினிதிலேற்றேம்
அஞ்சியதீமையிலகன்றேமங்குரார்ப்பணம்புரிந்தேமான்றமேலாம்
சஞ்சிதங்கடளர்ந்திரியப்பேரிதாடனம்புரிந்துசாற்றுக்கான
வஞ்சிகுசைமலியுமரோகணமாற்றியாவருக்கும்வருகைவிட்டேம். (௧௭)

இரவுபகலெரிசுடர்ப்பொன்மாணிக்கமிழையழகினிலகுமேலாம்
அரவுககங்கிரிவிருக்கமறுகுவயந்தசமுதன்மேலையன்றாய்மார்
திருமறுகெங்கணுஞ்சகலமங்களவாச்சியங்கறங்கத்திருவோலக்கம்
வருவிதஞ்செய்தொன்பதாம்வைகலிலேதிருத்தேர்மேன்மருவச்செய்தேம். (௧௮)

தொலைமக்கடுன்பகற்றுந்தூயபெருமானிரதந்துளங்குஞ்செவ்விக்
கலைமக்கட்கணமருவவைந்தருக்கோமிருவெண்மாகாணக்காந்தி
யுலைமக்களுவகைகொளவுதவுமிருநிதிசுவணத்தோங்குபொற்பூத்
தலைமக்கடருகொடையிலிவைகளெம்மான்பவனிமுனந்தயங்கிச்சாய. (௧௯)

எண்ணொன்றுநாளிற்றிருத்தேருச்சவம்புரிந்தன்றிலங்குந்தூய
கண்ணொன்றுச்சொலும்புண்டரீகநறுங்கயத்திலவபிருதத்தானம்
பெண்ணொன்றுணல்லனெனும்பெருமானும்பிராட்டியரும்பேணியீந்தத்
தண்ணென்றுஞ்சீர்பாதநீராடியுட்கொண்டேதாபந்தீர்ந்தேம். (உ0)

எல்லோருமவபிருதங்கண்டபின்னரவரோகணத்தைச்செய்து
வில்லோருங்கனகமணியாதனத்தெம்பெருந்தேவைவிமலையாரைக்
கல்லோருங்கருத்துருகவார்த்தியுடன்றிருவாராதனத்தைக்கண்டு
பல்லோரும்பலம்பொருந்தப்பார்த்தருளாயெனப்போற்றிப்பாவித்தேமால். (உக

பத்தாநாளினிலெம்மான்றிருமேனிபரிவகலவியற்றற்பால
எத்தாலுமெஞ்சலறவியற்றியருளாழிகுணமெட்டான்பீடு
மொத்தாடுமுக்கரணங்கட்டியிரும்மறைப்பாட்டைமோதமோடு
சத்தானவெம்பெருமான்சந்நிதிமுன்றுதித்துருகித்தாழுங்காலே. (உஉ)

திருப்பவளச்சோதிமலர்வாய்விண்டெம்பெருமானுந்தேவர்செம்மால்
கருப்பவளத்தீய்வாரங்கருநிருதருனைப்பீழைகாணுவண்ணம்
இருப்பைவளத்தொடுமினிமேனின்றுதிசாற்றினுக்கலராளிறும்பூதுற்றுள்
அருப்பவளத்திகழ்ச்சியினோடமரர்மருவிடவிங்ஙனமர்ந்துவாழ்வாய். (உங)

என்றருளப்பாடிடலுக்கிந்திரனுந்தன்னியோச்சிமியென்றிம்மெய்
நன்றருளினன்றெடுத்தபயனுற்றேனென்றவணேநண்ணிமாகர்
மன்றவிருந்தெம்பிராற்குச்சேட்டைமதிசேட்டாவபிடேகத்தைத்
துன்றவிருந்தியற்றியுயர்விசும்பிலரசாற்றியினுந்துலங்கலானான். (உச)

சேட்டைமதியரிவாசரத்தினிலேசேட்டாபிடேகஞ்செய்து
கூட்டமுறுசெல்வமுடனிந்திரனுற்றனன்பின்னர்க்கெழுமலத்தம்
ஈட்டமுளவளைகையர்கோனீர்ங்கடலோனனிலனெரிகாலனேனோர்
வாட்டமறவாண்டுமெதிபக்கநாண்முதற்றிருநாண்மலியச்செய்தார். (உரு)

தங்கள்குறையறுத்தின்பிற்றழைத்தோங்குதலையின்றுங்கண்டாமன்றோ
மங்களமாமகதியுளமாமுனியேயத்தில்லைமான்மியத்தை
நங்கடிறமலறுவலவெனப்பிரமனுவன்றதனைநன்றுகூறுதன்
பொங்கமுடன்சௌநகமாமுனிமுதலினோர்க்கருளிப்பூரித்தானால். (உசு)

ருக - வது. இந்திரன்றிருவிழாப்புரிபடலம் முற்றிற்று.

ஆக படலம் - ருக - க்கு திருவிருத்தம் - கசுஎசு.

௫௨-வது. புண்டரீகருக்குமுத்தியருளிய படலம்.

—(o)—

அண்டரீக்கணமாரவரியிசைப்
பண்டரீகத்தேன்பற்றுங்குணமுனி
வண்டரீட்டம்வழங்குசாறேற்றனே
புண்டரீகர்பேறுற்றிடுபெற்றிகேள். (க)

மானநங்குலம்வந்தவன்மாய்த்திடும்
ஈனவைம்புலமீர்த்தவனெண்ணிலா
ஞானநூற்கடன்மாந்திநாராயணன்
றூனந்தான்முத்தித்தாமமென்றோர்ந்தவன். (உ)

பாவத்தாற்பலவானபிறப்பெலாம்
ஆவத்தாமெனவாற்றவறிந்தவன்
தாவத்தாசையுந்தற்பரமற்றவோர்
தேவைத்தாழலுந்திதெனத்தேர்ந்தவன். (௩)

ஆனைமுன்னரடுத்தவனேபரன்
ஏனைத்தேவரெம்போலியரென்றவன்
சோனைக்காணுஞ்சுராசுரர்நாதனை
மோனைக்கூழைமுற்றும்மெனக்கண்டவன். (௪)

பிறவிவேலையைப்பேதித்துலர்த்திட
மறவியற்றெமான்மாண்பூசைகொண்டவன்
துறவியோருளுந்தூயவன்றூமிலான்
உறவியுற்றவற்காணவிரும்பினன். (௫)

கங்கைபாதனைக்காணவவாக்கொடே
எங்குமோடியிளைத்தெமானிச்சைசெய்
மங்கிலாத்தில்லைமாவனமார்ந்தங்குத்
தங்கிமாத்தவந்தான்செயலுற்றனன். (௬)

மோக்கம்வேண்டுமுருந்தவருளென
நீக்கும்யாவுமேநீக்கித்தவஞ்செய்தான்
ஆக்குநாதனையாக்கும்பரம்பொருள்
வீக்குமாத்தவத்தானைவிளித்தரோ. (௭)

காஞ்சிமாநகரின்கிழக்காயது
ஆஞ்சிவேகவதிக்குத்தெற்காயது
மாஞ்சிக்கீரநதிவடக்காயது
நாஞ்சின்ஞாலக்கெனுங்கடன்மேலது. (௮)

அல்லைப்போக்கியருளுந்திருக்கடன்
மல்லையென்றநன்மாசகன்மாநகர்
வல்லையங்நகர்வந்தெமதாழிப்பாற்
கொல்லைவந்தையேல்வீட்டையுதவுதும். (௯)

மல்லையென்றமகாபுரமார்க்கமாய்
நல்லபாற்கடனண்ணியோர்நூறெனுச்
சொல்லுந்தாமரைப்பூவைச்சொரிந்தெனை
அல்லிராவுமருச்சனையாற்றியே. (௧௦)

முத்தியீவன்முனியேநீபோதராய்
சித்தமென்றெமான்செப்பலுஞ்செவ்வியற்
பத்தரிற்பாரித்தோனெனப்பாடுசேர்
உத்தமத்தவத்தோனென்றுரைக்குமால். (௧௧)

எம்பிரானேயிக்கேத்திரத்தேழையேன்
வெம்புமாசையினுன்வெகுநாளியல்
வம்பிலாத்தவத்தால்வந்தையாதலால்
இம்பரம்பரத்தோரித்தலத்தினை. (௧௨)

புண்டரீகபுரமெனவோதவும்
புண்ரீகசரசெனப்போற்றவும்
புண்டரீகவிமானம்பொலியவும்
புண்டரீகவல்லித்தாயர்பொங்கவும். (௧௩)

கானுலாந்துளவக்கழலரயபி
தானமாகிடத்தண்ணருடாவெனக்
கோனுமப்பேர்கொடுத்தனமென்றுமின்
வானமீதின்மறைந்துகரந்தனன். (௧௪)

தேவனேகலுந்தேவனைத்தேடுவான்
ஆவலோடவனுடியவண்ணமே
ஓவலாகாவுவகையினேடோடி
மாவலானருண்மல்லையூர்புக்கனன். (௧௫)

புக்கெமீசன்புகன்றபடிக்கடி
கக்குதாமரைப்பூநூறுங்கைக்கொடு
நெக்குநெக்குருகுங்கண்ணனீரனுய்
அக்கமலக்கணப்பனைக்காணவே. (௧௬)

ஒதுமங்நகர்கீழ்க்கடலுற்றதைப்
பாதித்தன்றேவப்பாற்கடல்பார்த்திடல்
சாதித்திக்கடருண்டவெரனுதிதை
வாதித்திப்புனன்மாற்றுதும்யாமெனு. (௧௭)

வேறு.

பிறப்பறுக்கவேண்டுமெனப்பெருந்தவஞ்செய்வான்றனக்கவ்
விறப்பறுக்கவெழுந்தபிரானெழின்மணச்செங்கமலமலர்
மறப்பறுக்கவொருநூறுகொடுதிருப்பாற்கடன்மருவி
விறப்பறுக்கவெனையருச்சியெனவிளம்பிவிட்டவண்ணம். (௧௮)

ஒருநூறுதிருமலர்ப்பூவுழன்றெடுத்துக்கொடுமல்லைப்
பெருமூருக்கீழுவரிப்பெருங்கடலைக்கண்டிதனைத்
திரும்பூருதிரைத்துவிட்டுத்திருப்பான்மாவாரியிற்போய்ப்
பெரும்பேராயிரக்கடவுடரும்பயன்யாம்பெறுதுமெனா. (௧௯)

உச்சியிற்பானுறுமுனமிவ்வுவரியுதகத்தையெல்லாம்
எச்சமறவிறைத்தொழித்தெம்மிறையடிமேவிம்மலரை
அர்ச்சனைசெய்தருள்பெறுவதலதுதிறம்பேனென்று
நிச்சயமிட்டத்தமதானீரிறைக்கத்தொடங்கினனால். (௨௦)

அடக்கரியபெருங்காதற்கடலடைத்தவகத்தினனாய்க்
கடக்கரியகருங்கடனீர்கரைக்காணக்காதல்கொடு
முடக்கரியசீரையங்கைமுழுகமுகந்தெடுத்தெடுத்துக்
குடக்குகரைமீதிலள்ளிக்கொட்டிக்கொட்டிவருமெல்லை. (௨௧)

கைகடுத்துமெய்சலித்துக்காலோய்ந்துகண்ணிருண்டு
நெய்கடுத்துக்காதடைத்துநீர்வறளக்காணாமல்
ஐயடுத்தசூரியனுமாகாயத்துச்சிநின்றான்
மெய்யடுத்தமேலவன்வாழ்வெண்கடலைக்காணானால். (௨௨)

சத்துவத்தினாலுலகைத்தானோம்புமெம்மான்மேல்
பத்திமுத்திப்பித்தாகிப்பார்சூழ்ந்தபௌவமதை
நத்தையுற்றவள்ளலறநாம்புரிதுமென்றிறைக்க
முத்தனுற்றசெவ்வியெம்மான்மூப்படைந்தவேதியனாய். (௨௩)

அன்னோவிவ்வருந்தவத்தோனார்த்தியளவரிதெனவே
பொன்னோவென்றவிரவன்னைப்புண்டரிகமலர்க்குழுமேல்
என்றுதன்பள்ளிகொளவிறைக்குமுனிகண்டிவனார்
துன்னானென்றடங்காததுனிமிகுந்தோர்கதையெடுத்து. (௨௪)

பொங்குகதத்துடன்புடைப்பானோடிவரும்புண்ணியன்முன்
சங்குகதிராழியென்றாய்சாம்புநதவாடைமுடி
மங்குலுருமணியாரமறைச்சிலம்புபொன்கருடன்
தங்குவித்தமுத்தருடன்றயங்கவெளிநின்றனனால், (௨௫)

வெளியடைந்தவித்தகனைவேட்கைமுனிகண்டிறைஞ்சி
ஒளியடைந்தமறைப்பாட்டையோவாதுபாடியெம்மான்
களியடைந்தவருளாலேகருணையுடன்மீளாத
வெளியடைந்தசுகவீட்டையியமுத்திமேயினனால். (௨௬)

அறமுனிவன்மலர்களணைத்தாண்டுறக்கமிட்டவண்ணம்
திறமுனிவவின்றுமெம்மான்செய்திருக்குந்தலசயனம்
மறமுனிந்துமாஞான்ச்சுகவாரியாழ்வார்கள்
புறமுனிந்தப்புனிதமுறுங்கடன்மல்லைபோற்றுவரால். (உள)

கடன்மல்லைத்தலசயனக்கருப்பைபமுதிர்கனித்திரளை
மடன்மன்னுமொளிப்பொன்னைமரகதத்தையாப்பாலை
உடன்மன்னுமொண்சுடரையொண்டேனைக்கண்டையண்டர்
திடன்மன்னைத்தில்லைநகர்ச்சினகரத்திற்கண்டேனே. (உஅ)

கேட்டிமறையிசைக்குமுனியிப்பெரியன்கிளர்சீர்த்தி
நாட்டிவிரித்துரைக்கவெனினவிலுமிந்நூல்பெரிதாகும்
நீட்டினன்காண்சுருக்கமெனநிகழ்த்தினனுமகனுதன்
ஈட்டுதவமுனிக்கணங்காளெனவிசைத்தான்சூதமுனி. (உக)

ருஉ - வது. புண்டரீகருக்கு முத்தியளித்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம் ருஉ - க்கு திருவிருத்தம் கஎ0ரு.

———(*)———

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

ருங - வது. கண்ணுவருக்கு முத்தியருளிய படலம்.

பண்ணவருக்கநுதினமும்பகவன்னுமைப்பரந்தேனைமிகவினிதிற்பாடியூட்டும், வண்ணவருக்கத்திசைசேர்மகதிவீணைமாமுனியேயெட்டளவைமறைகடேறு, விண்ணவர்கோனொருபோதும்பிறந்துதோன்றமேவாததனிப்பரமன்விளங்கும்வீட்டைக், கண்ணுவனொன்றுணைபெரியமுனிமானுக்குக்கருணைபுரியருளதனைக்கனிந்துகேண்மோ. ()

வேறு.

பொன்முடிச்சிகரமேருவினேர்பால்பிழைமுடியாணவப்பேயை
நன்முடித்தாறைமுருக்கிமூன்றுசைநறுக்குவித்தவித்தையைநலித்து
வின்முடிவிமலனும்பரம்பொருளவ்விண்டுவையன்றியின்றென்னுப்
பன்முடிவேதமுடிவெலாந்தேடிப்பார்த்தெமான்பதமலர்பணிந்தான். (உ)

பணிந்துபற்பலவாண்டாதியாங்கிருதயுகத்தினிற்றவமதைப்பண்ணித்
துணிந்துளதூயமுனிவரன்முன்னுத்தூயமூவாமுதற்றோன்றி
வணங்குறுபொறிமாப்புலமுளமுனியேமதியுளமோக்கநீமன்னுங்
குணங்குறிக்குதுங்கேடக்கணதிக்கிற்குலவுகாவேரியொன்றுளது. (ங)

பொன்னியாறதற்குத்தென்புலமுளதுபுகழ்பெறுபுண்ணியபூமி
மன்னியபாலவியாக்கிரபுரப்பேர்மருவிடவுற்றுளததன்கண்
துன்னிநீயென்னைத்தொழுதுறுசமாதிசெய்துதோமறவிருந்தாயேல்
சந்நிதிபண்ணிநின்குறையகற்றத்தடையிலைசாருதியென்றான். (௪)

என்றவெம்முடிவிலெழினலவின்பஞானமாவருணிறத்தெம்மான்
நன்றருண்மொழியைத்தன்சிரமேற்றநகையுறிவியன்முனிநடந்து
குன்றுகளடர்ந்தகுறும்பொறைநாடுகோனகரதர்பலதாண்டி
அன்றருளம்மான்சிறுபுலியூரையடுத்தடிக்கடிதொழுதார்ந்தான். (௫)

விரைமலர்வீட்டுமெல்லியனாதன்வினையறுசுடரடிமலரை
இரைமலர்க்குல்லையிட்டுப்பன்னாளுமேத்திவாழுறுபுலிக்காலர்
நிரைபலர்முனிவன்முதலினரளப்பினிமலர்கணோர்ந்தவிம்முனிக்குப்
புரைமலர்முகமனோடுபேசரிப்பப்புண்ணியத்தவம்புரிந்துற்றான். (௬)

கேசவனடியனாகிடுவியாக்கிரப்பதன்கேடறவெம்மான்
பூசனைபுரிந்தாங்குறுதலாலதற்குப்புலிநகரெனப்பெயர்பொலிந்த
ஈசனாண்டினியபாலனாயிருக்குமியல்பினாற்சிறுபுலியூராய்ப்
பேசிடப்பட்டதப்பெரும்பதியிற்பிழையிலாக்கண்ணுவப்பெரியோன். (௭)

பெரியவம்முனிவனங்குளவநந்தசரசினிற்பெரிதுநீராடி
அரியவீராறுவெண்மணலூர்த்துவக்குறியணிந்தலர்த்தாரோ
டுரியதண்டுளவுதாமரைமணிகளுற்றளவறுதினமோவா
தரியநற்றவத்திலிருந்தனன்யாரும்வியப்புறவாண்டவனடுத்தான். (௮)

அடுத்தபேரகண்டத்தம்மையோட்டப்பனாரணப்புட்புயங்காணக்
கடுத்தமாவுளமிக்கானந்தவுவரிகவிழ்ந்தவனாகிக்கண்பனிப்பத்
தடுத்தமாப்பிறவிச்சலதிக்குநந்தாவோங்கருள்வீழ்ந்தெழுந்தோவா
தெடுத்தநற்றுதிகளுச்சலிப்பேறவிசைத்தனன்முசித்தலில்லிருடி. (௯)

ஆண்டளக்குறுமெனப்பனேயெங்களருந்தவக்கொழுந்தொளிரமுதே
மாண்டளக்கறுமாவிடும்பைநோய்மாற்றிவைத்திடாயென்றுவீழ்ந்திறைஞ்சத்
தூண்டளக்கறுநற்றூயநீரையன்றுளங்கன்மின்றேமிலோயரனார்
தாண்டளக்கறுங்கூத்தாடுநந்தில்லைத்தனிநகர்சார்தியேற்றருதும். (௧௦)

தருதுமென்றருளுந்தனிமுதலடியிற்சாய்ந்தெமதருணிறத்தமலா
கருதுமித்தலத்தேயிழிபுலத்தியக்கடையனையொருபொருளாகத்
திருவொடுமெழுந்தீனதயாளனாதலாற்றேவரீரிவணில்
ஒருபெருமருண்மாக்கடலெனநற்பேருற்றெமதருமலர்த்தாயும். (௧௧)

நல்லதோர்திருமாமகளெனப்பெயருநண்ணியீங்கொளிர்ந்தடுத்தவர்க்கு
மல்லன்மாவளங்களீந்துமுத்தியினும்வைத்திடுவரமருளென்னா
நல்லதென்றருண்மாக்கடலருள்புரியநாயுய்ந்தேனுய்ந்தேனென்றவ்
வல்லனீக்கமலற்றொழுதனனவனுமந்தரத்தானமாயினனால். (௧௨)

ஒளித்தநங்கருணைக்கண்ணனைநினைந்தேயோவெனவழுதுமண்டொழுது
களித்ததிவிரைவிற்காண்டடங்கடந்துகனககோபுரசிரங்கண்டு
குளித்திடுகளிப்பிற்கோபுரநயினாரடியெணியஞ்சலிகொடுத்தே
அளித்திடுதில்லைச்சித்திரகூடத்தணிநகர்வலம்புரிந்தடுத்தான். (௧௩)

சவிநிறையினியசலசயனஞ்செய்பாலனாய்த்திருமகடணவாப்
புவிமகளுடனேயினுஞ்சிறுபுலியூர்பொலிதரவேண்டியபுனிதன்
கவிநிறைநாவலோர்புகழ்தில்லைகண்டவண்கவினும்பூங்கமலஞ்
செவிநிறையவள்ளையாதிகணெருங்குந்தெளிபுனற்புண்டரீகப்பேர். (கச)

சரசினினீராட்டங்கொடுதிருமண்காப்புச்செய்தாரியன்றனியன்
வரிசையோடெம்மான்றிருப்பலாண்டோதிமனுவெணித்தேவநாயகனைத்
திருவினைத்திகழுந்திருவனந்தாழ்வான்முதலியதிருக்குழுவனைத்தை
மருவியகரணமனதொடுநாளுமாலறப்பூசைகளாற்றி. (கரு)

சம்புசண்டிகைகட்ணிவிலாவாதுதடுப்பவந்தவிர்சபாபதியை
அம்புயவீட்டெமம்மையைநாளுமடுத்தடுத்தேத்திச்சேவித்துக்
கும்பிடுமலரைக்கும்பிட்டுக்குடும்பகோடமாற்றிடக்குறையிரந்து
வம்பிடுமலரைவண்சரண்சொரிந்துவருமுழியொருதினமாதோ. (கசு)

ஐந்துகாடடங்கவிந்திரநீலமணிர்வெயில்பூத்தமாணிக்கச்
சுந்தரவடிவோடைம்படையேந்திச்சோதிவான்பறவைமேற்றுலங்க
மந்தரமலர்வான்றுந்துபிகீதமாசுரர்சொரிதரமுனிவர்
வந்துறவாக்குமனக்குமெட்டாதவருட்குடைமாதவனெழுந்தான். (கஎ)

எழுந்தபேரருளாளன்றிருவுருவமிலங்கெழின்ஞானநேத்திரத்தால்
அழுந்துறநோக்கியையன்பேரழகாமமுதத்தைத்தாபமூன்றறவுண்
டொழிந்ததுபிறவியோய்விலாப்பிழையுவமையிலப்பனேயென்று
விழுந்தெழுந்தோடியாடியேபாடிமெய்பொடித்தவசமுற்றேய்ந்தான். (கஅ)

ஓய்வறுபழிச்சுமுருகிடுமனமுமுற்றுநோக்கக்கமுமொல்கா
தாய்வருகண்ணீர்த்தாரையுந்தாழுந்தாழ்ச்சியுந்தலையின்மேற்கூம்பப்
பாய்வருகரமும்பணிந்துகேள்வரமும்பகுப்பறப்பித்தனிற்படலை
தோய்வறத்தோய்ந்தத்தொலைவிலிவிளித்துச்சொல்லுவான்சுகமுனிவனுக்கே. (ககூ)

கண்ணுவமுனிவநின்றவப்பூசைமுதலியபத்தியின்கனத்தால்
நண்ணுநானெனதென்றிடலைநன்றகற்றிநானலதொருபொருளிலனாய்
விண்ணுமண்ணறியவிளங்கினையெனதுவேட்கையாரடியர்களுவப்பப்
புண்ணியமுடையோயாதலாலளித்தாம்புகுதிநம்பொலிசுகவீடே. (உ0)

நலம்வளர்நிரதிசயசுகமுத்திநாந்தாப்பெறுதியாலென்ற
குலம்வளர்மறைகள்கொழுங்கெனுந்தில்லைக்கோவிந்தனருள்செயமுனிவன்
பலம்வளர்பௌதிகத்துடல்விடுத்துப்பரமயோகிகண்முனம்பரமாம்
தலம்வளர்மேனிகொடுபரமேட்டிசார்வழிமுத்தியிற்சார்ந்தான் (உக)

பல்கதிர்விரிக்தபசுங்கொழுமணியின்படிவமார்பரமனுக்குகந்த
வில்கதிர்விரிந்தவிரைமலர்வீட்டுவிமலைநாயகனடிவிழுவோய்
நெல்கதிர்விரிந்ததில்லையம்பெருமானீர்மையீதறிந்தையாலென்றே
சொல்கதிர்விரிந்தபிரமன்சொல்லியதைச்சூதமாமுனிவரன்சொன்னான். (உஉ)

ருங - வது. கண்ணுவருக்குமுத்தியருளியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் ருங - க்கு திருவிருத்தம் - கஎஉஎ

ருச - வது. பதஞ்சலிக்கருள்புரிபடலம்.

அவுணருக்கிடரையளித்திடவமைந்தவாழியஞ்செல்வனுக்கினிய
மௌனமுற்றினிதினேற்றுயர்நாரதப்பெயர்மாண்புடையவனே
கௌணமுக்கியமென்றிசையிரண்டவையிற்கணிக்குமுக்கியத்தலமிதன்கண்
புவனமுற்றெடுக்கும்பதஞ்சலிக்கருள்செய்புனிதமார்சரிதையீதறிவாய். (௧)

தம்மையேநாளுந்தாழ்பவர்க்கருளுந்தாமரைக்கண்ணவற்கினியோன்
மும்மைநாளுணர்ந்தவொருதவமுனிவன்முழுதினுமெனையுறழ்மூத்தோன்
கொம்மைசேர்கோங்கினழகினைப்பழிக்குங்குயமுளகற்பியைகுணத்தாள்
செம்மைசேரொழுக்கமுளவளநசூயைதனையிலாளாகவாழ்செல்வன். (௨)

அத்திரிமுனிவனெனப்பெரும்பெயராலவிர்பவனணைதருமில்லாள்
பத்தினிமாட்சிமும்மையாமுலகுக்குணர்த்திடுபரிவதினாலும்
புத்திரராகமூவருமிருப்பான்புரிந்துளதவப்பயனாலும்
அத்தனும்யானுமரனுமன்னவருக்கருமகவாகிடஞான்று. (௩)

எம்பிரான்றத்தாத்திரேயமாமுனிவன்யானியைபாரத்துவாசி
அம்பராவணிந்தானத்துருவாசியாமபிதானமுற்றவிர்ந்தேம்
பம்பரமியையவுலகெலாமசைத்துப்பார்க்குமாவிலக்குமிபணியால்
கம்பருக்கடன்மண்டலைகொளுமநந்தன்கடுங்கதங்கொடுசிறுபணியாய். (௪)

அஞ்சலிகரத்தனாகியெம்மழகனடியிணையுள்ளிவாழமையம்
அஞ்சலிகரத்துளமைதலைவிளித்தவத்திரிமுனிவுடனந்தோ
வஞ்சமற்றகிலஞ்சுமந்தெமாற்கினியமஞ்சமாய்முற்றுணர்வுற்றும்
வஞ்சகர்புரிதீமறஞ்செய்வான்வந்தவழக்கினான்மாசுணத்தரசே. (௫)

போற்றியஞ்சலிசெய்யென்கரம்புகுந்துபதிந்துளபுணர்ப்பினால்யாரும்
போற்றிவாழ்பதஞ்சலிப்பெயர்முனியாய்ப்பொலிந்திடக்கடவையென்றறவோன்
சாற்றியபோழ்துசான்றவவடியேன்றற்பரனிடம்பெறலென்றே
சாற்றியாளென்னாத்தாழ்ந்துகடாவுமதற்குமாமுனிவரன்றயவால். (௬)

வேறு,

குடக்குநின்றுழிபொன்னியென்கோநதி
வடக்கிலுள்ளதோர்மாதவன்கேத்திரம்
இடக்கிலாத்தில்லைச்சித்திரகூடமென்
றடக்கமாயுளதன்பருளத்துளே. (௭)

அன்பர்தங்களகத்துறையாண்டவன்
என்பணிந்திமைத்தாடியினிச்சையான்
மன்பொதிந்தமலர்மகளோடவண்
பொன்பொதிந்தபொதுவிற்பொலிந்துளான். (௮)

அங்குச்சென்றடரும்பொறியாதிவிட்
டெங்குமாகியவீசனையேத்தியேல்
சங்குசக்கரத்தோடுன்றன்சாபமும்
மங்கவாக்கிமகிழ்ந்தனைகொள்ளுமால். (௯)

என்றுமாமுனியிட்டமாற்றப்படி
நின்றபொன்னிவடக்குறுநீடில்லை
சென்றுபுண்டரீகப்பெயர்சேர்கயம்
அன்றுட்கொண்டுளேயாடிக்களித்தரோ. (௧௦)

ஆடியீரிருநாமமணிந்துயர்
கோடிக்கோடிப்பொன்கொட்டிக்கொழுஞ்சுடா
சூடிச்சோதிசெய்சோவனைப்பாழிவாய்க்
கூடிக்கூத்தினைக்காணுங்கோவிந்தனை. (௧௧)

கண்டுதண்டிற்கவிந்தெழுந்தாரணம்
விண்டுவிண்டுவிளைந்தடிநீர்த்துள
வுண்டுகந்தவுவகையினன்னகர்
அண்டுமேற்கடுத்தாச்சிரமங்கொடு. (௧௨)

பள்ளிகட்டியபாங்கரோர்பட்டமிட்
டுள்ளியப்புனலுட்குளித்தாடியே
எள்ளிநெய்யெனவெங்குமாமீசன்ருள்
தெள்ளித்தேர்மனச்செப்பினிற்சேமித்தான். (௧௩)

எம்பிராட்டியமொம்பெருமப்பனார்
உம்பர்முத்தருடனுறவோங்குறு
அம்பரத்தொருபிம்பத்திலாக்கியே
வம்பறத்திருவாராதனஞ்செய்தான். (௧௪)

பூசையன்பிற்புரையிலனேகவாண்
டோசையாகவுஞற்றிவாழோர்தினம்
ஆசையெங்குமவிர்ந்தவநாதிக்கு
நேசம்வந்துநிறைந்ததெமம்மையால். (௧௫)

வேதசாரமாய்மேதையின்மேனியாய்
ஓதவுற்றவுவணப்புளொண்புயம்
நாதசாரமாநாராயணப்பிரான்
பூதசாரவாகாயத்திற்பூத்தனன் (௧௬)

பூத்தபூரணன்போந்ததறிந்துள
தீர்த்தன்னேர்ந்தெழுந்தேசெய்வதோர்கிலா
தார்த்தியார்கலியாழ்ந்தெழாதாழங்கால்
கூர்த்துக்கொண்டுழறிக்குலாவினான் (௧௭)

முடிவிலாத்துதியோதிமுற்றுமலே
மடியனுகிமயங்கிடிலாதியாம்
நெடியசேடனிகழ்த்திடயான்கொலோ
படியிலோதிடப்பட்டந்தரித்துளேன் (௧௮)

அன்னவன்றுதியாடியதாடிட
இன்னவற்கிகலில்லையென்றியாவரும்
சொன்னபோதினுமாகுகதூயவன்
அன்னவற்கருளன்பினைக்கேண்மினோ (௧௯)

பத்திஞானப்பதஞ்சலிநின்னுளம்
ஒத்ததென்னுரையென்னலுமோதுவான்
அத்தயான்செய்யிப்பாடியம்யாவரும்
சுத்தமென்றகங்கொண்டுதுளங்கவும். (௨௦)

முத்திவீட்டுண்டுளைக்கவும்மன்னுடன்
மெய்த்தென்றுன்றிருமேனிக்கிருந்துதுகி
நித்தநின்மலவாநந்தத்தொண்டியான்
சித்தமென்றுசிறப்புடனுற்றவும். (௨௧)

தேவயான்செய்யிச்சேடதீர்த்தம்முறும்
பாவநீக்கிப்பலமெலாமீயவும்
மூவர்தம்பிரானேயிந்தமுக்கணன்
ஓவிலாநடமுன்முனுஞற்றவும். (௨௨)

பார்த்தசாரதியாகியிப்பார்புகழ்
சீர்த்தித்தில்லையிலென்றுங்கிளரவும்
ஆர்த்திமேலிட்டுனம்பலங்கண்டவர்
பூர்த்தியுற்றசுகத்திற்பொருந்தவும். (௨௩)

ஐயவீந்தருளென்னவருணிறை
மெய்யனீந்துவெளிமினலாயினன்
பைகொளாதிசேடன்செய்மாபாடியம்
வையமோதிமான்முத்தியின்மன்னின. (௨௪)

நாரதப்பெயர்நாவலோய்நாடென
மாரதத்துமறைமுனிசொற்றதைக்
காரதத்துக்கான்மோனிகட்காகநற்
சூரகத்துச்சூதமுனிசொல்லினன். (௨௫)

௫௪ - வது பதஞ்சலிக்கருள்புரிந்தபடலம் முற்றிற்று.

ஆக படலம்-௫௪ க்கு திருவிருத்தம் - ௧௲௫௨.

———:o:———

௫௫-வது. துருவாசசோகப்படலம்.

மனத்தினான்மறுவிலனாய்மாசகன்றமறைமுடிக்குக்
கனத்தினானெனுங்கமலக்கண்ணனடிக்குகந்தோய்நீ
அனத்தினான்மிகுபழனத்தில்லைநகராங்கணாளிர்
இனத்தரியாற்றுருவாசனியையசோகமிசைக்குதுங்கேள். (௧)

ஒண்கதிர்வான்குலவழியிலுதித்தவன்மாமுதலடிக்கே
கண்கதிர்காண்மனம்வாக்குக்காயமெலாமாக்கினவன்
விண்கதிருங்கான்மகனும்வியக்கும்விஞ்சைபத்திமுதல்
மண்கதிர்வான்வாழ்த்துமனமன்னவன்மாதருமமுளான். (௨)

சாகேதபுரவரசாடரமுடையன்றாழ்நெறிகள்
ஆகாதவம்பரீடப்பெயரோனருமகத்தைப்
போகாதபுலப்பொறிமாப்பொருளோடும்புரிபோது
நாகாதிபதியாகநற்பசுவைக்கவர்ந்தனனால் (௩)

பசுகவர்ந்தகுறையான்முற்பயில்யாகம்பாழாகி
வசுமகவுலோபமதான்மகமியற்றுமிருக்குவிகண்
முசுமனத்தராய்ச்சுளித்துமுன்னோய்நின்குறைநரனாம்
பசுமகத்தையாற்றாதுன்பழியகலாதெனப்பகர்ந்தார். (௪)

எற்றொன்றுமில்லாத்தீயிடத்துங்குடிப்பிறந்தார்
கற்றோருணாத்தவணங்கைப்பிடிப்பவொன்றபடி
அற்றேயாமாற்றுதுமென்றணிகமெலாம்புடைமருவ
உற்றேயாண்பசுவாங்கவுலகமெலாமுலவுறுநாள். (௫)

நீங்கமகக்காசுநேமமுடன்மறையவனை
வாங்கவெனவுலகைவந்தித்தேவருநெறிவாய்த்
தேங்குவளர்தில்லைநகர்தேவைவலம்புரிந்து
தாங்குமறைப்பாம்பில்வளர்சாமியின்கணீடுபட்டான். (௬)

வெள்ளியுந்திபொன்னியுந்திவேட்கைபுண்டரீகசர
சுள்ளியுரகேந்திரனீருள்ளவெலாமாடியெம்மான்
கள்ளவிழிமூடிதுயில்காட்டியரன்கனனடங்காண்
வள்ளறனைப்போற்றரசமாமுனிவன்மாலாகி. (௭)

பேணிப்பிறிவாற்றாதபெற்றியினாற்பேரழகன்
காணிப்புறுகோயிற்கப்புறத்தக்கணிலத்திற்
பாணிப்புறுவேதன்பதிவாழரங்கனைவான்
ஆணித்திணியார்பொன்னாலயமிட்டாங்கிருந்தான். (௮)

வேறு.

நிர்ச்சாசரசின்கனைமேனிமலன்
அர்ச்சாவுருவிட்டாராதனைசெய்
துச்சாகமுன்னுறுநாடனிலே
துச்சாததுவாதசிதோன்றினதால். (௯)

அன்றாடரனாரமிசத்தானன்
துன்றுக்கதனுந்துருவாசமுனி
இன்றியானுண்ணவீங்கெழுவேனெனநீர்
நின்றாடிவரக்கயநேர்ந்தனனால். (௧0)

போனான்விரதப்பொழுதோச்சிடவே
ஆனாவரசீதறிந்தையனடித்
தேனார்துளபத்தெளிநீர்பருகி
வானார்முனிவன்வழிநோக்கினனால். (௧௧)

வந்தானவன்வெந்துறுமாறுவிளித்
தந்தாமனமுண்டனைகொல்லரசே
சிந்தாதுனைகென்றிடலுஞ்சிவனே
வந்தாயிலைநீர்துளவம்வரியா (௧௨)

உண்டேனிலையுண்ணவோய்விரதம்
விண்டேகுதெனவிமலாமுனியேல்
கண்டாயெனலுங்கனலும்விழியான்
தண்டாயுதனிற்சாச்சொற்சமயம். (௧௩)

கரங்காறலையாதிகள்கம்பமொடும்
மரங்காவருளாயபயம்மெனவே
உரங்காதுறுவாறெளிராழியைமுன்
இரங்காமுனிமேலெறிந்தானறிந்தான். (௧௪)

அறிந்தான்முனியெம்மாழிப்பெருமான்
பொறிந்தோங்குறுமுக்கிரவொண்பொலிவை
முறிந்தாடுமெனாமுழுப்பீதியினன்
வெறிந்தோடினன்விண்மண்ணெங்கணுமே. (௧௫)

காடோடினன்கால்கல்லோடினன்வான்
நாடோடிடனன்னகரோடினனீர்
மாடோடினன்மானிலம்வான்கீழெழ்
கோடோடியுமேயுடையான்றிகிரி. (௧௬)

அறமாவுருவாதலினாலிரிவான்
திறமோர்தரவேதிரியுங்காலே
குறியேனுழிகொன்றையன்றன்னுழிவான்
உறிகோனுழித்தீயமன்மற்றுமுள்ளோர். (௧௭)

சரணாகதனான்சரணஞ்சரணம்
மரணாம்புரிமான்மறவாழியினைத்
தருணந்தடைசெய்தருள்வீரெனலும்
கரணங்குவியக்கனலாழியினை. (௧௮)

போற்றிப்புகழ்நற்பலிசெய்தேவரும்
சாற்றிக்கொடுதீவினைசார்முனியைத்
தூற்றிப்பிடரித்தொடரீர்த்தொடியச்
சீற்றத்தவனைச்சீச்சீயென்றார். (௧௯)

செல்லாவிடனேசினஞ்செய்தீமை
கல்லாமுனியேகடவுட்பெருமான்
வில்லார்வளையைவிலக்கத்தருவார்
இல்லாரெனனீயறியாயிலையோ. (௨0)

அந்தாமரையாளழகன்னடியாம்
செந்தாமரைமேற்செனியிட்டழுவாய்
நந்தாதுனையாண்டருள்வானெனயா
முந்தாவுள்யாருமொழிந்தபினே. (௨௧)

படைவேந்தும்விடேனெனவேபடர
அடைவேந்தையருட்செயரங்கபிரான்
குடைவேந்தணிகோகனகக்குரைதாள்
விடைவேந்திவர்வானடியான்விழுந்தான். (௨௨)

அட்டாக்கரமாருமரும்பரமே
கெட்டேன்கெட்டேன்கெழுநான்மறைகட்
கெட்டாவிறையேயெனையாண்டருள்வாய்
பட்டேன்பட்டேன்படுபீழையென்று (௨௩)

வீழ்ந்தானையெமானும்விழித்தடியான்
தாழ்ந்தோய்ந்துதளர்ந்திடவிட்டவனென்
றாழ்ந்தாமுனிவாகியோயாழியிவற்
போழ்ந்தோய்ந்திடவென்றுபுகன்றிடலும். (௨௪)

அக்காலடிபோற்றியநக்கபிரான்
செக்கோலமலர்ப்பதஞ்சென்னியுறத்
தக்காவடியேனடியானிவனை
இக்காலமிரட்சியெனத்தொழுதான். (௨௫)

தொழுவான்முகநோக்கியதோமிலெமான்
மழுமானுளமாதவவிம்முனிவன்
எழுமாமுனிவாவிறுமாப்புகொடு
நழுவாதவனேகநலோரையெலாம். (௨௬)

சாவம்புரிவித்தழிவித்தனனோர்
பாவம்பயிலாதவென்பத்தனையும்
தாவம்வரவைத்தவன்றன்விரதம்
கோவம்முறவந்துகுதித்தனனால். (௨௭)

இவனைத்தெரிவாரறிவார்களெலாம்
பவனத்துபறந்துநடுங்கிடலால்
சிவனேயிவன்போன்றவர்சீத்தலுற
நவமாகுநல்லாயுதநானுமுளேன். (௨௮)

அழருக்கலவைம்படையான்றொடுதல்
தொழுமெக்குலரோவவர்துட்டர்களை
விழவுக்கிடவேண்டினனென்றுமுனி
பழுவுக்கிடநோக்கியருட்பகவான். (௨௯)

துருவாசநீயாரிடந்தோமியற்றி
வருவானெனலானையம்மன்பதமே
சரணாகதியாகுவையென்றருளெம்
பெருமானுரையின்படியேபெரியோன். (௩௦)

வேறு.

அம்பரீடனரும்பதமேமிக
நம்பினேனெனவாடிநராதிபன்
அம்போருகவடிக்கண்விழுந்தையா
கம்பமுற்றனன்காவெனப்போற்றினான். (௩௧)

போற்றியென்றுபுலம்புமுனிவனைக்
காத்தியென்றரங்கத்தமான்காற்றொழு
தேத்திநிற்குமிறைக்கருள்செய்துறும்
மூத்தமாமுனிக்கெம்மான்மொழியுமால். (௩௨)

அறிவினுருவதுண்டோவறிவுளோய்
பிறிதினேய்தன்னேயென்றுபேணாக்கடை
இறுதிநேரினுமின்றுதொடங்கியுன்
செறுசெய்தீச்சினஞ்செய்தல்விடுத்தரோ (௩௩)

என்றனாழியையென்றனடியனை
உன்றனுண்ணினைந்துற்றையேலுன்சினம்
பொன்றுநீதவம்போற்றுதிபோதிபொன்
மன்றமாடியென்மைந்தனுன்மன்னித்தாம். (௩௪)

போதியென்றபுராணபுருடனை
ஆதியந்தமறும்பரமென்றெணிச்
சோதிநின்றவேதாந்தசுலோகங்கள்
ஓதியோதிநாவோய்ந்திடவேத்தினான். (௩௫)

எத்தியேத்தியிழிந்தகண்ணீரனாய்
ஆர்த்திமேலிட்டரங்கனையம்பலக்
கூத்தைநோக்குங்கோவிந்தனைவிட்டொரு
தீர்த்தமூர்த்திகடித்தியாவென்றரோ. (௩௬)

ஆடக்கேத்திரமேற்பக்கத்தேயாதி
சேடதீர்த்தக்கரைமேற்செய்தோர்பள்ளி
வீடக்கூடாதினும்விருப்புற்றுளான்
பீடத்தில்லைப்பிரார்க்களைப்பூசித்தே. (௩௭)

இன்னதிவ்வாறிருப்பமுன்னேந்தல்செய்
அன்னயாகமரங்கனருளினால்
மன்னமுற்றுவித்தான்மற்றித்தில்லைவாழ்
தென்னரங்கன்றிருக்கோயிறன்னையால். (௩௮)

தில்லைமூவாயிரத்தர்திருப்பாலின்
எல்லையாகுஞ்சுவேதத்திருந்தவர்
வல்லநல்லவயிணவர்பாலிட்டுத்
தொல்லையல்லலெருலைத்தவனாயினன். (௩௯)

பொன்னரங்கன்பொற்கோயிற்பலிசெய
முன்னமோதுமூவாயிரத்தாரைவை
மன்னன்மாட்சியருளினன்வேதனென்
றின்னமாட்சியியம்பினன்சூதனே. (௪௦)

௫௫-வது. துருவாசசோகப்படலம் முற்றிற்று.

ஆகபடலம், ௫௫ - க்கு திருவிருத்தம் ௧௯௧௨.

———(*)———

ஸ்ரீமதேராமாநுஜாயநமః.

௫௬-வது. வேலளித்தருளியபடலம்.

மாலளித்திவ்வைப்புவிட்டுவைத்தழிக்குமெம்பிரான்
நூலளித்தவண்ணநோற்றுநோவகற்றுநோன்மையோய்
பாலளித்தநீறுபூத்தபண்ணவன்மகற்கெமான்
வேலளித்தவீறருள்விளக்குதும்வியந்துகேள். (௧)

பூருவத்துவாபரத்திலேபுகுந்தநாண்முடி
வாருமத்ததிக்கணேயடுத்தவிக்கலிக்கணே
சேருகாளிகூளியுக்கிரப்பசாசுசெந்நிறஞ்
சாருகூசுமாண்டம்வேதாளம்பெருத்தசண்டிகை. (௨)

அக்குப்பேயரத்தப்பேயனற்சட்பேயனற்சிகை
கக்குப்பேய்பிணக்குப்பேய்கதித்தபேய்மதித்தபேய்
திக்குப்பேய்திணித்தபேய்சினத்தபேய்கனத்தபேய்
கொக்குப்பேய்குரக்குப்பேய்குணக்குப்பேயணக்குப்பேய். (௩)

அசுரர்நிருதரசிதவாவகோரகோரவீரர்கள்
வசுதவாதசூலம்வேல்வாண்மத்துமொத்துமாமரம்
பசிதவாதபகுதிகோடிகோடியாயிப்பாரெலாம்
நசிதல்செய்துலாவிவிண்மணரலையெங்குநண்ணினர். (௪)

தில்லைகாளியேயிவ்வெள்ளச்சேனைகட்குச்சென்னியாம்
வல்லையாகிவாழ்த்துப்பேய்வருக்கமோடுவானிலத்
தெல்லைதேவர்முனிவர்வேதரினியபத்தருத்தமத்
தில்லிமார்சிசுக்கண்மற்றமனிதரின்னுமிவணுள. (௫)

பசுவிலங்குபுட்கண்முற்றுபாலெலாம்பதைத்திட
ஒசிதலிட்டுடற்றியேமுறித்துரித்துரிஞ்சியே
முசிதலிட்டவ்வூனையுண்டுமோதிரத்தமாந்தியே
வசிதலிட்டகாலைசீவர்வாழ்வெனுகுமதியரோ. (௬)

மதியிலாதபேய்கள்கூடிவான்மணெங்குமல்கியே
விதியிலாதகொலைபுரிந்துமேன்மையுற்றுலாவுநாள்
முதியநாளினும்மிவ்வாறிராவணுதிமுருடரும்
சதியிலார்களென்றுபீதிசாகரத்தழுந்தினர். (௭)

இன்னதுன்பினைப்பொன்பூமியேந்தலுக்கிசைத்துமென்
றுன்னியும்பரோடிவந்துறுத்துரைத்துழந்தனர்
மன்னனும்மறிந்துநொந்துமாழ்கியேதன்மாடுவாழ்
துன்னுசேனுபதியதாகுசோகமற்றகுமரனை. (௮)

வரவிளித்தோயாறுசென்னிமன்னவான்மண்ணுவிகள்
சிரமறுத்தழித்துண்டியதில்லைகாளிதிணிகொண்மா
தரமிகுத்தநிருதராதிதாவுபேய்கடமையெலாஞ்
சரம்விடுத்துடற்றிவாகைசார்தியாயிற்றருமமாம். (௯)

என்றுபோதியென்றசெவ்வியிம்பரம்பரோத்தவே
கன்றிலாதகந்தனுங்களிப்பமுட்காற்பக்கிசேர்
நன்றுகேதனத்தனுநகும்பசுங்கலாபமார்
பொன்றிலாமயூரமேறியாண்டுதேவர்போற்றற. (௧௰)

வந்துதில்லைநின்றகாளிவலிவையுள்ளிநோக்கிவள்
முந்துமீசன்மாயையின்முளைத்தமாதுகூற்றினுள்
இந்தமாதினேடுபூசலேற்றிறுத்தலெளிதல
சிந்தைசெய்யினிவளைவெல்லச்சேனைவேண்டுமென்றரோ. (௧௧)

கலைநிறைந்தபுலவன்செட்டியாதலாற்பின்காரியம்
நிலைநினைந்துநீரணுகிநின்றுசாவிநிகரிலா
வலமையாமீதென்றுதில்லைமாநகர்க்கண்வடபுர
மூலவிலாதசிவிலாசபுரமென்றோதுமூர்க்கணே. (௧௨)

நவையகற்றியொளிதழைக்குநகைமணிப்பொனாலிழை
அவையிலிட்டவாணாவானளாவுகோயிலாற்றினான்
சுவைகொளோசையூறுநாற்றமொளிபுலன்கடொடர்கலா
திவையுமவையுமுவையுமானவெம்பிரானையேத்தினான். (௧௩)

ஏத்தியேயானந்தநிலயமெனும்விமானத்திடையினே
ஆர்த்தியோடுவேங்கடத்தெமப்பனாரைத்தாயரைச்
சாத்திரத்தினோடுபிம்பமேற்றியேவண்சாமமாந்
தோத்திரத்தையாறுநாவுஞ்சோரவோதிப்போற்றினான். (௧௪)

காதுகாளிமுன்னர்வேங்கடத்தெமானைக்கனிவினால்
ஓதுதூபதீபமாதியுற்றமுகமனால்கலா
தாதியந்தமற்றமுடிவிலின்பமூவாவப்பனை
நீதியாம்பதிட்டைசெய்துநித்தியோச்சவஞ்செய்தான். (௧௫)

ஆனவன்னசினகரத்தினுக்குமுன்னரன்பினான்
ஞானநீர்த்தடாகமொன்றுநாமமிட்டியற்றினான்
தானதருமதவசினோடுசாமிபேர்கொள்சரசிலே
ஊனமுக்கவுவகைகூடவுன்னியாடியுருகினான். (௧௬)

பரிவினோடெமானையாராதித்தெமையன்பரிசனம்
திருவினோடுமுவகைபூப்பச்செய்யுநல்லதொண்டினான்
முருகனல்லன்முழுதுவல்லன்முதன்முகுந்தனருளினுக்
கருகனல்லன்வள்ளிகொண்கனார்த்தனென்றறைந்தனர். (௧௭)

இந்தவாறுபொறிபுலன்னிறுத்தியற்றுமேல்வையும்
வந்திலானெம்மானெனாவருந்திநோவுழந்தரோ
சிந்தைசெய்தனந்தமானசித்திரப்பாமாலைகள்
பந்தமற்றபரமனுக்குப்பாடிச்சூடினானரோ. (௧௮)

வேறு.

வேதவிண்முடிமேன்மேதையானந்தவிமலவிக்கிரகமேவிண்டாம்
நாதநன்மயமேநானற்றுரிதயநற்சினகரமொளிர்மணியே
சாதலிலாதசயம்புவேசம்புகும்பிடுந்தம்பிரானான
நீதனேநிபிடானந்திகணாளுநினைந்துருகிடுநிருமலனே. (௧௯)

ஐந்துபொன்மணியாமம்பலத்தரசேயாறறுத்தாடுவார்க்கினிமை
தந்துவீற்றிருக்குந்தற்பரப்பொருளேதழையரத்தினசபாபதியே
முந்துறுமுடிவிலின்பவாரிதியேமுகுந்தசிற்றம்பலவாண
நந்துருதெனதுகுறையகற்றிடற்கெனற்பவியேன்றருள்புரியே. (௨௦)

நாதநன்முதலேநாகர்தநுதலேநான்மறைநடுவடிமுடியே
சாதலில்சயமேசங்கரவிதிகடங்களைத்தந்தழிசதமே
சீதசின்மயமேசிவமருள்பதமேசித்தசித்தாகிவாழ்திறமே
வேதவிண்மயமேவிமலவித்தகமேவேங்கடத்தமலமேயருள்வாய். (௨௧)

என்னருந்தந்தையென்றந்தைதந்தையவன்றந்தையாவர்க்குமினிதா
மன்னருந்தந்தைமண்முதறந்தமகதவாங்காரத்தின்றந்தை
பொன்றந்ததந்தைபுகலுமெண்சுகமேபெற்றிடுதந்தைபூமுடியின்
வென்னின்றதந்தைவேதியர்தந்தைவேங்கடத்தந்தையேயருள்வாய். (௨௨)

பேசினார்பிறவிநீத்தருள்பெருமான்பித்தன்பித்தொழித்தருள்பெருமான்
ஏசினார்க்கிருக்கையீந்தருள்பெருமானென்றுமோரீறறுபெருமான்
மாசிலாப்பெருமான்மாதவர்பெருமான்வானவர்வாழ்த்திடும்பெருமான்
வீசியவிமலவேதியர்பெருமான்வேங்கடப்பெருமவெற்கருள்வாய் (௨௩)

ஆவியுளாவியானவென்னமுதமந்தணர்மந்திரத்தமுதம்
பாவியானவர்க்கும்பரிந்தருளமுதம்பரிதிபான்மதியெரியமுதம்
பூவில்வாழமுதமதுவுமுணமுதம்பூரணப்புலப்பொறியமுதம்
வேவில்வாழமுதம்விமலையாரமுதம்வேங்கடத்தமுதமெற்கருள்வாய். (௨௪)

பாரிலைந்துருவாய்ப்பற்றுமைம்பொறியாய்ப்பற்பலசமயிகள்பகரும்
ஆருளுமருவாயன்பர்பாலுருவாயகண்டமாயகண்டமுளமரும்
சீருறுந்திரமாய்ச்சின்மயநயமாய்ச்சீபதியெனுமறைச்சிரமாய்
வேருறுவரமாயகிலக்குவநந்தவித்தெனும்வேங்கடவருள்வாய். (௨௫)

சித்திரகூடச்செல்வமேயரங்கஞ்செய்தரன்செய்நடங்காணும்
அத்திரச்சபைக்கோரற்புதக்காட்சியளித்துவீற்றிருந்தருள்பரமே
குத்திரத்துருவாசப்பெயரவனைக்கொளுத்தியவாழிசேர்கரமே
வித்தையுற்றடியேன்வெற்றிபெற்றிடற்குவேங்கடத்தப்பனேயருள்வாய். (௨௬)

கண்ணைவிட்டகலாநின்னுருவுற்றேன்கருத்தைவிட்டகல்கிலாக்காட்சி
விண்ணைவிட்டகலார்விட்டிலாமாட்சிவீறுமென்னிருசெவிக்கண்
பண்ணைவிட்டகலாப்பாடலினின்னைப்பணியும்பன்னிருகரமகலேன்
வெண்ணைவிட்டகலாநெய்யுறழுயிராவிடுகிலாவேங்கடவருள்வாய். (௨௭)

உன்வியாபகத்தைப்பொன்பெயரவன்சேயோதினானும்பலோமூல
மன்வியாபகத்தைவழங்கினசிவஞோமாபவவர்னெனறெரித்தான்
நன்மயவருளானென்னல்பாஞ்சாலிதுருவன்மார்க்கண்டரோநவில்வார்
வின்மயவிமலத்தமலையார்வீறுபெற்றுளவேங்கடவருள்வாய். (௨௮)

அருமறைமுடிமாவாக்கியப்பொருணீயவையடியிடைகடையறையும்
பிரணவப்பொருணீதாரகநாமப்பிரமநீவியாகிருதிக்கண்
வருவுருவருநீயேழுகோடிப்பேர்மநுக்குளேவழங்கிடுபொருணீ
திருவருளாழ்வாரருள்பெறாரறியாத்தேவனும்வேங்கடவருள்வாய். (௨௯)

அருள்புரியெனப்பன்முறையுளங்கனிந்தீராறுகண்களினுநீர்வாரத்
தெருள்புரிதுதிகடேவதேவனுக்குச்செப்பலுஞ்செங்கமலத்தாள்
மருளழகமர்ந்தமாசிலாப்பிரமவாச்சியன்மகியுளோர்பிழை
வெருடரக்கமலவாய்மலர்திறந்துவெளிப்படையாச்சிலமொழிந்தான். (௯௦)

கான்புணர்குறவர்வள்ளிசேர்வேங்கைகாமனேதெய்வமாயானை
தான்புணர்கந்தனுகிடுமினியதர்மனேதாணுவிற்கினிய
கோன்புணர்பிரணவப்பொருள்கொடுத்தகுரவனேஞ்சிறுகுழந்தாய்
மீன்புணர்வயல்சூழ்தில்லைமாநகரில்வேட்கைமீதூரவிண்ணளவும். (௯௧)

ஞானமாரினியவிஞ்சைநாவலர்செய்நல்லநூலழகினைச்சிவண
ஊனமின்மணிப்பொறுலயமியற்றியோங்கெமையுற்றவரோடு
வான்மகிழருச்சைபதிட்டைசெய்தாக்கைவாக்குள்ம்வீட்டியர்ச்சித்தாய்
தேன்மகிழ்வெற்றிவேலைநீபுனையச்செய்குவலஞ்சலோயென்று. (௯௨)

தன்றிருக்கரம்வாழ்படைக்கெலாம்வலிசேர்சக்கரப்படையரசொளியின்
மன்றிருச்சோதிவெள்ளமாக்கொள்ளைவாரியிலொருசிறுவணுவைத்
தென்றிருப்பதிசேரொம்பிரானெடுத்துச்செயமருள்சத்தியாச்செய்து
நின்றுவாய்பொத்திக்கைகளையாத்துநிலவுறுகுமரனுக்களித்தான். (௯௩)

பீடுசேர்வெற்றிதருபடையேந்திப்பின்னரும்பெருமயானியற்றிப்
பாடுசேர்சரசுக்கென்பெயரிட்டுப்படிந்துளநினைந்ததுபொருந்த
நீடுசேர்வரமீந்தருளெனவெம்மானவ்வணநிகழ்த்துறவின்றும்
மாடுசேர்சாமிபுட்கரணிப்பேர்மன்னியுற்றுளதுகாண்முனியே. (௯௪)

ஈடுமேல்ற்றுனீந்தருள்வேலையேத்தியொண்சமரினுக்கேகிக்
காடுகாண்மோடிகோடிகோடிப்பேய்க்கணங்குணங்கினங்கரிமுகத்து
மோடுவேதாளிமூடெரிகோரவீரகூன்மாண்டகொக்கரிப்பார்
மாடுமாமாடவசுரவிராக்கதப்பெருவாரிமேல்விடுத்தான். (௯௫)

காளிகால்விலங்கோடிருப்பவைத்துள்ளபேய்க்கணம்யாவையுங்கடிந்து
மீளிசேர்வாகைவேய்ந்தகிலத்தைவெருவுறச்சமர்புரிந்தமரர்
வாளிமாமலர்கள்சொரிதரவாழ்த்துப்பெற்றினும்வளந்திகழ்தில்லை
நாளிசேர்பூங்காவக்கினிதிக்கினற்பளியியற்றியாண்டிருக்கும். (௯௬)

அண்டமாவுருவிச்சிவனெவாருவனவன்றருகனியையநீயருந்த
உண்டுகொனீதியெனவழக்குளுற்றுமொண்வலியுமைமகன்வாகை
கண்டைகொன்முனியேயெனவிதியுரைத்தகாதையைக்களுலுறும்பூங்கா
மண்டுமோவாழிவனமுனிவரர்க்குவழங்கினன்சூதமாதவனே. (௯௭)

௫௬-வது. வேலளித்தருளியபடலம் முற்றிற்று.

ஆக படலம் ௫௬-க்கு திருவிருத்தம் - ௨௪௨௯.

—:(o):—

௩௭-வது. சூலமளித்தருளியபடலம்.

——(o)——

உரம்வலுத்தமறைக்கடலுட்டுளங்குபரன்றிருநாமவொண்டேனுண்டு
சுரம்வலுத்தயாழ்பயிலுந்தூமுனியான்மாவினுளேதுலங்குஞ்சோதி
வரம்வலுத்ததவம்புரியவாழ்த்தெடுப்பப்பலியியற்றவருமநந்தேச்
சுரன்வலுத்தசூலமுற்றுச்சுற்றுபவமற்றிருப்பச்செய்ததோர்தி. (௧)

எல்லாருமிறந்துறங்குமிடத்தைவடவித்துறழத்தன்பாலிட்ட
வல்லான்றானன்றிமற்றோர்பூதருமற்றுளகாலவரம்பின்மாய்ந்த
பல்லாரும்பசுக்கள்வினைப்பாசமதைவிட்டொழிக்கும்பதியிலாமல்
சல்லாருங்கடும்பீழைமூர்ச்சையுணுமாவிகண்மேற்கருணைகூர்ந்தான். (௨)

மருட்டும்விழிமடவரல்கண்மான்மடித்தமோனமுனியீதோர்கற்ப
கிருட்டிதனினிகழ்வரலாறறிதியெம்மான்றிருவுளத்தாற்றீனரான
இருட்டிலுழற்பசுக்கடமக்கினியதநுகரணவிதபுவனபோகந்
திருட்டியுறத்தருவமெனிலிவர்கருமக்களிம்பகற்றித்திகழ்தம்மேனி. (௩)

கண்டுதமதடிநிழலிற்குடிமேவிமுத்திசுகக்கடலிலாழ்வார்
தொண்டரொனத்தோடமறுதிருவுளத்தாலெண்ணியைந்துதோமிலாநற்
பண்டையுறுமெய்ஞ்ஞானம்பாலிப்பானுலகளிப்பான்பரிந்துள்ளெண்ணிப்
புண்டரிகமொன்றையுந்திப்பொலியவிட்டம்மலரிலெனைப்பொருந்தச்செய்தான். (௪)

பல்லான்றகேள்வியிலாவெனக்குள்ளவிஞ்சையெலாம்பரிந்தீந்தென்முன்
கல்லான்றமூலவிருண்மிளிர்மகதவாங்காரங்கலந்தமூன்று
வில்லாருங்குணங்கடமைவிளைத்தவையிற்பதினொன்றும்வீறுபூண்ட
தொல்லாரும்பதின்மூன்றுந்தோன்றிடச்செய்தெனக்குயிர்கடொல்லையான. (௫)

வினையிலக்கத்தொகுப்பனைத்தும்விளங்கவருள்புரிந்துடல்கள்வினைவினியான்
அனைத்துமருடிநெறியாற்புரப்பவெனவருள்புரிந்தானதற்குப்பின்முன்
சினக்குமுயிர்களினுடலைச்சேதிக்குங்கருமமுள்ளித்திகைத்துநின்றேன்
கனத்தவவன்மனமதிலேகரிசுளதாமதந்தோன்றிக்காட்டிற்றம்மா. (௬)

கனக்கடுப்பின்வெப்பமதாற்புழுக்குநெற்றிமுகவியர்வுகாரக்கந்தன்
றனக்குகப்பாந்தந்தையெழவவனனைத்தையெம்மான்றயவினோக்கி
மனக்குகக்குமகனேநீயாவிகண்மெய்வினைக்கீடாம்வாறன்னோர்மெய்
சினக்குவகையாற்செகுத்தியத்தொழிற்கேயுனைப்படைத்தாஞ்செய்வாயென்றான். (௭)

திருமதுகைத்திறம்பெருமிதங்கண்மறைமநுவிஞ்சைசெயங்களியாவும்
தருமதுகையுறுமறிவைத்தந்தியற்றிச்சம்மாரமென்றசாம
உருமதுகையிடவரைமுன்னுடற்றுபிரானெண்டாளையுச்சியிற்சேர்
இருமதுகையிடவாகையெற்றுபடையிலையிதற்கெனிறைவவென்றான். (௮)

படைகேட்டபண்ணவர்கள்பணிபுத்தேளதற்கெம்மைப்பகருநூலின்
இடைகேட்டவண்ணமரிறபவிம்பமதிலெம்மையேற்றிநன்மை
அடைகேட்டபடிக்காராதனையாற்றிவருதியெனிலடர்க்குமாற்றல்
நடைகேட்டவுலகோதனன்றுரிமைப்பலமேற்றுநகுவாயென்றான். (௯)

அவ்வாறேநின்னருளிலாற்றிநினைவடைவலெனவரியவேதந்
தவ்வாவாகமப்படியேதரும்பீட்டப்பெருமான்றனையுத்தேசித்
தொவ்வாநல்லொழுக்கமுடன்காமவெகுளியாதியெலாமோச்சியாக்கை
செவ்வேயிட்டரும்புலத்தைச்சேமித்தேயொருபுலத்திற்செறியாநின்று. (௧௦)

கன்றலறக்கருத்தொருமித்தெம்பெருமானொருபோதுகாட்டிமீட்ட
மன்றலவிர்துளவணிந்தமாவிளங்குமணிவண்ணவடிவையுள்ளிப்
பொன்றுதலற்றிடுதைலதாராவிச்சின்னமெனப்பொலியும்பத்தி
நின்றமனத்தினனாகிநித்தியநைமித்தியங்கணிகழ்த்தினானல். (௧௧)

எம்பெருமான்றனையுமருளெம்பெருமாட்டிகளையுங்காத்தேவலாற்றும்
உம்பரையுமுனிவரையுமுகக்கும்வகைப்படிக்குவிக்கிரகங்கடம்மில்
தம்பமுறத்தாபிதஞ்செய்தாடையவிர்பூண்கலவைத்தாமமாதி
விம்பமுனமிட்டாற்றுமவிசாதிபோகமெலாம்விளங்கவாற்றி. (௧௨)

அருக்கியபாத்தியமாசமனியமாசனமலரிலாட்டமாடை
உருக்குமொளிக்கற்பூண்களுபவீதம்புண்டரமொண்டுளவோடுந்து
முருக்குபுகைதிவங்கண்ணாடிவட்டவமுதவகைமுன்னாமுன்னோன்
வருக்கமுளமாப்பரிவாரங்களுக்கும்பலிபுரிந்துவாழ்த்தோடோதும். (௧௩)

என்செய்யதாமரைக்கணெம்மானேயெனைப்படைத்தவீறிலானே
என்செய்யதாமரைவாயெம்பெருமாவென்பொனையாவென்னன்பீயும்
என்செய்யதாமரைக்கையப்பாவென்னைப்பகன்றவெழில்சேரின்ப
என்செய்யதாமரைத்தாளீசாவென்னாசமிலாவின்பத்தேவா. (௧௪)

என்னையாளண்ணாவோவென்னையாண்டழிப்பவவோவெனையீங்கிட்ட
அன்னையானவனேயோவப்பனானவனேயோவன்போடாளும்
மன்னனானவனேயோமதிஞானவனேயோமகிழ்ந்துண்போக
முன்னமானவனேயோமுத்தியானவனேயோமுனமுற்றானே. (௧௫)

எந்நாளெம்பெருமானீங்கெழுவன்கொலென்றிரவும்பகலுமெண்ணி
எந்நாளும்மையுள்கொடுவினிதேத்தியாற்றிடினுமினியவாய்விட்
டன்னாவென்றியான்விளிக்கவப்பாவதெந்துவேயென்னாயந்தோ
முன்னானவானவர்க்குமுன்னாமுத்தருக்குமுன்னானே. (௧௬)

இன்னமுதமானவனேயின்கனிக்கண்டானவனேயினியதேனே
இன்னறும்பாலானவனேயின்னரும்பாகானவனேயின்பக்கோனே
இன்னருஞ்செங்கரும்பேயெனின்னருந்தீஞ்சருக்கரையேயினியவீட்டின்
இன்னருமாநிரதிசயவாநந்தசாகரமேயெனையாள்வானே. (௧௭)

எந்தாயேயென்மணியேயென்னொளிசேர்செம்மணியேயென்பொனையே
வந்தாயேமுனமென்முன்வாராயேயினுமொருக்கால்வந்தாய்போல
முந்தாயேமுந்தினருண்மூவாதவொருமுதலேமுகுந்தவச்சேர்
பந்தாயேயன்பர்வலைப்பரமேயென்றலகறுநாள்பரவல்செய்தான். (௧௮)

ஆயிரமாயிரங்கோடியண்டமெலாமுண்டுமிழ்ந்தாண்டளந்துதேர்ந்தே
ஆயிரமாயிரங்கோடியண்டமெலாம்பூத்துள்ளேயடக்கிக்காக்கும்
ஆயிரமாயிரங்கோடியண்டவகையங்கமுளவம்மாற்கான
ஆயிரமாந்திருநாமமறைந்துமணச்சண்பகத்தாலருச்சித்தானால். (௧௯)

அன்புடனாயிரஞ்சண்பகங்குறையாநியமமுடனார்த்தியோங்கும்
இன்புதவாதோர்நாளுமினியவருச்சனைபுரிந்தேயியலுமோர்நாள்
மன்பெருமான்மதிமிலைந்தான்மனப்பரிவைமகியிலுளோர்மதிக்கும்வண்ணம்
பண்பெரியமணப்புனிதப்பசுங்கிரணமலரிலொன்றைப்பறித்தான்மன்னோ. (௨௦)

முப்போதுமுன்னிமுதிர்சிரத்தையுடன்சுத்தமுடன்மோனியாகி
முப்பாழுங்கடந்தகண்டமுகப்பில்விளைநல்லமுதைமூக்கின்மீது
எப்போதுங்கண்டமுதமிறக்கியுண்ணும்யோகிதனக்கினியபூக்கள்
எப்போதுமுளவகைபோலில்லாதாயிரத்தினிலொன்றெஞ்சல்கண்டான். (௨௧)

கண்டானென்கருவிழியிற்றிகழ்பாவாயீதென்னோகாட்சிநாயேன்
கொண்டாடிக்கொணர்தீமையகற்றாயிரப்பூக்குட்குறைதற்கென்னே
வண்டாடும்பசுந்துளவமாலேயான்மாலாகிமறந்தேன்கொல்லோ
பண்டாவும்பறவையுஞ்சண்பகமொன்றிலையந்தோபரிந்தென்னென்றான். (௨௨)

மெய்சோர்ந்தானம்மானேயச்சோவோர்மலரெங்ஙன்விடுத்தேனென்றான்
கைசோர்ந்தான்கண்சோர்ந்தான்கருத்தோய்ந்தானித்தனைநாள்கட்டம்போச்சே
ஐயோவென்றினிதழுதானழுதானென்விரதமகலலாமோ
பொய்யோவென்பூசையென்றான்மெய்விதிர்ப்பமாழாந்துபொருமிச்சாய்ந்தான். (௨௩)

சாய்ந்தான்பின்றுணுக்கெனநின்றாவாவென்சாமிதயையாளனன்னால்
ஆய்ந்தார்சண்பகத்தினைமூக்குக்காக்கியறைதறனையறிந்தேனென்றான்
ஏய்ந்தோங்குந்தனதினியவழகார்ந்தநாசியினையினிமைபூப்பக்
காய்ந்தாய்ந்துதோய்ந்திருக்குங்கொழுங்கூர்வாய்ச்சுரிகையினாற்கடிந்தான்மன்னோ. ()

துண்டமெனநாசிகைக்கோர்பெயர்சிறப்பவாக்கினனாத்துண்டங்கண்டான்
அண்டமெலாமளந்தருளுமடிமீதாயிரமாகவருச்சித்தானைக்
கண்டவருணிறைகமலக்கண்ணபிரான்கருணைவெள்ளங்கரைகாணாமல்
விண்டமலர்க்கண்ணயனம்பணிப்பவுளங்களிதூங்கவெளிப்பட்டானால். (௨௫)

வேறு.

கண்ணினைமணியைக்கதியினைநிதியைக்கல்வியைச்செல்வியைக்கவர்ந்த்
பண்ணினைப்பாவைப்பாவையமுதைப்பத்தினைப்பித்தினைப்பாரா
விண்ணினைவினையைவினையறுவீட்டைவித்தையைப்புத்தியைவிமலத்
தண்ணினைத்தாயைத்தாயறுதனியைத்தத்துவக்கொத்தினைத்தாழ்ந்தான். (௨௬)

எத்தனைமறைக்குமெத்தனையயர்க்குமெத்தனைசிவர்க்குமிந்திரர்க்கும்
இத்தனைநாளாவெட்டிலானென்னேயிவணெவர்விழிகட்குமெட்ட
வைத்தனன்றன்னையென்றுசொற்றதையேமறுத்துமேமறுத்துமேவழங்கிப்
பித்தனைப்போலேபிதற்றியேயடங்காப்பெட்புடன்றுதித்தனன்பின்னும். (௨௭)

ஆவியைத்தேனையதின்சுவையழகையழகெலாங்குடிகொளுமணியை
ஓவியத்துருவையுருவருவில்லாவொற்றையைவெற்றியையொளிருங்
காவியைக்காயாமலரினைமணியைக்கண்ணினைவிண்ணினைக்கடலைப்
பாவியரறியாப்பரத்தினைப்பாவைப்பாக்குள்வாழ்நிதியினைப்பணிந்தான். (௨௮)

அன்னையையனத்தைநீரினைப்பாரையனலினைவெளியையாகாய
மன்னினைமாயாமாயனைமாயைமாலினைமாலறுத்தாளும்
மின்னினைமீனையாமையையரியைமேகத்தைமேகநீர்வார்க்கும்
நென்னலையிற்றைப்பகலினைமற்றுநீதியைநெக்குறத்தாழ்ந்தான். (௨௯)

ஈசனையிருடிகேசனைமலர்வாழில்லியைக்கல்வியையகர
வாசனைவாசுதேவனைக்கரிமுன்வரதனையிரதனைப்பாவ
நாசனைநமச்சிவாயனையயனைநானவனைநாரணனைத்
தாசனையாளுஞ்சம்புவைநங்கள்சாமியையினிதுறத்தாழ்ந்தான், (௩௦)

ஆசரையமலையையரைச்சேனையரசரையாஞ்சடமனைத்தும்
நாசரைநாதமுனிவரையுய்யக்கொண்டருளுதரைராம
தேசரையாளவந்தவர்தம்மைச்சேரொதித்தலைவரைச்சேர்ந்த
வாசரைவரரைச்சீநிவாசப்பேர்வரதரைவாழ்த்தியேபணிந்தான். (௩௧)

கோதறுகுருவைக்கோமளமணியைக்குஞ்சரங்காத்தருள்கோவை
யாதவகுலத்திலாயர்கள்குலத்திலவதரித்தாடியவமல
போதரைப்புனிதமூர்த்தியைக்கோவிமார்கடம்போகபுண்ணியரை
நாதரைவிந்துநண்ணிலாதாரைநாட்பொருடேயரைப்பணிந்தான். (௩௨)

ஆவலரமுதையணிமணியொளியையாயினைப்பிதுவிளையனைத்தைப்
பூவலர்மணத்தைப்பொன்னினைமண்ணைவிண்ணினைப்புண்ணியமிகுத்த
நாவலர்கவியையதின்பதப்பொருளைநானவனாகியநதியைக்
கோவலர்கொடியைக்கொண்டொளிர்கிரியைக் கோமளக்கொழுந்தினைப்பணிந்தான்.

வேறு.

பரனேயென்றுருகுமனப்பண்பாரந்தபத்திநிறைஞானமோங்கும்
அரனேநின்வைரகுணத்தன்பினுக்கெம்மருண்மகளோடகன்றவின்பு
வரநேரிலுன்மீக்கொண்டனம்வந்தாமென்னென்னவரங்கள்யாங்கள்
தரவேண்டும்வரிக்குதியென்றச்சுதாநந்தபரன்சாதித்தானால். (௩௪)

சத்தியசங்கற்பனெனுஞ்சச்சிதாநந்தபரன்வினவத்தாழ்ந்து
பொத்திடுவாயொதுக்காடையாத்தகரம்புளகார்ந்துட்பொங்குமேனிப்
பத்தர்பிரான்மெலியமொழியுடன்பணிந்துவியப்படைந்துபகர்வானையே
இத்தலத்திற்புகழுமின்புமீர்தலுக்கேய்ந்துளபடையுமீந்தாளென்றான். (௩௫)

திருமலராண்மணவாளன்றிருவாழியாழ்வாணிற்செழித்துப்பொங்கி
வருமலராயிரங்கதிருமொவ்வாதசுடர்பரப்பிவயங்குசோதி
அரமலராயிரத்திலவிர்கதிர்கிரணசாலசமுகத்தின்கொத்துள்
ஒருமலரிலேசமெடுத்துக்கழுமுளாக்கியங்ஙனெல்காநிற்கும். (௩௬)

சிவனேயிங்கணுகுதியாலஞ்சேலென்றரவணைத்துத்திகழவோதி
அவனருச்சிநாசிகைமுன்போலவரவநுக்கிரகித்தருட்கண்சார்த்தி
பவனேநீபயின்றபலிபத்திதுதியோகநெறிப்படுசமாதி
தவநேரிலொழுக்கமிகுமாணிகங்கீர்த்தனைகளுக்குத்தயவுகூர்ந்தாம். (௩௭)

ஆதலாற்சித்தியெட்டுஞ்செல்வமெட்டும்போகமெட்டுமடுப்பக்கொண்டு
சாதலாகாதகிலந்தனிலயனேடொருவனெனச்சாற்றப்பெற்றுச்
சூதமாங்காரமதமானமான்மோகமிகுசோகமீயுங்
காதலாமழுக்காறுகாமங்காய்சினங்கொலைபொய்கடியவான. (௩௮)

தாமதராசதவினையிலுழல்வாரையெனைப்பணியாச்சழக்கினரை
ஆமதங்கொண்டாரணசாத்திரம்பழுதென்றறைந்தாரையடியார்க்காகாத்
தோமகன்றதுட்டர்தமைத்தோம்புகன்றகொடியாரைத்துடிக்கமாய்த்து
நாமகன்றவுலகமெலாஞ்சவட்டிவெற்றிசார்தியெனநவின்றனம்மான். (௩௯)

சூலமெனும்படையருளிச்சோதிமதிபுனைவார்க்குச்சூழ்வித்தாசி
ஆல்வடையடைபெருமானீந்தின்னுமவன்கேளாவனைத்துமீந்து
சாலவழகுடையவெள்ளிமலைமுதனன்னகரமெலாஞ்சார்வித்தேத்தும்
மூலமநுமுதலவளித்தலர்மகளார்மொழிப்படியேமுன்னின்றனல். (௪௦)

அரியொருவனயனொருவனரனொருவனெனச்சிலபேரஞ்சாதோத
உரியனொனவாக்கினவனுருத்திரன்கண்காணமலுற்றரோடும்
பெரியபெருமான்கரந்தான்பிரருந்துங்குழவியெனப்பேதுற்றேய்ந்து
பிரியவரும்பெரும்பீழைப்பட்டுழன்றெம்மானையெண்ணிப்பெரிதுசோர்ந்தான். (௪௧)

அரியருளிற்போககுருயோககுருசம்மாரகுருவென்றாகிப்
புரியகிலபுவனமெலாஞ்சிவபெருமான்சிவபெருமான்பூதநாதன்
கரியுடையான்கனலுடையான்கயிலாயமலையுடையான்காமநாசன்
நரியுடையபரியாக்குநக்கபிரானென்றேத்தநனிவாழ்வுற்றான். (௪௨)

படியளந்தான்றயவெல்லாமடியகன்றபதியடையுமென்றவாபோல்
பிடியளந்துண்டதுமொழிந்துபூசித்தபேறடைந்தபொலிவெண்கல்லான்
தொடியளந்ததோண்மாதுசுதர்மருவவிருக்கையுற்றேசுகிக்குங்காலம்
நொடியளந்துண்டிடநேர்ந்ததகிலமெல்லாமழிக்கவல்லநோன்றனூழி. (௪௩)

அவ்வூழிகாலமதிலாலமிடற்றண்ணலெம்மானாணையாலே
எவ்வூழியினுமிறவாதெஞ்சிநின்றசீவர்களையெற்றற்கான
அவ்வாவென்றுயிர்தீந்தேயவிந்தொழியுக்கிரவெரிசேராக்கைகுலம்
தவ்வாதுகொடுவதைத்துப்பதைபதைக்கவுயிரையெல்லாஞ்சவட்டினனல். (௪௪)

முப்பிரளயத்திரண்டுபிரளயஞ்சுகாசேரன்முறைசெய்காறும்
சுப்பிரமண்ணியன்றாதைதுண்டித்தனடவுமங்காடோன்றிவாழும்
விப்பிரனைவிண்ணவனைமெல்லியனைமெல்லுயிரைவீட்டிநின்ற
அப்பெரியபவமதனாலநந்தேச்சுரத்தனெனுமபிதானத்தால். (சரு)

அனந்தமுயிர்களைக்கொலைசெய்யநந்தீசனாயினனேயந்தோவென்று
மனங்கனிந்துபீதிபடுமறத்தாலேபிரமசத்திவளைந்துமோதக்
கனிந்தவுளத்தெம்பெருமான்கண்டறிதிகண்ணுதலேகலங்கறில்வி
வனந்தனிலேயுளநமதுமாசுணதீர்த்தத்தாடிமகிழ்தியென்றான். (சசு)

போகிவேந்தாக்குநதியாடிவரம்பிருந்துகொடும்பொறிகளாறி
யோகிவேந்தெனநிருவிகற்பசமாதியைப்பொருந்தியோகுக்குள்ளே
பாகியேநாயேனைப்பரிந்தருடியெனப்பணிந்தான்பவத்தைவாட்டிச்
சோகியாதருள்புரிந்தான்றில்லைதனிற்பவன்சுத்தசிவமானனே. (சஎ)

நித்தியநைமித்தியமாப்பிரளயங்கடமினிறைமாவுயிர்கடம்மில்
எத்தனையோவிப்பிரரைமுநிவரரைமுதலாநல்வினத்தார்தம்மைக்
கத்தியிறந்திடக்கொலைசெய்காரணத்தாலலைவுபுரிகடியதீய
வத்தியிறவலகறுநாளநந்தேச்சுரன்றவத்தாலம்மான்றோன்றி. (சஅ)

பதஞ்சலியால்விளைந்தநந்தபவங்கடமைப்பரிக்கவல்லபகடுவாய்ந்த
இதஞ்சசெய்வலிநணியார்ந்தசேடதீர்த்தத்திலொருநாளுமெஞ்சா
சதஞ்செய்யெனநினைந்தாடியகற்றியென்றபடிக்கின்னுமவண்வாழ்கின்றான்
கதஞ்சலியாமுநிவவிதோர்கற்பமதினடந்ததெனக்கருத்துட்கொள்ளே. (சகூ)

சங்கரனின்றும்மநந்தசரசருகிலனந்தேச்சுரப்பேர்சாற்ற
எங்குமுயர்தில்லைநகர்மேக்கினிலேயிருத்தனடித்திடுதறன்னை
அங்கறிந்தெம்மிடமுரைத்தவருஞ்சுதனேயறிதியென்றுவறைந்தகாதை
மங்கலறவாழிவனமாமுநிகட்கினிதுரைத்தான்மாசொன்றில்லான். (ருO)

ருஎ - வது· சூலமளித்தருளியபடலம் முற்றிற்று.

ஆகபடலம் ருஎ - க்கு திருவிருத்தம் கஅஎக.

ருஅ-வது. குசலவர்க்கருள்புரிபடலம்.

அசலவருக்கங்களுக்குமளக்கர்வருக்கங்களுக்குமட்டாகக்
கிசலவருக்கங்கள்கிளர்வனங்களுக்கும்பூவானங்கெழுமாமிக்க
முசலவருக்கங்கணிறையசுரசுரநரர்மரம்புண்முதற்காணேய்நற்
குசலவருக்கங்களுக்குக்கொடுத்தருளுங்காட்சிதனைக்கூறக்கேண்மோ. (க)

ஏறேறியனமேறியிளையேறியாடேறியெருமையேறி
வீறேறிவிபுதர்நரர்முதலாயவருக்கமெலாம்வெள்கிமாழ்கி
ஊறேறியனுபவிக்கவொண்ணாததுன்பியற்றுமொப்பிலாத
பாறேறிப்படையிராவணன்றொழுதிபாழ்புரிந்தபரமன்மைந்தர். (௨)

நாடகலாநகரானதிருவயோத்திப்புரியைநன்னீதிப்பேர்
கோடகலாதாண்டிடுநாளச்சுவமேதம்புரியக்கோடுவாரி
காடகலாநகரமெலாம்வலியவியங்கொண்டடர்த்துத்தில்லைத்தில்லப்
பாடகலாப்பரந்தாமன்சித்திரகூடப்பேரூர்பணிந்துகண்டார். (௩)

கண்டிடுமாமேதைநிறைகாரணப்பேர்புனைந்தகுசலவராமன்னர்
புண்டரிகத்தடம்படிந்துபுண்டரம்பன்னிரண்டவிரப்புலவோர்சூழ
அண்டர்பிரான்சந்நிதிசென்றாட்டங்காண்பஞ்சசபாபதியைநோக்கித்
தண்டெனவீழ்ந்தெழுந்தவராதீர்த்தசடமுரிமுதலதாங்கிமன்னோ. (௪)

செய்முறையென்னவைகளெலாமருச்சகனாமுன்னாகச்செய்துதேவன்
பைமுறையிற்படுத்துளானைப்பார்த்துளானையின்னுமுளமற்றமூர்த்தி
ஐயுளானையடிமலர்மாமுடியள்வாயின்பூரவணுகிச்சேவித்
துய்தலுளதோத்திரப்பூமாலைமுதலுதவிவரமொன்றுகேட்டார். (௫)

கைம்மாவினுரிபோர்த்தகண்ணுதற்கின்னருள்புரிவோய்கனிவாநீயெம்
அம்மானாவவதரித்தனான்றடியோம்பட்டாபிராமனாகி
இம்மாநிலம்வானமேத்தவுற்றகோலமதைச்சேவித்தில்லேம்
அம்மாயாஞ்செம்மையுறவக்கோலங்காட்டியருளப்பாவென்றார். (௬)

அவர்கனிந்தவார்த்தியதிசயந்தில்லையெம்பெருமானறிந்தின்புற்றுப்
பவர்கனிந்தமுதலோர்கள்பணியவரத்தினசிம்மாசனத்தின்மீது
கவர்விழிகள்களிப்படையக்கவிநிறைசானகியிளையபெருமாள்காலீ
தவர்பரதசத்துருக்கர்வசிட்டாதிசாந்தர்விபீடணர்மாமன்னர். (௭)

வானரமாமுதலிகளோடருங்காட்சிகாட்டவிவர்வாழ்த்திக்கண்டார்
மோனமுனிவரர்க்குமெட்டாமுத்திநலமுற்றவராய்மோதமூழ்கி
ஞானவழியருள்புரிந்தநாயகவிவ்வண்ணமந்தநாளிலேத்தி
ஈனர்தமைக்கோறலுக்கச்சித்திரக்கூடம்மலையிலிருந்தவண்ணம். (௮)

சேவைகொடுத்தர்ச்சாவதாரமுடனெக்காலுஞ்செறிநீர்தாழாக்
காவகலாவித்தில்லைக்கடிநகர்மாசினகரத்தேகவினவெங்கள்
ஆவலிவ்வாறருள்புரிதியெனக்கேட்டமைந்தர்கண்மேலன்புகூர்ந்து
பாவலர்கள்பணியவினுஞ்சேவைசாதித்தருள்வர்பணிதிர்மன்னோ. (௯)

வேறு.

சித்திரக்கூடப்பருப்பதத்திருந்தசேவைகேட்டவர்மனச்சிரத்தை
குத்திரங்கூடாதினுமவண்கோவிந்தப்பெயர்க்கோதறுபெருமான்
அத்திரச்சவியோடவிர்ந்துளபின்னரரசராமிருவருமவண்விட்
டெத்திரவலிசேர்ந்துளகுரிசிலையுமெதிர்த்துமாவாக்கைகூடினராய். (௧௦)

அணிகமாடணுகத்திருவயோத்திப்பேரழகியநகரமுற்றுற்றும்
தனியகமியற்றியமரர்நாயகர்க்குத்தணிவறுங்களிப்புறவுலகை
இனிதிலாண்டிருந்தாரறியான்முனியென்றிசைத்ததையிசைத்தனனேமி
தனிவனத்தவர்க்குச்சத்தியவதியார்தருமகனடிபணிசீடன். (௧௧)

௫௮ வது· குசலவர்க்கருள்புரிபடலம் முற்றிற்று.

ஆக படலம் - ௫௮ - க்கு திருவிருத்தம் - ௧௮௯௦.

——(o)——

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

௫௯-வது கோப்பிரளயமுனிவருக்கு அருள்புரிபடலம்·

மாப்பிரளயத்திலவிர்மார்க்கண்டற்காகவடவடையின்மாயை
ஆப்பிரளையுண்டவயனரனாதிகளையகட்டிட்டவற்குக்காடும்
பூப்பிறழும்பொற்குழவிவடிவாயாண்டருள்பொருவில்புனிதப்புத்தேள்
கோப்பிரளயம்முநிக்குக்கோபாலகோலமருள்குணத்தைக்கேண்மோ. (௧)

நெடுநாண்முன்மேருகிரிதனிலேனம்மாதியிலாநெடுமாலன்பில்
ஈடுமாகோபாலவடிவாதிலீலைகடெரிசித்தின்பமுத்திப்
படுமாறுமோகமுளமகலாதவிதமோடுபெறந்துமோதுங்
கடுவாகுமிந்தியங்கண்மனதாக்கைசேட்டையெலாங்கடிந்தானாகி. (௨)

அவத்தேநல்லருமந்தகாலமெலாங்கழிக்கின்றவசடரன்றே
சிவத்தேயுற்றிடவரனேமுதலானார்க்கருடிருமாற்சேராரொன்றாத்
தவத்தேபற்பலவாண்டாவியற்றுமவன்பாங்கரிலேசார்ந்தென்வேண்டி
யுவத்தேயுற்றனையுரைத்தியுதவுதுமென்றனனவனுமுணர்த்துமன்றே. (௩)

அண்ணாநீயாக்கியழியத்தமறுவிதிசிவசுரேசராதி
எண்ணாதாரிறுமாப்பைக்கொண்மூவாய்மின்னாக்கியிருடிமாராம்
பெண்ணீரார்பெட்பளிப்பான்றருமநிலைபெறவைப்பான்பெரியவாயர்
கண்ணனாயவதரித்தவருட்கடலைநோக்குதவங்கண்டேனென்றான். (௪)

நாரதகேளம்முநிவனவில்கம்பீரப்பொருட்கென்னவிலற்பாலேன்
ஓரதமார்வாணிபுகலுத்தமனேயும்மாசையுதவற்காரே
சாரதமாயிப்பரத்தையிக்காலம்பெறவரிதென்சாற்றல்கேட்டால்
பாரதமார்பரம்பொருளைப்பணிதியென்றேனவனென்னைப்பரிந்தோதென்றான்.

தில்லையெனத்தக்கணக்கணுள்ளதொருதிருக்கேத்திரக்கானங்கே
அல்லையிலாதாக்குமணிமாடமடர்சித்திரகூடப்பேரான்ற
நல்லநகருண்டவணினன்கொன்றாமம்பலமுண்டவைகணப்பன்
வல்லவருட்கடவுளர்ச்சைவடிவுகொடுவளருவதுண்டாங்குமன்னோ. (௬)

சென்றுதவமாற்றுதியேலுன்கருத்துமுற்றுமெனச்செப்பென்சொல்லால்
நன்றுமுனிநாரணனைநாடிவினாவினினேடிநடந்துவந்து
கன்றுமனங்களிகூரப்புண்டரீகாதிகளிற்குளித்தாட்டஞ்செல்
மன்றுநுழைந்தழன்மணியாதனசயனமதிவிளக்கைமகிழ்ந்துகண்டான் (எ)

போற்றினான்புகழ்மலியும்பொற்குன்றையெற்கொன்றைப்பொலிபொற்பூவைச்
சாற்றினான்மறைக்கொழுந்தைச்சர்க்கரைப்பாற்கட்டிதனைத்தழுவுவான்போல்
ஊற்றினுண்ணசையாலுறும்பேற்றைச்சுக்வாற்றையுற்றுநோக்கி
ஆற்றினான்பெருங்காதலவியகிலானென்புரிவானந்தோவென்றான். (அ)

வேறு.

எம்பிரான்கருணையுடனெழுமுனிவனெண்ணியவேணுகோபாலத்
தம்பிரானாகிமுனிவரோயுமதுதாழ்வறுமிச்சையிற்சார்ந்தேன்
அம்பரவொவர்க்குமளித்திலேனுனதின்பாகுமாவலையடக்குற்றேன்
வெம்புறுதிருமினென்றவேதாந்தவிழுப்பொருடனைத்துதித்தேத்தும். (கூ)

வேறு.

தாங்காநன்னசைச்சலதிபடிந்துகிடந்தோவாதான்றனைக்கண்டெம்மான்
ஆங்காணுமுனிவவினுமேன்காணுங்காதல்கெடாதறைறியென்னத்
தூங்காமற்றூங்குபரம்பொருளேநீபிறவியற்றதூமெய்ஞ்ஞானம்
நீங்காதநிமலகுணநின்மலிகளுடன்கூடிநெடுநாளாக. (க0)

வேணுகோபாலனெனவளவிறந்ததிருக்கோலம்வேண்டிவேண்டும்
ஆணெலாம்பெண்ணுடையையாத்துநிற்கப்பண்ணுநினையமலமாராக்
காணுமாறுசையுளேனென்றமுனிக்கெம்பெருமான்கரிசற்றோய்நீ
சேணுளோர்வணங்குசுகமுனியுறழவிச்சித்தாய்செயனன்றேனும். (கக)

இவ்விடத்தவ்விச்சையிலேன்றக்கணச்சண்பகவனமாவினியோர்போற்றும்
அவ்விடத்தேதுவரையெனக்கோவியரோடரசமாலீலையாற்றும்
செவ்வுளத்தேனுங்கெழுதியெனவிவனுமிக்கோலஞ்செவ்வேகாட்டி
இவ்விடத்தேயெழுந்தருளியெந்நாளுமருள்புரிகவென்றானன்றே. (கஉ)

அவ்வாறேயாகுதுமென்றினுந்தில்லைக்கோவிந்தனமரரேத்தச்
செவ்வேயாம்வேணுகோபாலனெனவிளங்குகின்றான்றெரிதிரந்த
தவ்வாதமுனிவன்றக்கணத்திலுறுதுவாரகையாந்தலத்திற்கேகி
ஒவ்வாதகோவியரோடமலன்விளையாட்டையறிந்துயர்வீடுற்றான். (கஙு)

மகிழ்மன்னர்கோயிலெனவழங்குசண்பகாரணியமதிலேகண்ணன்
இகழ்நிரயத்திழிந்தேறுமொண்ணுதவீலைமுனிக்கின்றுங்காட்டித்
திகழ்திருமாலடியருக்குத்திரும்பவரும்வீடுதவநெறிதிறொன்றப்
புகழ்பிரமன்பேசியதைப்புந்தியுள்சூதமுனிபொருந்தச்சொன்னான். (கச)

ருகூ-வது. கோப்பிரளயமுநிவருக்கு அருள்புரிபடலம் முற்றிற்று.

ஆகபடலம், ருகூ - க்கு திருவிருத்தம் ககூ0ச.

——(o)——

௬0-வது. துவாதசிதீர்த்தமான்மியப்படலம்.

முதலாவது புண்டரீகசரசு.

நல்லினத்தினுங்குதுணையில்லையெனப்பன்னூலுநவிலற்கேற்பச்
சொல்லினத்தினுங்குதுணைமறைவாகனத்தனெனச்சூழுநல்லோய்
கல்லினத்தினுங்குகதிர்சொரிநிலவுகனகரங்கக்கண்ணற்கான
மல்லினத்தினுங்குதிருத்தில்லைமான்மியதீர்த்தவகையைக்கேண்மின். (௧)

நகையீகையின்சொலிகழாமையொழுக்கம்வாய்மைநாண்மற்றியாவும்
தொகையாகவடைந்தவரன்பாலென்பான்முனமெம்மான்றூயதீர்த்த
வகையாவுங்கேட்டறிந்தமாமுனியேகோவிந்தராசன்வாழூர்
தகையானதீர்த்தமிரண்டாறுளவாலவைகடருசால்பென்சொல்கேன். (௨)

பண்புடையபார்ப்பதியார்க்கொருகாலத்தன்புளதன்பர்த்தாவான
நண்புடையன்றனதுபவநலிப்பித்ததீர்த்தமெலாநவின்றவற்றுள்
விண்புடையர்வீசொரிந்துவேட்பவுறுபுண்டரிகமெனுந்தீர்த்தத்தில்
பெண்புடையனுளுமதிலாடிநடராசனெனப்பெயருற்றுனல். (௩)

கோவிந்தராசனுயர்கோயில்வடபுறத்துளதுகுறிக்கெட்டாவக்
கோவிந்தராசருளமலரினிலுண்டாயதுயான்குழந்தாய்முன்னர்க்
கோவிந்தராசனருள்பெறப்பௌண்டரீகமெனும்யாகங்கோலிக்
கோவிந்தராசன்முனமியற்றியுளபடியாலக்குறிப்பேருற்ற. (௪)

புண்டரிகமுனியாலேபுணருவித்தபடியாலும்புண்டரீகம்
கொண்டதிருநாமமதாற்குளிருகின்றதன்றியதிற்குணங்கட்கெட்டா
அண்டர்பதிமுத்தர்கடம்மானனத்திலுதிர்சுவேதத்தாலண்டர்
புண்டரிகசரசினுக்கேயாப்பிரமசரசெனவும்புகல்வர்மாதோ. (௫)

நருமழகார்சோபானமண்டபங்கணணுகுமதாய்நங்கோவிந்தன்
தருபிரமவுச்சவங்கண்டருளியபின்னவபிருதந்தனக்காத்தாழாத்
தொகுகிரணபாநுமதிகிரகணுதிகணேருந்தொலைவினுளும்
மிகுதியுடனீராடினவர்பிரமகத்தியெலாம்வீழ்ப்பதாயும். (௬)

கண்டவர்கேட்டவர்மோந்தோர்பரிசித்தோர்குளித்தாடிக்கனிவினோடே
உண்டவராண்டவனடியையுன்னியுயர்தென்புலத்தார்க்குகப்பினோடே
பிண்டமுதருனமெலாம்பெரியமறையறிந்தபிராமணருக்கன்பிற்
கொண்டகலக்கொடுப்பார்கள்கொடும்பாவங்குலைந்துமுத்திகொள்வர்மாதோ. (௭)

பங்குனியுத்திரத்திலெம்மானவபிருதோச்சவங்கங்கைபனுவலாட்டத்
தங்கள்பவமகற்றவதின்மூன்றுநாளாடியரிதாணன்றேத்தித்
தங்கமுறத்தூய்மைகொடுதஙகளுழிப்போவரினுந்துறந்தோயோர்தி
அங்கெமதுபெருமானேயாழிவளைசொடுகாப்பிட்டவிர்வர்மாதோ. (௮)

இப்பெரியபுண்டரிகமெனுங்கயமவ்வரிதனக்கேயினிமையான
ஒப்பரியமுதற்றீர்த்தமிதிற்பிதுர்கடமக்குகப்பவெழிற்பொன்னேடு
தப்பறுதண்டுலமாதிவிப்பிரருக்குயர்காலந்தானமாற்றிற்
செப்பரியவவர்கள்கயாவினிற்புரிசிராத்தபலஞ்செறியக்கொள்வார். (௯)

அந்ததீர்த்தக்கரைமேற்றில்லைவிருக்கம்மிருக்குமஃதின்கீழே
சந்ததமுமச்சுதானந்தகோவிந்தனுக்கேதகுதியென்று
சிந்தனைசெய்தரியசிராத்தம்புரிவார்தம்பிதுர்கடேவபோக
முந்துறுமாசுவர்க்கமதின்மோதமுறவெந்நாளுமுளைத்துவாழ்வார். (௧௦)

கண்ணனுயர்புண்டரிகக்கயமதனுக்கண்ணியவுத்திரத்திலேதீக்
கண்ணனிகன்மாதங்கிவாதசயமுறவேண்டிக்ககனத்தோர்தம்
கண்ணவிருங்கார்பூத்தபேரழகன்றனைக்கருத்துட்பொதிந்துபோற்றுங்
கண்ணகன்றகயமெடுத்துக்கொடுதவத்தைப்புரிந்ததனுற்சயமொன்றுங்கே. (௧௧)

அழகுபொலிபடிகளுடனவிர்தூநற்புனல்கொண்டவமுதம்போலே
குழகுபொலிகுண்டையிவர்சிவதீர்த்தமென்றொன்றுகுணமுற்றோங்கும்
பழகிலதுபாம்பாரம்பூண்டாடும்பத்தனுக்குப்பரிவுதீர்ப்பான்
ஒழுகிலதுண்டானதெனவுணர்திர்திருமாலடிக்கேயுரிமைபூண்டீர். (௧௨)

உ-வது. அமுர்தகூப தீர்த்தம்.

மடமகற்றுமகதியுளமாமுனியேகோவிந்தராசமாற்குத்
திடமளிக்குந்திவ்வியவிமானமதற்கடுப்பவொருதீர்த்தமுண்டால்
படமளிக்கும்பாம்பணையான்பாததாமரைப்பாங்கரீசானத்தே.
இடமளிக்குங்களிப்பீயவருமமுதகூபமங்கொன்றிலகுமாதோ. (௧௩)

அதிற்கலுழனமுதுகலந்தரிதிருவாராதனத்துக்கமைத்தலாலே
இதிற்படிவாருண்பார்காண்பாரெவரோவவர்களெலாமினியமுத்தர்
கொதிப்பகலக்கொள்ளுமவர்க்கதிகதிருப்பலங்கீர்த்திகோதின்ஞானம்
குதிக்குமழகதிககலைகொழும்பூமிமுதலுறுவர்குறிக்கொண்மாதோ. (௧௪)

இத்தீர்த்தந்தானீதமுமாராதனம்புரிதற்கிசைந்ததாகும்
அத்தீர்த்தந்தனையரியசத்துருசம்மாரியெனுமக்கோபாலர்
கத்திகொடுகாப்புரிவர்சேனையுடன்புத்திரனைக்கருதுவார்கள்
குத்திரமற்றொருமனதாய்மிதுனமதிகேட்டைதனிற்கோதற்றாராய். (௧௫)

சுக்கிலவேகாதசியில்விடிவோனாத்தம்பதிகடுலங்கக்கூபத்
தக்கபுனலாடிசந்தானக்கிருட்டிணப்பரனைத்தரிசித்தையே
நக்கபிராற்கருள்புரிந்தபடியெமக்குச்சந்தானநல்கல்வேண்டும்
துக்கமகற்றிடுதியெனத்தோத்திரித்தேயுபவாசந்துலங்கக்கொண்டு. (௧௬)

அவ்வேகாதசிப்பகலிராவன்னநித்திரைவிட்டமர்ந்துகாலே
செவ்வேநற்றுவாதசியிற்பிராதகாலம்மமுதச்செழுநீர்மூழ்கித்
தவ்வாவக்கோபாலகோவிந்தமூர்த்திகளைத்தரிசித்தேத்தி
எவ்வேதங்களுக்குமெட்டாற்காராதனம்புரிந்ததின்போடுண்டால். (௧௭)

இப்படியேயானிமுதலாறுமதிதொறுமேகாதசியிற்செய்தால்
ஒப்பரியபெருமான்புத்திரரையருளிடுதலுக்கோரிடையூறின்றால்
தப்பெனலாகாதுதிறஞ்சத்தியமுக்காலதினீராடித்தீண்டின்
கொப்பெனவன்னவர்கண்மெய்வாழ்நோயனைத்துங்கொதித்தோடிக்குறிப்பதீயும். ()

இன்றுமந்தத்துவாதசியிற்சேனையர்கோன்முதலானோர்க்கின்பமாக
நன்றுசித்திராதியன்னமுதலானதமிசைபண்ணநடத்தியெம்மான்
தன்றுணைத்தாளன்றியொன்றைத்தாழாரைத்தாழ்ந்துதானங்களாதி
பொன்றலறச்செய்வாரேற்புத்திரர்பூப்பொன்முதலபொருந்துவாரால். (௧௯)

௩-வது. திருப்பாற்கடல் தீர்த்தம்.

கனகரங்கத்திருமாலின்வடக்கின்மூன்றாவதெனக்கழறற்கான
தனகரெந்நாளும்போற்றவானதிருப்பாற்கடலென்றவிர்தடாகம்
சனகனிகர்கண்ணுவனத்திருப்பாலாழிப்பிறங்குசயனத்தோடே
வனகனமாமுத்தருடனவணெழுந்துசேவைதரவரித்தவாறே. (௨௦)

தருகவெனுமவற்கெம்மான்றரவெழுந்தங்காயத்தைச்சார்ந்துவாழ்ந்தோர்
வருகவிவணினைவுறினும்விடவரியமுத்திசுகம்வைக்கற்பால
துருகுமனதுடனதனிலாடியுண்டார்தரிசித்தாருவந்தாரெல்லாம்
மருவவருங்கீரவாரிதியின்முழுக்காடுபலம்வரிப்பர்மாதோ. (௨௧)

தண்டகரச்சண்டனுடனெந்நாளுஞ்சக்கரக்கைச்சாமிகாப்பன்
அண்டவவணித்தியவாசம்புரிவார்தமதுகையிலமைந்ததாகும்
பண்டரியபரமபதம்வண்டானம்புரிந்தாரேபத்தராவார்
கண்டறிதிமுனிவவதினருகேமாதவரின்னுங்களுலவாழ்வார். (௨௨)

௪-வது. சேஷதீர்த்தம்

சன்னிதிக்குமேற்புறத்திலெம்மாற்குநான்காவதானதீர்த்தம்
மன்னபதஞ்சலியாற்பாதாளத்திருந்துகொணர்ந்துளதுமாசில்
அன்னதுமாசனசிவனம்பெரியவமலமதாயமைந்ததாங்கே
என்னருமைப்பெருமான்மாலீலைசெயவமைத்துளதாலின்றுமாதோ. (௨௩)

பங்குனிசுவாதிதனிற்கோவிந்தராசரெனும்பரமராங்குச்
சுந்தரவண்சுவணவம்பியுச்சவத்தைக்கண்டருள்வர்சுகிர்தம்வேட்டோர்
மங்கலமாம்வேதியர்க்குவாசுகிநாளநந்தனுள்பலராமன்னுள்
இங்கிதமாமரவுநாடனிற்றுலாமதிதனிலேயின்புகூர. (௨௪)

ஆதிசேடன்கோவிந்தன்பிரீதியெனவோதியாடைகந்தம்
சோதிசேரனம்பயசுபலம்பக்கணுதிகளைச்சோர்விலாமல்
நீதியாவீயுமவருலகமெலாமாணிருபராவர்நித்தம்
ஆதிசேடப்பெருமானுடனாராயணன்காப்பனதனைமாதோ. (௨௫)

௫-வது. கருட தீர்த்தம்.

புண்டரிகபுரத்தினுக்கீசானதிக்கில்யோசனையோரரைக்குட்பொங்கல்
கொண்டொலிசெய்கடலருகிலிருப்பதிதுகோவிந்தற்கைந்தாந்தீர்த்தம்
அண்டர்பிரானிதின்மாகமதிதனிலேமகநாளிலடுத்துவந்து
தொண்டருக்குத்தீர்த்தமளித்தேகுவனக்கருடன்வரத்தொடர்பின்மாதோ. (௨௬)

ஓதுமிதிற்குளித்தவர்க்குச்சேதுபலமுறுமுறுதியிதிலேமேலாம்
ஆதவவம்புலிகள்கிரகணதரிசபூரணையேயாதிநாளில்
நீதியுடனாடிமிகுதவம்புரிந்தார்நிமிலராநிலவிவாழ்வர்
சாதியிதைமாதவன்மாப்பிரசண்டனுடன்காப்பன்றகுமாறன்றே. (உஎ)

நஞ்சருந்துங்கலுழனாலானவிதங்கேள்சுமுகநாகன்றன்னை
மஞ்சுதிகழ்கலுழனுண்ணவவ்வுமுழியவன்பயந்துவந்தெம்மானே
அஞ்சினன்யானுளெனவேயரவேநீயஞ்சலெனவையன்சொன்னான்
கிஞ்சுபடச்சிறியிதையானருந்தவிடுத்தியென்றான்கிருபையில்லான். (உஅ)

அச்சொறனக்கெம்பெருமானரவருந்துவோய்பயந்தென்னடியிற்றஞ்சம்
வச்சுநின்றதிதைவிடுவலெனலுமகங்கருகிநினைமாவினோடு
நிச்சலும்யானெடுத்தகண்டந்திரியுமெனக்கிவ்வாறுநிகழ்த்தற்காமோ
அச்சுதனேயெனப்பெருமானுகிலென்றாளங்குவிநீயாற்றென்றோதி. (உகூ)

வைத்திடலுமவ்விரலையாற்றமலுடன்முறிந்துவீழ்ந்துமாழ்கிச்
சத்தகன்றுசாம்பியையேதயைபுரிதிதயைபுரிதிதருக்கமேவிப்
புத்தியகன்றழுந்திவிட்டேனெனவருளெம்மாற்குவரப்புட்கோகேட்டி
இத்தலத்திலானுங்கல்விதிருவவியரசாலிறுமாப்புற்றால். (௩௦)

நொடிப்பொழுதிலவனைமிகுநோய்வாரிப்படுப்பலெனவெனைநன்றோதும்
படிப்பையறிந்தும்பழியுண்டனைநீயேகெனையகன்றுபழனஞ்சூழ்ந்த
குடிப்பதிக்கண்மிகுதில்லைக்கீழ்க்கடலிற்றவமாற்றிக்கேதமாற்றி
அடுத்துனையாமாளுதுமென்றருளியவன்றவம்புரியவடிமைகொண்டான். (௩௧)

சு - வது. உத்தரகாவேரிதீர்த்தம்.

உபயதிருக்காவேரிமான்மியமுன்னுரைத்திருப்பனுரவோயீதே
அபயமருளச்சுதருக்காறுவதாகுமாதீர்த்தமாடித்
தபமிகுமாபதினெட்டாந்திகதிதனிலல்லதுபின்றாபநீங்குஞ்
சுகமிகுமாவிருபத்தெட்டாந்திகதியாவதுதிற்சுபமதாக. (௩உ)

சருவலோகப்பிரபுவானகோவிந்தருக்குத்தகுந்ததீர்த்தத்
திருவிழாப்புரிவதைவிசயகோவிந்தர்திறமாம்வில்லேந்தி
யுருவமாக்காப்புரிவரன்னமாதிகள்கொடுநல்லுபவீதர்க்குப்
பிரியமாயுபசரித்தாரெம்பெருமாற்கினியராம்பெற்றிசேர்வர். (௩௩)

எ - வது. சுவேதநதிதீர்த்தம்.

ஆதிநாடனில்வெள்ளையேனமாகியமூர்த்தியாணையாலே
சோதியாகியசுவேதாத்திரியிலிருந்துவந்ததொடர்பினாலே
வேதியோருவக்கும்வண்ணம்வெள்ளாறென்றுடுதிருநாமமுற்று
வாதியாதெந்நாளும்பெருகுநீராயுளதுமாற்குமாதோ. (௩௪)

கார்த்தவீரியன்புரிந்தகரிசான்மூவேழுலகுக்கான்மன்கூட்டம்
கூர்த்தமாப்பரசாலேகொன்றவர்குருதிகொடுபிண்டங்கூட்டி
ஆர்த்தியுடன்பிதிர்கருமமிதிலொருக்காற்புரிந்துளனாதலினாலினும்
பார்த்தவர்நிவாபந்தியெனவொருநன்னாமமதைப்பரிந்துசொல்வர். (௩௫)

சிமுட்டக்கேத்திரத்துளானவராகப்பெருமான்சேர்க்கையேற்றுக்
காமுட்டக்ககனமளாக்கோபாலன்சினகரக்காற்றொழுதுவாரி
யேமுட்டுமிதுமாதவன்கோடைவெப்பகலவினிதாங்குற்றுப்
பாமுட்டுகீதவாச்சியங்கறங்கச்சலலீலைபண்ணற்காமால். (கூகூ)

அந்தசலவிளையாடற்கன்பேபோடேபலவன்னம்பயசோடன்பு
முந்துபாணக்கபலபக்கணமாதிகளம்மான்முன்புகாட்டி
வந்தவந்தணர்க்கருத்திவிண்டுபெதந்தனின்முத்தர்வரிசையேற்பர்
சிந்தனைவேண்டுவதிலையாலிதுவேழாவதுதீர்த்தந்திருமாற்கன்போய். (கூஎ)

மாகமாமகிமகத்திற்குளித்தாடித்தானமுதல்வழங்குவாரேல்
ஏகமாமின்பசித்தியெய்துவரித்தீர்த்தமதையினிதுகாப்போர்
பாகமார்தாதாவோடடன்மதுசூதனன்விண்டுபெரிந்துட்கோடி
போகமார்சயனமுளகோவிந்தராசருக்குப்புனிதமீதால். (கூஅ)

அ - வது. இயமபாசச்சேதநதீர்த்தமென்றும் பிரமதீர்த்தமென்றுஞ்சொல்லப்படும்.

சித்திரகூடத்தினுக்குவடக்கிலினுமொன்றதெனுற்செய்யப்பட்ட
துத்தமமாம்யமபாசச்சேதநமென்றிசைக்குமதெட்டாவதாகும்
பத்தர்பவநாசனாராதனைக்காயான்சமைத்தேன்பகரத்தீர்த்தம்
நத்தினவர்கன்னிமதிதிங்கடனிற்சநிவாசநாளின்மாதோ. (கூகூ)

சுற்றம்வளைந்திடக்குளித்தெம்மரியடியர்வேதியரைத்தேர்ந்தன்னார்க்குச்
சொற்றிமுதலியவாறுசுவையுடனேயுபசரிப்பார்சோகநீங்கும்
நற்றவர்சேரொன்பதத்தைநண்ணியமன்பாசமறுநாடுஞ்சேர்வர்
பற்றறுக்கும்பரஞ்சுடருமுதுவேனிற்கங்கெழுதல்பண்பிற்றுமால். (சO)

உத்தியானேச்சவமங்ஙனந்தான்கண்டருளுவதிவ்வுலகமுண்டோன்
அத்தியானப்பரனேதிரிவிக்கிரமன்வாமனருமாவாள்வான்
பத்தியோடியாரேனுமிந்தநாளுச்சவத்தைப்பண்ணுவாரேல்
சத்தியமன்னவர்மன்னனுவரிதெட்டாந்தீர்த்தந்தரமாவுன்னே. (சக)

கூ - வது. இந்திரதீர்த்தமென்றுஞ் சாதுர்மாசிய தீர்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

புண்டரிகபுரத்தினுக்குக்கிழக்கிருக்கும்புனிதர்புரிசாதுர்மாசம்
கொண்டபெரும்விரதமதற்கந்தரதேவேந்திரனுற்குறிக்கப்பட்ட
தண்டர்பணியத்தீர்த்தந்தநுமதிசுக்கிலத்துவாதசியிலாடித்
தொண்டருக்குத்தொழும்பியற்றியமுதளித்தாலிகபோகந்துய்த்துப்பின்னர். (சஉ)

முத்தர்துதிமுத்தியுறுவார்களெம்மாற்கிதுவொன்பதாவதென்றே
உத்தமர்களுரைப்பரிதைச்சீதரன்விதாதாவோடுற்றுநாளும்
வைத்திருப்பர்வச்சிரமாப்படைகளுடனதுமிகுந்தவரங்களீயும்
சத்தியுளதறிதிமறைமுடிவாழெம்பெருமானைச்சாற்றுமேலோய். (சஙு)

கO-வது· அக்கினிதீர்த்தம்.

தில்லைநகர்தனக்குநிருதிப்பாகமதிலேயத்தீக்குத்தேவன்
தொல்லைவினையாலானமாந்திநோயகலவெண்ணித்திருமாறன்னை
அல்லலகன்மனம்வாக்காலனுதினமுந்தவமாற்றியம்மாற்போற்றக்
கல்லியதன்குட்டமதின்பாங்கர்தவமிருந்தவனற்கண்முன்னெம்மான். (சச)

தோன்றியவன்மாந்தியநோய்தொலைத்தென்றுநோயிலனுச்சுகிக்கவைத்தான்
ஆன்றவனுமத்தாற்றேண்மதியிற்கார்த்திகைநாளிலடியேனாலே
ஈன்றவிதிற்படிந்தியலினக்கினிகோத்திரமியற்றியினியநெய்யை
மான்றவருக்குயர்தானம்பண்ணினவனீங்குதித்துமகிழ்வின்மாதோ. (சரு)

இகசுகமெல்லாம்புணர்ந்துமறுமையிலேசுவர்க்கசுகத்திருக்கவேண்டும்
அகசுகத்திலமர்வானேயருடியெனவெம்பெருமானவ்வாறீந்தான்
மகசுகத்துக்குமுதாக்கனோடிருடிகேசனிவர்வதிந்துகாப்பர்
மிகுமகதிவீணைமுனியறிதியிதுவெனவிதியும்விரிக்குமன்றே. (சசா)

கக-வது· நிர்ஜராதீர்த்தம்.

நரைதிரையாதிகளகன்றெந்நாளுமிருந்திடுநசையானாகவானோர்
கரைமனமாதிகணிறுவிக்கமலைமணவாளனைத்தங்கருத்துட்கொண்டே
உரைதருமத்தில்லைதனக்கோங்குகுடக்கினிலமர்ந்தாங்கொருதடாகம்
இரைதருந்தீம்புனலாகவியற்றியங்கண்மகமியற்றியினிதுநோற்றார். (சஎ)

அக்காலந்தில்லைநகர்க்கோவிந்தனெழுந்தருளியமரர்வேண்டி
முக்காலம்புரிதவத்தான்மகிழ்ந்தனமென்றவர்விரும்பும்வேட்கையீந்து
தக்கோனுமின்றுமுதலாவணியட்டமியுரோகணிநாடன்னில்
பொக்காமலாடிமநுவோதிபற்பநாபனுக்குப்பொருத்தமாக. (சஅ)

பலியியற்றிவரவுளரேலவர்கள்சரையறுவரெனப்பணித்துப்போனான்
கலியியற்றுமழுவாளுஞ்சிவனுமங்ஙன்புரிந்துசரைகழித்தெம்மானால்
சலியியற்றுஞ்சரையகற்றியவ்வனேசரனெனப்பேர்சாற்றப்பெற்றான்
ஒலியியற்றுமதையரங்கன்பற்பநாபன்னோடேயுற்றுக்காக்கும். (சகூ)

கஉ-வது, சாமிதீர்த்தம்.

இதுபதினோராந்தீர்த்தமென்றுணர்திபனிரண்டாவிசைக்குமீது
முதுதிருவேங்கடத்தானைமுன்னியந்தமுருகவேண்மோதுகாளி
மதுவவிசேர்பூதவேதாளப்பேய்க்கணங்கள்வெலுமாறுவேற்கா
விதுமௌலிதனையாண்டான்றனைப்போற்றவிளைந்ததடம்விளங்குமாதோ. (ருO)

வீரியவிஞ்சைகளாதிவிரும்புவோரதிற்குளித்துவிமலராகி
ஆரியனைப்புகழ்ந்துதிருவேங்கடத்தான்றனைப்போற்றியறிவினோடே
சீரியநற்றானமெலாங்கன்னிமதிசனிவாரஞ்செய்வாரோற்பின்
ஏரியவெலாமடைவரிதைத்தாமோதரன்காப்பன்முன்றேவோடே, (ருக)

மேடமாமதிமுதலிப்பன்னிரண்டுதீர்த்தமதின்மேன்மையோடே
கூடுமோர்வருடமதிற்குளித்துளர்பற்பலபலனுங்கொண்டுவாழ்ந்து
நீடுமோர்சுவர்க்கபதமரசபதமோட்சபதநீங்காதாள்வர்
நாடுமோரரிபதமேநமக்கருகமெனத்தவஞ்செய்நலமிக்கோயே. (ருஉ)

வேறு.

இப்பெரியதில்லைநகர்த்திருமாற்கின்பாவெழிற்பூண் பட்டாடைகலமின் பூத்தீவம்
ஒப்பரியவாகனஞ்சந்தனமுய்யானமுச்சவமுக்கிடுதலுஞற்றிடுதலுளும்
தப்பறுமாராதனைக்காங்கருவிவேழந்தாக்கிடுவாச்சியங்கவரியாலவட்டம்
செப்பரியதிருமெழுகுகோலஞ்சீலஞ்செழுந்துளவமுதற்பணிகள்செய்யற்பாலார். ()

எந்நாளுமெண்ணியவாறெய்திப்பின்னரிறைக்கிறையாவானிறையாயானவானும்
அன்னானுமனதுளதெவ்வாறவ்வாருருவாவாராவனைத்தும்விட்டேயாற்குமெற்குந்
துன்னவருஞ்சுடர்விடுமின்பாரும்வீடாத்தூயபரவீடமர்வர்துணிவீதாகும்
சின்னமெனநம்பாதார்தீவாய்த்தென்னன்றேயம்வளர்தீவதிந்துசேர்வார்பாவம். ()

சிற்சவைசெம்மணிச்சவைபொற்சவையெற்கின்பாச்செய்தசவைதேவர்சவைமு
நிவர்மண்ணோர், விற்சவைமற்றுளசவைகட்கெல்லாமேலாய்விளங்கிவிடதரன்கூத்தை
விமலையோடுஞ், சற்சவைகடாழ்ந்தேத்தநோக்காநின்றசாமிசபாபதிபதத்தைத்தாழவே
ண்டி, அற்சவைவிட்டவணுகுமன்பர்ப்போற்றுமவர்பெறும்பேறெம்மாலேயறைத
ற்பாற்றே. (௫௫)

பல்லூழிப்பகன்முழுதுந்தில்லைமுநூர்ப்பங்கயத்தாண்மருவுபரன்பரந்தமாட்சி,சொ
ல்லூழிமுடிப்பெனெனச்சொன்னனென்னைச்சோதிவிழியானையந்தச்சுத்தனோடே, ந
ல்லூழியாச்சமமாக்கிடுதற்கெண்ணுநலிவறிவிலிழுதையினைநணுகுநாநா,மல்லூழித்தில்
லைமான்மியத்தைமுற்றவளாவனென்முற்றுவித்தேன்மகிழ்ந்துகேண்மோ. (௫௬)

மாட்சியுறுமிப்பெரும்புராணந்தன்னைவாஞ்சையுடனெழுதினோர்வாசித்தோர்மேல்
ஆட்சியுறமறைவிரித்தோரவளைப்பூசித்தனவரதங்கேள்வியுற்றோரடுத்தோர்தம்மைக்,
காட்சியுறக்கேட்கவைத்தோரிதினுட் கேட்டகதையனைத்துமறவாதோர்களிவிற்சொ
ன்னோர், சூட்சியுறத்தோத்திரத்தைப்படனஞ்செய்தோர்சுபகரமாயிதைநாளுந்தொழு
தோர்மன்னே. (௫௭)

அனந்தன்மேற்கண்வளருமெம்மாற்கின்பாமலர்மேலாளினுமினியராவாரொன்னில்,
கனந்தவாயானேயன்னவர்க்கென்சொல்கேன் கலைகணிகழ்த்தறம்பொருளின்போடுவீ
ட்டோய், இனந்தவாதுளைப்பலன்றி யிஃதன்றென்னுண்டிசைத்திமறைமுடிவனைத்
துமிசைக்கின்றான், முனந்தவாதெனைத்தில்லைமான்மியத்தைமொழிமினென்றீர்மிகச்
சுருக்கிமொழிந்தேனென்றார். (௫௮)

மொழிந்தபிரமன்பதத்தைமோதமோடுமுநிநாரதன்றேவர்மூத்தோரார்த்தி
வழிந்தோடுவீணைபயிறும்புராதிமாதவர்கடில்லைமான்மியத்தைச்சொல்லக்
கழிந்தோடுதீமையிலாக்கலைமணாளன்கமலபதந்தனைத்தொழுதக்கமலன்சொற்றேன்
இழிந்தோடுமினியநறவழியுங்குல்லையிலங்கழகன்றில்லையமுதியம்பிவாழ்ந்தார். (௫௧)

உணருதிர்கோனைமிசாரணியமேயவுயர்முனிகாடில்லைமான்மியத்தையென்ற, புண
ர்கதிர்கொண்மறைவகுத்தான்சுகந்தைபெற்றான்பூந்தாளேபற்றெனவாழ்சூதன்றன்னை
த், துணர்கதிர்கான்வளைவனத்துமுநிவர்யாருந்தோமிலாப்பரமன்மகிழ்தில்லைமாட்சி
இணர்கதிர்மாஞானமருளுக்கென்னகம்மாறுளமமலனருட்பொருளாவிருப்பீரென்றார்.

என்றவர்பன்முறைவழுத்திமுகமனுற்றியற்றுவனயாவுளவோவவைகளாற்றி
அன்றுவிதியாகமுறையடுத்தநாளேயக்கிரமாபலிகடல்லயம்மாற்கீந்து
வென்றிதருமம்மானுற்பெறுவபெற்றுமேன்மேலும்பொற்சபைவேங்கடமரங்கம்
நின்றதிருப்பதிகடமைநித்தமேத்திநிமலபரமாநந்தநிலைவாழுற்றார். (௬௪)

நின்றதிருஞானசம்பந்தமுள்ளநேமிவனமுநிவர்குழாநிறைபேரின்பந்
துன்றவருட்சூதபுராணிகனைப்பின்னுஞ்சுடரொறிநங்கனகசபாபதியின்மாண்பு
நன்றருள்செய்தீரதனைநாளுமோதிநலனடைந்தார்தம்மையுமப்புராணந்தன்னைக்
கன்றலறப்படனஞ்செய்விதியுஞ்சொற்றிகருணையொருவடிவாங்கற்பகமேயென்றார்.

சக்கரமுஞ்சங்கமுமெட்டெழுத்தும் வெண்மண்புண்டரத்திறைப்பணியர்சவிசெய்தோங்கு, செக்கர்திருச்சூரணமுங்குல்லையிண்டைசேர்மணியும்பவித்திரமுமணிந்தமேலீர், அக்கமலன்றனைநும்போல்வீணைஞானிவினவியதற்கவன்விடையீந்ததனைச்சொற்றும்,பொக்ககலக்கேட்டுய்வீரொன்றுசூதன்புகறல்செய்தானதையிங்ஙன்புணர்விப்பேமால். (௬௫)

௬0-வது. துவாதசதீர்த்தமான்மியப்படலம் முற்றிற்று.

ஆக படலம்-௬0 க்கு திருவிருத்தம் - ௧௧௬௭.

௬௧-வது. புராணபடனப்பேறுரைத்தபடலம்.

நடனவித்தையினைக்கண்டருடேவநாதவென்றவர்க்கெழுந்தருளி
மடனவித்தந்தரிக்கிருவல்விமாட்டிமானேந்தித்தன்மாடு
கடனென்னடனமிடவருள்கனகாம்பலசபாபதிபுராணத்தைப்
படனமிட்டரும்பேறுற்றவர்பகட்டைப்பன்னுவல்கேண்மின்மாதவத்தீர் (௧)

வேறு.

அருமறைத்துறையாழ்ந்துளபொருளெலாமாய்ந்துளபுலவீர்காள்
திருமகட்கருஞ்சினகரநிறமுளசெழுமுகிற்பரன்சீர்த்தி
தருமகப்புராணஞ்சிரவணஞ்செயுந்தரம்பலசொலவேண்டும்
ஒருமகற்குரைதருநெறியோதுவலுகந்துகேட்டுய்வீரால். (௨)

வெண்ணிலாக்கதிரொழுகியவிரவுறவிளங்கியதிருத்தாணீர்
கண்ணனுரருட்கிலக்குறுபுராணமேகாதினுக்குணவாமப்
பெண்ணிலாகியசெவ்வுடற்கருங்களப்பெருந்தகைப்பெருமான்வெம்
பண்ணிலாமொழிப்பார்ப்பதியாதிகட்கலகறுபகலோதும். (௩)

பூட்டரக்கெழுங்கொழுந்துவிட்டேற்பதோர்புன்சடைப்புலவீர்நீர்
கேட்டவெம்பிரான்கிளையறக்கதையலாற்கீழ்மைகோய்தனில்யாத்து
வாட்டுதாமதமலிபுராணங்களைவாஞ்சியார்சுகமோக்கம்
வேட்டுவாழ்வுறவிரும்பியபக்குவமிக்குளபெரியோரே. (௪)

எல்லைக்கூடகைநன்கென்றிடாபன்றிநல்லின்கனித்திரண்மேவா
வல்லைச்சன்னிநாப்பொதிசுவைகண்டுணுவாறலகறுகோடி
தொல்லையண்டபிண்டங்கடந்தருண்மறைச்சூடிகைவாழ்மலியித்
தில்லைநாயகனினித்திடான்பிறப்பிறப்பளற்றினிற்சுழல்வார்க்கே. (௫)

பழுதிலாமறைநான்கையும்வீணையிற்பாடியெம்பெருமானைத்
தொழுதுவாழ்வுறுதுளக்கமின்மனத்தனுந்தூயநாரதமுநிவ
இழுதைமக்களுக்கினித்திடாத்தில்லைமான்மியமதையிருணீங்கி
வழுவகன்றுகேட்குறுதவவிதியினைநுவலுதும்வரிப்பாயால். (௬)

பொய்யில்பாடலைக்கேட்டுயிர்புரப்பவர்பூவெலாமுண்டான்ற
ஐயனாருட்குணகணவார்கலியாம்புராணங்கேட்கும்
மெய்யினாருட்குருவருளுழியினுமேதக்கபெரியோர்கள்
உய்யவாழ்வுறுமுழியினுந்தம்முணர்வினுக்குமேலவர்பாலும். (௭)

திருவரங்கமத்திருமுட்டந்திருமலைமுதலியதிருப்பதிகள்
பெருவரந்தருமொருநவகோடியாப்பிறங்கியதலங்களினும்
கருவரங்கரிக்கழல்கழுவிடவரன்கம்மிழிகங்கைமுதல்
வருவரந்தருமூன்றரைக்கோடியாமாநதிவரம்புழியும். (௮)

செய்யபுண்ணியகேத்திரமெவற்றினுந்தீர்த்தங்கடிகழ்கின்ற
நைவிலாநதிநதங்கள்புட்கரிணிகணகுதிருத்தலங்களினும்
துய்யவண்கிரியுழியுநைமிசமுதற்றோன்றியவனங்களினும்
கையர்காண்குருக்கண்ணனாரடியர்களவதரித்திருந்துழியும். (௯)

மங்கலந்தருநாளிலேமுன்புகலிடங்களில்மனவேட்கை
பொங்குமின்புடன்புனிதராய்கட்பினர்புணர்ந்துறக்கேட்குமுழி
துங்கமாகுகோமியமதானீவிவெண்கோலமிட்டோங்காரம்
தங்கவாற்றியேசித்திரக்கூடத்தெந்தற்பரன்படஞ்சார்த்தி. (௰)

கரும்புகன்னனற்பூகமாந்தழைவிழைவாழைகாந்துறுமுல்லை
யரும்புபாசுறுதருப்பைதேங்குருத்துடனவிர்பலமலர்க்கோவை
விரும்பிநாற்றியேவிளங்குறுமண்டபம்விரைநறுமணம்வீசப்
பொருந்துமப்புராணத்தினைப்பட்டுடைப்போர்வைநீத்தினிதோங்க. (௧௧)

பட்டடுக்கியபகட்டுப்பொற்பீடமேற்பரன்முனமினிதேற்றி
இட்டபின்னரக்கோசத்தாழ்வான்றனக்கினிமையிலெண்ணிரண்டாக்
கிட்டுநல்லுபசாரங்களாற்றிடக்கிறியறுத்தடிமைகொடு
நட்டநீக்குபுராணமோதிடுமொருநாவலர்பெருமானை. (௧௨)

புண்ணியத்துயர்பீடிகையிருத்திமேற்புண்டரம்பொலிந்தோங்க
நண்ணவைத்துநன்முகமன்கணடத்தியபின்னர்த்தம்மருங்குருதாள்
எண்ணுமின்கவிசொன்னபின்னிந்தியமெங்கணுஞ்செல்லாமல்
கண்ணனார்புராணங்களைக்கேட்பதுகவினுறுவிதிகாணாய். (௧௩)

கிட்டிசைக்கணைநோக்கியோதிநிதலேகிழமையென்றினிதருளக்
கேட்டனன்றுகேட்குநர்பயனறுமொழியற்றுக்கீழ்ப்போகாது
தீட்டுசித்திரப்பாவையினடங்கிவாய்செவியெனவுளம்வயிறாய்
ஆட்டலற்றவங்கத்துடன்சொற்பொருளமுதுணலறமாமால். (கச)

உரைசெய்யன்பினரானனநோக்குபுவுதவுறுநவரதமும்
வரைசெய்நற்குறிவிளங்குறுமதியுடன்மகிழ்ந்துவீண்வாதமதைக்
கரைசெயாதுவிண்ணவரங்கணுளனொனக்கருதிப்பையுண்மூழ்கிப்
பரைசெய்ஞானபராநந்தநனவினிற்பதைப்பறக்கலப்பவராய். (கரு)

ஊக்கமிக்குறச்சிரவணஞ்செய்குநரொளிரும்பன்னிருநாமம்
தாக்குமெய்யராய்த்தாழ்ந்துளசெவியராயஞ்சலிதணவாமல்
ஆக்குமத்தராயாநந்தநீர்விடுமமலமென்விழியினராய்
பூக்குமின்புளகத்தராயுருகியேபுராணங்கேட்குதன்முறையால். (கசு)

புரணனாகியபூமகடேவனார்புராணமோதிடவலவொவ்
வருணராயினுமாகுநகேட்பவர்க்கொருவருணமுமின்றால்
சரணனாகியதற்பரன்குணமெவர்தணப்பர்கடழைப்பண்டேன்
கரணமோய்ந்திடவாக்கும்யாழ்பயில்கவின்முனிகணந்தொழுகோவே. (கஎ)

ஆதிதொட்டிறுகாறுமேயரிகதையிடையறலாகாமல்
ஓதிடப்பெறுமுத்தமத்தவத்தர்செய்யாதபேரறம்யாதே
காதிடச்செயும்வேள்வியுந்தருமமுந்தானமுங்கங்கைமுதல்
சோதிடங்கடீர்த்தங்களுந்தரும்பலன்றாக்குறுமிவர்பாடே. (கஅ)

வேறு.

கள்ளுயர்த்தபூங்கொன்றையோன்றவப்பயன்கருதி
வெள்ளுயிர்த்தநெய்யெனவெலாமெய்யுறவிலகும்
நள்ளுயிர்த்தநாராயணனெழுந்தருடில்லை
முள்ளுயிர்த்தநூற்சிரவணப்பேற்றையார்மொழிவார். (கக)

சேணிறைந்துளவுடுக்கணஞ்சீதனுக்கிணையோ
பூணிறைந்துளவாயினும்பொறிக்கிணைபோமோ
கோணிறைந்துளநதிபலகோடிகூடினுமே
மாணிறைந்துளசானவிநதிக்குநேர்வருமோ. (உ0)

வீணைக்கோன்மொழியோசையால்விமலனைப்போற்றும்
வீணைக்காய்முநிவிண்டுமான்மியமதைமொழிநூல்
பூணக்கேட்டவர்படித்தவர்போற்றினார்பேற்றைப்
பூணக்கேட்குதியோதுவல்வந்தவாபுநித. (உக)

முன்னமெத்தனைக்கோடிமாவிதிகளோமுன்னி
மன்னுமித்தலமான்மியம்படித்துவான்சென்னி
தன்னிலுற்றுச்சிட்டிப்புரிந்தழிவிலாமோக்கம்
என்னும்வீட்டிலுற்றவர்தமையிசைக்கவல்லாரோ. (உஉ)

இப்பெருந்தில்லைக்கோவிந்தராசனுரிசைநூல்
அப்பெருந்தவத்தயன்பலபகலெலாம்படித்துச்
செப்பருங்கலைமகள்சுகமுண்டுசேணிருந்தே
ஒப்பருஞ்சிருட்டிப்புரிந்தொளிபெறவுற்றான். (௨௩)

நக்கனார்திருநாடகங்காண்சபாபதியின்
தக்கசீர்புனைதருபுராணங்களர்ச்சனையால்
அக்கமாயிரத்தவன்சசியரம்பையர்போகம்
ஒக்கவார்ந்துவிண்ணாண்டைந்துதருநிழலுற்றான். (௨௪)

அக்கனார்தில்லையம்பலவாணனாரருணூல்
நெக்குசிந்தையினெடிதுநாள்பயின்றுளதவத்தால்
மிக்கவெண்மலைதன்னில்வீற்றிருந்துடல்வீட்டித்
தக்கன்பெண்டழுவச்சதாநந்தனாய்த்தழைத்தான். (௨௫)

தங்குசிற்றம்பலத்துள்வீற்றிருந்ததற்பரன்றன்
துங்கமுற்றபுராணங்கள்பலபகல்சொல்லிச்
சங்கையற்றிடத்தகுபலநூல்களைத்தந்து
கங்கைமத்தமிட்டத்தியற்றாடுங்கண்ணுதலே. (௨௬)

மாலெடுத்திடவாடுமோகாளியான்மாழ்கித்
தோலெடுத்திடுசிவனுளங்களிகொளச்சிவந்த
காலெடுத்திவ்வாறாடெனக்காட்டினான்காதை
நூலெடுத்தருச்சித்தன்றோபிரமர்கணாங்கல். (௨௭)

ஏந்தெழிற்புருடோத்தமன்றுதியெலாமெழுதிக்
காந்தையார்க்குநற்கவிகளாஞ்சனகனாதியர்க்கும்
போந்ததேவர்புத்திரர்முதலோர்க்கும்போதித்துச்
சாந்ததக்கணாமூர்த்திதானாயதாரறியார். (௨௮)

நாளும்ராமமந்திரமெண்ணுநாவத்தநலியா
தாளுங்கங்கையோடாடிப்பாடிடுபலமதனால்
வேளைநீறெனவாக்குமாவிருடியாய்விமலன்
தாளைநீங்கலாத்தாண்டவனாய்தார்சாற்றார் (௨௯)

கருணையங்கடலாகியக்கண்ணுதற்கூத்தைத்
தெருளினோடுகண்டரவணைக்கிடக்கைவாழ்செல்வன்
பெருமையாகுபுராணங்கேட்டருச்சித்தபெட்பால்
முருகன்றேவசேனாபதியாய்ச்சுகமுற்றான். (௩0)

அலகிலாவருட்குணவிதிகாசநூலதனை
இலகுமானனக்கொம்பொடித்தெழுதிவாசித்துத்
திலகமாகுபொன்னரங்கத்திற்றிகழ்கணபதியாய்
உலகர்காணவீற்றிருந்தழிவறுநலமுற்றான். (௩௧)

புரமெரித்தவன்புரிதருநடத்தினைநோக்கி
அரவுமீதறிதுயிலமரந்தணன்குணத்தைப்
பரவுநற்புராணப்பிரசங்கஞ்செய்பலத்தால்
இரவியாகிவிண்மணியெனலாகினனெல்லோன். (௩௨)

வெள்ளவேணியன்குயிற்றுமூர்த்துவநடம்வேட்டுக்
கள்ளநித்திரைகொள்கின்றகணகவம்பலத்தான்
உள்ளமான்மியமுறைபுராணங்களையுயிர்காள்
கொள்ளவோதியபேரன்றேவசுக்களாய்க்குலவல். (௩௩)

தக்கமுக்கணார்தாண்டவராயன்செய்கூத்தை
மிக்குவேட்டறிதுயிலமர்வித்தகன்றனது
பக்குவப்புராணம்படனம்புரிபலத்தால்
திக்குப்பாலராய்மருத்துவராகிவிண்டிகழ்வார். (௩௪)

சிவனுங்காளியுஞ்செய்செகன்மோகனக்கூத்தைக்
கவனமோடுகாண்கனகரத்தினசபாபதியின்
புவனராகபுராணம்ராப்பகலெலாம்புகன்று
அவமிலாவசிட்டாதிமாதவருயர்வடைந்தார். (௩௫)

தாண்டவந்தருமென்றருள்சபைக்குநாயகனும்
ஆண்டவன்னட்டாக்கரப்படியம்பலத்தரசின்
நீண்டவன்புகழ்நிகழ்த்தும்புராணங்கேட்டன்றே
பூண்டபன்னொருகோடிருத்திரரெனப்பூத்தார். (௩௬)

தீங்குதீர்தரத்தேடிவந்தரிக்குமுன்குனிக்கும்
பாங்குசேர்பரசிவற்கருள்பரம்பரன்சீர்த்தி
வாங்குநற்கலைவாசித்துக்கேட்டுநாள்போற்றி
ஓங்குமொன்பதுகோளையாருலகினிலுணரார். (௩௭)

அருவமாகியுமுருவமென்றாகியுஞ்சுருதிப்
பருவமாகியும்பண்ணவர்புழிச்சல்கொண்டரவில்
திருவினோடுகண்டுயிறில்லைநாதன்சீர்சொல்லித்
துருவமேறியதூயனையார்சொலத்துணியுநர். (௩௮)

கரியகண்டனார்குனிப்பினையடியவர்களிப்பப்
பிரியமோடுகாண்பெருங்கடவுட்புராணத்தை
மருவிவாழ்த்திவாசித்ததினாலமுதுண்டு
தருவின்மூன்றுமுப்பஃதுகோடியரெனத்தழைத்தார். (௩௯)

மொத்துமாயையிட்டிப்படியாட்டுவான்முகுந்தன்
பத்தர்காளெனைப்பார்மினேவெனுஞ்சிவன்பாதம்
வைத்தமாபுராணத்தினைப்பூசைசெய்வலத்தால்
சித்தியெட்டுமுற்றந்தரந்திரிவர்சித்தர்களே. (௪௦)

அல்லைநீங்கியபதஞ்சலிகண்ணுவனகந்திர்
நல்லனுகுமப்புண்டரீகப்பெயர்ஞானி
தொல்லைநீங்கியபொன்னியார்தந்தைதோமற்ற
தில்லைமான்மியத்தன்றுகொறீவினைதீர்ந்தார். (சக)

புற்பதத்தனும்புட்கொடிச்சேந்தனுஞ்சிவனும்
உற்கங்கொட்டுமோமுனிவனுங்காளியுமுரஞ்சேர்
அற்புதத்திருக்கோப்பிரளயமுனியவனும்
சிற்சபாபதிதிருவருள்பெற்றன்றேசிறந்தார். (சஉ)

பங்குனித்திருத்தேருச்சவம்மயன்பண்ணல்
இங்கிதச்சித்திரையிலரன்றிருவிழாவியற்றல்
யெங்குமாடிச்சாறிந்திரன்புரிதல்போல்வேறே
யெங்குண்டித்தில்லைமாநகரன்றியென்னிசைப்பாம். (சரு)

தொன்றுதொட்டெழுபவத்தொடக்கறவெலாந்தொலைத்தான்
என்றவச்சுகமுனிவர்கடம்பிரானினிதே
கன்றுமேய்த்தவன்காதைநூன்மன்றனக்கருளி
நன்றுவீடுதந்தனனன்றிவேறெநூனவில்வீர். (சச)

அருளிலாதுயிரவிந்துகச்சவட்டுவோர்சேர்த்தி
அருளினேடுகொத்தருள்பரன்சேர்த்திநேராமோ
தெருளினேடுதோமதநெறிவீட்டியேதிறம்பா
அருளினம்பலத்தரசின்புராணமாசரிப்பீர். (சரு)

திருவினுயகன்றிசைமுகனுயகன்றில்லை
மருவினுயகன்மாசிவனுயகன்மாகத்
தருவினுயகனுயகனுனறுமுகனுன்
முருகனுயகன்கணபதிநாயகன்முகுந்தன். (சசு)

என்னையாளுடைநாயகனிவனெனுமீசன்
நன்னயத்திருநடனத்தைவிளித்திடுபெருமான்
சொன்னயப்புராணத்தினைப்படித்திடுந்தூயோர்
மன்னுமுத்தியைமருவுதற்கென்னுளவழக்கே. (சஎ)

புள்ளுயர்த்தமாதேவனுர்திருவடிபோற்றிக்
கள்ளுயர்த்தவெங்கடுக்கையஞ்சடிலனுடகத்தை
உள்ளிநெக்குருகப்புகலொண்புலவனுக்குத்
துள்ளுவின்மணிப்பூணுடைப்பொன்றரல்சுபமால். (சஅ)

படுத்தபையரவணைப்பரன்றிருமணத்தினும்வில்
லெடுத்தமோலிசேரிடத்தினுந்திருவடியிவர்ந்து
கொடுத்தசேவையினிடத்தினுங்குதித்திடுவடிவம்
தொடுத்தநாளினுந்தொழுசிறப்பாற்றுதலினிதால். (சசு)

அன்னமாகியும்பரியுருவாகியுமயற்குச்
சொன்னவாரணச்சோதிசேரிப்புராணத்தை
நன்னயத்துடன்தூபதீபங்கணன்றுதவி
மன்னுமாவுபசாரமிட்டவரெலாம்வரிப்பார். (ரு௦)

அஞ்சுபாதகமென்னவோவவையெலாமொருங்கே
பஞ்சுதீயினிற்பற்பமாமிந்தநூல்படிப்பார்க்
கெஞ்சலற்றவான்புவிமலிதிருவெலாமியையும்
கஞ்சமொத்தகண்ணவன்பரமெனுமுரங்காணும். (ருக)

தானமெத்தனைதருமமெத்தனைதழல்வேள்வி
யானவெத்தனைதவமெலாமெத்தனையடர்க்கும்
மோனமெத்தனையுருவெணலெத்தனைமுழுதும்
ஞானவிப்புராணஞ்சொனார்க்கப்பலனணுகும். (ருஉ)

சாற்றுமிப்புராணம்முற்றுநாடனிற்சால
ஊற்றமோடுவகைத்தலைசிறப்பவோங்கார
வேற்றமுள்ளநம்பரன்மகிழடியர்களீண்டி
ஆற்றலோடுநற்றிருவிழவாற்றுதலழகால். (ருங)

ஈட்டுமன்பர்களியைந்திறும்பூதெய்தவிலகுங்
கோட்டிகட்கறுசுவைபடவனம்பலகொடுத்து
வாட்டமற்றநற்றானமேதருமமேவழங்கி
நாட்டும்பூசுரராசிகொண்டவிர்ந்திடனலமால். (ருச)

இன்றும்வாழ்விதிசிவன்புரந்தரனரியெழுவாய்
நின்றதேவருமுனிவருமனிதருநெடுமால்
என்றதேவருளெய்தித்தஞ்சுகமுற்றாரொன்றால்
நன்றெனோதுவவிப்புராணஞ்சொனார்நன்கே. (ருரு)

அத்தியைத்தடுத்தான்பரனருள்புராணத்தைச்
சித்தநெக்குறக்கேட்டுநாள்சிதைவுறுவேலை
முத்தர்சூழ்தரமுன்னர்நின்றாட்கொளன்முக்கால்
சத்தியம்மிதிற்சங்கைசெய்பவர்பவஞ்சரிப்பார். (ருசு)

ஆதியீறிலாவம்பலத்தாண்டவனருளை
ஓதிவைகலையோட்டுதிநாரதவென்னாப்
போதில்வாழும்புத்தேளுணாதந்தனன்புலமை
நீதிநின்றநன்னேமிமாவனத்துளீர்நினைமின். (ருஎ)

வேறு.

தொண்டரிற்றலைநின்றுளீரலகறுசோதிவான்கடனீர்மண்
உண்டுமிழ்ந்தளந்திடந்துகாத்தழிமுதலெவனவன்பரனென்னக்
கண்டமோய்ந்திடக்கதறிடுமறைக்குலங்கணக்கிலையாதலினால்
அண்டர்தம்பிரானருட்பதந்தஞ்சமென்றகம்படிந்தவிர்வீரால். (ருஅ)

என்றுசௌநகனாதிவேதியர்க்கெலாமினிமையிற்சூதமுநி
அன்றுசாற்றியவிதிவழாவகைமன்றுளமர்சபாபதிமகிழ
நின்றவவ்வடமொழியினைச்செந்தமிழ்ச்செய்யுளாநிகழ்த்தினமால்
துன்றல்பொன்றல்விட்டந்தமிலின்பினைத்துய்ம்மினிம்மகியோரே. (௫௯)

வேறு.

களங்கமறுமித்தலபுராணஞ்செய்தோன்கமலபுராணோத்தரத்தைக்கவியாச்செய்தோன், விளங்குதிருமுட்டபுராணத்தைப்பாவால்விளம்பினோன்சுதரிசனகிரிபுராணம் [ன்
வளந்திகழுஞ்செய்யுளாவரைந்துநின்றோன்வாழருணூல்பலவளித்தோன்கோவலாசா
உளந்திகழும்வேங்கடராமப்பேர்நாயனுதவுமிராமாநுசனுந்தாசன்மன்னோ. (௬௦)

வாழி.

வாழிசித்திரக்கூடத்தெம்மப்பனார்
வாழிசித்திரக்கூடத்தெம்மன்னைமார்
வாழிசித்திரக்கூடத்தெம்மாழ்வார்கள்
வாழிசித்திரக்கூடத்தெம்மாரியர். (௬௧)

வாழிவாழிவயிணவக்கேத்திரம்
வாழிவாழிவயிணவக்கோத்திரம்
வாழிவாழிவயிணவச்சூத்திரம்
வாழிவாழியிந்நூனவின்மாண்பரே. (௬௨)

என்றும்வாழியைந்தானவிறைவரும்
என்றும்வாழியிலக்குமியார்களும்
என்றும்வாழியிராமாநுசன்மதம்
என்றும்வாழியவனடிக்கன்பரே. (௬௩)

௬௧-வது. புராணபடனப்பேறுரைத்தபடலம் முற்றிற்று.

ஆக படலம், ௬௧-க்கு திருவிருத்தம் ௨௦௬௦.

ஸ்ரீமத் தில்லிகாவனகோவிந்தராஜ பரப்ரஹ்மணேநம:
ஆழ்வாராசாரிய ரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளேசரணம்
ஸ்ரீநிவாசராமாநுஜமஹாதேசிகோத்தமன்திருவடிகள்வாழ்க.

திருச்சித்திரகூடபுராணம்முற்றிற்று.

இந்நூலாசிரியர் செய்தருளிய நூல்கள்

பதித்தன.

ஸ்ரீபாத்மோத்தரம் ... ...
ஸ்ரீமுஷ்டபுராணம் ... ...
திருச்சித்திரகூடபுராணம் ... ...
ஸ்ரீசுதரிசனகிரிபுராணம் ... ...
புருஷார்த்ததீபிகை யென்னும் பாலவினாவிடை ...
ஸ்ரீவைஷ்ணவதத்வம் ... ...
வைராக்கிய சூர்யோதயம் ... ...
தேசிகன்றிருப்பதிகம் ... ...
ஸ்ரீமணவாளமாமுனிகள் திருப்பதிகம் ... ...
ஸ்ரீஎதிராஜசதகம் ... ...
ஆழ்வார் பஞ்சரத்நம் ... ...
பெருந்தேவித்தாயார் திருப்பதிகம் ... ...
ஸ்ரீவரதராஜப்பெருமாள் திருமாலை ... ...
ஸ்ரீவரதராஜப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி ... ...
ஸ்ரீபகவந்நாமசங்கீர்த்தனம் ... ...
போற்றித்திருப்பதிகம் ... ...
ஸ்ரீமத்தொண்டரடிப்பொடியாழ்வார் ப்ரபாவம் ...
ஸ்ரீமத்பேரன் கூரத்தாழ்வார் ப்ரபாவம் ... ...
ஸ்ரீவைணவமங்கையர் வாழ்க்கைப்பாடு ... ...
ஆண்டாள் விஷயம் ... ...
ஸ்ரீசூர்ணவிளக்கம் ... ...
அரிதூஷணகபோல சபேடிகை... ... ...
சச்சம்ப்ரதாய தரளமாலிகை ... ...

பதிப்பன.

சாந்தபூஷண சம்புடம் ... ...
ஸ்ரீவைஷ்ணவகம்பீரஜோதி ... ...
விலைமாதர் விளக்கம் ... ...

——(o)——

ஸ்ரீ

விளம்பரம்.

இந்த க்ரந்தம் வேண்டியவர்கள் சென்னை புரசை மூக்காத்தாள்சாலை ௧௨-ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்ரீமாந்-ஜெ - சுந்தரராமாநுஜதாச ரவர்களிடத்தும், புதுவை ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவில்வீதி ௩௭ - ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்ரீமாந், சடகோப நாயுடவர்களிடத்தும், பெற்றுக்கொள்ளலாம்.